D
11, 31 N74
74. 46
35

61635

# Tamil Nadu Legislative Assembly Debates

*Tenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.*

18th, 19th, 21st, 22nd and 23rd January 1974.

(Volume XLVI — Nos. 1 to 5)

TABLE OF CONTENTS.

*Friday, 18th January 1974.*


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu ... | i—vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly .. | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their constituencies ... | ix—xvi |
| 1. Obituary Reference—Demise of ex-M.L As. Thiruvalargal Muhammed Abdul Salam, Abdul Rahiman and K. Vinayakam and Demise of Thiru G. D. Naidu ... ... | 1—2 |
| 2. Condolence Resolution—Demise of Periar Thiru E. V. Ramasami .. .. .. .. | 2—31 |
| 3. Papers laid on the Table .. .. .. .. | 31—40 |


*Saturday, 19th January 1974.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... | 41—84 |
| 2. Announcement— Panel of Chairman ... | 85 |

*Saturday, 19th January 1974—cont.*


| | PAGES |
|---|---|
| 3. Discussion on Motion of Thanks to the Governor's Address .. .. .. .. .. | 85—141<br>145—173<br>176—183 |
| 4. Point of Order— | |
| Ruling Party Member informing the House that a particular adjournment motion given notice of by a Member of the Opposition Party had been disallowed ... | 141—145 |
| 5. Personal Explanation— | |
| Personal explanation by Thiru S. Kandappan on the allegation against him by Thiru C. V. Velappan ... | 174—176 |
| 6. Papers laid on the Table ... | 183—184 |


*Monday, 21st January 1974.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... | 215—252 |
| 2. Adjournment Motion— | |
| Alleged rape and death of Mrs. Fathima Begum at Kumarapalayam and its consequences ... | 252—259 |
| 3. Government Bills— | |
| (*a*) Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Amendment Bill, 1974 ... | 259 |
| (*b*) Tamil Nadu City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of Term of Office) Amendment Bill, 1974 ... | 260 |
| 4. Discussion on Motion of Thanks to Governor's Address (*contd.*) ... | 260—346 |
| 5. Papers laid on the Table .. .. .. .. | 347—348 |




*Tuesday, 22nd January 1974.*


| | PAGES |
|---|---|
| 1. Questions and Answers ... | 349—386 |
| 2. Minister's Statement— | |
| Statement by Minister for Education and Tourism correcting an answer to a supplementary question ... ... ... ... | 386—387 |
| 3. Discussion on Motion of Thanks to Governor's Address (*contd.*) ... | 387—473 |
| 4. Papers laid on the Table ... | 474 |


*Wednesday, 23rd January 1974.*


| | |
|---|---|
| 1. Questions and Answers ... | 497—539 |
| 2. Government Bills— | |
| (*a*) Tamil Nadu Public Men (Criminal Misconduct) Amendment Bill, 1974 .. .. | 539 |
| (*b*) Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1974 ... | 539 |
| 3. Discussion on Motion of Thanks to Governor's Address (*contd.*) ... | 560—615 |
| 4. Papers laid on the Table ... | 615—616 |

## உள்ளடக்கம்

பக்கங்கள்

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. i–vi

(ii) தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். vii

(iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல் .. .. .. .. .. ix–xvi

1 நீத்தார் நினைவுக் குறிப்பு—

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் முகமது அப்துல். சலாம், அப்துல் ரகிமான், கே. விநயகம் ஆகியோர் மறைவு குறித்தும், திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் மறைவு குறித்தும் .. 1–2

2 இரங்கல் தீர்மானம்—

பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் மறைவு குறித்து .. .. .. .. .. 2–31

3 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. 31–40

# தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

## தமிழ் நாடு ஆளுநர்.

## மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா

---

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (**முதலமைச்சர்**) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், படச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ்நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (பின் தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின் தங்கிய வகுப்பினர் நலன், செய்தி–விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சீரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், மகளிர்–சிறுவர் நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதி சீட்டுகள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.



13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனு, திரைப்படச் சட்டம்.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH.

---

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister), in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism), in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town-Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRUMATHI SATHYAVANIMUTHU (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indian Overseas and Refugees and Evacuees, Newsprint Control and Passports.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

7. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenue and Waqfs.

9. THE HON. THIRU Si. Pa. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering, Wing and Animal Husbandry.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

12. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour) in-charge of Labour, Housing and Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests, Cinchona and Cinematograph Act.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village, Industries and Rural Industries Project, Milk Operation Flood, Project and Tamil Nadu Dairy Development Corporation.

## தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

---

### பேரவைத் தலைவர் :

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. திரு. கு. காமாட்சி
2. திரு. ஆ. பரந்தாமன்
3. திரு. என். இராசாங்கம்
4. திரு. கே. பி. கோபால்
5. திரு. ஆ. கு. சுப்பையா
6. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்

### சட்டப் பேரவைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்.

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன் (எஸ்டேட் அதிகாரி).
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. டி. ஜே. சைமன், பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, திரு. சி.வி. எம். .. .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். எ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). .. .. | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 12 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 13 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 14 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 15 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 16 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 17 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி |
| 18 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 19 இரத்தினசபாபதி, திரு. மு. ... .. | விளாத்திக்குளம். |
| 20 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 21 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி. |
| 22 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 23 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 24 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 25 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 26 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர் (செ. வ. |
| 27 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 28 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |
| 29 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 30 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 31 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 32 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 33 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 34 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 35 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 36 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 37 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 38 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 39 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 40 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 41 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 42 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 43 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 44 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 45 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 46 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 47 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 48 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 49 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 50 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 51 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 52 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 53 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 54 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 55 கருணாநாதன், திரு. சோ. ... .. | கூனூர். |
| 56 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 57 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |
| 58 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி .. | முதுகுளத்தூர். |
| 59 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 60 கார்த்திகேயன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 61 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 62 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 63 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 64 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 67 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 68 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். .. | மதுரை (கிழக்கு). |
| 69 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 70 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 71 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 72 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 73 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 74 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ ). |
| 75 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், புலவர் கா. (மாண்புமிகு பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.). |
| 90 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனூர் கோவில். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 92 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி (செ.வ.) |
| 98 சீனிவாசன், மாண்புமிகு திரு. பெ. (துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, திரு. வ. .. .. .. | ஏற்காடு (ஆ. வா.) |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. .. | ஹஞர் (செ. வ.) |
| 105 சின்னவெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்பிரமணியம், திரு. ஏ. .. .. | சிங்கநல்லூர். |
| 108 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. .. | சத்யமங்கலம். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை. |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ. வ.) |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 116 சுப்பையா, திரு. ஏ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போடிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |
| 120 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ. வ.) |
| 121 ஜெயராமன், திரு. கி. .. .. .. | சேலம்-1. |
| 122 செல்லத்துரை, திரு. வீ. .. .. | ஓமலூர். (செ. வ.) |
| 123 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 124 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 126 சோனையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ. வ.) |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்தரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 130 டென்னிஸ், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை-மேற்கு. |
| 132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 134 தவமணித்தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்ராம்பள்ளி |
| 136 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி திரு. ஏ. க. .. .. .. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.) |
| 143 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ. வ.) |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. .. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. ஏ. சி. .. .. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |
| 151 நாகராஜன், திரு. க. .. .. .. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. .. .. .. | ஒட்டன்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. .. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. .. .. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 158 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி. ஏ. கோ. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 163 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 174 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. ஏ. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஓ. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. ஏ. ஆர். | காரியப்பட்டி. |
| 183 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 184 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 190 மதியழகன், திரு. கே.ஏ. | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 193 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 194 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 195 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 196 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்) |
| 197 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 198 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 199 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 200 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 201 முத்தமிழ்ச் செல்வன், திரு வெ. ந. | லால்குடி. |
| 202 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 203 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 204 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிரி. |
| 205 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 206 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 207 முத்தையா, திரு. எம். | ஓட்டப்பிடாரம் (செ. வ.) |
| 208 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 209 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 210 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 211 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 212 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 213 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 214 ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 215 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 216 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 217 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 218 ராஜா, திரு. ஏ. எம். | பவானி. |
| 219 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 220 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 221 லத்தீப், திரு. எம். எ. .. .. .. | வாணியம்பாடி. |
| 222 வகாப், திரு. கே. எ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 223 வடிவேலு, திரு. சீ. க. .. .. | தொட்டியம். |
| 224 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ. வ.) |
| 225 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கல்பட்டு. |
| 226 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 227 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 228 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 229 வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 230 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 231 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 232 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 233 ஜோதி வெங்கடாசலம், திருமதி. .. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 234 ஹாண்டே, டாக்டர், எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |
| 235 வெற்றிடம் .. .. .. .. | கோயம்பத்தூர்-மேற்கு. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1974 சனவரி 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

**முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் முகமது அப்துல் சலாம், அப்துல் ரகிமான், கே. விநாயகம் ஆகியோர் மறைவு குறித்தும், திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் மறைவு குறித்தும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குண்டூர்—முகமதியர்—நாட்டுப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1946-ம் ஆண்டு முதல் 1951-ம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்த திரு முகமது அப்துல் சலாம் அவர்கள் 5—12—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

திருநெல்வேலி முகமதியர் நாட்டுப்புற தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1948-ம் ஆண்டு முதல் 1951-ம் ஆண்டுவரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. அப்துல் ரகிமான் அவர்கள் 8—12—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டுவரை செங்கற்பட்டு தொகுதியிலிருந்தும், 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டுவரை சென்னை தியாகராயநகர் தொகுதியிலிருந்தும், பின்னர் 1967-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு வரை திருத்தணித் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. கே. விநாயகம் அவர்கள் 8—1—1974-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

[பேரவைத் தலைவர்] [1974 சனவரி 18

தமிழ்நாட்டில் பெரும் தொழில் வல்லுநராக இருந்த திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் 4—1—1974-ம் நாள் மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரைஇழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் இப் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

## 2. இரங்கல் தீர்மானம்.

**பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்களின் மறைவு குறித்து**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாட்டின் ஒப்பற்ற தலைவரான தந்தை பெரியார் அவர்கள் 24—12—1973 அன்று மறைவு எய்திய துயரமான செய்தியைப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியார் அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, "நமது தமிழகத்தின் ஒப்பற்ற தனிப் பெருந் தலைவரும், தந்தை பெரியார் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்றவரும், இந்திய நாட்டு விடுதலை இயக்கத்தின் தளபதிகளில் ஒருவரும், சாதியற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று பாடுபட்டவரும், சுயமரியாதை இயக்கத்தின் தந்தையும், சமூகத்தின் மூட நம்பிக்கைகளைக் களைய தன் வாழ்நாள் முழுவதும் பணியாற்றியவரும், தமிழ்ச் சமுதாயம் மேன்மையடைய வேண்டுமென்று தியாகங்கள் பல செய்தவருமான பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் மறைவு எய்தியமை குறித்து இம் மன்றம் தனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறாத் துயரையும் தெரிவிப்பதோடு பெரியார் மறைவால் வருந்தும் அவரது துணைவியார் மணியம்மையாருக்கும், குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."



97 சனவரி 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்.

"தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகம் தொழும்—அவர்
மனக் குகையில் சிறுத்தை எழும்
அவர்தாம் பெரியார்"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களால் பாராட்டப் பெற்ற பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள், தமது 95-ஆவது வயதில் இயற்கை எய்தியது நமக்கெல்லாம் ஆற்றொணாத் துயரத்தையும் வருத்தத்தையும் அளிக்கிறது. சென்ற அறுபதாண்டுக் காலத்திற்கும் மேலாக, தமிழகம் தழைக்கவும், வளரவும், தமிழர்களுடைய நிலை உயரவும், சமுதாயத்திலே சீர்திருத்தங்கள் பல காணவும், நாட்டினுடைய உரிமைத் தன்மைகளெல்லாம் மீளப் பெறவும் அவர்கள் அரும்பாடுபட்டு வந்தார்கள் என்பதை இந்த நாடு நன்கு அறியும். அவருடைய மறைவின்போது, அவருடைய பகைவர்களானாலும் சரி, அவருடைய நண்பர்களானாலும் சரி, நொதுமலர்களானாலும் சரி, அவர்கள் அத்தனை பேருடைய மனத்தையும் குடைய வைக்கின்ற தன்மையில் அவருடைய மறைவு அமைந்திருந்தது என்பதை எல்லோரும் உணர்வர்.

'தந்தை பெரியார்' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படத்தக்க அளவில், எல்லோருடைய இதயத்திலும் அவர்கள் நீங்கா இடத்தைப் பெற்றிருந்தார்கள். தமிழகத்தில் எந்த ஒரு பொது நிலை ஏற்பட்டாலும், அதிலே தம்மை ஒப்படைக்கின்ற அளவில் அவருடைய பணிகள் அமைந்திருந்தன என்பதை நாம் நன்கு காணலாம். அவர்கள் ஆரம்ப காலத்தில் வணிகத்திலே ஈடுபட்டிருந்தாலும், 1914-ஆம் ஆண்டிலிருந்து 1925-ஆம் ஆண்டு வரையில் காங்கிரஸ் இயக்கத்தில் உறுபெருந்தலைவராக இங்கே திகழ்ந்து, அரும்பணிகள் பலவற்றை ஆற்றி, மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர் என்பதை நாடு நன்கு அறியும்.

1924-ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைக் கண்டு, சுயமரியாதை இயக்கத்திற்குத் தலைமை தாங்கி நடத்திவந்து, பிறகு நீதிக் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்று. சமுதாயத்திலே இருக்கிற அத்தனை பேருக்கும் சம நீதி கிடைக்கவேண்டும் என்பதற்காகப் போராடி, அதன் வழிவந்த

திராவிடக் கழகத்தைத் துவக்கி, இறுதி நாள் வரையில் தலைமை தாங்கி, அதை மிகச் சிறப்புற நடத்திவந்தார்கள் என்பதையும் எல்லோரும் நன்கு அறிவோம்.

தமிழகத்தில் காங்கிரசைக் கட்டிக்காத்து வளர்த்த முக்கிய மானவர்களில் தந்தை பெரியார் அவர்களும் மிகச் சிறந்த ஒருவராகத் திகழ்ந்தார் என்பதை வரலாறு நன்கு எடுத்துத் தெரிவிக்கும். அந்தக் காலத்தில் 'முப்பெரியார்' என்று சொல்லத்தக்க வரிசையில், மறைந்த திரு. வி. க. அவர்களும், மறைந்த டாக்டர் வரதராசுலு நாயுடு அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் இணைத்துச் சொல்லப்படத்தக்க அளவுக்குத் தமிழகத்தினுடைய அரசியல் நிகழ்ச்சிகளெல்லாம் நடைபெற்று வந்தன.

தமிழ்நாட்டிலே முதன்முதல் கதர் போர்டை உருவாக்கி, அதனைத் தீவிரமாக நடத்துகிற பாங்கினை மேற்கொண்டு, முதலில் தலைமை தாங்கியவர்கள் தந்தை பெரியார் ஆவார்கள். வடக்கே சபர்மதியில் அண்ணல் காந்தியடிகள் ஆசிரமத்தை அமைத்து, அந்த ஆசிரமத்திலே இருந்து தம்முடைய அரும் பணிகளை ஆற்றிக்கொண்டிருந்த காலத்திலேயே, இங்கே திருச்செங் கோட்டில் காந்தி ஆசிரமத்தை நிறுவி அந்த ஆசிரமத்தில் இருந்து பணியாற்ற இராஜாஜி தொடங்கிய காலத்தில், அந்த காந்தி ஆசிரமத்தைத் திறந்துவைத்தவரே தந்தை பெரியார் அவர்கள்தான். அதுமட்டுமல்லாமல், அண்ணல் காந்தியடிகள் அந்தக் காலத்தில் உருவாக்கிய ஒவ்வொரு போராட்டத்திலும் தலைமைதாங்கி நின்று, அவர்கள் மட்டுமல்லாமல், அவருடைய துணைவியாரையும் பங்குகொள்ளச் செய்தது மட்டுமல்லாமல், அவருடைய அருமைத் தங்கையாரையும் அதில் பங்குகொள்ளச் செய்து, அந்த வகையில் அவர்கள் வீட்டிலுள்ள இரு தாய்மார் களும் பங்கு கொள்ளத்தக்க அளவுக்கு, அரசியலில் மிகத் தீவிர மாக தந்தை பெரியார் ஈடுபட்டிருந்தார் என்பதை நாடு நன்கு அறியும்.

சமுதாயத்தின் கேடுபாடுகளை உணர்ந்து, நாட்டில் வளங்கள் பல இருந்தும், இந்த நாடு முன்னேறமுடியாமல் போவதற்குக் காரணம், பகுத்தறிவு வழியில் அமையாத, அறியாமை நாட்டில் நிரம்பியிருக்கும் காரணத்தாலும், மூடப் பழக்கங்களும் குருட்டு





நம்பிக்கைகளும் மிகுந்திருக்கும் காரணத்தாலும், சிந்தனைசக்தி மக்களுக்கு இல்லாத காரணத்தாலும், எல்லா வகையிலும் இந்த நாடு வீழ்ந்துகிடக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, அவற்றுக்கு எவை எவை காரணங்களாக அமைந்திருக்கின்றனவோ அவற்றை யெல்லாம் சாடுவதில் அவர்கள் மிக முன்னணியில் நின்றார். யாருடைய எதிர்ப்புக்கும் அஞ்சாமல் அரும்பாடுபட்டு வந்தார்கள் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அவருடைய கருத்தை மிகச் சுருக்கமாக எடுத்துச்சொல்லவேண்டுமானால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் கூறியதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

'ஊறும் பகுத்தறிவை இல்லா தொழித்துவிட்டுச்
சாரற்ற சக்கையாய்ச் சத்துடம்பைக் குன்றவைத்துப்
பொற்புள்ள மாந்தர்களைக் கல்லாக்கி யேஅந்தக்
கற்கள் கடவுள்களாய்க் காணப் படும்அங்கே.

* * *

கொந்தளிப்பில் நல்லதொரு கொள்கை முளைப்பதெங்கே?

* * *

'போகங்கள் வேண்டாம்; பொருள் வேண்டாம் மற்றுமிந்தப்
பாழுலகம் பொய்யே பரமபதம் போ' என்னும்
தாழ்வகற்ற எண்ணுங்கால் சாக்குருவி வேதாந்தம்.
சாதிப் பிரிவு சமயப் பிரிவுகளும்,
நீதிப் பிழைகள் நியமப் பிழைகளும்,
மூடப் பழக்கங்கள் எல்லாம் முயற்சிசெய்தே
ஓடச்செய்தல் நமையும் ஓடச்செய்வார் என்பேன்.'

என்று, அவருடைய கருத்தை வடித்தெடுத்து மிக அழகுபட எடுத்துத் தெரிவித்துள்ளார்கள். சமுதாயத்திலிருக்கும் ஏற்றத் தாழ்வு அகல வேண்டும் என்பதற்கும், மனிதனை மனிதன் என்று நினைக்கும் மனப்பான்மை ஏற்பட வேண்டும் என்பதற்கும் தந்தை பெரியார் அவர்கள் வாழ்நாள் முழுவதும் அரும்பாடுபட்டு வந்தார் கள் என்பதைக் காணலாம்.

உலகத்தையெல்லாம் திருத்தவந்த உலகப் பேரறிஞர்கள் பலரும் பன்னெடுங்காலமாக, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக என்ன, ஏன், எதற்கு, எப்படி என்ற வினாக்களை எழுப்பி, அந்த வினாக்களுக்கு அவர்களே விடை காண முயன்று, அந்த

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 சனவரி 1

விடைகளைக் கண்டதன் வாயிலாக, இந்த உலகத்தை எவ்வளவு முன்னேற்றத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை எல்லோருடைய வரலாற்றிலும் நாம் காண்கிறோம். அந்த வகையில் தமிழகத்தில் ஓரளவு சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, சமுதாயத்திலே இருக்கிற சாதிப் பிரிவுகளும், சமயப் பிரிவுகளும் ஓரளவுக்கு அகலுவதற்குக் காரணமாக இருந்து, அந்த அளவில் எந்த ஒரு தன்மையாக இருந்தாலும், என்ன, ஏன், எதற்கு, எப்படி என்ற வினாக்களை எழுப்பி, யாருடைய எதிர்ப்பு எந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும், அதைச் சமாளிக்கும் துணிவு உள்ளத்தோடு போராடிய பெருமையும் பெரியார் அவர்களுக்கு உண்டு. பெரும் படிப்புகள் எல்லாம் படித்து, உலக ஏடுகளை எல்லாம் பார்த்து, உலகப் பேரறிஞர் கருத்துக்களை எல்லாம் ஆராய்ந்து ஆராய்ந்து அவர்கள் தன்னுடைய சுயமரியாதை இயக்கத்தை, பகுத்தறிவு இயக்கத்தை நடத்தவில்லை. பள்ளியில் அவர் படித்ததே 5 வது வரையில்தான். அதற்கு மேல் பள்ளிக்குப் போகாமலேயே தம்முடைய பொதுவாழ்வின் பயனாகப் பெற்ற அனுபவத்தைக் கொண்டே பல்வேறுவகையில் நாட்டுப் பணியாகட்டும், சமூகச் சீர்திருத்தப் பணியாகட்டும் நல்ல பெரும் பணியாற்றி வந்திருக்கிறார்கள். மூடநம்பிக்கைகளைச் சாடுகிற உணர்வு அவருக்குச் சிறுபிள்ளையாக இருந்த போதே இருந்திருக்கிறது, இளமைப் பருவத்திலேயே அவரிடம் சமூகச் சீர்திருத்தக் கருத்து உருவாகியிருக்கிறது. யாருடைய புத்தகங்களைப் படித்துவிட்டோ, அறிவுரைகளைக் கேட்டுவிட்டோ அவரிடம் வந்த உணர்வு அல்ல அது, ஆரம்பகாலத்தில் இருந்தே இருந்திருக்கிறது என்பதற்கு ஒரு நிகழ்ச்சி—

ஈரோட்டில் இருக்கிற காரைவாய்க்காலுக்கு அவர் தம் இளமைப் பருவத்தில் சென்றார். அங்கே ஒரு புரோகிதர் வாய்க்கால் தண்ணீரை எடுத்து மேலே தூக்கிவிட்டுக்கொண்டிருந்தாராம். 'ஏன் அப்படி மேலே தண்ணீரைத் தெளிக்கிறீர்கள்?' என்று பெரியார் தம்முடைய சிறு வயதிலேயே அவரிடம் கேட்க, அவர் அதற்கு மேலே இருக்கிற பித்திருக்களுக்குப் போவதற்காக நான் அப்படித் தெளிக்கிறேன் என்று எடுத்துச் சொன்னவுடன் இவர் சிரித்துக்கொண்டே கரையில் கிடந்த ஒரு ஓட்டை எடுத்து வாய்க்கால் தண்ணீரை கரையில் வாறி வாறி இறைத்தாராம், அவர் இந்தப் பிள்ளையைப் பார்த்து என் அப்படிச் செய்கிறாய் என்று கேட்டவுடன், 2 பர்லாங் தூரத்தில் இருக்கிற என்னுடைய



1974 சனவரி 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சோளக் கொல்லைக்கு தண்ணீர் இறைக்கிறேன் என்றாராம். இங்கே இறைத்தால் தண்ணீர் அங்கே போகுமா என்று அவர் கேட்டவுடன், "நீங்கள் இங்கே இறைக்கிற தண்ணீர் மேலே இருக்கிற பித்திருக்களுக்குப் போகுமானால் நான் இங்கே இறைக்கிற தண்ணீர் பக்கத்தில் இருக்கிற சோளக் கொல்லைக்கு எப்படிப் போகாமல் போய்விடும்" என்று சொன்னாராம். அத்தகைய மனோபாவம் அவருக்கு இளமையிலேயே இருந்திருக்கிறது. பழமைகளை, மூட நம்பிக்கைகளைச் சாடுகின்ற தன்மை உண்டு.

மொழிக் கிளர்ச்சி ஏற்பட்ட காலத்திலும் இந்தித் திணிப்பை எதிர்த்து மறைமலை அடிகளாரும், சோமசுந்தர பாரதியும், ஈழத்து சிவானந்தமும் அறிக்கை விட்டகாலத்தில் தந்தை பெரியார் அந்தப் போராட்டத்தை நடத்திய பிறகுதான் அது பொதுமக்கள் இயக்கமாக மாறியது என்பதை நாம் அறிவோம். இப்படி அரசியல் துறையில் ஆகட்டும், சமுதாயத்துறையில் ஆகட்டும் அவர் இந்த நாட்டுக்கு அரும் தொண்டுகள் ஆற்றியிருக்கிற பாங்கினைக் காண்கிறோம். எதற்கும் அஞ்சாமல் யாருக்கும் அஞ்சாமல் தன்னுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லி மக்கள் மூட நம்பிக்கைகளில் இருந்து விடுபட, விழிப்புணர்ச்சி பெற எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு, எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்பதாக மக்கள் தாமே பகுத்தறிந்து அறிவுத் தெளிவுபெற வழிகாட்டியாக நின்று பணியாற்றி வந்தார்கள். அவர் நடத்திய குடியரசு, புரட்சி, பகுத்தறிவு போன்ற ஏடுகளில் எல்லாம்கூட முதல் பக்கத்தில் இந்த இரண்டு குறள்களையும்தான் பொறித்தார்கள். இப்படி யாருக்கும் தலை தாழாச் சிங்கமாக பணியாற்றிய பெரியார் அவர்கள் 95 வயதான பெரியாராக இருந்தபோதும் கூட மற்றவர்களிடம் அவர் காட்டிய அன்பும், மரியாதையும், பணிவும் வேறு யாரிடத்திலும் எதிர்பார்க்க முடியாத அளவில் சிறந்த அரும் பெரும் பண்புகளுக்கிடமாகத் திகழ்ந்தார்கள்.

பொதுவாழ்க்கையில் அவர்கள் இவ்வளவு ஆண்டுகாலமாக ஈடுபட்டு வந்தும் அவர் ஒப்புக்கொண்ட எந்த ஒரு நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளப் போகாதிருந்த நிகழ்ச்சியே ஏற்பட்டது கிடையாது. அவர்களே அடிக்கடி பொதுமேடையில் சொல்வார்கள். நான் பொதுமேடையில் பேசிக்கொண்டே இருக்கும்போது சாவதை விரும்புகிறேன். உடல் நலக் குறைவு என்று பொது

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 சனவரி 18

நிகழ்ச்சியில் இருந்து நான்விடுபட மாட்டேன் என்று எடுத்துச் சொல்வார்கள். இப்படி பொதுவாழ்க்கையில் ஈடுபடுகிற பலருக்கும் எடுத்துக்காட்டாக விளங்கிய அவர் எத்தனை எதிர்ப்புகள் வந்தால் என்ன, வெறுக்க வேண்டியவைகளை, தள்ள வேண்டியவைகளை, புறக்கணிக்க வேண்டியவைகளை, ஒதுக்க வேண்டியவைகளை வெறுத்து, ஒதுக்கத் தெரிந்தால்தான் வாழ்வில் வெற்றி காண முடியும் என்பார்கள். வெறுக்க வேண்டியவை என்று முடிவு கட்டியதை, புறக்கணிக்க வேண்டியவை என்று முடிவு கட்டியதை, தள்ள வேண்டியவை என்று முடிவு கட்டியதை வெறுக்கக் கற்றால்தான் வெற்றிபெற முடியும், புறக்கணிக்கக் கற்றால்தான் வெற்றிபெற முடியும் என்பது பெரியார் அவர்களுடைய சிறந்த பொன்மொழியாகும்.

அவர்கள் சாதாரண மக்களிடத்தில் இருந்து வாங்கிய நன்கொடைகளை எல்லாம் சேர்த்துக் கணக்குச் சொன்னார்கள். பொதுமக்கள் எனக்கு நன்கொடையாகக் கொடுத்த பணத்தை சிக்கனமாகச் செலவழித்து நான் சேமித்தது 60, 70 லட்சம் ரூபாய் இந்தப் பணம் ஆகாத வழியில் நான் சேர்த்தது அல்ல, வாணிகம் செய்து சேர்த்தது அல்ல. இதனை நான் பொதுமக்களுக்கே தந்திருக்கிறேன் என்று கூறிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். சிக்கனத்தில் பெயர்போன பெரியார்—தாம் இப்படிச் சேர்த்த பணத்தில் திருச்சியில் இருக்கிற அரசினர் கலைக் கல்லூரிக்கு தம் பெயரை வைப்பதற்கு ரூ. 5½ லட்சம் அளித்தார்கள். அப்படியே திருச்சியில் இருக்கிற மருத்துவ மனைக்கு ஒரு லட்சம் தந்து அந்த மருத்துவ மனையில் ஒரு பகுதி வளர உறுதுணையாக இருந்திருக்கிறார்கள். அப்படியே ஈரோடு மருத்துவ மனைக்கும் ஒரு லட்சம் தந்து அந்த மருத்துவமனை சிறப்பாக வளர்ச்சியடைய உதவியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. தம்மிடம் இருக்கிற மிச்ச சொத்துக்கள் அசையும் சொத்துக்கள், அசையா சொத்துக்கள் ஆகிய எல்லாவற்றையும் சுயமரியாதை பிரச்சார நிறுவனத்திற்கே எழுதி வைத்திருக்கிறார்கள். அதன் சார்பாக பெரியார் ஆசிரியப் பயிற்சிப் பள்ளி ஒன்றும், நாகம்மை பெண்கள் பயிற்சிப் பள்ளி ஒன்றும், பெரியார் நடுத்தரப் பள்ளி ஒன்றும், நாகம்மை அனாதைப் பிள்ளைகளின் விடுதி ஒன்றும் சிலபல ஆண்டுகளாகவே நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இப்படி தாம் சேர்த்த பணம்



1974 சனவரி 18] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பல்வேறு ஆக்கபூர்வமான செயல்களில் செலவாக எழுதிவைத்திருக்கிறார்கள். அவற்றில் அந்த நிறுவனம் இப்போது கவனம் செலுத்தி வருகிறது.

இப்படி தமிழகத்தில் தலைசிறந்த தலைவர்களில் மிகச் சிறந்த ஒருவராகத் திகழ்ந்த பெரியார் 95 ஆண்டுகாலம் வாழ்ந்து இந்த நாட்டிற்குப் பெருமையையும், புகழையும் தேடித் தந்திருக்கிறார்கள். அவர் காட்டிய வழி நாம் எல்லோரும் சென்று முன்னேறுவதற்குரியதாகும். இன்று அவர் மறைந்த நிலையில் அவரது கருத்துக்களை எதிரொலிக்கின்ற வாயிலாக, நம்முடைய செயல்களிலே காட்டுவதன் மூலம் நம் பணிகளை நாம் செய்தாக வேண்டும். "தக்கார் தகவிலர் என்ப தவரவர், எச்சத்தாற் காணப்படும்" என்கிற வள்ளுவப் பெருந்தகையாரின் கருத்துக்கேற்ப அவர் ஏற்றிவைத்த அறிவுச் சுடர் இங்கே இருக்கிற அறியாமையை அகற்றுவதாக என்றென்றைக்கும் இருக்கும். பேரறிஞர் இங்கர்சால் கூறியபடி,

There is no darkness but ignorance

அறியாமையைப் போன்ற இருள் எங்கேயுமே இருக்க முடியாது. இந்த அறியாமைக் காரிருளை நீக்குவதற்கு தந்தை பெரியார் ஏற்றி வைத்த அறிவுச் சுடரொளி நம் கண்களை எல்லாம் திறந்துவிட்டு, நாட்டை நல்லவழியில் நடத்திச் செல்ல அவர் கூறியுள்ள ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான கருத்துக்கள் பயன்படும் என்று எடுத்துச் சொல்லி, பெரியார் புகழ் என்றென்றும் நிலைத்து நிற்க என்று சொல்லி, இந்த இரங்கல் தீர்மானத்தின் மூலம், அவரைப் பிரிந்து வருந்தும் அவரது துணைவியார் மணியம்மைக்கும், அவரது குடும்பத்தினர்களுக்கும் இந்தப் பேரவை தன் இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது என்று கூறி அமைகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த இரங்கல் தீர்மானத்தை எங்கள் கட்சியின் சார்பாகவும் ஏற்று, மறைந்த பெரும் தலைவர் பெரியார் அவர்களுடைய இழப்புக்கு வருத்தம் தெரிவித்து இங்கே பேசப்பட்ட எல்லாக் கருத்துக்களையும் ஒத்துக்கொள்கிறோம்.

பெரியார் அவர்கள் தமிழகத்தில் சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட பெரிதும் உழைத்தார்கள். எப்போதும் இடைவிடாது சமுதாயத்திலுள்ள ஏற்றத் தாழ்வினை அகற்ற, எல்லோருக்கும் சமூக

நீதியை ஏற்படுத்த அரும்பணியாற்றிய பெருமை அன்னாரைச் சாரும். நாம் எல்லோரும் சாதிகள் இல்லை என்று வாயளவில் பேசினாலும் பெரியார் அவர்கள் அதனை ஒழிக்க வேண்டும் என்பதற்குப் பல நல்ல கருத்துக்களை நமக்குத் தந்து மறைந்திருக்கிறார்கள். டிசம்பர் மாதம் 24-ஆம் தேதி அன்று அவர் நம்மை விட்டுப் பிரிந்தார். டிசம்பர் 24-ம் தேதி வரை, அவர் பூரண வாழ்வு வாழ்ந்தார்கள். 95 வயது வரை வாழ்ந்து நல்லபல கருத்துக்களுக்காக பல போராட்டங்களில் போராடிய பெருமை அவர்களைச் சாரும். யாருக்கும் பயப்பட்டு அவர் தம் கருத்தை கூறாமல் இருந்தது இல்லை. எப்போதும் மிகுந்த துணிச்சலாக, தம்முடைய கருத்துக்களை அழுத்தந்திருத்தமாகக் கூறுவார்கள். அவரது கருத்துக்களை ஒத்துக்கொள்ளாதவர்கள் பலரும் இருக்கிறார்கள். அவரது நாத்திகக் கொள்கையில் நம்பிக்கையில்லாதவர்களாக இருந்தாலும் எங்களைப் போன்றவர்கள் பலரும் அவரிடத்தில் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தார்கள். ஏனென்றால் தமிழ்நாட்டிலே அன்றிருந்த அநீதியை எதிர்த்துப் போராடிய பெருமை பெரியாரைச் சாரும் என்று சொன்னால் மிகையாகாது. அவர் ஒரு சிறந்த தேசியவாதியாக இருந்து, தேசத்தின் விடுதலைக்காக அயராது உழைத்த உத்தமத் தலைவர்களின் முன்வரிசையிலே இருந்தார். அது மட்டுமன்றி, ஆலயப்பிரவேசம் வைக்கவேண்டுமென்று சத்தியாக்கிரகத்தில் அவர் ஈடுபட்டு இந்தச் சமுதாய மக்கள் அனைவரும் ஆலயங்களுக்குச் செல்லவேண்டுமென்ற முறையிலே ஆலயப் பிரவேசம் தேவை என்று வழிகாட்டிய பெருமை அன்னாரைச் சேரும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்பொழுது தமிழ்நாட்டிலே இருக்கின்ற எல்லா முற்போக்குக் கருத்துக்களுக்கும் அவர் சரிநிகர் அற்றவராக இருந்தார், அதற்குச் சான்றாக அவர் எல்லாத் துறைகளிலும் நல்ல வழிகாட்டியாக இருந்தார். உதாரணமாக, கல்வித் துறையிலே எவ்வளவு நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதைப் பார்த்தால் பல கல்வி நிறுவனங்கள் அன்னாரின் பெயரால் இன்றைக்கு இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவர்கள் ஈட்டிய தொகையை அந்த நிறுவனங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ்நாட்டிலே இருக்கின்ற மூட நம்பிக்கைகளையெல்லாம் நீக்க வேண்டுமென்று அயராது பாடுபட்டார். அவர் கூறிய கருத்துக்களிலே ஏற்றுக்கொள்ளவேண்டியவை பல இருக்கின்றன. அப்படிப்பட்ட கருத்துக்களை நாம் ஏற்றுக்கொண்டு செயல்படவேண்டும். இந்நிலையில் அவருடைய இழப்பு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு ஆகும். தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட ஈடு இணையற்ற தலைவருடைய மறைவுகுறித்து நாம் எல்லாம் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறோம். அன்னாருடைய ஆத்மா சாந்தியடையவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டிக்கொண்டு அவருடைய பிரிவாலே துயருற்று இருக்கின்ற அன்னாருடைய குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.





**திரு. கா. காளிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்களால் இந்த அவையின் முன் கொண்டுவரப்பட்டிருக்கின்ற தந்தை பெரியார் அவர்களின் மறைவுகுறித்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். சுயமரியாதைச் சுடரொளி, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் மறைவு ஈடு செய்யமுடியாத பெரிய இழப்பு ஆகும். 95-வது வயதிலே அவர்கள் மறைந்திருப்பது அகால மரணம் இல்லையென்றாலும் அவர்கள் பிரிந்துவிட்ட காரணத்தினாலே நாடு வேதனைப் பெருமூச்சு விட்டுக்கொண்டு இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்கள் 95-வது வயதிலே மறைந்தாலும், 95 ஆண்டுகளுக்குப் பிறகு வருகின்ற தலைமுறையினர் சிந்தித்துப் பார்க்கவேண்டியவற்றையெல்லாம், இந்த நாட்டைச் சீர்திருத்துவதற்காக, அவர்கள் சிந்தித்துப் பார்த்தார்கள். இறுதிவரையிலும் அவர்கள் தாம் கொண்ட போர்க்கோலத்தைக் கலைக்காத வீரத் தளபதியாக இருந்தார்கள்.

வயதில் அறிவில் பெரியார், வாய்மைப் போரில் இளையார் என்ற பாரதிதாசனின் பொன்மொழிக்கேற்றபடி இந்தச் சமுதாயத்தைச் சீர்திருத்தவேண்டுமென்று இறுதிவரையில் பாடுபட்டார்கள். உலகத்தினுடைய வரலாறு, உலகத்திலே தோன்றிய பெரியார்களுடைய வாழ்க்கைத் தொகுப்பாக இருக்கிறது. தமிழகத்தின் வரலாறு, தந்தை பெரியாரின் வாழ்க்கை வரலாறாக இருக்கிறது. பதவியைப்பற்றித்தான் மக்கள் பணி ஆற்றவேண்டுமென்பதில்லை என்பதற்கு எடுத்துக்காட்டாக ஈரோடு நகராட்சித் தலைவர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு பெரியார் அவர்கள்

[திரு. கா. காளிமுத்து] [1974 சனவரி 18

பொதுப் பணியைத் தொடங்கினார்கள். பதவியை விரும்பாமலேயே, பதவியில் இல்லாமலேயே துணிகரமாகப் பணியாற்றினார்.

இந்த நேரத்தில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டதை இங்கே சொல்லலாம் என நினைக்கிறேன். தாழை மடலிலே அமைந்திருக்கின்ற முட்களைப் போன்ற அமைப்பு சமுதாய அமைப்பு. அந்த முட்களை அவற்றின் போக்கிலேயே வருடினால் அவை கைகளை எதுவும் செய்வதில்லை, ஆனால் எதிர்த் திசையிலே வருடுகின்ற நேரத்திலே அவை கைகளை குத்தும். அந்த முறையிலே பல் வேறு எதிர்ப்புகளுக்கிடையேயும் பெரியார் அவர்கள் எதிர்த் திசையிலே வருடி அவர்களுடைய கைகள் கிழிக்கப்பட்டு ரத்தம் ஒழுகிய நிலையிலும் தொடர்ந்து பணியாற்றினார்கள்.

ஒரு லட்சியவாதி எப்படி வாழவேண்டுமென்பதற்கு எடுத்துக்காட்டாக அவர்கள் வாழ்ந்தார்கள், ஒரு லட்சியவாதியின் வாழ்க்கைக்கு இலக்கணப் புத்தகமாகப் பெரியார் அவர்கள் திகழ்ந்தார்கள். அவர் கடுமையான எதிரிகள் என்று நினைத்தவர்களைக்கூட நட்புணர்ச்சியோடு அரவணைத்துக்கொண்டதைப் பார்க்கிறோம். சமுதாயக் கொள்கைகளிலே அவரோடு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் கருத்துவேறுபாடு கொண்டிருந்தாலும் நெருங்கிய நண்பராக ராஜாஜி இருந்திருக்கிறார். கொள்கையின் காரணமாக நட்புணர்ச்சி சிதைந்துவிடுவதற்கு இடமளிப்பதில்லை. இப்படிப்பட்ட ஒரு மாபெரும் தலைவரை இழந்ததை நாம் ஈடு செய்தாக வேண்டும். அவர் தந்துவிட்டுச் சென்ற கருத்துக்களை, சீர்திருத்த எண்ணங்களை அனைத்துக் கட்சியிலே உள்ளவர்களும் ஏற்று செயல்பட வேண்டுமென்று கூறி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** தலைவர் அவர்களே, தமிழ் மக்களால் தந்தை பெரியார் என்று அன்போடு அழைக்கப்படுகிற பெரியார் நம்மை விட்டுப் பிரிந்தது ஈடுசெய்ய முடியாத இழப்பு ஆகும். நாட்டின் விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டார். சமுதாய சீர்திருத்தங்களைச் செய்வதற்காக பாடுபட்டிருக்கிறார். அந்த முறையிலே அவர் வைக்கம் வீரர் என்ற பட்டத்தையும் பெற்றிருக்கிறார். கைத்தறித் துணிகளை மூட்டை மூட்டையாகத்



1974 சனவரி 18] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

தூக்கி வீடு வீடாகச் சென்று விற்றிருக்கிறார்கள். அவர் எடுத்துக்கொண்ட கொள்கைகளை ஆழமாக ஆணித்தரமாக மக்கள் மத்தியில் பதியுமாறு தொண்டாற்றி வந்தார்கள். மற்றவர்களின் மனதிலே பதியுமாறு அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறினார்கள். இந்தக் கருத்தைக் கூறினால் மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று கவலைப்படாமல் அதனுடைய பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் துணிகரமாக எடுத்துக்கூறுவார்கள். அவர்கள் விடுதலைப்போராட்டத்தின்போது தொடங்கிய பிரச்சாரத்திலிருந்து அவருடைய பொதுவாழ்விலே செய்த பிரச்சாரங்கள், அவருடைய இறுதிக்காலம் வரை செய்த பிரச்சாரங்களின் மூலம் தனக்கு எது சரியென்று பட்டதோ அதைக் கொஞ்சமும் தயங்காமல் சொல்லிவந்தார்கள். அவர் சொன்னார் இவர் சொன்னார் என்ற காரணத்திற்காக அவர் எதையும் சொல்லவில்லை. அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டாலுங்கூட அவர்கள் விதைத்த விதைகள் கொள்கைக் கருத்துக்கள் மறையா. அவை தமிழ் மக்களின் மனதிலே ஆழமாகப் பதிந்திருக்கின்றன.

இந்தியாவிலே வாழ்ந்த இருபெரும் தலைவர்களுள் அவர் ஒருவர். பொது வாழ்க்கையிலே ஈடுபட்டு பதவியை விரும்பாமல் மக்கள் பணி செய்வதிலே ஈடுபட்டவர்கள் இருவர், ஒருவர் காந்தியார், மற்றொருவர் பெரியார். அப்படிப்பட்ட பெரும் தலைவருடைய மறைவுகுறித்து மிகுந்த துக்கமடைகிறோம்.

95 ஆண்டுக்காலம் வாழ்ந்தவர்கள் இன்னும் ஐந்தாண்டுக்காலமாவது வாழ்ந்து 100 ஆண்டுக்காலம் வரை வாழ்ந்திருக்கக் கூடாதா என்று நாம் எல்லாம் கவலைப்படுகிறோம். அவருடைய அரசியல் அனுபவத்தில் மொத்த வயதில் பாதிகூட நாம் பெற்றிருக்கவில்லை. நாம் அந்த அளவிற்கு இருக்கிறோமா இல்லையா என்பது பிரச்னையல்ல. அவர்கள் வாழ்வு முழுவதும் சமுதாயத்திற்காகப் பாடுபட்டார்கள். அவர்கள் பேசியிருக்கக்கூடிய பொதுக்கூட்டங்களின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுப் பார்த்தால்—அவர்கள் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கூட்டங்கள் பேசுவார்கள்—அவர்கள் பொதுத் தொண்டாற்ற தொடங்கியதில் இருந்து இறுதிக்காலம் வரையில் அவர்கள் பேசிய பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டிலே உள்ள தலைவர்கள் எல்லாம் சேர்ந்து இதுவரையில் பேசியிருக்கின்ற எண்ணிக்

கைக்கு, பிரச்சாரத்திற்கு ஓரளவு சரியாக இருக்கலாம். தமிழ்ச் சமுதாயம் முன்னேறுவதற்காக அவர்கள் அல்லும் பகலும் பாடுபட்டு இருக்கிறார்கள். அவர்கள் மறைந்தது மிக மிக துக்கம் தருவதாகும். அவர்களுடைய மறைவினால் துயருற்றிருக்கின்ற மணியம்மையார் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 9.30)

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** தலைவர் அவர்களே, எதிர்த்துப் பேசிவிடுவதும் பாராட்டிப் பேசி விடுவதும் இயலக் கூடிய ஒன்றுதான். விருப்பம் இல்லாதவர்களைப் பார்த்து எதிர்த்துப் பேசிவிடலாம். விருப்பம் உடையவர்களைப் பாராட்டிப் பேசிவிடலாம். ஆனால் ஒரு விசித்திரம் என்ன? இந்த அனுதாபத் தீர்மானத்தின்மீது நான் பேச நிற்கிறேன் என்றால், இந்த அற்புதமான மனிதனைப் பாராட்டிப் பேசுவதுதான் மிகக் கஷ்டமானது; எதிர்த்துப் பேசுவது எளிது. பாராட்டிப் பேசுவது இருக்கிறதே அது மிகக் கடினம்.

நான் இந்த அவையிலே சொல்வதைப் பெருமையாகச் சொல்வதாக தயவு செய்து கருதிவிடக் கூடாது. கிட்டத்தட்ட, என்னைவிட அவரோடு தொடர்புடையவர்கள் இந்த அவையில் யாரும் இல்லை. நான், அவ்வளவு அவரோடு தொடர்புடையவன். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது, பணக்காரன்பட்டி, அதாவது அப்பநாய்க்கன்பட்டி என்று சொல்வார்கள். அங்கே ஒரு கூட்டம் நடந்தது. எஸ். வி. லிங்கம் என்பவர் அந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். அவரும் மறைந்து போய்விட்டார். நானும் பட்டுக்கோட்டை அழகிரிசாமியும், தோழர் ராமசாமியும் அங்கே போயிருந்தோம். அங்கே கூட்டத்திலே இருந்தவர்களே ஆறே ஆறு பேர்கள்தான். கூட்டத்திலிருந்து விலகி தூரத்தில் நின்றுகொண்டு கல்லை வைத்துக் கொண்டும் மற்ற ஆயுதங்களை வைத்துக்கொண்டும் நின்றவர்கள் நூற்றுக்கணக்கானவர்கள் இருப்பார்கள். அஞ்சாநெஞ்சம் படைத்தவர் என்று சொல்கின்ற மாயவரம் நடராசன் இருந்தும்கூட, அந்தக் கூட்டத்திலே பேசவேண்டாம், ஐயா நாம் திரும்பிப் போய்விடலாம் என்று, சொல்லும்போது, அவர் சொன்னார்—இதிலே பிரச்சாரம் செய்வது தான் நம் இயக்கத்திற்கு பலம். இந்த 3 பேர்கள், அவர்களிடம்



பேசி நம் கருத்தைப் புகுத்தினால் அது காலத்தில் 1, 10, 100, 1,000, 1,00,000-ஆக மாறும் என்று சொன்னார். அவர் மிகத் துணிகரமான மனிதர் என்றே நான் சொல்வேன்.

கடலூரில் ஒரு கூட்டம் நடந்தது. இப்பொழுது இருக்கிற இந்த ஒலி பரப்பு, மின்சாரம் இவைகள் இல்லாத காலம் அது. அப்பொழுது கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முதலில் அங்கே வைக்கப்பட்டிருந்த விளக்கை உடைத்து விட்டார்கள்; இருட்டாக இருந்தது. யார் எங்கே இருக்கிறார் என்றே தெரியவில்லை. எங்கள் 2, 3 பேர்மீது கல் வந்து விழுந்து கொண்டிருந்தது. அவரை டேபிள் அடியிலே வைத்து நாங்கள் சுற்றிலும் நின்று கொண்டோம். கல் வந்து விழுந்தது பலபேர் மேலே. ரத்தம் வழிந்தது, எங்கள் மீதும் ரத்தம் இருந்தது, மற்றவர்கள் மீதும் ரத்தம் இருந்தது. இரண்டுமூன்று பேர் மீது கத்திக் குத்தும் இருந்தது. இப்படியான ஒரு தொடர்பு இருந்தும்கூட, தான் நினைத்ததைச் சொல்வதை அவர் எப்போதும் மறைத்ததே இல்லை. அந்த எண்ணம் அவருக்கு உண்டாகவில்லை.

இப்பொழுது எளிதாகச் சொல்கிறார்கள். நம் அவையில் முன்னவர் பேசுகிறபொழுது, புரட்சிகரமானவர், பாராட்டப்பட வேண்டியவர், பெருமைமிக்கவர் என்றெல்லாம் சொல்கிறபொழுது, 40 வருஷத்திற்கு முன்பு இருந்ததை நினைக்கிறபொழுது, அந்த வார்த்தையை, அவருடைய மறைவுக் காலத்திற்கு முன்பு இந்த நாட்டில் எந்த மனிதனாவது சொல்லத் துணிந்தவன் இருந்தானா என்று சொல்லக் கூடிய துணிவு எனக்கு உண்டு. அவருடைய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய அறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவு அனுதாபக் கூட்டத்தில், பெரியமேடு என்று கருதுகிறேன், நானும் பெரியாருடன் பேசுகிற சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றேன். நான் பேசும்பொழுது சொன்னேன், நீங்கள் பல வகையில் அதிர்ஷ்டசாலி, ஆனால் ஒரு வகையில் அதிர்ஷ்டம் இழந்தவராகி விட்டீர்கள், என்று. அவர் எப்பொழுதுமே கையை காதருகே வைத்துக்கொண்டு, காதை ஒதுக்கிக்கொண்டுதான் கவனிப்பார். அண்ணா பிந்தியும், நீங்கள் முந்தியும் இருந்திருக்க வேண்டும். அப்படி இருந்திருந்தால், உங்கள் சிறப்பு அவராலே நிலைப்படுத்தப்பட்டிருக்கும் என்று சொன்னேன். நான் சொல்லிவிட்டு, அவர் என்ன பதில் சொல்கிறார் என்று கேட்க

[திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்] [1974 சனவரி 18

வேண்டுமென்று சற்று நேரம் இருந்தேன். சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு, அவர், நான் புதைப்பதையோ, சுடுவதையோக் கூட விரும்பாதவன்; காக்கைகளுக்கு என்னுடைய பிரேதத்தைக் கொடுத்து, அந்தை அவை உண்ண வேண்டுமென்று எண்ணுபவன். எனக்கு அவர் இருந்து, இவர் இருந்து செய்ய வேண்டுமென்ற எண்ணம் இல்லை, என்றார். நான் ஏன், இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இப்பொழுது பேசப்படும் நவீனக் கருத்துக்கள் ஒருகாலத்தில் பேசப்படுவதைக் கூடக் கேட்பதற்கு முடியாத காலத்தில், அவற்றை எடுத்துச் சொன்னவர். அதிலேதான் பெருமை இருந்தது. அப்படிப்பட்ட காலத்தில் எடுத்துச் சொல்லி, மற்றவர்களுடைய மனதிலே புகுத்திவைத்தார்.

இன்னொன்று சொல்கிறேன், உங்களிலே பலபேருக்குத் தெரியுமா, தெரியாதோ, எனக்குத் தெரியாது. சேலத்தில் ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது, சுயமரியாதைக் கூட்டம். பெரியார் பின்தங்கி வந்தார். வரும்போது இரண்டு பேரைக் கூட்டிக் கொண்டு வந்தார், ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும். அந்த அம்மையார் கிட்டத்தட்ட 6 மாதம் கர்ப்பம். இரண்டு பேரையும் மேடையிலே கொண்டு வந்து நிறுத்தி வைத்துவிட்டு மாநாடு நடக்கட்டும், நான் ஒரு கல்யாணம் செய்யப் போகிறேன் என்று சொன்னார். அவர் எழுந்து பேசும்பொழுது, நான் இதோ இந்த பெண்ணுக்கும் அந்தப் பையனுக்கு கல்யாணம் செய்யப் போகிறேன் என்று சொன்னார். கூட்டத்தில் இருந்தவர்கள் ஆச்சரியப்பட்டு விட்டார்கள். அந்த அம்மாவினுடைய உருவத் தோற்றமே அதற்குக் காரணம்—கிட்டத்தட்ட 6 மாதம் கார்ப்பிணியாக இருந்ததுதான். அவர் ஹாஸ்யமாக சொன்னார். ஏன் எல்லோரும் சிரிக்கிறீர்கள்? ஏதோ பிந்தி செய்யவேண்டிய காரியத்தை அவர்கள் முந்தி செய்து விட்டார்கள், அவ்வளவு தான். இப்பொழுது புருஷன்—மனைவி ஆகப் போகிறார்கள் என்று சொன்னார். இதோ எழுந்து வாருங்கள் என்று அவர்களை அழைத்து, இதோ மாலை என்று கொடுத்து, போட்டுக்கொள்ளச் சொல்லி, சமுதாயத்திலே ஒதுக்கி வைக்கப்பட்ட அவர்களை மீண்டும், சமுதாயத்திலே சேர்க்கக் கூடிய அவரைப் போன்ற பயங்கர துணிவு பெற்றிருக்கிறவர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று எண்ணி எனது மனது சபலம் அடைகிறது.



1974 சனவரி 18] [திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்]

இன்னொன்று சொல்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தோடு முஸ்லீம் லீக் தொடர்பு கொண்டபோது கொஞ்சம் காரமாக எங்களைப் பேச ஆரம்பித்தார்கள். ஒருமுறை புகை வண்டியில் நான் அவரைச் சந்தித்தபோது, அவருக்கு வணக்கம் செலுத்தினேன். அவர் இரண்டு பேரை சாயபு என்பார். ஒருவர், ஈரோடு முதலாளி சாயபு—என்னை மொய்தீன் சாயபு என்பார். வாங்க மொய்தீன் சாயபு என்று சொன்னார். நான் சொன்னேன், ஐயா கட்சியோடு தொடர்பு கொண்டிருக்கிறபொழுது, நீங்கள் ஏன் எங்களை இப்படித் தாறுமாறாகப் பேசுகிறீர்கள். எங்களுடைய அபிப்பிராயம் அவர்களோடு சேர்ந்திருந்தோம். எங்களை ஏன் அப்படிப் பேசுகிறீர்கள் என்று கேட்டேன். கொஞ்ச நேரம் சும்மா இருந்துவிட்டு இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டீர்கள், நீங்கள் நெடுநாளாக என்னோடு பழகக் கூடியவர். மற்றவர்கள் கேட்டிருந்தால் அதற்குப் பதில் வேறுவிதமாகச் சொல்லியிருப்பேன். உங்களிடம் சொல்கிறேன், காரணம் நீங்கள் நெடுநாள் என்னோடு பழகக் கூடியவர். இனிமேல் உங்களைப் பற்றிப் பேசுவதில்லை போங்கள் என்று சொன்னார். இதெல்லாம் சாதாரணமான பேச்சு அல்ல, பிரச்சனை அல்ல.

அறிஞர் அண்ணாவைப் பற்றி எல்லோரும் அவர் மறைவுக்குப் பின்னர் சொன்ன கருத்திலும் இவர் சொன்ன கருத்திலும் வித்தியாசம் இருக்கிறது. அவர் சொன்னார், கொஞ்ச நாள் இருந்து சாக வேண்டிய மனிதன் கொஞ்சம் முந்தி செத்துவிட்டார். சாக வேண்டுமென்று இருக்கிற எனக்கு இன்னும் கொஞ்சம் நாள் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆக, இதிலே எல்லோரும் சாக வேண்டியவர்கள்தான். இதிலே ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. நான், செத்தார் என்பதற்காக இங்கே பேச வரவில்லை. இப்படி ஒரு மனிதன் போய் விட்டார் என்ற மனிதாபிமான உணர்ச்சியை உங்களிடம் சொல்ல வந்தேன் என்றார். தலைவர் அவர்களே, எதற்கு இதைச் சொல்கிறேன்? நன்றி காட்டப் பேசுகிறேன். நான் முடிக்கப் போகிறேன். இவ்வளவு நேரம் நான் பேசக் கூடாது என்றாலும் என்னுடைய உணர்ச்சி மேலிட்டின் காரணமாகப் பேசுகிறேன். டாக்டர் நேற்றே சொன்னார், 3 நிமிடத்திற்கு மேல் பேசக் கூடாது என்று. பரவாயில்லை. அவர்மேல் எனக்கு உள்ள வருத்தம் என்னவென்றால், யார் அவருக்கு நன்றி காட்ட வேண்டுமோ யார் அவருக்கு உண்மையிலேயே மரியாதை செய்ய வேண்டுமோ அவர்களிட

*[திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தின்] [1974 சனவரி 18*

மிருந்து அவர் மரியாதை பெறவில்லை. பலன் பெற்ற பிறகு, மனிதன் ஆனதற்குப் பிறகு ஒதுக்கப்பட்டிருந்தவன் உயர்ந்த தற்குப் பிறகு, தன்னை ஏதோ வேறு வகையாக மாற்றிக்கொண்டு அவரை எதிர்ப்பதற்கு—எதிர்க்கக் கூடிய தமிழர்களைப் பெற்றுள்ள அந்த துர்ப்பாக்கியமான நிலையில் நாம் இருக்கிறோம் என்று சொல்ல நான் வெட்கப்படுகிறேன். முதன்முதலாக அவர் சுயமரியாதைக் கொள்கையைப் பரப்பிய இடம் இராமநாதபுரம் ஜில்லாவும், திருநெல்வேலி ஜில்லாவின் ஒரு பகுதியிலும்தான். நான் அதை விரிவாகப் பேச விரும்பவில்லை. அந்தப் பகுதிகளில் அவர்கள் செய்த பணிகள் இருக்கின்றனவே அவைதான் தொடக்கம். அவர்களுக்குக் காட்டப்பட வேண்டிய அந்த மகத்தான மதிப்பும், மரியாதையும் இழந்திருக்கிறது என்ற போதிலும் அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை. நெஞ்ச முத்தத்தோடு சிறப்பான முறையில் தன்னுடைய பணிகளைச் செய்தார்கள்.

நான் முடிக்கப்போகும் நேரத்தில் ஒரு வார்த்தை சொல்லத் தான் வேண்டும். இனி ஒரு மனிதன், இம்மாதிரியான உள்ளம் படைத்த ஒரு மனிதன் இந்தத் தமிழ்நாட்டில் பிறப்பதற்குக் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளாவது ஆகலாம் என்பது என் எண்ணம். அவ்வளவு புரட்சிகரமான கருத்தை வெளியிட்ட அந்தப் பெருமனிதருடைய மறைவுபற்றிக் கொண்டுவந்திருக்கும் இரங்கல் தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பிலேயும், என்னுடைய சொந்த சார்பிலேயும் ஆதரிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

* **திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** பெருமதிப்பிற்குரிய தலைவரவர்களே, மதிப்பிற்குரிய பெரியார் அவர்களுடைய மறைவிற்கு வருத்தம் தெரிவிக்க கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த இரங்கல் தீர்மானத்தை என்னுடைய கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். பெரியார் அவர்களுடைய பொதுத்தொண்டு இந்த நாட்டிலே சமுதாயத்தின் அடித்தளத்திலே கிடந்து உழன்ற பெரும்பான்மையான மக்களுடைய வாழ்க்கையிலே ஒரு பெரும் முன்னேற்றத்தை அளிப்பதற்கு உதவியது என்பதிலே யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.



*1974 சனவரி 18] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]*

நாட்டிலே வாழ்க்கை முழுவதும் தன்னலமற்ற சேவையிலே தங்களை ஈடுபடுத்திக்கொண்ட பெருந்தலைவர்களிலே ஒருவராக பெரியார் அவர்கள் சரித்திரத்திலே இடம் பெற்றுள்ளார்கள். மற்றத் தலைவர்களோடு பெரியார் அவர்களை ஒப்பிடும்பொழுது பெரியார் அவர்களுடைய தொண்டு மகத்தானது என்பதிலே கருத்து மாறுபாடு இருக்க முடியாது. அவர்களுடைய ஆரம்பகாலப் பொதுப்பணியிலே அவர்கள் நடத்திய பகுத்தறிவுப் பிரசாரம் நாட்டிலே படிப்பு வளர்ச்சியற்ற, பகுத்தறிவற்ற நிலையிலேயிருந்த மக்களிடையே இம்மாதிரியான கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு எவ்வளவு அசாத்தியமான தைரியம் ஒரு மனிதருக்கு இருக்க வேண்டுமென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நாம் ஞாபகபடுத்திக்கொள்ள வேண்டும். அவ்வளவு பெரும் தைரியத்தோடு, எவ்வளவு பெரிய எதிர்ப்புகள் வந்தாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல் தன்னுடைய கருத்தை மக்களிடையே எடுத்துச் சொல்லும் பணியைத் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறார்கள். அவர்களிடத்திலேயிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய கருத்துகள் பல உண்டு. அதிலே தலையாய கருத்து என்று நான் கருதுவது, தான் நினைக்கின்ற கருத்தைத் துணிவோடு எடுத்துச் சொல்வதற்கு ஒரு மனிதன் பழகிக்கொள்ள வேண்டுமென்பதாகும். இன்றைய காலகட்டத்திலே அரசியல்வாதிகளாகிய நாம் எந்த அளவிற்கு அம்மாதிரி எடுத்துச் சொல்வதற்குத் துணிவு பெற்றிருக்கிறோம் என்பது ஆராய்வதற்குரிய ஒன்றாகும்.

அதுமட்டுமல்லாமல், அவர்கள் சமுதாயத்திற்கு ஆற்றிய தொண்டுகளிலே முதன்மையானது, ஜாதி ஒழிப்பு மிகவும் அதிகப்படியான கவனத்தை ஈர்த்தது. சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டவர்களாக, பிற்படுத்தப்பட்டவர்களாக, ஒடுக்கப்பட்டவர்களாக இருந்த சமுதாயத்தை மேன்மையுறச் செய்ய அவர்கள் எடுத்த முயற்சி, அவர்கள் செய்த பணி இன்றைக்கும் நம்மால், இந்தச் சமுதாயத்தால் மறக்க முடியாத ஒன்று. அதுமட்டுமல்லாமல், மூடநம்பிக்கை ஒழிப்பிற்கு அவர்கள் செய்துள்ள பணி மகத்தானது. அப்படி அவர்கள் தொண்டு செய்யும்பொழுது அவர்கள் எவ்வளவு பெரிய கடுமையான கருத்தை வைத்தாலும் கூட, அந்தக் கருத்து பலரால் ஏற்றுக்கொள்ளப்படக் கூடாததாக இருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் எடுத்துச் சொன்ன ஒரே தலைவர் பெரியார் அவர்கள்.

அவர்கள் தன்னுடைய வாழ்க்கையிலே மிகவும் சிக்கனமாக இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம். அவ்வளவு சிக்கனமாக இருந்து, நாட்டிற்கு வழிகாட்டியாக இருந்து, அவர்கள் சேமித்த தொகையையெல்லாம் பொது வாழ்விற்கே அர்ப்பணம் செய்து, தன்னுடைய கருத்துக்களைப் பிரச்சாரம் செய்ய ஒரு பெரும் பணியை அவர்கள் செய்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

அவர்கள் எவ்வளவு கடுமையாக பிறருடைய கருத்துக்களை விமர்சனம் செய்தாலும்கூட, அவர்களிடம் யாரும் நேரடியாகப் போனால், அவருடைய விமர்சனத்திற்கு உட்பட்டவர்கள் நேரடியாகப் போனால் அவர்களிடம் அவர் காட்டும் மரியாதை கொஞ்சநஞ்சமல்ல என்று பலரும் சொல்லக் கேட்டிருக்கிறேன். சிறு பையனாக இருந்தாலும், பெரியவர்களாக இருந்தாலும் அவர்களிடத்திலே நேரிலே போகும்பொழுது அவர்கள் காட்டிய மரியாதை மிகவும் அதிகம். அந்த அளவிற்கு ஒவ்வொருவருக்கும் மரியாதை காட்டி அவர்கள் வழிகாட்டியாக இருந்தார்கள். அப்படிப்பட்ட அவர்களுடைய கருத்துக்களை நாம் இந்த நாட்டிலே நிலைநிறுத்தி, ஜாதியை ஒழித்து சமதர்ம சமுதாயம் ஏற்படுவதற்கான அந்தப் பணியைத் தொடர்ந்து நீடிப்பதுதான் அவர்களுக்குச் செய்யும் மரியாதை என்ற கருத்தைச் சொல்லி இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

THIRU B. VENKATASWAMY : Sir, while supporting the condolence resolution brought forward by the Leader of the House, I, on behalf of the Swathanthra Party, share the views expressed by him. Sir, at the outset our Leader of the House has stated that he was a great freedom fighter and it was he who started the Khadi Board in Tamil Nadu and it was he who opened the Ashram at Thiruchengode run by Rajaji. He always liked clean and honest Government or honest society and for that he opposed the exploitation of the poor classes by the so-called intellectuals whether in the name of religion or whether in the name of politics and in the name of any other thing. He worked and preached his gospel not to exploit the poor classes; in his entire life he followed Gandhian principles. He was against a particular community; but the most appreciable thing about him was even though he had animoisty against a particular community, he never advocated



violence. That is most important in his life. Only through his message he was able to convince people. This shows clearly that he was a real follower of Gandhism.

Regarding the connection between Rajaji and Periyar, they were of the same age and when Rajaji was the Chairman of the Salem Municipality, Periyar was the Chairman of the Erode Municipality. Both were close friends. I understand that Rajaji used to write to revered E.V.R. as ' ANBANA ETHIRI ' and even though they were ' ethiris ', they were very close friends. I also understand that when Rajaji as Governor-General came to Thiruvannamalai to open the Pathala Lingam Shrine, Periyar took his advice and only on the advice of Rajaji he married Maniammai. That is what I understood and they were such close friends.

Periyar was particularly attracted by Rajaji because of his simplicity, honesty and faith in his convictions. These have attracted Rajaji also.. These have attracted such a great man.

On behalf of the Swathanthra Party, I express my heartfelt condolences to the members of the bereaved family, especially to Mrs. Maniammai. I hope his loss cannot be compensated to the Nation in any way.

Thank you, Sir.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சபாநாயகர் அவர்களே, சபையின் முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கும் இந்த இரங்கல் தீர்மானத்தை இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில் ஆதரிக்கிறேன். பெரியார் போன்றவர்களைப் பற்றிப் பேச வேண்டுமென்றால் மணிக் கணக்காகப் பேசலாம். இந்தத் தீர்மானத்தினுடைய கட்டுக்கோப்புக்கு உட்பட்டு சுருக்கமாகச் சில விஷயங்களைக் கட்சியின் சார்பாகவும், சில விஷயங்களை என் சார்பாகவும் கூட எடுத்துச் சொல்லலாம் என்று நினைக்கிறேன்.

பெரியார் அவர்களுடைய அரசியல் வாழ்வைப் பற்றி அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தமிழ்நாட்டில் இருந்து முதல் முதலாக சோவியத் யூனியனுக்குச் சென்றவர் பெரியார் அவர்கள்தான். பெரியாரும், திரு. எஸ். இராமநாதன் அவர்களும் அங்கு சென்றதோடு மட்டுமல்லாமல் இங்கிலாந்து தேசத்தில் சுற்றுப் பிரயாணம் செய்கிற நேரத்தில் இந்தியாவி

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 சனவரி 18

லிருந்து இங்கிலாந்து தேசத்தில் குடியேறி பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சக்ளாவாலாவோடு பல இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்ததாகத் திரும்பிவந்தபோது சொன்னார்கள். அதோடு சோவியத் யூனியனில் தீட்டப்பட்ட முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றித் தமிழில் குடியரசுப் பதிப்பாக அவர்கள் வெளியிட்டார்கள். சுவாமி சிதம்பரனார், பொன்னம்பலனார் ஆகியோரோடு மலேயாவில் சுற்றுப் பயணம், செய்து வந்து கடல் கடந்த தமிழர்கள் பிரச்சினை பற்றி எல்லாம் எடுத்துப் பேசினார்கள்.

இன்றைக்குப் பல விஷயங்கள் நமக்குச் சாதாரணமாகப் படலாம். சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்தது 1929-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். முதல் மாநாடு செங்கற்பட்டில் நடக்கிற போது பட்டிவீரன் பட்டியைச் சேர்ந்த டபிள்யூ. பி. ஏ. சௌந்தரபாண்டியனைத் தலைவராகப் போட்ட மிகப் பெரிய துணிச்சல் அவர்களுக்கு இருந்தது. அந்தக் காலத்தில் ஒடுக்கப் பட்டிருந்த ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவரை, வேறு எந்த விதத்திலும் பெரிய அளவுக்குச் செல்வாக்குப் பெற்றவர் என்று சொல்ல முடியாத ஒருவரைக் கொண்டு வந்து வைத்து அந்தச் சமுதாயத்திற்கு ஒரு பெரிய நன்மையைச் செய்தார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. 1930-ம் ஆண்டு மே மாதம் ஈரோட்டில் நடந்த இரண்டாவது சுயமரியாதை மாநாட்டில் மாணவன் என்ற முறையில் என்னைப் போன்றவர்கள் எல்லாம் பங்கெடுத்துக் கொண்டோம். இன்றைக்கும் நன்றாக ஞாபகம் இருக்கிறது. அன்று சுயமரியாதை மாநாட்டுக்கு சாப்பாடு சப்ளை செய்ய வந்தவர்கள், சமையல் செய்ய வந்தவர்கள் விருது நகர் நாடார்கள். இன்றைக்கு விருதுநகர் நாடார்கள் சமையலை எல்லோரும் சாப்பிடலாம். ஆனால் அன்றைக்கு இருந்த நிலையில் சாப்பிட மறுத்தவர்கள் பெரும்பாலோர் இருந்தார்கள். இந்தக் காரியங்களை எல்லாம் செய்வதற்கு அவர்களுக்கு துணிச்சல் எந்த அளவுக்கு இருந்தது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதனைச் சொன்னேன். விதவா விவாகம் வேண்டுமென்று சொல்லிவந்த நிலையில் தன்னுடைய கூடப் பிறந்தவர் மகளுக்கு விதவையான பிறகு திருமணம் செய்து வைத்தார். இதனால் ஜாதிப் பிரஷ்டம் கூட செய்யப்பட்டார்.



1974 சனவரி 18] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அன்றைக்கு குடியரசுப் பத்திரிகையில் பல முற்போக்குக் கருத்துக்களை எழுதி வெளியிட்டார்கள். மீரட் சதி வழக்கு நடந்த போது அந்த சதி வழக்கில் ஒவ்வொரு எதிரியும் கொடுத்த வாக்கு மூலங்களை எல்லாம் வெளியிட்டார்கள். முடிவு வந்தவுடன் கண்டித்துத் தலையங்கம் எழுதி இருக்கிறார்கள்.

எங்கள் கட்சியில் முக்கிய தலைவராக இருந்த திரு. ஜீவானந்தம் அவர்கள் அவரால் தயாரிக்கப்பட்டவர். அன்றைக்கு பகத்சிங் எழுதிய 'நான் ஏன் நாஸ்தகன் ஆனேன்?' என்ற புத்தகத்தை மொழி பெயர்த்து குடியரசுப் பத்திரிகையில் வெளியிட்டதற்காக ஜீவானந்தம் அவர்கள் கைது செய்யப்பட்டார்கள். குடியரசு பத்திரிகைக்கும் பெரிய நெருக்கடிகள் எல்லாம் ஏற்பட்டன.

அதற்குப் பின்னால் வேறு எந்தக் காரணங்களாலோ அரசியலில் நேரடியாக ஈடுபட வேண்டாம், சமுதாய சீர்திருத்தப் பணிகள் போதும் என்று ஒதுங்கிய நேரத்தில் சுயமரியாதை இயக்கத்தில் இருந்த பல வாலிபர்கள் திருச்சி மாநாட்டில் ஜீவானந்தம் தலைமையில் கூடி அரசியலில் சேரக் கூடியவர்கள் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் சேரவேண்டுமென்று முடிவு செய்தார்கள். அன்று காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியில் கம்யூனிஸ்டு கட்சியிலுள்ள பெரும்பாலோர் இருந்தார்கள். அந்த முடிவு எடுத்தது எல்லாம் சரித்திரம். அதைப் பற்றியெல்லாம் பல விஷயங்களை எல்லாம் இன்றைக்கு எடுத்துச் சொல்லலாம். சுவாமி சிதம்பரனார் ஓரளவுக்கு 'தமிழர் தலைவர்' என்ற புத்தகத்தில் சில விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

சுதந்திரத்திற்குப் பின்னால் அரசியலைப் பொறுத்தவரை இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை யார் ஆட்சியில் இருக்கிறார்களோ அவர்களோடு ஒத்துப் போவது என்ற கொள்கையை அனுஷ்டித் தார்கள் என்று நினைக்கிறேன். அதற்கு மாறாக சமுதாய சீர்திருத்தத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே எடுத்த அந்தக் கொள்கையில் கடைசி வரை உறுதியாக இருந்தார்கள். சமீபத்தில் கூட பகுத்தறிவு மாநாட்டில் என்னைப் பேச அழைத்தபோது, எனக்கு விவரங்கள் தெரியும் என்ற முறையில் தோழர் சிங்கார வேலு அவர்களைப் பற்றிப் பேசவேண்டுமென்று அழைத்தார்கள். அவரைப் பற்றி நான் பல விஷயங்களைச் சொல்லுகின்ற நேரத்தில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1974 சனவரி 18

தலையை ஆட்டிக் கொண்டு 'பலருக்கு இந்த விஷயங்கள் எல்லாம் தெரியாது' என்று சொன்னார்கள். இன்றைக்கும் கூட நல்ல லட்சியத்தோடு மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று சொன்னால் அதற்கு இடைஞ்சலாக இருக்கக்கூடிய மூடப் பழக்க வழக்கங்கள் எல்லாம் மாறவேண்டுமென்பதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. தமிழ்நாட்டில் மட்டுந்தான் இன்றைக்குத் துணிந்து ஜாதியையும், மதத்தையும் சாடமுடியும். இந்தியாவில் இருக்கக்கூடிய பல மாநிலங்களில் இந்த நிலைமை இல்லை. ராவண தாஸ் என்ற பெயரைத் தமிழ்நாட்டில் வைத்துக் கொள்ள முடியுமே தவிர வேறு மாநிலங்களில் வைத்துக் கொள்ள முடியாது. இராமனை அவமானமாக இங்கு எடுத்துப் பேச முடியுமே தவிர வேறு எங்கும் அப்படிப் பேச சாத்தியமில்லை. இதைப் பற்றி எங்கள் கட்சி மேலிடத் தலைவர்கள் குறிப்பிடும் போது மதம் முற்போக்கு இயக்கத்திற்குத் தடங்கலாக இருக்கிறது என்பதைப் பற்றித் துணிச்சலாக எடுத்துச் சொல்லுவதற்கு தமிழ்நாட்டில் இருக்கும் கம்யூனிஸ்டுகளுக்கு இருக்கும் வாய்ப்பு மாதிரி வேறு இடங்களில் இல்லை என்று சொல்லுவார்கள். இந்த முறையில் பெரியார் அவர்கள் பெருவாழ்வு வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் 95 வருஷ காலம் வாழ்ந்தார்கள். 100 வருஷ காலம் வாழ்ந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவர் காலத்திலிருந்தே அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன் மகன் திரு. ஈ. வி. கே. சம்பத் அரசியலில் இருந்து கொண்டிருக்கிறார்கள் அவருக்குப் பின்னாலும் கூட அந்தக் குடும்பம் அரசியலில் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

கடைசியாக, அவருக்கு ஞாபகச் சின்னம் எழுப்ப வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. பெரியார் போன்றவர்களுக்கு நடுரோட்டில் சிலை வைப்பது மட்டும் போதாது என்பது என்னுடைய கருத்து. நல்ல நூலகம் போன்ற ஒரு அமைப்பை அமைத்து அந்த இடத்தில் பெரியாருடைய சிலையை அமைக்கலாம். அது பொருத்தமாக இருக்கும். நான் ஆரம்பத்தில் சொன்னது போல் பெரியார் அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால் எவ்வளவோ சொல்லலாம். இந்தத் தீர்மானத்தில் இதற்கு மேல் நான் சொல்வதற்கில்லை என்று கூறி இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து அமர்கிறேன்.



1974 சனவரி 18]

(முற்பகல் 10.00)

**திரு. மணலி சி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, மறைந்த தந்தை பெரியாருக்காக பிரேரேபிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த இரங்கற் தீர்மானத்தை, நான் என்னுடைய முழு மனதோடு உணர்வுகள் பூராவும் பங்குகொள்ளும் விதத்தில். ஆதரித்துப் பேச நிற்கிறேன். மறைந்த தந்தை பெரியார் அவர்கள் இந்த நூற்றாண்டின் தமிழகத்தின் மகா புருஷர் என்று சொன்னால் அது மிகப் பொருத்தமான விஷயம் என்றுதான் நான் கருதுகிறேன். அவர்களை விட இந்த நூற்றாண்டில் தமிழகத்தின் பொதுவாழ்வில் வாழ்ந்தவர்கள், தனது இலட்சியத்திற்காக இடைவிடாது போராடியவர்கள், தமிழக சமுதாயத்தில் ஒரு பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர்கள் யாரும் இருக்கமுடியாது என்பதை நான் திட்டவட்டமாகச் சொல்லமுடியும். சரித்திரம் அதைத்தான் குறிப்பிடப் போகிறது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்று கேட்டால் மிக நுணுக்கமான விஷயம் சமுதாய விஷயம். பொருளாதாரத்தைப் பற்றிப் பேசலாம், அரசியல் துறையில் பல மாறுதல்களை விரும்பலாம், ஆனால் சமுதாயத்தில் நீடித்து விளங்கி வரக்கூடிய பழக்கவழக்கங்களை, மக்கள் பின்பற்றக் கூடிய பழக்கவழக்கங்களை அவைகள் நாட்டுக்கு ஏற்றதல்ல, காலத்திற்கு ஏற்றதல்ல என்று துணிவாகச் சொல்லி அதற்காக போராடுவது என்பது நெருப்போடு விளையாடுவது போலாகும். பெரியார் அவர்கள் இந்த நெருப்போடு தன் வாழ்நாள் பூராவும் சிறிது கூட அஞ்சாது போராடியிருக்கிறார்கள், வெற்றி பெற்றிருக்கிறார்கள், அது சமுதாயத்தின் முகத்தை மாற்றியிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

அவர்களுடைய எண்ணங்கள், கருத்துக்கள் சில பேர்களுடைய மனத்தைப் புண்படுத்தியிருக்கிறது என்றால் இந்த நாட்டில் எந்த மாற்றத்தைக் கொண்டுவருவதாக இருந்தாலும், குறிப்பாக சமுதாய மாற்றம் வேண்டுமென்றால் நிச்சயமாக மேல் தட்டில் இருக்கக் கூடியவர்கள், நிச்சயமாக சுயநலக்காரர்கள் இவர்களுடைய மனத்தைப் புண்படுத்தாமல் எதையும் மாற்ற முடியாது என்பது ஓர் உண்மையாகும். இதை அவர்கள் தெளிவாகச் செய்தார்கள். அதில் அவர்கள் காட்டிய உறுதி இருக்கிறதே அது பாராட்டத் தக்கது. அவர்கள் 95 ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்றால் அவர்கள் உள்ளத்தில் ஒரு தெளிவோடு வாழ்ந்தார்கள்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 சனவரி 18

ஆயுளுக்குக் கூட ஒரு இலக்கணம் கூறுவார்கள். தன்னுடைய எண்ணங்களின்படி நடக்கக் கற்றுக்கொண்டால் நீண்ட நாட்கள் வாழ முடியும் என்று கூறுகிறார்கள்.

பெரியார் அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்படாமல் தன் கருத்துக்கள் சமுதாயத்திற்கு ஒத்துவரச் செய்யவேண்டும். சமுதாயத்தின் போக்கிற்கு தன்னை இரையாக்கிக் கொள்ளக்கூடாது என்ற முறையில் 95 ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்கள் கடைசி வரையில் ஆரோக்கியமாக வாழ்ந்திருக்கிறார்கள், அதுதான் வேடிக்கை, இந்நிலையில் பெரியார் அவர்கள் ஒரு சரித்திரப் புருஷர் என்று தமிழக சரித்திரத்தில் பொறிக்கக் கூடிய அளவிற்கு அவர்களது வாழ்க்கை அமைந்துள்ளது. நான் அவர்களோடு பல சந்தர்ப்பங்களில் மிக நெருங்கிப் பழகியிருக்கிறேன். என்னிடம் மிகவும் அன்பு பாராட்டிய ஒருவராவார். அவர்களது இழப்பு என்னுடைய சொந்த இழப்பு என்று கூட நான் நினைப்பதுண்டு. அவர்கள் மிகவும் அன்போடு பழகுவார். நான் தலைமறைவாக இருந்த காலத்தில் நானும், மார்க்ஸிஸ் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ராமமூர்த்தி அவர்களும் செய்தி அனுப்பினோம் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்று. மிகத் துணிவாக உடனடியாக அன்றிரவே 10 மணிக்கு திரு. குருசாமி அவர்களின் இல்லத்தில் சந்தியுங்கள் என்று தகவல் சொல்லி அனுப்பினார்கள். இப்படி ஒரு தலைவர் இருக்கிறாரா என்று நினைத்தோம். எங்களைச் சந்தித்துப் பேசினாலே இரண்டு மூன்று ஆண்டுகள் தண்டிக்கப்படக் கூடிய நேரத்தில் மிகத் துணிவாக எங்களைச் சந்திக்க சம்மதித்து நாங்கள் மூன்று மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம், அரை மணி நேரம், ஒரு மணி நேரமல்ல, மூன்று மணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். இதில் அவர்களிடமிருந்து ஒரு பெரியவித்தையைக் கற்றுக்கொண்டேன். இந்த மூன்று மணி நேரத்தில் அவர்கள் வாய் விட்டு ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. எங்களை பேச விட்டாரே தவிர அவர்கள் ஒன்று கூட பேசவில்லை. குறிப்பாக மூன்று வார்த்தைகளை கற்றுக்கொண்டோம். நான் பேசிக் கொண்டிருந்தேன் அல்லது ராமமூர்த்தி அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒன்று, சரிதான் என்று சொல்வார். அப்படியாங்க என்று சொல்வார். பிடிக்காத விஷயம் என்றால் இருக்கலாமுங்க என்பார். இந்த மூன்று வார்த்தைகள்தான். சரிதான், அப்படியாங்க, இருக்கலாமுங்க, இவ்வளவுதான். ஒரு திட்டவட்டமான கருத்தை



1974 சனவரி 18] [திரு. மணலி சி. கந்தசாமி]

அவர்கள் சொல்லவில்லை, நாங்கள்தான் விளாசிக் கொண்டிருந்தோம். அந்த மூன்று வார்த்தைகளில் அவர்கள் எங்களை மடக்கிப் போட்டு விட்டார்கள். அசாத்தியமான தைரியம், கள்ளங்கபடமில்லாத உள்ளம், தங்கு தடையற்ற சிந்தனை, எதையும் நடைமுறையில் கொண்டுவரக்கூடிய உறுதிப்பாடு இவை இருந்தன. தமிழகம் பூராவும், தமிழக மக்களின் நெஞ்சில் அவர்கள் பதிந்திருக்கிறார்கள்.

ஒரு கோடி ரூபாய்க்கு மேல் அவருக்கு சொத்து இருக்கிறது. ஒரு கோடி ரூபாய்க்கு மேல் 'சொத்து தமிழகத்தில் யாருக்காவது இருப்பதை பார்த்திருக்கிறீர்களா? காசில் கஞ்சம் என்று சொல்வதுண்டு. அவரது கஞ்சத்தனம் தமிழகத்திற்கு லாபம் என்கிற முறையில் ஒரு கோடி ரூபாய் அளவிற்குள்ள சொத்து தமிழகத்திற்குப் பயன்படுகிற முறையில், அவரது எண்ணங்கள், கருத்துக்கள் பரவக் கூடிய முறையில் விட்டுச் சென்றிருக்கிற அந்தத் தலைவரை தமிழகம் என்றென்றும் போற்றும் என்று சொல்லிக் கொண்டு நானும் மனப்பூர்வமாக இந்த இரங்கல் தீர்மானத்தை ஆதரித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. இ. எஸ். தியாகராசன் :** தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய மன்றத்தின் முன்னவர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற பெரியார் அவர்களின் மறைவு குறித்துள்ள இரங்கல் தீர்மானத்தின்மீது தமிழரசுக் கழகத்தின் சார்பில் அதை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவராக 95 ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்கள் இந்திய விடுதலைப் போராட்டத்தில் இளமையிலேயே கலந்து கொண்டு வைக்கம் வீரர் என்ற பெரும் பட்டத்தை அன்றையதினமே பெற்று இருக்கிறார்கள். அவர்கள் போராட்டத்தில் கலந்து கொண்டு பலமுறை சிறை சென்றிருக்கிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் சிறை செல்வது என்பது சர்வசாதாரணமாக இருந்தது என்பதை நாம் நினைவு கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்கள் அறுபது, எழுபது ஆண்டுக் காலம் அரசியல் வாழ்க்கையில், தமிழகத்தில் மட்டுமல்ல, தொண்டு புரிந்திருக்கிறார்கள். அவர்கள் செய்திருக்கிற அரும்பெரும் தியாகங்களை இன்றையதினம் தமிழகம் நன்கு உணர்ந்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

அவர்கள் இந்தத் தமிழகத்தில் மாபெரும் புரட்சி எண்ணங்களைத் தூண்டியவர், மூடநம்பிக்கைகளை இந்த நாட்டிலிருந்து ஒழிக்கப் பாடுபட்டவர், மூட நம்பிக்கைகளின் விளைவாக ஏற்படுகிற பல சிக்கல்களை எல்லாம் இந்த நாட்டிலிருந்து அகற்ற வேண்டுமென்பதற்காக தன்னுடைய இளமைக் காலம் முதல் 95 வயது வரையில் பாடுபட்டு வந்தார்கள். அவர்களது புரட்சி எண்ணங்களை நாட்டு மக்கள் உணர வேண்டும், உணர்ந்து அதன் விளைவாக நாடு முன்னேற வேண்டும் என்று பல விஷயங்களை அவர்கள் சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழ் இனம், தமிழ் நாடு வளர்ந்தோங்க வேண்டுமென்பதற்காக அவர்கள் தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்கள சாதாரணப் பெரியாராக, தந்தை பெரியாராக மட்டும் மறையவில்லை. இன்றைய தினம் தமிழகத்தை ஆளுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தன் வாரிசாக விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அவர்களுடைய மறைவு மிகவும் வருந்தத்தக்க ஒரு மறைவாகும் என்று கூறிக்கொண்டு மக்கள் சமுதாயம் முன்னேறப் பாடுபட்ட அப் பெருந்தகைக்கு இன்றையதினம் நம் தமிழகத்தில் ஒரு பெரும் நினைவாலயத்தை நம் தமிழக அரசு நிறுவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நான் இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணீரால் எழுதப்பட்ட இந்த இரங்கல், தீர்மானத்தை மாண்புமிகு அவை முன்னவர் நாவலர் அவர்கள் முன்மொழிந்து அனைத்துக் கட்சியினரும் அவர்களுடைய துயர் மிகுந்த இதயத்தை இந்தத் தீர்மானத்தோடு இணைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடவுளின் பெயரால், மதத்தின் பெயரால், சாதியின் பெயரால், மூட நம்பிக்கைகளின் பெயரால் எழுப்பப்படுகிற பிரச்சினை எதுவானாலும் ஏன், எப்படி, எதற்காக என்று கேள்விகள் கேட்கிற குழந்தைகளுக்கு பெரியார் தந்தையாக விளங்கினார். அந்தப் பெரியாரை, இன்றைக்குத் தமிழகம் மட்டுமல்ல, பகுத்தறிவு உலகமே இழந்து தவித்துக் கொண்டிருக்கிறது.

தென்னாட்டு சாக்ரட்டீஸ் என்று பாராட்டப் பெற்ற பெரியார் அவர்கள் இன்றைக்கு நம்மிடையே இல்லை என்றாலும் அவர்கள் உருவாக்கிய கொள்கைகள், இலட்சியங்கள், பகுத்தறிவு





எண்ணங்கள் அனைத்தும் வாழ்ந்து கொண்டு இருக்கின்றன. அவைகளை மதித்து, அவைகளைப் பின்பற்றி அவைகள் வெற்றி பெறுவதற்கு நாம் அனைவரும் சேர்ந்து உழைப்பதுதான் பெரியார் அவர்களுக்கு நாம் ஆற்றுகிற நன்றிக் கடனாகும்.

இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தில் தமிழ்நாட்டின் தலைநாயகர்களில் ஒருவராகப் பெரியார் அவர்கள் விளங்கினார்கள் என்பதும் சுயமரியாதை இயக்கத்தின் படைப்பாளராக அவர்கள் திகழ்ந்தார்கள் என்பதும் தாழ்த்தப்பட்ட மக்கள், பின்தங்கிய மக்கள், அடித்தளத்தில் வீழ்த்தப்பட்ட மக்கள் அனைவருடைய உரிமை உணர்ச்சிகளுக்காக அவர் போர்க் கொடி ஆக்கினார் என்பதையும் இந்தியாவிலேயே அனைவரும் வியந்து பாராட்டத்தக்க வண்ணம் தமிழகத்தில் இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக அரும்பாடுபட்டார் என்பதையும் இந்த அவனி நன்கு அறியும். அப்படிப்பட்ட சிறந்த பொதுவாழ்வுப் பெரியவர் இன்னும் ஒரு ஐந்தாறு ஆண்டுக் காலமாவது நம்மிடையே வாழ்ந்து நமக்கு ஊக்கமும், உற்சாகமும், உறுதியான மனப்பாங்கும் தந்திடுவார்கள் என்று எண்ணியிருந்தகாலையில் திடீரென்று இயற்கை அவர்களை எடுத்துச் சென்று விட்டது.

இங்கு பேசிய அனைவரும் ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். சாதி மனப்பான்மையை ஒழிக்க வேண்டுமென்பதற்காக மிக முக்கியமாகப் பெரியார் அவர்கள் தம்முடைய வாழ்நாளை ஒரு போராட்டக் களமாக ஆக்கிக் கொண்டார் என்று. அரசியலில் பொருளாதாரத் துறையில் பெரியார் அவர்கள் காட்டிய அக்கறை குறைவானதல்ல ; என்றாலும் கூட மிகுந்த அக்கறையை சமுதாயத் துறையில் பெரியார் அவர்கள் காட்டினார்கள். தமிழக அரசு சென்ற ஆண்டு பெரியார் அவர்களுடைய பாதையில் ஒரு சட்டத்தை நிறைவேற்றியது.

சாதி ஒழிய வேண்டும் என்கின்ற அடிப்படையில் ஆண்டவனால் படைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகின்ற மக்கள் ஆண்டவனுக்கு எதிரில் ஆண்டவனை வணங்குவதில், ஆண்டவனை பூசிப்பதில் சமமானவர்கள்தான் என்று ஆண்டவனே ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றை சட்ட வடிவமாகத் தமிழக அரசு உருவாக்கியது. எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் அரிசன சகோதரர்களானாலும், வேறு எந்த வகுப்பைச் சேர்ந்தவர்களானாலும், அவர்கள் அர்ச்சனை செய்கின்ற தகுதியைப் பெற்றால்,

ஆலயங்களில் அர்ச்சகர் பணியை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தகுதி படைத்தவர்கள் தான் என்று ஒரு சட்டம் இயற்றப்பட்டு, அது இந்திய உச்ச நீதி மன்றத்திற்கு சிலரால் எதிர்த்து வழக்காடுவதற்காக எடுத்துச் செல்லப்பெற்று, இந்திய உச்ச நீதி மன்றம் அளித்த தீர்ப்பு தமிழக அரசு நிறைவேற்றிய சட்டத்தை முடக்கிப் போட்டுவிட்டது. அந்த நேரத்தில்தான் இதற்கு ஏற்ப அரசியல் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும், நாம் உண்மையிலேயே சுதந்திரம் பெற்றிருக்கிறோம் என்றால், அன்னியர்களை எதிர்த்து விரட்டிவிட்டது மாத்திரம் சுதந்திரம் அல்ல, நமக்குள்ளேயே ஏற்பட்டிருக்கிற மாசு மறுக்களை, விரோத உணர்ச்சிகளை, சாதியின் பெயரால் உருவாக்கி வைத்திருக்கிற வேற்றுமைக் கொள்கைகள் இவைகளெல்லாம் தொலைந்தால்தான் நாம் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கிறோம் என்று பொருள். ஆகவே இந்தச் சட்டத்திற்கு ஏற்ப இது செயல்படுகின்ற வகையிலே அரசியல் சட்டமே திருத்தப்பட வேண்டும் என்று பெரியார் அவர்கள் கடைசியாகத் தன்னுடைய போராட்டத்தைத் தொடங்கினார். ஆனால், அது நிறைவேறாமல் பெரியார் அவர்கள் மறைந்து விட்டார்கள். அவர்களுடைய நெஞ்சகத்தில் அந்த நிகழ்ச்சி ஒரு முள்ளாகவே இருந்தது. அந்த முள்ளை எடுக்காமலேயே பெரியார் அவர்களை நாம் புதைத்து விட்டோம்.

ஆனாலும், அந்த முள்ளை எடுக்கின்ற முயற்சியில் நாம் ஈடுபடும் வகையில் பெரியார் அவர்கள் எந்தக் கொள்கைக்காக இறுதிக் காலத்தில் ஒரு போராட்டத்தைத் தொடங்க வேண்டுமென்று கருதினாரோ அந்தப் போராட்டத்தின் உள்நோக்கத்தை நிறைவேற்றுகின்ற வகையில், சாதியை அறவே ஒழிக்கின்ற வகையில், இந்திய சமுதாயம் முழுமைக்கும் ஒரு சட்டம் நிறைவேற மத்திய அரசு வழி வகுக்க வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளையும் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுகின்ற நேரத்தில் நான் விடுக்கிறேன்.

நண்பர் தங்கமணி அவர்கள் சொன்னதுபோல, நினைவாலயங்கள் சிலையாகவும் இருக்கலாம், அல்லது நூலகங்களாகவும் இருக்கலாம். அல்லது மண்டபங்களாகவும் அமையலாம், ஆனால் அவர் எந்தக் கொள்கைக்குப் போராடினாரோ அந்தக் கொள்கையை நிறைவேற்றுவது தான் அவருக்கு அமைகின்ற உண்மையான நினைவுச் சின்னம் என்பதையும் எடுத்துக் கூறி, பெரியார்





அவர்களை இழந்து தவிக்கின்ற நேரம் வேறு யாருக்கும் ஆறுதல் கூறுவதற்கு வழிவகை இல்லை என்றாலும், நமக்கு நாமே ஒருவருக்கொருவர் ஆறுதல் சொல்லிக் கொள்வதற்கு இந்த அவை நிகழ்ச்சிகள் பயன்படுகின்றன என்ற வகையில், பெரியார் அவர்கள் வாழ்க, பெரியார் புகழ் வாழ்க என்று கூறி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பெரியார் அவர்கள் மறைவுக்கு வருத்தம் தெரிவித்து மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும், மற்றும் கட்சித் தலைவர்களும் தெரிவித்த கருத்துக்களோடு என்னுடைய இரங்கல் கருத்துக்களையும் இணைத்துக் கொள்கிறேன்.

தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து இரண்டு நிமிடங்கள் மவுனமாக நிற்க, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்ட இரங்கல் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மறைந்த தந்தை பெரியார் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகளை இத்துடன் முடித்துக் கொண்டு பேரவையை ஒத்திவைக்கிறேன். பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 10-15-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 3. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

## A. STATUTORY RULES AND ORDERS.

*1. Notification issued with Roc. No. 218951/72-E.4, dated the 20th July 1973 in regard to extension of certain provisions relating to Building regulations under the District Municipalities Act, 1920 in the entire area of Komaralingam Town Panchayat in Coimbatore district. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

*2. Notification issued with G.O. Ms. No. 2173, Rural Development and Local Administration, dated the 1st October 1973 in regard to appointment of the members of the Tamil Nadu Khadi and Village Industries Board with effect on and from the 3rd October 1973. [Laid on the Table of the House under section 29 (3) of the Tamil Nadu Khadi and Village Industries Board Act, 1959 (Tamil Nadu Act 18 of 1959)].

* 3. Notification issued with Roc. No. 155274/72-E4, dated the 15th August 1973 in regard to extension of certain provisions relating to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Velampalayam Town Panchayat in Coimbatore District. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

*4. Notification issued with G.O. Ms. No. 1924, Rural Development and Local Administration, dated the 15th September 1973 in regard to amendments to the rules relating to the payment of advances to officers and servants of Municipal Councils published at pages 179 to 180 of Part I-A of the *Tamil Nadu Government Gazette*, dated the 23rd February 1932, as subsequently amended. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

* 5. Notification issued with G.O. Ms. No. 4350, Revenue, dated the 28th July 1973 making the Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Rules, 1973. [Laid on the Table of the House under section 43 (5) of the Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1972 (Tamil Nadu Act 11 of 1973)].

* 6. Notification issued with G.O. No. 1233, Revenue, dated the 20th March 1973 in regard to exemption from payment of General Sales Tax and Central Sales Tax on the sales of B.C.G. to the Governments of any State and Union Territory by the B.C.G. Vaccine Laboratory, Guindy, Madras. [Laid on the Table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].





* 7. Notification issued with G.O. Ps. No. 4641, Revenue, dated the 2nd August 1973 in regard to an amendment to the Revenue Department Notification S.R.O. No. A. 1966 of 1959 published at pages 488–490 of Part I of *Tamil Nadu Government Gazette*, dated the 1st April 1959. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

* 8. Notification issued with G.O. Ps. No. 5325, Revenue, dated the 29th August 1973 in regard to exemption from payment of sales tax on the sales of pulses, grams and groundnut oil by any dealer. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

* 9. Notification issued with G.O. Ms. No. 741, Revenue, dated the 22nd February 1973 in regard to exemption from payment of sales tax on the sales of the pictures of Ramakrishna Paramahamsa and the pictures of the Bronze Statue of Swami Vivekananda in the Vivekananda Rock Memorial, Kanyakumari published by the Vivekananda Rock Memorial Committee. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

* 10. Notification issued with G.O. Ms. No. 5689, Revenue, dated the 13th September 1973 in regard to exemption from payment of sales tax on the sale of gingely oil, coconut oil and sunflower oil except at the point of first-sale and wheat by any dealer. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

* 11. Notification issued with G.O. Ms. No. 5534, Revenue, dated the 7th September 1973 in regard to an amendment to the Revenue Department Notification II-1 No. 5939 of 1969, published at pages 1-2 of Part II—Section 1 of the *Tamil Nadu Government Gazette* Extraordinary, dated the 19th December 1969, as subsequently amended. [Laid on the Table of the House under section 18 (4) of the Tamil Nadu Agricultural lands Record of Tenancy Rights Act, 1969 (Tamil Nadu Act 10 of 1969).]

* 12. Notification issued with G.O. Ms. No. 823, Agriculture, dated the 30th March 1973 in regard to nomination of members to the Ramanathapuram Market Committee. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

* 13. Notification issued with G.O. Ps. No. 4776, Revenue, dated the 29th August 1973 in regard to exemption from payment of Sales Tax on the sales of UNICEF Greeting Cards and Calenders by any dealer. [Laid on the Table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

* 14. Notification issued with G.O. Ms. No. 1600, Rural Development and Local Administration, dated the 9th August 1973 in regard to preliminary notification for inclusion of the entire Oragadam Panchayat within the limits of Ambattur Township area. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

* 15. Notification issued with G.O. Ms. No. 332, Excise and Prohibition, dated the 11th September 1973 in regard to closure of all liquor shops in the entire State of Tamil Nadu on 12th and 13th September 1973. [Laid on the Table of the House under section 34 (5) of the Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971)].

@ 16. Notification issued with G.O. Ms. No. 4515, Revenue, dated the 27th July 1973 in regard to certain amendments to the Tamil Nadu Urban Land Tax Rules, 1966. [Laid on Table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966)].

@ 17. Notification issued with G.O. Ms. No. 1406, Rural Development and Local Administration, dated the 17th July 1973 making certain rules regarding the co-operation of Woman member to Panchayat. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].



@ 18. Notification issued with G.O. Ms. No. 1986, Agriculture, dated the 7th September 1973 in regard to nomination of members to the newly elected Market Committee of Coimbatore by Government. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

@ 19. Notification issued with G.O. Ms. No. 2012, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Rajapalayam Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Tabile of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 20. Notification issued with G.O. Ms. No. 2013, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to prelimiary notification for declaration of the areas forming the Tindivanam Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 21. Notification issued with G.O. Ms. No. 2015, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to prelimiary notification for declaration of the areas forming the Srivilliputhur Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 22. Notification issued with G.O. Ms. No. 2014, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to prelimiary notification for declaration of the areas forming the Tirupattur Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 23. Notification issued with G.O. Ms. No. 4898, Revenue, dated the 14th August 1973 in regard to reduction in the rate of sales tax on the sale of raw films by any dealer to the National Film Archives of India. [Laid on the table of the House under section 53 (5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959)].

@ 24. Notification issued with G.O. Rt. No. 2043, Revenue, dated the 13th November 1973 in regard to exemption from liability to Entertainments tax, show tax and additional surcharge for the benefit film show organised by the Mangayarkarasi Mahalir Manram. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939)].

@ 25. Notification issued with G.O. Rt. No. 1954, Revenue, dated the 7th October 1973 in regard to exemption from liability to entertainment tax, show tax and additional surcharge for the benefit film show organised by the All India Catholic University Federation Santhome Unit, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@ 26. Notification issued with G.O. Rt. No. 2100, Revenue, dated 21st November 1973 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge for the benefit film show organised by the Naval Office, Madras in connection with the Navy Week. [Laid on the Table of the House under section 16 (4) of the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939).]

@27. Notification issued with Roc. No. 14599/73-F1, dated the 26th June 1973 in regard to alteration of the name of Katpadi Extension Town Panchayat of North Arcot district as 'Gandhinagar' Town Panchayat. [Laid on the Table of the House under section 199 (2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].



@ 28. Notification issued with G.O. Ms. No. 2000, Rural, Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Krishnagiri Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 29. Notification issued with G.O. Ms. No. 2008, Rural, Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Ramanathapuram Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 30. Notification issued with G.O. Ms. No. 2009, Rural, Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Rasipuram Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 31. Notification issued with G.O. Ms. No: 1999, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Theni–Allinagaram Local Planning areas under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 32. Notification issued with G.O. Ms. No. 2011, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Pollachi Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu

Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 33. Notification issued with G.O. Ms. No. 2030, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Dharapuram Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 34. Notification issued with G.O. Ms. No. 2018, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Tenkasi Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 35. Notification issued with G.O. Ms. No. 2016, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Bodinayakanur Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].

@ 36. Notification issued with G.O. Ms. No. 2010, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for the declaration of the areas forming the Tiruchengode Local Planning area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972)].



@ 37. Notification issued with G.O. Ms. No. 1775, Agriculture, dated the 2nd August 1973 in regard to establishment of a market at Sivagiri in Coimbatore district to provide facilities for the purchase and sale of cotton, groundnut, tobacco, turmeric maize and sugarcane jaggery. [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

@ 38. Notification issued with G.O. Ms. No. 2066, Agriculture, dated the 28th September 1973 in regard to declaration of notified market area for Vedaranyam market for the purposes of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959). [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Market Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

† 39. The Tamil Nadu Government's Review and the Fourth Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Textile Corporation Limited for the year ended 31st December 1972. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

† 40 The Tamil Nadu Government's Review and the Twenty-fourth Annual Report and Statement of Accounts of the Tamil Nadu Industrial Investment Corporaion Limited for the year ended 31st March 1973. [Laid on the Table of the House under section 619-A of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

## *B. Reports, Notifications and Other Papers.*

* 1. Notification issued with G.O. P. No. 597, Labour and Employment, dated the 12th September 1973 in regard to an amendment to Schedule II to the Workmen's Compensation Act, 1923 (Central Act VIII of 1923).

* 2. Notification issued with G.O. Ms. No. 4879, Revenue, dated the 13th August 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the settlement deed to be executed in favour of the Managing Committee of Yadava College, Madurai.

* 3. Notification issued with G.O. Ms. No. 1555, Industries, dated the 30th October 1973 in regard to certain amendments to the Tamil Nadu Cement Distribution (Lincensing and Regulation) Order, 1973.

@ 4. Notification issued with G.O. Ms. No. 6242, Revenue, date dthe 8th October 1973 in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the mortgage deeds to be executed by the employees of Reserve Bank of India and Madras Port Trust for obtaining loans for construction and purchase of houses.

@ 5. Notification issued with G.O. Ms. No. 5827, Revenue, dated the 17th September 1973 in regard to reduction in stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 in respect of the sale deed to be executed in favour of Bharat Educational Society.

£ 6. Governor's Address to the Members of the Legislature on 17th January 1974. (English and Tamil).

---

* Despatched to Members on 26th December 1973.

† Laid on the table of the Legislature Library with reference to the proviso to Rule 21 (5) of the Tamil Nadu Legislative Assembly Rules.

@ Despatched to Members on 10th January 1974.

£ Circulated to Members on 17th January 1974.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

**சனிக்கிழமை, 1974 சனவரி 19.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### திருப்பூர் மருத்துவ மனைக் கட்டடம்.

*வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் 120 படுக்கை வசதி கொண்ட மருத்துவ மனை கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) திருப்பூரில் 120 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனை கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்தது. ஆனால் அதனை 100 படுக்கை வசதிகொண்ட மருத்துவமனையாகக் கட்ட அரசு 28—11—1973-ல் ஆணை பிறப்பித்துள்ளது.

**திரு. சு. துரைசாமி :** தலைவர் அவர்களே, திருப்பூரில் மருத்துவ மனை கட்டும் வேலை எப்பொழுது தொடங்கும் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனை 18 இலட்ச ரூபாயில் கட்டப்பட வேண்டுமென்றும், ஐந்து இலட்ச ரூபாய் திருப்பூர் நகர மக்கள் நன்கொடை தருவது போக, மீதம் 13 இலட்ச ரூபாய் அரசு ஒதுக்க வேண்டும் என்றும்

[1974 சனவரி 19

தீர்மானிக்கப்பட்டு, விரைவாகச் செயல்படவேண்டுமென்ற அடிப்படையில் 28—11—1973-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. அது தொடர்பான நடவடிக்கை இப்பொழுது அரசால் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

### மனநோய் மருத்துவ தனிப்பிரிவுகள்

*** 2 விஞ—திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லா மாவட்ட ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவசாலை களிலும் Psychiatric clinic இருக்கின்றனவா ?

(இ) இல்லை எனில், அப்படிப்பட்ட clinics அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) எல்லா மாவட்டங் களிலும் ஏற்படுத்தப்படவில்லை. தற்பொழுது சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி மாவட்ட மருத்துவ மனைகளில் மனநோய் மருத்துவ தனிப்பிரிவுகள் உள்ளன. நாகப்பட்டினம், திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனைகளின் மனநோய் மருத்துவ தனிப் பிரிவுகள் ஏற்படுத்த செப்டம்பர் 1973-ல் அரசு ஆணை பிறப்பித் துள்ளது.

(இ) எல்லா மாவட்டங்களிலும் உடனடியாக அமைக்க செயற்குறிப்பு இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, மன நோய் மருத்துவத் துறையில் சிறந்த முறையில் பணியாற்றக்கூடிய சில டாக்டர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக, மதுரையில் டாக்டர் வெங்கோப ராவ் போன்றவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் களுக்கு விசேஷ சலுகை கொடுத்து அவர்களுடைய சேவையைப் பயன்படுத்திக்கொள்ள அரசு ஏதாவது ஏற்பாடு செய்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட டாக்டரைக் குறித்து எனக்குத் தனியாக விவரம் ஏதும் தெரியாது. ஆனால், இங்கே குறிப்பிட்ட இந்த இரண்டு மூன்று மாவட்ட மருத்துவ மனைகளில் மனநோய் மருத்துவத் தனிப்பிரிவுகள் உள்ளன. மற்ற



1974 சனவரி 19]

மாவட்டங்களில் பெரும்பாலும், மருத்துவக் கல்வித் துறை மருத்துவ மனை இருக்கின்ற காரணத்தால், தஞ்சையிலே மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவ மனை, மதுரையில் மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவ மனை, திருநெ வேலியில் மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவ மனை கோயம்புத்தூரில் மருத்துவக் கல்லூரியோடு இணைந்த மருத்துவ மனை அமைந்திருக்கின்ற காரணத்தால் அந்த மருத்துவக் கல்லூ மருத்துவ மனைகளில் இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது அவற்றில் அரசின் சார்பில் பணியாற்றக்கூடிய தகுதிபெற் டாக்டர்கள் இல்லாதபோது சிறப்பு டாக்டர்கள்—கௌரவ டாக்டர்கள்—நியமிக்கப்படுவதுகூட சில இடங்களில் மே கொள்ளும் முறையாக இருக்கிறது.

### திருச்சிராப்பள்ளியில் குடிநீர் வழங்கல்

*** 3 விஞ—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்க நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞ களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்தில் குடிநீர் வழங்கலை அதிகப்படுத்து வதற்கான திட்டம் ஏதேனும் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) திருச்சி குடிநீ திட்டத்தை அபிவிருத்தி செய்ய மொத்தம் 360 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதனை மூன்று கட்டங்களாக எடுத்துக் கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது ரூ. 130 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ள முதற்கட்ட வேலைகளுக்கு தமிழ்நாடு அரசு 23—4—1973-ல் ஒப்புதல் வழங்கி யுள்ளது. இதற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே தற்போதுள்ள நிலைப்படி திருச்சி நகரத்திற்கு ஒரு நாளைக்கு எவ்வளவு தண்ணீர் கூடுதலாகக் கிடைக்கும்? வேலை துவங் எவ்வளவு நாள் ஆகும் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தற்போது '25 காலன் குடி நீர் ஆளொன்றுக்கு' என்ற விகிதாசாரத்தில் வழங்கப்பட்டு வருவதாகவும், அது போதவில்லை என்ற காரணத்தாலும், இதை

40 காலனாக உயர்த்தவேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் பணித் திட்டம் ஏற்கப்பட்டிருக்கின்றது. அந்த அடிப்படையில் முதற்கட்டவேலை, இருக்கிற தண்ணீரை அதிகப்படுத்தித் தருவதற்காக என்று, அதற்குரிய அடிப்படையில் செயலாற்றப் படவேண்டும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, திருச்சி நகாம் தற்போது விரிவடைந்து வருகிறது. புதிய புதிய பகுதிகளில் ஏராளமான கட்டடங்களை உருவாக்கிக்கொண்டிருக் கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதிக்கும் தண்ணீர் வசதி செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா? இல்லையென்றால், இனி மேலாவது செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, வளர்ச்சி பெறுகிற நகரங்களினுடைய எதிர்காலத் தேவைகள் கணிக்கப் பட்டு, அந்த அடிப்படையில்தான் இப்படிப்பட்ட புதிய திட்டங்கள் அல்லது வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நகரங்கள் அனைத்தும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த வளர்ச்சியை ஒருவாறு கணக்கிட்டுக்கொண்டுதான், 1986-ஆம் ஆண்டில் இவ்வளவு தண்ணீர் தேவை இருக்கும் என்றும், கி.பி. இரண்டாயிரத்தில் இவ்வளவு தண்ணீர் தேவை இருக்கும் என்றும் கணக்கு போடப்பட்டு, அந்த அடிப்படையில் செயல் துவங்கப் படுகிறது.

## காட்டுப்புத்தூர் குடிநீர் வழங்கு திட்டம்

*4 **வினா—திரு. சீ. க. வடிவேலு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், காட்டுப்புத்தூர் பேரூராட்சி குடிநீர் திட்டத்திற்கான சர்வே நடைபெற்றுள்ளதா?

(இ) ஆம் எனில், மேற்படி திட்டம் எப்போது துவங்கப் படும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) காட்டுப்புத்தூர் பேரூராட்சிக்கான குடிநீர் வழங்கு திட்டத்தின் ஆய்வு வேலைகள் முடிந்து ரூ. 10.53 லட்சத்திற்கு திட்ட உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால்





வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது. காட்டுப்புத்தூர் பேரூராட்சியின் நிதி வசதி பற்றிய மாவட்ட ஆட்சியாளரின் குறிப்புகள் எதிர்பார்க்கப்படுகின்றன. அக்குறிப்புகளின் பேரில் அரசு ஒப்புதலைப் பெற்று இத்திட்டம் துவக்கப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த காட்டுப்புத்தூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்கு வதற்கான ஆய்வு எப்பொழுது மேற்கொள்ளப்பட்டது? இவ்வளவு நாள் கால தாமதம் ஆவதற்கு என்ன காரணம் என்பதை அறியலாமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஆய்வு மதிப்பீட்டிற்கு 8—9—1971 ஆம் நாளிட்ட தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நடவடிக்கை மூலமாக ஒப்புதல் அளிக்கப்பெற்று ஆய்வு வேலைகள் 22—1—1971-இல் தொடங்கப்பெற்று, 26—7—1972-இல் முடிவடைந்துள்ளன. ஆனால், நிதி வசதியைப் பொறுத்துத்தான் எந்த ஒரு திட்டமும் நிறைவேற்றப்பட முடியும். அந்த நிதி வசதி என்பது, பின்னர் மெயின்டெனென்ஸ் செய்வதற்கு, நடைமுறைப்படுத்துவதற்கு ஆகும் செலவுத் தொகையை அந்தப் பேரூராட்சி மன்றமோ, ஊராட்சி மன்றமோ செலுத்துவதற்கு வாய்ப்புப் பெற்றிருக்கிறதா, என்பதைப்பற்றி அறிய மாவட்ட ஆட்சியாளருடைய ஆலோசனை கேட்கப்பட மாவட்ட ஆட்சியாளருடைய ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** பொதுவாக, பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர் திட்டத்திற்கு ஆய்வு வேலையைத் துவக்கு வதற்காகப் பேரூராட்சியின் நிதியிலிருந்து பெருந்தொகை முன் பணம் கட்டுகிறார்கள். ஆனால், அந்தத் தொகைக்குச் சிறிய வட்டி கூட அரசாங்கம் தருவதில்லை. பிறகு, நிறைவேற்றுவதற்கு இல்லை யென்றால், அந்தத் தொகையும் திருப்பித் தரப்படுவதில்லை. ஆகவே பேரூராட்சிக்குப் பெரும் தொகை இழப்பு ஏற்படுகிறது. இதை மனத்திலே கொண்டாவது, ஆய்வினை விரைவில் முடித்துத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினா திருமணம் செய்து கொண்ட ஒருவன், 'என் மனைவிக்கு மாமனார்கூட சோறு போடவில்லை' என்று குற்றம் சாட்டுவது போலிருக்கிறது. இந்தக்

[1974 சனவரி 19

திட்டம் அந்த ஊராட்சி மன்றப் பகுதியில் வாழ்கிற மக்களுடைய குடிநீர்த் திட்டம். அதனுடைய ஆய்வு நடைபெற்று அது பயனுள்ளதாக இருக்கிறது என்று தீர்மானித்தால், கடன் பெறுகிற முறையைப் பயன்படுத்தி, அதற்காகக் கடன் நிதி பெற்று அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவேண்டும். அந்தக் கடனைத் திருப்பித் தருகிற ஆற்றல் அந்தப் பேரூராட்சி மன்றத்திற்கு இருக்கவேண்டும். அந்த ஆற்றல் என்பது மக்கள் செலுத்துகிற வரியைப் பொறுத்தோ, குழாய்களுக்குத் தருகிற கட்டணத்தைப் பொறுத்தோ ஏற்படுகிறது. இதற்கு மாவட்ட ஆட்சியாளர் தெரிவிக்கிற ஆலோசனையைப் பெற்றுதான் முடிவுகாணப்படும்.

## பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள்

***5 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 செப்டம்பர் முடிய தொழுநோய்க்காரர் புனர் வாழ்வு விடுதிகளில் எத்தனை பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர் ?

(இ) அதற்கான செலவு விவரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) 2,360 பேர்கள்.

(இ) ரூ. 13,86,742.58.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இப்பொழுது பல நகரங்களிலும் பிச்சைக்காரர்கள் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன. அவற்றைத் தடுத்து, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கு அரசு என்ன வழிவகை செய்யப் போகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவர் அவர்களே, பொதுவாக பிச்சை எடுப்பதைத் தடை செய்து ஏற்கெனவே சட்டம் இருக்கிறது. இப்பொழுது குறிப்பிட்டது தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இல்லங்களில் எத்தனை பேர் சேர்த்துக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள், அதற்கான செலவினங்கள் என்ன என்பதைப் பற்றியதாகும். இப்படிப்பட்ட பிச்சைக்காரர்களைச் சட்டப்படி



1974 சனவரி 19]

போலிசார் பிடித்து நீதி மன்றங்களில் வைத்து குற்றங்கள் நிரூபிக்கப்பட்டு, அதன்பிறகு அவர்கள் இத்தகைய இல்லங்களுக்குக் கொண்டுவந்து சேர்க்கப்படவேண்டும் என்று சட்டத்தை மாற்றவேண்டுமென்றுதான் முதலமைச்சர் அவர்கள் கூறிக் கொண்டு வருகிறார்கள். பொதுவாக, பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்குச் சட்டம் இப்பொழுது இருக்கிறது.

***6 வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைத் தெருக்களிலும் மற்ற ஊர்களிலும் கூட்டம் கூட்டமாகப் போய் பிச்சைக் கேட்கும் குஷ்ட நோய் வியாதியஸ்தர்களை எடுத்துச் சென்று பிச்சைக்காரர் விடுதிகளில் விட அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தொழுநோயால் துன்புறும் பிச்சைக்காரர்கள் தாம் தொழுநோய் பிச்சைக்காரர்கள் என்பதற்குத் தகுந்த அத்தாட்சியுடன் வந்தால் தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் சேர்த்துக்கொள்ளப் படுவர். தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் இல்லங்களில் சேருவதற்கு மறுப்புத் தெரிவிப்பதாகத் தெரிய வந்தால் அவர்களைக் காவலர் மூலம் வளைத்துப் பிடித்து நீதிமன்றங்களில் குற்றவாளிகளெனத் தண்டிக்கப்பட்டு இவ்வில்லங்களில் அனுமதிக்கப்படுவார்கள். இதற்காக இவ்வில்லங்கள் 'சிறப்புக் காப்பு இல்லங்கள்' என அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தமாக பிச்சை எடுப்பவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று தோராயமாகக் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா ? இந்தத் தொழுநோய் சென்டர் ஒன்றிற்கு வருடத்திற்கு எவ்வளவு பணம் செலவாகிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஏறத்தாழ 25,000 பொதுவான பிச்சைக்காரர்கள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டிருக்கிறது. அதிலே 8,000-க்கு மேற்பட்டவர்கள் தொழுநோய் பிடித்தவர்கள் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கு கூட சில நேரங்களில் கூடுதல் குறைவாக இருக்கும். சிலர் கணக்கில் வராமல் இருக்கலாம். இந்தக் கணக்கு தோராயமாகத்

தான் எடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு இல்லத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4.50 லட்சம் செலவாகும், ரூ. 52,000 கருவிகள் முதலியன வாங்குவதற்கு ஒவ்வொரு இல்லத்திற்கும் செலவு செய்யப்பட்டு வருகிறது.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் ஒரு தொழு நோய் பிச்சைக்காரர்கள் விடுதி ஆரம்பிக்கப்பட்டிருந்தும், இன்னும் பல இடங்களில், குறிப்பாகக் கோவிலுக்குப் போகிற பாதைகளில் தொழுநோய்ப் பிச்சைக் காரர்கள் இன்னும் நிறைய பேர் பிச்சை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அவர்களைக் கொண்டு போய் இல்லங்களில் வைத்தாலும், அவர்களில் சிலர் ஓடி வந்து விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அப்படி ஓடி வந்தவர்களைக் கேட்டால் அங்கே கடுமையாக வேலை கொடுக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். இது உண்மைதானு, கடுமையான வேலை தருவதுதான் அவர்கள் ஓடிவருவதற்குக் காரணமா என்பதை அரசு ஆராய்ந்து நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஓடி வருவது உண்மையாகக் கூட இருக்கலாம். நிறைய பிச்சைக்காரர்கள் கூட திரும்பி வருவது உண்மையாக இருக்கலாம். ஆனால் அந்த செண்டர்களில் கடுமையான வேலை தரப்படுகிறது என்பதால் அவர்கள் ஓடி வருகிறார்கள் என்று சொல்லி விடமுடியாது. அவர்களுக்கு அங்கே சுலபமான வேலைதான் தரப்படுகிறது. அதுவும் கை, கால் அங்கஹீனமானவர்களுக்கு அதிகமான வேலை கிடையாது. பொதுவாக கோழி வளர்ப்பு, நூல் நூற்றல், கைத்தறி ஆடை நெய்தல் போன்ற வேலைகள்தான் தரப்படுகிறது. அவர்கள் பிச்சை எடுத்தே பழகி விட்ட காரணத்தால், அதையே அவர்கள் ஒரு தொழிலாகக் கொண்டு செய்து சுதந்திரமான வாழ்க்கையை அவர்கள் நடத்தி வந்து கொண்டிருந்த காரணத்தால் பல பேர் திரும்பி வந்து விடுகிறார்கள். சிலர் திருவிழாக்காலங்களில் எங்களுக்கு விடுமுறை கொடுத்து வெளியே அனுப்பி விடுங்கள், நாங்கள் பிச்சை எடுத்து விட்டு மறுபடியும் வந்து விடுகிறோம் என்று கூட கேட்கிறார்கள், இது அவர்களின் பிச்சை எடுக்கும் மனப்பான்மையைத்தான் காட்டுகிறது.



**திரு. க. மு. இராசகோபால்:** பிச்சை எடுப்பது என்பது தெருவிலே பிச்சை எடுப்பது மட்டும் பிச்சை அல்ல. அடிப்படை யிலேயே பழைய காலத்திலிருந்தே தொன்று தொட்டு ஆலயங்களில் பிச்சை எடுப்பது என்பது இருந்து வருகிறது. அதற்காக இடம் கூட ஒதுக்கியிருக்கிறார்கள். அதோடு மட்டு மல்லாமல், மதத்தின் பெயராலும், ஜாதியின் பெயராலும் அன்ன சத்திரங்கள் என்று வைத்து, பிச்சை அளித்து வருகிறார்கள். அதையும் தடுத்து நிறுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஏழைகளுக்கு உணவு அளிப்பது என்பது அவரவர்கள் விருப்பத்தைப் பொறுத்தது. அதை அரசு தடை செய்வது நியாயமாக இருக்காது. பிச்சை எடுப்பது என்பது வெவ்வேறு முறைகளில் இருக்கலாம். இருப்பவர்கள் கூட ஏதேதோ சொல்லி பிச்சை எடுக்கிறார்கள். உண்மையிலேயே அங்கஹீனமாகி, வேலை வாய்ப்பு இல்லாமல், வயோதிகமான நிலையில் இருப்பவர்களுக்கு வேலை கொடுத்து அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதில்தான் அரசு கவனம் செலுத்தி வருகிறது. அதிலும் குறிப்பாக தொழுநோய் பிடித்தவர் களுக்குத்தான் முதலிடம் அளித்து, சிகிச்சையும் அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு தருகிறது. இப்படிப்பட்ட இல்லங்களில் இருந்து சிகிச்சை பெற்று, பலர் வீடுகளுக்குக்கூட திரும்பச் சென்று இருக்கிறார்கள். இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இப்படித்தான் நடத்தி வருகிறோம்.

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவரவர்களே, இந்த தொழுநோய் புனர்வாழ்வு விடுதிகளில் சேருவதற்கு, அவர்கள் தொழுநோய் பிடித்த பிச்சைக்காரர்கள் என்று சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும், அப்படிப் பெற்றிருந்தால்தான் சேர்த்துக்கொள்ளப் படும் என்று சொல்கிறார்கள். அதை மாற்றி, தொழுநோய் பிடித்த அனைவரையும் சேர்த்துக்கொள்ள அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** எத்தனையோ பேர் தொழுநோய் பிடிக்கப்பட்டு இருந்தாலும், அவர்கள் குடும்பத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மருத்துவம் பார்ப்பாட்டு வாழ்ந்து கொண்டு வருகிறார்கள். குடும்பத்தாராலும், ஏற்றுக் கொள்ளப்படாமல், வேலை எதுவும் செய்யமுடியாமல் பிச்சை எடுத்துக் கொண்டிருப்பவர்களுக்குத்தான், புனர்வாழ்வு கொடுக்க

வேண்டும் என்ற அடிப்படையில் இந்தச் சட்டம் அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டு, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

**திரு. கு. காமாட்சி:** தலைவரவர்களே, தொழுநோய் மேலும் பரவுவதைத் தடுக்க தொழுநோய் பிச்சைக்காரர்கள் விடுதியில் குடும்பத்தாரோடு வாழும் தொழுநோய் பிடித்தவர்களுக்கு குடும்பக்கட்டுப்பாடு செய்யும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** குடும்பக்கட்டுப்பாடு திட்டம் அந்த விடுதிகளில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. சில தொழுநோய் பிடித்தவர்கள் அவர்களாகவே முன்வந்து இதைச் செய்து கொள்கிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** தொழுநோய் பிடித்தவர்களைக் குடும்பத்தார் அங்கீகரித்தாலும், அவர்களால் சமுதாயத்திற்குத் தீங்கு வருகிறது என்கிற காரணத்தால் கட்டாயமாக அவர்களை மருத்துவ மனையில் வைத்து அவர்களுக்கு மருத்துவ வசதி கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கட்டாயமாக மருத்துவ மனைக்கு வரவேண்டுமென்று அரசு ஆணையிட முடியாது. அரசு ஏற்படுத்தியிருக்கும் மருத்துவ மனைகளில் வந்து அவர்களாகவேதான் மருத்துவம் செய்து கொள்ள வேண்டும். அதோடு தொழுநோயால் பீடிக்கப்பட்டவர்கள் அத்தனைபேரையும் இந்த இல்லங்களில் வைத்துக்கொள்ள முடியாது. தொழுநோயால் பீடிக்கப்பட்டு, அங்கஹீனமானவர்கள், பிச்சையெடுப்பவர்கள் குடும்பத்தாரால் வெறுத்து ஒதுக்கப்பட்டு இருக்கிறவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் வகையில், மறுவாழ்வு அளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## இலங்கையிலிருந்து தாயகம் திரும்புவோர்

*7 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலங்கையிலிருந்து திரும்பியவர்களுக்கு மறுவாழ்வு வசதிகளை வழங்கத் தேவையான அதிகாரங்களை மத்திய அரசு மாநில அரசுக்கு அளித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?





**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அ & இ 1964-ம் ஆண்டின் சிரிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாவிற்கு திரும்பும் 5.25 லட்சம் இந்திய வம்சா வழியினருக்கும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் மறுவாழ்க்கை வசதிகள் அளிக்க இந்திய அரசு சம்மதித்துள்ளது, இதை ஒரு தேசியப் பிரச்னையாக பாவித்து அந்த அடிப்படையில் திட்டங்கள் தீட்டியும், மாநில அரசு அனுப்பும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தும் இத் திட்டங்களை மத்திய அரசு மாநில அரசுகள் மூலம் செயல்படுத்துகிறது.

திட்டங்களின் விவரம் கீழ்வருமாறு:—

(1) சிறுதொழில் வணிகம் செய்ய வணிகக் கடன்.

(2) வீடில்லாதாருக்கு வீடு கட்ட கடனுதவி.

(3) நிலக்குடியமைப்புத் திட்டங்களின்மூலம் விவசாயத்தில் அகதிகளைக் குடியமர்த்துதல்.

(4) தனியார் நிலம் வாங்கக் கடனுதவி.

(5) நிலமுள்ளோர்க்கு கிணறு வெட்ட, விவசாயம் செய்ய கடனுதவி.

(6) தேயிலை, ரப்பர், முதலிய தோட்டங்களில் வேலைக்கு அமர்த்துதல்.

(7) பல்வேறு தொழில்களில் பயிற்சியளித்தல், வேலை வாய்ப்பு அளித்தல்.

(8) கல்விச் சலுகைகள் அளித்தல்.

இலங்கையிலிருந்து வரும் அகதிகளை வேலைக்கு அமர்த்த தேயிலை, ரப்பர், முதலிய தோட்டங்களை அமைக்க மத்திய அரசு மாநில அரசுக்குக் கடன் கொடுத்துதவுகிறது. மற்ற உதவிகளை மாநில அரசுமூலம் மத்திய அரசு வழங்குகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்தின்கீழ், வீட்டுமனை, தொழில் நடத்தக் கடன் ஆகியவற்றை வழங்குவதில் காலதாமதம் ஆவதால் ஏராளமான பேர்களின் வாழ்க்கை அவதிக்கு உள்ளாகி, சிரமப்பட்டுக்

கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு அணுகி, அவர்களுக்கு விரைவாக உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கடன் தருவதில் தாமதம் இல்லை. அவர்கள் இலங்கையிலிருந்து வரும்போது கொண்டுவரவேண்டிய நற்சான்றிதழ்கள் பெற்றுவராததன் காரணமாக அவர்களுக்கு உதவிகள் கிடைக்கத் தாமதம் ஆகிறது. அவர்கள் அந்தச் சான்றிதழ்களைக் கொடுத்த உடனேயே கடன் கொடுக்கப்படுகிறது. அதிலே எந்தவிதமான தடங்கலோ, தாமதமோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் 57,000 பேர் இலங்கையிலிருந்து வருவார்கள், அதற்காக ரூ. 60 கோடி செலவாகும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது, நடப்பு ஆண்டில் எத்தனை பேர் வருவார்கள், எவ்வளவு பணம் செலவழிக்கப்படவிருக்கிறது என்பதை நம்முடைய சர்க்கார் கணக்கு எடுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நான் முதலில் சொன்னேன், 64-ம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி சுமார் 5.2 லட்சம் பேர் என்று. இதுவரை 1 லட்சம் பேர் வந்து இருக்கிறார்கள். 1964-க்குப் பிறகு இப்போது 9 ஆண்டுகள் ஆகிவிட்டது. இந்த 9 ஆண்டுகளில் அவர்களுக்குப் பிறந்துள்ள குழந்தைகள் ஆயிரக்கணக்கில் இருக்கும். இன்னும் எத்தனை லட்சம் பேர்வரப் போகிறார்கள் என்ற புள்ளி விவரம் என்னிடத்தில் சரியாக இல்லை. மேலும் குறைந்தது 4 லட்சம் பேர் வர இருக்கிறார்கள். இப்போது 1 லட்சம் பேர் வந்திருக்கிறார்கள். மத்திய அரசு தான் பூராத் தொகையையும் அளித்திருக்கிறார்கள். மாநில அரசு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, இலங்கையில் இருந்து வருகிற அகதிகளுக்கு மத்திய அரசாங்கத்தின் திட்டப்படி நமது அரசாங்கம் உதவி செய்துகொண்டிருக்கிறார்கள். அதற்கு ஏற்படும் செலவுகள் பூராவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நமது அரசாங்கம் வற்புறுத்துமா?





இவர்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைபோல பர்மா, மலேசியா போன்ற நாடுகளில் இருந்தும் வருகிற அகதிகளுக்கு அளிக்கப் படுகிறதா? இல்லையெனில் இவர்களுக்கும் உதவி செய்ய ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நான் முதலிலேயே கூறினேன். பூராச் செலவையும் மத்திய அரசாங்கம்தான் ஏற்றுக் கொள்கிறது. பர்மாவில் இருந்து ஒப்பந்தப்படி வருகிறவர்கள் விஷயத்திலும் மத்திய அரசாங்கம்தான் ஏற்றுக்கொள்கிறது. இப்படிப்பட்ட அரசியல் காரணத்தினால் மலேசியாவில் இருந்து அகதிகள் யாரும் வரவில்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** இலங்கையில் இருந்து வந்திருக்கிற அகதிகளில் சிலர் போளூர் பக்கத்தில் அவர்களது உறவினர்கள் இருக்கிறார்கள் என்பதனால் தங்கியிருக்கிறார்கள். இந்த அகதி களுக்கு மதுரை அருகில் நிலம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் போளூர் பக்கத்தில் உள்ள நிலங்களைக் காட்டி அதனைத் தங்களுக்குக் கொடுக்கும்படியாகக் கேட்டும் இன்னும் கொடுக்காது காலதாமதம் செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக போளூர் பக்கத்திலேயே நிலம் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** ஒரு நாட்டில் இருந்து இந்த நாட்டுக்கு வந்தவர்கள். மொத்தமாக அவர்களுக்கு யாரும் ஆதரவு இங்கு இல்லை என்று கருதியே ஒரு திட்டம் தீட்டி அதன் அடிப்படையில் ஒரு பகுதியில் நிலம் ஒதுக்கப்படுகிறபோது அவர்கள் அங்கே போகாது குளூரிலே கொடு, போளூரிலே கொடு என்பது சரியல்ல. அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சென்று குடியேறி தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்வதுதான் வெற்றிகரமாக அமையும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** அமைச்சர் அவர்கள் இலங்கையில் இருந்து வருகிற அகதிகளுக்குக் கடன் உதவி அளிப்பதில் ஏற்படுகிற காலதாமதத்திற்குக் காரணம், அவர்கள் தக்க சான்றிதழ்கள் அளிக்காமல் இருப்பதுதான் என்றார்கள். நமது அரசு இலங்கையில் உள்ள அரசுக்குத் தாக்கீது அனுப்பி

ஒப்பந்தப்படி இங்கே திருப்பி அனுப்புகிற அகதிகளுக்கு எல்லாம் தக்க சான்றிதழ்களை முன்கூட்டியே வழங்கி அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கண்டியில் இருக்கிற துணை ஹை கமிஷனர் அங்கிருந்து இங்கே அனுப்பப்படுகிற அகதிகளுக்கு எல்லாம் தக்க சான்றிதழ்களைக் கொடுத்துத்தான் அனுப்புகிறார்கள். இவர்கள்தான் இங்கே உள்ள மறுவாழ்வு அதிகாரிகளுக்குத் தம்மிடம் உள்ள சான்றிதழ்கள் முழுமையும் கொடுப்பதில்லை. வியாபாரம் செய்வதற்கு 5,000 ரூபாய் கொடுக்கிறோம் என்றால் முதல் இரண்டாயிரம் வாங்குவதற்குள்ளாகவே அதைக் காட்டி ஆயிரம் கடன் வாங்கி விடுகிறார்கள். ஆகவே மொத்தமாக ஐயாயிரத்தையும் கொடுங்கள் என்கிறார்கள். ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தோம். அதைக்கொண்டு நல்ல முறையில் வியாபாரம் செய்யாது, அது பூராவும் நட்டமாகி விட்டது என்கிறபோதுதான் அதிகாரிகள் அவர்களுக்கு எந்தத் துறையில் அனுபவம் உண்டு என்பதைக் கண்டறிய மற்ற மற்றச் சான்றிதழ்களைக் கேட்கிறார்கள். ஆக, அகதிகள் வரும்போது தக்க சான்றிதழ்கள், அம்மை குத்திக்கொண்டது. வந்தவுடன் காம்பில் தங்கியது, காஷ் டோல் பெற்றது போன்ற எல்லா சர்டிபிகேட்டுகளையும் பெற்றுத்தான் வருகிறார்கள்.

**திரு. கு. காமாட்சி :** இலங்கை அரசின் விதிகளுக்குட்பட்டு இலங்கையிலேயே பிரஜா உரிமை பெற்று அங்கேயே இருக்கிற தமிழர்களுக்கு இலங்கை அரசு பல தொந்தரவுகளைக் கொடுத்து விரட்டிக் கொண்டே இருக்கிறது என்கிற தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதைப்பற்றி மாநில அரசு மத்திய அரசுக்குத் தகவல் கொடுத்திருக்கிறதா ? அதன்மீது மத்திய அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நான், 1964-ம் ஆண்டு இலங்கை பிரதமருக்கும், இந்திய பிரதமருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி வருகிற அகதிகளைப் பற்றித்தான் கூறிக் கொண்டிருக்கிறேன். அந்த நாட்டிலேயே பிரஜா உரிமை பெற்றிருக்கிற தமிழர்கள் விரட்டப்படுவதைப்பற்றி எதுவும் வரவில்லை.



**திரு. எஸ். வடிவேல் :** சமூகக் கொடுமைக்கு, சாதிக் கொடுமைக்கு அஞ்சியே அங்கே போய்க் குடியேறியவர்கள் பெரும்பாலாக தாழ்த்தப்பட்டவர்கள்தான். அதை எடுத்துச் சொல்லியாவது அவர்கள் திரும்பி வரும்போது அவர்களது சொத்துக்களையும் எடுத்துவர மத்திய அரசுக்கு சிபார்சு செய்து, அவர்கள் நடவடிக்கை எடுக்க நமது அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** 1964-ம் ஆண்டு ஒப்பந்தத்திலேயே ரூ. 5,000 வரையில் அவர்களுடைய சொத்துக்களை எடுத்துவரலாம் என்று ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** இலங்கையில் இருந்தும், பர்மாவில் இருந்தும் வந்திருக்கிற அகதிகளுக்கு விவசாய நிலங்களைக் கொடுத்தும், அவர்களுக்கு விவசாயத்தில் பழக்கம் இல்லாத காரணத்தினால் நட்டம் அடைந்து, மீண்டும் உதவி கேட்கின்ற நிலையில் இருக்கிறார்கள். முன்பு அவர்கள் அங்கங்கே என்ன என்ன வேலையில் ஈடுபட்டு இருந்தார்களோ, அந்த வேலைகளையே இங்கே கொடுக்க ஏற்பாடு செய்ய முடியுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** கண்டியில் இருக்கிற அசிஸ்டெண்ட் கமிஷனர் மூலமாக அவர்கள் அங்கே விவசாயத்திலோ, சிறு தொழிலிலோ, வியாபாரத்திலோ எதில் ஈடுபட்டிருக்கிறார்களோ அதுபற்றிய சான்றிதழ்களைப் பெற்று அந்த அடிப்படையில்தான் இங்கே அவர்களுக்கு மறுவாழ்வு உதவி அளிக்கப்படுகிறது. அவர்களது விருப்பத்திற்கு மாறாக எந்தப் பணியும் அவர்கள்மீது திணிக்கப்படவில்லை.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** அகதிகளுக்கு பூச்சிகுளையில் காட்டு நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அங்கே அவர்களுக்கு நிலம் கொடுத்து, வீடு கொடுத்திருந்தாலும் போய்வர ரோடு வசதி இல்லை, மற்ற வசதிகள் எதுவும் இல்லை. அவை எல்லாம் எப்போது செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இது ஒரு குறிப்பிட்ட இடத்தைப்பற்றிய கேள்வி. தனியாக எழுதித்தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

*திரு. கே. எ. வகாப் :* மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது பர்மா, இலங்கை அகதிகளுக்கு அளிக்கப்படுகிற சலுகை மலேசியாவில் இருந்து வருகிறவர்களுக்கு அளிக்கப்படவில்லை என்று சொன்னார். அங்கே இருக்கிற தோட்டத் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டு தாயகம் வருகிறவர்களுக்கு உதவி செய்ய ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அப்படிப் பட்டவர்கள் விஷயத்தில் மத்திய அரசு அந்நாட்டோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டால் அதன்படி நடவடிக்கை எடுக்கலாம். வெளிநாட்டில் இருந்து வருகிறவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது மத்திய அரசின் திட்டம்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன் :* கடன் வழங்குவதில் தாமதம் இல்லை, அவர்கள் சான்றிதழ்களை அளிப்பதில்தான் காலதாமதம் ஆகிறது என்றார்கள். திருச்சியில் சான்றிதழ்கள் அளிக்கப்பட்டு, விசாரணை எல்லாம் முடிந்தும் இன்னும் ஏராளமான பேர்களுக்குக் கடன் வழங்கப்படாமல் இருப்பதற்கான சான்றுகள் என்னிடம் இருக்கின்றன. ஆகவே, விண்ணப்பித்துக்கொண்ட ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாகக் கடன் வழங்கப்படுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** எனக்கும் திருச்சியில் இருப்பவர்களைப்பற்றிய விவரம் தெரியும். ஆனால் உறுப்பினர் யாரைப்பற்றிக் குறிப்பிடுகிறார் என்று தெரியவில்லை. 1965-க்குப் பிறகு ரூபாய் மூவாயிரம் பெறலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். சிலர் மொத்தமாக ஐந்தாயிரத்தையும் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். அதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. முதலிலே இரண்டாயிரம் வாங்கி அதையே சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளாதவர்கள் விஷயத்தில் என்ன செய்வது? சரியான தகவல்கள் கொடுத்து, முறையாகக் கொடுக்கிற பணத்தைப் பயன்படுத்திக்கொண்டவர்கள் விஷயத்தில் கடன் கொடுக்காமல் இருக்கமாட்டோம்.

(முற்பகல் 9.30)

*திரு. ஆ. கு. சுப்பையா :* தலைவர் அவர்களே, சகல சான்றிதழ்களும் வழங்கியபிறகு ஆண்டுக் கணக்கிலே ஆர்.டி.ஓ. அவர்கள் செயல்படாமல், இவர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அது





தான் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுவது. ஆகவே, 3 மாதத்திற்குள்ளாவது அவர்களுக்குக் கடன் கொடுப்பதற்கு அரசாங்கம் துரிதமான நடவடிக்கை எடுக்குமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அப்படி குறிப்பாக எல்லா சான்றிதழ்களும் கொடுத்து, அவர்களுக்குக் கடன் உதவி தரப்படவில்லையென்று குறிப்பாகச் சில புகார்கள் வருமானால் அதைக் கவனிக்க அரசு தயாராக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அதுபற்றித் தகவல் தந்தால் நான் கவனிக்கிறேன்.

## கடலூர் துறைமுகம்

*8 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூர் துறைமுகத்தின் வளர்ச்சிக்கு மத்திய அரசிடம் தமிழ்நாடு அரசு பரிந்துரை ஏதேனும் கோரி உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஆம்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, அந்தத் துறைமுகத்தை விரிவுபடுத்துவதற்கு என்ன என்ன திட்டங்களை மேற்கொள்ளலாம் என்பதை நாம் சிபாரிசு செய்திருக்கிறோம். அதற்கான மொத்தத் தொகைகள் என்ன என்ன என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஆற்றுச் சீரமைப்பு வேலைகள், கடற்கரை வேலைகள், படகுத் துறை கட்டுதல், துறைமுகத்தை ஆழப்படுத்தல் போன்ற வேலைகளுக்கும் டிரட்ஜர் வாங்குவதற்கும் ஆக மொத்தமாகச் சேர்த்து 199 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

[1974 சனவரி 19

## *Development of National Highways*

* 9 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the representatives of the Government held discussions with the Director-General of Road Development of the Central Government about the 23rd June at Madras; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம். விவாதம் 21—6—1973, 22—6—1973 ஆகிய தேதிகளில் நடந்தது.

(இ) 21—6—1973 அன்று மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், செயலாளர், பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை), தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை) ஆகியோர் மத்திய அரசு சாலை இயக்குநருடன் மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் அதிகப்படியான வேலைகளுக்கு அங்கிகாரம் அளிக்க வேண்டியதின் அவசியம் குறித்தும், தமிழ்நாட்டில் சாலை வேலைகளுக்கு இயந்திரங்கள் வாங்க மேலும் கடன் உதவி அளிப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. 22—6—1973 தலைமைப் பொறியாளர் (தேசிய நெடுஞ்சாலை), இயக்குநருடன் தேசிய நெடுஞ்சாலை பொதுப்படையாக வேலைகளின் அபிவிருத்தி குறித்தும், வேலைகளின் முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த அதிகப்படியான இயந்திரங்கள் தேவையைக் குறித்தும், பொது ஒப்பந்த நிபந்தனைகள் குறித்தும், பாம்பன் பால வேலைக்கு வந்துள்ள மாற்று அமைப்பு முறை குறித்தும் விவாதித்தார். மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் இன்னும் அதிக வேலைகள் அங்கிகாரம் செய்ய வேண்டியதின் அவசியத்தை இயக்குநரிடம் மேலும் வலியுறுத்தப்பட்டது. அதிகப்படியான பிரதிநிதித்துவத் தொகை அளிக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்து மத்திய அரசிடம் அணுகி, குறைந்த பட்சம் 10 சதவிகிதம் ஆவது உடனே பெறுவதற்கு ஆவன செய்யுமாறும் இயக்குநரிடம் கூறப்பட்டது.

* 10 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971 ஆம் ஆண்டு, மத்திய அரசு தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்திற்காக தமிழ்நாடு அரசுக்கு அளித்த தொகை எவ்வளவு?

(இ) அவை அனைத்தும் செலவு செய்யப்பட்டு விட்டனவா?



1974 சனவரி 19]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) மத்திய அரசினால் தேசிய நெடுஞ்சாலை (மூல) வேலைகளுக்கு 1971-72-ல் தமிழக அரசுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5,94,01,000.

(இ) ஆம்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, இந்த தேசிய நெடுஞ்சாலைகளை அமைப்பதில் எல்லா மாநிலங்களையும்விட நம்முடைய மாநிலம்தான் கொடுக்கப்பட்ட தொகையை ஒழுங்காகவும் சரியாகவும் செலவு செய்து வருகிறது என்று கூறப்படுகிறது. நாம் ரூ. 8 கோடி செலவு செய்து—கடன் என்ற வகையில்—ஒரு சி.இ. போட்டால், அதற்கு மேலும் ரூ. 8 கோடி மத்திய அரசு கொடுக்கும் வகையில் மத்திய அரசிடம் ஒரு திட்டம் இருப்பதாகச் சொல்கிறார்களே, அதையொட்டி 2 சி.இ.-க்களைப் போட்டு, இரண்டு ரூ. 8 கோடியை வாங்க நம் அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் தகவல் இல்லை.

**திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் உசிலம்பட்டிப் பகுதியில் பல ரோடுகள் சென்ற ஆண்டிலேயே சேர்க்கப்பட்டும் இன்னும் அவை செயலாக்கப்படாமல் இருக்கின்றனவே, அது பற்றி பிரதம இன்ஜினியர் போன்றவர்களிடம் சொல்லியும் ஒன்றும் நடைபெறவில்லையே, ஆகவே, அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, தனிப்பட்ட ரோடுகளைப்பற்றி, தனியாகக் கேள்விகள் போட வேண்டும். பொதுப்படையான பதில்கள்தான் என்னிடம் இருக்கின்றன.

## இராசசிங்கமங்கலம் கண்மாயின் குறுக்கே பாலம்

* 11 வினா—திரு. வீ. மலைக்கண்ணன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1974 சனவரி 19

(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராசசிங்கமங்கலம் கண்மாய்க்குக் குறுக்கே பாலம் அமைத்து செங்குடி வழியாய் வண்டல் வரை சாலை அமைக்கும் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) நிதி நிலையைப் பொறுத்து அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்வதுபற்றி முடிவு செய்யப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இராசசிங்கமங்கலம் கண்மாய் பொறுத்தவரையிலே, அது வெகு முக்கியமானதாகி விட்டதே, இடையிலே தண்ணீர் வருவதற்குரிய திட்டங்கள் எல்லாம் இருக்கின்றனவே, அவற்றையும் பாலம் திட்டத்தோடு சேர்த்து, வேலைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இரண்டையும் சேர்த்துத்தான் ரூ. 20 இலட்சம் செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டது. நிதிநிலை சரியானபிறகு, அது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதுபற்றிப் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*Development Scheme for Adayar river*

* 12 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to beautify the backwaters of River Adayar in Madras; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) & (இ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆயினும், சென்னை மாநகர எல்லைக்குள் அடையாற்றின் கரைகளை அழகு படுத்துவதற்கான செயற்குறிப்புகளை வகுப்பதற்குரிய ஆய்வுப் பணியைப் பொதுப்பணித்துறை மேற்கொண்டுள்ளது.



1974 சனவரி 19]

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, அடையாறு உப்பங்கழிப் பகுதியை, உடனடியாக அழகுபடுத்த, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, இதற்கு தனியாக ஒன்றும் இல்லை. ஆனால், அடையாற்றின் கரைகளை அழகு படுத்தும் செயற்குறிப்பை மேற்கொள்ள ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தேன். அந்த ஆய்வு முடிந்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

*New Fertilizer Factories*

* 13 Q. THIRU N. DENNIS :

THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(a) whether any new Fertilizer Factories are to be started in (i) public, (ii) private and (iii) Joint Sector in this State;

(b) if so, whether any report has been prepared in this connection; and

(c) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலையை நிறுவிக்கொண்டிருக்கும் கூட்டுத் துறை நிறுவனமான சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட், ரூ. 140 கோடி செலவில் இரண்டாவது உரத் தொழிற்சாலையைக் கடலூரில் அமைக்க இசைவுக் கடிதம் கோரி மத்திய அரசுக்கு ஜூலை 1973-ல் மனு செய்திருக்கிறது.

**திரு. என். டென்னிஸ் :** அவைகளிலிருந்து கிடைக்கும் மொத்த உர உற்பத்தியின் அளவு எவ்வளவாக இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்பொழுதுள்ள தொழிற்சாலைகளினுடைய கப்பாசிட்டி, அம்மோனியா 1,100 டன், யூரியா 1,600 டன், டிஏபி/என்பிகே 600 டன், சல்ஃபரிக் ஆசிட் 470 டன், பாஸ்ஃபரிக் ஆசிட் 165 டன்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், மொத்தம் எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ? அவைகளில் எத்தனைக்கு லெட்டர் ஆப் இன்டென்ட் மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்றது ?

[1974 சனவரி 19

நம்முடைய தேவை அதிகமாக இருப்பதால் ஏன் அதிகப்படியான உரத் தொழிற்சாலைகளை நாம் கேட்கக் கூடாது ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவர்கள் கேள்வி புரியவில்லை. ஆனால், மத்திய அரசாங்கத்திற்கு எத்தனை மனுக்கள் வந்தன என்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றி நம்மிடத்திலே தகவல் இல்லை. நம்முடைய மாநிலத்திலிருந்து இந்தத் தொழிற்சாலையிலிருந்து ஒன்று, மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் ஒரு எக்ஸ்டென்ஷன் போட வேண்டுமென்ற ஒன்று, இரண்டுதான் மத்திய அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, தூத்துக்குடியிலே ஆரம்பிக்கப்பட்டிருக்கிற உரத் தொழிற்சாலை எப்பொழுது தன் புரடக்ஷனை ஆரம்பிக்கும் ? அப்படி உரம் தயாரித்தால், அது இன்னும் மத்திய அரசாங்கத்தின் கண்காணிப்பில்தான் இருக்குமா ? அல்லது மாநில அரசாங்கத்திற்கு ஏதாவது தனிச் சலுகை வழங்கப்பட இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நல்ல கேள்வி. உரத்தையெல்லாம் நாம் தயார் செய்கிறோம். ஆனால் உரத்தை விநியோகம் செய்கிற அதிகாரம், விலை நிர்ணயிக்கிற அதிகாரம், யாருக்கு அது கொடுக்கப்பட வேண்டுமென்று நிர்ணயிக்கின்ற அதிகாரம் அங்கேதான் இருக்கிறது. ஸ்பிக் நிறுவனம் திட்டமிட்ட ஒரு தொழிற்சாலையையும், மெட்ராஸ் பெர்ட்டிலைசர்ஸ் எக்ஸ்டென்ஷன் அமைக்கவும் அனுமதி கேட்டிருக்கிறோம். இரண்டும் கிடைக்குமானால், தமிழ்நாட்டினுடைய தேவையை விட அதிகமாக உற்பத்தி செய்கின்ற ஒரு வாய்ப்பு இருக்கிறது.

**திரு. அ. இராசமாணிக்கம் :** இதுபோன்ற உரத்தொழிற்சாலை ஒன்று துறைமுகப் பகுதியான நாகையில்—அது பின்தங்கிய பகுதியாக இருப்பதால்—அங்கே துவக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாகப்பட்டிணத்தில் துவக்குவது பற்றித்தான் முதலில் பரிசீலனை செய்யப்பட்டது. அதைவிடக் கடலூர் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று பிறகு முடிவு எடுத்திருக்கிறார்கள்.



1974 சனவரி 19]

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவர் அவர்களே, கடலூரிலே திறக்க முயற்சி செய்து கொண்டிருக்கிற இந்த உரத் தொழிற்சாலை 'நாஃப்தா பேஸ்ட்' உரத் தொழிற்சாலைதானா ? அப்படியானால், இந்த 'நாஃப்தா' விலை ஒவ்வொரு நாளும் ஏறிக்கொண்டே போகிறது. அதன் காரணமாக உரத்தின் விலை அதிகமாகிறது. ஆகவே, கால்சியம் வைத்து அம்மோனியா தயாரிக்கலாம் என்று சொல்கிறார்கள். அந்த முயற்சியை அரசு செய்ததா ? அதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாஃப்தா எளிதாகக் கிடைக்கும், விலை குறைவாக இருக்கும் என்ற கருத்து முன்பு இருந்தது. அதற்கு மாற்று, கோல் பேஸ்ட் இண்டஸ்ட்ரி தான். நாஃப்தா பேஸ்ட் இண்டஸ்ட்ரிக்குத்தான் கஷ்டப்பட்டு முன்பு அனுமதி வாங்கினோம். இப்பொழுது நாஃப்தா க்ருட் ஆயில் விலை ஏறுவதாலே, அது கிடைப்பது கஷ்டமாக இருக்கலாம். இந்த க்ருட் ஆயில் கொடுக்கக்கூடிய நாடுகள் எல்லாம், அதை அப்படியே விலைக்குக் கொடுக்காமல், அவர்களே, ஜாயின்ட் வென்சர், கூட்டுத் தொழிலே ஈடுபட்டு நடத்தலாம் என்ற அளவிலே, இரான் நாட்டோடு பேசும்போது, மத்திய அரசு அவ்வாறு முடிவெடுத்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அண்மையில் பேசும்போது இரான் நாட்டு உதவியோடு அப்படிப்பட்டத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட Naptha cracker Petro chemical complex, Refinery உரத்தொழிற்சாலை இவைகளெல்லாம் ஆரம்பிக்கப்பட நம்முடைய மாநில அரசும் சேர்ந்து ஒத்துழைத்து கூட்டுத் தொழிற்சாலை ஆரம்பிக்கத் தயாராக இருக்கிறது என்ற கருத்தை தெரிவித்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் வருமானால் நாஃப்தா பேஸ்ட் சிஸ்டம்தான் நல்லது.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, உரப் பற்றாக் குறையின் காரணமாக தொழு உரம் உற்பத்தி செய்வதற்கு கிராம மட்டங்களிலே திட்டங்களை அரசாங்கம் அமலாக்குவதற்கு ஏதாவது முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அண்மையிலே நடந்த தேசிய வளர்ச்சி மாநாட்டிலே எல்லா மாநில முதலமைச்சர்களும் உரப் பற்றாக்குறைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய

முதலமைச்சர் அவர்கள் உரப்பற்றுக்குறையைப்பற்றி எடுத்துச் சொல்லி, தேவையான அளவிற்கு நீங்கள் உரத்தைக் கொடுத்தால் நாங்கள் உற்பத்தியை அதிகப்படுத்தி அரிசியாகக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம், ஆனால் சென்ற ஆண்டு கொடுத்த உரத்தின் அளவைவிட இந்த ஆண்டு குறைத்துவிட்டீர்களே என்று சொன்னார்கள். அதற்கு பிரதம மந்திரி அவர்கள் பேசும் பொழுது அதைப்பற்றி உரம் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் பதில்சொல்வார்கள் என்று சொன்னார்கள். உரம் சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அங்கே, இப்பொழுது கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன பதிலைத்தான் சொன்னார்கள். அப்படி நாம் இயற்கைபாடத்தில் 5-வது, 6-வது வகுப்பிலே படித்திருக்கிறோம். இன்றைக்கு இருக்கின்ற உற்பத்தியின் வேகத்திற்கு அப்படி உற்பத்தி செய்து போதுமானதாக இருக்குமா என்பதையும் யோசிக்கவேண்டும். இப்பொழுது உற்பத்தி செய்யப்படுகிற உரத்தை வைத்து விவசாயி மூன்று, நான்கு மடங்கு உணவு உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையைப் பெற்றுவிட்டான், ஆகவே அந்த உரத்தை இன்னும் எப்படி அதிகமாகப் பெறுவது, எப்படி உற்பத்தி செய்வது என்பதைத்தான் நாம் ஆராயவேண்டியவர்களாக தற்பொழுது இருக்கிறோம்.

**திரு. சி. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, தூத்துக்குடி உரத் தொழிற்சாலைக்குப் போடப்பட்டிருக்கிற மூலதனம் எவ்வளவு? அங்கே ஏற்பட்டிருக்கின்ற வேலைவாய்ப்புகள் எவ்வளவு? வேலை வாய்ப்புகள் கொடுக்கின்ற உரிமை யாருக்கு இருக்கிறது? நம்முடைய மூலதனத்தைப் போட்டுவிட்டு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற உரிமையை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மூலதனம் பற்றிய தகவல் ஏற்கனவே தரப்பட்டிருக்கிறது. ரெக்ரூட்மெண்ட் பாலிசியைப் பொறுத்தவரையில் தனியார் துறையாக இருந்தால் அவர்கள் இஷ்டப்படி செய்யலாம். இந்தமாதிரித் துறையாக இருந்தால் குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேற்பட்டவர்களை நியமனம் செய்வது என்றால் போர்ட் ஆப் டைரக்டர்ஸ் உடைய அனுமதியை பெற வேண்டும், இன்னும் ஒரு குறிப்பிட்ட அளவு உள்ள சம்பளத்தைப் பொறுத்தவரையில் உள்ள வேலைவாய்ப்புகளாக இருந்தால் ஒரு குழு போடப்படவேண்டும், அந்தக் குழு இண்டர்வியூ நடத்தி



அதற்குப்பிறகு தான் நியமனம் செய்யப்படவேண்டும். இன்னொரு பகுதியைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தினுடைய பிரதிநிதியும் குழுவிலே உட்கார்ந்து தேர்ந்தெடுக்க வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகளை வைத்திருக்கிறோம். அந்த விதிமுறைகளின்படிதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, as there is an acute shortage of fertilisers in the country, may I know whether this Government will recommend to the Central Government for starting of fertiliser factories in the private sector if the private parties come forward to start them ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** உரத் தொழிற்சாலையைப் பொறுத்த அளவிற்கு தனியார் துறையிலே கொடுப்பதை இந்த அரசாங்கம் ஆதரிக்கவில்லை.

**திரு. ஏ. ஆர். சுப்பையா:** தூத்துக்குடி உரத்தொழிற்சாலை ஜூலை மாதத்திலே உற்பத்தி தொடங்கும் என்பதற்குக் களங்கம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அப்படியில்லாமல் எப்படியும் ஜூலை மாதத்தில் உற்பத்தி தொடங்கக்கூடிய முறையில் அதற்கு வேண்டிய மூலப்பொருட்களைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய அரசாங்கம் அப்படித் தான் ஒப்புக்கொண்டிருக்கிறது. நிச்சயம் அவர்கள் மூலப் பொருட்களை வாங்கித் தருவார்கள் என்று நம்புகிறோம்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the fact that fertiliser is a very important and essential commodity like the war material, will the Government stop this joint enterprise and start it as a public undertaking so that they can have control over production and distribution and make it available to everybody?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கூட்டுத்துறையை விட பொதுத்துறைதான் அவர்கள் சொன்ன சமதர்மக் கருத்துக்களுக்கு ஏற்றதாகும். சில நாட்களுக்கு முன்னால் சம்பந்தப்பட்ட அமைச்சர் டெல்லியிலிருந்து தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு பொதுத்துறையிலே ஈரான் நாட்டுடன் பேசி ஒரு உரத் தொழிற்சாலையை அமைக்கலாம் என்று தெரிவித்தார்கள்.

பொதுதுத்துறையில் அமையும் உரத் தொழிற்சாலைக்கு வேண்டியவற்றைச் செய்வதற்கு மாநில அரசு தயாராக இருக்கிறது என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. அதையொட்டி முதலமைச்சர் அவர்களிடமிருந்து எழுத்துமூலமாகவும் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

### சிறு தொழில்களுக்கான கடன்கள்

*14 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சிறு தொழில் வளர்ச்சி கார்ப்பரேஷன் மூலம் யார் யாருக்கு கடன் கொடுக்கலாம் என்ற முடிவை சொல்லுவதற்கு கமிட்டிகள் அமைக்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) சிறுதொழில்களுக்கு ரூ. 25,000 வரை கடன் வழங்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் வளர்ச்சி உதவி அதிகாரி இக்குழுவின் உறுப்பினர்-செயலாளராவார். அந்தந்த மாவட்ட தொழில்-வணிக உதவி இயக்குநர் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்றப் பேரவை அல்லது சட்ட மன்ற மேலவை உறுப்பினர் ஒருவர், சிறுதொழில்களுக்குப் பிரதிநிதிகளாகவுள்ள அரசுச் சார்பற்ற இரு அதிகாரிகள் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் மூலமாக எவ்வளவு பரிந்துரைகள் செய்யப்பட்டு எவ்வளவு பரிந்துரைகள் மூலமாக எவ்வளவு பேர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? வழங்கப்பட்ட கடன்கள் மூலம் சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு எவ்வளவு நடைபெறுகின்றன என்பதைப்பற்றி அரசாங்கத்திற்கு அறிவிப்பு ஏதாவது வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1973-74 ஆம் ஆண்டில் எல்லா மாவட்டங்களுக்கும் சுமார் ரூ. 7,86,000 அனுமதி தரப்பட்டிருக்கிறது.



### *Marine Chemical Industries*

*15 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any survey has been conducted in this State for the setting up of Marine Chemical Industries; and

(b) if so, the details of the same?

THE HON. THIRU S. MADHAVAN: (a) & (b) The State Governmente have commissioned the services of Messrs. M. M. Gurunath and Sons for the preparation of feasibility reports on manine chemical industries in the small scale sector. The Consultants have submitted their report, which is being examined by Government.

THIRU N. K. PALANISAMY: Sir, may I know the products of these industries?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவர்கள் சிபாரிசு செய்திருக்க கூடிய இண்டஸ்ட்ரிகளிலே table salt dairy salt, cattle licks, hydrated calcium silicate, light basic magnesium carbonate, sorel cement, potash alum, pottasium schoenite, plaster of paris, magnesium hydroxide and magnesium oxide.

### *Allotment of Cement for Madras City*

*16 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the total quality of cemend allotted per month for the City of Madras;

(b) the average requirement for the City for a month;

(c) the number of dealers for whom the cement is allotted for distribution;

(d) whether complaints have been received from the consumers regarding certain irregularities in the distributions of cement; and

(e) if so, whether the Government has any proposal to stream-line the distribution of cement?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) சென்னை நகருக்கு மாதம் ஒன்றுக்கு 10,500 மெட்ரிக் டன் சிமிண்ட் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) 15,000 மெட்ரிக் டன்கள்.

(உ) 160.

(எ) ஆம்.

(ஒ) அரசாங்கம் சிமிண்ட் விநியோகக் கட்டுப்பாடு உத்தரவு ஒன்றை இந்த ஆண்டு பிறப்பித்திருக்கிறது.

## நில அபிவிருத்தி வரி விதிப்பு.

*17 வினா—**திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தற்போது எந்தெந்த அணைக்கட்டு பாசன நிலங்களுக்கு நில அபிவிருத்தி வரி வசூலிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** விவரக் குறிப்பு@ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, இந்த வரி எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது ? எத்தனை காலம் வசூலிக்கப்படும் ? தொடர்ந்து வசூலிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 1955 ஆம் ஆண்டு பாசன மேம்பாட்டு கட்டண விதிப்புச் சட்டத்தின் கீழும், ஒன்றரை லட்சத்திற்கு மேல் செலவானதும், 1—1—1947 லிருந்து நிறைவேற்றப்பட்டதும் மாவட்ட அரசிதழில் மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்ட பாசன அல்லது வடிகால் பணிகளுக்கு இது பொருந்துகிறது. எக்கர் ஒன்றுக்குச் செலுத்தத் தக்க மேம்பாட்டுக் கட்டணவீதம் 'புதிய ஆயக்கட்டு' நேர்வில் ரூ. 80 லிருந்து ரூ. 200 வரையில் இருக்கும், 'மேம்படுத்தப்பட்ட பழைய ஆயக்கட்டு' நேர்வில் ரூ. 50 என்பதற்குட்பட்டு வசூலிக்க படுகிறது.

---

@ 185-187 ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.



**திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன் :** இதற்குக் காலவரையறை ஏதாவது உண்டா ? எதுவரையில் வசூலிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தக் கட்டணம் நிகரச் செலவிலே மூன்றிலே ஒரு பங்கு ஆகும். அந்தக் கணக்குப்படி முழுத் தொகையும் வசூலிக்கப்படுகின்றவரையில் வசூலிக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அணை கட்டுவதற்கு ஆகின்ற செலவு முழுமையும் வசூலித்தபிறகும்கூட வசூலிக்கிறார்களே, செலவு முழுவதும் வசூலித்துவிட்டால் பிறகு வசூலிக்காமல் நிறுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 1965 நவம்பர் திங்களில் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுக் கட்டணத்தை நிர்ணயிப்பது தொடர்பான பணி, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள் தவிர பிற மாவட்டங்கள் அனைத்திலும் முடிக்கப் பட்டுள்ளது. வசூலாகாமல் இருக்கின்றது. எனக்கு கொடுக்கப் பட்டிருக்கின்ற தகவல்படி பல இடங்களிலே வசூலாகவில்லை. அதனால்தான் தொடர்ந்து வசூலிக்கப்படுகிறது என்று அறிகிறேன்.

## வாணாபுரம் தொகுதி கிராமங்களை மாற்றியமைத்தல்.

*18 வினா—**திரு. எம். எஸ். இராதாகிருஷ்ணன் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், வாணாபுரம் கிராம அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளை பேராயம்பட்டு, குங்குலியநத்தம் பகுதிகள் ஒரு பிரிவாகவும், பெருந்துறைப்பட்டு, எடக்கல் பகுதிகளை ஒரு பிரிவாகவும் பிரிக்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) தீர்வை விதங்கள் உயர்த்தப்பட்டதாலும், மேம்பாட்டு வரிகள் விதிக்கப்பட்டதாலும், சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்ட ஆயக்கட்டுப் பகுதிகளில் கிராம அதிகாரிகளின் பணிச்சுமை அதிகரித்துள்ளதால் வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம், வாணா

[1974 சனவரி 19

புரம் தொகுதிக் கிராமங்களை மாற்றித் தொகுப்பதற்கான செயற் குறிப்பை, வட ஆர்க்காடு மாவட்ட வருவாய்த்துறை அதிகாரி பணிந்தனுப்பியுள்ளார். மாவட்ட வருவாய்த் துறை அதிகாரியின் செயற்குறிப்பை வருவாய்த் துறை (நிலவரி) வாரியம் பரிவுரை செய்தது. வருவாய்த் துறையின் 8—8—1973 நாளிட்ட 4722-ஆம் எண் அரசாணையில் அச் செயற்குறிப்புக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. கிராமங்களை மாற்றித் தொகுத்ததன் விவரங்கள் வருமாறு :—

| செங்கம் வட்டம் தற்போதுள்ள தொகுதி. | வருவாய்த் துறையின் 8—8—1973 நாளிட்ட 4722-ஆம் எண் அரசாணையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகுதி. |
|---|---|
| வாணாபுரம் (தொகுதி) | 1. வாணாபுரம் (தனித்தொகுதி). |
| குங்குலியநத்தம் | 2. குங்குலியநத்தம் (தொகுதி). |
| எடக்கல் | மழுவம்பட்டு. |
| | பேராயம்பட்டு. |
| பெருந்துறைப்பட்டு | |
| பேராயம்பட்டு. | 3. எடக்கல் (தொகுதி). |
| மழுவம்பட்டு | பெருந்துறைப்பட்டு. |

*Agricultural Consultancy Service*

* 19 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to set up an Agricu'tural Consultancy Service for the benefit of farmers in this State?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விவர அறிக்கை@ ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், ஏற்கெனவே கோயம்புத்தூர், மதுரை போன்ற இடங்களில் ஒவ்வொரு துறையிலும் நிபுணர்கள் இருக்கிறார்கள். அவர்களை வைத்து இந்த கவுன்சில் ஏற்பட்டிருக்கிறதா? அனுபவம் உள்ளவர்கள் இதில் கொண்டு வரப்பட்டிருக்கிறார்களா ?

---

@ 188-189 -ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 சனவரி 19]

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, மதுரை, கோவை ஆகிய இடங்களில் இருக்கும் ஆலோசனைக் குழு வேறு. 'ப்ரொடக்டிவிடி கவுன்சில்', விவசாயத்துறை வளர்ச்சிக் குழு, சென்னையில் இருப்பது வேறு. சென்னையில் உள்ள இந்தக் குழுவிற்கு என்னென்ன பணிகள் என்று விவர அறிக்கை அச்சிடப்பட்டு உறுப்பினர்களின் முன்னால் வைக்கப் பட்டுள்ளது.

பருத்திப் பயிர் முனைப்புத் திட்டம்

* 20 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் பருத்திப் பயிர் முனைப்புத் திட்டம் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எவ்வளவு ஏக்கரில் ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) இரண்டு இலட்சம் ஏக்கர்.

**திரு. சு. துரைசாமி :** பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டிலுள்ள பஞ்சாலைகளுக்குப் போதுமான பருத்தி நம்மிடத்தில் இல்லை. வெளிமாநிலங்களிலிருந்து வர வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். எனவே இந்தக் குறையைப் போக்கும் வகையில் இன்னும் அதிகமான ஏக்கர்களில் பருத்திப் பயிர் முனைப்புத் திட்டத்தை அரசு கொண்டுவருமா ? இப்படிக் கொண்டு வருவதால் எவ்வளவு விளைச்சல் கிடைக்கும் என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, ஆண்டுக்காண்டு அதிகமாகப் பருத்தி விளைச்சலாகிக்கொண்டு வருகிறது தமிழகத்தில். இருந்தாலும் தமிழகத்தில் உள்ள மில்களுக்குத் தேவையான பருத்தி விளையவில்லை என்பது உண்மை. ஆகவேதான் இந்த முனைப்புத் திட்டம் இப்பொழுது செயல்பட்டு வருகிறது.

## சவாரிகொட்டை கிழங்கு உற்பத்தி

* 21 வினா—திரு. அ. தேவேந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1972-73-ம் ஆண்டில் சவாரிகொட்டை கிழங்கு தமிழகத்தில் எவ்வளவு உற்பத்தி செய்யப்பட்டது ?

(இ) அதில் ஏற்றுமதி செய்யப்பட்டது எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) 11, 41, 320 (பதினொரு லட்சத்து நாற்பத்து ஓராயிரத்து முன்னூற்று இருபது) டன்கள்.

(இ) பூஜ்யம்.

## *Prices of eatables in Hotels*

* 22 Q.—THIRU N. K. PALANISWAMY :

THIRU K. A. WAHAB :

THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the steps taken by the Government to reduce price of the eatables in hotels in the City of Madras?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, ஓட்டல்களில் உணவுப் பண்டங்களின் விலைகள் அதிகமாகும் நேரங்களில் அரசு, ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்துடன் தொடர்பு கொண்டு விலைகளைக் குறைக்குமாறு வலியுறுத்தி வருகிறது. அண்மையில் பருப்பு, எண்ணெய் முதலிய பண்டங்களின் விலையேற்றத்தைக் காரணமாகக் கொண்டு, ஓட்டல் உரிமையாளர்கள் உணவுப் பண்டங்களின் விலையைக் கூடுதலாக்கிவிட்டனர். கோதுமை, ரவை, மைதா போன்ற பண்டங்கள் கட்டுப்படுத்திய விலையில் ஓட்டல்களுக்கு வழங்கப் படுவதால் உப்புமா, பூரி இவற்றின் விலையேற்றம் நியாயமற்றதாகக் கருதப்பட்டது. ஓட்டல் உரிமையாளர்களுடன் 5—3—1973 அன்றும், 9—8—1973 அன்றும் பேச்சு வார்த்தைகள் நடத்தியதின் விளைவாக இட்லி, உப்புமா, பூரி, மெதுவடை ஆகியவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுவிட்டன. அண்மையில் பருப்பு





வகைகள், எண்ணெய் வகைகள் விலைகள் கூடிவிட்டபடியால், ஓட்டல்களில் உணவு பண்டங்களின் விலைகள் சற்றேறக்குறைய 5 பைசா அளவில் கூடிவிட்டன.

மாவட்டங்களில், ஓட்டல் உரிமையாளர்களுடன் கலந்து பேசி விலைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

**திரு. என். கே. பழனிசாமி :** சார், கனம் மந்திரியவர்கள் சொல்லும்பொழுது இட்லி விலை குறைந்திருப்பதாகச் சொன்னார்கள். அது எந்தக் கடையில் என்று தெரியவில்லை. 20 காசு விற்ற இட்லி இப்பொழுது 25 காசு என்று விற்கிறது. 25 பைசாவாக இருந்த தோசை 40 பைசா என்று விற்கிறது. விலை குறைவு என்று சொல்வதைவிட இட்லியின் அளவு குறைந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆகவே, இட்லியைக் கொண்டு வந்து வைத்தவுடனே காற்றில் பறந்துவிடும் என்பதற்காக சாம்பாரை ஊற்றித்தான் கொண்டு வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைப் போடுங்கள்.

**திரு. என். கே. பழனிசாமி :** தோசையைக் கொண்டு வந்து வைப்பதற்கு முன்னால் இரண்டு டம்ளர் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்து விடுகிறார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிறது. விலையும் அதிகமாக இருக்கிறது. உளுந்து போன்றவற்றின் விலைகள் குறைந்திருக்கின்றன. முன்பு ஏறியிருந்த விலையை விட அரிசியின் விலையும் கூட குறைந்திருக்கிறது. ஆகவே பெருவாரியான ஜனங்கள் ஹோட்டல்களை நம்பியிருப்பதால் இதுகுறித்து சர்க்கார் பரிசீலனை செய்து உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அரிசி, உளுந்து விலை இறங்கியிருக்கிறது என்று சொன்னதற்காக நன்றி சொல்கிறேன். நான் சொன்ன விலை ஹாஸ்டல் ஹோட்டலிலே வடை 15 பைசா. ஆனால் எம்.எல்.ஏ. அவர்கள் அதை வாங்கிச் சாப்பிடாமல் பெரிய ஹோட்டலுக்குச் செல்கிறார் என்று கருதுகிறேன். கடைசியிலே படிக்கும்பொழுது சொல்லியிருக்கிறேன். பருப்பு விலை அதிகமாகி இருப்பதால் சில பண்டங்களின் விலைகளை ஏற்றியிருக்கிறார்கள் என்று சொன்னேன். மீண்டும் கூடிப் பேச ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, இந்த சைவ ஹோட்டல்களைவிட அசைவ ஹோட்டல்களில் விலையேற்றம் அதிகமாக இருக்கிறது. அதே அடிப்படையில் சில பண்டங்களின் விலைகள் குறைந்திருந்தாலும், முதலில் ஏறிய விலை மறுபடியும் இறங்கவேயில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆகவே இதைத் தவிர்ப்பதற்காக அவர்களோடு மறுபடியும் கலந்து பேசி கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முன்வருமா? இல்லையென்றால் நியாய விலைக் கடைகளை வைப்பதைப்போன்று ஹோட்டல்களிலும் நியாய விலை ஹோட்டல்களைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அசைவ ஹோட்டல்களைப் பற்றிச் சொன்னார்கள். நாம் கட்டுப்படுத்த முடிந்தவைகளைத்தான் கட்டுப்படுத்த முடியும். இன்றைக்கு. ஆட்டிறைச்சியையோ, மீனையோ நாம் கட்டுப்படுத்திய விலையில்—கொடுக்க முடியவில்லை. ஆகவே எந்தெந்த சீசனில் கிடைக்கிறதோ அப்பொழுது விலை குறைவாக இருக்கிறது. கிடைக்காத சீசனில் விலை அதிகமாக இருக்கிறது. ஆனாலும் எல்லாவற்றையும் நியாயமான விலையில் கிடைக்கச் செய்ய இறைச்சி விற்பனையாளர்களைக் கூட்டிப்பேசி கூட்டுறவுத் துறையிலே இறைச்சியை விற்க வேண்டுமென்றுகூட முடிவு செய்திருக்கிறோம். அதற்காக நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்படும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சபாநாயகரவர்களே, ஹோட்டல்களில் 'சப்சிடைஸ்ட்' முறையில் உணவுப் பண்டங்களை கொடுக்க ஏற்பாடு செய்தால் குறைந்த விலையில் கிடைக்கும் நிலைமை ஏற்படமுடியும். எனவே அம்மாதிரி திட்டம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, உலகத்திலே இப்படிப்பட்ட திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த ஒரு திட்டத்தைப்பற்றி இனிமேல்தான் யோசிக்க வேண்டும்.

**திரு. கு. பெரியசாமி :** தலைவரவர்களே, உணவுப் பண்டங்களின் விலைகளைப்பற்றி சர்ச்சை செய்கிறோம். ஹோட்டல்களில் இட்லி, தோசை, வடை போன்றவற்றின் எடைகளை நிர்ணயித்து ஒரு இட்லி இத்தனை கிராம் இருக்க வேண்டும், ஒரு வடை இத்தனை கிராம் இருக்க வேண்டும் என்று நிர்ணயிப்பதற்கு அரசு ஆலோசிக்குமா?





**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவரவர்களே, அவைகளெல்லாம் தயாரிக்கின்ற இடத்தைப் பொறுத்து இருக்கிறது. சிறிய இட்லியாக இருந்தாலும் ருசியாக இருக்கலாம். சிலயிடங்களில் பெரிய இட்லியாக இருந்து அதே விலைக்குக் கிடைக்கலாம். சிலயிடங்களில் அதிக விலை இருக்கலாம். ஆகவே, கட்டிட வாடகை, போன்ற நிர்வாகச் செலவு அதிகமானால் இட்லியின் விலை அதிகமாக இருக்கும். ஆனால் வீட்டிலே தயாரிக்கின்ற இட்லி பெரிதாக இருந்தாலும் அதே விலையில் கிடைக்கிறது.

### *Action against hoarders*

* 23 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to invoke the Defence of India Rules against hoarders;

(*b*) whether the Government had consulted the I.A.S. and I.P.S. Officers at a Conference in this regard in July 1973; and

(*c*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) & (உ) இன்றியமையாப் பொருட்களைப் பதுக்கி வைப்போர் மீதும், கள்ளக் கடத்தல் செய்வோர் மீதும் 1971 ஆம் ஆண்டு உள்நாட்டுப் பாதுகாப்பைப் பேணுதல் சட்டத்தின் விதித் துறைகளைப் பொருத்துவதென அரசு முடிவு செய்து நடவடிக்கை எடுத்துள்ளது.

(இ) ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த வினாவையும் எடுத்துக் கொள்ளலாம்.

* 24 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the Defence of India Rules have been invoked and prices for the essential articles have been fixed during August 1973; and

(*b*) if so, the details of the same?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவரவர்களே, 1973–74-இல் இப்படி உணவுப் பொருள்களையும், மற்றவைகளையும் பதுக்கி வைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? எத்தனை பேர்கள் மீது 73-இல் நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** பதுக்கி வைத்தவர்கள்மேல் கிட்டத்தட்ட 106 வழக்குகள் போடப்பட்டிருக்கிறன. 123 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதிலே பல வழக்குகள் முடிந்து விட்டன 63 வழக்குகள் நடவடிக்கையில் இருக்கின்றன.

**திரு. என். கே. பழனிசாமி:** சார், ஒவ்வொரு பொருளின் விலையையும் நிர்ணயம் செய்யாததால் எவ்வளவு வைத்திருப்பது, எவ்வளவு கூடாது என்பது இல்லை. ஆகவே அது பிளாக் மார்க்கெட்டிலும் ஓப்பன் மார்க்கெட்டிலும் ஒன்றாக இருக்கிறது. இன்னின்ன பொருள்கள் இன்னின்ன விலை என்று கடைக்காரர் களுக்கு அறிவிக்கச் சொல்லி, அதற்குமேல் அவர்கள் பதுக்கி வைத்தால் நடவடிக்கை எடுக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அப்படி ஒரு சட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆனால் விலையை நிர்ணயிக்க முடியவில்லை. விலையை நிர்ணயிப்பது என்பது நமது பகுதியில் கிடைக்கும் பொருள்களுக்கு நிர்ணயிக்க முடியும். அநேகமாக மக்களுக்கு அவசியமான துவரம்பருப்பு மொத்தமாக 90,000 டன் நமக்குத் தேவைப்படுகிறது. ஆனால் இங்கே விளைவது 20,000 டன்தான், வெளியேயிருந்து 61,000 டன் உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற இடங்களிலிருந்து வரவேண்டியிருக்கிறது. உளுத்தம்பருப்பு 63,000 டன் நமக்குத் தேவை, இங்கே 15,000 டன்தான் உற்பத்தியாகிறது, 48,000 டன் ஆந்திரம், மகாராஷ்ரத்திலிருந்து வர வேண்டியிருக்கிறது. கடலைப்பருப்பு நமது தேவை 2,50,000 டன், ஆனால் விளைவது 1,400 டன்தான். 2,40,000 டன் வெளியேயிருந்து வர வேண்டியிருக்கிறது. பச்சைப் பருப்பு 14,000 டன் தேவைப்படுகிறது, விளைவது 11,000 டன், 3,000 டன் ஆந்திரப் பகுதியிலிருந்து கிட்டத்தட்ட வரவேண்டியுள்ளது. நல்லெண்ணெய்க்கு வேண்டிய எள் 27,000 டன்





தேவைப்படுகிறது. 12,000 டன் நமக்குக் கிடைக்கிறது, மீதி 15,000 டன் வெளியிலேயிருந்து வரவேண்டும். தேங்காய் எண்ணெய் 3,00,000 டன் தேவை. விளைவது 60,000 டன். பாக்கி 2,40,000 டன் கேரளாவிலிருந்து வரவேண்டியிருக்கிறது.

ஆகவே, அவர்கள் அங்கே விலையை நிர்ணயம் செய்வதால், அதற்குப் போக்குவரத்து செலவெல்லாம் செய்து விற்க வேண்டியிருப்பதால் அதற்கான விலையை நிர்ணயிக்க முடியவில்லை. முடிந்தால் மத்திய அரசு தலையிட்டு நிர்ணயிக்கலாம். ஆனால் நாம் எடுத்திருக்கும் நடவடிக்கை என்னவென்றால், அவர்கள் கொள் முதல் செய்து கொண்டுவரும் பொருள்களுக்கு மொத்த வியாபாரி களுக்கு 1 சதவிகிதம், சில்லறை வியாபாரிகளுக்கு 3 சதவிகிதம் பருப்பு வகைகளுக்கு நிர்ணயிக்கிறோம். எண்ணெய்க்கு ¾ சதவிகிதம் மொத்த வியாபாரிகளுக்கும், 2¼ சதவிகிதம் சில்லறை வியாபாரிகளுக்கும் லாபம் வைக்க வேண்டுமென்று, கொள்முதலில் பட்டியலைச் செக் செய்யும் அளவில், பலகையில் ஸ்டாக் போட வேண்டும் என்று கூறியிருக்கிறோம். ஆகவே, அந்த நிர்ணயம் தான் எங்களுக்குள்ள அதிகாரம். அதை முழுமையாகப் பயன் படுத்தி இருக்கிறோம்.

(முற்பகல் 10.00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி நேரம் பேரவையின் அனுமதியுடன் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** பதுக்கல் செய்ததன் காரணமாகப் பலரையும் கைது செய்து காவலில் வைத்திருக்கிறார்கள். அரசாங்க அட்வைசரி கமிட்டியின் பரிந்துரைப்படி யாரையாவது அரசாங்கம் விடுதலை செய்திருக்கிறதா? அப்படி இருந்தால் அதன் விவரங்களை அரசு தெரிவிக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கோவையில் 13 பேர், திருநெல்வேலியில் ஒருவர், கன்னியாகுமரியில் 8 பேர், மதுரையில் 9 பேர் ஆக 31 பேர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்கள். 14 பேரை அட்வைசரி கமிட்டி விட்டிருக்கிறது. உயர்நீதிமன்றம் 7 பேரை விடுதலை செய்திருக்கிறது. 10 பேர் பாதுகாப்புச் சட்டப்படி உள்ளே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1974 சனவரி 19

**திருமதி த. ந. அனந்தநாயகி:** பதுக்கல் வியாபாரிகளைக் கண்டு பிடிக்குபோது அந்த உணவுப் பொருள்கள் பறிமுதல் செய்யப்படுகின்றனவா. அவை அப்படியே பாழாகிவிடுகின்றனவா அல்லது மக்களுக்கு அரசால் விநியோகம் செய்யப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவை நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு மக்களுக்குத் திரும்பவும் நட்டம் இல்லாத முறையில் விலை நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்படுகிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** . அத்தியாவசியமான பொருள்களுக்குச் சில்லரை விலை நிர்ணயிப்பதில் பல கஷ்டங்கள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கேரளாவில் கூட இன்ன விலைக்குத்தான் பொருள்களை விற்க வேண்டுமென்று சில்லரை விலைகளை நிர்ணயித்திருக்கிறார்கள். வாங்கிய விலைக்கும் விற்கக்கூடிய விலைக்கும் 50 சதவிகிதம் 100 சதவிகிதம் வித்தியாசம் இருக்கிறது. அமைச்சர் சொன்னது போல் நாலைந்து சதவிகிதத்திற்கு மேல் லாபம் வைக்காது விற்பதற்கு வழி செய்ய முன்வருவார்களா? அதற்கு மேல் விற்பவர்களைத் தண்டிக்க சட்டத்தைத் திருத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி:** கேரளாவில் நாங்கள் நேராகச் சென்று பார்த்தோம். தேங்காய் விலையை நிர்ணயித்தார்கள். மறுநாளே அந்தப் பகுதியில் தேங்காய் எண்ணெய் கிடைக்கவில்லை. சர்க்கார் பொருள்களைக் கொள் முதல் செய்து விற்பனையாளர்களுக்குக் கொடுக்கின்ற நிலை இருந்தால்தான் இன்ன விலைக்கு விற்க வேண்டுமென்று சர்க்கார் விலையை நிர்ணயிக்க முடியும். நாம் அரிசியைக் கொள்முதல் செய்து வியாபாரிகளுக்கு கொடுக்கின்ற காரணத்தால் விலை நிர்ணயம் செய்ய முடிகிறது. சில்லரை விலையை நிர்ணயம் செய்ய எல்லா மாநிலச் சர்க்கார்களும் ஓரளவு முயற்சி செய்து பார்த்து விட்டுவிட்டார்கள். வெற்றி பெற முடியவில்லை. உளுந்து, பருப்பு முதலியவைகளை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் கொள்முதல் செய்து வியாபாரிகளுக்குக் கொடுத்து 3 சதவிகிதந்தான் லாபம் வைத்து விற்க வேண்டுமென்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதிலேயும் தவறு செய்தவர்கள் 126 பேர் மேல் வழக்குப் போடப் பட்டிருக்கிறது என்று ஏற்கெனவே சொன்னேன்.



1974 சனவரி 19]

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அத்தகைய பொருள்கள், குறிப்பாக கோதுமையால் செய்யப்படுகின்ற பண்டங்கள் தமிழ் நாட்டில்தான் உபயோகப்படுத்தப்பட வேண்டும். வெளி மாநிலத்திற்குக் கொண்டு போனால் தடுத்து நிறுத்தப்படுமா? அப்படி வெளிமாநிலங்களுக்கு எடுத்துச் செல்லுகின்ற லாரிகள் தடுத்து நிறுத்தப்படுகின்றனவா? அப்படி தடுத்து நிறுத்தப் படாமல் இருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி:** நமக்கே போதவில்லை. வெளியே போவதாகத் தகவல் வரவில்லை. ஒன்றிரண்டு போனதையும் நாங்களே பிடித்து வழக்குப் போட்டிருக்கிறோம். எந்தக் காரணத்தைக் கொண்டும் கோதுமைப் பண்டங்களைக் கடத்திச் செல்ல அனுமதிக்க மாட்டோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** உணவுப் பண்டங்களின் விலையை அவ்வப்போது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நிர்ணயிக்கிறது. கடந்த டிசம்பர் மாதத்தில் ஒரு கிலோ அரிசி 2 ரூபாய்க்கு விற்க வேண்டுமென்று உத்தரவு வந்து நாகர்கோவிலில் அந்த விலைக்கு விற்கப்பட்டது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அது பற்றித் தகவல் வந்த உடனேயே நடவடிக்கை எடுத்தாகிவிட்டது.

*Revenue work of the Housing Board*

* 25 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(*a*) whether the State Housing Board has decentralised the revenue work of the Board; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) வீட்டு வசதி வாரியத்தின் வருவாய்த்துறை அலுவல்கள் படிப்படியாக பரவலாக்கப்பட்டு வருகின்றன.

(இ) வசூல் நிலையங்கள் வீட்டு வசதி வாரியத்தின் ஒவ்வொரு குடியிருப்பிலும் 1-6-1973 முதல் நிறுவப்பட்டுள்ளன.

[1974 சனவரி 19

அலுவல்கள் மேலும் திறம்பட நடைபெறவும், உரிய காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளும்பொருட்டும் சென்னை நகரையும் சுற்றுப் பகுதிகளையும் ஆறு பகுதிகளாய்ப் பிரித்து தலைமை வருவாய் அதிகாரியின் பொது கண்காணிப்பின்கீழ் ஒவ்வொரு பிரிவையும் ஒரு உதவி வருவாய் அதிகாரியின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ் :** அரசு ஊழியர்கள் அல்லது வேறு ஸ்தாபனங்களில் வேலை செய்கிறவர்கள் வாடகைச் செலுத்துவதற்கு வசதியாக ஆபீஸ் நேரம் அல்லாத நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் அந்த அலுவலகங்களைத் திறந்து வைப்பதோடு வீடுகளில் சென்று வாடகையை வசூலிக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இந்தச் சங்கடங்களைத் தீர்த்துக் கொள்வதற்காகதான் சென்னை நகரை ஆறு பிரிவாக்கி அலுவலகங்கள் உருவாக்கப்பட்டு அந்தந்தக் குடியிருப்புகளின் பக்கத்திலேயே அமைத்திருக்கும் காரணத்தால் அரசு ஊழியர்கள் அந்தந்த இடங்களுக்குச் சென்று பணத்தைச் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

### *Quarters for teachers*

* 26 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the Madras Branch of the Grade II Tamil Teachers' Association has requested the Government to provide quarters at cheap rates of rent through the Slum Clearance Board and the State Housing Board in April-May 1973; and

(b) if so the action taken thereon?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) சென்னை மாவட்ட இரண்டாம் நிலைத் தமிழாசிரியர் கழகம், அரசு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஆகிய துறைகளை தங்களுக்கு குறைந்த விலையில் விடுகளைக் கட்டிக் கொடுக்க கேட்டுக் கொண்டது.

(இ) வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சி கழகத்தின் நிதி உதவியுடன் குறைந்த வருவாயுள்ளோருக்கான வீட்டு வசதி திட்டம், பொருளாதாரத்தால் நலிவுற்றோர்க்கான வீட்டு வசதித்



1974 சனவரி 19]

திட்டம் ஆகிய திட்டங்களில் பல இடங்களில் கட்டப்படும் விடுகளை ஒதுக்கீடு செய்துகொள்ள விண்ணப்பம் செய்து கொள்ளும்படி வீட்டு வசதி வாரியத்தால் இவ்வாசிரியர் கழகம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு குடியிருப்புக்கள் கட்டித் தர இயலாது என்று குடிசை மாற்று வாரியத்தால் இவ் வாசிரியர்க்கழகம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. என். டென்னிஸ் :** இவர்கள் வேலை செய்யும் பள்ளிகளின் பக்கங்களில் கட்டடம் கட்டிக் கொடுப்பது வசதியாக இருக்குமாதலால் இதுப்பற்றிப் புனர் பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** இதைப் பொருத்தவரை சென்னை நகரத்தில் இருக்கும் தமிழாசிரியர் கழகத்தினர் கேட்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தில் பள்ளிகளுக்குப் பக்கத்தில் இடம் கிடைப்பது கடினம். இடத்தை வாங்கித் தந்தால் கட்டடம் கட்டிக் கொடுக்க வீட்டு வசதி வாரியம் தயாராக இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** குடிசைமாற்று வாரியம் ஆங்காங்கு பல கட்டடங்களைக் கட்டி அந்தப் பகுதியில் குடிசைகளில் இருந்தவர்களுக்குக் கொடுக்கிறது. அதிலே கொஞ்சம் அதிகமான வீடுகளைக் கட்டி இதுபோன்ற அரசாங்க சிப்பந்திகளுக்கும் சில வீடுகளைக் கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அந்த முறையும் கையாளப்பட்டு வருகிறது. குடிசைமாற்று வாரியத்தின் மூலம் கட்டப்படும் வீடுகளில் அதிகப்படியான வீடுகள் கட்டப்பட்டால் 250 ரூபாய்க்குக் குறைவாக மாதச் சம்பளம் வாங்குகிற ஊழியர்களுக்குத் தரப்படுகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** குடிசை மாற்று வாரியமும், வீட்டு வசதி வாரியமும் அதிகமாகச் சென்னை நகரத்தில்தான் செயல்பட்டு வருகிறது. மாவட்டங்களில் செயல்பட அதிகப் பணம் அரசாங்கம் ஒதுக்குமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தியாவிலேயே நம்முடைய மாநிலத்தில்தான் குடிசை மாற்று வாரியம் என்ற ஒரு வாரியத்தை நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். மாவட்டத் தலைநகரங்களில் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குடிசைமாற்றுப் பணிகளைச் செய்வதற்கு ஓரளவு பணம் ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஆண்டிப்பட்டியில் வீட்டு வசதி வாரியப் பிரிவு.

* 27 வினா—**திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் வீட்டு வசதி வாரியத்தின் கிளை ஒன்று ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இல்லை.

**திரு. நா. வெ. குருசாமி:** ஆண்டிப்பட்டியில் சுமார் 15,000 மக்கள் வசிக்கிறார்கள். அங்கு வீட்டு வசதி வாரியத்தின் கிளை ஒன்றை ஏற்படுத்தி அங்குள்ள வீடு இல்லாத மக்களுக்கு மலிவான வகையில் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஆண்டிப்பட்டி என்பது ஒரு சின்ன சிற்றூர். அதற்கு வீட்டு வசதி வாரியத்தின் வேலைகள் எவ்வளவு தேவைப்படும் என்று எனக்கு தெரியவில்லை. அவர்களது கேள்வியில், வீட்டு வசதி வாரியத்தின் அலுவலகம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். வீடுகள் கொஞ்சம் அளவு கட்டவேண்டுமென்றால் மதுரையில் உள்ள வாரிய அதிகாரிகளை அணுகினால் அல்லது மற்ற வீட்டு வசதி வாரியம் அதிகாரிகளை அணுகினால் வீடுகள் கட்டித்தர வீட்டு வசதி வாரியம் தயாராயிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, on a point of order. In the English list of questions, the question No. 28 is not in proper form. Something is omitted. " Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the appointment . . . . . " ' whether ' has been omitted. What is the meaning of this question ?

'வெதர்' என்பது விட்டுப்போயிருக்கிறது. க்வஸ்டினின் பாரம் சரியாகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருத்திக்கொள்ளலாம்.



## கோயில்களுக்கு நிர்வாக அதிகாரிகள்.

* 28 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறநிலையத்துறையை சேர்ந்த எல்லா கோயில்களுக்கும் நிர்வாக அதிகாரிகளை நியமிக்க அரசு ஆலோசித்து வருகின்றதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஆம்.

## அறங்காவலர்கள் பதவிகள்

* 29 வினா—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகக் கோயில்களில் இதுவரையில் தாழ்த்தப்பட்டவர்கள் எவ்வளவு பேர் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** 1969 ஆம் ஆண்டு முதல், 1973 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் தேதி வரையில் 767 தாழ்த்தப்பட்டோர் அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**திரு. வை. பாலசுந்தரம்:** இதில் எத்தனை பேர்கள் நிர்வாக அறங்காவலர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** நிர்வாக அறங்காவலர்கள் நியமிக்கப்படுவதில்லை. நியமிக்கப்பட்ட அறங்காவலர்களால் தேர்ந்தெடுக்கப் படுகிறவர்கள்தான் நிர்வாக அறங்காவலர்களாக வருகிறார்கள். அதில் எவ்வளவு பேர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரக்குறிப்பு என்னிடமில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நந்தனாரைக் கவர்ந்த சிதம்பரம் கோயிலில் ஹரிஜன அறங்காவலர் நியமிக்கப்பட்டிருக்கிறாரா என்பதை அரசாங்கம் தெரிவிக்குமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** நீதிமன்றத்தின் தீர்ப்புப்படி சிதம்பரம் கோவிலின் அறங்காவலர்களை அவர்கள் ஒரு சமுதாயத் திற்குள்ளே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மூலமாகவே

[1974 சனவரி 19

நியமிக்கப்படுகிருர்கள். ஆகவே அங்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்களை நியமிப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இல்லை.

### சென்னை வடபழனி கோயில்

*30 வினு—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, வடபழனி கோயிலை விரிவுபடுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** ஆம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** சென்னையில் உள்ள வடபழனி கோவிலுக்கு வருகிற பக்தர்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகிருர்கள். எனவே திருத்தணி போன்று இங்கும் தங்குவிடுதிகள் கட்டி வருகிற பக்தர்கள் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** சென்னை நகரில் இருக்கிற வடபழனி ஆண்டவர் கோவிலுக்குத் தங்குவிடுதிகள் கட்டுவதற்குப் போதுமான இடவசதி அங்கு இல்லை. ஆனுல் கோவிலைப் பொறுத்த அளவில் விரிவாகக் கட்டுவதற்கும், சுற்றுப் பிரகார மண்டபங்கள் அமைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சுமார் மூன்று லட்சம் ரூபாய் செலவில் வேலைகள் இப்போது நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is it a fact that a sum of Re. 1 is charged for each person at the Vadapalani Temple? All are equal in front of God. Is the Government aware of this fact and whether any action has been taken to stop the collection of Re. 1 from each person?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:** அதுபற்றிய தகவல் என்னிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]



### 2. அறிவிப்பு.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ் நாடு சட்டப் பேரவை விதி 6 (1)ன்படி, கீழ்க்கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமனம் செய்திருக்கிறேன்:—

1. திரு. கு. காமாட்சி.
2. திரு. ஆ. பரந்தாமன்.
3. திரு. என். இராசாங்கம்.
4. திரு. கே. பி. கோபால்.
3. திரு. என். இராசாங்கம்.
6. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.

**அடுத்து, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்.**

### 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்.

**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"1974-ம் ஆண்டு, சனவரித் திங்கள் 17-ம் நாளன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு @ தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்".

**திரு. ஏ. எம். இராஜா:** நான் இதை வழிமொழிகிறேன்.

---

@ 189-199-ம் பக்கங்களில் இணைப்பு III ஆகவும் பேருரையின் தமிழாக்கம் 199-214-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆகவும் அச்சிடப்பட்டுள்ளன.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I move—

*Add* at the end, the following :—

' but regret to note that no mention is made about :

(1) the positive steps that will have to be taken by the State Government to bring down the spiralling prices;

(2) the policy of the Government on labour problems to bring about industrial peace;

(3) the clear cut and positive steps of the Government to solve the mounting unemployment that is affecting our State;

(4) the future policy regarding total prohibition of alcoholic drinks as per constitutional directive.

(5) the steps taken by the Government pursuant to the Enquiry Commission reports on the incidents in Clive's Hostel and Palayamkottai which resulted in large-scale student agitation resulting in police excesses;

(6) conduct of the elections to the local bodies with particular reference to the Corporation of Madras; and

(7) the failure of the Government to take notice of the indicents that occurred recently at Jaffna in Sri Lanka through the Central Government.

The amendments were duly seconded.

THIRU K. T. K. THANGAMANI : Sir I move—

*Add* at the end, the following :—

' but regret to note that no mention is made about :

(1) the refusal of Simpson Management to reinstate 400 workers inspite of Government assurances;

(2) the police prosecutions against students and student leaders who demanded justice after publication of Reports on Clive's Hostel and Palayamkotai indidents; and

(3) the widespread irregularities and supresession of Madras Corporation and prosecutions against Mayors and Members.



(4) the death of a woman in police lock up in Thangachimadam police station in Rameswaram island and unrest in the area;

(5) the failure of the Government to take Departmental action against investigating officers for defective work in serious case of Kilavenmani incidents;

(6) the steps taken to settle the students' just demands in Adayar Film Institute and the hunger strike now taking place;

(7) the Arunagiri recommendation on Textile Workers and uinveral rejection by more than one lakh workers;

(8) the plight of the hotel workers, defective inspection machinery and the failure to set up minimum wage committee for the catering workers;

(9) the State Transport workers' protest to the splitting of the Transport Department into various Corporations;

(10) the large scale lock-out method adopted by Employers and the continued lock-out in Meenakshi Textile Mills, Madurai and Kadri Mills, Coimbatore;

(11) the Government's delay in assigning 7,000 acres known as Siray Kadu in Sethur area in Ramanathapuram district which belonged to the Zamindar and the High Court Order to that effect;

(12) the large-scale eviction of tenants from wet lands and the failure to bring in a legislation banning all evictions;

(13) the spiralling prices and mal-distribution of essential commodities like chemical fertilisers, cement, sugar, yarn, etc.;

(14) but regret that there is only casual reference to the plight of handloom weavers in the State. '

The amendments were duly seconded.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move—

*Add* at the end, the following :—

' but regret to note that no mention is made about—

(1) the steps taken by the Government to exercise its powers under the Essential Commodities Act, 1955 (Act No. X of 1955 to fix the fair prices for raily consumer goods which affect the family budget;

[Thirumathi T. N. Anandanayaki] *[1974 சனவரி 19*

(2) the steps taken by the Government to eradicate the malpractices in distribution of yarn to the weavers, fertilisers to the agriculturists; sugar, maida and wheat, etc., to the consumers and soda ash to the dhobies; and

(3) the death of a woman in police lock-up at Thangachimadam police station in Rameswaram Island and the unrest prevailing in the area.'

The amendments were duly seconded.

(6) the failure of the Government to place on the table of the House the report of the Commission of Inquiry on Periakuppam incidents that took place in May-June 1973; and

(7) the need to solve the irregularities in the Institute of Film Technology, Adyar.'

The amendments were duly seconded.

***திரு. ஆ. கு. சுப்பையா :*** *தலைவர் அவர்களே, இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக்கொள்ளவும் :—*

*"1. தீவிரமான நிலச்சீர்திருத்தம் செய்து நிலப்பிரபுத்துவ மிச்ச, சொச்சங்களை ஒழித்து உழுபவர்களுக்கு நிலம் வழங்குவதைப் பற்றியும்,*

*2. மலேசியா, சிங்கப்பூரிலிருந்து நாடு கடத்தப்பட்ட அகதிகளை பற்றியும்,*

*3. உரம், பூச்சிமருந்து கிடைக்காததாலும், சூறை போன்றவைகளாலும் பாதிக்கப்பட்டு விளைவு குறைந்து விவசாயிகள் குத்தகை அளிக்க இயலாததைப் பற்றியும்,*

*4. தாழ்த்தப்பட்ட மக்கள் மேம்பாட்டுக் கழகம் அமைத்து அதன் மூலம் அவர்கள் முன்னேற்றம் அடையச் செய்வது பற்றியும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

*தீர்மானம் முறையே வழிமொழியப்பட்டது.*

DR. H. V. HANDE : Sir, I move—

*Add* at the end, the following :—

'but regret to note that no mention is made about—

(1) the political instability that the Government is facing;



*1974 சனவரி 19]* [Dr. H. V. Hande]

(2) the failure of the Government to settle the Simpson issue;

(3) the students discontentment as a result of the Clive's Hostel and Palayamcottai incidents;

(4) the spiralling of prices and increasing unemployment problem and discontentment among the workers;

(5) the steps taken to solve the insecurity faced by the members of the opposition parties especially the Anna D.M.K. as a result of violence and victimisation directed towards them.'

The amendment was duly seconded.

***திரு. சோ. அழகர்சாமி :*** *தலைவர் அவர்களே, இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக்கொள்ளவும் :—*

*"1. தமிழகத்தில் பரவலாக நடந்து கொண்டு வரும் நில வெளியேற்றத்தைத் தடுக்க அவசர நடவடிக்கை அரசு எடுக்கத் தவறியதைப் பற்றியும்,*

*2. அரசு சீரான உர விநியோகம் செய்யத் தவறியதைப் பற்றியும்,*

*3. அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி உயர்வைத் தடுத்து மக்களுக்கு நியாய விலையில் பொருள்கள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியதைப் பற்றியும்,*

*4. கைத்தறித் தொழிலாளர் வாழ்க்கைக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு தவறியுள்ளது என்பதைப்பற்றியும் ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."*

*தீர்மானம் முறையே வழிமொழியப்பட்டது.*

***திரு. எஸ். வடிவேல் :*** *நானும் மேற்சொன்ன திருத்தங்களையே பிரேரேபிக்கிறேன்.*

*இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக் கொள்ளவும் :*

*1. தமிழகத்தில் பரவலாக நடந்துகொண்டு வரும் நில வெளியேற்றத்தைத் தடுக்க அவசர நடவடிக்கை அரசு எடுக்கத் தவறியதைப்பற்றியும்,*

[திரு. எஸ். வடிவேல்] [1974 சனவரி 19

2. அரசு சீரான உர விநியோகம் செய்யத் தவறியதைப் பற்றியும்,

3. அத்தியாவசியப் பண்டங்களின் விலைவாசி உயர்வைத் தடுத்து மக்களுக்கு நியாய விலையில் பொருள்கள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்கத் தவறியதைப்பற்றியும்,

4. கைத்தறித் தொழிலாளர் வாழ்க்கைக்குப் பாதுகாப்பு அளிக்க அரசு தவறியுள்ளது என்பதைப்பற்றியும் ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது."

தீர்மானம் முறையே வழிமொழியப்பட்டது.

THIRU N. K. PALANISAMY : Sir, I move—

*Add* at the end, the following :—

'but regret to note that no mention is made about—the failure of the Government to withdraw the cases against students.'

The amendment was duly seconded.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move—

*Add* at the end, the following :—

'but regret to note that no mention is made about—

(1) the steps taken to supplement the very meagre income of agricultural labourers and to seek Central assistance for this purpose; and

(2) regret to note the policy of the Government to start vital Industries like Fertilisers in Joint Sector.'

The amendments were duly seconded.

* **திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தினை நான் முன்மொழியும் நேரத்தில் இந்த நாட்டில் ஒரு மாபெரும் விடுதலை வீரராக, அஞ்சாமைக்கு அணிகலனாக இருந்த, சமுதாயச் சீர்திருத்தவாதியாக, ஏற்றத்தாழ்வினைப்போக்கிய தீரராக, பகுத்தறிவுப் பிரச்சாரச் செம்மலாக இருந்த தந்தை



1974 சனவரி 19] [திரு. நா. வீராசாமி]

பெரியார் அவர்களைப் பற்றி ஆளுநர் அவர்களது உரையில் குறிப்பிட்டிருக்கிற வாசகங்கள் இந்த நாட்டிலே தந்தை பெரியாரை இழந்து தவிக்கிற இலட்சக்கணக்கான மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு ஆறுதல் சொல்கிற வார்த்தைகளாக அது அமைந்திருக்கின்றன. அரசாங்கத்தில் இருந்தால்தான் அரசு மரியாதை என்ற நிலை மாறி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு ஆணிவேராக இருந்த தந்தை பெரியார் அவர்களை நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அரசாங்க மரியாதைகளுடன் அடக்கம் செய்தது உள்ளபடியே வரலாற்றில் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், இந்த அரசே அவருக்குக் கொடுக்கப்பட்ட பரிசு என்று. அப்படிப்பட்ட பெரியார் அவர்களை இழந்துவிட்டிருக்கிற இந்த நேரத்தில் அவர்களுக்காகக் கண்ணீர் வடிக்கிற லட்சக்கணக்கான மக்களுக்காக ஆளுநர் அவர்கள் தமது உரையின் துவக்கத்தில் பெரியார் அவர்களது மறைவைப் பற்றி ஆரம்பித்து அதற்குப் பின்னால்தான் இந்த அரசின் கொள்கைகள் பற்றி ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

ஆளுநர் அவர்களது உரை என்றால் ஒரு அரசின் இலட்சியங்களைக் கோடிட்டுக் காட்டுகிற ஒரு பேச்சே தவிர இங்கிருக்கிற உறுப்பினர்களுடைய கோரிக்கைகள், அவர்களது உள்ளங்களில் இருக்கிற ஆசைகள் அவைகள் அத்தனையும் இந்த உரையில் இடம் பெறமுடியுமா என்று கேட்டால் முடியாது. மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இங்கு திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள். நான் கூட நினைத்தேன், ஒருவேளை இந்த அரசு தன்னுடைய கொள்கைகளில், இந்த நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டியதை செய்வதில் ஏதாவது விட்டிருக்கிறதோ, அவைகளை எல்லாம் எதிர்க் கட்சிக்காரர்கள் திருத்தங்களாக குறிப்பிட்டிருக்கிறார்களோ என்று பார்த்தேன். எனக்கு வேடிக்கையாக இருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள், 'பொலிட்டிகல் இன்ஸ்டெபிலிட்டி' பற்றி ஆளுநர் அவர்களது உரையில் ஒன்றுமே குறிப்பிடவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்களது திருத்தத்தில், பொலிட்டிகல் இன்ஸ்டெபிலிட்டி' என்றால் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. ஏதோ முதல் அமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்குப் பின்னால் பத்து

பேர்கள் இருப்பது போலவும், டாக்டர் ஹாண்டே அவர்களுக்குப் பின்னால் 173 பேர்கள் இருப்பதுபோலவும், ஏதோ அக்கிரமமாக இந்த ஆட்சி நடைபெறுவதைப் போலவும் குறிப்பிட்டிருக்கிற வாசகங்கள் உள்ளபடியே வேடிக்கையாக இருக்கிறது.

இதில் இன்னொரு வேடிக்கை, இங்கு எப்படிப்பட்ட திருத்தங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் ஏதோ பாகவதத்தில் அடிக்கடி கம்சனை பற்றிச் சொல்வார்கள். அதே போல் இந்த மன்றத்தில் சிம்ஸனைப் பற்றிப் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். இந்த சிம்ஸன் விவகாரம் பற்றி எல்லாக் கட்சிக் காரர்களும் இங்கு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

அதுகூட அல்ல. ஒவ்வொரு தொகுதியிலும் சாலைகள் போடுதல், பேருந்துகள் விடுதல், இங்கு நடைபெறுகிற உண்ணாவிரதங்கள் இவைகள் எல்லாம் இந்த ஆளுநர் உரையில் இல்லையே என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மனம் வருந்துகிறார்கள்.

நான் உள்ளபடியே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், ஆளுநர் உரை என்பது உள்ளபடியே ரயில்வே கைடாக இருந்தால் பூரா விவகாரங்களையும் சேர்த்துக்கொள்ளலாம், அல்லது டெலிபோன் டைரக்டரியாக இருந்தாலும் இவ்வளவையும் இடம் பெறச் செய்ய முடியும். ஒரு அரசு தன்னுடைய லட்சியங்களை எப்படியெல்லாம் சொல்லியிருக்கிறது என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில் இன்றைய தினம் மாநிலப் பொருளாதாரத்தைப் பெருக்குவதற்காக இந்த அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதை இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

பாசன வசதி பெருக்குதல், மின்னொளி வழங்குதல், குடி தண்ணீர் வசதி பெருக்குதல் போன்ற நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறோம். இந்த மாநிலத்தில் இருக்கும் ஒரு தனி நபரின் சராசரி விளை நிலம் சுமார் அரை ஏக்கர் என்று கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆண்டின் சராசரி மழை அளவு 30 அங்குலம் முதல் 40 அங்குலம் வரை மட்டுமே உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த அரசு ஐந்தாவது ஐந்தாண்டு திட்டக் கால அளவில் மொத்தம் ஒதுக்கப்பட்டுள்ள 1,200 கோடி ரூபாயில், முக்கியமான திட்டங்களுக்காக ரூ. 548 கோடியும், மின் சக்திக்காக





ரூ. 326 கோடியும், பாசனத்திற்காக ரூ. 129 கோடியும், நகர்ப்புற நாட்டுப்புற பகுதிகளில் குடி தண்ணீர் வசதிக்காக ரூ. 93 கோடியும் ஒதுக்குவது என்று திட்டமிட்டு இருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் பாசனப் பணிகளுக்காக 14 திட்டங்கள் தீட்டப்பட்டு ரூ. 15.90 கோடி ஒதுக்கி யிருக்கிறோம். மேலும், 19 புதிய நடுத்தர திட்டங்களுக்காக ரூ. 15 கோடி ஒதுக்கியிருக்கிறோம்.

புதிய ஏரிகளை அமைப்பதற்கும், உள்ள ஏரிகளைச் சீரமைப்பதற்கும் ஐந்தாவது திட்டத்திலே சிறுபாசன சிறப்பு வேலைத் திட்டத்தின்கீழ் ரூ. 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 27,000 சிறிய பாசன ஏரிகள் குளங்கள் ஆகியவற்றைச் சீர்செய்ய ரூ. 15 கோடி ஒதுக்கியிருக்கிறோம்.

உள்ளபடியே சொல்கிறேன், சுதந்திரம் பெற்ற 20 ஆண்டு காலமாக—ஏன் அதற்கு முன்னாலேயே கூட—யாராவது இந்த சிறிய ஏரிகள், குளங்களை சீர்படுத்தவேண்டுமென்று எண்ணிப் பார்த்தது உண்டா? நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குத் தான் அந்த அக்கறை ஏற்பட்டு அதைக் கவனத்தில் கொண்டு திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். இதை விட நாம் வேறு என்ன செய்து விட முடியும்?

இவைகளெல்லாம் போக, விவசாயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென்பதற்காக கிணற்று நீர்ப் பாசனம், ஊற்று நீர்ப்பாசனம் ஆகியவற்றைக் குறித்தும் ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருவதற்கு விரும்புவது, ஊற்றுநீர் கிணறுகளை ஏராளமாக அரசின் உதவியைக் கொண்டு தோண்டி யிருக்கிறார்கள். அந்த ஊற்று நீர்கிணறுகளில் தண்ணீர் மேலும் மேலும் கீழே போய்க்கொண்டேயிருக்கிறது. அதைத்தடுப்பதற்கு இந்த அரசு ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இப்போது 'ஆர்ட்டிபிசியல் ரீ சார்ஜிங்' என்ற முறையை அமெரிக்க நாட்டிலும், எகிப்து நாட்டிலும் செய்து வருகிறார்கள். அதாவது மழை காலங்களில் தண்ணீரைக் குட்டைகள், ஏரிகளில் தேக்கி வைப்

[திரு. நா. வீராசாமி] [1974 சனவரி 19

பதன் மூலம் ஊற்று நீரை மேன்மேலும் கீழே போகாமல் தடுக்க முடியும் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்ற அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் தேக்கப்பட்டு இருக்கும் நீரில் 'எவாபரேஷன் லாஸ்' 30 சத விகிதம் ஆகிறது என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். விஞ்ஞானிகள் அதைத்தடுப்பதற்காக ஏதோ ஒரு கெமிக்கல்ஸ் கண்டுபிடித்து இருப்பதாகவும், அதைச் சேர்த்தால் அந்த நீர் 'எவாபரேஷன்' ஆவதைத் தடுக்க முடியும் என்றும் சொல்கிறார்கள். அதைச் செய்வதற்கும் அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இருக்கிற நீரை மிகவும் சிக்கனமாக உபயோகிக்க மதகுகள் அமைத்து, கால்வாய்கள் வெட்டி அதன் மூலம் பாசனம் செய்தால் இன்னும் இரு மடங்கு உற்பத்திச் செய்யலாம்.

நம்முடைய அரசு இந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 10,000 வடிமுனைக் குழாய்க்கிணறுகள் அமைக்கவும் 12,500 குழாய்க் கிணறுகள் இறக்கவும் இப்போதுள்ள 4,000 சாதாரண கிணறுகளில் துளைகள் போடவும், 10,000 கிணறுகளை ஆழப்படுத்தவும் திட்டங்கள் தீட்டியுள்ளதாக ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளதைக் காண்கிறோம். இவைகளெல்லாம் ஓரளவு நமது உணவு பிரச்சனையைச் சமாளிப்பதற்கு, தொழில் துறையை அபிவிருத்தி செய்ய ஆர்வம் காட்டுவதற்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மனிதன் சராசரி மின் உபயோகம் 10 ஆண்டு காலத்திற்கு முன்பு 40 யூனிட்டாக இருந்தது, இன்றைக்கு 160 யூனிட்டாக உயர்ந்து இருக்கிறது. எப்படி மின்சாரத்தின் தேவைகளைப் புரிந்துகொண்டு மனிதன் இப்போது அதை அதிக அளவில் உபயோகிக்கிறான் என்பதை ஆராய வேண்டும். இம்மாநிலத்தின் மொத்த உற்பத்திப் பொருள்களில் 50 சத வீதத்திற்கு மேற்பட்டவற்றை உற்பத்தி செய்வதற்குக் காரணமாயுள்ள 6.5 இலட்சம் கிணற்று விசையேற்றங்களும் 6,500 பெரிய சிறிய தொழிற்சாலைகளும் மின் சக்தியையே தங்கள் உற்பத்திக்கு நம்பி இருக்கின்றன என்பதிலிருந்து இம்மாநிலம் எந்த அளவுக்கு மின்சக்தியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது என்பது புலனாகும்.



1974 சனவரி 19] [திரு. நா. வீராசாமி]

மேலும், மின்சக்தித் தேவை ஆண்டுக்கு ஆண்டு 12.5 சத விதம் அதிகமாகி வருகிறது, இன்று நமது மின்சக்தித் தேவை 2010 மெகாவாட்டாகும். ஆனால் நமது மின் உற்பத்தித் திறன் 1371 மெகாவாட்டாக மட்டுமே உள்ளது. எனவே, நமது மின்சாரப் பற்றாக்குறை 639 மெகாவாட்டாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவில் மின் உற்பத்தியைப் பெருக்காவிட்டால், 1978-79-ல் நமது மின்சாரப் பற்றாக்குறை 2189 மெகாவாட்டாக உயர்ந்துவிடும் என்று ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டு திட்டத்தில் மின் சக்திக்கென 326 கோடி ரூபாய் செலவிட அரசு கருதியுள்ளது. இதில் மின் சக்தி உற்பத்தி செய்வதற்கு 180 கோடி ரூபாய் செலவிடவும், உற்பத்தி செய்த மின்சாரத்தைப் பல இடங்களுக்கும் கொண்டு செல்லும் அமைப்புகளுக்காக 90 கோடி ரூபாயும், கிராமப் பகுதிகளில் மின்னொளி வழங்க 50 கோடி ரூபாயும் செலவிடப்பட இருக்கிறது.

எல்லாவிதமான தண்ணீர் நிலைகளில் மின்சாரம் உற்பத்தி செய்வதோடு மட்டுமில்லாமல், இன்றையதினம் தூத்துக்குடி அனல் மின் திட்டம், மேட்டூர் அனல் மின் திட்டம் ஆகியவற்றையும் நிறைவேற்ற அரசு மத்திய அரசின் அனுமதியை நாடியுள்ளது. அதற்கு மத்திய அரசு தூத்துக்குடி அனல் மின் திட்டத்திற்கு மட்டும் ஒப்புக்கொண்டது. அதன் பலனாக 400 மெகாவாட் மின்சாரம் மேலும் கிடைக்கும். இன்னும் மேட்டூர் அனல் மின் திட்டத்தை ஒப்புதல் அளிக்கவில்லை. இன்னும் வேறு பல திட்டங்களையும் போட்டு இருக்கிறோம். மத்திய அரசின் ஒப்புதல் அவற்றிற்கு வரவில்லை.

இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டால் கூட, இந்த ஐந்தாவது திட்டக்காலத்தின் இறுதியில் 1185 மெகாவாட் மின் சக்தி பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. இதற்காகத்தான் ஒவ்வொரு முறையில் இந்த சட்ட மன்றத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழில் அமைச்சர் அவர்களும் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் கட்டும் வேலையை உடனடியாகத் துவங்குங்கள், அதனால் 1,000 மெகாவாட் மின் உற்பத்தி பெருகும் என்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பல முறை எடுத்துக்கூறியும்,

[திரு. நா. வீராசாமி] [1974 சனவரி 19

அடிக்கடி 'கடிதம்' எழுதியும் இன்னும் அதற்கு அனுமதியை மத்திய அரசு தரவில்லை. இதையெல்லாம் ஆளுநர் உரையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

அதோடு மட்டுமல்ல, இந்த கல்பாக்கம் திட்டம் 1970-71-ம் ஆண்டில் நிறைவேற்றப்படவேண்டிய திட்டம். இன்றைக்குள்ள சூழ்நிலையில் 1978-79-ல் தான் அந்தத் திட்டம் பூர்த்தியாகும் என்று சொல்கிறார்கள். இப்படிச் சிக்கல்கள் இருக்கிற நேரத்தில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மின் வளத்தைப் பெருக்குவதற்கு 'மேலமலைத்தொடர்ச்சி மேம்பாட்டுக் கழகம்' என்ற ஒன்றை அமைக்க வேண்டுமென்று ஆலோசனை கூறினார்கள். அதை மத்திய அரசு இன்றையதினம் ஏற்று, அதற்காக மத்திய திட்ட ஆணைக் குழுவின் துணைத்தலைவர் அண்மையில் ஒரு கூட்டம் கூட்டினார்கள். அக் கூட்டத்தின் பேச்சுவார்த்தைகள் நல்ல பயன் அளிக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இவைகளெல்லாம் செய்தால் நம்முடைய மின் பற்றாக்குறை ஓரளவிற்குக் குறையும் என்று எதிர் பார்க்கலாம்.

இந்த நாட்டில் மின்சாரத்தை மூன்று வழிகளில் தான் உற்பத்தி செய்ய முடியும். நீர் மின்சாரம், அனல் மின்சாரம், 'அடாமிக் பவர் ஸ்டேஷன்' இப்போதுள்ள நிலைமையில் 1 யூனிட் மின்சாரம் தயாரிப்பதற்கு 16 காசு செலவழிக்கப்படுகிறது. 16 காசு செலவழித்து மின்சாரம் உற்பத்தி செய்து விட்டு, 11 பைசாவுக்கு விவசாயிகளுக்கு மின்சாரம் அளிக்கப்படுகிறது. இதனால் ஏகப்பட்ட நஷ்டத்தை அரசு தாங்கவேண்டியிருக்கிறது.

இப்போதுள்ள சூழ்நிலையில் நிலக்கரி இல்லை, எண்ணெய் தட்டுப்பாடு இருக்கிறது என்று சொல்கிறோம். விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போகின்றன. இப்போதுள்ள நிலக்கரியும், எண்ணெயும் எத்தனை ஆண்டுகளுக்கு கிடைக்கும் என்று ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள். அதிக பட்சம் போனால் 80 ஆண்டுகளுக்குத்தான் நிலக்கரி கிடைக்கும், எண்ணெய் கிடைக்கும் என்று மெயில் பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அதற்குப்பின்னாலே அனல் மின்சார நிலையங்களையும், மற்ற நிலையங்களையும் தான் நாம் எதிர்பார்த்து நிற்க வேண்டியிருக்கும் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இப்போதிருந்தே மின்சாரத்தை அதிக



1974 சனவரி 19] [திரு. நா. வீராசாமி]

அளவில் உற்பத்தி செய்ய வேறு வகையான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது (கௌ-டங்) மாட்டுச்சாணத்திலிருந்து மின்சாரம் உற்பத்திசெய்யலாம் என்று சொல்கிறார்கள். கிட்டத்தட்ட ரூ. 5 லட்சம் செலவு செய்தால் அந்த முயற்சியில் வெற்றியடையலாம் என்று சொல்கிறார்கள். இப்போது ஒவ்வொரு விவசாயியும் 10-15 மாடு வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படி சாணத்திலிருந்து மின் உற்பத்தி செய்ய முடியும் என்றால் உள்ளபடியே 15 சதவீதம் மின்சாரத்தை நாம் ஈடு செய்ய முடியும். விவசாயிக்கும் செலவில்லை ஆகவே, அந்த வகையில் அரசு இதைப்பற்றி ஆராய தேவையானவற்றை செலவிட முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நாம் குடி தண்ணீர்த் திட்டத்திற்காக எவ்வளவு கவனம் செலுத்துகிறோம் என்று பார்த்தால், தமிழ்நாட்டில் 2 மாநகராட்சிகள் தான் உள்ளன. அதில் சென்னை நகரத்தில் 30 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்காக வீராணம் திட்டம் குறித்த பணி நடைபெற்று வருகிறது.

அதன் மூலம் நாளொன்றுக்கு 4 கோடி காலன் நீர் கிடைக்கும். 1975-ல் இத்திட்டம் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, என்ற செய்தி மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், 99 நகராட்சிகள், 13 நகரியங்கள், 626 பேரூராட்சிகள் ஆகியவற்றில் 87 நகராட்சிகள், 8 நகரியங்கள், 71 பேரூராட்சிகள் ஆகியவற்றில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. மூன்று நகராட்சிகள், 37 பேரூராட்சிகள் ஆகியவற்றில் நீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவைகளுக்காக குடிநீர் வாரியம் அமைத்து.

(முற்பகல் 10-30)

இப்படி மிக அதிகமான அளவில் குடி தண்ணீருக்காக அரசு செலவழித்துவருவதோடு மட்டுமல்லாமல், கிராமங்களிலே 72,600 கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. 5,700 மேல் நிலை நீர்த் தொட்டிகளும் அமைத்ததற்குப் பின்னாலே, இன்னும் கோவை போன்ற நகரங்களிலே கவனம் செலுத்திவருகிறோம். எத்தனை நாட்களாகக் கோவையில் குடிநீர்ப் பிரச்சனை இருந்து கொண்டிருக்கிறது? எங்கே சிறுவாணித் தண்ணீர் என்று கேட்டுக்

கொண்டிருந்த மக்களுக்கு சிறுவாணித் தண்ணீர் ஜூன் மாதத்தில் கிடைத்துவிடும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை மட்டும் அல்ல, நாள் ஒன்றுக்கு 235 லட்சம் காலன் தண்ணீர் கோவை மக்களுக்குக் கிடைக்க இருக்கிறது என்பதையும் இங்கே பார்க்கிறோம்.

அடுத்து, உணவுப் பிரச்சினையை எடுத்துக் கொண்டோமானால், உள்ளபடியே நான் கேட்கிறேன். இந்தியாவிலேயே தலை நிமிர்ந்து மிகப் பெருமிதத்தோடு பெருமைப்பட்டுக் கொள்ளத்தக்க ஒரு மாநிலம் இருக்கிறது என்று சொன்னால், அது தமிழ்நாடுதான்.

கேரளாவில் அரிசி கிடைப்பதில்லை, போராட்டம், தொழிலாளர்கள் மீது துப்பாக்கிச் சூடு இப்படி கேரளாவில் நடந்து கொண்டிருக்கிறது, இரண்டு தினங்களாக பத்திரிகையில் பார்த்தால், மராட்டிய மாநிலத்தில் அங்கே பெண்கள் போராட்டம். சட்ட மன்ற உறுப்பினரை தர தர என்று இழுத்துக் கொண்டு போய் அங்கே தாக்குகின்ற சூழ்நிலை. எதற்காக? அரிசி வேண்டும் என்றார்கள். உணவு வேண்டும் என்றார்கள். அதற்காக அங்கே நடைபெறுகின்ற போராட்டங்கள். துப்பாக்கிச் சூடுகள் இவைகளை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அங்கே பிரதமர் போனால், பேச முடியவில்லை, முதல்வர் கொல்லைபுர வழியாக ஓடுகிறார். இப்படி சட்டம் ஒழுங்கு நிலை அங்கே இருக்கிறது, போராட்டம் நடக்கக்கூடிய சூழ்நிலை அங்கே நிலவுகிறது.

அதேபோல் குஜராத் மாநிலத்தில் பஞ்சம், மக்கள் கிளர்ச்சி, துப்பாக்கிச்சூடு 7 பிணங்கள் விழுந்திருக்கின்றன. பலர் சுடப் பட்டிருக்கிறார்கள். இப்படிச் செய்திகள் பத்திரிகைகளில் வந்து நாட்டில் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

அதைப்போலவே உத்திரப்பிரதேசத்தில் பஞ்சம், பஞ்சம் காரணமாக பெண்கள் ஊர்வலம். அலகாபாத்தில் பஞ்சம். இந்தியாவிலே எங்கு பார்த்தாலும் பஞ்சம்.

ஆனால் நாம் ஓரளவுக்கு உணவுப் பிரச்சினையில் தன் நிறைவு பெற்றிருக்கிறோம் என்று சொன்னாலும் கூட விலைவாசி ஏறியிருக் கிறது என்று சொல்கிற எதிர்க்கட்சிக் காரர்கள் உள்ளபடியே சிந்தித்துப் பார்க்க வேண்டும். மராட்டிய மாநிலத்தில் ஒரு படி அரிசி ரூ. 12 என்ற நிலைமை இருக்கிறது. கேரளாவில் ஒரு படி அரிசி ரூ. 7 என்ற நிலைமை இருக்கிறதே?



அப்படித்தான் தமிழ்நாட்டில் இருக்கிறதா?

நான் உள்ளபடியே நண்பர் பழனிசாமி அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவருடைய கட்சித் தலைவர் திரு. தங்கமணி அவர்கள் விலைவாசி ஏறிவிட்டது என்று இங்கே திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். இன்று காலை அவர் கேள்வி நேரத்தில் சொன்னார், அரிசி விலை குறைந்திருக்கிறது, இருந்தாலும் இட்லி விலை குறையவில்லையே என்று கேட்டார். இப்படி உண்மையை ஒத்துக்கொள்கிற சில உறுப்பினர்களும் இருக்கிறார்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை.

தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் இன்னும் விவசாயத்தில் அதிகக் கவனம் செலுத்த முடியும். ஆனால் மத்திய அரசு அதற்கு நம்மோடு ஒத்துழைக்கிறதா என்று கேட்டால், இல்லை. வேளாண்மைத் துறையில் உற்பத்தியைப் பெருக்குவதற்காக புது ரக நெல் வகைகளை நாம் கண்டுபிடித்திருக்கிறோம். ஐ. ஆர். 8, ஐ. ஆர். 20, கருணை, காஞ்சி, போன்ற நெல் வகைகளைக் கண்டுபிடித்திருக் கிறோம். அவைகளுக்கு அடிப்படைத் தேவை உரம். 1973-74-ல் நமக்குத் தேவைப்படுகின்ற உரம் 3,15,000 டன். ஆனால் நமக்குக் கிடைத்திருப்பது 2,30.000 டன் தான். அது மட்டுமல்ல. அப்படிச் செலவு செய்து உருவாக்குகின்ற பயிர்கள் அழிந்து போகின்றன. பயிர்களைப் பூச்சி அடிக்கிறது என்று சொல்கிற நேரத்தில் அந்தப் பூச்சிக் கொல்லி மருந்து இங்கே இல்லை. இதற்கு என்ன காரணம் என்பதை நாம் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும். உரம் அகில இந்தியாவிலும் கிடைக்கவில்லை. அதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்றால், நாப்தா என்ற பொருளை அடிப்படையாக வைத்துத்தான் உரம் தயாரிக்கப்படுகிறது. நாப்தா பெட்ரோலியம் பை-பிராடக்ட். பெட்ரோலியத்தின் நிலைமை இன்று எப்படி இருக்கிறது என்று பார்த்தால், கடந்த ஆண்டு ஒரு பாரல் எண்ணெய் விலை சுமார் 3½ டாலராக இருந்தது.

சமீபத்தில் உலகத்தில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக, கடந்த மாதம் ஒரு பாரல் எண்ணெய் என்ன விலை என்று கேட்டால் 17½ டாலர் என்று சொன்னார்கள். இன்றைய தினம் என்ன விலை என்று கேட்டால் 20 டாலராக உயர்த்திவிட்டார்கள். 6 மாதங்களுக்கு முன்பு 3½ டாலராக இருந்த ஒரு பாரல் எண்ணெயின் விலை இன்று 20 டாலராக உயர்ந்திருக்கிறது. 6 மடங்காக உயர்ந்திருக்கிறது.

[திரு. நா. வீராசாமி] [1974 சனவரி 19

இந்த நேரத்தில் நாட்டினுடைய விவசாயத்துறைக்குத் தேவையான உரப் பிரச்சினைக்கு நாப்தாவை நம்பியிருந்தால், நிச்சயமாக விவசாயிகள் விவசாயத்திற்கு வேண்டிய முழு அளவு உரத்தையும் பெற்று, அதில் முழு வெற்றியைக் காணமுடியாது. ஆகவே, நாப்தாவை அடிப்படையாக வைத்து உரம் தயாரிப்பதற்குப் பதிலாக கால்ஷியம் சைநமைட் (Calcium synamide) என்ற பொருளை அடிப்படையாக வைத்து உரம் தயாரிக்க முடியும் என்று நம்முடைய நாட்டில் இருக்கக்கூடிய கெமிகல் என்ஜினியர்கள் சொல்கிறார்கள். அதை நம்முடைய அமைச்சரவை ஆலோசனை செய்து, அதிலே கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய வேளாண்மைத் துறை வல்லுநர்களால் இன்றைய தினம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற நெல் ரகங்கள் அதிக விளைச்சல் தரவேண்டுமானால், அதிக உரம் போட்டால்தான் அமோக விளைச்சல் கிடைக்கும். உரம் பற்றாக்குறையாக இருப்பதால், அதிக உரம் போடாமல் எப்படி அதிக நெல் விளைவிப்பது என்பதை ஆராய்ச்சி செய்ய நம்முடைய வேளாண்மைத் துறை வல்லுநர்கள் முயற்சி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றி பேசப்படுகிறது. நம்முடைய அரசு அதற்காக என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்று பார்த்தால், "TIDCO" தமிழ்நாடு இண்டஸ்டிரியல் டெவலப்மெண்டு கார்ப்பரேஷன் என்ற ஒரு அமைப்பை நிறுவி, அதன் மூலம், நடைபெறப் போகிற ஆண்டில் சிமெண்டு தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்கு 14 கோடி ரூபாய் அளவில் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஏற்கனவே 4 லட்சம் டன் உற்பத்தி ஆகிக்கொண்டிருந்த சிமெண்டுக்குப் பதிலாக 7 லட்சம் டன் உற்பத்தியை அதிகரிப்பதற்கு நாம் திட்டம் தீட்டியிருக்கிறோம். அரக்கோணத்திலுள்ள தொடர் வார்ப்படத் தொழில் நிறுவனத்தின் மூலதனத்தை ரூ. 5.6 கோடியாக உயர்த்தியிருக்கிறோம். 1974 ஜூன் திங்களில் 1,100 டன் அமோனியா, 1,600 டன் யூரியா உற்பத்தித் திறன் கொண்ட மாபெரும் உர ஆலையை தூத்துக்குடிக்கு அருகில் அமைக்கும் திட்டத்தை தீட்டியிருக்கிறோம். ஒரு பெரிய உரத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு மத்திய அரசை அனுமதி கேட்டி-



1974 சனவரி 19] [திரு. நா. வீராசாமி]

ருக்கிறோம். இது அல்லாமல், டயர் தொழிற்சாலை, டெலிவிஷன், சோடியம் ஹைட்ரோஸல்ஃபைட்டு, போராக்ஸ், சோடா ஆஷ், உப்பு, மருந்துப் பொருட்கள் ஆகிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு திட்டங்கள் தீட்டியிருக்கிறோம். இந்த டிட்கோ அல்லாமல், சிப்காட் என்ற நிறுவனத்தை உருவாக்கி அதன் மூலம் ராணிப்பேட்டை போன்ற இடங்களில் 10 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கப்பட்டு தரிசாக இருந்த, எதற்கும் பயன்படாமல் இருந்த நிலங்களில் தொழிற்பேட்டைகளை உருவாக்கி, அதற்காக ரூ. 37 கோடியை அந்தத் துறையில் மூலதனம் செய்து, ஏறக்குறைய 20, 25 தொழிற்சாலைகள் வருவதற்கும் ஏறக்குறைய மூன்று ஆண்டு காலத்திற்குள்ளாக ரூ. 80 கோடி மூலதனம் செய்யக் கூடிய ஒரு தொழிற்பேட்டையை உருவாக்குவதற்கும் நம்முடைய அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

61635

அதுமட்டுமல்லாமல் புதியதாக 8 சர்க்கரை ஆலைகளை இந்த ஆண்டில் நாம் நிறுவ இருக்கிறோம். உள்ளபடியே 8 சர்க்கரை ஆலைகள் என்று சொல்கின்ற நேரத்தில் நம் தொழில் அமைச்சர் அவர்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தியாவிலேயே சர்க்கரை ஆலைகளை உருவாக்குவதற்கு நம்முடைய நாட்டின் சீதோஷண நிலைதான் மிகப் பொருத்தமானது. வட மாநிலங்களில் ஆண்டு ஒன்றுக்கு 100 நாட்களுக்குத் தான் இந்தத் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. நம்முடைய நாட்டின் சீதோஷ்ண நிலையில் 200 நாட்கள் முதல் 300 நாட்கள் வரையில் சர்க்கரை ஆலைகள் இயங்க முடியும். ஆகவே, 8 தொழிற்சாலைகளை உருவாக்குகிறோம் என்று சொல்கின்ற நேரத்தில், குறைந்தது 20 சர்க்கரை ஆலைகளையாவது தஞ்சை போன்ற மாவட்டங்களில், வட ஆற்காடு மாவட்டத்தில் நீர்வளம் பெருகிக்கொண்டிருக்கின்ற பகுதிகளில்—நாம் நிறைய சர்க்கரை ஆலைகளை—துவக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் பிரச்சினையை எடுத்துக்கொண்டால், திராவிட முன்னேற்றக் கழகம் துவங்கிய காலத்திலிருந்து நடைபெறுகின்ற மாநாடுகளில் தீர்மானங்கள் போட்டுப் போட்டு அலுத்துப்போன பிரச்சினை. மத்திய அரசினுடைய கொள்கையினால் அது இன்று தீராத பிரச்சினையாக இருக்கிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத்

[திரு. நா. வீராசாமி] [1974 சனவரி 19

திட்டத்தில் அதற்காக நாம் ரூ. 18 கோடி ஒதுக்க இருக்கிறோம். கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து தரமான நூல் வழங்குவதற்கும், நியாயமான விலையில் நூல் வழங்குவதற்கும், அதற்கு வேண்டிய உதவிகளை அரசு செய்துகொண்டு வருகிறது. இருந்தாலும் கைத் தறிக்கு என்று சில ரகங்களை ஒதுக்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு நீண்ட நாட்களாக மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. மத்திய அரசு இதுவரையில் அதைப்பற்றி காதில் போட்டுக்கொள்ளவில்லை. இந்த சூழ்நிலையோடுகூட மின்சாரத்தட்டுப்பாடு, பருத்தி விலை உயர்வு ஒரு பக்கம் இருந்தாலும், நெசவாளர்களது துயர் துடைப்பதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து நூலை நாம் விநியோகம் செய்துகொண்டிருக்கிறோம். இப்படியெல்லாம் நாம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு மத்திய அரசு என்ன செய்திருக்கிறது என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மத்திய அரசு என்று சொன்னாலே சில பேருக்கு கோபம் வருகிறது. இந்திய அரசியல் அமைப்பு அப்படியிருக்கிறது. ஒரு மாநில அரசு தன்னிச்சையாக எதையும் செய்துவிட முடியாது. ஆனால், மத்திய அரசாங்கத்தின், "சென்ட்ரலி ஸ்பான்சார்டு இண்டஸ்ட்ரீஸ்" என்று இருக்கின்ற தொழில்கள் உள்ளபடியே தமிழ் நாட்டிலே எவ்வளவு இருக்கின்றன—அதிலே தமிழ்நாடு எவ்வளவு வஞ்சிக்கப்பட்டிருக்கிறது, புறக்கணிக்கப்பட்டிருக்கிறது —என்று பார்த்தால்—நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3,800 கோடி ரூபாய் அளவிலே "சென்ட்ரலி ஸ்பான்சர்டு இண்டஸ்ட்ரீஸ்" உருவாக்கினார்கள் என்றால் அதிலே தமிழ்நாட்டிற்கு ஒரு தொழிற் சாலை உண்டா? இதைச் சொன்னால் மத்திய அரசை குறை கூறலாமா? என்கிறார்கள். அப்படி உருவாக்கும்பொழுது ஏன் தமிழகம் புறக்கணிக்கப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்கக் கூடாதா?

மத்திய அரசு தொழில்கள் ஆரம்பிக்க ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 19.200 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது; நாம் நியாயத்தின் அடிப்படையிலே, உரிமையின் அடிப்படையிலே கேட்டால் 1,600 கோடி ரூபாயாவது நமக்கு ஒதுக்கப்பட வேண்டும். ஆனால், 1973-74 ஆம் ஆண்டிற்கு நமக்கு 40 கோடி



1974 சனவரி 19] [திரு. நா. வீராசாமி]

ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு நியாயமான அளவிலே பார்த்தால் கூட குறைந்தது 125 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்க வேண்டும்; ஆனாலும் கிடைக்கவில்லை.

ஆகவேதான், ஆளுநர் உரையிலே நம்முடைய அரசாங்கத்தின் சார்பிலே மிகத் தெளிவாக சொல்லியிருக்கிறோம், இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுவதை மத்திய அரசு ஸ்பான்சர் செய்யும் தொழிற் சாலையாக ஏற்றுக்கொள்ளவேண்டும், கல்பாக்கம் அணுமின் உற் பத்திச் சாலையை விரிவுபடுத்தவேண்டும், தூத்துக்குடியில் இன்னொரு அணுமின் உற்பத்திச் சாலையை நிறுவவேண்டும, காவிரி கழிமுகப் பகுதியிலும், தமிழ்நாட்டின் கடற் பகுதிகளிலும், எண்ணெய் வளம் குறித்த ஆய்வினை முடுக்கப் படுத்தவேண்டும், சென்னை தூத்துக்குடி ரயில் பாதையை அகலப் பாதையாக மாற்றவேண்டும், சேதுசமுத்திரத் திட்டத்தைச் செயற்படுத்த வேண்டும், சென்னைப் பெருநகரப் பகுதியில் சுரங்க ரயில் ஏற்பாட்டினை நிறுவ வேண்டும், தூத்துக்குடியில் கப்பல் தளம் ஒன்றை அமைக்க வேண்டும், மற்றும் நாட்டுப் பாதுகாப்புத் தொடர்பான தொழிற்சாலைகளை நிறுவவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம்.

இதை எல்லாம் மத்திய அரசாங்கத்தைப் பார்த்துக் கேட்கும் பொழுது நமக்கு என்று சில கடமைகள் இருக்கின்றன. இந்தக் கடமைகளை நாம் நிறைவேற்றுகிறோம் என்ற அடிப்படையிலே கிராம வேலை வாய்ப்புக்கான விரைவுத் திட்டம், இளைஞர் அணித் திட்டம், தொழில் பழகுவோருக்கான பயிற்சி குறித்த சிறப்புத் திட்டம், 'படித்து வேலையற்றிருக்கும் ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம்' உட்பட வேலை வாய்ப்பு குறித்த சிறப்புத் திட்டங்கள் அனைத்தின் மூலமாக ஏறத்தாழ 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதற்கான ஒரு சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.

சிறு பாசனத் திட்டம், வீடுகள் கட்டுதல், சாலைகள் அமைத்தல், சாலை மேம்பாடு போன்ற ஐந்தாண்டுத் திட்டத்தின் வேலைத் திட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட தொழிலாளர் வேலை வாய்ப்பு குறித்த மும்முரத் திட்டங்களையும் பற்றி ஆளுநர் அவர்கள் தம் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

[திரு. நா. வீராசாமி] [1974 சனவரி 19

இவை எல்லாம் போக, கறுப்புப் பணம் இந்த நாட்டிலே நடுத்தர வர்க்கத்தினரை சரியான முறையிலே செயல்பட முடியாமல் செய்கிறது. ஆகவே, வருமான வரிக் கொள்கையை மாற்றி அமைக்க வேண்டுமென்று நமது முதலமைச்சர் அவர்கள் பல முறை சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதோடு வறியவர்கள், வாழ்க்கையில் ஒடுக்கப்பட்டவர்கள், வாழ்வில் வளம்பெற வேண்டுமென்ற கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக, தாழ்த்தப்பட்டோர்களை, பிற்படுத்தப் பட்டவர்களை வாழ்வில் முன்னேறச் செய்யவேண்டுமென்பதற்காக இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 91 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவு செய்து காரியங்கள் ஆற்ற திட்டங்களை நாம் செய்திருக்கிறோம்.

அடுத்து, குடிசை மாற்று வாரியம் அமைத்து குடிசையிலே வாழ்கிறவர்களை கோபுரத்திலே உட்கார வைக்க வேண்டும் என்று நினைத்தோம். எனவே, ஆண்டுதோறும் 3,000 முதல் 4,000 குடியிருப்புகள் கட்டுவதற்கான குடிசை மாற்றுப் பெரும் திட்டம் தந்திருக்கிறோம். இத் திட்டத்தின் கீழ் குடிசை மாற்று வாரியம் சென்னை மாநகரிலே 15,470 குடியிருப்புக் கட்டுமானங்களையும், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சை, கடலூர் முதலிய இடங்களில் 5,000 குடியிருப்புகளையும் கட்டி யிருக்கிறது. இவைகளை எல்லாம் கட்டியிருக்கிறோம் என்று சொன்னாலும் கூட, இன்றைக்கு நமக்கிருக்கும் பொருளாதார வசதியை வைத்து இன்னும் திறமையாக செயல்பட முடிகிறதா என்று பார்த்தால் முடியவில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக மத்திய அரசு இன்றைக்கு நமக்கு ஒதுக்குகின்ற பணத்திலே எவ்வளவு பாரபட்சம் காட்டுகிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். டெல்லி பட்டணத்திலே ஒரு திட்டக் குழுவை வைத்துக் கொண்டார்கள். அது நியாயமாக செயல்படுகிறதா என்று பார்த்தால்—அது எவ்வளவு பாரபட்சமாக நடக்கிறது என்பதற்கு என்னிடத்திலே பல ஆதாரங்கள் இருக்கின்றன. மத்திய அரசு எப்படி மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குகிறது என்பதை நான் முதலிலே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.



1974 சனவரி 19] [திரு. நா. வீராசாமி]

பைனான்ஸ் கமிஷன் மூலம் 'ஸ்டேச்சுடரி கிராண்ட்' சட்டப்படி நமக்கு கிடைக்க வேண்டிய பணம் என்ற அளவிலே அதை கொடுக்கிறார்கள். இது ஒரு பக்கம்; இரண்டாவது, "பிளானிங் கமிஷன்"—திட்டக் குழு கொடுப்பது. இந்தத் திட்டக் குழு இஷ்டப்பட்டால் கொடுக்கும்; தன் விருப்பப்படி கொடுக்கும். அதற்குப் பெயர் "டிஸ்கிரிஷனரி கிராண்ட்". அவர்கள் விரும்பினால் கொடுப்பார்கள். அதில் 70 சதம் கடன், 30 சதம் மானியம். அதைப் போலவே பல்வேறு இலாக்காக்கள் சார்பாக கிடைக்கும் பணம். திட்டக்குழு பற்றி முன்னாள் அமைச்சர் திரு. மொரார்ஜி தேசாய் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். தி. மு. கழகத்தினர் சொன்னால், திட்டக் குழுவைப் பற்றி இப்படி குறை கூறலாமா என்று சொல்லுவார்கள். ஆனால் திரு. மொரார்ஜி தேசாய், மத்திய அரசாங்கத்திலே அமைச்சராக இருந்தவர் சொல்லியிருக் கிறார். அதைப் பற்றி ராஜமன்னார் குழு அறிக்கையிலே தெளி வாக சொல்லியிருக்கிறார்கள்,"

'The Planning Commission is a body without any constitutional or statutory basis. It owes its existence to an executive order of the Union. Thiru Morarji Desai speaking at the Indian Parliamentary Association Symposium on Centre-State Relations held in New Delhi in the 3rd May 1970 has dealt with the question whether the devaluation of plan resources also should be regulated by statute. In that context, he has stated that it is true that in the earlier years, there was not a regular system in this matter and that sometimes favouritism was shown to some people according as the predilections of people lay . . .' என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே இருந்து நமக்கு என்ன தெரிகிறது, மத்திய அரசு 'பேவரிட்டிசம்' காட்டுகிறது. திட்டக் குழு விருப்பப்பட்டவர்களுக்கு கொடுக்கிறது என்று மொரார்ஜி தேசாய், மத்தியிலே அமைச்சராக இருந்தவர், சொல்லுகிறார். ஆகவே, இப்படி இஷ்டப்படி கொடுப்பதற்கு ஒரு தொகை. இது என்ன நியாயம்? என்று கேட்பதற்கு நமக்கு உரிமை இல்லையா?

அதைப்போலவே, திரு. டி. ஆர். காட்கில் என்பவர் சொல்லுகி றார்—இவர் திட்டக் குழுவின் துணைத் தலைவராக இருந்தவர்— திட்டக் குழுவின் பணம், செலவழிக்கப்படுவது எப்படி என்றால் "ஹார்ஸ் டிரேடிங்" மாதிரி என்கிறார். பேரம் அங்கே நடைபெறும். ஹரியானா வந்து உட்காரும்; கேட்கும். கன்னடா

[திரு. நா. வீராசாமி] [1974 சனவரி 19

காட்டுவார்கள். அந்தத் தொகை அவர்களுக்கு கொடுக்கப்படும். தமிழ் நாடு முதலமைச்சர் வருவார்; கண்ஜாடை காட்டப்பட மாட்டாது. உடனே அந்தக் கை சுருங்கிக் கொள்ளும்" என்ற நிலைமையை திட்டக் குழுவின் துணைத் தலைவராக இருந்த காட்கில் சொல்கிறார் என்றால் இந்த நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்பதிலே என்ன தவறு இருக்க முடியும்?

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக மொத்தத் தொகை 51,165 கோடி ரூபாய்; அதைச் செலவு செய்யப் போகிறோம் என்கிறார்கள். இப்பொழுது நாம் ஆளுநர் அவர்களின் உரையின் மீது பேசிக் கொண்டிருக்கிறோம். இன்னும் சில நாட்கள் போனால் பட்ஜெட் மீதும் உரை நிகழ்த்தவிருக்கிறோம். ஆயினும், இன்னும் நமக்கு அதிலே எவ்வளவு பணம் வரப் போகிறது என்பது தெரியாது. ஆனால் 1974-75-க்கு 150 கோடி ரூபாய் கிடைக்கும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால் அந்த நிதி ஒதுக்கீட்டிலே எந்த முறை கையாளப்படுகிறது என்றால், வரம்பு கடந்து செலவு செய்வோருக்கு வெகுமதி அளிப்பது போலவும், சிக்கனமாக நடந்து கொள்வோரைத் தண்டிப்பது என்ற நிலைமையிலே தான் மத்திய அரசு போக்கு இருக்கிறது. மாநிலங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்யப்படுவதற்காக கிடைக்கின்ற மொத்த நிதி வசதி 11,578 கோடி ரூபாய். இதிலே தமிழ் நாட்டிற்கு 626 கோடி ரூபாய் வழங்கப்படும் என்கிறார்கள். மொத்த மத்திய தொகுப்பில் இது எவ்வளவு என்று கேட்டால் 5.4 சதவிகிதம்.

இப்பொழுது பழைய பழமொழி ஒன்று எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு கிடைத்தது 11 சதவிகிதம்; இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு கிடைத்தது 9 சதவிகிதம்; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு கிடைத்தது 7 சதவிகிதம்; நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு கிடைத்தது 5½ சதவிகிதம்; ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே நமக்கு கிடைப்பது 5.4 சதவிகிதம்; கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆகிய கதையை நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் மத்திய அரசாங்கம் திட்டத்தின் பெயராலே தமிழ்நாட்டிற்கு இப்படிப் பட்ட ஓரவஞ்சகம் செய்வது நிச்சயமாக நியாயமில்லை என்பதைச்



1974 சனவரி 19] [திரு. நா. வீராசாமி]

சுட்டிக்காட்டும்பொழுது அவர்கள் சொல்லுகிறார்கள், நிர்வாக அமைப்பு, கல்வி, சுகாதாரம் ஆகிய பணிகளுக்காக நமக்கு மானியம் கிடையாது என்று. ஏன் மானியம் கிடையாது என்றால், கல்விக்காக 100 கோடி ரூபாய் நாம் செலவழிக்கிறோமாம், மருத்துவ துறைக்காக 35 கோடி ரூபாய் செலவழிக்கிறோமாம். நாம் முற்போக்கு மாநிலமாம். ஆண்டுதோறும் கல்விக்காக 100 கோடி ரூபாய் செலவழிக்கிறீர்கள், மருத்துவத் துறையிலே இந்தியாவிலேயே நீங்கள்தான் முதல் இடத்திலே இருக்கிறீர்கள், ஆகவே உங்களுக்கு பணம் இல்லை என்றால், இதிலே என்ன நியாயம் இருக்க முடியும்? நாங்கள் கல்வித் துறைக்கும், மருத்துவத் துறைக்கும் நிறைய செலவு செய்கிறோம் என்றால் நம்முடைய நாட்டு மக்கள் கல்வியறிவு பெறவேண்டும், எதிர்காலத்திலே வளமோடு வாழ வேண்டும் என்பதற்காகத்தான் அக்கரையோடு இவ்வளவு பணத்தைச் செலவழிக்கிறோம். அரசாங்கத்திலே இருக்கிற பணத்தைச் செலவு செய்ய வழி தெரியாமல் கல்விக்காக 100 கோடி ரூபாய் செலவு செய்கிறோம் என்பதல்ல. ஆனால், மத்திய அரசு சொல்லுகிறது, நீங்கள் இப்படி எல்லாம் செலவு செய்கிறீர்கள், எனவே உங்களுக்கு பணம் கிடையாது என்கிறது. நல்ல காரியங்களை மக்களுக்காகச் செய்கிற அரசாங்கத்தை நீ அப்படி செய்யாதே என்று மத்திய அரசாங்கம் மறைமுகமாகச் சொல்லுகிறது என்றுதான் நாம் நினைக்க வேண்டியிருக்கிறது.

அடுத்தது, மத்திய அரசாங்கம் மாநிலங்களுக்கு கடன் கொடுக்கிறது. உள்ளபடியே அது எப்படி கொடுக்கிறது என்றால், ஏதாவது மத்திய அரசாங்கத்திற்கு என்று எங்கிருந்தாவது நிதி வருகிறதா? மத்திய அரசாங்கத்திற்கு என்று வருமானம் இருக்கிறதா? எங்கே இருந்து அதற்கு கடன் கிடைக்கிறது? முதலாவதாக, அதற்கு மக்கள் கொடுக்கிற வரிப் பணம், இரண்டாவதாக மத்திய அரசு நோட்டு அடிக்கிறது—நோட்டடிப்பு. மூன்றாவதாக வெளிநாடுகளில் இருந்து அது வாங்கும் கடன், நான்காவதாக உள் நாட்டிலே அது எழுப்பும் கடன். ஆக, இந்த நான்கு முறையிலே தான் மத்திய அரசுக்கு நிதி கிடைக்கிறது. அதிலிருந்துதான் மாநில அரசுகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். அப்படி கொடுக்கும் பொழுது எந்த முறை கையாளப்படுகிறது? ஏதாவது 'பாலிசி' இருக்கிறதா? 'சயின்டிபிக் அப்ரோச்' இருக்கிறதா என்று கேட்டால், இல்லை.

திருமதி இந்திரா காந்தி அவர்கள் நினைத்தால், ராஜஸ்தான் என்றால் வாரிக் கொடுக்க முடியும், ஹரியான் என்றால் எடுத்துக் கொடுக்க முடியும், உத்திரப் பிரதேசம் என்றால் கொண்டு போங்கள் என்று சொல்ல முடியும். ஆனால் தமிழ்நாடு என்றால், கண்ணை மூடிக்கொள்வார்கள் கைகளை கட்டிக் கொள்வார்கள். அப்படி ஒரு போக்கு, இது நியாயமா என்று நாங்கள் கேட்கிறோம். இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், 1947 ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் தேதி நள்ளிரவு வெள்ளையன் இந்த நாட்டைவிட்டு வெளியேறினான். அன்றைக்கு இந்தியாவிலே இருக்கும் எல்லா மாநிலங்களும் மத்திய அரசுக்கு எவ்வளவு கடன் கொடுக்க வேண்டியிருந்தது என்று பார்த்தால் 43 கோடியே 97 இலட்சம் ரூபாய். ஆனால், இன்றைய தினம் எல்லா மாநிலங்களும் மத்திய அரசுக்கு தரவேண்டிய கடன் 8,536 கோடி ரூபாய். எங்கே இருந்து மத்திய அரசுக்கு இந்த பணம் வந்தது? ஏதோ மத்திய அரசாங்கம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் தமிழ் நாட்டிற்கு ஏதோ 87 கோடி ரூபாய் சலுகை காட்டியிருக்கிறார்கள் என்பதற்காக ஆளுநர் அவர்கள் மத்திய அரசுக்கு நன்றி தெரிவித் திருக்கிறார்கள். இதைப் பார்த்து நான் வருத்தப்படுகிறேன்.

87 கோடி ரூபாய் மட்டும் தமிழ்நாட்டுக்குக் கடன் சலுகை, அதை வேறுவழியில் ஈடுகட்டிக் கொண்டதற்கு கவர்னர் நன்றி தெரிவித்திருக்கிறார். தமிழ்நாட்டுக்கு மட்டும் அந்தச் சலுகை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. நான் உள்ளபடியே வெட்கப்படுகிறேன். என்னிடத்தில் ஒரு பட்டியல் இருக்கிறது, அந்தப் பட்டியலைப் பார்த்தால் தெரியும்.

நமக்கு சலுகைக் காட்டியதுபோல் ஆந்திரப் பிரதேசம் நமக்கு அண்டை மாநிலம். அவர்களுக்கு 191 கோடி ரூபாய் கடன் சலுகை. அதற்கு அந்தப் பக்கத்தில் உள்ளது அஸ்ஸாம் மாநிலம்—அதற்கு 162 கோடி ரூபாய் சலுகை. பீகார் மாநிலம்—அதற்கு 133 கோடி ரூபாய் சலுகை. ஜம்மு—காஷ்மீர் எவ்வளவு சின்னஞ்சிறிய நாடு—அதற்கு 133 கோடி ரூபாய் சலுகை. கேரளத்திற்கு—நம்மைவிட சின்ன மாநிலம்—109 கோடி ரூபாய் சலுகை. மைசூர் மாநிலத்திற்கு 126 கோடி ரூபாய் கடன் சலுகை. ஒரிசாவுக்கு 157 கோடி ரூபாய் கடன் சலுகை—இராஜஸ்தானுக்கு 258 கோடி ரூபாய் கடன் சலுகை. இப்படி எல்லா மாநிலங்களும் கடன் சலுகை பெற்றிருக்கிற நேரத்தில் தமிழகத்திற்கு மட்டும் அளிக்கப்





பட்டுள்ள கடன் சலுகை 87 கோடி ரூபாய். இதற்காக கவர்னர் நன்றி தெரிவித்திருக்கிறார் என்றால் வெட்கப்பட வேண்டாமா? நான் சொல்வது எல்லாம் தமிழ்நாட்டின் கடன்கள் அனைத்தும் உள்ளபடியே தள்ளப்ப டவேண்டும். அல்லது, அந்தக் கடன்கள் மற்றவழியில் ஈடு செய்யப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தொழிலாளர் பிரச்னை—தொழிலாளர் பிரச்னையில் மத்திய அரசு எப்படி நடந்துகொள்கிறது, மாநில அரசு எப்படி நடந்து கொள்கிறது என்று பார்க்க வேண்டும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள்—இந்த நாட்டில் தொழில் அமைதி ஏற்பட வேண்டுமென்று—அவர்கள் மனப்பூர்வமாக விரும்புவார்கள். "இந்த நாட்டில் தொழில் அமைதி இருக்கக் கூடாது, போராட்டங்கள் நடைபெற வேண்டும், கிளர்ச்சிகள் நடைபெறவேண்டும், துப்பாக்கிச் சூடு நடைபெறவேண்டும், லத்தி சார்ஜ் நடைபெறவேண்டும்", அப்போதுதான் சில தலைவர்களுக்கு நிம்மதியாக இருக்கும். இப்படி சுயநல நோக்கோடு சிலர் அரசியலில் ஒரு சூழ்நிலையை தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். தனியார் துறையாக இருந்தாலும், பொதுத் துறையாக இருந்தாலும் மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருக்க வேண்டியது மத்திய அரசு.

தொழிலாளர்களது பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்பட வேண்டும். இன்றைக்கு ரெயில்வே ஊழியர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்த மாட்டேன், கௌரவம் குறைந்துபோகிறது என்கிறார் மத்திய அமைச்சர் திரு. பாய். இண்டியன் ஏர் லைன்ஸ் போராட்டம் நடத்தினார்கள். 'பேச்சு வார்த்தை இல்லை, கதவு அடைப்புச் செய்வோம்' என்றார்கள். இப்படி இந்த 20-ம் நூற்றாண்டில் ஒரு தனிப்பட்ட தொழில் முதலாளி செய்வதற்கு வெட்கப்படக் கூடிய காரியத்தை மத்திய அரசு செய்வதற்கு சிறிதும் தயக்கம் காட்டவில்லை. எல்.ஐ.சி. ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்யவில்லை. சம்பள உயர்வு வேண்டும் என்பதற்காக அவர்கள் சில கோரிக்கைகளை வைத்தார்கள். போராட்டம் கூட நடத்தவில்லை. அவர்களோடு

பேச்சுவார்த்தை நடத்தி பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க முன் வருவதற்குப் பதிலாக கதவு அடைப்பு செய்கிறோம் என்று செய்து காட்டினார்கள்.

நமது தமிழகத்திலே மின்சார வாரியத்தில் 5 மாதங்கள் வரை பில்கள் தயாரிக்கப்படாமல் தாமதமாயிற்று. அங்கே தொழிலாளர்களை பழிவாங்க கதவு அடைப்புச் செய்தோமா? இந்த அரசு தமிழ் நாட்டில் எங்காவது கதவு அடைப்பு செய்வதை ஊக்கப்படுத்தியது உண்டா? இந்திய துணைக்கண்டத்திலேயே தொழிலாளர்களது பிரச்சினையில் அதிக கவனம் செலுத்துவதும், அவர்களுடைய பிரச்சினைகளை சுமுகமாகப் பேசித் தீர்ப்பதற்கு முயன்று வருவதும் நம்முடைய தமிழக அரசுதான். தொழிலாளர்களது கோரிக்கைகளை பரிவுடன் கவனிப்பதில்தான் நம்முடைய தொழில் உற்பத்தி, தொழில் அமைதி, தொழில் வளர்ச்சி லட்சியங்களின் வெற்றி அடங்கியிருக்கிறது என்கிற அடிப்படையில் நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலேயே ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் இருப்பதை ஏற்றுக்கொள்கிறீர்களா என்று எல்லோரையும் பார்த்து கேட்டார். எந்தக் கட்சித் தலைவராவது ஒத்துக் கொள்வதாகச் சொன்னாரா? ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று இருந்தால் தொழில் துறையில் அமைதி ஏற்படாதா என்று நான் கேட்கவிரும்புகிறேன்.

போக்குவரத்துத் துறையில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன் இன்று ஊக்க போனஸ் கொடுக்கிறார்கள், கலெக்ஷன் போனஸ் கொடுக்கிறார்கள், குடும்ப நலநிதி பாமிலி பென்ஷன் போன்றவைகளை கொடுக்கிறார்கள். இந்திய துணைக் கண்டத்தில்—கோளாவை உள்ளிட்டுக் கேட்கிறேன் இன்டஸ்ட்ரியல் வொர்க்கர்சுக்கு எங்காவது குடும்ப பென்ஷன் கொடுக்கிற திட்டம் இருக்கிறதா? அப்படிப்பட்ட புரட்சிகரமான திட்டங்களை எல்லாம் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் தான் நாம் உண்டாக்கி இருக்கிறோம்.

இறுதியாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். இலங்கைச் சம்பவம் பற்றி நமது மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் நேற்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நமது உடன்பிறப்புகள், அண்ணன் தம்பிகள் இங்கே வாழ வழியில்லாமல் இலங்கைக்குச் சென்றுவிட்டவர்கள் கிட்டத்தட்ட இருபது முப்பது ஆண்டு





களுக்கு மேலாகவே அங்கேயே தங்கி தங்கள் கடின உழைப்பால் காடுகளை எல்லாம் கழனிகளாக்கி அங்கே தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள்—மத்திய அரசு மாநில அரசைக் கலந்துகொள்ளாமலேயே செய்துகொண்ட ஒப்பந்தம் காரணமாக அந்த நாட்டைவிட்டு இன்று இங்கே வர இருப்பவர்கள் 57 ஆயிரம் குடும்பங்கள். இப்படி அடுத்த ஐந்தாண்டுகளில் வர இருக்கிற 57 ஆயிரம் குடும்பங்களின் பொறுப்பையும் தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று மத்திய சர்க்கார் உத்தரவிடுகிறது. நாம் எல்லாம் ஜனகணமன பாடுகிறோம். நாம் எல்லாம் தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிப் பேசுகிறோம். அப்படி இருக்கிறபோது இப்படி தாயகம் திரும்ப இருக்கிற அகதிகளின் பொறுப்பை காஷ்மீர் முதல் குமரி வரையில் இருக்கக் கூடிய அத்தனை மாநிலங்களும் ஏற்கக்கூடிய வகையில்—மத்திய அரசே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இலங்கையில் 40 லட்சம் மக்கள் தமிழர்கள் வாழ்கிறார்கள். தாயகம் திரும்புகிற 5 லட்சம் போக அவர்களில் மீதி இருக்கிற 35 லட்சம் மக்களுடைய வாழ்க்கை எப்படி இருக்கிறது? எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் அடிக்கப்படுகிறார்கள். துன்புறுத்தப்படுகிறார்கள். கைகால்கள் வெட்டப்படுகிறார்கள். தமிழ்ப் பெண்கள் அவமானப்படுத்தப்படுகிறார்கள். அங்கே உலகத் தமிழ் மாநாடு நடக்கிறது. தமிழர்களை அங்கே சுட்டுத் தள்ளு கிறார்கள். இன்று வரை அதைக் கண்டிக்க இந்திய அரசினால் முடியவில்லை; உள்ளபடியே அதுபற்றி நமது முதல்வர் தெரிவித்த கருத்தை நான் ஆதரிப்பதோடு சமீபத்தில் இலங்கைப் பிரதமர் இங்கே வர இருக்கிறபோது நமது இந்தியப் பிரதமர் அதுபற்றிய பேச்சுவார்த்தை நடத்தி ஒரு உடன்பாடு காணும் முயற்சியை எடுத்துக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

இந்தப் பிரச்சினைகளை எல்லாம் ஆளுநர் அவர்கள் உரையில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். என்றாலும் அவரது உரை சில பேருக்கு வானொலி அறிக்கையாக இருக்கலாம். சில பேருக்கு உப்பு சப்பு இல்லாமல் இருக்கலாம். அவர்களுக்கு உப்பு சப்பில் அவ்வளவு ஆசை இருக்கக்கூடும். ஆனால் இந்த அரசாங்கத்தைவிட தொழிலாளர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பின் தங்கியவர் களுக்கு, தொழில்துறை வளர்ச்சிக்கு நல்லபல திட்டங்களை தீட்டத்

கூடிய வேறு ஒரு அரசு உருவாகப் போவதில்லை. அப்படிப்பட்ட அரசு உருவாகியிருக்கிற இந்த நேரத்தில் இன்னும் நல்லபல திட்டங்களை நிறைவேற்ற, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, விலைவாசி உயர்வைத் தடுக்க மாநில சுயாட்சி கிடைத்தால் தான் முடியும். அந்த மாநில சுயாட்சி கிடைக்க இங்கிருக்கிற எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டு, ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வர சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஓ. என். சுந்தரம்:** சபாநாயகர் அவர்களே, மேன்மை தங்கிய ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு நான் எங்கள் கட்சியின் சார்பாக சில திருத்தங்களைக் கொண்டுவர விரும்புகிறேன்.

அந்த வகையில் ஆளுநர் அறிக்கையின்மீது பேசும்முன்னால், மறைந்துவிட்ட பெரியார் ஈ.வே.ரா. அவர்களுக்கு அஞ்சலி செலுத்தி, அனைத்துக் கட்சித் தலைவர்களும் பல்வேறு முறையில் தங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அதோடு ஒன்றை நான் சேர்த்துக் குறிப்பிட விரும்புகிறேன். மறைந்துவிட்ட பெரியார் அவர்கள் தாம் கொண்ட கொள்கையில் உறுதிகொண்டவர் என்பது மட்டுமல்ல. அவர் ஆட்சியைப் பற்றிச் சிந்திக்காமல், சட்டங்களைப் பற்றிக் கவலைப்படாமல் தான் எடுத்துக்கொண்ட கொள்கைகளுக்காக இறுதிவரைப் போராடியவர்.

ஆனால், இன்றைக்கு அப்படிப்பட்ட பெரியாரின் வழி வந்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு ஆட்சியில் உள்ளவர்கள் அப்படி நடக்கின்றார்களா என்று பார்க்க வேண்டும். சாதாரணமாக ஆட்சிக்கு இவர்கள் வருவதற்கு—1967-க்கு முன்னதாக கவர்னரைப் பற்றி—ஆட்டுக்குத் தாடி, நாட்டுக்குக் கவர்னர் என்பதாக கேலியும், கிண்டலும் பேசி கவர்னர் உரையையே புறக்கணிக்க வேண்டுமென்று சொன்னவர்கள் இன்றைக்கு சம்பிரதாயங்களையும், சட்டங்களையும் வைத்து அலங்காரமான முறையில் கவர்னர் உரையை வாசிக்க வைத்தார்கள்.





இந்த கவர்னர் உரையின்மீது நான் பேசுவதற்கு முன்னதாக, பொதுவாகச் சொல்கிறபோது, அவரது அறிக்கையிலே நாட்டிலே மாணவர்கள் மத்தியில் உள்ள அமைதியின்மை, தொழிலாளர்கள் மத்தியில் உள்ள கொந்தளிப்பு, நெசவாளர்களிடையே உள்ள பரிதவிப்பு, படித்தவர்களிடையே கடுமையான வேலையில்லாத் திண்டாட்டம், கொடூரமான விலைவாசி உயர்வு இப்படிப்பட்ட பிரச்சினைகளுக்கான உடனடித் தீர்வுக்கான திட்டங்களை சரிவர வகுத்துக்கொடுப்பதற்கு மாறாக, இன்றைக்கு சொர்க்கத்தில் சொக்கட்டான் ஆடுவதற்கு வழிகளைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மிக வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11.00]

அது மட்டுமல்ல, ஆளுநர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையிலே சென்ற ஆண்டு சொல்லப்பட்ட திட்டங்கள் இன்று வரை நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா, எந்த அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, அல்லது அவற்றினுடைய புரோகிரஸ் என்ன என்பதையெல்லாம் சொல்லாமல் விட்டுவிட்டு, மீண்டும் அதை சிட்டங்களை இப்பொழுது வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, குறிப்பாக இந்த ஆண்டிலே பல பிரச்சினைகளில் மத்திய சர்க்கார் மீது குறை சொல்லியும், திசை திருப்பியும் மாநில சர்க்கார் தன்னால் எதும் செய்ய முடியாது, மத்திய சர்க்கார்தான் இவற்றையெல்லாம் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கை கழுவி விட்டுவிட்டிருக்கிறார்கள் என்பதையும் இங்கே நான் வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

குறிப்பாக, ஆளுநர் அறிக்கையிலே சொல்லக்கூடிய திருத்தங்களிலே, முதலாவதாக, இங்கே இந்தச் சட்டமன்றத்திற்கே நன்றாக தெரியும், மாணவர்கள் மத்தியிலே பாளையங்கோட்டை, திருச்சி நீதி விசாரணைக்குப் பின்னதாக, ஏற்பட்ட தீர்ப்பின் விளைவாக, திராவிட முன்னேற்றக் கழக முதல்வர் ராஜினாமா செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்தி இங்கே இரண்டு மாதகாலமாக, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் மாணவர்கள் ஸ்டிரைக் நடத்தினார்கள். ஆனால், அதற்குப் பின்பாக, அப்படிப்பட்ட நிலைமைகளிலே, அவர்கள் படிப்பிலே கவனம் செலுத்த

[திரு. ஓ. என். சுந்தரம்] [1974 சனவரி 19

வேண்டுமென்று அனைத்துக் கட்சிகளும் கூடிப் பேசி, இப்படி பள்ளிக்கூடங்களிலே ஸ்டிரைக் செய்வதை விட்டுவிட்டு, அவரவர்கள் பள்ளிகளிலே படித்து முன்னேற வேண்டுமென்ற நிலையிலே, இன்றைக்கு அவர்கள் பள்ளிக்குப் போய் கொண்டிருக்கிறார்கள் என்பதும் நமக்குத் தெரியும். அவர்களுடைய பிரச்னை அப்படியே இருந்தாலும் கூட, அன்றைக்கு அவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள், ஜோடிக்கப்பட்ட வழக்குகள் இன்றுவரை வாபஸ் செய்யப்படவில்லையென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட வழக்குகளை எந்தவிதமான நியந்தனையும் இல்லாமல் இன்று நல்லதொரு சூழ்நிலையிலே, பள்ளிகளுக்கு, கல்லூரிகளுக்கு மாணவர்கள் தொடர்ந்து செல்லக்கூடிய அளவுக்கு, அவர்கள் படித்து முன்னேறக் கூடிய அளவுக்கு வழக்குகளை எந்தவிதமான நிபந்தனையுமின்றி தமிழக அரசு வாபஸ் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அப்படிப்பட்ட அவசியமான பிரச்னைகளைப் பற்றி கவர்னர் அறிக்கையிலே எதுவும் குறிப்பிடப்படவில்லையென்பதைப் பார்க்கும்போது நான் வருத்தப்படுகிறேன்.

அடுத்தப்படியாக, இன்றைக்கு விலைவாசிகளை எடுத்துக் கொள்ளும்போது, இந்த ஆண்டு விலை குறைந்திருக்கின்றனவா, கூடி இருக்கின்றதா என்பதைப் பார்க்கும்போது, உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். 1973-ம் ஆண்டு இறுதியிலே கடலெண்ணெய் குவிண்டால் ரூ. 640, ரூ. 630 என்று விற்றது. இன்றைக்கு ரூ. 750 என்று மீண்டும் வந்து விட்டது. ஒன்றை மட்டும் தான் உதாரணத்திற்குச் சொல்கிறேன். இப்படி பல்வேறு அவசியமான உணவுப் பண்டங்களின் விலைவாசி ஏறியிருக்கக் கூடிய நேரத்தில், மக்களுக்குச் சரியான விலையில், நியாயமான விலையில், சீரான முறையில், தட்டுப்பாடின்றி பொருள்கள் கிடைக்கக்கூடிய வழிவகைகளை, செய்ய வேண்டிய சீரான நடவடிக்கைகளை கவர்னர் குறிப்பிடாமல், 5 ஆண்டுகளுக்குப் பின்னால் வரப்போகின்றவைகளைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது, இன்றைக்கு மக்கள் படுகின்ற கஷ்டங்களுக்கு எந்த விதமான நிவாரணமும் சுட்டிக்காட்டப்படவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



1974 சனவரி 19] [திரு. ஓ. என். சுந்தரம்]

எனக்கு முன்னால் இங்கே பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். தமிழகத்திலே 8 சர்க்கரை ஆலைகள் வரவிருப்பதாக ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 8 அல்ல, 80 வேண்டுமானாலும் நிறுவுவதற்கு, மத்திய அரசு உதவியைக் கொண்டு நிறுவுவதற்கு முயற்சி எடுக்கிறோம் என்று சொல்லட்டும். ஆனால், அவ்வாறு சொல்லிக்கொண்டு, இங்கு என்ன நிலைமை இருக்கிறது. தமிழர் திருநாள் என்று சொல்லக்கூடிய பொங்கலைக் கொண்டாடுகிறோம். எந்த ஊரிலும், குறிப்பாக எங்கள் ஊரிலே பொங்கலுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட 2 கிலோ சீனி கூடக் கிடைக்கவில்லை. பொங்கலைக் கொண்டாட அதிகப்படியாகக் கொடுக்கவில்லையென்றால்கூட, முன்பு கொடுத்ததைக் கூட கொடுக்காத நிலைமைகள்தான் இருந்தன.

இந்நிலைமைகள்தான் எல்லா இடங்களிலும் இருந்தன. ஓராண்டிற்கு முன்னதாக தட்டுப்பாடின்றி கிடைத்த அத்யாவசியமான உணவுப் பண்டங்கள், ரவை, மைதா, சீனி போன்றவைகள் எல்லாம் மிக உயர்ந்த விலைக்கு அதுவும் வெளியில் கள்ளச் சந்தையில் ரூ. 3-க்கு விற்கிறது, ரூ. 1.20-க்கு விற்கப்பட வேண்டிய பொருள். இந்த சர்க்கார் அதைப்பற்றி சிந்தித்ததா, கவனம் செலுத்தியதா ? அது எல்லோருக்கும் நியாயமாக கிடைக்க வேண்டிய முறைகளை வகுத்ததா என்பதைப் பார்க்கும்போது எந்தவிதமான வழிவகைகளையும் காண முடியவில்லை என்பதை நான் திருத்தமாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, சென்ற ஆண்டிலே இதே ஜனவரி திங்களிலே ஆளுநர் அறிக்கையிலே சொல்கிறபொழுது 1972-வது ஆண்டு என்று நினைக்கிறேன், 1972-வது ஆண்டு ஆளுநர் அறிக்கையிலே சொல்கின்றபொழுது, தமிழகத்திலே உள்ள அத்தனை கிராமங்களிலும் மின் இணைப்பு பூர்த்தி செய்யப்படும், விழா நடத்தப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு 1973-ம் ஆண்டு போய் 1974-லே பேசும்பொழுது தமிழகத்து அனைத்து கிராமங்களிலும் மின்சார வசதி கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றி சொல்லவில்லை. அப்படி சொல்லப்படாதது மட்டுமல்ல, இன்றைக்கு சிவப்புக் கொடியும் காட்டியிருக்கிறார்—15 சதவிகிதம் மின் வெட்டு வரும் என்று சொல்லியிருக்கிறார்.

[திரு. ஓ. என். சுந்தரம்] [1974 சனவரி 19

ஆனால், அதே சமயத்தில் புதிய தொழில்கள் இங்கே துவங்கப்படும். அப்படி துவங்கப்படுகிற புதிய தொழில்களுக்கு மின் சப்ளை கொடுக்க உத்தரவாதம் கொடுக்கப்படுகிறதா என்பதைப் பார்க்கவேண்டும். இப்படி முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களை இந்த ஆளுநர் அறிக்கையிலே சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது ஒரு தடவை தயாரிக்கப்பட்ட அறிக்கையானது ஆண்டுதோறும் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, டையரிகள், காலண்டர்கள், போடப்படுவதைப்போல், வருஷா வருஷம் போடப்படுகிற அறிக்கையோ என்று நான் ஐயப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இங்கே சென்ற ஆண்டு 1973-வது ஆண்டு அறிக்கையிலே சொல்லியிருந்தார் ஆளுநர் அவர்கள், ஏற்கனவே உள்ள நீர் மின் வசதிகளை எல்லாம் நாம் பயன்படுத்திவிட்டோம். கரியிலே இருந்துதான் அப்படிப்பட்ட மின்திட்டங்களைத் தேட வேண்டுமென்று சொன்னார்கள். போர் வெல் போடவேண்டும், ஆர்ட்டீசன் வெல் போடவேண்டும் என்று இப்படிப்பட்ட திட்டங்களைச் சொல்லியிருந்தார்கள். ஆனால், இன்றைக்கும் அதையே திருப்பிச் சொல்கிறார்களே தவிர, சென்ற ஆண்டு சொன்ன அந்தத் திட்டங்கள் என்ன ஆயின? இந்த ஆண்டு தரைமட்ட நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த வழிவகை கூறப்படவில்லை என்று நான் என்னுடைய திருத்தத்திலே சொல்லியிருக்கிறேன்.

அடுத்தபடியாக, சென்ற ஆண்டு, நாங்கள் எங்களுடைய கட்சியின் சார்பாக 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், விவசாயப் பிரச்னை, நெசவாளர் பிரச்னை, போன்றவைகளை வைத்து இந்த அரசுக்கு எதிராக ஓர் அறப்போராட்டத்தை நாங்கள் கோட்டையிலே நடத்தினோம். அப்படி நடத்துகின்றபொழுது இந்தச் சட்டமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தபொழுது, மிகத் தெளிவாக நான் சொன்னேன். மதுவிலக்கைப் பரிபூரணமாக அமுல் செய்ய வேண்டும். அப்படி அமுல் செய்யத் தவறிவிடுவீர்கள் என்று சொன்னால் மிகப் பெரிய போராட்டத்தை லட்சம் பேர் கொண்ட போராட்டத்தைச் சந்திக்க வேண்டிவரும் என்று நான் சொன்னேன். ஆனால் அதற்குப் பின்பு, இறுதியிலே நம்முடைய முதல்வர் அவர்கள் பதில் சொல்லும்போது பரிபூரண மது விலக்கு அமுல் செய்யப்படும், செப்டம்பர் மாதத்திலிருந்து என்று சொன்னார். ஆனால் மீண்டும் சென்ற வருஷம், நிதி அறிக்கை



1974 சனவரி 19] [திரு. ஓ. என். சுந்தரம்]

காரணமாக, மத்திய அரசின் உதவி இல்லாததின் காரணமாக, நாங்கள் சாராயக் கடைகளை மட்டும் மூடுகிறோம், உயர் ரக மது வகைகளை நாங்கள் லைசன்ஸ் கொடுத்த கடைகளிலே விற்கப் போகிறோம், அதன் மூலம் ரூ. 11 கோடி வருமானம் வரும், அப்படிப்பட்ட வருமானத்தை இழக்க நாங்கள் தயாராக இல்லை என்று சொன்னார்கள். ஒரு சமயத்திலே ஒன்றைச் சொல்லிவிட்டு, பிறகு தான் கொண்ட கொள்கைக்கு மாறாக, மீண்டும் அப்படிப்பட்ட பிரச்னைகளைப் பரிசீலிக்க உரிமை, அதிகாரம் அவருக்கு இருந்தாலும் கூட, அப்படிப்பட்ட பிரச்னைகளைப் பரிசீலிக்கும் போது, தான் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்ற முயற்சி செய்யவேண்டும்; செய்யவில்லை.

மீண்டும் இந்த சபையின் மூலமாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன், இந்த மதுவிலக்கு சம்பந்தமாக அவர் சொன்னபடி பரிபூரண மதுவிலக்கை அமுலாக்கத் தவறிவிடுவார்கள் என்று சொன்னால், மீண்டும் அப்படிப்பட்ட ஒரு பெரிய, மிகப் பெரிய, அறப் போராட்டத்தை எங்கள் கட்சியினுடைய சார்பாக, அன்றைக்கு ஒரு லட்சம் பேர் என்று சொன்னோம், இப்பொழுது ஒரு லட்சம் அல்ல, 2½ லட்சம் பேரைக்கொண்டு, மிகப் பெரிய போராட்டத்தை நடத்த எங்களைத் தள்ளி விடாதீர்கள் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றிச் சொல்கிறபோது ஆளுநரின் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள், 5 லட்சம் படித்த பட்டதாரிகள் வேலையில்லாமல் தவிக்கிறார்கள் என்று. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஏற்படுத்தப்படுகின்ற தொழில்கள் மூலமாக, திட்டங்களின் மூலமாக வேலைகள் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். மத்திய அரசினுடைய உதவியைக் கொண்டு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலே வேலைவாய்ப்புக் கிடைக்கச் செய்வதற்கு முன்னதாக இன்றைக்கு நம்முடைய தமிழக அரசு எந்த அளவிற்கு இன்றைக்கு உள்ள பிரச்னையை அணுகி படித்த பட்டதாரிகளுக்கு— இன்றைக்கு ஏகப்பட்ட எஞ்சினியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். எம்ப்ளாயிமெண்ட் எக்ஸ்சேஞ்சிலே நடைபெறுவதைப் பற்றி நான் கேள்விப்படுகிறேன். மூன்று ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் என்று பதிவுசெய்து வைத்துவிட்டு காத்திருக்கின்றவர்

களுக்குக் கிடைப்பதில்லை. அதுமட்டுமல்ல அங்கேயும் கூட கட்சிக் கண்ணோட்டம் ஏற்படுவதாக அறிந்து நான் வருத்தப்படுகிறேன்—வேலையில்லாமல் இருக்கின்றவர்களுக்கு சமவாய்ப்புகள் கொடுத்து தற்காலிகமாக நிவர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று நான் கடுமையாக எச்சரிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** எங்கள் கட்சியில் இன்று ஒருவர்தான். ஆகவே இன்னும் பத்து நிமிடங்கள் கொடுக்கவேண்டும்.

THIRU R. PONNAPPA NADAR : Some more time may be given.

**திரு. ஓ. என். சுந்தரம் :** அடுத்தபடியாக, நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதில் சிரமங்கள் இருக்கின்றன. சரியாக நூல் கிடைப்பதில்லை. பல இடங்களிலே தங்களுடைய கட்சிக்காரர்களுக்கு என்றால் தேவைக்கும் அதிகமாகக்கூட கிடைக்கக்கூடிய அளவில் கார்டுகள் விநியோகிக்கப்படுகின்றன என்பது மட்டுமல்ல, உண்மையான நெசவாளர்களுக்கு கார்டுகள் கிடைப்பதில்லை, கார்டுகள் கிடைத்தாலும் நூல் கிடைப்பதில்லை, நூல் கிடைத்தாலும் வேலை கிடைப்பதில்லை, வேலை கிடைத்தாலும்கூட போதுமான கூலி கிடைப்பதில்லை. இப்படி ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் சின்னாளப்பட்டி, நாகல்நகர், சித்தயன்கோட்டை போன்ற ஊர்களிலே கூலி வேலையை நாடி வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது ; நூல் விநியோக முறையைச் சீராக்கி, சரியான விலையில் நூல் கிடைக்கச் செய்யவேண்டும்.

இன்றைக்கு ஊழல் எங்கே என்று கேட்கிறார்கள். திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில் இருந்த சென்னை மாநகராட்சியில் பல கோடி ரூபாய்க்கு ஊழல்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஏழு வருஷங்களுக்குப் பிறகுதான் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. ஊழல் கண்டுபிடிக்கப்பட்டு துரிதமான நடவடிக்கைகள் எடுப்பதை வரவேற்றாலும்கூட அதை நீட்டிக்கொண்டே அனுமார் வால் போல் நீட்டிக்கொண்டே போய் ஜனநாயக முறைக்குப் புறம்பாக



தேர்தல்களை ஒத்திவைக்கலாம் என்று நினைப்பது சரியல்ல. சம்பந்தப்பட்டவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும் சரி, அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, நடவடிக்கை எடுத்து உரிய பணத்தைக் கைப்பற்றி, ஜப்திசெய்து, அவர்களுக்குத் தண்டனை கொடுத்து தேர்தலை சென்னை மாநகராட்சியில் விரைவாக நடத்தி ஜனநாயகத்தை நிலைநிறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கார்ப்பரேஷனிலே இருந்த ஊழல் கோவாப்பரேஷனுக்கு வந்துவிட்டது என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல கோவாப்ரேடிவ் சொஸைடிகள், ஸ்டோர்கள் போன்றவற்றில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன. உரம் கிராமத்திற்குப் போய்ச் சேருவதற்கு முன்னதாகவேயே நகரங்களிலே விற்க வேண்டிய உரத்தையெல்லாம் மொத்தமாக யாரோ கை மாற்றிக் கொள்கிறார்கள் ; அதே உரம் கிராமத்திலே 156 ரூபாய்க்குத்தான் கிடைக்கிறது. இப்படிப்பட்ட ஊழல்களையும் கண்டுபிடிக்க அரசுக்கு பொறுப்பு உண்டு. திண்டுக்கல் நகரத்திலே அபிராமி சிறப்பு அங்காடியிலே பதினைந்து தினங்களுக்கு முன்னதாக இரவு நேரங்களிலே ஜவுளி பேல்கள் லாரிகளில் கடத்தப்பட்டு அதைத் தொடர்ந்து மோட்டார் வண்டிகள் சென்று கைப்பற்றி வழக்குகள் பதிவு செய்யப்பட்டதைச் செய்தித்தாளில் போட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் யார் என்று கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அபிராமி சிறப்பு அங்காடியை முழு கதவடைப்பு செய்திருக்கிறார்கள். அதனால்தான் சொன்னேன், கார்ப்பரேஷனில் மட்டுமல்ல கோவாப்பரேஷனிலும் ஊழல் இருக்கிறது, அந்தத் துறையும் ஊழலில் சிக்கிக்கொண்டிருக்கிறது என்று. . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** கூட்டுறவுத் துறையிலே ஊழல் என்று சொல்கிறார்கள். எந்த சொஸைடியில் எந்த ஸூப்பர் மார்க்கெட்டில் என்ன நடந்தது என்பதை அவர்கள் குறிப்பாகச் சொல்லவேண்டும்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** நான் மிகத் தெளிவாகச் சொன்னேன். திண்டுக்கல் நகரத்திலே அபிராமி சிறப்பு அங்காடியிலே, 4, 5 ஜவுளி பேல்கள் லாரிகளில் கடத்தப்பட்டு 17-வது மைலில் டாக்ஸியில் சென்று விரட்டிப் பிடித்து ஜவுளி பேல்களைக் கைப்பற்றி

காவல் துறையில் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி அவர்களுக்குள்ளே பிறகு சமரஸம் செய்துகொண்டார்கள், அந்த ஊழல் புகார் வெளியே வந்திருக்கிறது. அதையொட்டி அபிராமி சிறப்பு அங்காடி அன்றைக்கு முதல் இன்றைக்கு வரை கவனமாக மூடப்பட்டிருக்கிறது. . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அது கவனத்திற்கு வந்திருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நிர்வாகம் யாரிடம் இருந்தது என்பது அவருக்குத் தெரியும். அது விசாரணையில் இருக்கிறது, ஆகவே சர்க்கார் நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொல்ல வேண்டாம்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** சர்க்கார் தங்களுடைய கட்சிக்காரர் மானேஜிங் டைரக்டராக இருக்கிறார் என்பதற்காக விட்டுவிடக்கூடாது என்பதை நானும் வற்புறுத்திச் சொல்கிறேன் என்பதைத் தான் சொன்னேன். அதை நான் உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்தபடியாக, தமிழர் நாகரிகத்தைப் பரப்புகிறோம், தமிழர் பண்பாட்டைக் காப்பாற்றுகிறோம் என்று சொல்லி, பண்டைய தமிழர் நாகரிகத்தை உயிர்ப்பிக்கப் போவதாகச் சொல்லிக்கொண்டு மதுரை மாவட்டத்திலே கனம் அமைச்சர் அவர்கள் முன்னிலையில், மாவட்ட கலெக்டர் அவர்கள் முன்னிலையில், மாவட்ட செயலாளர் முன்னிலையில் ஜல்லிக்கட்டு என்று சொல்லப்படுகிற அநாகரீகமான, காட்டுமிராண்டித்தனமான விளையாட்டை ஏற்படுத்தி அதிலே இரண்டு உயிர்கள் கொல்லப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அமைச்சர் முன்னிலையில் நடந்ததாகச் சொன்னார்கள், அப்படியல்ல. தமிழ் நாட்டிலே அதை வீர விளையாட்டு என்று சொல்கிறார்கள், கனம் உறுப்பினருக்கு அதைக் கண்டால் பயமாக இருக்கிறது போலும். நான் போன இடத்தில் ஒன்றும் இல்லை, நான் போய் பார்த்துவிட்டுத்தான் வந்தேன். அவர்கள் சொல்கிற எந்தவிதமான செயலும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த ஜல்லிக்கட்டு சம்பந்தமாக சென்ற வருஷம் வெளிநாட்டிலேயிருந்து வந்த நமது விருந்தினர்களெல்லாம் பயப்பட்டு ஓடியதாகப் பத்திரிகை



யில் பார்த்தோம். இந்த ஆண்டிலே நடந்ததாகக் கூறப்படும் அந்த விளையாட்டில் இரண்டு பேர் உயிர் நீத்ததாகவும், பலர் காயமுற்றதாகவும் 'இந்து' போன்ற பத்திரிகைகளில் நாங்கள் பார்த்தோம். இதைத் தடை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ? அந்த விளையாட்டு தமிழகத்தின் விளையாட்டாக இருந்தாலும், ரோமாபுரியில் க்ளேடியேட்டர் வைத்து விளையாடும் தன்மையை ஞாபகமூட்டுவதாக இருக்கிறது. ஆகவே, அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஜல்லிக்கட்டு தமிழகத்தின் வீர விளையாட்டுக்களில் ஒன்று. அந்த விளையாட்டில் இரண்டு பேர்கள் எதிர்பாராத வகையில் மரணம் அடைத்துவிட்டார்கள் என்று செய்தி வந்தது, அதையடுத்து பல செய்திகளை பத்திரிகையில் நான் பார்த்தேன். சர்க்கஸ் இருக்கிறது, அதிலே பல வீர விளையாட்டுகளைச் செய்கிறார்கள். சில வேளைகளில் தவறி வீழ்ந்து சிலர் இறந்துபோகும் சூழ்நிலை ஏற்படுகிறது. மிருகங்களை வைத்து வீர விளையாட்டுகளை நடத்துகிறார்கள். சர்க்கஸ் டாக்டர் என்ற வரலாற்றுக்கதையைக்கூட சமீபத்தில் நான் பார்த்தேன். திடீரென்று புலி தாக்கி மாணம் அடைந்துவிட்டதாகவும், சர்க்கஸிலே சுற்றி வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர்கள் அதையும் சர்க்கஸ் காட்சி என்று எண்ணிக்கொண்டதாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு ஸ்டண்ட் நடிகர், பெரிய நடிகர் நடித்த படத்தில் இரயிலை நிறுத்துகின்ற காட்சியில் நிஜமாகவே இரயில் ஏறி இறந்து போய்விட்டதாகவும் அறிகிறோம். ஆகவே ஸ்டண்ட் படமே வரக்கூடாது என்று சொல்லிவிட்டால் சிலருடைய வாழ்க்கை கெட்டுவிடும், யாருடைய வாழ்க்கை கெட்டுப்போகும் என்பது உங்களுக்குத் தெரியும்.

சில விளையாட்டுகள், உலகத்தாலே பாராட்டப்படும் விளையாட்டுகள் இதுவரையில் மங்கிக்கிடந்தன. எதிர்காலத்திலே இவைகளுக்கு மகத்துவம் ஏற்பட்டு ஸ்பெயின் நாட்டைப்போல் எதிர்காலத்தில் நாங்கள் பார்க்கும் சூழ்நிலை உருவாக இருக்கிறது. அந்த நிலை கெட்டுப் போகக்கூடாது. ஸ்பெயின் நாட்டில் கூட ஆயுதங்களை வைத்துக்கொண்டு மாடுகளைப் பிடிக்கிறார்கள். ஆனால்

[திரு. க. இராசாராம்] [1974 சனவரி 19

நம் நாட்டில் இந்த வீர விளையாட்டில் எந்த ஆயுதமும் இல்லாமல் விளையாடுகிறார்கள். இம்மாதிரியான விளையாட்டுகள் கெட்டுப் போகாமல் பாதுகாத்துத் தர வேண்டியது எல்லா அரசியல் கட்சிகளின் கடமையாகும். நமக்கெல்லாம் கொஞ்சம் வயதானாலும், வீரமிக்க இளைஞர்களுக்கு வழிகாட்டியாக இருந்து அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த மன்றத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் காட்டுமிராண்டி விளையாட்டு என்று சொல்வது நல்லதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் அந்த வீர விளையாட்டைப்பற்றிப் பேசினார்கள். அது வீர விளையாட்டு என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதில் உயிரிழந்தவர்களுக்கு சுற்றுலா வாரியம் நஷ்ட ஈடு கொடுக்கிறதா என்று தெரிவித்தால் நல்லது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) :** மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்த விளையாட்டை நல்லமுறையில் அறிந்திருப்பார்கள். அது தொன்றுதொட்டு பல இடங்களில் நடைபெறுகிறது. உயிரைப் பணயம் வைத்து அதிலே ஈடுபடுவது வீரமாக நினைக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, இந்த வீர விளையாட்டின் காரணமாக உயிர் துறந்தவர்களுக்கு ஏதாவது நஷ்டஈடு தரப்படுமா என்று கேட்டார்கள். உயிர் துறந்தவர்கள் சம்பந்தமாக மனிதாபிமானத்தோடு அணுகி அவர்களுக்கு நஷ்ட ஈடு தரும் பழக்கத்தை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. ஆகவே, நிச்சயமாக நஷ்டஈடு தரப்படும்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** சபாநாயகரவர்களே, அது வீர விளையாட்டாக இருக்கலாம். ஆனால் காளை சண்டை, நாய் சண்டை, சேவல் சண்டை என்று இப்படி மிருகங்களுக்கு மிருகம் சண்டை விட்டுப் பார்ப்பதுதான் ஒருவகையில் பொருத்தமாக இருக்கும். ஆனால் மிருகங்களோடு மனிதர்களை அனுப்பி நாம் ரிஸ்க் எடுக்கக் கூடாது. இரண்டு பேர் கொல்லப்படுகிறார்கள். 73 பேர்கள் காயப் படுகிறார்கள் என்றால் அந்த விளையாட்டை ஊக்குவிக்க வேண்டாம்.



1974 சனவரி 19] [திரு. ஓ. என். சுந்தரம்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஆனால் அதற்கு மாறாக பண்டைய விளையாட்டுக்களான மல் யுத்தத்தில் ரிஸ்க் குறைவு. அதுமட்டுமல்லாமல் சிலம்பாட்டம் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, மல் யுத்தத்திலும் பல நேரங்களில் பலர் இறந்திருக்கிறார்கள்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** ஆனால் அதில் இவ்வளவு பெரிய ரிஸ்க் இல்லை. அமைச்சரவர்கள் சொன்னார்கள், உறுப்பினர் பயந்துவிட்டு போய்விட்டாரோ என்று. ஏகப்பட்ட ஜல்லிக்கட்டுகளை நான் பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட ஜல்லிக்கட்டுகளில் என்ன முக்கியமான அம்சம் என்றால் மஞ்சு விரட்டு என்று மாடுகளையும், கன்றுகளையும் விரட்டுவார்கள். அதை நூற்றுக்கணக்கான இளம் கன்னியர்கள் வேடிக்கை பார்ப்பார்கள். அவர்கள் எதற்காக வேடிக்கை பார்ப்பார்கள் என்பது உங்களுக்குப் புரியும். அதுதான் விளையாட்டின் முக்கியமான அம்சம். ஆனால் உயிர்களைக் கொல்லுகின்ற இப்படிப்பட்ட விளையாட்டுகளைத் தயவு செய்து ஊக்குவிக்க வேண்டாம். அதற்குப் பதிலாக நான் குறிப்பிட்ட பல்வேறு விளையாட்டுகளை ஊக்குவிக்கலாம் என்று மிகவும் வேண்டி தமிழகத்தின் முதல்வரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே ஆளுநர் அவர்கள் அறிக்கையில் சொல்லும் பொழுது சென்னை-தூத்துக்குடி அகல ரயில் பாதை திட்டத்தை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கொண்டுவர வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். அதே சமயத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கரூர்-திண்டுக்கல்-தூத்துக்குடி அகல ரயில் பாதை சர்வே செய்யப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றைப் பற்றி இந்த அறிக்கையில் சொல்லப்படவில்லை என்பதைப் பார்க்கும்பொழுது அதையும் இந்தத் திருத்தத்தை ஏற்று இந்த தமிழக அரசு ஆளுநர் அவர்களுக்கு ஆலோசனை கூற வேண்டும், 'ஃபர்ஸ்ட் பிரையாரிட்டி' கொடுத்து அந்த 'லிங்கை' முதலிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாகச் சொல்லும்பொழுது, கோவை சிறுவாணி நீர்த் திட்டம் 10 கோடி ரூபாய் செலவிலே ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்க ஒன்று.

*[திரு. ஒ. என். சுந்தரம்] [1974 சனவரி 19*

*ஆனால் அந்தத் திட்டம் எந்த அளவிலே உருப்பெற்றிருக்கிறது, எப்பொழுது துவங்கப்படும், எப்பொழுது முடிவுறும், கோவை மாவட்டத்திற்கு எப்பொழுது தண்ணீர் கிடைக்கும் என்று சொல்லப்படவில்லை. அதையும் தமிழக அரசு விரைவில் அறிவிக்க வேண்டும். ஆனால் இன்றைக்கு மக்கள் நினைக்கும்மாதிரி கோவை தேர்தல் ஸ்டண்டாக, அரசியல் ஆதாயம் தேடுவதற்காக இப்படிப்பட்ட திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்ற பழிச் சொல்லை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாமென்ற சிறு ஆலோசனையைச் சொல்ல விரும்புகிறேன்.*

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:*** *தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் சரியாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லப்படும் பழிச்சொல்லை நீங்கள் ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்று சொன்னார்கள், நிச்சயமாக நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். ஏனென்றால் நம்பூதிரிபாட் அவர்கள் முதலமைச்சராக அங்கு பொறுப்பேற்றிருந்த அப்பொழுதே பேச்சுவார்த்தைகள் தொடங்கி அது தொடர்பாக முடிந்துள்ள ஒப்பந்தம். அப்பொழுது இந்த கோவை தேர்தலுக்கான விமான விபத்து நடைபெறவில்லை.*

***திரு. ஒ. என். சுந்தரம் :*** *கடைசியாக ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் என்னுடைய திருத்தங்களைச் சொல்லியிருக்கிறேன், என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லியிருக்கிறேன் என்று கூறி உரையை நான் முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.*

***திரு. தொ. ப. சீனிவாசன் :*** *மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரையின்மீது நன்றி செலுத்தும் தீர்மானத்திலே என்னுடைய கருத்தை வழங்க முன்வருகிறேன்.*

*கவர்னர் அவர்கள் இந்த மன்றத்திலே உரையைத் துவக்கி வைத்துப் பேசும் முன், தமிழக மக்கள் எந்த நிலையிலே இருக்கிறார்கள், தமிழகத்தின் உணர்ச்சி எந்தச் சூழ்நிலையில் இருக்கிறது, தந்தையை இழந்து தவிக்கும் தமிழக மக்களுக்கு ஒரு ஆறுதலைக்கூறி மற்ற நிலையை அடைய வேண்டுமென்ற முறையிலே உருக்கமாக தந்தை பெரியார் அவர்களுக்கு இரங்கலைச் சொன்ன*



*1974 சனவரி 19] [திரு. தொ. ப. சீனிவாசன்]*

*வாசகங்கள் மிகவும் உருக்கமாக இருந்தன. அதற்காக அவர்கள் ஆற்றிய உரைக்காக நான் இந்தச் சந்தர்ப்பத்திலே நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*தமிழக அரசு எந்த அளவிற்கு ஊக்க உணர்ச்சியோடு தமிழகத்திற்குக் கிடைக்கும் வருவாயைக்கொண்டு செலவிடுகிறது என்ற எண்ணத்தை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஒதுக்கப்படும் 1,200 கோடி ரூபாயை . எந்த முறையிலே தேவையை உணர்ந்து செலவழிக்க வேண்டுமென்ற முறையிலே ஆரம்பத்தில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். தமிழ்நாடு மிகவும் அக்கறையோடு உணவுப் பிரச்னையை அணுக வேண்டியிருக்கிறது. கலைஞர் அவர்கள் அப்படி அக்கறையோடு அணுகியதால் இன்றைக்கு அகில இந்தியாவுமே தமிழ்நாட்டு முதல்வரை மனதாரப் பாராட்டுகிறது.*

*மாற்றுக்கருத்து உள்ளவர்கள் எங்கு எந்த நிலையிலே பேசினாலும், சாதாரண மக்களுக்காக தன்னிறைவு பெற்ற நிலைமையைப் பாராட்டுகிறார்கள். அதற்காக இன்றையதினம் அத்தியாவசியமான நிலையை மின்சார அமைப்பு அடைந்துவிட்டது. மின்சார அமைப்பினுடைய அருமை பெருமைகளை கடந்த ஆண்டு தமிழ்நாடே உணர்ந்துவிட்டது. அந்த நிலையைத்தான், கவர்னர் அவர்கள் மின்சார அமைப்புக்காக 326 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.*

*(முற்பகல் 11.30)*

*அடுத்தாற்போல் பாசனத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 129 கோடி என்றும், குடிதண்ணீர்த் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை 93 கோடி ரூபாய் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையெல்லாம் பாராட்டுகின்ற நோக்கில் ஒருசில குறைபாடுகளையும் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.*

*மின்சார விஸ்தரிப்புகள் பத்து பதினைந்து ஆண்டு காலத்திற்கு முன்பாகவே நடந்து வருகின்றன. விவசாயிகள் மின்சாரத்தை அணுகாத நோக்கிலேயே மின்சாரக் கம்பிகளை அந்தப் பகுதிகளுக்கெல்லாம் நீட்டியிருக்கிறார்கள். இப்போது எல்லா விவசாயிகளுக்கும் அவர்களுடைய பம்ப் செட்டுகளுக்கு மின்சார*

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1974 சனவரி 19

இணைப்பைக் கொடுக்கக் கூடிய நிலை வந்த பிறகும் அந்தப் பழைய கம்பிகளை மாற்றாத காரணத்தால், கடந்த ஆண்டு குறைந்த அளவு மின்சாரம் கொடுத்த நேரத்தில் பல விவசாயிகளுடைய மோட்டார்கள் எரிந்துவிட்டன. அந்த நிலையில் அதிகாரிகளை அழைத்துச் சென்று நிலைமையைக் காட்டிய பிறகு உடனடியாக அதற்கான பரிகாரம் தேட ஒப்புக் கொண்டார்கள். என்னுடைய போளூர் தொகுதியில் அதிகாரிகள் இந்த நிலைமையைப் பார்வையிட்டுவிட்டு உடனடியாகப் பரிகாரம் செய்வதாகக் கூறியும் இன்னும் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது என்பதனைக் கூற மிகவும் வேதனை அடைகிறேன்.

பாசன வசதி பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் அக்கறை எடுத்துக் கொண்டால் குறைந்த செலவில் பெரும் பலன் தரக் கூடிய பல வேலைகளை எடுத்து நிறைவேற்றியிருக்க முடியும். கடந்த 20 ஆண்டுகளாக அத்தகைய திட்டங்களை எடுத்துக் கொள்ளவில்லை. குறிப்பாக போளூர், மற்றும் மூன்று ஏரிகள் இருக்கின்றன. அவற்றிலே தண்ணீர் இருந்தால் 2,000 ஏக்கர் பாசன வசதி பெற முடியும். ரூ. 47,000 செலவு செய்து ஆற்றிலிருந்து தண்ணீர் வரக்கூடிய வகையில் வாய்க்காலைச் சரியாகக் கட்டினால் அந்த நிலங்கள் எல்லாம் பாசன வசதி பெற முடியும். அதிகாரிகள் அந்த வேலையை மேற்கொண்ட பிறகு ஓரளவு ஏரிக்குத் தண்ணீர் வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுபோன்ற பல வேலைகள் குறைந்த செலவில் நிறைவேற்றக் கூடியவை இருக்கின்றன. அவற்றையெல்லாம் எடுத்துச் செய்ய அதிகாரிகளும், அரசும் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது அத்தகைய வேலைகளை மேற்கொண்டிருப்பதற்காக அரசையும், அதிகாரிகளையும் பாராட்டுகிறேன்.

ஜவ்வாது மலையில் கமண்டலா நதி தொடங்குகிறது. செண்பகத்தோப்பு என்ற இடத்தில் அணை கட்டினால் அந்தப் பகுதி விவசாயிகள் பெரும் பலன் பெறமுடியும். 1960-ம் ஆண்டே இது பற்றி ஆய்வு செய்யப்பட்டு கட்டலாம் என்று முடிவு செய்யப்பட்டது. கிட்டத்தட்ட 14 ஆண்டுகள் ஆகியும் அந்த வேலைகள் அப்படியே இருக்கின்றன. இதனை உடனடியாகச் செய்து தர வேண்டும்.



1974 சனவரி 19] [திரு. தொ. ப. சீனிவாசன்]

என்னுடைய தொகுதியில் இதுவரை ஒரு சிறு தொழிலும் தொடங்கப்படவில்லை. கேட்டால் அது நூற்றுக்கு நூறு விவசாயப் பகுதியாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதிக அளவில் இல்லாவிட்டாலும் கூடிய அளவு தொழில்களை இந்தப் பகுதியில் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோட்டப்புத்தூர் ஏரி உடைந்து அதற்குப் பக்கத்தில் இருக்கக் கூடிய ஏரியும் உடையக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இரண்டாண்டுக் காலமாக அதைச் சீர் செய்ய வேண்டுமென்று கூறி அதிகாரிகளை அழைத்து வந்து காண்பித்து அவர்கள் ஒப்புதல் கொடுத்தும்கூட இதுவரை செய்யவில்லை. இதனையும் உடனடியாக அதிகாரிகளும், அரசும் கவனித்து சீர் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீர்த் திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு அதிக அக்கறை காட்டுகிறது என்று சொன்னார்கள். குடிதண்ணீர் வாரியம் அமைத்து கிராம மக்களுக்கும், நகர மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட தண்ணீர் அளிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதிலே தலைவர், அதிகாரிகள், பொறியாளர்கள் எல்லாம் சேர்ந்து சிறப்பான முறையில், அகில இந்தியாவும் பாராட்டக்கூடிய முறையில் செயல்பட்டு வருகிறார்கள்.

முன்பு காமராஜர் முதலமைச்சராக இருந்த நேரத்தில் போளூர் நகரத்திற்கு வந்தார்கள். அவருக்கு பேரூராட்சி மன்றம் சிறப்பான வரவேற்புக் கொடுத்து ' குடிதண்ணீர் வசதி இல்லை, மூன்று மைலுக்கு அப்பாலுள்ள ஆற்றிலிருந்து தற்போது தண்ணீர் எடுத்து வரவேண்டியிருக்கிறது; ஆகவே, குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் ' என்று கேட்டதற்கு தைரியமாக காமராஜர் அவர்கள் குடிதண்ணீர் வசதி வராது என்று சொன்னார்கள். அந்த நிலை இன்று மாறி நான் சட்டமன்ற உறுப்பினராக ஆன பிறகு இதுபற்றி எடுத்துச் சொல்லி இன்று 17 ... ரூபாய் செலவில் இந்தக் குடிதண்ணீர்த் திட்டம் நிறை... பட்டு கடந்த மாதம் 26-ம் தேதி முதலமைச்சர் ...னபதை மறந்து இருந்தது. பெரியார் மறைவின் காரணமாக நின்றவுக்காக இந்த போன்று பல காரியங்களை இன்று நம்முடைதோடு தெரிவிப்ப வருகிறது.

...விட் ...மக்கள் ...லட்சியத்திற்காக

[திரு. தொ. ப. சீனிவாசன்] [1974 சனவரி 19

போளூர் எப்படியோ அதேபோன்ற பேரூராட்சி மன்றம் களம்பூர். அங்கு குடிதண்ணீர் வசதி இல்லை. கிட்டத்தட்ட 20,000 மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டு வருகிறது. அந்தத் துர்பாக்கிய நிலைமை இருக்கிறது. தண்ணீர்த் திட்டம் பற்றி ஆய்வு செய்து துவக்குகின்ற நேரத்தில் தடை ஏற்பட்டிருக்கிறது. அதனைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் சர்க்கரை ஆலை துவங்க எல்லா ஏற்பாடுகளும் செய்தும் டில்லி மறுத்து விட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதியில் சர்க்கரை ஆலை அமையவில்லையே என்ற பெரும் குறை அந்தப் பகுதி விவசாயிகளிடையே இருக்கிறது.

திருவண்ணாமலையில் தீயணைப்பு நிலையம் இருக்கிறது. எங்கள் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டால் ஒன்று திருவண்ணாமலையிலிருந்து வரவேண்டும் அல்லது ராணிப்பேட்டையிலிருந்து வர வேண்டும். எங்கள் பகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலை அமைப்பு பற்றிக் குறிப்பிட்டார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் பல இடங்களுக்குச் செல்லுவதற்குத் தடையாக மதில் சுவர்போல் ஜவ்வாது மலை இருக்கிறது. ஜவ்வாது மலையில் மலைப் பாதை போட்டு விட்டால் 120 மைல் சுற்றிச் செல்ல வேண்டிய பகுதிகளுக்கு 45 மைலில் போய்விடலாம். இதுபற்றி அரசு ஆவன செய்ய வேண்டும். (மணி அடிக்கப்பட்டது) ஊராட்சி மன்றம் சிறிய பெரிய சாலைகளைப் பராமரிக்க முடியவில்லை. ரூரல் ஒர்க்ஸ் திட்டத்தின்கீழ் கிராமச்சாலைகளை எடுத்துக் கொண்டு பராமரிக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

ஜவ்வாது **எஸ். வடிவேல் :** அவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பகத்தோப்பு ன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது எங்களுடைய விவசாயிகள் பெருந்திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களும், திரு. பற்றி ஆய்வு செய்ய என். கே. பழனிசாமி ஆகியவர்களும் திருத்தம் பட்டது. கிட்டார்கள். நானும் கொடுத்திருக்கிறேன். அப்படியே இருப் வேண்டும்.



1974 சனவரி 19] [திரு. எஸ். வடிவேல்]

தந்தை பெரியார் அவர்கள் இன்றைக்குக் காலமான செய்தி கேட்டு நாலரைக் கோடி தமிழ் மக்களும் தங்களுடைய உள்ளக் குமுறலை இன்றைக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்கள். குறிப்பாக ஆதித் திராவிட மக்களாகிய எங்களைப் போன்றவர்களுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் வாழ்ந்து வந்த மக்களை வாழ்விக்க வந்த பெரியார் தந்தை பெரியாரா வார்கள். தந்தை பெரியார் அவர்கள் அரை நூற்றாண்டுக் காலமாக தமிழ்ச் சமுதாயத்திற்கும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஆதித் திராவிட மக்களின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு வந்தார்கள். நீங்களும் ஆளப் பிறந்தவர்கள்தான் என்று சொன்ன பெரியார் அவர்களின் பணி எங்களைப் போன்ற தாழ்த்தப்பட்ட, ஆதித் திராவிட மக்களுக்கு பெரிதும் உதவிகரமாக இருந்தது. அந்த அளவுக்கு பெரியார் அவர்கள் எங்களுக்கு உதவிகாமாக இருந்தார்கள்.

விளைகிற நெல் எல்லாம் நெல் அல்ல, புறப்படுகிற தலைவர்கள் எல்லாம் தலைவர்கள் அல்ல என்பது வரலாற்று உண்மை. அப்படிப் பார்க்கும்போது எங்கள் தலைவர் பெரியார் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஒரு தனிப் பெரும் போராட்டத்தை நடத்தியவர். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் ஆட்டிப்படைத்த ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஓட்டிப் படைக்க முதலில் நின்றவர் பெரியார் அவர்கள். அகம்பாவம் பிடித்த இனத்தின் கொடுமைகளை அகற்ற பாடுபட்டவர் பெரியார் அவர்கள். ஆதி திராவிட மக்களை, ஒருகாலத்தில் நாதியற்றவர்களாக இருந்த காலத்தில் எங்களை எல்லாம் அரசியல் வாழ்வில் ஈடுபடுத்திய பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு. ஆகவேதான் 1941 முதல் 1945-ம் ஆண்டு வரையில் தந்தை பெரியாரின் இயக்கத்தில், திராவிட கழகத்தில் நான் பணியாற்றினேன். ஆதி திராவிட மக்கள் அரசியலுக்கு வந்த காரணமே பெரியார்தான் என்பதை மறந்துவிட முடியாது. பெரியார் அவர்களின் மறைவுக்காக இந்த இரங்கற் தீர்மானத்தை நாம் ஆழ்ந்த வருத்தத்தோடு தெரிவிப்பதோடு மட்டுமல்லாமல் அவர்கள் எந்த இலட்சியத்திற்காக

வாழ்ந்தார்கள், எந்த சமுதாய மக்களுக்காக வாழ்ந்தார்கள், எந்தவித ஜாதி சமயமற்ற சமுதாயத்தை அமைக்க அவர்கள் விரும்பினார்களோ அதை நாம் மறந்துவிடக்கூடாது.

பகுத்தறிவு வாதிகளாக வளர்ந்த ஒரு கட்சி திராவிட முன்னேற்றக் கழகம். அக்கட்சி அமைத்திருக்கிற இந்த அரசாங்கம் ஏறத்தாழ நான்கு லட்சம் ஏக்கரா அளவிற்குள்ள கோவில் நிலங்களை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, அடக்கப்பட்ட மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்குக் கிடைக்கத்தக்க வகையில் பெரியார் அவர்களது இலட்சியத்தை நிறைவேற்றுகிற அளவிற்கு கோவில் நிலங்களை எல்லாம் எடுத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கொடுக்க இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, 1952-ம் ஆண்டு தேர்தலில் தந்தை பெரியார் அவர்கள் இந்த நாட்டில் ஏகபோகமாக ஆதிக்கம் செலுத்தி வந்த காங்கிரஸ் ஆட்சியினை அகற்றுவதற்கு ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்திருந்தார்கள். அதில் நான் சார்ந்துள்ள கம்யூனிஸ்ட் கட்சியும் பங்கு கொண்டு 375 சட்ட மன்ற உறுப்பினர்கள் கொண்ட சட்டசபையில்—நான்கு ராஜ்யங்களும் ஒன்றாகயிருந்தபோது—152 ஸ்தானங்களைத்தான் காங்கிரஸ் கட்சி பெற முடிந்தது. மீதி 223 ஸ்தானங்களை எதிர்க்கட்சியினர் பெற முடிந்தது. தந்தை பெரியார் அவர்களின் நாவன்மை அப்போது நாட்டுக்கு உகந்ததாக இருந்தது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெரியார் அவர்களைப் பற்றி நேற்று பேசிய மதிப்பிற்குரிய தலைவர் திரு. மொய்தீன் அவர்கள் பேசும்போது என்னை விட யாருமே அவர்களோடு அந்தளவிற்கு நெருங்கி உறவு கொள்ளவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் உள்ளத்தில் இருப்பதை அவர்கள் சொன்னார்கள். தந்தை பெரியார் அவர்களின் இயக்கத்தில் பணி புரிந்தவன் நான். நான் அந்த இயக்கத்தில் இருந்த காலத்தில் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்று முரசொலி என்ற ஒரு பத்திரிகையைத் தீட்டி அதை நாடு நகரெங்கும், பட்டி தொட்டிகளில் எல்லாம் பரப்பச் செய்ததைப் பார்க்கும்போது, அதைப்பற்றி நினைக்கும்போது, அந்தப் பத்திரிகையின் ஏஜென்டாக நான் இருந்திருக்கிறேன்.





இன்றுள்ள அரசு பெரியார் அவர்களின் மீது நம்பிக்கை வைத்து, அவர்கள் விட்டுச் சென்ற பணியினை ஓரளவாவது நிறைவேற்றவேண்டுமென்று விரும்பினால் கோவில் நிலங்களை எல்லாம் எடுத்து ஆதி திராவிட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னை மாநகராட்சியில் எட்டரை கோடி ரூபாய் அளவிற்கு ஊழல், லஞ்ச ஊழல் நடந்திருக்கிறது என்று அரசாங்கம் சொல்கிறது. பல்வேறு வகைகளில் எவ்வளவு கோடி ரூபாய்கள் போயிருக்கிறதோ, இருபது முப்பது கோடி ரூபாய் அளவிற்கு லஞ்ச ஊழல் நடந்திருக்கக்கூடும். அதுபற்றி ஒரு வார்த்தை கூட இந்த கவர்னர் உரையில் சுட்டிக்காட்டப்படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் மாணவர்களை எடுத்துக்கொண்டால் ஏன் மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள் என்பதை இந்த அரசு ஆழமாகப் பார்க்காமல் அவர்களை கைது செய்து வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. மாணவர் தலைவர் திரு. மாணிக்கம் போன்றவர்களை கைது செய்து பல்வேறு வகைகளில் அவர்களை துன்புறுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்தச் சமயத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நிலவெளியேற்றம் நடந்துகொண்டிருக்கிறது. சென்ற கூட்டத்தின்போது, தஞ்சை மாவட்டத்தில் இருந்து மட்டும் சுமார் 15,000 கையெழுத்துக்கள் கொண்ட மகஜர் ஒன்றை முதல்வர் அவர்களிடம் நானும், தோழர் அழகர்சாமி, தஞ்சை மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் திரு. சிவநேசன் அவர்கள், எம்.எல்.சி. திரு. ஆறுமுகசாமி, திரு. எ. ஆர். மாரிமுத்து ஆகியோர் கையெழுத்து போட்டு கொடுத்திருக்கிறோம். நிலவெளியேற்றம் குறித்து பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டிருக்கின்றன.

ஜமீன் ஒழிப்புச் சட்டம், இனாம் ஒழிப்புச் சட்டம், நில உச்சவரம்புச் சட்டம், நில வெளியேற்றம் குறித்த சட்டம், நிலத்தை உழுபவனுக்குச் சொந்தமாக்கும் சட்டம், கூலி நிர்ணயச் சட்டம் என்று இப்படி எவ்வளவோ சட்டங்கள் இயற்றப்பட்டிருந்த போதிலும் கூட அதனால் உழுபவன் வாழ்வில் எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை. உழுபவனுக்குப் பாதகமாகத்தான் அவை அமைந்

திருக்கின்றன என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டப் புத்தகத்தை இந்தச் சட்டங்கள் அலங்கரிக்கின்றனவே தவிர சமுதாய வாழ்விலே அவை அலங்கரிக்கவில்லை.

அரசாங்கப் புள்ளிவிவரப்படி பார்த்தால் 64 லட்சம் பேர்கள் குத்தகைதாரர்களாகவும், வாரந்தார்களாகவும் நம் நாட்டில் இருக்கிறார்கள். இந்த 64 லட்சம் பேர்களில் சமீப காலமாக ஒரு 16 லட்சம் பேர்களை நிலத்தை விட்டு வெளியேற்றிக்கொண்டிருக்கிறார்கள், வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எஞ்சியுள்ள 48 லட்சம் பேர்களில் குத்தகைதாரர்கள் பதிவுச் சட்டத்தின்படி பதிவானவர்கள் 4 லட்சம் பேர்கள்தான், மீதி 44 லட்சம் பேர்கள் விடுபட்டிருக்கிறார்கள். காரணம், ரெவின்யூ இலாகாவைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களை அப்படி பதிவு செய்ய மனம் இல்லை என்பதுதான். இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த 44 லட்சம் பேர்கள், அந்த 16 லட்சம் பேர்கள், ஆக 60 லட்சம் பேர்கள்; விவசாயத் தொழிலாளர்களாக இருக்கக்கூடிய 28 லட்சம் பேர்கள் ஆக 88 லட்சம் பேர்கள் விவசாயத் தொழிலாளர்களாக மாறினால் இந்த நாட்டில் அமைதி இருக்காது, சாந்தம் இருக்காது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நண்பர் வீராசாமி அவர்கள் இந்தியா பூராவிலும் பஞ்சம் இருக்கிறது, நம் நாடுதான் செழிப்பாக இருக்கிறது, சிறப்பாக இருக்கிறது என்று எப்படி வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளலாம். இன்று மூன்று வேளை கஞ்சி குடிக்கக்கூடிய அளவில் ஆதிதிராவிட மக்கள் இருக்கிறார்களா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். வேண்டுமென்று துதி பாடவேண்டுமென்றால் எதை வேண்டுமானாலும் சொல்லலாமேதவிர நாட்டு மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை, ஹைகோர்ட் நீதிபதியாக இருந்த திரு. கணபதியா பிள்ளை அவர்கள் கூறியிருப்பதைப் போன்று, கீழ்த்தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் ஆண்டுக்கு 150 நாட்கள்தான் வேலை இருக்கிறது. அப்போது கிடைக்கும் ஊதியத்தை வைத்துக்கொண்டு ஆண்டு பூராவும் காலம் தள்ளவேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு





குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் வேண்டுமென்று மதிப்பிற்குரிய கணபதியா பிள்ளை கமிஷன் கூறியது. இப்போது கமிஷனுக ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு. கார்த்திகேயன் அவர்கள் போடப்பட்டு அறுவடை நடக்கும் இடத்திலேயே பணமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

நெல் கிடைக்கிற இடத்திலிருந்து காசை வாங்கிக் கொண்டு போய் அரிசி வாங்கவேண்டிய நிலை விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்களைப் பற்றி புரிந்து கொள்ளாத, புரிந்து கொள்ள முடியாத ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போட்டு கூலி நிர்ணயம் செய்வது என்றால் விவசாயத்தைப்பற்றித் தெரியாதவரை, அதில் உள்ள கஷ்டங்களைப் பற்றித் தெரியாதவரை ஏழ்மையின், வறுமையின் கடைக்கோடியில் இருப்பவர்களின் நிலைபற்றித் தெரியாதவரை, ஏழைகளின் கஷ்டங்களைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியாத ஒருவரைப் போட்டு அந்தக் கமிஷனால் தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல், விலைவாசி ஏற்றத்தை எடுத்துக்கொண்டால் விலைகள் விஷம் போல் ஏறிக்கொண்டிருக்கின்றன. பத்து ரூபாய் கூட்டலாம், என்.ஜீ.ஓ.-க்களுக்கு வேண்டுமானால் இருபது ரூபாய் கூட்டிக் கொடுக்கலாம். மக்கள் மேலேயும் செல்ல முடியாமல் கீழேயும் இறங்கமுடியாமல் தவிக்கிறார்கள். என்.ஜீ.ஓ.-க்கள், ஆசிரியர்கள், மற்ற மற்ற தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் இன்று விலைவாசி உயர்வினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு கிலோ புளி ரூ. 6 என்று விற்கிறது. மிளகாய் கிலோ, ரூ. 7. நல்லெண்ணை ரூ. 9-க்கு விற்றது இன்று 17 ரூபாய் அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இப்படி எதை எடுத்தாலும் விலைகள் ஏறியிருக்கின்றன. இதைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்று சொன்னால் அதுகுறித்து நாவன்மையால் பதில் அளிக்கிறார்களே தவிர அதைப் பற்றி சரியானமுறையில் கண்காணிக்க, சரியான நடவடிக்கைகள், துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.

இன்று சாதாரண குடும்பங்கள் வாழ முடியாத நிலையில் இருக்கிறார்கள். இன்று உழவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் ஏக்கப் பெருமூச்சு விடுவதைத்தான் பார்க்கமுடிகிறது. கேரள அரசைப் பற்றி அருமை நண்பர் வீராசாமி அவர்கள் அடிக்கடி உதாரணம் காட்டினார்கள். அங்கு ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம்

வீடுகள் கட்டி தாழ்த்தப்பட்டவர்கள், உயர்ந்தவர்கள், எந்த ஜாதியினராக இருந்தாலும் இந்த ஒரு லட்சம் வீடுகளில் குடியிருக்க சட்டம் இயற்றியிருக்கிறார்கள். ஆனால் இங்கேயோ யானைப் பசிக்கு சோளப்பொறி என்பதுபோல் ஐயாயிரம் அல்லது பத்தாயிரம் வீடுகள் கட்டுவது என்றால் வீட்டுப் பிரச்னை தீர நூறு ஆண்டுகளாகும். கேரளாவில், 1970 ஜனவரி 1-ம் தேதியில் இருந்து எந்த நிலப்பிரபுவிற்கும் எந்தக் குடியானவனும், எந்த சாகுபடியாளரும் நெல் அளக்கவேண்டியதில்லை என்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அப்படிப்பட்டதொரு சட்டம் இங்கிருக்கிறதா, இல்லை. பதினைந்தாண்டுகள் குத்தகை செலுத்தினால் நிலம் சொந்தமாகும் என்று சொன்னார்கள். என்னவாயிற்று? தாழ்த்தப்பட்டவர்களின் நிலை மிகவும் மோசமாகயிருக்கிறது.

ஆகவே நான் சொல்வது என்னவென்றால் நான்கு லட்சம் பேர்கள் அல்ல, மீதி 44 லட்சம் பேர்களையும் குத்தகை பதிவுச் சட்டத்தின்கீழ் கட்டாயமாகப் பதிய வைக்கவேண்டும் என்று அரசாங்கம் ஒரு ஆர்டர் பிறப்பிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. ஆகவே மேலும் அவர்கள் அத்துக் கூலிகளாக மாறினால் நிலைமை மோசமாகப் போய்விடும். ஆக இந்த அரசு இம்மாதிரி விஷயங்களில் கவனம் செலுத்தி நாட்டு மக்களின் வாழ்வில் மாறுதல் காண வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. வே. வேலப்பன் :** மதிப்பிற்குரிய துணைத் தலைவரவர்களே, கவர்னர் அவர்களால் அளிக்கப்பட்ட ஆண்டறிக்கை மீது பேசுகிற நேரத்தில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்து இருக்கும் திருத்தத்தையும் கருத்தில் கொண்டு நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கவர்னர் இங்கே உரை நிகழ்த்துகிற நேரத்தில், அது கவர்னரின் தனிப்பட்ட உரையல்ல, பொறுப்பில் இருக்கிற அரசின் கொள்கைதான் என்பது அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். அப்படிப்பட்ட முறையில் கவர்னர் அவர்கள் சொல்கிற நேரத்தில் முதலிலே தந்தை பெரியார் அவர்களின் மறைவு குறித்து குறிப்பிட்டு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அவரை இழந்து இருக்கும் நமக்கு ஈடுசெய்ய





முடியாத இழப்பு என்று எடுத்துச்சொல்லி, அவ்வளவு பெரும் அஞ்சலி செலுத்தும் வகையில் துவக்கத்திலேயே அதைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட உரையை நாம் பார்க்கிற நேரத்தில் தந்தை பெரியார் அவர்களின் கொள்கையை இந்த அரசு ஏற்றுச் செய்கிறது என்பதை இந்த அரசின் பொறுப்பில் இருக்கிறவர்கள் திட்டவட்டமாகச் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். தந்தை பெரியார் அவர்களின் முழு முதற்கொள்கை ஜாதியற்ற சமுதாயத்தை அமைப்பது என்பதாகும். அவர்களுடைய திட்டத்தை எடுத்துச் சொல்லி அவர் தன் வாழ்நாள் முழுமையும் அதற்காகப் பாடுபட்டு இருக்கிறார்கள்.

ஆனால் கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள், இந்த அரசு எந்தெந்த ஜாதியினருக்கு என்னென்ன வேலைவாய்ப்புகளை அளித்து இருக்கிறது என்று. அரசியல் சட்டத்தில், தேர்தல் சட்டத்தில் கூட ஜாதியின் அடிப்படையில் ஓட்டு கேட்டால் அது செல்லாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் சட்டமன்றத்தில் முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள், இந்த அரசு ஜாதிபேதமற்ற அரசாக அமைந்து இருக்கிறது என்று கூறி விட்டு, எந்தெந்த ஜாதியினருக்கு என்னென்ன வேலைவாய்ப்புகளைக் கொடுத்து இருக்கிறது என்ற புள்ளிவிவரத்தையும் கொடுத்து இருக்கிறார்கள். இந்த அரசு கொள்கை ஒன்றைச் சொல்லி விட்டு, அதை நடைமுறைப்படுத்துகிறபோது பல கோணங்களில் ஈடுபடுகிறது, உளப்பூர்வமாக கொண்ட கொள்கையில் ஈடுபடவில்லை என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எடுத்ததற்கெல்லாம் பெரியார் கொள்கையை அமல் நடத்துகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் பெரியார் அவர்கள் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து இருந்த காலத்தில் மதுவிலக்குக் கொள்கையில் தீவிரமாக இருந்து, தென்னை மரங்களை கூட வெட்டினார்கள். ஆனால் இந்த ஆட்சியில் இருப்பவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் கொண்டிருக்கும் கொள்கை என்ன? இந்த ஆண்டறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள், மதுவிலக்கு அமல் செய்ய இருக்கிறோம் என்று இதைப் பார்க்கிற நேரத்தில்

[திரு. சி. வே. வேலப்பன்] [1974 சனவரி 19

வெளியே சென்று பார்த்தால் 'இதுதான் சாராயக்கடை' என்று போர்டு பார்த்ததும் நினைவுக்கு வருகிறது. கவர்னர் அறிக்கையில் மதுவிலக்கு முழுமையாக அமல் செய்ய இருக்கிறோம் என்று சொல்கிறார்கள், ஆனால் நடைமுறை வேறு விதமாக இருக்கிறது. ஆகவேதான், சொல்கிறோம், இந்த அரசின் கொள்கை ஒழுங்காக இல்லை, நிர்வாக அமைப்பு ஒழுங்காக இல்லை, நிர்வாகத்தில் சீர்கேடு இருக்கிறது, அதனால்தான் இந்த நாட்டிலே பஞ்சமும், பசியும் இருக்கும் நிலை இருக்கிறது என்று சொல்கிறோம்.

எல்லாக் கிராமங்களுக்கும் மின்னொளி வழங்கிவிட்டோம் என்று சொல்கிறார்கள். கூடவே மின்சார வெட்டும் கொண்டு வருகிறார்கள். இப்போது 15 சதவீதம் வெட்டு இருக்கிறது. இங்கே சொல்லப் படும் கருத்து ஒன்று. ஆனால் கிராமப்புறங்களில் நடப்பது ஒன்று. இங்கே 15 சதவிகிதம் வெட்டு என்று சொன்னால் கிராமப்புறங் களில் 25 சதவிகிதம் வெட்டு இருக்கிறது. மின்சாரம் எப்போது வருகிறதோ அப்போதுதான் கிராமங்களில் உள்ள மக்கள் மின்சாரத்தைப் பயன்படுத்த முடியும். இப்படிப்பட்ட துர்ப் பாக்கியமான நிலைமை கிராமப்புறங்களில் நிலவி வருகிறது என்பதை நான் மிகவும் வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன்.

உணவுத் துறையில் தன்னிறைவு பெற்று விட்டோம் என்று சொன்னார்கள். இன்னும் சொல்லப்போனால் அதிகமாக உற்பத்தி செய்து விட்டோம் என்று சொல்கிறார்கள். பேரறிஞர் அண்ணா ஆட்சி பீடத்தில் இருந்தபோது சென்னையிலும், கோவையிலும் ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டம் கொண்டுவந்தார்கள். விலைவாசிகளைக் குறைக்க முயற்சிகளை எடுத்துக்கொண்டார்கள். ஆனால் இன்றைக்கு என்ன சொல்கிறார்கள்? 1973-74-ல் நமது உணவு தானிய உற்பத்தி தோராயமாக 74 லட்சம் டன்களாக இருக்கும் என்று முன்னர் மதிப்பிடப்பட்டது. உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள் போதிய அளவு கிடைக்காமையால் அது நிறைவேறாமல் போகலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்போது இருந்த உற்பத்தி இப்போது எங்கே போயிற்று? இதிலேதான் ஊழல் இருக்கிறது என்று சொல்கிறோம். உற்பத்தி பெருகியிருந்தும் விலைவாசிகள் உயர்ந்து இருக்கிறது என்று சொன்னால், அதிலேதான் ஊழல் இருக்கிறது, நிர்வாகச்



1974 சனவரி 19] [திரு. சி. வே. வேலப்பன்]

சீர்குலைவு இருக்கிறது என்று சொல்கிறோம். நிர்வாகத்தை சீர்படுத்தும் திறமை இந்த அரசுக்கு இல்லை என்று குற்றம் சாட்டு கிறோம்.

இந்த நிலைமையில் முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளே, தொழிலாளர்களே, நெசவாளர்களே உங்களுக்காகவே இந்த அரசு இருக்கிறது என்று போகிற இடத்திற்குத் தகுந்தாற்போல் பேசி வருகிறார்கள்.

விவசாயிகளுக்குத் தேவையான உரம் கொடுக்க முடியவில்லை, தொழிலாளர்களுக்குத் தேவையான அளவு பொருள்கள் கிடைக்க வில்லை, நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை. இன்றைக்கு உரத்தின் விலை ரூ. 55 என்றால் ரூ. 110 கொடுத்தால் தேவையான அளவு உரம் கிடைக்கிறது. கூட்டுறவுத்துறையின் மூலமாகத்தான் உரம் வினியோகம் செய்கிறோம் என்று சொல்கிறார்கள். தனிப் பட்டவர்களுக்கு இல்லை என்று சொல்கிறார்கள். கூட்டுறவுத் துறையை நிர்வகிப்பவர் யார், தனிப்பட்ட மனிதர்தான். அவர் வாங்குகிற உரங்களை அப்படியே விற்றுவிடுகிறார். அதைக் கண்டுபிடித்துக் தடுக்கும் திறமை இந்த அரசுக்கு இல்லை என்று தான் சொல்கிறோம். கண்டுபிடித்துக்கொடுங்கள் என்று கேட் டார்கள்.

என்னுடைய தொகுதியில் வேலூர் ஸ்டேஷனில் நாங்கள் கண்டு பிடித்துக்கொடுத்த உரங்கள் அப்படியே இருக்கிறது. ஏன் சம் பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று அங்கே யுள்ள இன்ஸ்பெக்டர்களைக் கேட்டால், எங்களை ஒன்றும் கேட்கா தீர்கள். மேலிடத்தில் இருந்து 'பிரஷர்' வருகிறது என்று சொல்கிறார்கள். தாசில்தாரும், ஆர்.டி.ஓ.-வும் மவுனம் சாதிக்கி றார்கள். இதைத்தான் நாங்கள் ஊழல் என்று சொல்கிறோம். நிர்வாகத்தில் தலையீடு என்று சொல்கிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் இந்த அரசு விவசாயிகளுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிமெண்ட் உற்பத்தி 4 இலட்சம் டன்னிலிருந்து 7 இலட்சம் டன்னாக பெருக்குவதற்கு இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நியாய மார்க்கெட்டில் சிமெண்ட் கிடைப்பது இல்லை. கள்ள மார்க் கெட்டில் எவ்வளவு வேண்டுமானாலும் கிடைக்கிறது. இப்படிப்

பட்ட நிலையில் ஆளும் கட்சிக்காரர்களுக்கு சலுகை அளிக்கும் வகையில் கன்ட்ரோல் வருகிறது. அவர்களுக்குத்தான் முதலிடம் அளிக்கப்படுகிறது. அவர்களைப் பிடித்தால் நிறைய சிமெண்ட் வாங்க முடியும். இப்படியிருக்கிறது என்று சொன்னால், மத்திய அரசு மீது குற்றம் சாட்டுகிறார்கள்.

இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நிறைய செய்து இருக்கிறது என்று சொல்கிறார்கள். யாரைத் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று சொல்கிறார்கள்? ஔவை யார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், 'இட்டார் பெரியோர், இடா தோர் இழி குலத்தோர், பட்டாங்கே உள்ளப்படி' என்று. அந்தக் கணக்குப்படி பார்த்தால் யார் யார் பொருளாதாரத்தில் இந்த நாட்டில் உயர்ந்து இருக்கிறார்களோ அவர்களெல்லாம் ஒரு ஜாதி என்றும், யார் யார் பொருளாதாரத்தில் தாழ்ந்து இருக்கிறார்களோ அவர்களெல்லாம் ஒரு ஜாதி என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் இருக்கிற ஜாதியையெல்லாம் எடுத்துச் சொல்லி ஒவ்வொரு ஜாதிக்கும் என்னென்ன சலுகைகளைத் தந்தோம் என்று கூறியிருக்கிறார்கள். திண்டுக்கல் தேர்தல் நேரத்தில் முக்குலத்தோருக்கு சலுகை அளித்தார்கள். இப்போது கோயம்புத்தூரில் தேர்தல் வரப்போகிறது. என்ன குண்டை, என்ன புகையை வெடிக்கப்போகிறார்களோ தெரியவில்லை (குறுக்கீடு) அம்மையார் அவர்கள் சிறுவாணித் திட்டம் என்று சொல்கிறார்கள். இவர்கள் அடிக்கல் நாட்டுவதில் வல்லவர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 5-6 நாட்களுக்கு முன்பு சேலம் மாவட்டத்திற்கு வந்திருந்தார்கள். அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆரம்பித்து ஓராண்டு காலம் ஆகிவிட்டது. இப்போது வந்து அவர்கள் துவக்க விழாவினை செய்து இருக்கிறார். மின் விளக்குகள் எல்லாம் போட்டு மிகவும் நன்றாக இருந்தது. இப்படித்தான் எல்லா விழாக்களையும் நடத்துகிறார்களோ என்று ஐயப்படும் அளவிற்கு நடத்தினார்கள்.

மதுவிலக்கை அமல்படுத்தி வருகிறோம் என்றுதான் கூறப்பட்டிருக்கிறது. அது இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்

(நண்பகல் 12.00)





களைப் பார்த்து 'நாங்கள் என்ன சொல்கிறோமோ அதை ஏற்றுக் கொள்ளவேண்டும்' என்று சொல்கிற நிலை ஆகும். மதுவிலக்கை அமல்படுத்திவிட்டோம் என்று புத்தகத்தில் சொல்வதோ அல்லது பேசிவிடுவதையோ வைத்துக்கொண்டு அதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கூறுகிற நிலை ஆகும். வெளியே சென்று பார்த்தால் இது தான் சாராயக்கடை, இது தான் பிராந்திக் கடை என்று போர்டு அங்கே காணப்படுகிறது. இது சட்ட மன்ற உறுப்பினர்களை ஏமாற்றுகின்ற ஏமாற்று வித்தையா என்பது எனக்கு புலப்படவில்லை. இப்படிப்பட்ட நிலையில் இந்த அரசாங்கம் செய்கின்ற காரியங்கள் விவசாயிகளுக்கு நன்மை அளிக்கிறதா என்றால், இல்லை. தொழிலாளர்களுக்கு நன்மை அளிக்கிறதா என்றால் இல்லை. மாணவர் சமுதாயத்தைச் சுட்டுக் கொல்கின்ற நிலை, மாணவர் சமுதாயம் அடிக்கப்படுகின்ற நிலை.

இதையெல்லாம் பற்றிக் கேட்டால் முதல் அமைச்சர் அவர்கள் 'திறம்படத்தான் செய்கிறோம்' என்று சட்டமன்றத்தில் சொல்வார்கள். அதற்காக கமிஷன் போட்டு விசாரணை செய்தோம் என்று சொல்வார்கள்.

தடி கொண்டு அடித்திருக்கிறார்கள், இது பிரம்படி அல்ல என்றெல்லாம் சொல்கின்ற நேரத்தில், ஊழல் நிலை என்று சொல்கின்ற நேரத்தில் உண்மையைத்தான் பேசுகிறோம் என்று சொல்லி மாணவர் சமுதாயத்திற்கு பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். எந்த சமுதாயத்திற்கும் பாதுகாப்பு இல்லை.

கைத்தறி நெசவாளர்கள் படுகின்ற அல்லல்கள், தொல்லைகள் இவைகளை சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் எதிர்பார்க்கின்ற அளவுக்கு, நியாயமான அளவுக்கு, போதிய அளவுக்கு, நியாயமான விலையில் நூல் கொடுக்கப்பட்டது என்று கூறப்படுகிறது இது உண்மையா? இதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மத்திய அரசாங்கத்தின் மீது பழியைப் போடுகிறார்கள். இதைப்பற்றி சட்டமன்றத்தில் சொல்கிறார்கள். ஆனால் எந்த நெசவாளியைப் பார்த்துக் கேட்டாலும், நியாயமான விலையில் நியாயமான அளவுக்கு நூல் கிடைக்கிறதா என்றால் இல்லை. அப்படி நூல் கிடைத்தால் அவன் ஏன் ஊரைவிட்டு வெளியே குடியேறவேண்டும்? ஏன் பாதியாக அலைய வேண்டும்,

திண்டாடவேண்டும்? இப்படிப்பட்ட காரியங்களிலெல்லாம் அரசு ஏன் போதிய அளவு கவனம் செலுத்தவில்லை என்று கேட்டால், எங்களுக்குப் போதிய அதிகாரம் இல்லை என்று சொல்கிறார்கள். இருக்கிற அதிகாரத்தை சரிவரப் பயன்படுத்தவேண்டும்.

நூல் யாருக்கு வழங்கப்பட்டிருக்கிறது? எனக்குத் தெரியும். சேலம் மாவட்டத்தில் நான் கூட கேட்டேன். சேலம் மாவட்டத்தில் எவ்வளவு நெசவாளர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். என்ன பிரயோசனம்? நான் அதிகாரிகளிடம் சென்று சொல்லிப் பார்த்தேன். அவர்கள் சொல்கிறார்கள். 'எங்கள் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன, எங்களுக்கு பிரஷர் அதிகம், சொல்ல முடியவில்லை, மற்றபடி எதையும கேட்டுக் கொள்ள வேண்டாம், அப்படித்தான் நடக்கும்' என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைகளெல்லாம் மாற்றப் படவேண்டும்.

எந்தத் தவறும் நடப்பதில்லை என்று சொல்கிறார்கள். நாட்டில் சட்டம், ஒழுங்கு, அமைதி காக்கப்படுகிறதா என்றால் இல்லை. அதைப்பற்றிக் கேட்டால், உத்திரப் பிரதேசத்தில் இல்லையா என்று கேட்கிறார்கள். இங்கே ஒழுங்கு இல்லையே என்று கேட்டால், பக்கத்து மாநிலத்தில் அப்படிப்பட்ட நிலை இல்லையா என்று கேட்கப்படுகிறது. அது வேறு பிரச்சனை. அதைப்பற்றி சுட்டிக்காட்டலாமே தவிர, பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அது வழியாகாது.

சமீபத்தில் நடந்த பெண் வழக்கறிஞர்கள் மாநாட்டில் சட்டத் துறை அமைச்சர் அவர்களை கூப்பிட்டு, அவர்கள் சமுதாயம் எந்த நிலையில் இருக்கிறது, பெண்கள் எப்படிப்பட்ட நிலையில் அவதிப் படுகிறார்கள் என்பதை தைரியமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது ஒரு பெரிய வரவேற்பு, பாராட்டு என்று மட்டும் அமைச்சர் அவர்கள் எண்ணக்கூடாது. பாராட்டு மட்டுமல்ல, வரவேற்பு மட்டுமல்ல. அங்கே எடுத்துச் சொல்லப்பட்ட பிரச்சனை என்ன என்பதைப் பார்க்கவேண்டும். நாட்டிலே பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள் என்றால் அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது. இந்த அரசு என்ன தான் செய்கிறது?

இந்த அரசு விலைவாசி ஏற்றத்துக்கு தாங்கள் காரணமில்லை என்று சொல்கிறது. விலைவாசி உயர்ந்துகொண்டே போகிறது. விலைவாசியைக் குறைப்பதற்கு இந்த மாநில அரசு என்ன





நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அரசாங்கம், அக்கிரமங்கள் நாட்டிலே நடந்துகொண்டிருக்கின்றன. மாணவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள் ஏராளம். திண்டுக்கல்லில் தேர்தல் நடக்கிறது என்றால் அங்கே என்ன செய்தார்கள்? அநியாயமாக வழக்குகளைப் போட்டார்கள். ஒரு ஆண்டு காலமாக வழக்குகளை பதிவு செய்யாமலேயே இழுத்து அடித்தார்கள். இது போன்ற நிலைமைகள், இப்படிப்பட்ட அநியாயங்கள், அராசகங்கள் நாட்டிலே நடைபெறுகின்றன.

சேலம் மாவட்டம் குமரப்பாளையத்தில் முஸ்லிம் பெண்ணை நான்கு பேர்கள் கற்பு அழித்ததாகச் சொல்லப்பட்டு, பொதுமக்கள் சேர்ந்து அந்த நபர்களை பிடித்துக்கொடுத்து, நடவடிக்கை எடுக்கும்படி போலீஸ் ஸ்டேஷனில் சொன்னால், அங்கே அரசியல் தலையீடுகள் இருக்கிறது என்று நடவடிக்கை எடுப்பதற்கு பயப்படுகிற, நடுங்குகிற நிலையில் இருக்கிறார்கள். இப்படி அரசியல் தலையீடு இருந்தால் நாட்டிலே எப்படி அமைதி ஏற்பட முடியும்?

4. நடைமுறைக் கேள்வி

**எதிர்க்கட்சி உறுப்பினர் கொடுத்திருந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்படவில்லை என்ற தகவலை ஆளும் கட்சி உறுப்பினர் தந்தது குறித்து.**

**திரு. நா. வீராசாமி:** அதைப்பற்றி விசாரணை நடந்து கொண்டிருக்கும் நிலையில் கொடுக்கப்பட்டிருந்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இந்த நேரத்தில் அனுமதிக்கப்படவில்லை. அமைதியாக இருக்கிற நாட்டில் இந்தப் பிரச்சனையை இப்பொழுது எழுப்புவது முறைதானா?

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஆன் எ பாயின்டு ஆப் ஆர்டர். ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்படவில்லை என்று உறுப்பினர் அவர்களுக்கு எப்படித் தெரியும்? அவைத் தலைவருக்கும் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கும் தெரியுமே தவிர எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம் இங்கே அனுமதிக்கப்படவில்லை என்பது வேறு ஒரு உறுப்பினருக்கு

எப்படி தெரியும்? கவர்னர் உரையில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது, ஆகவே அனுமதிக்கப்படவில்லை என்று கூட உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது ....

THIRU R. PONNAPPA NADAR: Sir, on a Point of Order. When a Member is on his legs and when he is giving details to the House regarding a particular incident, how can another member be entitled to furnish information with regard to an adjournment motion on behalf of the Government? If he is a Ministry, we can understand because he will be in possession of such information. How can a member give information to the House with regard to a matter to which he is not directly concerned? If the question is put directly to the Member, he can reply.

The question was not directly put to the Member. Will it be in order for the hon. Member to give such information? Will it be in consonance with the rules? I would like to have your ruling on these points.

திரு. கே. டி. கே. தங்கமணி: சாதாரணமாக ஒரு அட்ஜர்ன்மெண்டு மோஷன் கொடுத்தால், அதை எப்படித் தீர்த்து வைப்பது என்பதற்கு இரண்டு மூன்று முறைகள் நாம் வைத்திருக்கிறோம். ஒன்று சபையிலேயே அதை நிராகரித்துவிடலாம். அல்லது சபைக்கு அதைக் கொண்டுவந்து, அதைப்பற்றி விசாரித்து, பிறகு அனுமதிக்கலாமா, இல்லையா என்று முடிவெடுக்கலாம். அல்லது சபாநாயகரின் சேம்பரிலேயே நிராகரிக்கப்படலாம். (குறுக்கீடு)

'I have received a letter from the Honourable Speaker stating that it is not allowed.' நான் அதைப்பற்றி எழுந்து இங்கே சொல்ல முடியாது. என்னுடைய அட்ஜர்ன்மெண்டு மோஷன் என்ன ஆனது என்று கேட்க முடியாது. அப்படிக் கேட்காமல் இருக்கிற நேரத்தில் சபாநாயகரோ அல்லது அமைச்சரோ தனிப்பட்ட சில உறுப்பினர்களுக்கு விவரத்தை கொடுத்து, சபாநாயகர் சார்பில் அல்லது அமைச்சர் சார்பில் அதை இங்கே எழுப்புவது சரிதானா?





THIRU N. GANAPATHY: It is an insinuation. It speaks as if the Hon. Speaker has given the information to the Hon. Member to give the information to the House.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: The hon. Member has given the information to the House. How he got that information?

DR. H. V. HANDE: It is highly objectionable.

திரு. செ. கந்தப்பன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எழுப்புகின்ற ஒழுங்குப் பிரச்னை திரு. வேலப்பன் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிற செய்தி பற்றியதாகும். கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட குமாரப்பாளையம் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அவர் அதிலே ஏதோ அரசியல் நோக்கம் இருக்கிறது என்ற ஒரு தவறான, அபாண்டமான தகவலைத் தந்திருக்கிறார்கள் என்பதை மட்டும் நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU MUNU ADHI: It is not a Point of order.

THIRU S. KANDAPPAN: It is a Point of Order, one cannot mislead the House. I know the facts. I take the challenge.

MR. DEPUTY SPEAKER: That is a different question. So many points of order have been raised.

எதிர்க்கட்சித் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும் மற்றும் சிலரும் ஒழுங்கு பிரச்சனை கிளப்பியிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் நிராகரித்த ஒத்திவைப்புத் தீர்மானம் திரு. வீராசாமி அவர்களுக்கு எப்படித் தெரியும் என்பது ஒழுங்குப் பிரச்சனை, இரண்டாவதாக, திரு. பொன்னப்ப நாடார் கிளப்பிய பிரச்சனை ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது, இன்னொரு உறுப்பினர் ஒரு இன்பர்மேஷன் தரலாமா என்பது. இன்பர்மேஷன் விவாதத்திற்கு உதவி செய்யக்கூடியதாக இருந்தால் அப்படி இன்பர்மேஷன் தருவதில் தவறில்லை. தவறாக சொல்லியிருந்தாலோ அல்லது மறதியாகச் சொல்லியிருந்தாலோ அதைத் திருத்துவதற்காகச் சொல்லலாம். ஆனால், விவாதத்தைத் திசை திருப்புவதற்காக உறுப்பினர் பேச்சை அந்த நேரத்தில் மறுப்பதற்காகச் சொல்வது முறையல்ல. இந்த இன்பர்மேஷன் எப்படி

வீராசாமி அவர்களுக்குத் தெரிந்தது என்பது பற்றி அவரே விளக்குவதற்குக் கடமைப்பட்டிருக்கிறார்.

***திரு. நா. வீராசாமி :*** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவரம் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களால் வெளியே பேசப்பட்டது. அதை வைத்துக்கொண்டுதான் அனுமதி கிடைக்கவில்லை என்று சொன்னேனே தவிர, பேரவைத் தலைவரோ, அமைச்சரோ அதைப்பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை.

***திரு. முனு ஆதி :*** உறுப்பினர் அவர்கள் எல்லாம் தெரிந்த மாதிரி பேசினார். இப்பொழுது புரட்டுகிறாரே?

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** பேரவைத் தலைவர் இந்தத் தகவலைத் தெரிவித்திருப்பார் என்று சொல்வது முறையல்ல. உறுப்பினர்கள் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கலாம். உறுப்பினர்கள் சொல்லியிருக்கலாம். அதை வைத்துக்கொண்டு சொல்லியிருக்கலாம். இது ஒரு பெரிய ஸ்டேட் சீக்ரெட் அல்ல.

***திரு. நா. வீராசாமி :*** இந்த பிரச்சனையைப் பற்றி முஸ்லிம் லீகைச் சார்ந்த திரு. வகாப் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். சில உறுப்பினர்கள் வெளியே இப்படிப்பட்ட பிரச்சனைகளைப் பற்றி பேசியிருக்கிறார்கள். அதை வைத்துத்தான் நான் சொன்னேனே தவிர, எனக்கும் பேரவைத் தலைவருக்கோ அல்லது அமைச்சருக்கோ இதைப்பற்றி எந்த விதமான தொடர்பும் இல்லை என்பதையும் மறுபடியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

***டாக்டர் எச். வி. ஹாண்டே :*** நான் சொல்ல வந்தது என்னவென்றால், இந்த அவையில் தள்ளப்பட்ட ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பற்றி உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசலாம் என்று அவைத் தலைவர் அனுமதி தந்தால், நாங்களும் சிம்சன் விவகாரத்திலே பேசலாம். சிம்சன் பிரச்சனையிலே ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வர முயன்றோம்; அதிலே அனுமதி தரவில்லை என்று நாங்கள் சொல்லுவோம். எனவே, பேரவைத் தலைவர் அறையிலே தள்ளப்படும் ஒத்தி வைப்புத் தீர்மானம் பற்றி





இங்கே எந்த உறுப்பினரும் பேசக் கூடாது என்ற தீர்ப்பை அவைத் தலைவர் அவர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் மறுக்கப்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதிலே முக்கியமானது ஏதாவது ஒரு நிகழ்ச்சி, கிரிமினல் ஆக்ட் நடந்திருந்தால் அதைப்பற்றி சபையிலே விவாதிப்பதன் மூலம் அது குறிப்பிட்ட வழக்கை பாதிக்கும் என்பதால் இந்தச் சபையில் அவற்றை எல்லாம் விவாதிப்பது இல்லை எனவே, விவாதிக்கும் பொழுதுகூட, இந்தப் பிரச்சனையை எழுப்பாமல் இருப்பது நல்லதுதான். எனவே, திரு. வேலப்பன் அவர்கள் அந்தப் பிரச்சனையை தொட்டும் தொடாமலும் சொல்லிவிட வேண்டுமென்று . . . (குறுக்கீடு)

***டாக்டர் எச். வி. ஹாண்டே :*** நான் கவர்னர் உரையின்மீது பேசும்பொழுது பேசலாம் என்றாரே . . . கவர்னர் அட்ரசிலே இதைக் கிளப்பலாம் என்றாரே.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** திரு. வேலப்பன் அவர்கள் பேசி முடித்துவிட்டார். இனிமேல் வேண்டாமென்று சொல்லி என்ன பிரயோஜனம்?

***திரு. முனு ஆதி :*** இதிலே பேரவைத் தலைவர் அவர்களின் தீர்ப்பு சரியாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :*** ஒரு பலாத்காரம் நடந்திருக்கிறது. சட்ட விரோதமான முறையிலே நடந்திருக்கிறது என்று குறிப்பிடும்போது அந்த நிகழ்ச்சியைப்பற்றி எடுத்துச் சொல்லும்பொழுது அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது என்று சொல்லலாம். ஆனால் இதிலே சம்பந்தப்பட்டவர்கள் இன்னார் என்று சொல்லுவது சரியல்ல.

## 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

***திரு. சி. வே. வேலப்பன் :*** தலைவர் அவர்களே, நான் நாட்டிலே நடைபெறுகின்ற நிகழ்ச்சியினைப் பற்றி எடுத்துச் சொன்னேன். திரு. வீராசாமி அவர்கள் சகலகலாவல்லவர், தனக்கு அத்தனையும்

தெரியும் என்றளவிலே சொன்னார். அதற்கு நான் அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பேசியபொழுது அரசியல் குறுக்கீடு இருக்கிறது என்று சொன்னதாகவும், அதனால் அதிகாரிகள் ஒன்றும் செய்ய முடியவில்லை என்று சொன்னதாகவும் சொன்னார். ஆனால் திரு. கந்தப்பன் அவர்கள் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்ற அளவிலே தான் வெளிப்படையாகச் சொன்னதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அரசியல் குறுக்கீடு என்று சொல்லுவது, அதுவும் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையிலே அரசியல் குறுக்கீடு இருக்கிறது என்று சொல்லுவது பெரிய குற்றச்சாட்டில்லை. அதனால், அரசியல் குறுக்கீடு என்பது எளிமையான குற்றச்சாட்டு. அரசாங்கத் தரப்பிலே அதைப்பற்றி அவ்வளவு வேதனைப்பட வேண்டியதில்லை. அதை வைத்து ஒரு விவாதத்தை இங்கே நடத்துவது சரியில்லை.

**திரு. சி. வே. வேலப்பன் :** எந்த ஒரு பிரச்சினையிலும் அரசியல் குறுக்கீடு என்று சொல்லும் நேரத்திலே ஜனநாயக நாட்டிலே அரசியல்வாதிகள்தான் நாட்டை ஆளுகிறார்கள். ஆகவேதான் நாட்டிலே நடைபெற வேண்டிய நியாயமான காரியங்கள் தடைபெற வேண்டிய நிலையிலே இருக்கிறது என்று நான் எல்லா அரசியல்வாதிகளையும் சொல்ல மாட்டேன். நியாயமாக இருக்க வேண்டிய அரசியல்வாதிகள் பிற நாடுகளிலே இருப்பார்கள். சுயநலவாதிகள் அதை சாக்காக வைத்துக்கொண்டு நாட்டிலே பல சட்டத்திற்கு புறம்பான காரியங்களைச் செய்வதற்கு தங்களுடைய செல்வாக்கை பயன்படுத்துவார்கள் என்பதை நான் சொல்லித் தான் தெரியவேண்டும் என்பதில்லை. பொதுப்படையாக இந்த கவர்னர் உரை வழக்கமாக படித்துக் காட்டக்கூடிய ஒன்றாகத் தான் இருக்கிறது என்பேன். நெசவாளர்களுக்கு இந்த சிக்கல்கள் இருக்கின்றன, அதை எல்லாம் தீர்க்க இப்படி முடிவெடுத்திருக்கிறோம் என்று இதிலே சொல்லியிருப்பார்களேயானால் நான் இதை வரவேற்றிருப்பேன். விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை; கடன் அவர்களுக்கு கொடுப்பதிலே, வசூலிப்பதிலே தடை இருக்கிறது. இதிலே அதற்கு என்ன காரணம் என்று கண்டு பிடித்து விட்டோம் என்று சொல்லியிருக்க வேண்டும். ஒரு வைத்தியர் இருக்கிறார் என்றால், இந்த மருந்தை கொடுத்து நான் அவரைக் குணப்படுத்துவேன் என்று சொல்ல வேண்டும்; ஆனால் அதைவிடுத்து அவருக்கு கை பெரிதாக இருக்கிறது ஆகவே அவரை குணப்படுத்த முடியவில்லை என்று சொல்லுவது சரியானதாக இல்லை. ஆகவே, கவர்னர் உரை வழக்கமாக படித்துக் காட்டக்கூடிய ஒன்றாகத்தான் இருக்கிறது, இதிலே மக்கள் நல்வாழ்வு திட்டங்கள் எதுவுமில்லை என்று சொல்லி, அமைகிறேன்.





**திரு. செ. கந்தப்பன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் அரசியல் தலையீட்டைப் பற்றிப் பெரிதுபடுத்தவில்லை. இந்தப் பிரச்சினையை நீங்கள் கொஞ்சம் கவனித்துப் பார்க்கவேண்டும். பத்திரிகையிலே சில நாட்களுக்கு முன்னால் ஒரு செய்தி வந்தது. ஒரு பெண் இறந்திருப்பதாக செய்தி வந்திருக்கிறது. I am clarifying my position. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது என்று திரு. வேலப்பன் அவர்கள் சொன்னதற்காக நான் இந்த விளக்கத்தைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து விசாரணை நடந்து வருவதாக தெரிகிறது. நான் சுட்டிக்காட்ட விரும்புவதெல்லாம் "அரசியல் தலையீடு" என்று சொல்லும் பொழுது, அது சாதாரண ஒரு குற்றச்சாட்டில்லை. அது கடுமையான குற்றச்சாட்டு என்பதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் ஒத்துக்கொள்ளவில்லை.

It is the easiest possible accusation and the weakest possible argument. That is my contention.

**திரு. செ. கந்தப்பன் :** ஒரு பெண் கற்பழிக்கப்பட்டதினால் இறந்திருக்கிறாள் என்று உறுப்பினர் சொல்லும் பொழுது அந்தக் குற்றச்சாட்டை நிரூபிக்க வேண்டும். He must be able to substantiate it.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை சப்ஸ்டான்சியேட் பண்ணவே முடியாது.

**திரு. செ. கந்தப்பன் :** இந்த வழக்கிலே சம்பந்தப்பட்டிருக்கிற ஒருவர் அண்ணா தி.மு.கழகத்திலிருந்து தி.மு. கழகத்திற்கு வர முயற்சித்தார். அவர் அவ்வாறு சேரக் கூடாது என்று நாங்கள் தடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. சி. வே. வேலப்பன் :** திரு. கந்தப்பன் அவர்கள் தலையிட்டுத் தான் அதைச் செய்தார்கள் என்று நான் உறுதியாகச் சொல்லுகிறேன்.

**திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையின் மீது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விவாதத்திலே நானும் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தாழ்வுற்று அடிமைப்பட்டு கிடந்த சமுதாயத்திற்கு நல்ல எழுச்சியும் ஏற்றமும் தந்து ஊக்குவித்துத் தந்த தந்தை பெரியார் அவர்கள் நம்மிடம் இப்பொழுது இல்லை. இங்கே சாதாரண குடும்பத்திலே பிறந்து, தாழ்த்தப்பட்ட மேலும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஏழை எளியவராக இருக்கும் நம்மைப் போன்றவர்கள் எல்லாம் இந்த சட்ட மன்றத்திலே சட்ட மன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர்களாகவும் இருக்கக் கூடிய ஒரு அரிய வாய்ப்பினை உருவாக்கித் தந்ததே தந்தை பெரியார் அவர்கள் தான். அவர்களுடைய பிரிவு நம்மை ஆழ்ந்த துயரத்திலே ஆழ்த்தியுள்ளது. அது குறித்து நம்முடைய கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

ஸ்தாபன காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் பேசும் பொழுதும், அ.தி.மு.க. உறுப்பினர், திரு. வேலப்பன் அவர்கள் பேசும்பொழுதும் மதுவிலக்கு கொள்கையைப் பற்றி விரிவாகச் சொன்னார்கள். மதுவிலக்கு கொள்கையை நாம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒத்தி வைத்து அதன் பிறகு இப்பொழுது இந்த ஆண்டு கள்ளு கடைகளை நீக்கிவிட்டு, 1974 ஆகஸ்ட்டோடு சாராயக் கடைகளையும் போக்கவிருக்கிறோம். மேலும் நம்முடைய நிதி வசதியைக் கருதி அயல்நாட்டு மது பானங்களான ஒயின் போன்றவற்றை மட்டும் வைப்பதற்கு ஏற்பாடு செய்து கொள்ளலாமா என்று முதலமைச்சர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நோக்கிலே அகில இந்திய கட்சியாக இருக்கிற ஸ்தாபன காங்கிரஸும், அகில இந்திய கட்சியாக நினைக்கிற அண்ணா தி.மு.கழகமும் தமிழ்நாட்டில் மட்டும் நாங்கள் போராட்டம்





நடத்துவோம், இந்த மதுவிலக்கு கொள்கையை பூரணமாக நீங்கள் அமுலுக்கு கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அடுத்த மாதம் பாண்டிச்சேரியில் தேர்தல் நடக்கவிருக்கிறது. அப்பொழுது இரண்டு கட்சிகளும் தேர்தல் அறிக்கையில் நாங்கள் பூரண மதுவிலக்கை அமுலுக்கு கொண்டு வருவோம் என்று அறிக்கையிலே குறித்துவிட்டு, அதற்குப் பிறகு அங்கே வாக்கு கேட்பார்களேயானால் அதை நாம் பாராட்ட முடியும். அதை விட்டுவிட்டு ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி என்கிற பழமொழி சொல்வார்களே—அதைப் போல எந்தப் போராட்டம் என்றாலும் தமிழ்நாடுதான். நாட்டில் இருக்கிற இந்த ஆட்சியை இடித்துக் கூறி மேலும் நல்ல காரியம் செய்வதற்கு உதவிடாமல் நாட்டில் மேலும் மேலும் பல குழப்பங்களை ஏற்படுத்துவது நல்ல பாரம்பரியம் உள்ள ஸ்தாபன காங்கிரசுக்கு அழகல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது ஆளுநர் உரையில்—நம் நாட்டுப் பொருளாதாரம் விவசாயப் பொருளாதாரம் தான். மாநில மக்களுக்கு நீர்வளமும், நிலவளமும் வேண்டும். நீர் வளத்தைப் பயன்படுத்த மின்சார வசதி வேண்டும் என்பதற்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற 1,500 கோடி ரூபாயில் மின்வசதிக்காக 326 கோடி ரூபாயும், பாசன வசதிக்காக 129 கோடி ரூபாயும் ஒதுக்க இருப்பதை நான் வரவேற்கிறேன். இப்படி எல்லாம் செய்து உணவு உற்பத்தியைப் பெருக்கி, இந்த மாநிலம் உபரி மாநிலமாக, மற்ற மாநிலங்களுக்கு உணவுப்பொருளை அளிக்கும் வகையில் பற்பல திட்டங்களை நாம் தீட்டிக்கொண்டிருக்கிற நேரத்தில் மத்திய அரசு நமது மாநில அரசுக்கு ஒதுக்க வேண்டிய தொகையைக்கூடக் குறைத்திருப்பது, நீ இதை எல்லாம் ஏன் செய்கிறாய், உன்னை தண்டிக்கிறேன் என்பதைப்போலத்தான் இருக்கிறது. 1973-74-ம் ஆண்டுக்கு ஒதுக்கிய தொகை மத்திய அரசு தொழில்துறையில் செய்த முதலீட்டில் நமது மாநிலத்திற்கு 40 கோடி என்று ஒதுக்கியிருப்பதுதான் நமது மாநிலத்தை தண்டித்திருப்பதுபோல இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஓரவஞ்சனை முறையை மத்திய

[திரு. வி. மல்லிக்கண்ணன்] [1974 சனவரி 19

அரசு இனிமேல் தவிர்த்து, சிறப்பாக பணியாற்றுகிற நமது மாநிலத்திற்கு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கத்தக்க வகையில் நிதி ஒதுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய நாட்டில் நல்ல உணவு உற்பத்தியிருக்கிறது. போன ஆண்டையும்விட இந்த ஆண்டு அதிகம் உற்பத்தி பண்ண இருக்கிறோம் என்கிற நேரத்தில் நமக்கு உணவு உற்பத்திக்கு ஆதாரமான உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் சரிவரக் கிடைக்கவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நமது டாக்டர் முதல்வர் அவர்கள் டெல்லியில் நடந்த கூட்டத்தில் பேசும்போது நமக்கு இன்னும் அதிகமான உரம் கொடுத்தால் அதிகம் உற்பத்தி செய்து மற்ற மாநிலங் களுக்குத் தர முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், இந்த ஆண்டு நாம் கேட்டது 3.15 லட்சம் டன் நைட்ரஜன் என்றால் நமக்குக் கொடுத்திருப்பது 2 லட்சம் டன் தான். அதேபோல பூச்சிக்கொல்லி மருந்துகளும் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே ஒன்று மத்திய அரசு நமக்குத் தேவையான உரத்தை, பூச்சிக்கொல்லி மருந்தை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்துகொள்ள அனுமதி கொடுக்கவேண்டும். உள்நாட்டில் அவற்றை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்ய ஆக்கத்தையும், ஊக்கத்தையும் தரவேண்டும். தூத்துக்குடியில் ஸ்பிக் தொழிற்சாலை துவங்கியிருக்கிறது. ஜூன் மாதம் முதல் உற்பத்தி துவங்க இருக்கிறது என்பது மிக்க மகிழ்ச்சியை அளிக்கும் செய்தியாகும்.

என்றாலும், நாம் நமது மாநிலத்தில் நாலே அதிகம் உற்பத்தி செய்தாலும் அதனை இங்கே தேவைக்கேற்ப விநியோகித்துக் கொள்கிற அதிகாரம் நமக்கில்லை. நாம் இங்கே மிக அதிக அளவில் ஜீனி உற்பத்தி செய்கிறோம் என்றாலும் அதை இங்கே விநியோகித்துக்கொள்கிற அதிகாரம் நமக்கில்லை. அப்படி தூத்துக்குடியில் ஜூன் மாதம் முதல் உரம் உற்பத்தி செய்யப் போகிறோம் என்றாலும் அதை நம்முடைய மாநிலத் தேவைக்கேற்ப விநியோகித்துக்கொள்கிற அதிகாரம் நமக்கு இல்லை என்றால் இங்கே அதனை உற்பத்தி செய்து என்ன பயன் என்றுதான் நான் கேட்கவிரும்புகிறேன். ஆகவே தூத்துக்குடியில் உற்பத்தியாகிற உரத்தை நம்முடைய தேவைக்குப் பூராவும் எடுத்துக் கொண்டு



1974 சனவரி 19] [திரு. வி. மல்லிக்கண்ணன்]

மிதமிருந்தால்தான் வெளியில் அனுப்பவேண்டும் என்று மத்திய அரசுக்குத் தெரிவித்து, முடிவு எடுக்கவேண்டும். உரம் இல்லை, சீனி இல்லை என்கிற அகில இந்தியக் கட்சிகளும் இந்த விஷயத்தில் எங்களோடு சேர்ந்து கொள்ளவேண்டும். அப்போதுதான் மக்களுக்காக உழைக்கிற நாணயம் அந்தக் கட்சிகளுக்கு இருக்கிறது என்றாகும். கட்சிக்குக் கட்சி கருத்து வேறுபாடு, ஒரு கட்சியை அழித்துவிட்டு ஒரு கட்சி ஆட்சிக்கு வர முயற்சிப்பது மட்டும் ஜனநாயக முறையில் நாட்டு மக்களுக்கு உறுதுணை செய்வதாக ஆகாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் உரையில் இந்த ஆண்டில் 27,000 மைனர் இர்ரிகேஷன் டாங்க்களை எடுத்து மராமத்து செய்து அவற்றை தர மேம்பாடு செய்துதர இருப்பதுபற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். இது உற்பத்தியை அதிகமாகப் பெருக்கு வதற்கு உதவியாக இருக்கும். இதுவரை ஜமீன் காலத்தில் இருந்து இந்த மைனர் டாங்க்கள் சரிவர மராமத்து பண்ணப்படாமல் இருக்கின்றன. பஞ்சாயத்து ஒன்றியங்களின் மூலம் செய்கிறபோது ஆயிரம் இரண்டாயிரத்தில் எதுவும் செய்ய முடியவில்லை. ஆகவே, 1,500 கோடியை ஐந்தாண்டுத் திட்டத்தில் இதற்காக ஒதுக்கி யிருப்பதை நான் பாராட்டுகிறேன்.

அடுத்தாற்போல தொழில்வள மேம்பாட்டுக்காக இந்த அரசு பல காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. இதற்கு ஊக்கம் அளிக்காமல் திரு. வீராசாமி சொன்னதைப்போல, நீங்கள் நூறு கோடி கல்விக்காகச் செலவிடுகிறீர்கள், மருத்துவத் துறைக்காகச் செலவிடுகிறீர்கள், அதனால் உங்களுக்கு ஒதுக்கப்படுகிற தொகையைக் குறைப்போம் என்று மத்திய அரசு சொல்வது மிகமிக வருந்தத்தக்கதாகும். இப்படிப்பட்ட மனோபாவத்தை மத்திய அரசு தொடர்ந்து நம்பால் கொள்ளக்கூடாது.

அடுத்தாற்போல, நமது ஆளுநர் தம் உரையில் பல திட்டங்களை மத்திய அரசு செய்யவேண்டும் என்று வலியுறுத்திக்காட்டியிருக் கிறார்கள். குறிப்பாக நெய்வேலியில் இரண்டாவது சுரங்க வெட்டு, கல்பாக்கம் அணுமின்நிலையம், சேதுசமுத்திரத் திட்டம் —இப்படிப்பட்ட திட்டங்களை மத்திய அரசு உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வி. மலைக்கண்ணன்] [1974 சனவரி 19

அடுத்தாற்போல எனது இராமநாதபுரம் மாவட்டம் எப்போதும் வறட்சியான மாவட்டம். மிகவும் புறக்கணிக்கப்பட்ட மாவட்டம். நான் பல ஆண்டுகளாக சட்ட மன்ற உறுப்பினராக இருந்தும் முன்பெல்லாம் எனது சிற்றூரில் இருந்து சைக்கிளில் தான் இளையான்குடிக்கு வரவேண்டும். இப்போது பஸ்போகக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. என்றாலும், இதுபோல நூற்றுக்கு 99 பகுதிகள் இருக்கின்றன. ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் சாலை வசதிகள், கண்மாய் வசதிகள் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்த அதிகமான நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல, எங்கள் மாவட்டத்தில் ராஜசிங்கமங்கலம் கண்மாய் இருக்கிறது. அது 15 மைல் நீளமுள்ளது. அதன் குறுக்கே ஒரு பாலம் கட்டித்தரவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நெடுநாளாக இருக்கிறது. அதுபற்றி நானும், தென்னரசு எம்.எல்.சி. அவர்களும் வலியுறுத்தி வந்திருக்கிறோம். அதை இந்த ஆண்டாவது அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கண்மாய்க்கு வங்கியாற்றில் இருந்து தண்ணீர் பாய 7½ லட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டது. இப்போது திருத்தப்பட்ட மதிப்பீடு 14 லட்சத்திற்கு வந்திருக்கிறது. அதையும் சாங்ஷன் செய்துதரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஹைவேசில் உக்கிரபட்டி—ஆண்டிசத்திரத்திற்கு போகிற சாலையை 12 ஆண்டுகளுக்கு முன்னாலேயே எடுத்துக் கொண்டார்கள். மழைகாலத்தில் இன்றைக்கும் அந்தச் சாலையில் பஸ் போக முடியாது. அந்தச் சாலையில் 3 இடங்களில் பாலங்கள் கட்ட வேண்டும். வருகிற ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்தச் சாலையில் அந்த 3 பாலங்களையும் கட்டித் தர ஆவன செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இளையான்குடியில் நாங்கள் நிலவள வங்கிகள் மூலம் பல விவசாயிகளுக்குக் கடன் கொடுத்திருக்கிறோம். அவர்கள் கிணறு எடுத்து மோட்டார் பம்பு செட்டு வாங்கி ரூம் கட்டி வைத்திருக்கிறார்கள். ஆனால் இன்னமும் மின்சார இணைப்புக் கொடுக்கப் படவில்லை. இராமநாதபுரம் பஞ்சப் பிரதேசம். மிளகாய், கடலை



1974 சனவரி 19] [திரு. வி. மலைக்கண்ணன்]

போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் உடனடியாக மின் இணைப்புக்கொடுத்தால் கண்மாயில் தண்ணீர் இல்லை என்றாலும் கிணற்றின் மூலமாகத் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள வசதி ஏற்படும். ஆகவே மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக இளையான்குடியில் நிலவள வங்கிகள் மூலமாகக் கடன்கொடுக்கப் பட்டவர்களுக்கு மின் இணைப்புக்கொடுக்க ஆவன செய்யவேண்டும். இந்த ஆண்டு அங்கே நட்ட பயிரைக் கூட தண்ணீர் இல்லாக் கொடுமையினால் பிடுங்கி எறிந்து விட்டார்கள். ஆகவே, வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அதனைப் பஞ்சப்பகுதியாக அறிவித்து வரிவஜா செய்ய முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்ச நிவாரண வேலைகளையும் அங்கே செய்யவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12.30)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திலே நாங்கள் ஏமாந்திருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு ஒருசில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மிக முக்கியமான பிரச்னைகளைப்பற்றியெல்லாம் நாங்கள் கவர்னர் பெருமான் உரையிலே காணாமல், இது என்ன கவர்னர் பெருமான் அறிக்கையா. அல்லது ஆளும் கட்சி அங்கத்தினர் சொன்ன மாதிரி ரெயில்வே கெயிடா, டெலிஃபோன் கெயிடா, இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை வரிசைப் படுத்திக் குறிப்பிட்ட அறிக்கையா என்று வேதனைப்படக் கூடிய சூழ்நிலையிலே இருக்கிறது என்று எடுத்துச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

இந்த அரசாங்கத்திற்கு வருங்காலத்திலே என்ன கொள்கை, இருக்கும், என்ன கொள்கையை கடைபிடிக்கப்போகிறது, என்ன தீவிரமான மாற்றங்களைச் சமுதாயத்திலே செய்யவிருக்கிறது, எந்தவிதமான கொள்கைகளுக்கு அரசு ஆட்கொள்ளப்போகிறது என்ற விவரங்கள் அதில் இருக்கும் என்றுதான் எதிர்க் கட்சிக் காரர்களும் நாட்டுமக்களும் எதிர்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இதிலே பார்த்தால், இவர்களுடைய கொள்கை என்ன என்பதும் புரியவில்லை, எந்தக் கொள்கையின்

அடிப்படையிலே இனி சட்டதிட்டங்களைக் கொண்டு வரப் போகிறார்கள் என்பதும் புரியவில்லை, தெரியவில்லை, உப்பும் சப்பும் இல்லை இந்த அறிக்கையிலே.

ஆனால், இதிலே என்ன வாடை வீசுகிறது என்றால், ராஜமன்னார் குழு என்று ஒன்று அமைத்தார்களே, அக்குழு அறிக்கையினுடைய சாயலாகத்தான் இருக்கிறதே தவிர, இவர்கள் என்ன செய்யப் போகிறார்கள், என்ன முன்னேற்றத்தை இவர்கள் கொண்டு வரப்போகிறார்கள். இவைபற்றி ஏதாவது உண்டா இல்லையா என்பதை மனச்சாட்சி உள்ளவர்கள் ஒத்துக்கொள்வார்கள். அதற்குப் பதிலாக. பாதிக்கு மேல் போதாது, அது போதாது, இது போதாது. அங்கே கொடுக்க வேண்டும், இங்கே கொடுக்க வேண்டும், இதற்கு கோடிக் கணக்கிலே வேண்டும், அதற்கு வேண்டும் என்ற குறை கூறப்பட்டிருக்கிறதே தவிர, இப்பொழுதுள்ள நிர்வாகத்திலே மக்களின் பிரச்னைகளை இவர்கள் கவனிக்கிறார்களா, கண்காணித்துக் கொள்கிறார்களா என்பதற்கு எத்தகைய குறிப்பும் இல்லை.

இங்கே இருக்கின்ற உறுப்பினர் ஒருவர், இருக்கின்ற பிரச்னையை விட்டுவிட்டு, பறக்கின்ற பிரச்னையைப் பற்றி பேசினார்கள். இங்கே இருக்கின்ற பிரச்னைகள், அரசை எப்படித் திறமையாக நடத்துவது, மக்களை வாழ்விக்க நாம் என்னென்ன செய்ய வேண்டும், முன்னேற்ற திட்டங்களை எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதைக் காணாமல் எங்கோ பறக்கின்ற பிரச்னையைப் பற்றிப் பேசுவது, நிதிக் கமிஷன் அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசுவதைப் பார்த்தால், உண்மையிலே வேதனைப்பட வேண்டியதாக இருக்கிறது. தமிழகத்திலே இருக்கிற மக்கள் எவ்வளவு அல்லல்படுகிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் கடுமையாகப் புரிந்துகொள்ளவில்லையென்பதைத்தான் நான் சுட்டிக் காட்ட அபிப்பிராயப்படுகிறேன்.

இன்றைக்கு விஷம்போல் விலை ஏறியிருக்கிறது. ஆனால், அங்கத்தினர் வீராசாமி அவர்கள் குஜராத்திலே பார்த்தீர்களா, பம்பாயிலே பார்த்தீர்களா, அங்கெல்லாம் எப்படி விலை ஏறியிருக்கிறது என்று சொல்கிறார். அங்கு ஏறியிருக்கிற விலையைக் காண்பித்து இங்கு ஏறியிருக்கிற விலையை மறைத்துவிட தமிழக மக்கள் அவ்வளவு ஏமாளிகள் அல்ல. காரணம், குஜராத்தைக் காட்டிலும், பம்பாயைக் காட்டிலும் சிறப்பான ஆட்சி தமிழகத்திலே நடந்தது. அப்பொழுது எவ்வளவு அணைகளைக் கட்டினார்கள்? அப்பொழுது உணவுப் பிரச்னைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தார்கள்? மின்சாரப் பிரச்னைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து, அனைத்தையும் கவனித்து இருக்கிறார்கள் . . .





**திரு. நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, அப்படி எல்லாம் இருந்தும் 1966-ம் ஆண்டு இங்கு அரிசி இல்லை, உணவுப் பண்டங்கள் கிடைக்கவில்லை, நாட்டு மக்கள் இதே உணவுப் பொருள் களுக்காகத் தவியாய்த் தவித்தார்கள். அப்பொழுது அம்மையார் அவர்களும் அதே ஆட்சியிலேதான் உறுப்பினராக இருந்தார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** 1966-லே பஞ்சம் இருந்தது, 1967-லே நீங்கள் அறுவடை செய்தீர்கள். நாங்கள் போட்ட அஸ்திவாரம்கொண்டுதானே நீங்கள் அறுவடை செய்தீர்கள். நீங்கள் வந்தவுடன் மந்திரத்தில் அணைக்கட்டுகளைக் கட்டி, உணவுப் பிரச்னையை சமாளித்தீர்கள் என்றால் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை, பொதுமக்களும் ஏற்றுக்கொள்ள தயாராயில்லை. பம்பாய் மாதிரி, குஜராத் மாதிரி அவல நிலை காணாமல், இன்றைக்குத் தமிழ் மாநிலம் முன்னேறியிருக்கும். நீங்கள் வந்ததிலிருந்து உணவுத் துறையில் கவனம் செலுத்தியிருந்தால், இன்றைக்குத் தமிழகம் உபரி மாநிலமாக இருந்திருக்கும்.

1973-74-ல் நாங்கள் எதிர்பார்க்கின்ற 74 லட்சம் கிடைக்குமோ கிடைக்காதோ என்று சந்தேகப்படுகிறீர்கள். நீங்கள் நன்றாக நிர்வாகம் செய்திருந்தால் அந்த சந்தேகம் ஏற்பட்டிருக்காது. உங்கள் திறமையற்ற நிர்வாகத்தினாலும், வருங்காலத்திலே என்னென்ன தேவை என்பதைக் கணக்கிடத் தெரியவில்லை. 27,000 கண்மாய்களை நீங்கள் இனி தேடப்போகிறீர்கள். நீங்கள் ஆட்சிக்கு வந்த உடனே, நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? அணைக் கட்டுகள் கட்டி முடிந்தவுடனே, நீங்கள் கால்வாய்களுக்கும் கண்மாய்களுக்கும் தானே போகவேண்டும். ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 7 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு, 27,000

கண்மாய்கள் பஞ்சாயத்து யூனியன்களிடம் இருக்கின்றன. அவற்றை இனிமேல் சீர்படுத்தப் போகிறோம், செப்பனிடப் போகிறோம், மேம்படுத்தப்போகிறோம் என்று சொல்கிறீர்கள்.

அதே மாதிரி, இன்றைக்கு குழாய்க் கிணறுகளைப் போட முற்பட்டிருக்கிறோம். கிணறுகளைத் தோண்டுகிறோம். தோண்டி என்ன பயன்? கிணறுகளைத் தோண்டி, பம்ப் செட்டை வைத்து, மின்சார இணைப்பு இல்லையென்று உட்கார்ந்து கொண்டிருக்கிறான். என்ன பலன்? மின்சார உற்பத்தியை நீங்கள் அதிகரித்திருந்தால் இன்றைக்கு 75 சதவிகிதம் வெட்டு, 15 சதவிகிதம் வெட்டு. இந்த வெட்டிலே கள்ளச் சந்தை. இத்தனை குற்றங்களுக்குத் தமிழகம் ஆளாக்கப்பட்டிருக்காது. மின்சார இணைப்பை 4 மாதங்களுக்குள் கொடுக்கவேண்டும். அதுவும் மாநிலத்திலேயே பிற்பட்ட மாவட்டமாகிய இராமநாதபுரத்திலே, உங்கள் கட்சியைச் சேர்ந்தவர் சொன்னார், கிணறு வெட்டுவதே பெரிய முன்னேற்றம்—அம்மாவட்டத்திலே—கிணறு வெட்டி பம்ப் செட் வைக்கப்பட்டது, அது அதைவிட முன்னேற்றம். இத்தனையும் செய்துவிட்டு அவன் மின்சாரம் கிடைக்காமல் இருக்கிறான் என்றால் ஏன் இந்த அவல நிலை? நிர்வாகத்தில் ஏன் கணக்கிட்டு நடவடிக்கை எடுக்கவில்லை?

அடுத்து, விலைவாசியைப் பற்றி சொல்லும்போது, அது உலகப் பிரச்னை என்கிறார்கள். அது ஒரு பக்கம் இருக்கிறது. அரேபிய நாட்டுக்காரன் எண்ணெய் கொடுக்க மறுக்கிறான். பண வீக்கம் உலகத்திலேயே அப்படி இருக்கிறது. பண வீக்கத்தை இரண்டு விதங்களில் அடக்கலாம். ஒன்று உற்பத்தியைப் பெருக்கி, பண வீக்கத்தை ஒடுக்கலாம். மற்றொன்று நிதிக் கொள்கையை வைத்து பண வீக்கத்தை அடக்கலாம். நீங்கள் உற்பத்தியைப் பெருக்கி அத்தியாவசியப் பொருள்களையாவது சாதாரண ஏழை மக்கள் வாங்கக் கூடிய அளவிலே செய்திருக்கக் கூடாதா?

தேங்காய் எண்ணெய் விலை ஒரு கிலோ ரூ. 15, நல்லெண்ணெய் ஒரு கிலோ ரூ. 8.80, பருப்புகள் என்ன விலை? காய்கறிகள் என்ன விலை? நீங்கள் காய்கறிக் கடைகளை ஆரம்பித்தீர்கள், கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் காய்கறிகளைப் பயிரிட்டீர்கள். அங்கு என்ன இருக்கிறது? காய்ந்த கத்தரிக்காய். அரசாங்கம் நடத்துகிற நியாய விலைக் கடைகளில் இந்த மாதிரி. அங்கு என்ன





விலை? அரசாங்கம் என்ன வகையிலே நடத்துகிறது? காய்கறிக் கடையை நடத்த முடியவில்லை, மற்ற கடைகளை எங்கே நடத்தப் போகிறீர்கள்?

கன்ஸ்யூமர் கவுன்சில்ஸ் கோவாபரேடிவை ஆரம்பித்தீர்கள். எத்தனையோ கோவாப்பரேடிவ் கடைகளை ஆரம்பித்து நடத்தியும் இன்றைக்கு விலையைக் கட்டுப்படுத்த முடியாதிருக்கிறது. கூட்டுறவுக் கடைகளிலே அநியாய விலைகள் . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எந்த எந்த வகைகளிலே கட்டுப்படுத்துவது என்பதைப்பற்றி ஆராய்ந்து நாம் முனைந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு உங்களிடம் இருக்கிறது. எங்களால் கட்டுப்படுத்தக் கூடிய அரிசி விலையைக் கட்டுப்படுத்தி விட்டோம். சீனி விலையைத் கட்டுப்படுத்த, கார்டு சிஸ்டத்திலே கொடுக்கிறோம். பொறுப்பு உங்கள் கையிலே இருக்கிறது. மறுபடியும் கட்டுப்படுத்து, கட்டுப்படுத்து என்றால், யார் கட்டுப்படுத்துவது என்று தெளிவாக்க வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதற்காகத்தான் நாங்கள் சொன்னோம். எங்களுடைய கருத்து Essential Commodities Act 1955 (Act No. 10 of 1955). செக்ஷன் 5-ன்படி, இந்த மாநில அரசாங்கம் என்ன என்ன பொருள்களை வாங்க வேண்டுமென்று கருதுகிறதோ, அத்தியாவசியம் என்று கருதுகிறதோ, அத்தனையையும் வாங்கலாம். நீங்கள் அதன்மீது ஒரு ரெசலூஷன் போடுங்கள். நாங்களும் சேர்ந்து ஆதரிக்கிறோம்.

You get power from the Centre. Control the prices of all essential commodities here.

அங்கே இருக்கிறது, அங்கே இருக்கிறது என்று சொல்வதற்கு இங்கே ஒரு அரசாங்கமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே. கட்டுப்படுத்தக் கூடியவைகளையெல்லாம் கட்டுப்படுத்தியிருக்கிறோம். அரிசியைக் கட்டுப்படுத்தி இருக்கிறோம். மைதாவைக் கட்டுப்படுத்தி இருக்கிறோம். சீனியைக் கட்டுப்படுத்தி இருக்கிறோம். இந்த மாநில வாய்ப்புக்குள், இருக்கிற சட்டங்களைக்கொண்டு, கட்டுப்படுத்தக் கூடியவற்றைக் கட்டுப்

படுத்தி இருக்கிறோம். கடலையைக் கட்டுப்படுத்த முயற்சிக்கிறோம். ஆனால், மத்திய சர்க்கார் ஒத்துக்கொள்ள மறுக்கிறது. 6 மாதங்களாக, எண்ணெய் விலையைக் குறைக்க கடலைக்கு விலையை நிர்ணயித்து, 25 சதவிகிதம் லெவி போட வேண்டுமென்று அனுமதி அளிக்கவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். மீண்டும் சொல்கிறேன், மத்திய சர்க்கார் அதற்கு ஒத்துக்கொள்ள மறுக்கிறது. ஆகவே, அதற்கு வாதாடுவதற்குப் பதிலாக இவ்வாறு பேசுவது வேண்டுமென்றே சொல்வதாகும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இதைவிட என்றைல் சொல்ல முடியாது. நீங்கள் செய்யாவிட்டால் மக்களுக்குப் பதில் சொல்லுங்கள். எதிர்க்கட்சிக்காரர்கள் நாங்கள் சொல்கிறோம். மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். நீங்கள் செய்யாவிட்டால் மக்களுக்குப் பதில் சொல்லுங்கள். உணவுப் பண்டங்கள் நியாயமான விலையில் கிடைக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து, மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருங்கள். நாங்கள் கேட்கிறோம், கேட்கிறோம் என்று சொல்வதற்கு இங்கே ஒரு தபாலாபீஸ் அரசாங்கம் தேவையில்லை. இந்த அரசாங்கம் சக்தி படைத்த அரசாங்கமாக இருக்கவேண்டும். மக்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அரசாங்கம் தயாராக இருக்கவேண்டும்.

விலைகளை எப்படிக் கட்டுப் படுத்தலாம் என்று கேட்டார் அமைச்சர் அவர்கள். அவர்களுக்கு விளக்கம் சொல்ல ஆசைப்படுகிறேன். கன்ஸ்யூமர் கோவாப்ரேடிவ் சொசைட்டியிலே, நேர்மையான, திறமையான நிர்வாகம் இருந்தால், விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும். இன்றைக்கு என்ன நடக்கிறது? கூட்டுறவு சங்கத்திலே அவர்களே 70, 60 சதவிகிதப் பொருள்களை வெளிச் சந்தையிலே வாங்கி விற்கிறார்கள். நீங்கள் ஏன் அங்கே போகவேண்டும்? உற்பத்தியாளர்களிடமே பொருள்களை வாங்கி விற்கவேண்டும்.

You must go to the producers, but you are going to the private market வெளிச்சந்தையிலே—கொத்தவால்சாவடியிலே வாங்கி, தேனாம்பேட்டையிலே விற்றால் விலை அதிகமாகத்தான் இருக்கும். இராமநாதபுரத்திலே மிளகாய் வாங்கவேண்டும.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இராமநாதபுரத்திலேதான் மிளகாய் வாங்கப்படுகிறது. விவசாயிகளிடம் அதுவும் கூட்டுறவு சொஸைட்டி மூலமாக வாங்குகிறோம். கிராம சொசைட்டிகள் மூலமாக, அவர்கள் மூலமாக வாங்கப்படுகிறது. மிளகாயானாலும் மற்ற பொருள்களானாலும் உற்பத்தி செய்யப்படுகிற இடத்திலே வாங்கப்படுகிறது. இன்னும் அகில இந்திய கோவாப்ரேடிவ் சொஸைட்டி மூலமாக வாங்குவது பற்றி கவனித்துக்கொண்டிருக்கிறோம். விவரம் தெரிந்துகொள்ளாமல் பேசுவது நல்லதல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் ரொம்ப வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசாங்க அறிக்கையிலேயே sixty to seventy per cent of Rs. 149 lakhs worth of goods is brought from private traders.
என்று கிளீனைக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் படித்து விட்டுப் பேசுங்கள். நான் படிக்காமல் பேசவில்லை, குற்றம்சாட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. நீங்கள் படித்து விட்டு எதை எதை திருத்த வேண்டுமோ திருத்துங்கள். நீங்களே புரட்யூஸர்களிடம் போங்கள், சீஸனல் கிராப்ஸ் எங்கே குறைவாகக் கிடைக்கிறதோ அங்கே சென்று வாங்குங்கள், பிறகு நியாயமான விலையிலே மக்களுக்குக் கொடுங்கள். கூட்டுறவுத் துறையிலே கொள்ளைதான் நடக்கிறது. டி.யூ.சி. எஸ். மூலமாக விநியோகம் என்றாலும் சரி, சூப்பர் மார்க்கட் மூலமாக விநியோகம் என்றாலும்சரி, அளவு குறைவாகத்தான் இருக்கிறது என்று தினந்தினம் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டிலே நடைபெறுகின்ற விநியோகத்திலும் அப்படித்தான் அளவில் குறைக்கிறார்கள். பாக் பண்ணிக்கொடுத்தால் பொருட்களை குறைந்த அளவில்தான் கொடுக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, சிவில் சப்ளைஸ் டிபார்டிமெண்டிலேதான் சில பொருட்கள் கிடைக்கின்றன, கோவாப்ரேடிவ் சொசைடிகளிலே கிடைப்பதில்லை என்ற குறைபாடும் மக்களிடத்திலே இருந்து வருகிறது.

புட் ஸ்டப்ஸ்-க்கு விற்பனை வரியை நீக்கவேண்டும், அதேபோன்று விறகு—வணிகர்கள்கூட கேட்டிருக்கிறார்கள்—போன்ற அத்தியாவசியமான பொருட்களுக்கும் விற்பனைவரியை நீக்கவேண்டும். உங்களுக்குத்தான் வருமானம் ஏறிக்கொண்டே போகிறதே, பிறகு ஏன் அத்தியாவசியப் பொருட்களுக்கு வரியை நீக்கக்கூடாது? வரி போட போட மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால் தனியார் கடைகளுக்கு சென்றால் பில்வேண்டாம் என்று சொல்லிவிட்டு பத்துபைசா குறைத்து பொருட்களை வாங்கிக் கொள்கிறார்கள். ஆனால் கோவாப்ரேடிவ் கடைகளுக்கு சென்றால் அதற்கு வேறு பத்துபைசா கொடுக்கவேண்டியிருக்கிறதே என்று நினைக்கிறார்கள், தனியார்களிடம் வாங்கி அந்த பத்து பைசாவை மிச்சப்படுத்தலாமே என்றுதான் நினைக்கிறார்கள்.

ஆகவே, கூட்டுறவுத் துறைமூலம் விநியோகம் சரியாக செய்யப் படவேண்டும். நான் எப்பொழுதும் சொல்வது இதுதான். 250 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு எல்லாம் கார்டு கொடுத்து விடுங்கள், அவர்கள் எவ்வளவு கோதுமை வாங்கிக்கொள்ளலாம், எண்ணெய் வாங்கிக்கொள்ளலாம் என்று கொடுத்து விடுங்கள். அப்படி நீங்கள் செய்யவில்லையென்றால் எத்தனை ரூபாய் வந்தாலும்சரி ஒரு வேளை சாப்பாட்டுக்குக்கூட பற்றாமல் போய் விடுகிறது. மத்திய அரசாங்கம் கொடுக்கவில்லை, கொடுக்கவில்லை என்று எதற்கெடுத்தாலும் சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோ ஜனம் இல்லை.

மத்திய அரசாங்கம் 1969-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25,000 டன் கோதுமை கொடுத்தது, அதிலே 15 ஆயிரம் டன் உங்களால் கொடுக்கமுடிந்தது, மீதி 10 ஆயிரம் டன்னை அரை ரூபாய் கால் ரூபாய் என்று விற்று கணக்கு காட்டியிருக்கிறீர்கள். கொடுத்த கோதுமையைக்கூட உங்களால் சரிவர விநியோகம் செய்யமுடியவில்லை. 1973-ஆம் ஆண்டு 10 ஆயிரம் டன் கோதுமை கொடுக்கப்பட்டிருக்கிறது. எல்லோரும் சப்பாத்தி போன்றவற்றை சாப்பிட்டால் 15 ஆயிரம் டன் தேவை என்று சொல்லலாம். இன்றைக்கு அவர்கள் பத்து ஆயிரம் டன் கொடுத்து இருந்தும் கிட்டத்தட்ட மூன்றிலே இரு பங்கு கிடைத்தும்கூட நீங்கள் ஒழுங்காக விநியோகம் செய்கின்றீர்களா என்றால் இல்லை. கோதுமை, மைதா எந்த கோவாப்பரேடிவ்





கடையிலே கேட்டாலும் கிடையாது என்கிறார்கள். எனக்கே ஒரு மாதம் கொடுத்தால் இன்னொரு மாதம் இல்லையென்கிறார்கள். காலையிலேபோனால் மாலையிலே வா என்கிறார்கள், சரியாக விநியோகம் செய்வதில்லை. இப்படி டிஸ்ட்ரிபியூட்டரி ஸிஸ்டம் ராட்டன் ஆக இருக்கிறது. எத்தனையோ கடிதாசிகள் எனக்கு தினமும் வருகின்றன. அப்படி எழுதுகிறவர்களும், காப்பி டு தி சீப் மினிஸ்டர், காப்பி டு தி புட் மினிஸ்டர் என்று போடுகிறார்கள் ஆகவே அந்தக் கடிதங்கள் உங்களுக்கும் வந்து இருக்கும் என்று நினைக்கிறேன். சர்க்கரையாக இருக்கட்டும், கோதுமையாக இருக்கட்டும், மைதாவாக இருக்கட்டும், எதுவும் கிடைப்பதில்லை, அவையெல்லாம் வண்டியிலே ஏற்றப்பட்டு பெரிய பெரிய ஊர்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** எங்கே என்ன தவறு ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லவேண்டும். இரவு நேரங்களிலே கொண்டுபோகப்படுவதைக் கண்டுபிடித்து இருக் கிறோம். நடவடிக்கை எடுக்கப்படுகிறது. குறிப்பிட்டுச் சொல் லாமல் பொத்தாம் பொதுவாகச் சொல்வது சரியல்ல. கோதுமை 36 ஆயிரம் டன் கொடுத்தார்கள் முன்னாலே, இப்பொழுது 10 ஆயிரம் டன்தான் கொடுக்கிறார்கள். அதை வைத்து நாம் நிரவிக் கொண்டு இருக்கிறோம். எங்கே சரியாகக் கிடைக்கவில்லை யென்றும் சொன்னால் கவனிக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் வாங்குகிற கீழ்ப்பாக்கம் கோவாப்ரேடிவ் சொஸைடியிலேயே சரியாகக் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். நீங்கள் எங்கே தவறு என்ன தவறு என்று கண்டுபிடியுங்கள், உங்கள் கையிலேதான் போலீஸ் இலாகா இருக்கிறதே, எங்களைக் கேட்பானேன்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** சட்டசபையிலே ஏதாவது சொல்லவேண்டுமென்பதற்காகப் பொத்தாம்பொதுவாகச் சொல்லக்கூடாது. நீங்கள் அந்தக் கடைக்கு உங்களுடைய தொழில் நேரம் முடிந்தபிறகு போய் இருப்பீர்கள் கடையை மூடிவிட்டுப் போய் இருப்பார்கள், அல்லது போகவேண்டிய நேரத்தில் போகாமல் இருந்திருப்பீர்கள், கொடுக்காமல் போய் இருப்பார்கள். குறிப்பாக எங்கே கிடைக்கவில்லை என்று சொன்னார்கள் என்றால் கவனிக்கலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எனக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னேன். அவர்கள் ஏதோ எனக்குப் பதில் சொல்வதாக நினைக்கவேண்டாம். நான் டையபட்டீஸ் பேஷன்ட் கிடையாது, எனக்குக் கிடைக்கவில்லை யென்றால் பரவாயில்லை கோதுமையாக இருக்கட்டும் சர்க்கரையாக இருக்கட்டும் மக்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது, அதைப்புரிந்து கொண்டால் புரிந்து கொள்ளுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் தான் மக்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். என்மேல் கோபித்துக் கொள்வதில் அர்த்தமே கிடையாது. பலவிதமான குற்றச்சாட்டுகள் மக்கள் மத்தியில் இருக்கின்றன. என்னுடைய அமெண்ட்மெண்டிலே நான் தெளிவாகக் கொடுத்து இருக்கிறேன் . . .

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அவர்கள் டையபடிஸ் பேஷன்ட் இல்லையென்று சொல்லும்பொழுது ஏன் கோதுமை வாங்குகிறார்கள் என்று தெரியவில்லை. அதனால் டையபட்டீஸ் பேஷன்ட்களுக்குக் கிடைக்காமல் போகப் போகிறது. மக்கள், மக்கள் என்று சொல்லி அவர்கள் மிரட்ட வேண்டியதில்லை. அவர்கள் பேசும்பொழுது புள்ளிவிவரங்களோடு கருத்துக்களைசொன்னால் கவனிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மத்திய அரசாங்கம் உங்களுக்குக் கொடுத்த 10 ஆயிரம், டன் கோதுமையை ஒழுங்காக விநியோகம் செய்யவில்லை, உங்களிடம் கொடுத்த இரண்டு லட்சம் டன் உரத்தை நீங்கள் ஒழுங்காக விநியோகம் செய்யவில்லை. சலவையாளர்களுக்கு சோடா ஆஷ் கொடுக்கப் படுவதில் நீங்கள் ஒழுங்காக விநியோகம் செய்யவில்லை, இதைவிட வேறு என்ன புள்ளிவிவரம் வேண்டுமோ தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** இது புள்ளி விவரமே இல்லை. எங்கே தவறு நடந்திருக்கிறது என்று புள்ளி விவரம் கேட்டேன், அதைச் சொல்லாமல் பொத்தாம்பொதுவாகக் குறிப்பிட்டு அவர்கள் ஒப்பாரி வைப்பது சரியல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என் ஒப்பாரியை விட அவர்கள் ஒப்பாரிதான் பலமாக இருக்கிறது. உங்களுடைய ஜூரிஸ்டிக்ஷனிலே விநியோகம் ஒழுங்காக இல்லையென்றால்



நீங்கள்தானே பார்க்கவேண்டும். சோடா ஆஷ் 95 காசுக்கு கிடைக்கவேண்டியது 2 ரூபாய் 3 ரூபாய் கொடுத்து சலவையாளர்கள் வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது, ஒரு கிலோ கோதுமை 3-20 அல்லது 4-20 என்று அளவிற்குக் கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே விநியோக முறை சரியில்லை. பிரமாதமாக செய்தித்தாள்களில் விளம்பரம் கொடுக்கிறார்கள். ஆனால் விநியோகம் சரியில்லை. உங்கள் கையில்தானே போலீஸ் இருக்கிறது, அதை வைத்துக்கொண்டு தவறுகளைக் கண்டுபிடியுங்களேன் யார் தவறு செய்கிறார்கள் என்று கண்டுபிடியுங்களேன். கூட்டுறவுக் கடைகள் நல்ல முறையிலே நடைபெற்றால்தானே வெளிச்சந்தையோடு நாம் போட்டியிட முடியும். நியாயமான முறையில் மக்களுக்குக் கிடைக்காமல் அவர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் விலையேற்றத்தினாலே கடுமையான நிலைமை ஏற்பட்டு மக்கள் அவதிப்படுகிற நிலைமை நீடிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கவர்னர் பெருமான் உரையிலே பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். 5 லட்சம் பேர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். வருடத்திற்கு வருடம் படித்து படித்துவந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. வேலை வாய்ப்புக்கள் எப்படிக் கொடுக்கவேண்டுமென்பதற்கு மத்திய அரசு சில கைட் லைன்ஸ் கொடுத்திருக்கிறது. ஒரு குடும்பத்திலே யாரும் எந்த விதமான வருமானமும் இல்லாமல் இருந்தால், படித்திருந்தால் அவர்களுக்கு முதலிலே கொடுக்கவேண்டும், பிற்பட்டவர்களுக்கு, அரிசனங்களுக்கு முதற் சலுகை கொடுக்கவேண்டுமென்று கொடுத்திருக்கிறார்கள். அப்படி வேலை இன்றைக்குக் கொடுக்கப்படுவதில்லை. யார் செல்வாக்கு, செல்வம் படைத்து இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் கிடைக்கிறது. அது இல்லாத அப்பாவியாக இருந்தால் வருடக்கணக்கிலே ஆகியிருந்தாலும் அவன் வாடிவதங்க வேண்டிய நிலைமைதான் இருக்கிறது. எப்படி தொழில் வளம் பெருக வேண்டுமென்று இந்த அரசாங்கம் முயற்சியெடுக்கிறதோ, அதைப்போன்றே வேலை யாருக்கு எப்படித் தரவேண்டுமென்பதிலேயும் அக்கறை காட்டவேண்டும்.

தொழிலாளர்கள் மத்தியிலே இன்றைக்கு ஒரு அவல நிலை இருந்துகொண்டிருக்கிறது. உறுப்பினர் வீராசாமி பேசும் பொழுது சொன்னார், இண்டியன் ஏர்லைன்ஸ் ஸ்ட்ரைக், எல்.ஐ.சி. லாக் அவுட் என்றெல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களும் வேலைநிறுத்தம் செய்கிறார்கள், 10 ரூபாய்க்கூட வழியில்லாதவர்களும் வேலை நிறுத்தம்செய்கிறார்கள். வேலைநிறுத்தம் தொழிலாளர்கள் செய்கிறார்கள் என்றால் ஒப்புக்கொள்ளலாம், ஆனால் அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்களிலே புகுந்துகொண்டு செய்வதை ஒப்புக்கொள்ளமுடியாது. ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம்தான் என்று கொண்டுவந்தால் சரியாக இருக்கும்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, நம்முடைய முதலமைச்சரவர்கள் ஓராண்டு காலத்திற்கு முன்பு இந்தத் தத்துவத்தைத்தான் சொன்னார்கள். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்பது எங்கள் கொள்கை, அதை எல்லாக் கட்சியினரும் ஏற்றுக்கொள்கிறீர்களா என்று கேட்டார்கள். எந்தக் கட்சியும் ஏற்றுக்கொண்டதாக இந்தச் சட்டமன்றத்தில் அறிவிக்கவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தத்துவம் பேச வேண்டாம். ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம் என்று இருந்தால் பல பிரச்சினைகளைச் சமாளிக்க முடியும். ஏழு பேர் சேர்ந்துகொண்டு கூட ஒரு சங்கத்தை ஆரம்பித்தால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. வேலைநிறுத்தம், லாக்-அவுட் என்று மாறிமாறி வந்து கொண்டிருந்தால் உற்பத்தியை எப்படிப் பெருக்கமுடியும்? ஆகவே தொழிலாளர்கள் மத்தியில் எப்படி நாம் சரியான தீர்வைக் காண்பது என்பதற்கு இந்த அரசு நல்ல முடிவை எடுக்க வேண்டும்.

அதேபோல் கேட்பாரற்றுக் கிடக்கும் தொழிலாளர்கள் சம்பந்தமான அறிக்கைகள். ஹோட்டல் ஒர்க்கர்ஸ் பற்றி ஒரு ரிப்போர்ட்டு இன்னும் இங்கு வரவில்லை. அந்த அறிக்கை என்ன, அதன் விவரம் என்ன, என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கின்றன என்பது தெரியவில்லை. ஏனென்றால் அதில் போதிய சுறுசுறுப்பு காட்டப்படவில்லை.





கைத்தொழிலை எடுத்துக்கொண்டால் நெசவாளர்கள் சம்பந்த மாக 1973-லே வந்த சந்தானம் அறிக்கையை ஆற அமர 74-ஆம் ஆண்டு ஜனவரியில் சட்டசபையில் வைக்கிறீர்கள். ஒரு வருஷமாக என்ன செய்தீர்கள்? நெசவாளர்களைப்பற்றி உங்களுக்கு அக்கறை இல்லை. அதற்காகச் சொல்கிறேன், நெசவாளர்களுக்கு என்று தனியாக ஒரு அமைச்சரைப் போட வேண்டும். அவர் தொழில் மந்திரி, பெரும்பெரும் தொழிற் சாலைகளைப் பார்க்கிறார், அவருக்கு இந்த சின்ன கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினையைப்பற்றி எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? கைத்தறி நெசவாளர்கள் நூல் இல்லை என்று கொந்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அதைப்பற்றியே கவலைப்படவில்லை. நிர்வாகத் திறமை வேண்டுமென்ற அக்கறை இல்லை. இதைப்பற்றி நாங்கள் ஏதாவது கேட்டால் நீங்கள் என்ன கேட்பது, நான் என்ன சொல்வது என்று சொல்லி விடுவார்கள்.

போலீஸ் இலாகாவின் நிர்வாகம் எப்படியிருக்கிறது என்பது சம்பந்தமாக ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். கிளைவ் ஹாஸ்டல் சம்பவம், பாளையங்கோட்டை சம்பவம் ஆகியவைகளின் முடிவு சம்பந்தமாக மாணவர்கள் கிளர்ச்சி நடத்தினால் அவர்களைக் கைது செய்கிறீர்கள். அவர்கள் சமூகக் குற்றவாளிகளா?

அதேமாதிரி பெரியகுப்பம் சம்பவம் பற்றி அறிக்கை தயார் செய்ய வேண்டும். விசாரணை நடத்த வேண்டுமென்று சொன்னோம். அந்த அறிக்கை இன்னும் வரவில்லை. அதற்கு ஏன் தாமதமாகிறது. அந்த விசாரணை கூட 'டிபார்ட்மெண்டல் என்கொயரி' தான் 'ஜுடிஷியல் என்கொயரி' கூட அல்ல. அப்படியிருந்தும் காலதாமதத்திற்கான காரணம் என்ன?

தங்கச்சி மடத்தில் ஒரு பெண்ணை லாக்கப்பில் கொலை செய் கிறார்கள் என்றால் இது என்ன காட்டுமிராண்டித்தனம்? இப்படி யெல்லாம் நடந்தால் இது எங்கே கொண்டுபோய்விடும்? ஒரு பெண்ணை லாக்கப்பில் கொலை செய்கின்ற ஒரு அவலநிலை இருந்தால் நிர்வாகத்தில் எப்படி. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** லாக்கப்பில் கொலை செய்கிறார்கள் என்று சொல்கிறீர்கள், கொலையா?

திருமதி த. ந. அனந்தநாயகி : இறந்துவிட்டார்கள்.

MR. DEPUTY SPEAKER : She is dead. There is difference from being dead and from being murdered. Being an advocate, you should not make such a positive diviation.

திருமதி த. ந. அனந்தநாயகி : லாக்கப்பில இறந்துவிட்டாள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைத்தான் சொல்ல வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஒரு பெண் குற்றவாளி லாக்கப்பில் இறந்துவிட்டாள் என்று சொல்லும் நிலையில் பொது மக்கள் என்ன நினைப்பார்கள் இந்த நிர்வாகத்தைப்பற்றி? இதைத் தட்டிக்கேட்க சட்டசபையில் தீர்மானம் கொண்டுவா வேண்டுமென்றால் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே கவர்னர் உரையின் மீதான தீர்மானத்தில் கிடைக்கின்ற நேரத்திற்குள் பேச வேண்டியதாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்--தலைமை)

இம்மாதிரி பல காரியங்களை இன்றைக்குக் கண்டு பிடிக்காமல் விட்டுவிடுகிறார்கள். போலீஸ் ஸ்டேஷனில் பிராது கொடுக்க வேண்டுமென்றால், அதற்கும் செல்வாக்கோடு போனால்தான் முடிகிறது. குறிப்பாக பெண்கள் சமுதாயத்திலிருந்து பல கடிதங்கள் எனக்கு வருகின்றன. இப்படி பெண்கள் அவல நிலையில் இருக்கும் நிலையானது இந்த ஆட்சியை மிகவும் ஆபத்தான நிலைமைக்குக் கொண்டுபோய்விட்டு விடும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு பெண் லாக்கப்பிலே இறக்கிறாள் என்றால் உங்களுடைய திறமைக் குறைவிற்கு இதைவிட வேறு ஒரு முத்திரை தேவைப்படுமா?

அடுத்து, 12 மைல் உள்ள கூவத்தை சுத்தப்படுத்தி உல்லாசப் படகு விடுவோம் என்று சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கும் அதே நாற்றம் தான் இருக்கிறது. பல கோடி ரூபாய்களைச் செலவழித்தும் கூவம் மணக்கவில்லை. இந்தக் கூவத்தில் பிரச்சினையில் சிக்கல்கள் இருக்கின்றன என்று நாங்கள் மட்டும் சொல்லவில்லை. சுப்ரீம் கோர்ட்டிலேயே சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி விசாரிக்க நீதி விசாரணையை ஏற்படுத்துமா இந்த





அரசாங்கம் என்று கேட்கிறேன். காரணம் என்னவென்றால், இதை நல்லமுறையில் சீர்திருத்தி உல்லாசப் படகுகள் விடுவோம் என்று சொன்னவர்கள், ஆறேழு ஆண்டுக்காலமாகியும் 12 மைல் நீலமுள்ள கூவத்தைச் சுத்தப்படுத்தவில்லை. ஏதோ மவுண்ட் ரோடிலே ஆரம்பித்து இந்தக் கடற்கரை முடிவு வரையில் சுத்தப் படுத்தி உல்லாசப் படகுகளை விடுவோம், உல்லாசப் படகுகளை விடுவோம் என்று சொல்லி மக்களை ஏமாற்றுவதா? ஆகவே, இதற்கு உடனடியாகப் பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை நகரைப் பொறுத்தவரையில் குடிதண்ணீர் பிரச்சினை இன்னும் தீரவில்லை. புதிதாக வந்திருக்கும் கமிஷனர் சில மாதங்களுக்குப் பிறகு தண்ணீரே வராது என்று சொல்கிறார். முதலிலே காவிரித் தண்ணீர் என்று சொல்லிக்கொண்டிருந்தீர்கள். பிறகு காவிரி தண்ணீர் வீராணம் என்று மாறியது. இந்த வீராணம் தண்ணீராவது எப்பொழுது வரும், சென்னை நகருக்குக் குடிநீர் வசதியை எப்பொழுது தரப்போகிறீர்கள்?

வாரியம் என்று ஏற்படுத்துகிறீர்கள். அதன்மூலம் இன்னும் பல கோடி ரூபாய்களைக் கடனாகப் பெற்று எப்படிச் செலவழிக்கலாம் என்று நினைக்கிறீர்களே தவிர உடனடியாகப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு முன்வந்தீர்களா? பிராட்வே பஸ் ஸ்டாண்டைப் பற்றிப் பல வருஷங்களாகச் சொல்கிறேன். அங்கே ஒரே துர்நாற்றம் அடிக்கிறது, எல்லா நோய்களுக்கும் காரணமான கிருமிகள் அங்கேதான் உற்பத்தியாகின்றன. அதை 10 ஆண்டுக் காலமாகச் சுத்தப்படுத்த முடியவில்லை. எனவே இதுபோன்ற காரியங்களிலும், சென்னை நகரில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் பிரச்சினையிலும் உங்களுக்குள்ள திறமைக்குறைவினால் மக்கள் ஏமாற்றமடைந்திருக்கிறார்கள்.

முக்கியமான பிரச்சினைகளில் நீங்கள் போதிய அக்கறை காட்ட வில்லை. நான் எதிர்பார்த்தேன், மிகவும் சமதர்ம அடிப்படையில் சில திட்டங்களைக் கொண்டு வருவார்கள், உடனடியாக நகரச் சொத்துக்கு உச்சவரம்பு வரும், அதற்காக கமிட்டி அமைத்திருக்கிறார்களா, அறிக்கை வந்திருக்கிறதா, இப்பொழுதாவது வருமா என்று எதிர்பார்த்தேன். ஆனால் இந்த அறிக்கை ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

* திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கும் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய தமிழகத்தில் ஒப்பற்ற தலைவரும், சமூகத்திலே இரண்டாம்தரக் குடிமக்களாக இருந்த நாமெல்லாம் இன்றைக்கு நாம் யாருக்கும் தாழ்ந்தவர்கள் அல்ல என்ற நிலையை உருவாக்கிய தந்தை பெரியார் அவர்களின் மறைவுக்காக நாம் இந்த மன்றத்தில் அனுதாபம் தெரிவித்திருக்கிறோம். அந்த நிலையில் நானும் அவருக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையைத் துவங்கலாம் என்று கருதுகிறேன்.

இங்கே எதிர்த்தரப்பில் பேசிய திருமதி த. ந. அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். இப்பொழுது விலைவாசி உயர்ந்துவிட்டது, இருபதாண்டுக்காலமாக நாங்கள் சிறப்பான அரசாங்கத்தை நடத்தி வந்தோம். ஆனால் நீங்கள் ஆட்சிக்கு வந்த இன்றைக்கு உணவுப்பொருள்களின் விலை ஏறிவிட்டது என்ற கருத்தைச் சொன்னார்கள். இருபதாண்டுக் காலம் காங்கிரஸ் ஆட்சியிருந்து, மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி முடித்தார்கள். இருந்தாலுங்கூட தமிழகத்தில் உணவு நிலைமையைப் பார்த்தால் 1966-ஆம் ஆண்டிலும், 1967-ஆம் ஆண்டின் துவக்கத்திலும் ஒரு படி அரிசி மக்களுக்குக் கிடைக்கவில்லை. தமிழகத்திலுள்ள மக்கள், தஞ்சை மாவட்டம் உட்பட, ஒரு படி அரிசிக்காக பையை எடுத்துக்கொண்டு கடைகளுக்குச் சென்று ஒருநாள் முழுவதும் காத்துக்கிடந்தார்கள். அம்மையார் அவர்களுக்கு மிகவும் தெளிவாகத் தெரியும் என்று நினைக்கிறேன், சென்னை நகரக் கடையில் உணவுப் பொருளுக்காக ஒரு தாய் இரவு கடையின் முன்படுத்திருந்தபோது இரண்டு வயதுக் குழந்தையொன்று அந்தக் கடும் குளிரின் காரணமாக இறந்துவிட்டது. அந்த நிலையை இவ்வளவு சீக்கிரத்தில் மறந்திருக்க முடியாது. அந்த அளவிற்கு உணவுப்பொருள் பற்றுக்குறையாக இருந்த தமிழகத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப் பேற்ற பிறகு, நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக தன்னிறைவு பெற்றோம்.





இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு, இரண்டுபோக சாகுபடியாக இருந்த நிலத்தை மூன்றுபோக சாகுபடிக்குக் கொண்டுவருவதற்கு முயற்சியெடுத்தோம். கிராமங்களில் உள்ள கிணறுகளுக்கு மின்சாரம் கொடுக்கும் வகையில், இந்த ஏழாண்டுக்காலமாக மொத்தமாக 6½ இலட்சம் கிணறுகளுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம். இப்படிப்பட்ட வகைகளிலே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. ஆனால் இன்றைக்கு அகில இந்தியாவிலுமே உணவுப் பற்றாக் குறையைப் பார்க்கிறோம். அம்மையார் அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிதான் குஜராத் மாநிலத்தில் ஆளும் கட்சி, மைசூரில் ஆளும் கட்சி. அங்கெல்லாம் உணவுக்காக அடித்துக்கொள்ளும் காட்சி, நடைபெறும் சம்பவங்கள், ஊரடங்கு சட்டங்கள் ஆகிய இவைகளைப்பற்றி நாள்தோறும் பத்திரிகைகளில் வருவதைக் காண்கிறோம். இவைகளெல்லாம் தெரிந்தபிறகும் இங்கே உணவுப் பொருள்களின் விலை அதிகம் என்று சொல்கிறார்கள்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் பார்க்கிறோம், தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு நெல்லுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்கிறார்கள். விவசாயிகளுக்கும் அதிகமாக விலை கிடைக்க வேண்டும், உணவுப் பொருட்களின் விலையும் குறைவாக இருக்க வேண்டுமென்றால் அரசாங்கம் மாய வித்தை செய்துதான் கொடுக்க முடியுமே தவிர வேறு வழியில்லை. ஆகவே இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் ஆளும் பொறுப்பை ஏற்றபிறகு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக முயற்சியெடுத்துக்கொண்டதன் பயனாகத் தமிழகத்தில் உணவுப் பற்றாக்குறை இல்லை. வேறு மாநிலங்களில், கம்யூனிஸ்ட் கட்சி உள்ள கேரளா உட்பட, எந்த மாநிலத்திலும் உணவுப் பற்றாக் குறை இருப்பதையும், விலைகள் இதைவிட அதிகம் என்பதையும் பார்க்கிறோம். ஆகவே, தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்டதன் பயனாகத்தான் இன்றைக்கு உணவுப்பொருட்கள் குறைந்த விலைக்குக் கிடைக்கிறது.

(பிற்பகல் 1-00)

இந்த உணவு உற்பத்தி பெருக உரம் வேண்டும். அந்த உரம் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். எதிர்த் தரப்பில் உள்ள எல்லோரும் சொன்னார்கள். உரம் எதனால் கிடைக்கவில்லை?

நம்முடைய தேவை மூன்றரை லட்சம் டன் உரம் என்று சொன்னால் நமக்குக் கிடைப்பது 2½ லட்சம் டன்தான். ஏன் உரத்திற்குப் பற்றாக்குறை ஏற்படாது? உரம் கிடைத்தால்தானே கொடுக்க முடியும். உரத்தை ஒதுக்கக்கூடிய அதிகாரம் இந்திரா காந்தியின் கையில், மத்திய சர்க்காரின் கையில் இருக்கிறது. அங்கிருந்து உரம் வராததால் கிடைக்கவில்லையே தவிர, இந்த அரசாங்கத்தின் மீது என்ன குறை இருக்கிறது?

நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கவில்லை, இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள். நான் தலைவர் அவர்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அகில இந்தியாவிலும் கடந்த ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்பாக நூல் பற்றாக்குறை ஏற்பட்டது. தமிழ்நாட்டில் மட்டும் ஏற்படவில்லை. இப்போது என்ன பார்க்கிறோம்? கோவை மாவட்டத்தில் நூல் தேங்கியிருக்கிறது. வாங்குவார் இல்லை. இந்த அரசாங்கமா அதற்குப் பொறுப்பு? மத்திய அரசாங்கம் போடக்கூடிய சட்டங்கள், எடுக்கக்கூடிய முடிவுகளின் காரணமாக நூல் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதுதான் அடிப்படைக் காரணமே தவிர, நம்முடைய அரசாங்கம் அல்ல. நம்முடைய தமிழ்நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு பத்து லட்சம் பேல் நூல் உற்பத்தியாகிறது. நமக்குத் தேவை 5½ லட்சம் பேல்கள்தான். உபரியாக 4½ லட்சம் பேல்கள் இருக்கின்றன. இருந்தாலும் தமிழ் நாட்டு நெசவாளர்களுக்கு நூல்கிடைக்கவில்லை என்றால், அதற்கு மத்திய அரசாங்கத்தின் தவறான கொள்கைதான் காரணமே தவிர, தமிழக அரசாங்கம் அல்ல என்பதைத் தெளிவாகக் கூற விரும்புகிறேன்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு ஆதரவாக திராவிட முன்னேற்றக் கழக அரசு எதுவும் செய்யவில்லை என்று பேசினார்கள். இந்த மன்றத்தின் மூலம் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அகில இந்தியாவிலும் நெசவாளர்களைப் பாதுகாக்க நிவாரணம் கொடுக்க முயற்சி எடுத்துக் கொண்ட ஒரே அரசு தமிழ்நாடு அரசுதானே தவிர, வேறு எந்தக் கட்சி அரசாங்கமும் செய்யவில்லை. நிவாரணம் கொடுக்காத அரசாங்கத்தைச் சேர்ந்த கட்சிகள் இன்றைக்கு நம்மைப் பார்த்து அப்படிக் கூறுகிறார்கள். எதிர்க்கட்சி என்ற முறையிலே எதிர்ப்பதற்காகச் சொல்லப்படுகிற





வாதமே தவிர, அடிப்படையில் உண்மை இல்லை. நம்முடைய அரசாங்கம் கூட்டுறவுத் துறைக்கு 16 கோடி ரூபாய் ஒதுக்கி கைத்தறி நெசவாளர்களுக்காகச் செலவிடத் திட்டமிட்டு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் இந்த அரசாங்கம் வந்த பிறகு எந்த விதமான முற்போக்கான காரியங்களையும் மேற்கொள்ளவில்லை என்று சொன்னார்கள். வருகிற காலங்களில் என்னென்ன திட்டங்களை மேற்கொள்ள இருக்கிறோம் என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். உரத் தொழிற்சாலை, டெலிவிஷன் தொழிற்சாலை போன்ற பல்வேறு தொழில்களைத் துவங்குகின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம்.

நம்முடைய அரசாங்கத்தைக் குறை கூற வேண்டுமென்பதற்காக சில அரசியல் கட்சிகள் பலவாறு பேசுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு கூட்டுறவுத் துறை மூலமாகத் தனியாரை வளர்க்கப் பயன் படுத்துகிறது என்று பேசுகிறார்கள். எல்லோரும் தெளிவாக எண்ணிப் பார்க்க வேண்டும். இந்த நாட்டில் நம்முடைய அரசு வருவதற்கு முன்னால் இருந்த அரசாங்கத்தின் சார்பில் தனியார் துறைக்கு ஏராளமான உதவிகளைச் செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் சேஷசாயி பேப்பர் மில்ஸ், மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை முதலாளிகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொடுத்து தனிப்பட்ட முதலாளிகளை வளர்த்திருக்கிறார்கள். அப்போது யாரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இந்த அரசாங்கம் தனிப்பட்ட முதலாளிக்குப் பணம் கொடுக்காமல் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து நிர்வாகத்தைக் கட்டுப்படுத்துகின்ற முறையில், உற்பத்தியைக் கட்டுப்படுத்துகின்ற முறையில், விநியோகத்தைக் கட்டுப்படுத்துகின்ற முறையில், சில காரியங்களைச் செய்தால் அதைக் குறை கூறக்கூடிய அரசியல் வாதிகளை இன்றைக்குத் தமிழகத்தில் பார்க்கிறோம்.

சிமென்டைப் பற்றி சொன்னார்கள். சக்கரை பற்றிச் சொன்னார்கள். நூல் பற்றிச் சொன்னார்கள். இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் தமிழ்நாடு அரசாங்கம் அல்ல என்பதை எல்லோரும் தெளிவாக உணர வேண்டும். தமிழ்நாட்டில்

ஏராளமாக சிமெண்ட் உற்பத்தியாகிறது. உற்பத்தியானாலும் அதைத் தமிழ்நாட்டு மக்களுக்குக் கொடுக்க முடியவில்லை. இதற்கு யார் காரணம்? திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கமா காரணம்? ஒவ்வொரு மாநிலத்திற்கும் எவ்வளவு சிமெண்ட் என்று ஒதுக்கும் உரிமையை மத்திய அரசு வைத்திருக்கிறார்கள். அதன் காரணமாகத்தான் சிமெண்ட் கிடைக்கவில்லையே தவிர வேறல்ல. தமிழ்நாடு அரசாங்கம் உற்பத்தி செய்யாமல் விட்டு விட்டது போலவும், பற்றாக்குறை அதனால் ஏற்பட்டு விட்டது போலவும் பேசுவது எந்த வகையிலும் நியாயமில்லை.

நம்முடைய சர்க்கரை ஆலைகளில் சர்க்கரை ஏராளமாக உற்பத்தியாகிறது. அதை நம்முடைய நாட்டு மக்களுக்குக் கொடுக்கக் கூடிய உரிமையோ, அதிகாரமோ, இந்தச் சர்க்காருக்கு இல்லை. இதைக் கேட்டால் சிலபேர் நாங்கள் பிரிவினை பேசுகிறோம் என்று சொல்லுவார்கள். உரிமை வேண்டுமென்று சொன்னால், திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு திசைக்குப் போவதாகப் பிரசாரம் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் தொழிற்துறை வளர வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கோரிக்கைகளை எல்லாம் தெரிவிக்கிறோமே தவிர, வேறு அல்ல என்பதை எல்லோரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நம்முடைய அரசைப் பொறுத்தவரை வருகிற ஆண்டுகளில் செலவழிப்பதற்காக மின்சார உற்பத்திக்கு 320 கோடி ரூபாய், பாசனத்திற்காக 129 கோடி ரூபாய், குடிதண்ணீர்த் திட்டத்திற்காக 93 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள்.

இந்த மன்றத்தின் வாயிலாக பேரவைத் தலைவர் மூலமாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இந்த நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தது 1947-ம் ஆண்டு. இன்றைக்கு 1974-ம் ஆண்டில் இருக்கிறோம். மத்திய அரசு நான்கு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றி முடித்து விட்டு ஐந்தாவது திட்டத்திற்கு வந்திருக்கிறது. இந்தத் திட்ட காலத்தில் நாட்டு மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுக்க என்ன திட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள்? கிராமப் புற மக்களுக்குக் குடிதண்ணீர்த் திட்டத்திற்காக 100 கோடி ரூபாய், 200 கோடி ரூபாய் என்று மத்திய அரசாங்கம் ஒதுக்கி இருக்கிறதா? மத்திய அரசு இதுவரை ஒரு கோடி, ஒன்றைக் கோடி ரூபாய் என்ற





அளவுக்குத்தான் குடிநீர்த் திட்டத்திற்காக ஒதுக்கியிருக்கிறது. இப்போது நம்முடைய தமிழ்நாட்டு அரசாங்கந்தான் கிராமப்புற குடிநீர்த் திட்டத்திற்காக 93 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு எதிர்தரப்பில் பேசக்கூடியவர்கள் தொழிலாளர் அமைதி கெட்டுவிட்டது என்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதற்கு கம்யூனிஸ்டு கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும், ஆளும் காங்கிரஸ் கட்சி, ஸ்தாபன காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் பேசுகின்ற நேரத்தில் பதில் சொல்லட்டும்.

அகில இந்தியாவிலும் தொழிலாளர் இன்ஷூரன்ஸ் திட்டம் இருக்கிறது. எந்த மாநிலத்திலாவது அந்த மாநில அரசாங்கம் இதற்காகப் பணம் செலவழிக்கிறார்களா? இந்த அரசாங்கத்தைப் பார்த்து தொழிலாளர்களுக்கு விரோதமான அரசாங்கம், முதலாளிகளுக்கு ஆதரவான அரசாங்கம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அகில இந்தியாவிலேயே தொழிலாளர் இன்ஷூரன்ஸ் திட்டத்திற்காகச் செலவு செய்யக்கூடிய ஒரே அரசாங்கம் திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் ஒன்றுதான். (மணி அடிக்கப்பட்டது).

நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எதிர்தரப்பிலிருந்து பல கட்சி உறுப்பினர்கள் பேசினார்கள். ஸ்தாபன காங்கிரஸ், ஆளும் காங்கிரஸ், அ.தி.மு.க. கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசினார்கள். ஒருவர் கூட இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி ஒரு வரி கூடப் பேசவில்லை என்பதை வருத்தத்தோடு குறிப்பிட விரும்புகிறேன். தமிழர்கள் பிழைக்க வழி இல்லாமல் கடல் கடந்து பிழைக்கச் சென்ற இடத்தில் இலங்கையில் இன்று தமிழர்கள் பெரிய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறார்கள். அதுபற்றி ஒருவர் கூட எதிர்க்கட்சியிலிருந்து எடுத்துக் கூறவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி ஆளுநர் உரையை வரவேற்று முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## 5. தன்னிலை விளக்கம்

### திரு. சி. வே. வேலப்பன் அவர்கள் தன்னைப்பற்றி குற்றம்சாட்டியிருப்பது குறித்து திரு. செ. கந்தப்பன் அவர்களுடைய தன்னிலை விளக்கம்.

**திரு. செ. கந்தப்பன்:** ஆன் எ பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன். சற்று முன்பு திரு. வேலப்பன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி ஏற்பட்ட வாக்கு வாதத்தில் இறுதியாக முடிக்கிறபோது ஒரு பிரச்சினையில் நான் தலையிட்டிருக்கிறேன் என்பதை உறுதிப்படுத்துவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். அதை நான் மிக வன்மையாக மறுக்கிறேன் என்பது மட்டுமல்ல. அவர் சொல்லியது உண்மையாக இருக்கு மானால் நான் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அவர் கூறியது தவறாக இருக்குமானால் இவ்வளவு பெரிய அபாண்டத்தைக் கூறிய அவர் தண்டிக்கப்பட வேண்டும். அரசியல் நாகரிகம் கருதி உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் நேரடியாக விசாரித்தாலும் சரி, விசாரணைக் குழு மூலமாக விசாரித்தாலும் சரி அதற்குத் தயாராக இருக்கிறேன். அதற்கு முன்னால் இந்த அபாண்ட வதந்தி வெளியே வராமல் இருக்க 'பிரஸ்'க்கு உத்தரவிட வேண்டும். இந்தச் செய்தி பத்திரிகையில் வராமலிருக்கும் முறையை மேற்கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of order. Sir, Personal explanation should be on the spur of the moment as soon as a reference is made about him and it cannot be raised as an after-thought after two or three speeches.

**மாண்புமிகு பேரவை தலைவர்:** உடனுக்குடன் சொல்ல வேண்டுமென்று இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** உறுப்பினர் அவர்கள் சொன்னது பற்றி எனக்கு அபிப்பிராயபேதம் இல்லை. ஆனால் பல விஷயங்கள் நடந்து முடிந்துவிட்ட பிறகு எதை எதை எக்ஸ்பஞ்ச் செய்வது என்ற பிரச்சினை வந்துவிடும். எக்ஸ்பஞ்ச் பண்ணுவது என்பது அல்லது சில விஷயங்களை பத்திரிகைகளில் வெளியிடக்கூடாது என்று சொல்வது பத்திரிகைதர்மம் செய்ததாகாது. 'அக்யுஸேஷன்'



இருக்கலாம். The accusations have been refuted. இதை அரசியல் தலையீடு என்று சொல்லாது, அன்று உதவி சபாநாயகர் அவர்கள் நல்லமுறையில் தீர்ப்பு கொடுத்தார்கள். அரசியல் தலையீடு என்பது லேசான குற்றச்சாட்டு. இவர் தன்னைப் பற்றி எடுத்துச் சொன்னதால் அவர்கள் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதே தவிர, திரு. வேலப்பன் அவர்கள் சொல்லும்போது I don't think he ever alluded to him அவரைப் பற்றிக் குறிப்பிட்ட விஷயத்தை வேண்டுமென்றால் எடுக்கவேண்டும் என்று சொல்லலாமே தவிர ஆரம்பத்தில் இருந்து விஷயங்கள் பூராவையும் நீக்கவேண்டுமென்றால் கஷ்டம். மணி 1 ஆகிவிட்டது. ஏற்கனவே இந்தச் செய்திகள் எல்லாம் போயிருக்கும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** ஏற்கனவே இந்த விஷயம் பற்றி தன்னிலை விளக்கத்தை கந்தப்பன் அவர்கள் கொடுத்திருக் கிறார்கள். அப்போது துணை சபாநாயகர் அவர்கள் இருந்தார்கள், தாங்கள் இல்லை. அதுபற்றிய விவாதம் முடிந்துவிட்டது. மீண்டும் அதை மாற்றவேண்டிய ஒரு நிலையை தாங்கள் ஏற்படுத்த வேண்டும். எக்ஸ்பஞ்ச் செய்யவேண்டும் என்ற தங்களைக் கேட்டுக்கொண்டால், தாங்கள் அப்படி மாற்றவேண்டிய ஒரு நிலை ஏற்பட்டால் எங்கள் கட்சி உறுப்பினர் திரு. வேலப்பன் அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பளித்து மீண்டும் அதுபற்றிய ஒரு விவாதம் வரவேண்டியிருக்கும். ஏற்கனவே அதுபற்றிய விவாதம் நடந்துமுடிந்துவிட்டது. ஆகவே, இது எக்ஸ்பஞ்ச் பண்ண வேண்டிய ஒரு பொருள் அல்ல.

**திரு. சி. வே. வேலப்பன்:** நான் சொல்லும்போது திரு. கந்தப்பன் குறுக்கிட்டார். அந்த வழக்கில் சம்பந்தப் பட்டவர் அ.தி.மு.க.-விலிருந்து தி.மு.க.-வில் சேருகிறேன் என்று எழுதிக் கொடுத்ததாகச் சொன்னார்கள். யார் என்று தெரியாமல் சொன்னேன், இப்போதுதான் நீங்கள் என்று தெரிகிறது என்று சொன்னேன். அவர்கள் சொல்லியிருக்காவிட்டால் நானும் சொல்லியிருக்கமாட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்ற தொடர் கூட்டத்தில் ஒரு முடிவு எடுத்திருக்கிறோம். ஒரு உறுப்பினரைப் பற்றி வேறொரு உறுப்பினர் குற்றஞ்சாட்டுகிற நேரத்தில் எந்த

முறையைப் பின்பற்ற வேண்டுமென்பதற்கு ஒரு முறையை வகுத்துக்கொண்டிருக்கிறோம். அம்முறையை உறுப்பினர்கள் பின்பற்றுவது மிகவும் நல்லது. அப்படிப் பின்பற்றினால்தான் இந்த அவையின் கௌரவம் காப்பாற்றப்படும். இப்போது நடந்த நிகழ்ச்சியில் அவர்கள் அஞ்சுவது ஒருபக்கம் செய்திவந்து ஒருபக்கம் செய்தி வராமல் போய்விட்டால் என்னவாகும் என்பது தான். ஆகவே, நான் பத்திரிகைகளைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால் திரு. கந்தப்பன் அவர்கள் மறுத்த செய்தியும் இருக்கிறது. அந்தச் செய்தி உள்பட எல்லாவற்றிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் விதத்தில் பத்திரிகைகளில் வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

***திரு. கு. அ. பொம்மன்:** தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் இந்த அவையில் ஆற்றிய உரையின்மீதும் அதற்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதும் எங்கள் கட்சியின் சார்பாக நான் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல ஆசைப்படு கிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையில் நான் எந்தவிதமான நல்ல அம்சங்களையும் காணவில்லை. நாங்கள் எதிர்பார்த்த சில அம்சங்கள் கவர்னர் அவர்கள் உரையில் இருக்குமா என்று பார்த்தேன். பார்த்து ஏமாந்திருக்கிறோம்.

ஆளுநர் அவர்கள் உரை எப்படியிருக்கவேண்டும், ரெயில்வே கைட் மாதிரி இருக்கவேண்டுமா என்று கனம் வீராசாமி அவர்கள் கேட்டார்கள். எதிர்க்கட்சியினர் அதை விரும்பவில்லை. இவ்வளவு மணிக்கு ரெயில் போகிறது, இவ்வளவு கட்டணம் என்றுதான் கைடில் இருக்குமேதவிர, கவர்னர் அவர்கள் உரையில் நாட்டின் நிலைமை, திட்டங்கள் பற்றி தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டு மென்று நாங்கள் விரும்புகிறோம். சம்பிரதாய முறையில் வருடாவருடம் ஆற்றுவதுபோல்தான் கவர்னர் அவர்கள் இந்த ஆண்டும் உரையாற்றியிருக்கிறார்கள். கவர்னர் உரையில் ஏழாவது பக்கத்தில், "தூத்துக்குடி அனல் மின் திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது என்பதை அறிய நீங்கள் மகிழ்ச்சி



யடைவீர்கள் என நம்புகிறேன்" என்று கூறியுள்ளார்கள். அதுமட்டும் போதாது. மேட்டூர் அனல் மின் நிலையம் பற்றியும் மத்திய அரசுக்கு இந்த அரசு எடுத்துச்சொல்லி அதையும் சேர்க்கவேண்டியது முக்கியமானதாகும். மின் உற்பத்தித் திறன் 1,224 மெகாவாட்டாக இருந்தபோதிலும், நம்பகமான உற்பத்தி அளவு 775 மெகாவாட்டாக மட்டுமே இருக்கிறது என்று கூறப் பட்டிருக்கிறது. எனவே ஐந்தாவது திட்டம் நிறைவேறினாலும் நம் மின் தேவை பூர்த்தியாகாது என்ற நிலைதான் இருக்கிறது. இதைத் தவிர்க்க, சில தொழில் நிலையங்கள் தங்கள் பவர் ஜெனரேட்டர்களை வைத்துக்கொள்ள அனுமதி கேட்கிறார்கள். அப்படி அனுமதி கொடுத்தால் மின்சாரப் பற்றாக்குறை ஏற்படுவது குறைந்து பொருள்களின் உற்பத்தியும் பாதிக்கப்படாது, அதோடு வேலைவாய்ப்பும் அதிகரிக்கும். எனவே தொழில் நிறுவனங்கள் கேட்டால், அவர்களுக்கு பவர் ஜெனரேட்டர்களை வைத்துக் கொள்ள அனுமதி தரவேண்டும்.

நீர் மின்நிலையத்தைமட்டும் நம்பி இருக்கக் கூடாது. அனல் மின் நிலையங்களையும் ஏற்படுத்தி மின் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். இப்போது செய்யவேண்டிய இரண்டு மூன்று திட்டங்கள் இருக் கின்றன. அவைகளைப் பற்றி கவர்னர் அவர்கள் உரையில் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. பாண்டியாறு—புன்னம்புழா சோலையாறு திட்டங்கள் பற்றி எடுத்துச் சொல்லப்படவில்லை இந்த உரையில். இப்போது மின்சாரம் 15 சதவிகிதம் கட் இருக்கிறது. 16-வது பாராவில்,

"... படித்து வேலையற்றிருக்கும் ஐந்து இலட்சம்பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம்" உட்பட வேலை வாய்ப்பு குறித்த சிறப்புத் திட்டங்கள் அனைத்தின் மூலமாக ஏறத்தாழ 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது.

பின்னர் வீடு கட்டும் திட்டம், சாலைகள் அமைத்தல் போன்றவை பற்றியும் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இவைகளை நகரங்களில் மட்டும் செய்தால் போதாது. கிராமங்களிலும் செய்து நல்ல வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் கிராமங்களில் இருப்பவர்களுக்கும்

வேலைவாய்ப்பு வசதிகள் கிடைக்கும். தொழிற்சாலைகள் கிராமங்களிலும் அமைவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். குடியிருப்புப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. நகரங்களில்தான் செய்கிறார்களே தவிர, கிராமங்களில் செய்யப்படுவதில்லை. ஆகவே வீடுகள் கட்டும் திட்டத்தை கிராமங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். கிராம மக்கள் நகரங்களுக்கு வந்து குடிசைகள் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். குடிசை போட்டுக் கொண்டவர்களுக்கு வீட்டு வாரியம் வீடுகள் கட்டிக்கொடுக்கிறார்கள் என்று எல்லோரும் நகரங்களுக்கு வந்து குடியேறி விடுகிறார்கள். அதன்காரணமாக கிராமங்களில் உழுது பயிர் செய்ய ஆட்கள் இல்லை. எனவே வீடு கட்டும் திட்டத்தினை கிராமங்களுக்கும் விஸ்தரித்தால் கிராமங்களும் முன்னேறும், அங்கும் வேலைவாய்ப்பு வசதிகள் ஏற்படும். தொழிற்சாலைகள் அமையவும் வசதி ஏற்படும். அடுத்தபடியாக, மொத்த நிதி வசதியான 11,578 கோடி ரூபாயில் நமக்கு 626 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் கேட்டுப் பெறவேண்டும்.

அடுத்தபடியாக, தனிப்பட்டவர்கள் தொழில் நடத்த தொழில் ஊக்கக் கழகம் உதவி செய்யும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தை சுதந்திராக் கட்சி பல ஆண்டுகளாகச் சொல்லிவருகிறது. இந்த நேரத்திலாவது இந்த அரசு சுதந்திராக் கட்சியின் கொள்கையை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் தொழில்களை பின்னர் நாஷனலைஸ் செய்வதுமாதிரி இருக்கக்கூடாது.

உதாரணமாக மேட்டூர் மால்கோ-வை அரசுடைமையாக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு சிபார்சு செய்திருக்கிறது இந்த அரசு. முரண்பட்ட கொள்கைகளைக் கடைப்பிடிக்கக்கூடாது. அப்போதுதான் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தொழிற்சாலைகளை நிறுவ மக்களுக்கு உற்சாகம் ஏற்படும்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாட்டில் கால்நடைகளை வளர்க்க வேண்டுமென்றும் சொல்கிறார்கள். பால் வளத்தைப் பெருக்கவேண்டுமென்று இந்த அரசு எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறது. இவை இரண்டிற்கும் மிகவும் தேவை மேய்ச்சல்





நிலங்கள். ஆனால் அரசு இப்போது மேய்ச்சல் நிலங்களில் மரங்களை நடுவதற்காக முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துசொல்ல வேண்டுமானால் என்னுடைய தொகுதியில் நஞ்சநாடு என்ற பகுதியில் மேய்ச்சல் காடு இருக்கிறது. அந்த இடத்தில் 5000-க்கும் மேற்பட்ட கால்நடைகள் இருக்கின்றன. பாரஸ்ட் டிபார்ட்மெண்டில் லைசென்சு வாங்கி அந்த மாடுகளை மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த இடங்களில் இப்போது மரங்களை நடுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படி மரங்களை நட்டுவிட்டால் அந்தப் பகுதியில் மேய்ச்சல் காடு இல்லாமல் போய்விடும். கால்நடை வளர்ப்பு பாதிக்கப்படும். ஆகவே, இந்தப் பிரச்சினை மீது அரசு உடனடி கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்மால் இரிகேஷன் என்ற அடிப்படையில் பல திட்டங்களை அரசு நிறைவேற்றியிருக்கிறது. இதனால் சிலவிடங்களில் தண்ணீர் கிடைத்துக்கொண்டிருப்பதும் கிடைக்காமல் போய்விடுகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதாவது சோளூர் என்ற பகுதியில் 3 கால்வாய்கள் தொட்டள்ளா, தேவள்ளா, தோலள்ளா என்று இருக்கின்றன. அவற்றில் வரும் தண்ணீரை சிங்கார் என்ற இடத்திற்கு எடுத்துச்செல்ல திட்டம் இருப்பதாக தெரியவருகிறது. இதனால் சோளூர் மக்களுக்கு குடி தண்ணீர் விவசாய காரியங்களுக்கு கிடைக்காமல் போய்விடும். ஆகவே, சர்க்கார், இதை மறு பரிசீலனை செய்து, தோளள்ளா, தேவள்ளா வாய்க்காலை மட்டும் எடுத்துக்கொண்டு, தொட்டள்ளாவை விட்டு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உரம் பற்றி அதிகமாகப் பேசினார்கள். மூட்டைக்கு 10 ரூபாய் 12 ரூபாய் அதிகம் கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. உரம் வாங்க விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஏற்கனவே, விவசாயத் துறை மூலமாகவும், சர்க்கார் துறை மூலமாகவும் கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் விவசாயிகள் பட்ட கடனை திருப்பிக்கட்ட முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். கொடுக்கப்பட்ட கடனை வசூல் செய்ய விவசாயிகளை அதிகாரி மிகவும் கெடுபிடி செய்கிறார்கள். அவர்களிடமிருந்து கடன் வசூலை தவணை முறையில் வசூலிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கு. அ. பொம்மன்] [1974 சனவரி 19

இந்த மாநிலத்தில் ஹோமியோபதி டாக்டர்கள் பலர் இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 40,000 பேர் இருக்கிறார்கள். இது வரை 9,000 வரை தான் பதிவு செய்து கொண்டிருக்கின்றனர். மற்றவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவு செய்து கொள்ளாவிட்டால் அவர்கள் மேற்கொண்டு தொழில் செய்யக் கூடாது என்ற நிலைமையிருக்கிறது. ஆகவே, பதிவு செய்து கொள்ள அப்ளிகேஷன் போடுவதற்கு உண்டான காலவரம்பை மேலும் 1 வருடத்திற்கு நீட்டித்து தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. கு. இராசமாணிக்கம்:** பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் முதல் முதலிலேயே தந்தை பெரியார் அவர்களை இழந்ததற்கு வருத்தம் தெரிவித்து கொண்டிருப்பது தமிழக மக்களுக்கு ஒரு நல்ல ஆறுதலைத் தரும் என்று நம்புகிறேன். ஆளுநர் அவர்கள் தமிழகத்திற்கான சில முனைப்புத் திட்டங்களை எல்லாம் இதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவைகள் அவசியம் என்று ஒரு புறத்தில் இருந்தாலும், அடி மட்டத்தில் இருக்கிற, வாழ்வில் பின் தங்கியிருக்கிற மக்களுக்கு அத்திட்டங்கள் பயன் அளிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு நிச்சயமாக உண்டு.

இந்த அரசு உருவாக்கப்பட்டதே வணக்கத்திற்குரிய தந்தை பெரியார் அவர்களால் தான். தந்தை பெரியார் அவர்களை ஒப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், அவருக்கு ஈடு இணையாகச் சொல்லவேண்டுமானால்—எனக்கு நன்றாக நினைவுக்கு வருகிறது—மகாபாரதத்தில் வரும் பீஷ்மரைத்தான் கூறலாம். அதற்கு ஒரு வார்த்தை சொல்கிறேன். பாரதத்தில் பீஷ்மரை பிதாமகர் என்று தான் சொல்வார்கள். இந்த நாட்டிலே இருக்கிற அத்தனை பேருக்கும் பெரியார் அவர்கள் தந்தையாக, பிதாமகராக இருந்தார். எப்படி பிதாமகரை எதிர்த்து யாரும் வெற்றி பெற முடியாதோ, அதேபோல் தந்தை பெரியார் அவர்களை எதிர்த்தும் யாரும் வெற்றி பெற முடியாது. அப்படிப்பட்ட வலிமையை அவர்கள் பெற்று இருந்தார்கள்.



1974 சனவரி 19] [திரு. கு. இராசமாணிக்கம்]

தந்தை பெரியார் அவர்கள் இடைக்காலத்தில் காங்கிரஸ் கட்சியை ஆதரித்து வந்தார்கள். அது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். எல்லா விஷயங்களையும் தெரிந்து இருந்த பீஷ்மர், எப்படி துரியோதனாதிகளை ஆதரித்தாரோ அதைப்போல் பெரியார் அவர்களும் காங்கிரஸ் ஆட்சியை ஆதரித்து வந்தார்கள். துரியோதனனை ஆதரித்த பீஷ்மர் எப்படி மனப்பூர்வமாக பாண்டவர்கள் ஆட்சிக்கு வரவேண்டுமென்று விரும்பினார்களோ, அதே போல் காங்கிரஸ் கட்சியை ஆதரித்த பெரியார் அவர்களும் திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிக்கு வரவேண்டுமென்று விரும்பினார்கள். செஞ்சோற்றுக் கடன் தீர்க்கவே, பீஷ்மர் துரியோதனை ஆதரித்தார். அதைபோல் பெரியார் அவர்களும் காங்கிரஸ் கட்சியில் ஒரு காலத்தில் இருந்தார்கள், அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார்கள், கதர் துணியை மூட்டையாகச் சுமந்து விற்றார்கள். அவர் தன்னுடைய செல்வத்தைக் கூட பார்க்கவில்லை. ஆகவே தான் செஞ்சோற்றுக்கடன் தீர்க்க காங்கிரஸ் கட்சியை சிறிது காலம் ஆதரித்தார்கள். ஆனால் அவருடைய உள் மனதில் அவரால் உருவாக்கப்பட்ட தி.மு. கழகம் தான் இந்த நாட்டில் ஆட்சி செலுத்த வேண்டும் என்பதாகும். அந்த வகையில் தான் திராவிட முன்னேற்றக்கழகம் இன்றையதினம் ஆட்சிபீடத்தில் இருக்கிறது.

ஒவ்வொரு பெரியவரும் இந்தநாட்டை விட்டுச்செல்லும்போது ஒன்றை அளித்து விட்டுப் போவார்கள். திருவள்ளுவர், திருக்குறளை விட்டுச் சென்றார்கள். அது இன்றைக்கு நாட்டு மக்களின் வாழ்க்கை சட்ட நூலாக அமைந்து இருக்கிறது. ஏசுபிரான் பைபிளைத் தந்து விட்டுப் போனார்கள். நபிகள் நாயகம் குர்ஆனை விட்டுச் சென்றார்கள். பெரியார் அவர்கள் இந்த ஆட்சியை விட்டு சென்று இருக்கிறார்கள். அவருடைய வாழ்நாள் பூராவும் பல்வேறு சீர்திருத்தங்களுக்காகப் போராடினார்கள். பாடுபட்டார்கள். கடைசியாக அவர்கள் தமிழ் மக்களுக்கு விடுத்த செய்தி ‘தமிழ் மக்கள் இந்த ஆட்சியைக் காப்பாற்ற வேண்டும். இந்த ஆட்சியால் தான் அவர்கள் பெற வேண்டிய முறையான வாழ்வைப் பெற முடியும் என்று சொன்னார்கள். பெற வேண்டிய உரிமைகளைப் பெற முடியும்’ என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசை கட்டிக் காப்பாற்ற வேண்டுமென்று விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

[திரு. கு. இராசமாணிக்கம்] [1974 சனவரி 19

இங்கே பேசிய உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். சிமெண்ட் உற்பத்தியைப் பற்றிச் சொன்னார்கள். காங்கிரஸ் ஆட்சி காலத்தில் சிமெண்ட் மூட்டை 40 ரூபாய் விற்றது. இப்போது அப்படியில்லை. ஒரு மனு எழுதிப்போட்டால் ரூ. 11-க்கு கண்டிரோல் விலையில் சிமெண்ட் கிடைக்கிறது. கள்ள மார்க்கெட்டோ, கடத்தில் வியாபாரமோ கிடையாது. அவைகள் தடுக்கப்பட்டு நிர்வாகத்தில் இப்போது சீர்திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம்.

உணவுத் துறையில் எடுத்துக்கொண்டால், முன்பு கியூ நிற்க வேண்டும். அப்படியே நின்றாலும் அரிசி கிடைக்குமா என்பது சந்தேகமே. ஆனால் இன்று அரிசி தாராளமாகக் கிடைக்கிறது. உணவில் நாம் தன்னிறைவு பெற்று இருக்கிறோம். மகாராஷ்டிரா, கேரளா, மைசூர் போன்ற மாநிலங்களுக்கும் இன்று அரிசி அனுப்புகிறோம்.

(பிற்பகல் 1-30)

இந்த நேரத்தில் ஒன்று சொல்லவேண்டுமென்றால், அது உரம் பற்றாக்குறைப் பற்றித்தான். அது குறித்தும் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. இதில் மத்திய அரசு மெத்தனமாக இருப்பது தான் காரணம். ஆளுநர் உரையில் தூத்துக்குடி அருகில் உரம் உற்பத்தி திட்டம் குறித்துக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட திட்டங்களை தாமதமாக்காமல், வருகிற ஆண்டிலேயே விவசாயிகளுக்கு நல்ல பலன் அளிக்கக்கூடிய விரைவான திட்டங்களாக அவைகளைக் கொண்டுவரவேண்டும் என்று நாம் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் விவசாயிகளுக்கு இன்றைக்கு இருக்கிற பிரச்னை என்னவென்றால், தஞ்சை மாவட்டத்தில் கரும்பு சாகுபடி அதிகமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியில் வடபாதிமங்கலத்தில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஆடுதுரையில் மேலும் ஒரு சர்க்கரை ஆலை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் கரும்பு விலை ஒரு டன்னுக்கு ரூ. 80, 82 என்று விற்கிறது. சர்க்கரை விலை மிகவும் அதிகமாக இருக்கிறது.



1974 சனவரி 19] [திரு. கு. இராசமாணிக்கம்]

கரும்பு விலைக்கும், சர்க்கரை விலைக்கும் சம்பந்தம் இல்லாத ஒன்றாக இருக்கிறது. மத்திய அரசு நிர்ணயிக்கக்கூடிய கரும்பு விலையும், கரும்பிலிருந்து உருவாக்கக்கூடிய சர்க்கரை விலையும் சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் விவசாயிகள் வயிற்றில் அடிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. மத்திய அரசில் இருக்கிற காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள் இதை மத்திய அரசிடம் வற்புறுத்தி, கரும்புக்குத் தேவையான நல்ல விலை அளிக்கவேண்டும், அதே நேரத்தில் ஏழை எளியவர்கள் வாங்கக் கூடிய அளவுக்கு சர்க்கரை விலையை கட்டுப்படுத்தவேண்டும். அது இந்த அரசின் கையில் இல்லை என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட காரியங்களில் எதிர்க் கட்சிக்காரர்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, 21—1—1974 திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

41. Notification issued with G.O. Ms. No. 299, Revenue, dated the 6th February 1973 in regard to an amendment to the Tamil Nadu Urban Land Tax Rules, 1966. (Laid on the Table of the House under section 45 (2) of the Tamil Nadu Urban Land Tax Act, 1966 (Tamil Nadu Act 12 of 1966.)]

42. Notification issued with G.O. Rt. No. 1829, Revenue, dated the 8th October 1973 in regard to exemption from liability to entertainments tax, show tax and additional surcharge for the benefit film show organised by the Tamil Nadu Rajasthani Society, Madras on 7th October 1973 at Devi Paradise Theatre, Madras. [Laid on the Table of the House under section 16 (4) of th Tamil Nadu Entertainments Tax Act, 1939. (Tamil Nadu Act X of 1939).]

### B. Reports, Notifications and Other Papers.

7. Notification issued with G.O. Ms. No. 6194, Revenue, dated the 29th September 1973 in regard to reduction in stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act I of 1899) in respect of the sale deed executed in favour of Messrs. Rajasthani Jain Samaj, Madras.

8. Note on loss in revenue due to the recovery of water charges at concessional rates from the Defence Industries Project, Avadi for the water supplied from the temporary water supply scheme for the period from August 1962 to April 1965.

9. Statement on Recommendation No. 23 made by the Public Accounts Committee in its Third Report (1971–72) on the Appropriation Accounts of the State of Tamil Nadu for the year 1968–69 and Audit Report 1970 in respect of the supply of raw materials to Thiruvalargal Tan India Wattle Extracts Company Limited at concessional rates.

@ 10. The Tamil Nadu Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Ordinance, 1974 (Tamil Nadu Ordinance No. 1 of 1974).

@ Despatched to Members on 17th January 1974.





## இணைப்பு I.

(68-ம் பக்கத்தில் 17-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.)

**1973 செப்டம்பர் வரையில் மேம்பாட்டுக் கட்டண விதிப்புக்குட்படுத்தப்பட்ட அறிவிக்கப்பட்ட பணிகளின் பெயர்களைக் காட்டும் விவர அறிக்கை.**

| வரிசை எண். | மாவட்டம். | அறிவிக்கப்பட்ட பணிகளின் பெயர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | செங்கற்பட்டு | உத்திரமேரூர் துணை வட்டத்திற்கு நீர் வழங்க செய்யாறு அணைக்கட்டு. |
| 2. | தென் ஆர்க்காடு | வடவாறு-வீரணண்புரம் திட்டம். |
| 3. | ,, | சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம். |
| 4. | ,, | வீடுர் நீர்த்தேக்கத் திட்டம். |
| 5. | ,, | எல்லிஸ் சத்திர அணைக்கட்டுத் திட்டம். |
| 6. | ,, | வடக்கனேந்தல் அணைக்கட்டுத் திட்டம். |
| 7. | ,, | கோமுகிநதி நீர்த்தேக்கத் திட்டம். |
| 8. | தஞ்சாவூர் | வெட்டாறு குறுக்கே அணை ஒன்று கட்டுதல். |
| 9. | ,, | வெட்டாறு குறுக்கேயுள்ள மேலாத்தூர் அணைக்கட்டைப் பொறிமதகாக மாற்றுதல். |
| 10. | ,, | வளவனாறு நீர் ஏற்றுத் திட்டம். |
| 11. | ,, | முள்ளியாறு கடைமடைப் பகுதியில் பாசன வசதியை நீட்டித்தல். |
| 12. | ,, | ஐமூர் நீர் ஏற்றுத் திட்டம். |
| 13. | தஞ்சாவூர் | பாமினி-முள்ளியாறு நீர் ஏற்றுத் திட்டம். |
| 14. | ,, | முள்ளியாறு நீர் ஏற்றுத் திட்டம். |
| 15. | ,, | தென்னுடார் நீர் ஏற்றுத் திட்டம். |
| 16. | ,, | ஓலவாயில் நீட்டிப்பு கால்வாய். |
| 17. | ,, | வள்ளம்வாரி வடிகால் மேம்பாட்டுப் பணிகள். |

| வரிசை எண். | மாவட்டம். | அறிவிக்கப்பட்ட பணிகளின் பெயர். |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 18. | தஞ்சாவூர் | வீடாபுரி வடிகால் மேம்பாட்டுப பணிகன். |
| 19. | ,, | நரசிங்க காவிரிக்கு அப்பால் பாசன வசதியை நீட்டித்தல். |
| 20. | ,, | பட்டுவனுச்சி வடிகால் மேம்பாட்டுப் பணிகள். |
| 21. | ,, | மஹாராஜ சமுத்திரத்தின் குறுக்கே படுகை அணை கட்டுதல். |
| 22. | ,, | நந்தலாறு வடிகால் மேம்பாட்டுப் பணிகள். |
| 23. | ,, | புதிய கட்டளை மேல் நிலைக் கால்வாய். |
| 24. | ,, | மரக்கொரையாறு கீழ்த்தாங்கியாறு வடிகால் மேம்பாட்டுப் பணிகள். |
| 25. | திருச்சி | வடவாற்றிலிருந்து கோட்டகத்திற்கு நீர் வழங்குதல். |
| 26. | ,, | ஓலவாயில் கால்வாயை நீட்டித்தல். |
| 27. | ,, | புதிய கட்டளை மேல் நிலைக் கால்வாய். |
| 28. | ,, | புள்ளம்பாடி கால்வாய்த் திட்டம். |
| 29. | ,, | கட்டளைப் படுகை பொறி மதகிற்குத் தடுப்புக் கதவுகள் அமைத்தல். |
| 30. | ,, | புகலூர் கால்வாய்த் தலைப்பணியை ஜேடர் பாளையத்திற்கு மேல் மாற்றுதல். |
| 31. | ,, | புகலூர் கால்வாயிலிருந்து பூபலாறு முதலியார் கால்வாய்க்கு நீர் வழங்குவதை நீட்டித்தல். |
| 32. | ,, | முசிறி கால்வாய்த் திட்டம். |
| 33. | ,, | முள்ளப்பாடி ஏரிக்கு நீரைத் திருப்பி விடுதல். |
| 34. | ,, | பொன்னேரி ஏரியைச் சீரமைத்தல். |
| 35. | ,, | சின்னாற்றின் தெற்குப் பக்கத்தில் கரையமைத்தல். |
| 36. | ,, | கீழ் பவானித் திட்டம், |
| 37. | ,, | பழைய அமராவதி திட்டம். |



| வரிசை எண். | மாவட்டம். | அறிவிக்கப்பட்ட பணிகளின் பெயர். |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| 38. | திருச்சி | கைகளத்தூர் ஏரி. |
| 39. | மதுரை | வைகை நீர்த்தேக்கத் திட்டம். |
| 40. | ,, | உத்தமபாளையத்தில் உள்ள மைதளை மன்னுடி ஏரிக்கு நீர் வழங்குவதற்காக, வைரவன் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு. |
| 41. | இராமனுதபுரம் | பெரியாறு நீட்டிப்புத் திட்டம். |
| 42. | ,, | காலரி நீர் வழங்கு கால்வாய். |
| 43. | ,, | அர்சுன நதித் திட்டம். |
| 44. | திருநெல்வேலி | மணிமுத்தாறு திட்டம். |
| 45. | சேலம் | மேட்டூர் கால்வாய்த் திட்டம். |
| 46. | ,, | ஜேடர் பாளையம் படுகை பொறி மதகு. |
| 47. | தருமபுரி | கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத் திட்டம். |
| 48. | ,, | மார்கண்ட நதியின் குறுக்கே அணைக்கட்டு. |
| 49. | கோயம்புத்தூர் | கீழ்பவானித் திட்டம். |
| 50. | ,, | அமராவதி நீர்த்தேக்கத் திட்டம். |
| 51. | ,, | பெருமுகை அத்தாணிக் கால்வாய். |
| 52. | ,, | மேட்டூர் கால்வாய்த் திட்டம். |
| 53. | ,, | பொள்ளாச்சி - வேட்டைக்காரன்புதூர் கால்வாய்கள். |
| 54. | ,, | பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம். |
| 55. | ,, | நீலாம்பூர் ஏரி. |
| 56. | ,, | மொத்தானும் ஏரி. |
| 57. | ,, | செங்கப்பள்ளி ஏரி. |
| 58. | வட ஆர்க்காடு | சாத்தனூர் நீர்த்தேக்கத் திட்டம். |

[1974 சனவரி 19

# இணைப்பு II.

[70-ம் பக்கத்தில் 19-ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

வேளாண்மை தொடர்பான ஆலோசனைப் பணி வசதிகளை எளிதாக்கும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மை உற்பத்தித் திறன் குழுவை அரசு அண்மையில் ஏற்படுத்தியுள்ளது. இதன் தலைமை அலுவலகம் சென்னையில் உள்ளது. வரையறுக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் மேல் வேளாண்மை குறித்த எல்லாவகை ஆலோசனைப் பணிகளையும் இக்குழு மேற்கொள்ளும். இக்குழு வல்லுநர் பலரைப் பெற்றிருக்கும். வேளாண்மைக் கூறுகள் குறித்த தொழில் நுட்ப ஆய்வுகள் இக்குழுவால் மேற்கொள்ளப்படலாம். வேளாண்மைப் பொருளாதாரம், இரசாயனம், பொருளாதாரம், பண்ணை நிர்வாகம், பொறியியல், தண்ணீர் பயன் நிர்வாகம் போன்ற பலதரப்பட்ட பொருள்கள் குறித்து அனுபவத் தனித்திறமை வேளாண்மை ஆலோசனைப் பணிக்குத் தேவையாயிருப்பதால், ஆணித்தரமான கருத்துரை நல்க தனிப்பட்ட வல்லுநர் ஒருவருக்கு இயலாமற் போகலாம். வல்லுநர்கள் அனைவருடைய ஒத்துழைப்பையும் கொண்டு, வேளாண்மை உற்பத்தித் திறன் குழு உழவர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை நல்கும். வல்லுநர்களின் கருத்து வேண்டியிராததும் உள்ளூரிலேயே தீர்க்கப்படக் கூடியதுமாகிய நிலப் பிரச்சினைகள் அனைத்தும் குறித்து வேளாண்மைத் துறை அதிகாரிகள் உழவர்களுக்கு வழக்கமான ஆலோசனைப் பணியை நல்குவர். அறிவியல் அடிப்படையிலான கருத்துரை தேவைப்படக் கூடிய பிரச்சினைகளுக்கு உள்ளூர் ஆராய்ச்சி நிலையங்களில் பணியாற்றும் வல்லுநர்களை அவர்கள் கலந்து ஆலோசித்து உதவி தேவைப்படக் கூடிய உழவர்களுக்கு உதவிகளை அளிப்பர்.

உழவர் சமுதாயம் பயனடைய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி-நல வளர்ச்சிப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து செயலாற்றுவதன் மூலம் செவ்விய பயனுள்ள ஒரு இணைப்பு நிலவும் பொருட்டு கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள வேளாண்மைக் கல்லூரி ஆராய்சி நிலையங்களில் "பண்ணை ஆலோசனைக் குழு" ஏற்படுத்தப்பட்டுள்ளது. உழவர்களுக்கு ஏற்படக்கூடிய பிரச்சினைகளுக்கு இக்குழு தீர்வு காணும்.



1974 சனவரி 19]

In order to steamline consultancy service facilities with regard to Agriculture, the Government have recently started the Tamil Nadu Agricultural Productivity Council with its headquarters at Madras which will undertake consultancy of all kinds pertaining to Agriculture on payment of prescribed fees. This Council will have a panel of experts and technical investigations on any aspects of Agriculture can be undertaken by this Council. Since Agricultural Consultancy calls for expertise on a variety of subjects like Agronomy, Chemistry, Economics, Farm Management, Engineering, Water Management, etc., it would be difficult for any single specialist to offer any authentic opinion. The Agricultural Productivity Council generally collaborate all the specialists and offer solutions to the problems facing the agriculturists. The officers of Agriculture department will render the usual advisory service to the farmers on all field problems that can be locally solved for which expert opinion is not required. For problems which warrant scientific opinion, they will consult the experts available in local research stations and offer remedies to the needy farmers.

In order to have effective and purposeful integration through co-ordinated activities of research and extension personnel of the Tamil Nadu Agricultural University to benefit the farming community. "Farm Advisory Council" has been started in Coimbatore and Madurai Agricultural College and Research Institute. The Council will tackle the problems posed by the farmers.

# APPENDIX III.

[*Vide* foot-note at page 85]

*Governor's Address.*

Hon'ble Members of the Legislature,

I deem it my privilege to welcome you all to this Joint Session of the Legislature.

2. At the outset, I would like to refer to the sad demise of Periyar E. V. Ramaswami. In his death, we have lost a valiant freedom fighter, a fearless social reformer and a crusader against social oppression and inequity. His was a life totally dedicated

to preaching the gospel of rationalism and to bettering the lot of the poor and the down-trodden. If the social conscience of to-day has become sensitive to man's inhumanity to man and if the hold of antiquated customs, ceremonies and superstitions over the people has been eroded, it is, to a great extent, due to the untiring efforts of Periyar, spread over half a century. We have become much the poorer, by his passing away.

3. In a predominantly monsoon-dependant economy like ours, the timely onset and adequancy of monsoon rains are crucial During the year gone by, the South-West monsoon was subnormal, particularly in the vital catchment areas, leading to less than customary replenishment of the hydel reservoirs. This has compelled the Government to enforce a 15 per cent power cut. The North-East monsoon has been normal, but not without its vagaries in certain pockets.

4. It has been, and will continue to be the policy of this Government to take all such steps as may be necessary to free the State economy from the vagaries of the monsoons to the extent possible—by enhancing irrigation potential, by stepping up power generation from non-hydel sources, by transmitting power to every nook and corner of the State and by providing assured water-supply for drinking purposes in all needy areas, consistent with the resources available, both physical and financial. The per capita availability of cultivable land being only about half an acre with an average annual rainfall of 30″ to 40″ and an irrigated area of only 40 per cent of the total, there is compelling need to develop and manage our water and power resources prudentl to keep our population in reasonable comfort, even if this means making a massive investment of our scarce resources in these fields. The Government have been utilising a major portion of their plan resources for these purposes and they propose to set apart as much as Rs. 548 crores for expenditure in these vital sectors. The allotment for power is expected to be Rs. 326 crores; for irrigation, Rs. 129 crores and for urban and rural water supply, Rs. 93 crores—out of the total outlay of about Rs. 1,200 crores proposed in the Fifth Plan.

5. Hon'ble Members are aware that Tamil Nadu has practically exhausted all its major sources of irrigation, but there are still some smaller sources left untapped or under-utilised which, if harnessed properly, could provide insurance against floods and



drought at least in some areas. The suggestions of some of the Members to provide for irrigation schemes in drought prone areas have been taken note of and as many as 14 schemes at a total cost of Rs. 15.90 crores have been formulated for these areas. Besides these, 19 new medium schemes in other areas, at a total cost of Rs. 15 crores, have been included in the Fifth Plan.

6. Most of the irrigation systems in our State have developed over time, without adequate regulatory arrangements. A massive programme of modernising the various irrigation systems is proposed to be undertaken in stages. Improvements to Periyar channels will bring in a new area of 23,000 acres under cultivation, besides stabilising 8,000 acres of existing area. For construction of new tanks and improving the existing tanks, a provision of Rs. 30 crores is being made in the Fifth Plan under the Special Minor Irrigation Programme. A new programme of our Government to be taken up for implementation in the coming year relates to minor irrigation tanks vested with Panchayat Unions. These tanks number around 27,000. A large number of these are located in former Zamin areas and have suffered neglect for years. It is proposed to take up the renovation and standardisation of these tanks by stages and for this, a provision of Rs. 15 crores has been made in the Fifth Plan. It is also proposed to sink 10,000 filter-point wells, 12,500 tubewells, 4,000 bores in existing open wells and to deepen 10,000 open wells during the Fifth Plan period. Having exhausted most of the resources in regard to surface water, our attention should naturally turn to a scientific assessment of the available ground water resources and their utilisation. We have taken steps in this direction also.

7. We have reached a stage of national economic development when we have to think in terms of exploiting the water and power resources on a regional basis. Last year, I had suggested the formation of a Western Ghats Development Corporation to exploit the untapped water, power and other resources in this region. The Deputy Chairman of the Union Planning Commission recently convened a meeting of the representatives of Maharashtra, Kerala, Karnataka, Tamil Nadu and Goa to discuss the co-ordinated development of the Western Ghats. It is hoped that the Government of India will pursue vigorously this important suggestion.

8. The lack of mineral and other resources in the State has made it imperative that adequate power should be made available to help the local industries to enable them to process raw materials and 'intermediates' obtained from other regions. Similarly, we need more power to run agricultural pumpsets. An idea of the extent of dependence on electric power in the State may be had from the fact that well over 6.5 lakhs pumpsets and about 6,500 factory establishments, both big and small, accounting for more than 50 per cent of the State's total output, are dependent on electric power. Further, the demand for power is growing at the rate of 12.5 per cent per year. The present effective capacity for power generation is only 1,371 MW against the required capacity of 2,010 MW, leaving a deficit of 639 MW. This gap might widen to 2,189 MW by 1978–79, if we do not make any additions during the Fifth Five-Year Plan.

9. The Plan provides for an outlay of Rs. 326 crores for power, out of which, a sum of Rs. 180 crores is for generation, Rs. 90 crores for transmission and Rs. 50 crores for rural electrification. The Government have plans to take up even small hydel schemes. They also propose to take up pumped storage schemes like Kadamparai, mainly to meet the peakload demand. The main drawback of our hydel system is that major schemes like Mettur and Periyar are tied up with irrigation despatches. They, therefore, suffer from inherent limitations in becoming firm generators of power. Even though the installed hydel capacity is of the order of 1,224 MW, the reliable capacity is about 775 MW only. The need for buttressing our power generation programme with thermal power plants is obvious. We have proposed two thermal projects for inclusion in the Fifth Plan, one at Tuticorin and the other at Mettur. You would be happy to learn that the Central Government has cleared the Tuticorin project. The benefits of this scheme to the extent of 400 MW are likely to accrue before the end of the Fifth Plan. Even if all the power likely to be generated during the Plan period from continuing as well as new schemes is taken into account, there will still be a gap of 1,185 MW at the end of the Fifth Plan.

10. In this context, we should also take note of the current oil crisis and the need for tapping other fuel resources for generating power. This brings into sharp focus, the case for further development and exploitation of the Neyveli Lignite Mines. It takes



seven to ten years for an open-cast mine of this kind to be fully developed. Even if we start to-day, more power will be generated at Neyveli from the second mine cut only during the Sixth Plan. Keeping all these factors in view, we have been emphasising the need for initiating work on the second mine cut at Neyveli and for establishing a second thermal station with a capacity of 1,000 MW. The Government of Tamil Nadu consider that immediate sanction of this project is crucial for the well-being of the State and I would request the Union Government to take an early favourable decision regarding this. The commissioning of the Kalpakkam Atomic Energy Plant has been unduly delayed. Originally scheduled to be commissioned in 1970–71, it is now expected to be commissioned only by 1977–78. The expansion programme of the Atomic Plant should be taken up simultaneously, as any delay would only worsen the power situation in the State in the years to come.

11. Hon'ble Members are aware that the Government have undertaken a massive programme of extending water-supply to urban and rural areas. Out of a total of 2 Municipal Corporations, 99 Municipalities, 13 Townships and 626 Town Panchayats in the State, water-supply has been extended to both the Corporations, 87 Municipalities, 8 Townships and 71 Town Panchayats. Water-supply Schemes are under execution in 3 Municipalities and 37 town panchayats. In rural areas, we have already constructed about 72,600 wells and 5,700 overhead tanks and ground level reservoirs. It is proposed to take special steps to tackle the needs of problem areas, like endemic tracts, in the Fifth Plan period. As regards Madras City, work is in progress on the Veeranam Project, which will bring 40 million gallons of water per day. The scheme is likely to be completed in 1975. I wish to mention here the significant agreement reached between Tamil Nadu and Kerala regarding the supply of Siruvani water for Coimbatore town which has been under discussion for long. This agreement which is the outcome of understanding between neighbouring States will be a shining example of inter-State co-operation. This scheme, which is estimated to cost about Rs. 10 crores, would bring in ultimately 23.5 million gallons of water per day to Coimbatore and other wayside towns and villages.

12. While water and power are critical inputs for stepping up agricultural and industrial production, to provide which we have taken and will continue to take all possible steps, here are many constraints, which operate in the field of agricultural and industrial production. You will appreciate that thanks to the integrated approach adopted by our Government in co-ordinating and making available all the necessary inputs simultaneously, the Green Revolution has been ushered in and the State now has a marginal surplus of foodgrains in relation to our needs. In 1973–74, our foodgrains production was originally estimated to be around 74 lakh tonnes. This estimate is now in jeopardy on account of the difficulties anticipated in securing adequate supplies of fertilisers and pesticides. Against 3·15 lakhs tonnes of 'nitrogen' needed in 1973–74, supplies have totalled to only 2·3 lakh tonnes. There is a shortage of D.D.T. and B.H.C. also. We have requested the Government of India to take immediate steps to increase the indigenous production of fertilisers and pesticides and to import additional quantities of these vitally needed commodities.

13. Few will dispute the fact that Tamil Nadu will have to depend more and more on rapid industrialisation to improve its over-all economy. With this in view, we have done our best as regards industrial investment through the Tamil Nadu Industrial Development Corporation. We have proposed to expand the capacity of Tamil Nadu Cements from 4 lakh tonnes to 7 lakh tonnes per annum at a cost of Rs. 14 crores and to diversify the line of manufacture in the Continuous Casting Plant at Arkonam at a cost of Rs. 5·6 crores. So far as Joint Sector Projects sponsored by the Corporation are concerned, work is going on at a pretty rapid pace on the massive fertiliser project coming up near Tuticorin, with a production capacity of 1,100 tonnes of ammonia and 1,600 tonnes of urea per day. The project is likely to be completed by June 1974. Preliminary work is also under way in respect of tyre, television, sodium hydrosulphite, borax, soda ash, salt and pharmaceutical projects. We have also requested the Central Government to approve the establishment of another big fertiliser plant in the joint sector in Tamil Nadu. The State Industries promotion Corporation is also assisting entrepreneurs in setting up medium industries, particularly in backward areas of the State, by giving a package of incentives such as underwriting equity, provision of term-loans, interest-free sales tax loan and developed plots. The Corporation is also promoting an industrial complex at Ranipet. The Corporation so promotional activities have so far catalysed an investment of about Rs. 37 crores, creating direct employment for over 6,000 persons. The Government have also proposed to set up, during the Fifth Plan, eight new Sugar Mills.



14. The Government are giving all the support they can, to the Handloom industry in the State by way of organising and strengthening the co-operatives, by ensuring timely supply of quality yarn at reasonable rates through the Co-operative Spinning Mills and by granting substantial rebate on the cloth sold by the co-operatives. A provision of nearly Rs. 18 crores is proposed to be made for development of handlooms in the Plan. All these would be effective, if the Centre reserves, certain items for exclusive manufacture by Handlooms and makes suitable arrangements for timely supply of essential raw materials. The imposition of power cut, coupled with the sharp increase in cotton price last year, had led to acute scarcity of yarn and phenomenal increase in its price, causing considerable hardship to the weavers. The Government of Tamil Nadu were able to ensure adequate supply of yarn at reasonable rates to all the weavers in the Co-operative Sector, by pooling the yarn produced by the Co-operative Spinning Mills and the mills taken over and run by the Tamil Nadu Textile Corporation. The problem of adequate supply of yarn to weavers outside the co-operative sector, however, continues to cause concern. Steps are being taken to tackle this problem also.

15. While this State has done its best to promote industrialisation, the Centre must come forward to make substantial investments in industries in the State. In 1973–74, the Centre has allocated only Rs. 40 crores for this State, out of a total of Rs. 1,500 crores for the whole country. This trend towards a decreasing share of Tamil Nadu in Central Industrial Projects, needs to be reversed. A sum of Rs. 19,200 crores has been ear-marked for the Central Sector in the Fifth Plan. It is hoped that a reasonable share of this amount will be invested in Tamil Nadu. Unless this is done, further development of the State will be seriously handicapped. The following new projects should be considered by the Centre for being taken up in the Central Sector :—

1. Second mine-cut at Neyveli.
2. Expansion of Kalpakkam Atomic Plant.

3. Setting up of another Nuclear Plant at Tuticorin.

4. Intensification of oil exploration in the Cauvery basin and off the coast of Tamil Nadu.

5. Conversion of Madras–Tuticorin railway line into broad-gauge.

6. Implementation of Sethusamudram Project.

7. Construction of a mass transit system in the Madras Metropolitan Area.

8. Establishment of a shipyard at Tuticorin.

9. Establishment of Defence Industries.

16. In spite of all that has been done on the agricultural and industrial fronts, the problem of poverty and unemployment continues to cause us grave concern. Our Special Employment Programmes including the Crash Scheme for Rural Employment, Youth Service Corps, Special Apprenticeship Training Scheme and Half-a-million Joint Programme for the educated unemployed, would generate around 40,000 jobs. Labour intensive programmes like minor irrigation, house building, and road-laying and road improvement, taken up under the Plan schemes, would also generate considerable employment opportunities. However, it would not be possible for the State Government alone to provide jobs for everyone. Job opportunities on a much larger scale would emerge, only if middle class entrepreneurs are encouraged to save and invest. This is precisely what our Chief Minister has been emphasising repeatedly. It is with a view to enthusing such persons to take to industries that we have been suggesting to the Central Government, the reorganisation of the income-tax structure, which would also minimise the evils of unaccounted money. It is to be sincerely hoped that the Central Government would act on our suggestion.

17. The cause of the poor and the down-trodden has always been dear to us and it provides the driving force for our Development Plans. For the uplift and advancement of the Scheduled Castes and Backward Classes, the Government have proposed to spend Rs. 91·50 crores during the Plan period, inclusive of the Plan provision of Rs. 21 crores. The massive Slum Clearance Programme, involving construction of 3,000 to 4,000 tenements



per year, to house the slum dwellers, would continue. Under this programme, which is being implemented in Madras City by Slum Clearance Board and at Coimbatore, Madurai, Tiruchirappalli, Salem, Thanjavur and Cuddalore by the State Housing Board, 15,470 tenements have been constructed in the City and about 5,000 tenements have been constructed in the six other towns mentioned.

18. The draft Fifth Plan has been prepared by various working groups in consultation with the State Planning Commission. Preliminary discussions have taken place with the Central Planning Commission regarding the size of the Fifth Plan. We expect the size of the Plan to be fixed only after further discussions are held regarding Central assistance for the Plan. Meanwhile, a series of discussions regarding the size of the Annual Plan for 1974-75 have been held and the latest indications given by the Union Planning Commission are favourable. We expect that we may be able to have an Annual Plan for 1974–75 of the order of Rs. 150 crores.

19. In this context, I must mention the award of the Sixth Finance Commission. We had hoped that the earlier trend of rewarding extravagance and penalising prudence will be reversed. We had also submitted proposals towards evolving a new federal financial structure. Unfortunately, the Sixth Finance Commission has continued the traditional line of filling gaps of States, without reference to the tax effort put in by them in relation to their State incomes.

20. As a result, out of Rs. 11,578 crores available for allocation among the States, we have been given only Rs. 626 crores, which works out to only 5.4 per cent. It is unfortunate that the Finance Commission has not chosen to reimburse our losses arising on account of prohibition which is being enforced in pursuance of the constitutional directive. We have also not been given any share in the grant meant for upgrading standards of administration, education and health facilities.

21. One positive aspect of the Sixth Finance Commission's Report which needs to be welcomed is the rescheduling of debt recommended by the Commission and accepted by the Government of India. We are to obtain a relief of nearly Rs. 87 crores

*1974 சனவரி 19]*

on this account during the Fifth Plan period. This is gratifying to us particularly because of the fact that Tamil Nadu has been in the forefront among the States requesting such rescheduling.

22. The Government of Tamil Nadu had requested the Sixth Finance Commission particularly to take into account the specific consequences which the Central Pay Commission's recommendations would have on the State Governments. Unfortunately, the Sixth Finance Commission has not built up in the structure of devolution of grants and taxes provision for the impact of such revisions of pay and allowances as may become inevitable as a result of the impact of the Central Pay Commission's recommendations. We have reiterated before many Commissions including the Sixth Finance Commission the urgent necessity to evolve a national wage price policy. The present situation in which, different sections of the people performing similarly arduous jobs under Government or under nationalised institutions, are remunerated unevenly is bound to lead to friction and frustration. We hope and trust that the Government of India will in consultation with the State Governments, try to evolve arrangements to bring about a national policy in this matter.

23. Before I conclude, I wish to mention the very large increase in the anticipated number of repatriates from Sri Lanka during the coming years. In fact nearly 57,000 families are expected to come over during the next five years. The expenditure needed to rehabilitate them would be of the order of Rs. 60 to 70 crores. While we welcome the return of our kith and kin from other countries, we have also to recognise the suffering and dislocation for these people. They should be properly looked after and jobs provided for them so that they do not feel that they are unwelcome in their country of origin. Besides, their return to India is a consequence of agreements reached at the national level. I do hope and trust that the Government of India will continue to treat the rehabilitation and welfare of these repatriates as a national responsibility and help the States to provide adequate facilities for them.

24. The country is passing through very trying times due to national and international developments. Industrial production has been considerably handicapped by the credit squeeze imposed by the Reserve Bank of India. This tends to increase rather than



*1974 சனவரி 19]*

decrease the pressure on prices. This policy deserves to be reconsidered. The fuel crisis, sparked by the recent developments in the Middle-East has made the situation more difficult than before. The whole structure of economic policies for development with stability, for growth with social justice has to be examined in the light of the problems posed by these developments. The Government of Tamil Nadu feel that the situation is grave enough to call for a meeting of Chief Ministers so that the policies both for the short and long terms can be formulated and implemented to meet successfully these challenges to our nation's progress.

25. I look forward with great pleasure to your deliberations. I have no doubt that they will be conducted with a high sense of duty and responsibility and in a spirit of cordiality and mutual tolerance.

Vanakkam (Cheers).

## இணைப்பு IV

### ஆளுநர் பேருரையின் தமிழாக்கம்

[85-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

மதிப்பிற்குரிய சட்ட மன்ற உறுப்பினர்களே !

சட்ட மன்றத்தின் இக் கூட்டவைக்கு உங்கள் அனைவரையும் வரவேற்பதில் பெருமை அடைகிறேன்.

2. பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் நம் அனைவரையும் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டு இயற்கை எய்தியதை ஆழ்ந்த வருத்தத்தோடு முதற்கண் குறிப்பிட விழைகிறேன். ஒரு மாபெரும் விடுதலை வீரரை இழந்துவிட்டோம்; அஞ்சாமையை அணிகலனாகக் கொண்ட சமூக சீர்திருத்தக்காரர் அவர்; நாட்டில் நிலவிய ஏற்றத் தாழ்வையும் தாழ்ந்த மக்கள் எனக் கருதப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையான அடக்கு முறையையும் முழு மூச்சுடன் எதிர்த்துப் போராடி வந்த வீரர் அவர். பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும் தாழ்வுற்று அடிமைப் பட்ட ஏழை மக்களின் நிலையை உயர்த்துவதற்கும் தம் வாழ்நாள்

முழுவதையும் அர்ப்பணித்த செம்மல் அவர். மனிதனுக்கு மனிதன் இழைத்து வந்த ஈவிரக்கமற்ற கொடுமையை இன்று சமூகத்தில் அனைவரும் உணர்ந்துள்ளார்கள் என்றால், கண்மூடித்தனமான பத்தாம் பசலிப் பழக்க வழக்கங்களும், சடங்குகளும், சம்பிரதாயங்களும், மூட நம்பிக்கைகளும் மனிதர்களை ஆட்டிப் படைப்பது பெரும்பாலும் நீங்கிவிட்டதென்றால். அரை நூற்றாண்டுக்கும் மேலாகப் பெரியார் அவர்கள் அயராது, மெய்வருத்தம் பாராது மேற்கொண்ட முயற்சிகளே பெரிதும் காரணம் என்பது வெள்ளிடை மலையாகும். அவர் மறைவு நமக்குப் பேரிழப்பாகும்.

3. பயிர் விளைவுக்குப் பருவ மழையையே பெரிதும் நம்பியுள்ள நமது மாநிலத்தில், கடந்து முடிந்த ஆண்டில் தென் மேற்குப் பருவ மழை இயல்பான அளவுக்குக் குறைவாகவே பெய்தது. குறிப்பாக, நீர் கோள் பகுதிகளில் போதிய அளவு மழை பெய்யவில்லை. இதனால், புனல் மின்சார நீர்த் தேக்கங்களில் வழக்கத்தை விடக் குறைவாகவே நீர் நிரம்பியது. இதன் விளைவாக 15 சத வீத மின்சார வெட்டு விதிக்கப்பட வேண்டிய இடர்ப்பாடான நிலைமை அரசுக்கு ஏற்பட்டது. வட கிழக்குப் பருவ மழை இயல்பான அளவுக்குப் பெய்தது. எனினும், சிற்சில பகுதிகளில் போதிய அளவு மழை பெய்யவில்லை.

4. பருவ மழையை நம்பியிருத்தல் என்ற நிலையிலிருந்து இம் மாநிலப் பொருளாதாரத்தை விடுவிப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள் அனைத்தையும் இம் மாநில அரசு எடுத்து வருகிறது. பாசன வளத்தைப் பெருக்குதல், புனல் வாயிலல்லாத பிற வாயில்கள் மூலம் மின்சக்தி உற்பத்தியைப் பெருக்குதல், இம் மாநிலத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் மின்னொளி வழங்குதல், தேவையான பகுதிகள் அனைத்திலும் குடிதண்ணீர் தட்டுப்பாடின்றிக் கிடைக்க வகை செய்தல் முதலியவை அந்நடவடிக்கைகளாகும். இவை அனைத்தும் நம்மிடமுள்ள நிதி வசதி மற்ற வசதிகள் இடந்தரும் அளவுக்கு மேற்கொள்ளப் படும். நமது மாநிலத்தில் தனி நபர் சராசரி விளை நிலம் சுமார் அரை ஏக்கர் ஆகும். ஆண்டின் சராசரி மழை அளவு 30 அங்குலம் முதல் 40 அங்குலம் வரை மட்டுமே. பயிரிடப்படும் நில அளவில் 40 சத வீத நிலங்களுக்கு மட்டுமே பாசன வசதி கிடைக்கிறது. எனவே, பெருந் தொகையினராக உள்ள நம்து



மாநில மக்களுக்கு நியாயமான வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்றால், நமது நீர்வளத்தையும் மின்வளத்தையும் நல்ல முறையில் பெருக்கி அறிவார்ந்த வகையில் பயன்படுத்த வேண்டியது அவசியமும் அவசரமும் ஆகும். நம்மிடமுள்ள குறைந்த நிதி வசதியை இத் துறைகளில் பெருமளவு முதலீடு செய்தேனும் இந்நோக்கத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். இதையொட்டி இந்த அரசு தனது திட்ட நிதி வசதியில் பெரும் பகுதியை இந்த நோக்கங்களுக்காகவே செலவிட்டு வருகிறது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் மொத்தம் 1,200 கோடி ரூபாய் செலவிட நாம் திட்டமிட்டுள்ளதில், இம் முக்கியமான துறைகளில் செலவிடுவதற்கென்றே இந்த அரசு 548 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கக் கருதியுள்ளது. இதில், மின் சக்திக்காக ஒதுக்கப்படும் தொகை 326 கோடி ரூபாயாகவும் பாசனத்துக்காக ஒதுக்கப்படும் தொகை 129 கோடி ரூபாயாகவும், நகர்ப் பகுதிகளிலும், நாட்டுப்புறத்திலும் குடி தண்ணீர் வசதிக்காக ஒதுக்கப்படும் தொகை 93 கோடி ரூபாயாகவும் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

5. பெரிய பாசன வளங்கள் அனைத்தையும், தமிழ்நாடு ஏற்கெனவே பயன் படுத்தி விட்டது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். எனினும், பயனுக்குக் கொண்டுவராத அல்லது முழு அளவில் பயன் படுத்தப்படாத சிறு பாசன வளங்கள் இன்னும் சில இருக்கின்றன. இவற்றைத் தக்கவாறு பயன்படுத்தினால், சில பகுதிகளிலேனும் வெள்ளமோ வறட்சியோ ஏற்படாது தடுக்க முடியும். வறட்சிப் பாங்கான பகுதிகளில் பாசனப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பல்வேறு உறுப்பினர்கள் நல்கிய கருத்துரையை நாட்டத்திற் கொண்டு இப்பகுதிகளுக்கென மொத்தம் 15.90 கோடி ரூபாய் செலவாகும் 14 திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, வேறு சில பகுதிகளில் மொத்தம் 15 கோடி ரூபாய் செலவு ஆகும் 19 புதிய நடுத்தரத் திட்டங்கள் ஐந்தாவது திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

6. நமது மாநிலத்திலுள்ள பல்வேறு பாசன அமைப்புகள் பல காலகட்டங்களில் போதிய ஒழுங்குபடுத்தும் அமைப்புகளின்றி உருவாகியுள்ளன. எனவே, பல்வேறு பாசன அமைப்புகளையும் மாற்றியமைத்துப் புதுப்பிக்கும் பெரும் வேலைத்திட்டம் படிப்படி-

யாக மேற்கொள்ளப்படவிருக்கிறது. பெரியாறு கால்வாய்களுக்கு மேம்பாடுகள் செய்தால், 23,000 ஏக்கர் புதிய பகுதி பாசனம் பெற்று விளைநிலமாவதுடன். இப்போதுள்ள 8,000 ஏக்கர் ஆயக்கட்டுப் பகுதியும், தடைபடாப் பாசன வசதியைப் பெறும். புதிய ஏரிகளை அமைப்பதற்கும், உள்ள ஏரிகளைச் சீரமைப்பதற்கும் ஐந்தாவது திட்டத்திலே சிறு பாசன சிறப்பு வேலைத் திட்டத்தின்கீழ் 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்து வரும் ஆண்டில் நமது அரசு நிறைவேற்ற மேற்கொள்ளவிருக்கும் புதிய வேலைத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பிலுள்ள சிறு பாசன ஏரி, குளங்களைக் குறித்ததாகும். இவற்றின் எண்ணிக்கை 27,000 ஆகும். இவற்றில் பெரும் பாலானவை முன்னாள் ஜமீன் பகுதியில் அமைந்துள்ளன. பன்னெடுங்காலமாக இவை கவனிக்கப்படாமல் இருந்துவிட்டன. இந்த ஏரி குளங்களைச் சீராக்கி, தரப்படுத்தும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும். இதற்கென ஐந்தாவது திட்டத்தில் 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் ஐந்தாவது திட்டக் காலத்தில் 10,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள். 12,500 குழாய் கிணறுகள் இறக்கவும், இப்போதுள்ள சாதாரண கிணறுகளில் 4,000 துளைகள் போடவும், 10,000 கிணறுகளை ஆழப்படுத்தவும் கருதியுள்ளோம். மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் அநேகமாக நாம் பயன்படுத்திவிட்டோமாதலால், ஊற்று நீர்வளம் இருக்கும் இடங்களைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியை அறிவியல் முறையில் மேற்கொண்டு அதைப் பயன் படுத்துவதிலேயே நாம் நாட்டம் செலுத்த வேண்டும். இதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

7. நமது தேசியப் பொருளாதார வளர்ச்சியில், வட்டார அடிப்படையில் நீர் வளத்தையும் மின் வளத்தையும் பயன்படுத்துவது பற்றிக் கருதிப் பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் பயன்படுத்தப்படாமல் உள்ள நீர் வளத்தையும் மின் வளத்தையும் பயனுக்குக் கொண்டு வருவதற்காக, "மேலமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுக் கழகம்" ஒன்றை அமைக்க வேண்டுமென நான் சென்ற ஆண்டு ஆலோசனை கூறினேன். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவது குறித்துப் பேசுவதற்காக, மகாராஷ்டிரம், கேரளம், கர்நாடகம், தமிழ் நாடு, கோவா ஆகியவற்றைச்



சார்ந்த பிரதிநிதிகளின் கூட்டம் ஒன்றை மத்தியத் திட்ட ஆணைக் குழுவின் துணைத் தலைவர் அண்மையில் கூட்டினார். இந்த முக்கியமான ஆலோசனையை மத்திய அரசு முனைப்புடன் கருதிப் பார்த்து ஆவன செய்யுமென நம்புகிறோம்.

8. இம் மாநிலத்தில் கனிவளங்களும் பிற வளங்களும் இல்லாதிருப்பதால், பிற மாநிலங்களிலிருந்து மூலப் பொருள்களையும் இடைநிலைப் பொருள்களையும் தருவித்து நிறைவு பெற்ற பொருள்களாக மாற்றுவதற்குப் போதிய மின் சக்தியை நமது தொழிற் சாலைகளுக்கு வழங்கிட வேண்டியது இன்றியமையாததாகும். வேளாண்மைக்கான கிணறுகளுக்கும் மேற்கொண்டு மின் சக்தி தேவைப்படும். இம் மாநிலத்தின் மொத்த உற்பத்திப் பொருள்களில் 50 சத வீதத்துக்கு மேற்பட்டவற்றை உற்பத்தி செய்வதற்குக் காரணமாயுள்ள 6.5 இலட்சம் கிணற்று விசையேற்றங்களும் 6,500 பெரிய, சிறிய தொழிற்சாலைகளும் மின் சக்தியையே தங்கள் உற்பத்திக்கு நம்பியிருக்கின்றன என்பதிலிருந்து இம்மாநிலம் எந்த அளவுக்கு மின் சக்தியைச் சார்ந்துள்ளதென்பது புலனாகும். மேலும், மின் சக்தித் தேவை ஆண்டுக் காண்டு 12.5 சத விதம் அதிகமாகி வருகிறது. இன்று நமது மின் சக்தித் தேவை 2,010 மெகாவாட்டாகும். ஆனால், நமது மின் உற்பத்தித் திறன் 1,371 மெகாவாட்டாக மட்டுமே இருக்கிறது. எனவே, நமது மின்சாரப் பற்றுக்குறை 639 மெகாவாட்டாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவில் மின் உற்பத்தியைப் பெருக்காவிட்டால், 1978-79-க்குள் நமது மின்சாரப் பற்றுக் குறை 2,189 மெகாவாட்டாக உயர்ந்துவிடும்.

9. ஐந்தாவது திட்டத்தில், மின் சக்திக்கென 326 கோடி ரூபாய் செலவிடும் கருத்துள்ளது. இதில் மின் சக்தி உற்பத்தி செய்வதற்கு 180 கோடி ரூபாய் செலவிடப்படும். உற்பத்தி செய்த மின்சாரத்தைப் பல இடங்களுக்கும் கொண்டு செல்லும் அமைப்புகளுக்காக 90 கோடி ரூபாயும், கிராமப் பகுதிகளில் மின்னொளி வழங்க 50 கோடி ரூபாயும் செலவிடப்படும். சிறிய புனல் மின் திட்டங்களையும் அரசு மேற்கொள்ளக் கருதியுள்ளது. காடம்பாறை போன்ற நீரேற்றி மின் சேமிப்பு-உற்பத்தி (pumped storage) திட்டங்களை மேற்கொள்ளவும் அரசு கருதியுள்ளது. உயர் அளவு மின்சாரம் பயன்படுத்தப்படும் நேரத்தில் ஏற்படும் மின்சாரத் தேவையை நிறைவு செய்ய இத் திட்டங்கள் பயன்

படும். மேட்டூர், பெரியாறு போன்ற பெரிய புனல் மின் திட்டங்களில் பாசனத் தேவைக்கு வேண்டிய நீரை வழங்குவதுடன் மின் உற்பத்தி இணைந்திருப்பது அவற்றுக்குள்ள குறையாகும். எனவே, தொடர்ந்த மின் உற்பத்தி நிலையங்களாக அவை செயல்பட முடியாமல் உள்ளன. நிறுவப்பட்ட புனல் மின் உற்பத்தித் திறன் 1,224 மெகாவாட்டாக இருந்த போதிலும், நம்பகமான உற்பத்தி அளவு 775 மெகாவாட்டாக மட்டுமே இருக்கிறது. எனவே, நமது புனல் மின் உற்பத்தித் திட்டத்துக்கு உறுதுணையாக அனல் மின் உற்பத்திச்சாலைகள் விளங்கவேண்டுமென்பது தெளிவு. தூத்துக்குடியில் ஒன்றும், மேட்டூரில் மற்றொன்றும் ஆக அனல் மின் நிலையங்கள் இரண்டினை நிறுவும் பணியை ஐந்தாவது திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென் நாம் கூறியுள்ளோம். தூத்துக்குடி அனல் மின் திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது என்பதை அறிய நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள் என நம்புகிறேன். இத் திட்டத்தினால் 400 மெகாவாட் அளவுக்குக் கூடுதல் மின்சக்தி ஐந்தாவது திட்டம் முடிவடைவதற்கு முன் கிடைக்கக்கூடும். பணி மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள், புதிய திட்டங்கள் ஆகிய திட்டங்களின் மூலம், திட்டகாலத்தில் உற்பத்தி செய்யப்படவிருக்கும் மின்சக்தி முழுவதையும் கணக்கில் எடுத்துக் கொண்டாலும்கூட, ஐந்தாவது திட்டக் காலத்தின் இறுதியில் 1,185 மெகாவாட் மின்சக்தி பற்றாக்குறை இருக்கத்தான் செய்யும்.

10. இந்த நேரத்தில், தற்போது நிலவி வரும் எண்ணெய் நெருக்கடியையும் மின்சக்தி உற்பத்திக்காக ஏனைய எரிபொருள் வளங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் நாம் நாட்டத்தில் கொள்ள வேண்டும். நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கங்களை விரிவாக்கி மேலும் அதிக அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கான அவசியத்தை இது நன்கு எடுத்துக் காட்டியுள்ளது. நெய்வேலியைப் போன்ற திறந்த வெட்டு முறைச் சுரங்கம் ஒன்றை முழு அளவில் செயலுக்குக் கொண்டுவர ஏழு ஆண்டு முதல் பத்து ஆண்டுக்காலம் பிடிக்கும். இன்றே நாம் இப்பணியைத் தொடங்கினால் கூட, ஆறாவது திட்டகாலத்தில்தான் மின்சக்தியை நெய்வேலி இரண்டாவது சுரங்கத்திலிருந்து உற்பத்தி செய்ய முடியும். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியைத் தொடங்குவதற்கும் 1,000 மெகாவாட் திறனுடன் 



கூடிய இரண்டாவது அனல் மின் நிலையத்தை நிறுவுவதற்கான தேவை குறித்தும் நாம் வலியுறுத்தி வருகிறோம். இம் மாநிலத்தின் நலனுக்காக இத் திட்டத்திற்கு உடனடியாக ஒப்பளிப்பு வழங்க வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்று தமிழ் நாடு அரசு கருதுகிறது. இது குறித்து சாதகமான முடிவை விரைந்து எடுக்குமாறு மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். கல்பாக்கம் அணு மின் நிலையம் செயல்படத் தொடங்குவதிலும் அதிகத் தாமதம் ஏற்பட்டுள்ளது. 1970–71-ல் செயல்படத் தொடங்குமென ஏற்கெனவே திட்டமிடப்பட்ட இந்த மின் நிலையம் 1977–78-ல்தான் செயல்படத் தொடங்கும் என்று இப்போது எதிர்பார்க்கப்படுகிறது. அணு மின் நிலைய விரிவாக்கப் பணித் திட்டம் இப்போதே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இதில் தாமதம் செய்வது, வருகிற ஆண்டுகளில் இம் மாநிலத்தில் மின்சார நிலைமையை மிகவும் பாதிக்கும்.

11 நகர்ப் பகுதிகள், கிராமப் பகுதிகள் ஆகியவற்றிற்குக் குடிநீர் வழங்குதலைச் செயற்படுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்றை அரசு மேற்கொண்டுள்ளது என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவார்கள். இம் மாநிலத்தில், மொத்தமுள்ள இரு மாநகராட்சிகள், 99 நகராட்சிகள், 13 நகரியங்கள், 626 பேரூராட்சிகள் ஆகியவற்றில், இரண்டு மாநகராட்சிகள், 87 நகராட்சிகள், எட்டு நகரியங்கள், 71 பேரூராட்சிகள் ஆகியவற்றில் குடிநீர் வழங்கு திட்டங்கள் செயல்படுத்தப் பட்டுள்ளன. மூன்று நகராட்சிகள், 37 பேரூராட்சிகள் ஆகியவற்றில் நீர் வழங்கு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கிராமப் பகுதிகளில் நாம் ஏற்கெனவே, கிட்டத்தட்ட 72,600 கிணறுகளைத் தோண்டியுள்ளதோடு 5,700 மேல்நிலை நீர்த் தொட்டிகளையும், நிலமட்ட நீர்த் தொட்டிகளையும் அமைத்துள்ளோம். நீரில் நோய்க் கிருமிகள் இருப்பது போன்ற சிக்கல் உள்ள பகுதிகளில் தக்க நீர் வழங்கும் திட்டங்களைச் செயற்படுத்த ஐந்தாவது திட்டத்தில் சிறப்பான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சென்னை மாநகரைப் பொறுத்த மட்டில், வீராணம் திட்டம் குறித்த பணி நடைபெற்று வருகிறது. அதன் மூலம் நாளொன்றுக்கு 4 கோடி காலன் நீர் கிடைக்கும். 1975-ல் இத் திட்டம் நிறைவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாடு, கேரள மாநிலங்களுக்கிடையில் நீண்ட நெடு நாட்களாகப் பேசப்பட்டுவந்த சிறுவாணி நீரைக் கோவை நகருக்கு வழங்க வகைசெய்யும் சீரியதோர் ஒப்பந்தம்

ஏற்பட்டுள்ளதை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். அண்டை மாநிலங்களுக்கிடையில் கருத்து இசைவின் விளைவாக உருவான இந்த ஒப்பந்தம், மாநிலங்களுக்கிடையிலான ஒத்துழைப்பிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. சுமார் பத்து கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப் பட்டுள்ள இந்தச் சிறுவாணித் திட்டம், இறுதியாக, நாளொன்றுக்கு 235 இலட்சம் காலன் நீரைக் கோயம்புத்தூருக்கும் வழியிலுள்ள நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றிற்கும் வழங்கும்.

12. வேளாண்மை, தொழில் உற்பத்திக்கு இன்றியமையாத அடிப்படைப் பொருட்களான நீர்வசதி, மின்வசதி ஆகியவற்றைப் பெருக்குவதற்கு வேண்டிய முயற்சிகள் அனைத்தையும் நாம் மேற்கொண்டுவந்துள்ள போதிலும், உற்பத்திப் பெருக்கத்திற்கு வேறு சில இடர்ப்பாடுகளும் இருந்து வருகின்றன. தேவையான இடு பொருட்கள் அனைத்தையும் ஒரே சமயத்தில் கிடைக்கச் செய்வதற்கு நமது அரசு மேற்கொண்ட ஒருங்கிணைந்த அணுகு முறையின் பயனாக பசுமைப் புரட்சி இம் மாநிலத்தில் ஏற்பட்டுள்ளது. நமது தேவையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நமது மாநிலம் தற்போது உணவு தானியங்களைப் பொறுத்தவரை ஓரளவு உபரி மாநிலமாக உள்ளது. 1973-74-ல், நமது உணவு தானிய உற்பத்தி தோராயமாக 74 இலட்சம் டன்களாக இருக்கும் என்று முன்னர் மதிப்பிடப்பட்டது. உரங்கள், பூச்சிகொல்லி மருந்துகள் ஆகியவற்றைப் போதுமான அளவுக்குப் பெற்று வழங்குவதில் எதிர்பார்க்கப்படும் இடர்ப்பாடுகள் காரணமாக இந்த மதிப்பீடு நிறைவேறாமல் போகக்கூடிய அபாயம் உள்ளது. 1973—74-ல் தேவைப்பட்ட 3.15 இலட்சம் டன் நைட்ராஜன் உரத்துக்குப் பதிலாக மொத்தம் 2.3 இலட்சம் டன் நைட்ரஜன் உரமே வழங்கப்பட்டுள்ளது. டி.டி.டி., பி.எச்.சி. பூச்சி கொல்லி மருந்துகளின் பற்றாக்குறையும் உள்ளது. உள்நாட்டில் உற்பத்தி செய்யும் உரங்களை அதிக அளவுக்கு உற்பத்தி செய்யவும், முக்கியமாகத் தேவைப்படும் இந்தப் பொருளை வேண்டிய அளவு கூடுதலாக இறக்குமதி செய்வதற்கும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு மத்திய அரசை நாம் கேட்டுள்ளோம்.

13. தமிழ் நாடு, தனது பொருளாதார மேம்பாட்டிற்கு விரைவான தொழில் வளர்ச்சியையே பெரும்பாலும் சார்ந்திருக்க வேண்டும் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இதனைக் கருத்திற்





கொண்டு தொழில் முதலீட்டைப் பொறுத்த வரையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நம்மால் இயன்றதை நாம் செய்துள்ளோம். தமிழ் நாடு சிமிட்டி ஆலையின் ஆண்டு உற்பத்தித் திறனை, 14 கோடி ரூபாய் செலவில், 4 இலட்சம் டன்னிலிருந்து 7 இலட்சம் டன்னாகப் பெருக்குவதற்கும், அரக்கோணத்திலுள்ள தொடர் வார்ப்படத் தொழிற்சாலையின் உற்பத்தியை 5.6 கோடி ரூபாய் செலவில் பல்திறப்படுத்தவும் நாம் கருதியுள்ளோம். தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் பொறுப்பேற்கும் கூட்டுத் துறைத் திட்டங்களைப் பொறுத்தமட்டில், தூத்துக்குடிக்கு அருகில் நாளொன்றுக்கு 1,100 டன் அமோனியா, 1,600 டன் யூரியா உற்பத்தித் திறன் கொண்ட மாபெரும் உர ஆலை அமைக்கும் திட்டப் பணி விரைவாக நடைபெற்று வருகிறது; 1974 ஜூன் திங்களில் உர உற்பத்தி முழு மூச்சில் தொடங்கக்கூடும். டயர், டெலிவிஷன், சோடியம் ஹைட்ரோஸல்ஃபைட்டு, போராக்ஸ், சோடா ஆஷ், உப்பு, மருந்துப் பொருட்கள் ஆகிய திட்டங்கள் குறித்த தொடக்கப் பணியும் நடைபெற்று வருகிறது. இத்துடன், தமிழ்நாட்டில் கூட்டுத் துறையில் பெரிய உரத் தொழிற்சாலை இன்னொன்றை நிறுவ அனுமதிக்குமாறு மத்திய அரசை வேண்டியுள்ளோம். பங்குகளை வாங்கிக்கொள்ளுவதற்கு உறுதி தருதல் (underwriting) காலக் கடன், வட்டியில்லா விற்பனை வரிக் கடன் ஆகியவற்றைக் கொடுத்தல், சீர் செய்த மனைகளை வழங்குதல் போன்ற ஊக்க உதவிகள் பலவற்றை அளிப்பதன் மூலம், குறிப்பாக மாநிலத்திலுள்ள பின் தங்கிய பகுதிகளில் நடுத்தரத் தொழில்களைத் தொடங்கும் தொழில் முனைவர்களுக்கு மாநிலத் தொழில் ஊக்கக் கழகம் உதவி செய்து வருகிறது. இக் கழகம் இராணிப்பேட்டையில் தொழில் தொகுதி ஒன்றையும் உருவாக்கி வருகிறது. இக் கழகத்தின் மேம்பாட்டு நடவடிக்கைகளால் இதுவரையில் 37 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அதன் மூலம் 6,000 பேருக்கு மேல் நேரடி வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எட்டு சர்க்கரை ஆலைகளைப் புதிதாக நிறுவவும் அரசு கருதியுள்ளது.

14. இம் மாநிலத்தில் கைத்தறித் தொழிலுக்கு இயன்ற எல்லா வித ஆதரவுகளையும் அரசு அளித்து வருகிறது. கைத்தறித் தொழில் வளர்ச்சிக்காகக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கவும் அவற்றை வலுப்படுத்தவும் அரசு உதவி அளிக்கிறது. கூட்டுறவு நூற்பு ஆலைகள் மூலமாக உரிய காலத்தில் தரமான

நூல் வகைகளை நியாயமான விலைகளில் வழங்க அரசு ஏற்பாடு செய்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் விற்பனை செய்யும் துணி களுக்குத் தள்ளுபடி வழங்கக் கணிசமான அளவு நிதி உதவியும் அளிக்கின்றது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறித் துறை வளர்ச்சிக்காக ஏறத்தாழ 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யக் கருதப்பட்டுள்ளது. கைத்தறித் துணிகள் உற்பத்திக் கெனத் தனியாகச் சில ரகங்களை ஒதுக்கவும் இன்றியமையா மூலப்பொருள்கள் உரிய காலத்தில் கிடைப்பதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யவும் மத்திய அரசு முன்வந்தாலன்றி இவையனைத்தும் பயன்தரா. கடந்த ஆண்டில் மின்விசை வெட்டு தவிர்க்க முடியாததாயிற்று. பருத்தி விலையும் உயர்ந்தது. இவற்றின் காரணமாக, கடுமையான நூல் பற்றாக்குறையும் நூல் விலை உயர்வும் ஏற்பட்டன. அவற்றின் விளைவாக, நெச வாளர்களுக்குப் பெரிதும் இடர்ப்பாடு ஏற்பட்டது. கூட்டுறவு நூற்பு ஆலைகள் உற்பத்தி செய்த நூலையும், தமிழ் நாடு பஞ்சாலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு நடத்தப்படும் ஆலைகள் உற்பத்தி செய்த நூலையும் தொகுப்பாக்கி, கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்கள் அனைவருக்கும் நியாயமான விலையில் போதிய அளவு நூல் வழங்க முடிந்தது. இருப்பினும் கூட்டுறவுத் துறையச் சேராத நெசவாளர்களுக்குப் போதுமான அளவு நூல் வழங்கும் பிரச்சனை தொடர்ந்து கவலையளிப்பதாகவுள்ளது. இந்தப் பிரச்சனையையும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

15. இம் மாநிலத்தில் தொழில் வளத்தை மேம்படுத்த இவ்வரசு தன்னால் இயன்ற எல்லா முயற்சிகளையும் மேற்கொண் டுள்ளது. அதே நேரத்தில், இம் மாநிலத்திலுள்ள தொழில்களில் கணிசமான அளவுக்கு முதலீடு செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும். 1973–74-ஆம் ஆண்டிற்கு நாடு முழுவதற்கும் தொழில் முதலீட்டுக்கான மொத்த நிதி ஒதுக்கீடான 1,500 கோடி ரூபாயில் 40 கோடி ரூபாய் மட்டுமே இம் மாநிலத்திற்கென மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. மத்திய அரசின் தொழில் திட்டங்களில் தமிழ் நாட்டுக்கென ஒதுக்கப்படும் பங்கு ஆண்டுக்காண்டு குறைந்து வருகின்ற இப்போக்கு மாற வேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மத்திய அரசுத் துறைக்காக 19,200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் உரியவொரு பங்கு தமிழ் நாட்டில் முதலீடு செய்யப்படுவது நியாயமேயாகும். தமிழ்



நாட்டுக்குரிய நியாயமான பங்கு கிடைக்கப் பெற்றாலொழிய, இம் மாநிலம் மேற்கொண்டு அடைய வேண்டிய வளர்ச்சி மிகக் கடுமையாகத் தடைபடும். பின்வரும் புதிய திட்டங்களை மத்திய அரசு தன்னுடைய திட்டங்களாக மேற்கொள்ளும் வகையில் ஆய்ந்து பார்க்க வேண்டும்:—

1. நெய்வேலியின் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கம் வெட்டுதல்.

2. கல்பாக்கம் அணுமின் உற்பத்திச் சாலையை விரிவுப் படுத்துதல்.

3. தூத்துக்குடியில் இன்னொரு அணுமின் உற்பத்திச் சாலையை நிறுவுதல்.

4 காவிரி கழிமுகப் பகுதியிலும், தமிழ்நாட்டின் கடற் பகுதிகளிலும் எண்ணெய் வளம் குறித்த ஆய்வினை முழுமூரப் படுத்துதல்.

5. சென்னை–தூத்துக்குடி ரயில் பாதை அகலப் பாதையாக மாற்றுதல்.

6 சேதுசமுத்திரத் திட்டத்தைச் செயற்படுத்துதல்.

7. சென்னைப் பெருநகரப் பகுதியில் சுரங்க ரயில் ஏற்பாட்டினை நிறுவுதல்.

8. தூத்துக்குடியில் கப்பல் தளம் ஒன்றை அமைத்தல்.

9 நாட்டுப் பாதுகாப்பு தொடர்பான தொழிற் சாலைகளை நிறுவுதல்.

16. வேளாண்மைத் துறையிலும் தொழில் துறையிலும் நாம் பல திட்டங்களை வகுத்து அவற்றைச் செயற்படுத்தியிருந்தும்கூட, வறுமை, வேலையின்மை ஆகிய இருபெரும் பிரச்சினைகளும் நமக்குப் பெரும் கவலையளிப்பனவாய் உள்ளன. கிராம வேலை வாய்ப்புக் கான விரைவுத் திட்டம், இளைஞர் அணித் திட்டம், தொழில் பழகுவோருக்கான பயிற்சி குறித்த சிறப்புத் திட்டம், "படித்து வேலையற்றிருக்கும் ஐந்து இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டம்" உட்பட வேலைவாய்ப்பு குறித்த சிறப்புத் திட்டங்கள் அனைத்தின் மூலமாக ஏறத்தாழ 40,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். சிறுபாசனத் திட்டம், வீடுகள்

கட்டுதல், சாலைகள் அமைத்தல், சாலை மேம்பாடு போன்று ஐந்தாண்டுத் திட்டத்தின் வேலைத் திட்டங்களாக மேற்கொள்ளப் பட்ட தொழிலாளர் வேலை வாய்ப்பு குறித்த மும்முரத் திட்டங்களும் கணிசமான அளவுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும். இருந்தபோதிலும், மாநில அரசு மட்டுமே ஒவ்வொருவருக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தருவது என்பது இயலாத செயலாகும். மத்திய தர வகுப்பினரைச் சேர்ந்த தொழில் முனைவர்கள் சேமிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் ஊக்கமளிக் கப்பட்டால் மட்டுமே ஏராளமான வேலை வாய்ப்புகள் ஏற்படக் கூடும். இதைக் கருத்திற் கொண்டுதான், நமது முதல்வர் அவர்கள் பன்முறையும் இதை வலியுறுத்தி வந்துள்ளார். மத்திய தர வகுப்பினர் தொழில்களைத் தொடங்குமாறு அவர்களுக்கு ஆர்வமூட்டி, தொழில்களைத் தோற்றுவிக்கும் கருத்துடனேயே வருமான வரியமைப்பைச் சீரமைக்க வேண்டும் என்று நாம் மத்திய அரசிடம் எடுத்துக் கூறிவந்துள்ளோம். வருமான வரியமைப்பைச் சீரமைப்பதால், அதன் மூலம் கணக்கிற் காட்டப் படாத கறுப்புப் பணம் விளைவிக்கும் தீமைகளும் குறைந்துவிடும். இதற்கிணங்க மத்திய அரசு உடன்பட்டுச் செயல்படுவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

17. வறியவர்கள், வாழ்க்கையில் ஒடுக்கப்பட்டவர்கள், வாழ்வில் வளம்பெற வேண்டுமென்ற கொள்கையை நாம் எப்போதும் இலட்சியமாகக் கடைப்பிடித்து வந்துள்ளோம். இந்த இலட்சிய நோக்கமே நமது வளர்ச்சித் திட்டங்களுக்கு இயக்கச் சக்தியாக விளங்குகிறது. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரை வாழ்வில் கைதூக்கி விட்டு, அவர்கள் முன்னேறச் செய்வதற்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 91.50 கோடி ரூபாய் செலவிட அரசு கருதியுள்ளது. இத்தொகையில் திட்ட நிதி ஒதுக்கீடான 24 கோடி ரூபாயும் அடங்கும். குடிசை வாழ்வோரைக் குடியமர்த்துவதற்காக ஆண்டொன்றுக்கு 3,000 முதல் 4,000 குடியிருப்புகள் கட்டுவதற்கான குடிசை மாற்றுப் பெரும் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வரும். சென்னை மாநகரில் குடிசை மாற்று வாரியத்தாலும், கோயம்புத்தூர், மதுரை திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சை, கடலூர் முதலிய இடங்களில் வீட்டு வசதி வாரியத்தாலும் நிறைவேற்றப்பட்டு வரும் இவ்வேலைத் திட்டத்தின்கீழ், இதுவரை சென்னை மாநகரில் 15,470 குடியிருப்புக் கட்டுமானங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலே கூறியுள்ள மற்ற நகரங்களில் கிட்டத்தட்ட 5,000 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.



18. மாநிலத் திட்ட ஆணைக்குழுவைக் கலந்து ஆலோசித்து, பல்வேறு செயற்குழுக்களால் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு பற்றிய மத்திய திட்ட ஆணைக்குழுவுடன் தொடக்க விவாதங்கள் நடத்தப்பட்டுள்ளன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் நிதியுதவி பற்றி மேலும் விவாதங்கள் நடைபெற்ற பிறகே ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவு வரையறுக்கப்படும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். இதற்கிடையில், 1974–75-ஆம் ஆண்டுத் திட்டத்தின் அளவு பற்றி தொடர்ச்சியாக விவாதம் நடைபெற்றுள்ளது. மத்திய திட்ட ஆணைக்குழு கடைசியாகக் காட்டியுள்ள குறிப்புகள் சாதகமானவையாகவுள்ளன. 1974-75 ஆம் ஆண்டுத் திட்ட அளவு சுமார் 150 கோடி ரூபாய் ஆக இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

19. இத் தொடர்பில் ஆறாவது நிதி ஆணைக்குழு வழங்கிய தீர்ப்பை நான் குறிப்பிட்டாக வேண்டும். வரம்பு கடந்து செலவு செய்வோருக்கு வெகுமதியளிப்பது, சிக்கனமாக நடந்து கொள்வோரைத் தண்டிப்பது என்று இதுகாறும் இருந்து வந்துள்ள போக்கு மாற்றப்படும் என நாம் நம்பினோம். கூட்டாட்சி நிதி-அமைப்பை புத்துருவாக்குவதற்கான செயற்குறிப்புகளையும் நாம் அனுப்பியிருந்தோம். மாநிலங்கள் தத்தம் வருமானம் தொடர்பாய் வரி வசூல் செய்ய எடுத்த முயற்சியைக் கருத்திற் கொள்ளாமல், அவற்றின் பற்றாக்குறையை நிறைவு செய்கின்ற பழைய போக்கினையே, ஆறாவது நிதி ஆணைக்குழு, நமது நல்வாய்ப்புக் குறைவு காரணமாக, தொடர்ந்து கடைப்பிடித்துள்ளது.

20. அதன் விளைவாக, மாநிலங்களுக்கிடையே ஒதுக்கீடு செய்யப்படுவதற்காகக் கிடைக்கின்ற மொத்த நிதி வசதியான 11,578 கோடி ரூபாயில் நமக்கு 626 கோடி ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இத் தொகை மொத்த மத்திய தொகுப்பில் 5.4 சதவீதமேயாகும். அரசியல் சட்டம் காட்டிய நெறியில் நமது சட்டப்பாட்டுநிலையொட்டி நமது மாநிலத்தில் மது விலக்கைச் செயற்படுத்தி வருகிறோம். அதன் விளைவாக நமக்கு ஏற்படும்

இழப்புத் தொகையை ஈடு செய்ய நிதி ஆணைக்குழு முன் வராமற் போனது நமக்குத் தீம்பாய் முடிந்துள்ளது. நிர்வாக அமைப்பு, கல்வி, சுகாதாரப் பணிகள் ஆகியவற்றின் தரத்தினை உயர்த்துவதற்கென வழங்கப்படுகின்ற மானியத்தில் பங்கேதும் நமக்கு வழங்கப்படவில்லை.

21. ஆறுவது நிதியாணைக்குழு அறிக்கையிற்காணும் வரவேற்கத் தக்க ஒரு நல்ல அம்சம் என்னவெனில், கடன் தவணையை மாற்றியமைப்பது குறித்து ஆணைக்குழு பரிந்துரை செய்து, இந்திய அரசு ஏற்றுக்கொண்ட ஏற்பாடாகும். இந்தக் கணக்கில் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் நமக்கு ஏறத்தாழ 87 கோடி ரூபாய் செலவு குறையும். இவ்வாறு கடன் தவணையை மாற்றியமைக்க வேண்டுமெனக் கேட்டுவந்த மாநிலங்களில் தமிழ் நாடு முன்னணியில் நின்றதாதலால், இச் செய்தி, முக்கியமாக நமக்குப் பெரும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

22. மத்திய அரசு சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளால் மாநில அரசின்மீது ஏற்படும் திட்டவட்டமான விளைவுகளைக் குறிப்பாகக் கருத்திற்கொள்ளுமாறு தமிழ் நாடு அரசு ஆறுவது நிதியாணைக் குழுவைக் கேட்டுக்கொண்டது. ஆயினும், ஆறுவது நிதியாணைக்குழு, மானியங்களையும் வரி வருவாய்களையும் ஒதுக்கீடு செய்யும் ஏற்பாட்டில், மத்திய அரசு சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளை ஒட்டி மாநில அரசு அலுவலாளர்களின் சம்பளம், படிகளைத் திருத்தியமைப்பது தவிர்க்க முடியாது போவதால் ஏற்படும் விளைவுக்கு ஏற்றதொரு வசதி எதனையும் செய்து தரவில்லை. ஆறுவது நிதியாணைக் குழு உட்பட, பல ஆணைக் குழுக்களிடம் தேசிய ஊதிய—விலைக் கொள்கையொன்றை உருவாக்க வேண்டிய அவசர அவசியத்தைப் பன்முறை வலியுறுத்தி வந்துள்ளோம். மக்களில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள், ஒரே மாதிரியான கடுமையான பணியை அரசின்கீழ் அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின்கீழ் செய்து வருகின்ற நேரத்தில் அவர்களுக்கிடையே ஊதிய அளவில் பெருத்த வேறுபாடுகள் இருந்துவரும் தற்போதைய நிலைமை, நிச்சயமாக மனக்கசப்பையும் மனமுறிவையும் தோற்றுவிக்கும். இப்பொருள் பற்றி, மத்திய அரசு மாநில அரசையும் கலந்தாலோசித்து தேசியக் கொள்கையொன்றை உருவாக்க ஏற்பாடுகளைச் செய்ய முயலும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்.



23. நான் என் உரையை முடிப்பதற்கு முன்னர், அடுத்து வரும் ஆண்டுகளில் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏராளமான எண்ணிக்கையில் அகதிகள் திரும்பி வருவதைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அடுத்த ஐந்தாண்டு காலத்தில் கிட்டத்தட்ட 57,000 குடும்பங்கள் இம்மாநிலத்திற்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க 60 கோடி ரூபாய் முதல் 70 கோடி ரூபாய் வரை செலவு செய்ய வேண்டியிருக்கும். நம்முடன் சொந்த பந்தமுள்ளவர்கள் பிற நாடுகளிலிருந்து இங்கு திரும்பி வருவதை வரவேற்கும் அதே நேரத்தில், திரும்பி வருபவர்களுக்கு இடம்பெயரும் இன்னலும் துன்பமும் இருப்பதை நாம் உணர வேண்டும். அவர்கள் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டு வேலை வாய்ப்புகளும் அளிக்கப்படவேண்டும். அப்போதுதான் தம் மூதாதையர் நாடு தங்களைக் கைவிட்டுவிடவில்லை என்ற உணர்வு அவர்களுக்கு ஏற்படும். மேலும், தேசிய மட்டத்தில் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பி வருகிறார்கள். இவர்களுக்குப் புது வாழ்வும் நல வசதியும் அளிப்பதை இந்த நாடு முழுவதற்குமுள்ள பொறுப்பாக மத்திய அரசு தொடர்ந்து ஏற்கும் என்றும் இம்மாநிலம் அவர்களுக்கு வேண்டிய வசதி செய்வதற்கு மத்திய அரசே நிதி உதவி அளிக்கும் என்றும் நான் உளமார நம்புகிறேன்.

24. தேசிய, அனைத்து நாட்டு நிகழ்ச்சிகள் பலவற்றின் காரணமாக இந்திய நாடு மிக்க கடுமையான கால கட்டத்தில் இருக்கின்றது. இந்திய ரிசர்வ் வங்கி கடன் கொடுப்பதைக் கட்டுப்படுத்தி பல நிபந்தனைகள் விதித்திருப்பதால், தொழில் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் பொருள்களின் விலை ஏறுமுகமாக இருக்கிறதேயன்றி இறங்குமுகமாக இல்லை. எனவே, இக் கொள்கையை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டும். மத்தியக் கிழக்கில் அண்மையில் மூண்ட போர், அதனையடுத்து நிகழ்ந்த விளைவுகள் இவற்றால் உருவான எண்ணெய் நெருக்கடி நாட்டு நிலவரத்தை முன்னெப்போதையும் விட மிக்க கடுமையாக்கியுள்ளது. நாட்டின் நிலைத்த மேம்பாடு, சமூக நீதியுடன் கூடிய வளர்ச்சி இவற்றுக்கான பொருளாதாரக் கொள்கைகளின் போக்கு அமைப்பும், இந்த நிலைமைகளால் நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளையொட்டிப் பரிசீலனை செய்யப்பட வேண்டியுள்ளது. முதலமைச்சர்கள் அளவில் தேசிய மாநாடு ஒன்றைக் கூட்ட

வேண்டிய அளவிற்குச் சூழ்நிலை மிகக் கடுமையாகவுள்ளது எனத் தமிழ்நாடு அரசு கருதுகிறது. அதன் மூலம் குறுகிய காலத்திற்கும் நீண்ட காலத்திற்கும் உரிய கொள்கைகளை வகுத்து, நாட்டு முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் இச் சோதனைகளைச் சமாளித்து, அக் கொள்கைகளைச் செயற்படுத்தவியலும் என்றும் அரசு கருதுகிறது.

25. இரு அவைகளிலும் உங்கள் நடவடிக்கைகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். உயர்ந்த கடமையுணர்வு, பொறுப்புணர்ச்சி ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, நல்லெண்ணம் ஆகியவை கமழும் சூழ்நிலையில் இந்த விவாதங்கள் நடத்தப்பெறும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

வணக்கம்.

## தமிழ் நாடு சட்ட பேரவை

---

**திங்கட்கிழமை, 1974 சனவரி 21.**

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

தமிழ்நாட்டு வரலாறு

*31 வினா—**திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சரால் வினா எண் 181-க்கு 19—8—1972 அன்று பேரவையில் அளிக்கப்பட்ட விடையையொட்டி தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தமிழக வரலாறு எழுதும் குழுவின் பணி எப்போது முடிவுறும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தமிழ்நாட்டு வரலாறு எழுதும் குழுவின் பணி இன்னும் மூன்று ஆண்டுகளுக்குள் முடிவுறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சு. துரைசாமி:** தலைவர் அவர்களே, தமிழக வரலாறு எழுதும் குழுவின் பணி எப்பொழுது தொடங்கப்பட்டது? அக் குழுவின் பணி மூன்று ஆண்டுகளுக்குள் முடிவுறும் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதனை விரைவு படுத்தி, ஓராண்டுக்குள்ளாகவே இப்பணியை முடிக்குமாறு அரசு ஆவன செய்யுமா ?

[1974 சனவரி 21

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு ஆணையிட இயலாது. இக்குழு அமைக்கப்படவேண்டுமென்று 1971-ம் ஆண்டு முடிவு எடுக்கப் பட்டது. 1972-ம் ஆண்டிலிருந்து இது பணியாற்றி வருகிறது. டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையின்கீழ் சிறந்த வல்லுநர்களை உறுப்பினர்களாகக் கொண்டு இக்குழு ஆராய்ந்து கொண்டு வருகிறது. பதிப்பாசிரியர்கள் இருவர், தமிழ்ச் சுருக் கெழுத்துத் தட்டச்சர் இருவர், கடைநிலை ஊழியர் இருவர் தரப்பட்டு, அந்தப் பணி நடைபெற்று வருகிறது. குழுவின் பணியினை விரைவுபடுத்துவதுபற்றி அவர்கள்தான் முடிவு எடுக்க வேண்டும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இது சம்பந்தமாக அந்தக் குழு ஏதாவது பூர்வாங்கவேலை செய்திருக்கிறதா? குமாஸ்தாக்கள் நியமனம் செய்யப்பட்டிருப்பதைத் தவிர மற்றும் என்ன என்ன வேலைகள் நடந்திருக்கின்றன? அவர்கள் இப்பொழுது அப் பணியில் ஈடுபட்டிருக்கிறார்களா என்பதை அமைச்சர் அவர்கள் விவரிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர் களே, அக்குழுவினர் இதுவரை எட்டு முறை கூடி, எந்தெந்த தலைப்புகளின் கீழ் ஆராய்வது என்பதுபற்றி முடிவு எடுத்திருக்கி றார்கள். தமிழ்நாட்டு வரலாற்றினை எழுதும் பணியின் முதற்படி யாக நான்கு பெருந் தலைப்புகளில் அரசியல், சமுதாயம், கலை வளர்ச்சி முதலியவைபற்றி விரிவாகக் கட்டுரைகள் எழுதப்பட வேண்டுமென குழு முடிவுசெய்துள்ளது. (1) வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம், (2) சங்க காலத் தமிழகம், (3) பல்லவ பாண்டியர் காலத் தமிழகம், (4) சோழப் பெருவேந்தர் காலத் தமிழகம்; ஆகிய நான்கு பெருந்தலைப்புகளாகப் பிரித்துக் கொண்டு, இப்பொழுது வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தை பற்றிய குறிப்புகள் சேகரிப்பதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, திரு. மு. வரதராசனார் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருக்கிறார்கள். அவர்கள் பல்கலைக் கழகத்தின் தலைவராகவும் இருப்பதால் இப்பணிக்கு அவர்களுக்குப் போதுமான நேரம் இல்லாமல் போகக்



1974 சனவரி 21]

கூடும். ஆகவே, அவருடன் இருக்கக்கூடிய மற்றவர்களுக்கு— டாக்டர் நீலகண்ட சாஸ்திரி போன்றவர்களுக்கு—அதிகமான பங்கு கொடுக்கக்கூடிய ஏற்பாடு செய்து, மூன்று ஆண்டுகள் வரை காத்திராமல், இடைக்காலத்திலேயே உடனடியாக ஏதாவது ஒரு குறிப்பு சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் :** தலைவர் அவர் களே, அந்தக் குழுவின் தலைவராகத்தான் டாக்டர் மு. வரதராச னார் இருக்கிறார். எந்தெந்த குறிப்புகளை எப்படி வெளியிடுவது என்பதைப்பற்றிய பொதுவான கருத்துக்களையெல்லாம் ஆராய்வ தற்கு குழுவினர் இருக்கிறார்கள். முழு நேரமாக இருந்து பணி யாற்றுவதற்கு தமிழும் ஆங்கிலமும் நன்கு அறிந்த வரலாற்றுப் பேராசிரியர் ஒருவரும் வரலாற்றுத் துணைப் பேராசிரியர் ஒருவரும் இருக்கிறார்கள். மேற்பார்வையிடும் பணியினைத்தான் தலைவர் அவர்கள் மேற்கொண்டு இருக்கிறார்கள். டாக்டர் மு. வரதராசனார் போன்றவர் இதனுடைய தலைவராக இருந்தால்தான் பணி சிறப்புற அமையும். தமிழ் வரலாற்றை செம்மையுற எழுதுவதற்கு தமிழ் நன்கு அறிந்த அவருடைய தலைமை மிகவும் பயன்படும் என்ற முறையில்தான் திரு. மு. வரதராசனார் தலைவ ராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, தமிழகத்திற்கென்று ஒரு வரையறுக்கப்பட்ட காலெண்டர் கிடையாது. அத்தகைய காலண்டரை நிர்ணயிக்கும் பணியும் இந்தக் குழுவினிடம் ஒப் படைக்கப்பட்டுள்ளதா? அப்படிச் செய்யவேண்டும் என்று அவர்களுக்கு ஏதாவது குறிப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுபற்றியெல்லாம் அக்குழுவினர்தான் முடிவு செய்ய வேண்டும். இதுபற்றி அரசு எதும் அவர்களுக்குத் தெரிவிக்க வில்லை. பல்வேறு தலைப்புகளில் ஆராய்ந்து வருகின்றபோது, இதுபற்றியும் அவர்கள் ஆராயக்கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசினர் இந்திய சரித்திரத்தை எழுதிப் புதைத்து வைத்திருக்கிறார்களே அம்மாதிரி தமிழ்நாட்டின் வரலாற்றையும் எழுதிப் புதைத்து வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தக் குழுவின் பணியே அதுதான்.*

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, இந்தத் தமிழக வரலாற்றினை எழுதும் குழுவின் மற்ற உறுப்பினர்கள் யார் யார்? எந்தக் காலத்திலிருந்து எந்தக் காலம் வரை வரலாற்றினை எழுதவேண்டுமென்று அரசாங்கத்திலிருந்து அவர்களுக்குப் பரிந்துரை கூறப்பட்டிருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, டாக்டர் மு. வரதராசனார் அவர்கள் தலைமையின்கீழ், திரு. மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள், திரு. இரா. நாகசாமி அவர்கள், திரு. அ. ராகவன் அவர்கள், திரு. கா. அப்பாத்துரை அவர்கள், திரு. சி. இ. இராமச்சந்திரன் அவர்கள், திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள், திரு. கே. ஆர். அனுமந்தன் அவர்கள், திரு. கொண்டல் சு. மகாதேவன் அவர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக இடம்பெற்றிருக்கிறார்கள்.

**திரு. கே. கந்தசாமி :** தலைவர் அவர்களே, தமிழகம் முற்காலத்தில் கணிதம், விஞ்ஞானம், மருத்துவம் போன்ற துறைகளில் உலகுக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்துவந்து, நாளடைவில் மங்கிவிட்டதாகக் கூறப்படுகிறது. ஆதாரபூர்வமாகக் கூறப்படுகிறது. குறிப்பாக, வாரன் ஹேஸ்டிங்ஸ் காலத்தில், தஞ்சைக் கோவிலிலிருந்து சமஸ்கிருதத்திலிருந்த செப்புப் பட்டயங்கள் இங்கிலாந்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பண்டிதர்கள், புலவர்களைக்கொண்டு மொழிபெயர்த்து, அதன்காரணமாக, இங்கிலாந்து விஞ்ஞானத்தில் முன்னணியில் இருப்பதாகவும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, சமஸ்கிருதத்திலும் புலமைபெற்றவர்களையும், இக்குழுவில் உறுப்பினர்களாகச் சேர்த்து, ஆதாரபூர்வமாகக் கண்டறிந்து, அதன்மூலம் நம்முடைய பழங்காலப் பெருமைகளை அறிந்து, சரித்திரம் எழுதச்செய்ய அரசு முயலுமா?

---

* 22—1—1974-ம் தேதியன்று மாண்புமிகு அமைச்சரவர்கள் விதி 82-A ன் கீழ் இவ்விடையைத் திருத்தி அறிக்கை அளித்துள்ளார்.





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய வரலாற்றினை எழுதும்போது எல்லாவற்றையும் சேர்க்க இயலுமா என்பதைப் பற்றி அந்தக் குழுவினர்தான் முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்துக்களைப் பற்றி இப்பொழுது தனித்தனியாக ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களும் தனித்தனியாக ஆராய்ச்சிகளை மேற்கொண்டிருக்கின்றன. டாக்டர் பட்டம் பெறுகிறவர்களும் சில சிறப்புத் தலைப்புகளை எடுத்துக் கொள்கிறவர்கள் இவைபற்றி எடுத்துக்கொண்டு ஆராய்ந்து, குறிப்பு கொடுத்து டாக்டர் பட்டமும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதோடல்லாமல் இவைபற்றிய குறிப்புகள் சிறுசிறு வெளியீடுகளாக வந்து கொண்டிருக்கின்றன. மேலும் பலர் இவைபற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தமிழ்நாடு வரலாற்றுக் குழுவே இவைபற்றி ஆராய்ந்து கொண்டு வரவேண்டுமென்று அல்ல. தனியாகவும் அப்படிப்பட்ட குறிப்புகளைக் கொண்டு வரலாம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, under the authority of the University of Madras, some very important and useful historical books written by Dr. K. A. Neelakanta Sastri and Dr. N. Venkataramaniah were published long ago. They are very badly required, but they are not available now. So may I know whether the Hon. Minister for Education will instruct the University authorities to reprint those books and also pay their authors, who are in suffering conditions, some monthly allowance?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்தப் பணிகளை சென்னைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டு வருகிறது. ஏற்கனவே அச்சடித்து, விற்பனையாகி, இப்பொழுது பிரதிகள் இல்லாத புத்தகங்களை மீண்டும் வெளிக்கொண்டு வருகின்ற முயற்சிகளை சென்னைப் பல்கலைக் கழகம் மேற்கொண்டு அப்பணியில் ஈடுபட்டிருக்கிறது. ஏற்கனவே வெளியாகி இப்பொழுது விற்பனையில் இல்லாத—கிடைக்காத புத்தகங்கள்—தேவைப்படுகின்ற புத்தகங்கள், புதிய புத்தகங்கள் ஆகியவற்றை வெளியிடுகின்ற வகையில் வருகின்ற குடியரசு தினத்தன்று 98 நூல்கள் கொண்டு வர இருக்கின்றார்கள் சென்னைப்

பல்கலைக் கழகத்தினர். அவற்றிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற நூல்கள் இருக்கின்றனவா என்ற விவரங்கள் தெரியவில்லை. எவை எவை மக்களால் வேண்டப்படுகின்றனவோ, எவை எவை தேவையோ அவைகளை எல்லாம் புதுப்பிக்க வேண்டு மென்ற நோக்கத்திலேதான் சென்னை பல்கலைக் கழகம் இப்பணியிலே ஈடுபட்டிருக்கிறது.

**திரு. செ. கந்தப்பன்:** பொதுவாக, இந்திய வரலாறு எழுதப் படுகிறபொழுது, அந்த வரலாற்றில் தேசிய கருத்துக்களுக்கு மாறுபாடான கருத்துக்கள் இருக்குமானால், அவற்றைத் தெரிவிக் காமல் புறக்கணிப்பது, அவற்றிற்கு முக்கியத்துவம் தராமல் இருப்பது, மறைப்பது, மறுப்பது என்ற போக்குகள் குறிப்பாகச் சுதந்திரத்திற்குப் பிறகு கூட இருப்பதை நாம் காணுகிறோம். தமிழைப் பொறுத்து, அதன் அடிப்படைப் போக்குகள் சில தேசியத்திற்கு ஒவ்வாதது என்று சிலரால் கருதப்பட்டாலும், தமிழ்நாட்டினுடைய அந்தத் தனித் தன்மைகள் எந்தவகையிலும் மறுக்கப்படாமல், மறைக்கப்படாமல் தமிழக வரலாறு தயாரிக்கப் படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இந்தக் குழுவினர் தங்களுடைய பணிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வகையில்தான் ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மறைந்த பல உண்மைகளை, அல்லது மக்களுக்குத் தெரிவிக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கிற உண்மைகளைக் கொண்டுவருவதும் தமிழகத்தினுடைய தனித் தன்மைகளை, சிறந்த தன்மைகளை, வெளிப்படுத்துவதும், மற்ற உலக நாடுகளுடைய வரலாற்றோடு ஒப்பிடுகின்றபொழுது, இது எவ்வளவு சிறந்து இருக்கிறது என்பதை வற்புறுத்துகின்ற வகை யிலே குறிப்புகள் இடம் பெறவேண்டுமென்றுதான் இக்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பற்றிய குறிப்புகளை துண்டு துண்டாக சென்ற நூற்றாண்டுகளிலே பல்வேறு பேராசிரி யர்கள் எழுதி இருந்தாலும் அவை குறைபாடாக இருக்கின்றன என்பதைக் கண்டறிந்துதான் அதில் இருக்கிற சிறந்த குறிப்புகளை ஏற்றுக் கொண்டு மறைந்த அல்லது வெளிப்படாத பல்வேறு உண்மைகளைக் கொண்டு வரவேண்டுமென்று இந்தக் குழு அமைக்கப்பட்டு அந்தக் குழு பணிகளை நிறைவேற்றிக்கொண்டு வருகிறது.



**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு வரலாறை எழுதும்போது சேர நாட்டு பழக்கவழக்கங்கள் நம்மோடு ஒத்தி ருப்பதால், சேரநாடு இப்பொழுது கேரள ராஜ்யத்தில் ஒரு பகுதியாக இருக்கிற காரணத்தால், அங்கும் அந்தக் குழு சென்று கிடைக்கக்கூடிய குறிப்புகளை தேடி எடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நில வரலாற்றுக் குழுவினர் எடுத்துக் கொண்டிருக்கிற தலைப்புகளின்கீழ் அந்தப் பகுதிகள் அடங்கத்தான் செய்யும். வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகத்தில் சேரநாடு அடங்கும். சங்ககாலத் தமிழகத்திலும் சேர நாடு அடங்கும். சேர-சோழ-பாண்டியர் காலத் தமிழகத்திலும் சேர நாட்டுப் பகுதிகள் எல்லாம் அடங்கும். பல்லவ-பாண்டியர் ஆண்ட நாடுகள் என்று வரும்போது சேர நாட்டு—கேரள நாட்டு—வரலாறுகள் பல அவற்றில் அடங்கும், இவற்றையெல்லாம் குழு ஆராயும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, பண்டைக் காலத்திலே குமரிக் கண்டம் ஒன்று இருந்ததாகவும் அது சம்பந்த மாக விவரங்கள் இருப்பதாகவும் கூறுகிறார்களே, அது சம்பந்த மாக அந்தக் குழு ஏதாவது ஆராய்ச்சி நடத்தியதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றி ஆராயும் என்று கருதுகிறேன். வரலாற்றுக்கு முற்பட்ட தமிழகம் என்று ஆராயும்போது இவைகள் எல்லாம் வரும். வரலாற்றுத் துறை பேராசிரியர் கே. ஆர். ஹனுமந்தன் அவர்கள் நில அமைப்பின் வரலாறு என்பதுபற்றி கட்டுரை அளிக்குமாறு கோரப்பட்டிருக்கிறார்கள். அ. இராகவன் அவர்கள் பழைய கற்காலம் பற்றி கட்டுரை எழுத கோரப்பட்டிருக்கிறார். பெருங் காலமும் உலோக காலமும் என்பதுபற்றி கட்டுரை அளிக்கும் பொறுப்பு திரு. நாகசாமி அவர்களிடத்திலே ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. புதிய கற்காலம் என்பதுபற்றி கட்டுரை எழுதும் பொறுப்பு திரு. சி. இ. இராமச்சந்திரன் அவர்களிடம் அளிக்கப்பட்டிருக்கிறது. இன மரபு வரலாறு என்பது பற்றி திரு. க. த. திருநாவுக்கரசு அவர்கள் கட்டுரை அளிக்கும்படி. கோரப்பட்டிருக்கிறார். அரப்பா-மொகஞ்சதாரோ நாகரீகம் பற்றி ஆராயும் பொறுப்பு திரு. அ. இராகவன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

*Special pay for teaching staff in Colleges*

* 32 Q.—THIRU J. JAMES: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the Government have accepted in principle that grant of special pay to the teaching staff in colleges who have acquired Ph.D.; and

(b) if so, the number of such staff who will be benefited thereby?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) விதிகளின்படி பிஎச்.டி. பட்டம்பெறத் தேவையில்லாத அரசினர் கல்லூரி ஆசிரியர்களில், பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு, 15—11—1973 முதல் ஒரு திங்களுக்கு ரூ. 100 தனிச்சம்பளமாகக் கொடுக்க ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) இதனால் சுமார் முப்பது பேர் பலனடைவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்த நன்மை தனியார் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற பிஎச்.டி. பட்டதாரிகளுக்கும் வழங்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால், பொதுவாக, பிஎச்.டி. பட்டம் பெற்றவர்களுக்குத் தனியாக ரூ. 100 கொடுக்க வேண்டுமென்ற தன்மை மற்றைய சம்பளங்களைப்பொறுத்து தனியார் கல்லூரிகளிலும் அரசினர் கல்லூரிகளிலும் ஒத்த வகையில் வைத்திருக்கிற காரணத்தால், இதுவும் பொருந்தும் என்று கருதுகிறேன். தனியாராக இருப்பதால், அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

*Electro-Chemical Engineering Course*

* 33 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether courses in Electro-Chemical Engineering are being conducted in the Government Engineering Colleges in this State; and

(b) if so, the details thereof?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ): இப்பயிற்சி காரைக்குடி அழகப்பா செட்டியார் பொறியியல் கல்லூரியில் மட்டும் இவ்வாண்டு 1—12—1973 முதல் நடத்தப்படுகிறது. ஐந்து மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். பயிற்சிக் காலம் ஓராண்டாகும். வகுப்புகள் 1—12—1973-ல் தொடங்கப்பட்டிருக்கின்றன.

THIRU N. DENNIS: Sir, may I know whether it will be extended to other Engineering Colleges and also whether any practical training is given to the students who take this course?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதை அங்கே ஆரம்பிப்பதற்குக் காரணம் 'நாஷனல் லாபரேட்டரி'—தேசிய ஆராய்ச்சிக் கூடம்—இந்திய சர்க்காரின் சார்பாக அமைந்திருப்பதுதான். அது அங்கே அமைந்திருப்பதால் தான் காரைக்குடி பொறியியல் கல்லூரியிலே இப்பிரிவை ஆரம்பிப்பது பொருத்தம் என்று துவங்கப்பட்டிருக்கிறது. ஐந்து என்பதை மேன்மேலும் உயர்த்துவதுபற்றி ஆராயலாம். தேவை ஏற்படுமானால், வேறுபல கல்லூரிகளிலும் ஆரம்பிக்க இயலுமா என்பதுபற்றி கவனிக்கலாம்.

*Grants to Guru Nanak Bhavan*

* 34 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the State Government have sanctioned any grant to the Guru Nanak Bhavan in Madras; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ): ஆம். குருநானக் பவன் சென்னையில் நிறுவ குருநானக் பவன் நிறுவனத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் மான்யமளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது இப்பவன் கட்டுவதற்கான மைய அரசின் பங்கையும் சேர்த்து இவ்வாறு கொடுக்க இருக்கும் ரூபாய் 5 லட்சம் மான்யத்தின் முதல் தவணையாகும்.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே மற்ற இன மக்களுக்கு அவர்களுடைய மனையை கட்டுவதற்கு தமிழக சர்க்கார் தாராளமாக நிதி தந்து கொண்டிருக்கிறது.

[1974 சனவரி 21

வந்தவர்களுக்கு எல்லாம் வாரி வாரி வழங்குகிறது தமிழகம். ஆனால் டெல்லியிலே உள்ள தமிழர்கள் வள்ளுவர் பவனம் என்ற பவனம் கட்ட போதிய நிதி கிடைக்காமையால், மத்திய சர்க்காரிடம் உதவி கேட்டும் அவர்கள் தரவில்லை என்பது உண்மையா? ஆமென்றால், மத்திய சர்க்காரிடம் எடுத்துச்சொல்லி வள்ளுவர் பவனத்திற்கு நிதி பெற நம்முடைய சர்க்கார் முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, டெல்லியிலே அந்த பவனம் அமைக்க மத்திய சர்க்கார் நிதி உதவி கொடுக்க மறுத்தார்களா என்பதுபற்றி விவரக் குறிப்பு என்னிடத்தில் இப்பொழுது இல்லை. தனிக் கேள்விப் போட்டால் அதுபற்றி விவரங்கள் சேகரித்து தரப்படும். அதற்காக, தமிழக அரசின் சார்பாக ஓரளவு நன்கொடை அளிக்கப் பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்தோ, அல்லது டெல்லியை ஆட்சி புரிகிற அரசிடமிருந்தோ, நன்கொடை பெற்றிருக்கிறார்களா என்று தெரியவில்லை. இந்த குருநானக் பவனத்தைப் பொறுத்து, குருநானக் அவர்களின் 500-வது பிறந்த நாளை ஒட்டி, மத்திய சர்க்காரே ரூ. 3¾ லட்சம் நிதி உதவி செய்துள்ளது. நமது அரசு ரூ. 1¼ லட்சம் தந்தது. அதற்கென்று அமைக்கப்பட்ட குழு தனியாக ரூ. 5 லட்சம் திரட்டி, ஆக, ரூ. 10 லட்சத்திலே பவனத்தைக் கட்டுவதற்கு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆக, நமது தமிழக அரசு ரூ. 1¼ லட்சம் தருகிறது, மத்திய அரசு ரூ. 3¾ லட்சம் தருகிறது. அதிலே ரூ. 3 லட்சம் தரப்பட்டிருக்கிறது.

## *Chingleput Medical College*

* 35 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether it is a fact that the Medical Council of India have not recognised the Chingleput Medical College; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) & (இ) : செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு ஏற்பு வழங்குதல் சம்பந்தமாக இந்திய மருத்துவ மன்றத்தின் கவனத்திலுள்ளது. ஆய்வில் இன்னும் இருக்கிறது.



1974 சனவரி 21]

Thiru N. DENNIS : May I know the steps taken by the Government to get recognition by the Indian Medical Council?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** எந்த மருத்துவக் கல்லூரியாக இருந்தாலும் இந்திய மருத்துவக் குழுவினருக்கு விண்ணப்பித்துக்கொள்ளவேண்டும். அப்படி விண்ணப்பித்துக்கொள்ளப் பட்டது. அவர்கள் மருத்துவக் கல்லூரியைப் பார்வையிட்டார்கள். அப்படிப் பார்வையிட்ட பின்னர் அங்கே போதுமான நோயாளிகள் — வகைவகையான நோயாளிகள் — வரும் எண்ணிக்கை அதிகப்பட்டால்தான் அதை அங்கீகரிக்க முடியும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு வகைவகையான நோயாளிகள் அதிகமான எண்ணிக்கையில் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாத காரணத்தினால் அதனை சென்னையில் உள்ள மருத்துவக் கல்லூரியோடு இணைத்து இறுதி ஆண்டு பயிற்சியை அளிப்பது என்று தீர்மானித்துப் பல்கலைக் கழகத்திற்கு எழுதப்பட்டிருக்கிறது. பல்கலைக் கழகத்தின் இசைவைப் பெற்றவுடன் அந்தப் பயிற்சி இங்கே வழங்கப்பட்டால் இந்திய மருத்துவக் கழகம் அதனை ஏற்றுக்கொள்வது எளிதாக இருக்கும் என்று கருதுகிறோம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நமது மாநிலத்தில் இருக்கிற மற்ற எல்லா மெடிகல் காலேஜுகளுக்கும் இந்தியன் மெடிகல் கவுன்சில் ரெகக்னிஷன் வழங்கியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பெரும்பாலும் வழங்கப் பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். குறைந்தது இவ்வளவு படுக்கைகள் இருக்கவேண்டும் என்கிற காரணத்தினால் திருநெல்வேலி போன்ற இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை படுக்கை எண்ணிக்கைகளைக் கூட விரிவுபடுத்தி வருகிறோம். அவர்களது ஒப்புதல் கிடைக்க எளிதாக இருக்கும்.

**திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன் :** இந்திய மெடிகல் கவுன்சிலுக்கு எந்த ஆண்டு விண்ணப்பம் போடப்பட்டது? அங்கு சரியான சிகிச்சை அளிக்கப்படாத காரணத்தினால்தான் போதுமான நோயாளிகள் அங்கே வருவதில்லை என்று சொல்லப் படுகிறதே, அங்கு அதிக நோயாளிகள் வரும் அளவில் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்து, ரெகக்னிஷன் பெற வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1974 சனவரி 21

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி 65-ம் ஆண்டு தொடங்கப்பட்டு, படிப்படியாக வளர்ந்தது. 1970-ம் ஆண்டில் தான் முடிவுத் தேர்வுக்கு மாணவர்கள் சென்றார்கள். 1970-ம் ஆண்டிலேயே அதன் அங்கீகாரத்திற்கு இந்திய மருத்துவக் குழுவிற்கு எழுதப்பட்டது. வகைவகையான நோயாளிகள் அதிகமாக அங்கே வருவது, அங்கே சரியான முறையில் சிகிச்சை அளிக்கப்படுவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது என்பது பொருத்தமல்ல. அந்தப் பகுதியைச் சுற்றிச் சூழ இருக்கிற மக்கள் தொகையைப் பொறுத்துத்தான் நோயாளிகள் வரும் எண்ணிக்கை இருக்கிறது.

**திரு. சி. ஆறுமுகம் :** செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று நமது அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வகைவகையான நோயாளிகள் அங்கே வராததற்குக் காரணம் அவர்களது நோயைத் தீர்க்கும் அளவிற்கு அந்த அந்தத்துறையில் சிறந்த நிபுணர்களாக உள்ளவர்கள் அங்கே டாக்டர்களாக நியமிக்கப்படாததுதான். அப்படியே நியமிக்கப்பட்டாலும் அவர்கள் சென்னையில் ப்ராக்டிஸ் பண்ணுவதுதான் லாபமானது என்று எண்ணி, அங்கே போட்டாலும் இருப்பது இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நொண்டி மாட்டுக்குச் சறுக்கினது சாக்கு என்பது பழமொழி. அந்த மருத்துவக் கல்லூரி அமைந்திருக்கிற இடம், சுற்றுப்புறத்திலுள்ள ஜனத் தொகை ஆகியவற்றைப் பொறுத்தே நோயாளிகள் வருவதும் வராததும் இருக்கிறது. அதிக நோயாளிகள் வருகிறார்கள் என்றால் சிறந்த நிபுணர்களை அங்கே போடுவது ஒன்றும் கடினமான காரியம் அல்ல. காஞ்சிபுரம் மருத்துவ மனைக்குச் செல்கிறவர்கள் செங்கல்பட்டைவிட அதிகம். ஏதோ ஒரு அரசியல் சூழ்நிலையினால் செங்கல்பட்டில் மருத்துவக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. பிறந்துவிட்ட குழந்தையைக் காப்பாற்றியாக வேண்டும் என்கிற அடிப்படையில்தான் தோற்றுவிக்கப்பட்ட இந்தக் கல்லூரியைக் காப்பாற்ற முயற்சிக்கப்படுகிறது. ஆகவே தவறான கருத்து எதையும் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 சனவரி 21]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** க்ளினிகல் பயிற்சி கொடுப்பதற்கு சென்னையில் உள்ள மருத்துவ மனைகள் எவையெவை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இதற்குப் பிறகும் அங்கீகாரம் கொடுப்பதில் கஷ்டம் ஏதாவது இருக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சென்னையில் உள்ள கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியோடு தொடர்புடைய, மருத்துவ மனை, இராயப்பேட்டை மருந்துவமனை, கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை ஆகியவற்றில் `செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குப் பயிற்சி வழங்க பல்கலைக் கழகத்தின் இசைவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்களது இசைவு விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த இசைவு கிடைத்தவுடன் இதற்கு அங்கீகாரம் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கா. வேழவேந்தன் :** பல்வேறுவகையான நோயாளிகள் செங்கல்பட்டு மருத்துவமனைக்கு வராத காரணம்—சென்னை மருத்துவமனையில் உள்ள நுணுக்கக் கருவிகள் எல்லாம் அங்கே இல்லை என்பதும் ஒன்றாகும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே சென்னை மருத்துவமனையில் உள்ளதுபோன்ற கருவிகளை எல்லாம் செங்கல்பட்டு மருத்துவமனையில் ஏற்படுவதற்கான வசதிகளைச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஒரு மருத்துவ மனையில் உள்ள கருவிகளைப் பொறுத்து நோயாளிகள் வருவதில்லை. நோயாளிகள் வருவதைப் பொறுத்துத்தான் கருவிகள், மற்ற சாதனங்கள் அமைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள ஜெனரல் ஆஸ்பத்திரியில் உள்ள கருவிகள் எல்லாம் பல்வேறு மருத்துவ மனைகளிலும் இருக்க முடியாது. செங்கல்பட்டு மருத்துவமனைக்கு படிப்படியாக அதிக நோயாளிகள் வருவார்களானால், அவர்களது வசதியைக் கருதி படிப்படியாக கருவி, வசதிகளையும் அதிகப்படுத்தலாம். அவ்வாறு வசதிகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டே வருகின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** முன்பு ஒரு தடவை செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியை மூடிவிடுவதுபற்றிய ஆலோசனை இருந்ததே, அது கைவிடப்பட்டு விட்டதா ?

[1974 சனவரி 21

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எந்த ஆலோசனையும் உறுதியாகக் கைவிடப்படுவதோ, உறுதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதோ இல்லை. காலத்திற்குக் காலம் தேவைக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப கருத்து மாறக்கூடும்.

### சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவச் செலவு

*36 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1972-73-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் மருத்துவச் செலவுக்காக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** சட்ட மன்ற உறுப்பினர்களின் மருத்துவச் செலவுகளை அவர்களுக்குத் திருப்பித் தருவதற்காக (re-imbursement) அரசு 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 10,426-15 செலவிட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு மருத்துவ மனைகளில் இலவச சிகிச்சை அளிக்கப்படுவதால், அது குறித்து செலவிடப்பட்டுள்ள தொகையை கணிக்க இயலவில்லை.

### கிராமக் குடிநீர்ச் சிறப்புத் திட்டம்

*37 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு முழுவதும் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கச் சிறப்புத் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஆம். குறைந்த தூரத்தில் குடிநீருக்காக நிச்சயமான ஊற்றுத்துறை தற்சமயம் இல்லாத கிராமங்கள்—தொத்துநோய் நிலவிவரும் கிராமங்கள்—ஆதிவாசிகள்—அரிசனங்கள் முதலான எளிய சமூகத்தினர் குடிநீர்ப் பற்றாக்குறையுடன் வசிக்கும் கிராமங்கள் இந்த மூவகைக்கிராமங்கள் யாவற்றிற்கும் குடிநீர் வழங்குவதற்காக "விரைவுச் செயல் முறைக் (Accelerated programme) கிராமக்குடிநீர்ச் சிறப்புத் திட்டம்" ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.



1974 சனவரி 21]

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவர் அவர்களே, மின்சக்தி எல்லா கிராமங்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்கிற ஒரு தீவிர திட்டத்தை வைத்துக்கொண்டு செயல்படுத்தியதைப்போல குடிநீர் வழங்கும் திட்டம் எல்லா கிராமங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதாக ஒரு தீவிர திட்டத்தை வகுத்துக்கொண்டு, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் கடன் உதவி தந்து, இந்த குடிநீர் வழங்கு திட்டத்தை எல்லாக் கிராமங்களுக்கும் சிறப்பாக நிறைவேற்றித் தர திட்டம் வகுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** குடிநீருக்கு ஊற்றுத்துறை இல்லாத கிராமங்கள் 4,916, தொத்துநோய் பரவி வரும் கிராமங்கள் 2,250, குடிநீர் பற்றுக் குறை உள்ள கிராமங்கள் 11,814. ஆக மொத்தம் 18,960 சிறு கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்ற திட்டத்திற்கு ஏறத்தாழ 40 கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு இரண்டு மூன்று கோடி ரூபாய் அளவுக்குத் திட்டத்தை நிறைவேற்றக்கூட மத்திய அரசின் ஒப்புதல் கிடைக்கவில்லை. இது மத்திய அரசின் இசைவோடு செயல்படவேண்டிய திட்டமாக இருப்பதால், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் இந்தத் திட்டத்திற்கு அவர்கள் நிதி ஒதுக்கக்கூடிய காரணத்தினால் ஓரளவு இது தவக்கப்படுவது உண்மை. தமிழக அரசு இதில் மத்திய அரசு ஏற்றுக்கொள்கிற திட்டத்தை காலதாமதமின்றி வேகமாக நிறைவேற்றுகிறது.

(முற்பகல் 9.30)

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவர் அவர்களே, இந்த ஆக்ஸிலே ரேட்டட் ரூரல் வாட்டர் சப்ளை திட்டத்தின்கீழ் நமது தமிழ்நாட்டில் குடிநீர் வாரியத்தின் மூலமாகப் பல திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. மத்திய அரசின் ஒப்புதல் கிடைப்பதிலே கால தாமதம் ஏற்படுவதாக அறிகிறோம். ஆகவே சீக்கிரமாக ஒப்புதலைப் பெறுவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கொள்கையளவில் மத்திய அரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆகவே, இந்தக் திட்டத்திற்காக ஏறத்தாழ 19,29,77,000 ரூபாய்க்கு 3,567 திட்டங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவைகளிலே அவர்கள் இசைவு தந்தது 310 இலட்சம் ரூபாய்க்கு

ஆன திட்டங்களுக்குத்தான் இசைவு தந்தார்கள். அதற்கே 170 இலட்ச ரூபாய்க்குதான் இதுவரையிலும் அனுமதி தந்திருக்கிறார்கள் அவர்கள் இசைவு தந்திருக்கின்ற தொகைகளும் அதிகமாகவே நாம் செலவழித்துத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. கோ. இளங்கோவன்: இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசு கடனாகவோ அல்லது மானியமாகவோ தருகிறதா? அப்படியென்றால் எந்த அளவிற்குத் தருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அவர்களே தந்திருக்கின்ற 170 லட்ச ரூபாய்தான் இந்த விரைவுத் திட்டத்திற்கான மானியம். அதற்கும் மேற்கொண்டு மாநில அரசு கடனாகப்பெற்றும் செலவிட்டுவருகிறது.

திரு. கே. எ. வகாப்: இந்தத் திட்டத்தைத் தொத்துநோய்கள் அடிக்கடி வருகின்ற பகுதிகளில் குறிப்பாக தமிழ்நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டத்திலே காலரா, நரம்புசிலந்தி போன்ற வியாதிகள் அடிக்கடி வருகின்ற பகுதிகளில், கொண்டுவர அப்பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து சிறப்புத் திட்டங்களை அமல்படுத்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அந்த அடிப்படை மிக முக்கியமாகக் கவனிக்கப்பட்டுத்தான் கணக்கிடப்படுகிறது. ஆனால் நிதிவசதிகளுக்கேற்ப அவை முன்னால் எடுத்துக் கொள்ளப்படும்.

திரு நா. வெ. குருசாமி: குடிநீர்ப் பரிசோதனைக்காக அந்தச் செலவுகளுக்காகப் பணமும் கட்டி இரண்டு ஆண்டுக்காலத்திற்கு மேலாக ஆகின்றது. இன்னும் எந்தவிதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. எங்களுடைய ஆண்டிப்பட்டி திட்டத்தை இன்னும் எடுத்துக்கொள்ளவேயில்லை. ஏன் எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சிறு கிராமங்களுக்கான திட்டங்களைப் பொறுத்தவரையில் பரிசோதனை திட்டத்திற்கான இடம் கிடையாது. நகரம் அல்லது பேரூராட்சி என்று வரும்போதுதான் அதாவது



பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து நடத்த வேண்டிய திட்டங்களைப் பொறுத்தவரையில்தான் அப்படிப்பட்ட பரிசோதனைத் திட்டங்கள் தேவைப்படும். அந்தத் திட்டத்தினை நிறைவேற்ற அந்த இடம் பேரூராட்சியாகவோ அல்லது நகராட்சியாகவோ இல்லாமல் இருக்குமானால் பெற்ற கடனைத் திருப்பிக் கட்ட முடியாமல் போய்விடும், அந்தக் கடன் தமிழக அரசு இன்னொரு இடத்திலே வாங்கக்கூடிய கடனாகும். ஆகவே திருப்பிக் கட்டக்கூடிய இடங்களில் ஆய்வுக்கான முன்செலவுப் பணம் கட்டுவது என்பது மிகவும் சிறிய தொகையேயாகும்.

திரு. சோ. அழகர்சாமி: கிராமங்களுக்குக் குடிநீர் வழங்க சிறப்புத் திட்டம் அமலாக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல பஞ்சாயத்துகளிலே அந்தப் பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த அரிசனக் குடியிருப்புகளில் இருக்கக்கூடியவர்கள் 3, 4 மைல்கள் நடந்தேசென்று தண்ணீர் எடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. ஊராட்சி மன்றங்களிலேயிருந்து குடிநீர் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்றால் அந்தத் தலைவர் இஷ்டம் இருந்தால் தான் நடைபெறுகிறது. இல்லாவிட்டால் நடைபெறுவதில்லை, இந்தத் திட்டங்களைக் குடிநீர் வாரியம் செய்கிறதா? அல்லது ஊராட்சி மன்றங்கள் செலவுசெய்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, இதிலே இரண்டு, மூன்று வகையான திட்டங்கள் இருக்கின்றன. அதிலே இந்த ஆக்ஸிலரேட்டட் புரோக்கிராமில் குடிநீர் வாரியத்தின் மூலமாகத் தான் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஊராட்சி மன்றங்களின் மூலமாக நிறைவேற்றப்படுகின்ற வேறு வகையான குடிநீர்த் திட்டங்களும் இருக்கின்றன.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** குடிநீருக்காக சிறப்புத் திட்டம் அமைத்து இருப்பதாகவும் அந்தத் திட்டத்தின் மூலமாக ஏழை மக்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடிநீர் கொடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில இடங்களில் இருக்கக்கூடிய கிணறுகளில் உள்ள நீரிலே ஜாதி இந்துக்கள் விஷத்தைக் கலந்திருக்கிறார்களே, சமீபத்திலே பழனி தாலுகாவிலே ஒரு கிராமத்திலே கலந்திருக்கிறார்களே, அதுபற்றி அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா? அது சம்பந்தமாக அதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது?

[1974 சனவரி 21

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விஷத்தைக் கலப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சமுதாயத்தினுடைய விரோதிகள். இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படாமல் இருப்பதற்கு மனமாற்றம் ஏற்படவேண்டும். மதவேற்றுமை, ஜாதி வேற்றுமை, தீண்டாமை ஆகிய கொடிய நச்சுப் பாம்பு மனப்பான்மையை ஒழிப்பதற்கு இந்த அரசாங்கத்தால் எடுக்கப்படுகின்ற முயற்சிகள் யாவும் மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரியும். அதிலே அவர்கள் ஒத்துழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* 38 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that a scheme for protected water supply for Dharmapuri district has been prepared by the Government; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) ஆம்.

(இ) மத்திய அரசு தொடங்கியுள்ள கிராமப்புற குடிநீர் வழங்கு விரைவுத்திட்டத்தின் கீழ், தருமபுரி மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவது குறித்து திட்டத்திற்காக தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வசதி வாரியம் இதுவரையில் 644 மதிப்பீடுகளைத் தயாரித்துள்ளது. இவற்றுள் 41 மதிப்பீடுகளுக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்து, அந்த பணிகள் நடந்தேறி வருகின்றன.

THIRU B. VENKATASWAMY: Sir, Dharmapuri district is a most backward district and I am thankful to the Government for declaring it as such and taking up this programme there. May I know from the Hon. Minister when this scheme will be started, when it will be implemented, especially in the areas like Denkanikota in Hosur Taluk where many epidemic diseases are spreading?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மொத்தம் 41 திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புக்கொண்டதில் 1972-73-ஆம் ஆண்டிலே 22 திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. 1973-74-ஆம் ஆண்டிலே 10 திட்டங்கள் முடிக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் 644 திட்டங்கள் தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்த



1974 சனவரி 21]

வரையிலே தேவை என்று மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்டு மத்திய அரசு ஒவ்வொரு பட்டியலாக ஒப்புதல் தருகிறது. ஆகவே ஒப்புதல் வந்தவுடன் அவை விரைவாக நிறைவேற்றப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, in Dharmapuri district many parts like Hosur and Denkanikotta which are hilly are experiencing great scarcity of drinking water in many villages. The wells are deep and the water in the wells is so little that ladies shed tears to draw water and the quantity of from them their tears is greater than the water they draw from the wells. The small Panchayats there say that they have no money for paying for water-supply schemes. The question is pending for long. May I know from the Hon. Minister for Health whether some arrangements would be made to give protected water-supply to these suffering tiny villages, irrespective of the money paid by the Panchayats?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இந்தத் திட்டத்திலே இந்தப் பிரச்சனை வரவில்லை; ஆனால் பஞ்சாயத்துக்கள் நடத்துகின்ற சில திட்டங்கள் இருக்கின்றன. அவைகளிலேதான் பஞ்சாயத்து நிதிவசதிபற்றிய பிரச்சனை வரும். பொதுவாகவே சலுகை காட்டப்படவேண்டிய மாவட்டம் தருமபுரி மாவட்டம் என்ற அளவிலே தருமபுரி மாவட்டம் பிற்படுத்தப்பட்ட மாவட்டம் என்ற காரணத்தினாலே இப்படிப்பட்ட திட்டங்கள் அங்கே நிறைவேற்றப்படுகின்றன.

அரிசன மாணவர் இல்லங்களுக்குக் கட்டடங்கள்

* 39 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன மாணவர் விடுதிகளுக்கு படிப்படியாக நிரந்தரமாக சொந்தக் கட்டடம் கட்டித்தரும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) அரிசன நல இல்லங்களுக்கு படிப்படியாக சொந்தக்கட்டடங்கள் கட்ட அரசு ஏற்கெனவே முடிவு செய்துள்ளது.

[1974 சனவரி 21

(இ) அரிசன நல இல்லங்களுக்கு கட்டடங்கள் கட்ட இந்தியன் வங்கியிலிருந்து ஒரு கோடி ரூபாய் கடனாகப் பெற அரசு முடிவு செய்தது. இக்கடன் தொகையை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் நேரடியாக வங்கியிலிருந்து பெற்று இல்லங்களுக்கு கட்டடங்கள் கட்ட ஒரு திட்டம் வகுத்து இந்தியன் வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது. வங்கியிலிருந்து கடன் கிடைத்த உடன் வீட்டு வசதி வாரியம் மேற்படி திட்டத்தை செயல்படுத்தும். மாநிலத்தில் மொத்தம் சுமார் 8,300 தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைஜாதி மாணவ மாணவியருக்குக் கட்டடங்கள் கட்ட உத்தேசிக்கப் பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, உத்தேசிக்கப்பட்டிருக்கக்கூடிய கட்டடங்களை எந்த அடிப்படையிலே அரசாங்கம் கட்ட இருக்கிறது. திருச்சி மாவட்டத்திற்கு இதிலே முன்னுரிமை தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகக் கட்டிதரப்படும் என்று கூறினேன். மாநிலம் பூராவிலும் என்கின்றபோது திருச்சியும் அடங்கியிருக்க வேண்டும்.

*40 வினா—**திரு. செ. சதாசிவம்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், அரியலூர் வட்டம், பொன்பரப்பி கிராமத்தில் 1973-74-ல் அரிசன மாணவர் விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** திருச்சிராப்பள்ளி மாவட்டம், பொன்பரப்பியிலுள்ள தாழ்த்தப்பட்டோருக்காக அரசினர் மாணவர் இல்லத்திற்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. செ. சதாசிவம்:** தலைவர் அவர்களே, சில ஆண்டுகளாகவே அங்கு போதுமான கட்டடங்கள் சரியான வாடகைக்குக் கிடைக்கவில்லை. ஆகவே இது எப்பொழுது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.



1974 சனவரி 21]

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** நான் சற்று முன்னாலே கூறியபடி இந்தியன் வங்கியிலே கடன் உதவிபெற்றுக்தான் இந்த ஹாஸ்டலும் கட்டப்படுகிற செயற்குறிப்பு இருக்கிறது. கடன் உதவி பெற்றவுடன் இதுவும் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

*41 வினா—**திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரம் உயர்நிலைப் பள்ளிக்கு நலத்துறை மூலமாக ஹாஸ்டல் ஏற்படுத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) & (இ) மதுரை மாவட்டம், ரெங்கசமுத்திரத்தில் ஒரு தாழ்த்தப்பட்டோர் அரசினர் மாணவர் இல்லம் கல்வி ஆண்டு 1973–74-ல் துவக்க ஏற்கெனவே ஆணை விடுக்கப்பட்டுள்ளது.

## குடகனாறு திட்டம்

*42 வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்,**
**திரு. என். கிட்டப்பா,**
**திரு. பெ. சௌந்தரபாண்டியன்,** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடகனாறு திட்டத்தில் ஆக்கப்பணிகள் தொடங்கி விட்டனவா?

(இ) அரவக்குறிச்சி தொகுதி ஆண்டிப்பட்டி மஞ்சைவெளி கிராமப் பகுதிக்கு இத்திட்டத்திலிருந்து பாசன வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) குடகனாறுத் திட்டத்தினால் அரவக்குறிச்சித் தொகுதியில் பெரிய மஞ்சுவெளி கிராமம் மட்டும்தான் பயனடையும். ஆண்டிப்பட்டிக் கிராமம் இத்திட்டத்தினால் பயனடையாது.

[1974 சனவரி 21

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டி கிராமமும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் மண்தோன்றிய காலந்தொட்டே பஞ்சப் பிரதேசங்களாக இருக்கின்றன. அந்தப் பகுதியிலே ஒரே ஒரு நதி தான் ஓடுகிறது. ஆகவே, அந்தப் பயன்களை அந்தப் பிரதேசங்களுக்கு விஸ்தரிப்பதற்கு அரசு கருணைகூர்ந்து முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அரசுக்குக் கருணை இருக்கிறது. ஆற்றிலே நீர்தான் போதாது. அந்தக் காரணத்தினாலே அந்தப் பகுதிகளைச் சேர்ப்பதற்கில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, குடகனாறு திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு? மத்திய அரசு ஒப்புதல் அளித்துவிட்டதா? எப்பொழுது அளித்தது என்ற விவரம் அறியலாமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, இதன் மதிப்பீடு ரூபாய் 212 இலட்சம் ஆகும். மத்திய அரசின் ஒப்புதல் பற்றிய தகவல் இப்பொழுது இல்லை. ஆனால் நமது அரசு ஒப்புதல் அளித்து வேலை துவங்கியாகிவிட்டது.

### கொல்லிமலை நீர்த்தேக்கத் திட்டம்

*43 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொல்லிமலை நீர்த்தேக்கத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ரூபாய் 319 லட்சத்திற்குத் தயாரிக்கப்பட்ட இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடு, தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்காக மத்திய நீர்-மின்சக்தி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. காவிரி நீர்த்தகராறுக்கு தீர்வு காணும் வரையில், காவிரி நீர்ப்பள்ளத்தாக்கில் எந்தத் திட்டத்திற்கும் அனுமதி வழங்குவது விரும்பத்தக்கதாயிராது என்று இந்திய அரசு, மிக அண்மையில் இவ்வரசுக்குத் தெரிவித்துள்ளது. இந்திய அரசின் பதில் பரிசீலனையில் உள்ளது.



1974 சனவரி 21]

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, இந்த கொல்லிமலைத் திட்டத்திற்கு ஏற்கனவே இந்த அரசாங்கம் நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் தொகை ஒதுக்கியிருக்கிறது என்று நினைக்கிறேன். மத்திய அரசின் முன் அனுமதி பெறாமல் இந்த அரசாங்கம் எப்படி தொகையை ஒதுக்கியது? இவ்வளவு நாள் காலதாமதம் ஆவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, தொகை ஒதுக்குவதற்கும், மத்திய அரசின் அனுமதிக்கும் சம்பந்தம் இல்லை. வேலை துவங்குவதற்கு முன் மத்திய அரசின் அனுமதி வாங்க வேண்டுமென்று இருக்கிறது. மத்திய அரசின் அனுமதிக்காக காத்திருக்கிறோமே தவிர வேறல்ல.

### இராசனேரி நீர்த்தேக்கத் திட்டம்

*44 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிபூண்டித் துணை வட்டத்தில் தேர்வாய் கிராம எல்லையில் அமையும் 'இராசனேரி மதகு நீர்த்தேக்க அணைத் திட்டம்' எப்போது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** செங்கற்பட்டு மாவட்டம் கும்முடிபூண்டி துணை வட்டத்தில் மண் கொண்டத்திற்கு பதில் ஓர் அணைக்கட்டு ரூ. 2,20,000 செலவில் கட்டும் திட்டத்திற்கு மாவட்ட ஆட்சியாளரின் ஒப்புதல் வழங்கப்பட்டு மேற்பார்வை பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, இந்த 'இராசனேரி மதகு நீர்த்தேக்க அணைத்திட்டம்' நீண்ட நாட்களாக ஆய்வில் உள்ளது, அது எப்பொழுது முடிவடையும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஆய்வு முடிந்தவுடன் முடிவடையும்.

[1974 சனவரி 21

## திருநெல்வேலி மாவட்டத்தில் அணைக்கட்டுத் திட்டங்கள்

*45 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருப்பாநதி, பிளவுக்கால் ஆகிய இரு அணைக்கட்டுத் திட்டங்கள் தமிழ்நாடு அரசு தற்போது செயல்படுத்தி வருகின்றதா?

(இ) இதனால் திருநெல்வேலி இராமநாதபுரம் மாவட்டங்களில் புதிதாக பாசனம் பெறும் நிலங்கள் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) **கருப்பாநதித் திட்டம் :** இத்திட்டத்தினால் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த 1,164 ஹெக்டேர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறும்.

**பிளவுக்கால் திட்டம் :** இதனால் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 1,072 ஹெக்டேர் நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெறும்.

*46 வினா—**திரு. வீ. கார்த்திகேசன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், இராமநாதபுரம் பகுதியிலுள்ள நம்பியாறு திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) இல்லை.

(இ) நம்பியாறு அணைக்கட்டு திட்டத்திற்கான ரூ. 10 லட்சத்திற்கான மதிப்பீடு பாசன தலைமைப் பொறியாளரால் உணவு உற்பத்தி வருவாய் வாரியத்தின் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டு வருவாய் வாரியத்தின் பரிசீலனையில் உள்ளது.



1974 சனவரி 21]

*47 வினா—**திரு. வீ. கார்த்திகேசன் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், குட்டம் ஊராட்சிப் பகுதியில் அடங்கிய பெரிய ஊருணியை (Spring) ஆழப்படுத்தி விவசாயப் பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

## *Bleeding Madras variety of Handloom cloth*

*48 Q.—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether the demand for Bleeding Madras varieties has increased in 1973 ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1972-ம் ஆண்டிலும் சனவரி முதல் ஜூலை 1973 வரை ஏற்றுமதி செய்யப் பட்டவைகளின் மதிப்பு வருமாறு :

| | | |
|---|---|---|
| 1972 .. | 15-55 | இலட்சங்கள் |
| ஜனவரி முதல் ஜூலை 1973 வரை .. | 10-55 | ,, |

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலேயிருந்து இந்த வண்ணம்மாறும் கைத்தறி துணிகளுக்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடுகளிலே சந்தை மிகவும் அதிகமாக இருந்தது. ஆனால் அது இப்பொழுது குறைந்திருப்பதாகத் தெரிகிறது. எனவே புதிய சந்தைகளை ஏற்படுத்த மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நமது அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இடைக்காலத்திலே ஒரு மந்த நிலை ஏற்பட்டது. இப்பொழுது சுமார் 15½ இலட்சம் ரூபாய்க்குச் செல்ல வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. எந்தெந்த நாடுகளிலே இதுபோன்ற வாய்ப்புகள் இருக்கின்றனவோ அங்கே முயற்சிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இந்த 'ப்ளீடிங் மெட்ராஸ்'க்கு அமெரிக்க நாட்டிலே நிறைய கிராக்கியிருந்ததும், இப்பொழுது மந்த நிலை ஏற்பட்டிருப்பதும் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கு நன்றாகத் தெரியும், மேலும் நம்முடைய

நெசவாளர்களில் பலர் இப்பொழுது வேலையில்லாமல் இருக்கும் இந்த நேரத்தில் இதை உற்சாகப்படுத்த, அமெரிக்க நாட்டோடு தொடர்பு கொண்டு இந்த ப்ளீடிங் மெட்ருசை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்யவும், அந்நிய செலாவணியைப் பெறவும் நம்முடைய அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதைத்தான் இப்பொழுது சொன்னேன். 15½ இலட்சம் ரூபாய்க்கு வந்திருக்கிறது.

*Silk Farms at Kolatti and Masinagudi*

* 48 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the the Minister for Industries be pleased to state the amount of money spent on large scale silk farms at Kolatti and Masinagudi so far and the income derived from the same ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கொலட்டியிலுள்ள பெரிய அளவு பட்டுப் பண்ணையில் 1966-67 முதல் 1971-72 வரை ரூ. 14,80,271-ம் மாசினகுடியிலுள்ள பட்டுப்பண்ணையில் 1967-68 முதல் 1971-72 வரை ரூ. 2,90,528.89-ம் செலவிடப்பட்டுள்ளது மேலே குறிப்பிடப்பட்ட காலங்களில் கொலட்டி பட்டுப் பண்ணையில் ரூ. 2,95,601 மாசினகுடி பண்ணையில் ரூ. 24,109-ம் வருமானமாக வந்தது.

THIRU B. VENKATASWAMY : Sir, from the answer given by the Hon. Minister for Industries I understand the Kolatti Silk Farm is one of the largest Silk Farms in the World. But the income that is derived from the farm is very low when compared to the investment that has been made. May I know from the Hon. Minister when we are going to recoupe this amount ? Also, the wage paid to the workers is only one or two rupees per day, even after the minimum wages Act has been passed. Will the Government take into consideration all these things and increase the wages to the coolies there?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபோன்ற பண்ணைகள் உருவாக்கப்படுவது, இந்தச் செடிகள் வளர்க்கப்பட்டு, கக்கூன்ஸ் வளர்க்கப்பட்டு பட்டு உற்பத்தியாகவேண்டுமென்ற நேரத்தில், இப்பொழுது வளமாக வந்துள்ளது. இனிமேல் வருவாய் தொடங்கும்.



**திரு. கு. அ. பொம்மன் :** தலைவரவர்களே, இந்த மாசினகுடி பட்டு திட்டத்தை விரிவு செய்ய அரசுக்கு ஏதாவது உத்தேசமுண்டா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பொதுவாக எந்தெந்த இடங்களிலே இந்த பட்டு வளர்ச்சிக்கு உதவி செய்ய முடியுமோ அதைத் திட்டமிட்டு செயல்பட வேண்டுமென்று முடிவு செய்திருக்கிறோம். அதற்காக சில்க் போர்டு மத்திய அரசின் உதவியோடு பணம் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். பணம் கிடைத்தவுடன் எந்தெந்த இடங்களில் வளர்க்க முடியுமோ அதற்கு முயற்சிக்கலாம்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether any large-scale schemes have been sent to the Government of India through the Government of Tamil Nadu ? If so, what are the schemes that have been sent to the Government of India and how many of them have been sanctioned so far?

**மாண்புமிகு. திரு. செ. மாதவன் :** இந்த விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. நாம் சுமார் 6 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு தமிழகம் முழுவதும் எங்கெங்கு பட்டு வளர்ச்சியை ஏற்படுத்தலாம் என்று இருக்கிறோம். அதற்கு கூட்டுறவுத் துறையில் முதலிடம் கொடுக்க வேண்டும், அதற்கு உதவித் தொகை வழங்க வேண்டுமென்று சில்க் போர்டுக்கு அனுமதி கேட்டு எழுதியிருக்கிறோம்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, இந்த பட்டு உற்பத்தியிலே, கோவை தாலுக்கா, பல்லடம் தாலுக்காக்களில் பட்டு உற்பத்தி செய்ய அங்குள்ள விவசாயிகள் முன் வந்திருக்கிறார்கள். அங்கு உற்பத்தியாகும் பட்டு சிறந்தது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் பட்டு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஏதாவது புது முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு அங்கத்தினர் கூறியது உண்மை. அந்தப் பகுதியிலே நல்லமுறையிலே அந்தச் செடி வளரும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அந்தத் திட்டத்திலே அந்தப் பகுதியும் இணைக்கப்படும்.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவரவர்களே, நிறைய பட்டு உற்பத்தியாளர்கள் இருக்கும் பகுதி ஆரணி தாலுக்கா. அந்த தாலுக்காவிலே பட்டை உற்பத்தி செய்ய வேண்டுமென்று முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக நிலம் வேண்டுமென்று கூட்டுறவு சொசைட்டி மூலம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இன்னும் அது வழங்கப்படவில்லை. அது விரைவில் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இதைப்போல ஆரணி, காஞ்சீபுரம், கும்பகோணம் போன்ற பட்டு உற்பத்தியிருக்கும் பகுதிகளில் இதுபோன்ற ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அங்கத்தினர் சொன்னது போல் ஆரணியிலும் அந்த ஆர்வம் ஏற்பட்டிருக்கிறது. அங்கத்தினர் அவர்கள் முயற்சித்து கூட்டுறவுச் சங்கமே அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு நிலம் கொடுக்கும்படி தயார் செய்துவிட்டால் உதவித் தொகை கொடுத்து அந்த வளர்ச்சியை அங்கு ஏற்படுத்த முடியும்.

*Survey on availability of coal*

*50 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey about the availability of coal in this State has been conducted recently; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

**வழக்குரைஞர்கள் கட்டண விதங்களை உயர்த்தல்**

*51 வினா—**திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோர்ட்டு வழக்குகளில், வக்கீல்களுக்கு கொடுக்கப்படும் செலவுத் தொகையில் சேரும் பீஸை உயர்த்த வேண்டும் என்று வக்கீல்கள் சங்கத்திலிருந்து மனுக்கள் வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், அவைகளின் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன?





**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) வழக்காடு செலவில் சேர்ந்துள்ள வழக்குரைஞர் கட்டணத்தை உயர்த்த வேண்டும் எனக் கேட்டு வழக்குரைஞர் சங்கங்களிடமிருந்து இத்துறைக்கு முறையீடுகள் எவையும் வரவில்லை. ஆனால் திண்டிவனம், செங்கற்பட்டு போன்ற வெளியூர் வழக்குரைஞர் சங்கங்கள் சிலவற்றிடமிருந்து இது குறித்து உயர்நீதி மன்றத்திற்கு வந்த முறையீடுகளையொட்டி உயர்நீதி மன்றம் குழு ஒன்றை அமைத்து வழக்குரைஞர் கட்டண விதிகளை திருத்தியமைத்தது. அதற்கு ஒப்புதல் அளிக்குமாறு 1970 ஆண்டில் அரசுக்கும் எழுதிக் கேட்டது. அவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட விதிகள் எல்லா நிலைகளிலும் தற்போதுள்ள கட்டண விதத்தை பொதுவாக உயர்த்தியுள்ளன.

(இ) சட்டத் துறையின் 3—1—1973 ஆம் நாளிட்ட 5 ஆம் என் அரசு ஆணையில் அரசு 1973-ம் ஆண்டு மேற்கூறிய திருத்தியமைக்கப்பட்ட வழக்குரைஞர் கட்டண விதிகளுக்கு ஒத்திவைக்கப்படுகின்றன.

THIRU R. PONNAPPA NADAR: Sir, there is a feeling among the lawyers that the fee that has been fixed is too low in view of the mounting cost of litigation that is prevailing at present. So, is there any proposal to revise the advocate's fee?

THE HON. THIRU S. MADHAVAN: It is better all these things are decided by the High Court. That is why I told that the High Court has appointed a Committee. The Committee recommended a proposal. The Government had accepted the proposal. If any proposal comes from the High Court, we will accept it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 52, 53 ஒத்திவைக்கப்படுகின்றன.

**திருப்புவனம் கால்வாயின் குறுக்கே மேம்பாலம்.**

*54 வினா—**திரு. த. சோணையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்புவனம் கால்வாயின் குறுக்கே மேம்பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) & (இ) கிராம ஊரக வளர்ச்சித் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தில், கி.மீ. 14/2 மதுரை மண்டபம் ரோடிலிருந்து பிரிந்து செல்லும் கறுகர் கடை சாலை மேம்பாடு செய்வதற்கான வேலை எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மேற்படி சாலையின் குறுக்கே திருப்புவனம் வாய்க்காலில் குழாய் கண்ணுள்ள தரைப்பாலமும் கட்டப்படும்.

**திரு. த. சோணையா :** திருப்புவனம் கால்வாயில் கட்டப்படுகிற பாலம் தரைப் பாலமாக இருக்கும் காரணத்தால், திருப்புவனம் கண்மாய்க்குப் போகிற தண்ணீர் தடைப்படும் என்று கருதி அந்த ஊர்க்காரர்கள் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதை மேம்பாலமாகக் கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதற்குத்தான் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அதுபற்றிப் பரிசீலனை செய்வது என்றால் காலதாமதம் ஏற்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்களானால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியும்.

**வடவாறு, வெட்டாறுகளின் குறுக்கே பாலம் அமைப்பு.**

*55 வினா—**திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில், பனவெளி, தென்பறம்பூர் கிராமங்களை இணைக்கும் வகையில் வடவாறு, வெட்டாறு தலைப்பில் பாலம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது வேலை மேற்கொள்ளப்படும் ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.





**திரு. துரை கோவிந்தராசன் :** தஞ்சை மாவட்டத்திலுள்ள தென்பறம்பூர், பனவெளி கிராமங்களைத் தஞ்சையோடு இணைக்கும் வகையில் பாலம் கட்டவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. 1962-ல் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தத் தொகுதியில் நின்ற போது அதற்கு வாக்குறுதி கூடத் தந்தார்கள். அது நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் இருந்து வருகிறது. இது உள்ளாட்சித் துறையில் வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. இது பொதுப் பணித்துறையில் இருக்க வேண்டிய ஒன்று அல்லவா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** கேட்கப்பட்ட கேள்வி ஊரக வளர்ச்சித் துறை பற்றியது. சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் கிராம அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இது கேட்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி பரிசீலனைக்கு முன்பு எடுத்துக் கொள்ளப்பட்டு 12½ லட்சம் ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இப்போது இந்த வேலைகளை ஊரக வளர்ச்சித் துறை எடுத்துக் கொள்ள இயலாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க பேருந்து சாலைகளைப் பராமரிக்க அரசு எடுத்துக் கொள்ளும் திட்டத்தில் சேர்த்துக் கொள்வது பற்றித் தலைமைப் பொறியாளருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

**புனவாசிப்பட்டியில் சமுதாயக்கிணறு அமைப்பு**

* 56 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், புனவாசிப்பட்டி கிராமத்தில் சமுதாயக்கிணறு தோண்ட அரசு எப்போது ஆணை பிறப்பித்தது ?

(இ) அந்த ஆணை மீது இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

(உ) சமுதாயக்கிணறு வெட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு உரிய காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :**

(அ) 4—11—1970-ல் அனுமதி அளிக்கப்பட்டது.

(இ) & (உ) புனவாசிப்பட்டி கிராமத்தில் சர்வே எண். 356/3-ல் சமுதாயக்கிணறு தோண்ட எடுக்கப்பட்ட நிலம் மாரியம்மன் கோவில் டிரஸ்டியால் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்குத் தானமாகக் கொடுக்கப்பட்டது. மேற்படி கோவில் இடத்தை ஒன்றியத்திற்குத் தானமாகக் கொடுக்க டிரஸ்டிக்கு அதிகாரம் இல்லை என கரூர் ஜில்லா முன்சீப் கோர்ட்டில் தாவா செய்யப்பட்டு தடுப்பு ஆணையும் பெறப் பட்டுள்ளதால் கிணறு வெட்டுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** புனவாசிப்பட்டியில் சமுதாயக் கிணறு வெட்ட வேண்டுமென்று முன்பு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த நாவலர் அவர்கள்தான் ஆணை பிறப்பித்தார்கள். கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தவருக்கும் அந்த நிலத்திற்கும் எந்தவிதமான தொடர்போ, உரிமையோ இல்லை. ஆகவே, உடனடியாக சமுதாயக் கிணற்றைத் தோண்ட நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** புனவாசிப்பட்டி கிராமத்தில் சமுதாயக் கிணறு தோண்ட வேண்டுமென்பதற்கு 4—11—1970 அன்றே அரசு அனுமதி அளித்திருக்கிறது. அந்தக் கிணறு தோண்டப்படுகிற இடம் கோவிலுக்குச் சொந்தமான இடம் என்று திரு. தர்மலிங்க முதலியாரும் மற்றும் சிலரும் கரூர் தாலுகா முன்சீப் கோர்ட்டில் தடை ஆணை கோரி பெற்றிருக்கிறார்கள். கோர்ட்டாரிடத்தில் அது பற்றித் தெரிவித்து அதை விலக்க வேண்டுமென்று அரசின் சார்பில் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறது. இன்னும் அதனுடைய முடிவு வரவில்லை.

**திரு. எஸ். வடிவேல் :** சமுதாயக் கிணறு தோண்டுகிற காலத்தில் ஆதித் திராவிட மக்கள் அதிகம் தண்ணீர் எடுக்கிறார்கள் என்பதற்காக நிலம் வைத்திருக்கிற மேல்சாதிக்காரர்கள் அதைத் தோண்ட விடாமல் தடுப்பதற்குச் சகல வழிகளையும் செய்கிறார்கள். தோண்டபடுகிற இடத்தில் நல்ல தண்ணீர் கிடைத்தால் அதை சமுதாயக் கிணறாகக் கொடுக்க மறுக்கிறார்கள். அரசு விரும்புகிற இடத்தில் கிணறு தோண்டினால் உப்புத் தண்ணீராக





இருக்கிறது. ஆகவே, நல்ல தண்ணீர் கிடைக்கிற இடத்தில் சமுதாயக் கிணறுகளைத் தோண்டி ஆதித் திராவிட மக்கள் பயன் பெற வழி செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** நல்ல தண்ணீர் கிடைக்கும் இடத்தில் சமுதாயக் கிணறு தோண்டிய பிறகு பக்கத்திலே இருக்கக்கூடிய தனியாரும் கிணறு தோண்டுகிற காரணத்தால் அந்தத் தண்ணீர் குறைந்து விடுகிறது. குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்க முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தால் நல்ல தண்ணீர் கிடைக்குமானால் அந்தப் பொறுப்பை அரசாங்கமே ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது.

## அம்மூருக்கு பேருந்து நிலையம்

* 57 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு ஜில்லா வாலாஜா ஒன்றியத்தில் உள்ள அம்மூர் பேரூராட்சியில் ஒரு பஸ் நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) அரசினிடம் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. எ. வகாப் :** என்னுடைய தொகுதியில் அம்மூர் பேரூராட்சி பெரிய ஊராக இருக்கிறது. அங்கு பஸ் நிலையம் இல்லை. அது சம்பந்தமாக முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு கடனுதவி கொடுத்து ஒரு நிலையத்தைக் கட்ட அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** ஒரு பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்றால் மண்டலப் போக்குவரத்து அதிகாரிகள் அனுமதி பெற வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் இடம் சுகாதாரத்திற்கேற்ற இடமா, போக்குவரத்திற்குச் சாதகமான இடமா, அங்கேயும் பேருந்து நிலையம் தேவையா என்பதுபற்றி யெல்லாம் பார்த்து மண்டலப் போக்குவரத்து அதிகாரி இசைவு

தெரிவிக்க வேண்டும். அம்மூர் பேரூராட்சிப் பகுதியில் பேருந்து நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரி மண்டலப் போக்குவரத்து அதிகாரிக்கோ, கடன்வசதி கோரி அரசினருக்கோ இதுவரை எந்த மனுக்களும் அனுப்பப்படவில்லை.

## தொழிலாளர் நல நிதித் திட்டம்

*58 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 'தொழிலாளர் நல நிதித் திட்டம்' அமைக்கப்பட்டுள்ளதா?

(இ) இதன் முக்கிய குறிக்கோள்கள் என்னென்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) இதைப்பற்றி உண்டாக்கப்பட்ட தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிச் சட்டம் தொழிலாளர் நலநிதி ஒன்றினை அமைப்பதற்கு வகை செய்கின்றது. இச்சட்டத்தின் கீழ் அமையவிருக்கும் தமிழ் நாடு தொழிலாளர் நல வாரியம் அந்நிதியின் பொறுப்பு வகிக்கும் அமைப்பாக இருக்கும். இச்சட்டத்தின் 17-வது பிரிவின்படி இவ்வாரியம் நிதியில் நிலைபெற்றுள்ள பணத்தைப்பயன்படுத்தலாம்.

**திரு. கா. வேழவேந்தன்:** தமிழக அரசு அமைத்துள்ள இந்தச் சீரிய திட்டத்தை மேன்மேலும் விரிவுபடுத்தி பணம் இருந்தும் மனம் இல்லாமல் இருக்கும் தொழில் அதிபர்களைத் தூண்டி தொழிலாளர்களுக்கான வசதிகளைப் பெருக்க உரிய திட்டம் வகுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இதற்காகவே குழு ஒன்று விரைவில் அமைக்கப்பட இருக்கிறது. அது அமைக்கப்பட்டவுடன் அதற்கான வேலைகள் தொடர்ந்து செய்யப்படும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இதற்கான சந்தாத் தொகைகள் 1973 நவம்பரில் பிடித்தம் செய்திருக்கிறார்கள். அந்தத் தொகை முழுவதும் இங்கு வந்து சேர்ந்திருக்கிறதா? மானேஜ்மென்டார் பங்கும் சேர்ந்து வந்திருக்கிறதா? இதன் பணிகள் எப்போது தொடங்கப்படும்?



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இதற்காக ஏறக்குறைய 5 லட்சம் ரூபாய் அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் பண வரவுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குழு அமைத்துக் கொண்டிருக்கிறோம். குழு அமைப்பது பற்றி முடிவு அறிவித்தவுடன் காரியங்கள் நடைபெறும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பம்பாய்க்கு அடுத்தாற்போல் தமிழ்நாட்டில் இம்மாதிரி சட்டம் நிறைவேற்றப்பட்டு ஓராண்டுக் காலம் ஆகிறது. அரசு 5 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்பதோடு முதலாளிகள் இதற்கு கொடுத்த பணம் மற்றவையெல்லாம் சேர்ந்து கைக்குக் கிடைத்த பணம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தனிக் கேள்வி போட்டால் விளக்கங்களைத் தரத் தயாராக இருக்கிறேன்.

## *Labour Legal Advisory Cells*

*59 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government have ordered the setting up of any Labour Legal Advisory Cells in this State; and

(b) if so; the details thereof.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) தொழிலாளர் பிரச்சினைகளில் நடவடிக்கை எடுத்துக் கொள்வது தொடர்பாகத் தொழிலாளர்களுக்கு இலவச ஆலோசனை கூறும் நோக்கத்துடன் தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்கள் மூன்றை சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நிறுவ அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தொழிலாளர் நீதிமன்றம் ஒன்றில், அல்லது தொழில் நடுவர் மன்றம் ஒன்றில் விசாரணை அதிகாரியாக இருந்து ஓய்வுபெற்ற நீதித்துறை அதிகாரி ஒருவரும், ஓய்வுபெற்ற தொழிலாளர் நல அதிகாரி ஒருவரும் இந்தத் தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழுக்களில் பணியாற்றுவர்.

(முற்பகல் 10.00)

**திரு. என். டென்னிஸ்:** லேபர் லா படித்தவர்களும், தொழிலாளர் நலனில் அக்கறை உள்ளவர்களும் இதில் அங்கம் வகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா?

[1974 சனவரி 21

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இதைப் பொறுத்த வரையில், ஓய்வுபெற்ற நீதிபதிகளும் ஓய்வுபெற்ற முன்னாள் தொழிலாளர் துறை அலுவலர்களும்தான் இதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் சொன்னதைப் போன்று அப்படிப் பட்டவர்களை இந்தக் குழுவில் நியமிக்கவேண்டுமென்ற எண்ணம் இதுவரையில் அரசுக்கு இல்லை.

**திரு. எம். சுரேந்திரன்:** தொழிலாளர் சட்ட ஆலோசனைக் குழு என்ற இந்தக் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருப்பார்கள்? எந்தெந்தப் பகுதிகளில் இருப்பவர்கள், என்னென்னமாதிரியான தகுதிகள் உள்ளவர்கள் அதில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இப்போது அதற்கான முறையில் நான்கு ஓய்வுபெற்ற நீதிபதிகளும், நான்கு ஓய்வுபெற்ற லேபர் ஆபீசர்களும் அதற்காகப் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவர்களிடமிருந்து ஒப்புதல் பெற்றவுடன் அவர்கள் வேலை செய்யத் தொடங்குவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இப்போது அமைக்கப்பட்டிருக்கிற இந்தக் குழுக்கள் முக்கியமாக நகரங்களில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தொழிலாளர்கள் பல்வேறுயிடங்களில் இம்மாதிரியான சட்ட ஆலோசனைகள் இலவசமாகக் கிடைக்காத காரணத்தினால் முதலாளிகளோடு போராடுவதற்கு வழியில்லாததொரு தயக்க நிலை இருக்கிறது. ஆகவே எல்லாயிடங்களிலும் தொழிலாளர்களுக்கு சட்ட ஆலோசனை வழங்குவதற்கு இலவச ஏற்பாட்டினை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தக் குழுவைப் பொறுத்தவரையில் சென்னை, மதுரை, கோவை போன்ற தொழிலாளர்கள் பெருத்த நகரங்களில் இது உடனடியாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட தொல்லைகள் தொழிலாளர்களுக்கு அதிகமாக வருமானால் மற்ற இடங்களுக்கும் விரிவாக்கப்படுவதற்கு அரசுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை.



1974 சனவரி 21]

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இந்தச் சட்ட ஆலோசனைக் குழுவானது தனிப்பட்ட தொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்குகிறதா. அல்லது தொழிற்சங்கங்களுக்கு ஆலோசனை வழங்குகிறதா? அதுபற்றி விதிகள் ஏதாவது வகுக்கப்பட்டிருக்கின்றனவா? ஆலோசனைகள் வழங்குவது, வாய்மொழி ஆலோசனைகள் மட்டும்தானா அல்லது ஸ்டேட்மெண்ட் போன்றவைகள் தயாரித்துக்கொடுக்கிற முறைகளிலும் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** இந்தக் குழுக்களைப் பொறுத்து, இது தொழிலாளர்களுக்கு ஆலோசனைகள் வழங்கும். தொழிலாளர்கள் சங்கம் தனித்தனி சட்ட ஆலோசகர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு அதிகம் தேவை இருக்காது. தனிப்பட்ட தொழிலாளர்கள் விரும்புவார்களேயானால் அவர்களுக்கு இந்தக் குழுக்கள் உதவி செய்யத் தயாராயிருக்கின்றன. தொழிற்சங்கங்களும் விரும்பினால் அவர்களுக்கும் உதவி செய்ய இந்தக் குழுக்கள் தயாராயிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். விதிமுறைகள் இதிலே இணைக்கப்பட்டிருக்கின்றன.

*Minimum wages for employment in Plantations.*

* 60 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to revise the rates of minimum wages for workers of Rubber, Tea and Coffee Plantations in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) & (இ) தோட்டத் தொழிலில் (காபி, டீ, ரப்பர்) ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் ஊதியம் நிர்ணயம் பற்றி அரசுக்கு ஆலோசனை கூற குறைந்த அளவு ஊதியங்கள் சட்டம் 5 (1) (a) பிரிவின்படி ஒரு பரிந்துரை குழுவை அமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

**திரு. என். டென்னிஸ்:** அந்தக் குழு எப்போது அறிக்கை சமர்ப்பிக்கும்? இது எப்போது நடைமுறையில் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

[1974 சனவரி 21

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** காபி, டீ, ரப்பர் போன்ற தோட்டத் தொழில்களுக்கெல்லாம் ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட குழுவின் காலம் நெடுங்காலமாகிவிட்டது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. எனவே விரைவில் இந்தக் குழு தோட்ட அதிபர்கள், தோட்டத் தொழிலாளர் பிரதிநிதிகள் ஆகியோர்களை வைத்து விரைவில் முடிவு எடுக்கும் ஏற்பாட்டினை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன .

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

குமாரபாளையத்தைச் சேர்ந்த திருமதி பாத்திமா பேகம் கற்பழிக்கப்பட்டு இறந்ததாக கூறப்படுவது குறித்தும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து

'the reported rape and consequent death of a lady, Mrs. Fathima Begum at Kumarapalayam in Salem District and the consequent unrest and mob fury prevailing in and around Kumarapalayam'

என்ற பொருள்பற்றி விவாதிக்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. வா. மை. அப்துல் ஜப்பார், திரு. எம். ஏ. லத்தீப், திரு. கே. எ. வகாப், திரு. எஸ். முகமது கோதர் முகைதீன், திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. க. உரோ. எட்மண்ட் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையை ஒத்திவைத்து விவாதிக்கக் கூடிய அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாகத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முஸ்லிம் லீக் கட்சியிலிருந்து நான்கு பேர்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில் யாராவது ஒருவர், திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் பேசுவார்கள்.



1974 சனவரி 21]

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, 12—1—1973 அன்று குமாரபாளையத்தில் நூற்பாலையில் வேலை செய்கிற பாத்திமா பீபி என்ற பெண் சில குண்டர்களால் வழிமறித்து பலாத்காரம் செய்யப்பட்டதாகவும், கற்பழிக்கப்பட்டதாகவும் பத்திரிகைச் செய்திகளை நாம் பார்த்தோம். இந்தச் செய்தியைப் பார்த்தவுடன் முஸ்லிம் லீக் சார்பாக நானும் திரு. அப்துல் ஜப்பார் அவர்களும் நேற்றுமுன்தினம் குமாரபாளையத்திற்குச் சென்று உரியவர்களை விசாரித்ததில் பலாத்காரம் செய்யப்பட்டது என்ற அளவிற்கு, கற்பழிக்கப்பட்டது என்று சொல்லப்படாவிட்டாலும் பலாத்காரம் செய்யப்பட்டது என்ற அளவிற்கு போலீஸாருக்கு ஒரு மனு, பிராது கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் இருப்பதெல்லாம், மறுநாள் அந்தக் குறிப்பிட்ட பாத்திமா பீபி என்பவர் இறந்துவிடுகிறார் என்ற தகவல் போலீஸுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பலாத்காரம் செய்யப்பட்டது என்று பிராது கொடுக்கப்பட்ட பிறகு, பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்ட ஒரு பெண் அதன் தொடர்பாக காலமாகிவிடுகிறார் என்ற தகவல் போலீஸுக்கு கிடைத்தது, போலீஸ் அந்தப் பிரேதத்தைக் கைப்பற்றி உண்மையான பலாத்காரம் நடந்ததா அல்லது அங்கிருக்கிற பல கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களும் பொதுமக்களும் பேசிக் கொள்வதைப் போல் கற்பழிக்கப்பட்டதன் காரணமாக அந்த மாது இறந்திருக்கிறாரா என்று கவனிக்க, விசாரணை செய்ய வேண்டிய ஒரு கடமை இருந்தும் போலீஸ் அந்தப் பிணத்தை புதைத்துவிடும்படி கூறிவிட்டிருக்கிறார்கள்.

பிறகு இது ஒரு பெரிய பிரச்னையாக உருவெடுத்து அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டுத்தான் இறந்தார் என்ற ஒரு அடிப்படையில் ஒரு கொந்தளிப்பான நிலைமை குமாரபாளையத்தில் இருந்து கொண்டிருக்கிறது. இதன் தொடர்பாக அங்கிருக்கிற அமைதி கெடுகிற வகையில் பல காரியங்கள் நடந்திருக்கின்றன. நான் இந்த அரசின் மீது, போலீஸின் மீது சாட்டுகிற குற்றச்சாட்டு என்னவென்றால் பலாத்காரம் செய்யப்பட்டது என்ற தகவல்தான் எங்களுக்கு வந்தது, ஆகவே நாங்கள் பிணத்தைக் கைப்பற்றவில்லை, பிணத்தைப் புதைக்க நாங்கள் அனுமதித்தோம் என்று சொல்கிறார்கள். கற்பழிக்கப்பட்டது என்று எங்களிடம்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 சனவரி 21

சொல்லப்படாத காரணத்தினால்தான் நாங்கள் பிணத்தைக் கைப்பற்றவில்லை என்று சொல்வது ஒரு சரியான நடைமுறை என்று நான் கருதவில்லை. அப்படித்தான் மக்களும் கருதுகிறார்கள். பலாத்காரம் செய்யப்பட்டது என்ற அளவிற்கு தகவல் தெரிந்திருந்தும் அந்தத் தகவல் வந்த பிறகு ஒரு சில மணி நேரத்திற்குள் அந்த மாது இறந்துவிடுகிறார் என்ற தகவல் வரும்போது இதற்கும் அதற்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கும் என்று கவனமாக, எச்சரிக்கையாக அந்தப் பிரேதத்தை எடுத்து போஸ்ட் மார்டம் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொண்டிருந்தால் பொது மக்களிடையே இந்த அமைதியின்மையும், சந்தேகமும் எழுந்திருக்கக் காரணமில்லாமல் இருந்திருக்கக் கூடும்.

ஆனால், அந்தப் பெண் ஏதோ டயோரியா காரணமாக இறந்திருக்கலாம் அல்லது காலரா காரணமாக அந்தப் பெண் இறந்திருக்கலாம் என்று சொல்லப்படுவது மக்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. என்னைப் போன்ற வக்கீல்கள் கூட அதை ஏற்றுக்கொள்வதற்குத் தயங்கக் கூடிய நிலையில்தான் இருக்கிறோம். ஆகவே இதில் ஏதோ சூது நடந்திருக்கிறது. அந்தப் பெண் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். கற்பழிக்கப்பட்டாளா இல்லையா என்பது குறித்து பரிசோதனை செய்த டாக்டர்தான் சொல்லவேண்டும். ஆனால் இதில் ஏதோ ஒரு சூது நடந்திருக்கிறது. இதற்கு உரிய முறையில் சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் என்ற காரணத்தினால் இந்த விவரங்களைப் பற்றியெல்லாம் நாம் விரிவாக விவாதிப்பதற்கு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம்.

இது சாதாரணமாக ஒரு ஊரில் நடந்த ஒரு பிரச்சனை என்பதற்காக மட்டும் இதைக் கொடுக்கவில்லை. இத்தகைய நிலைமைகளில் போலீஸ் மந்தமாக நடந்துகொள்கிற ஒரு நிலை இருந்து வருகிறது. நம் நாட்டிலுள்ள மக்களுக்குப் போதுமான பாதுகாப்பு இல்லையென்ற ஒரு நிலை உருவாகி அதனால் பொது ஜன அமைதி கெடும் நிலை தமிழகத்தில் ஏற்படுமோ என்ற காரணத்திற்காக இதுபற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.



1974 சனவரி 21] [திரு. எம். ஏ. லத்தீப்]

இதுபற்றி விவரங்களை இந்த அவையில் வைத்து விவாதிப்பதற்கு, குறைந்தபட்சம் ஒரு மணி நேர அளவிலாவது இதை எடுத்து விவாதித்தால் நம் நாட்டுக்கும், சட்டத்திற்கும், அமைதிக்கும் நன்மை ஏற்படும் என்ற வகையில் நாங்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். அத்துடன் வருங்காலத்திலே இதிலே உள்ள பிரச்சனைகளை நன்கு ஆராய்ந்து அரசு உரிய முறையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும் கடுமையான தண்டனையைக் குற்றவாளிகளுக்குக் கொடுப்பதற்கும், மேற்கொண்டு இத்தகைய வன்முறைச் செயல்களில் ஈடுபடும் வன்முறையாளர்களைத் தடுப்பதற்கும் இந்த விவாதம் நமக்கு உதவிகரமாக இருக்கும் என்ற காரணத்தினால் நான் இதைத் தங்கள் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே தாங்கள் அருள்கூர்ந்து, சம்பிரதாயமாக இல்லாமல், இதுகுறித்து விவாதிப்பதற்காக சபையை ஒத்திவைக்க அனுமதித்தால் மேற்கொண்டும் விவரங்களை நாங்கள் சொல்வதற்கு முடியும் என்று சொல்லி இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுப்பதற்காக நான் மூன்று அம்சங்களை குறிப்பிட்டு இருக்கிறேன்.

முதலாவதாக, தகாத முறையில் ஒரு பெண் கையாளப்பட்டிருக்கிறாள் என்றும், இரண்டாவதாக, அதைத் தொடர்ந்துதான் அவள் இறந்து இருக்கவேண்டுமென்றும், மூன்றாவதாக, அவள் வேலைக்குச் செல்லும் பெண், சாதாரணமாக வேலை செய்யும் பெண்களுக்குப் பாதுகாப்பு வேண்டுமென்று குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். இந்தச் சம்பவம் 12-ந் தேதி நடந்து, இரண்டு தினங்களுக்குப் பிறகு அந்தப் பெண்மணி காலமானதற்குப் பிறகும், சம்பந்தப்பட்டவர்களைப் போலீசார் கைது செய்யாததால் மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டு இருக்கிறது என்றும் அன்றைக்கே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். நாங்கள் மேற்கொண்டு விசாரிக்கிறபோது, நேற்றுக் கூட குமாரபாளையத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, திராவிடக் கழகம், சோசலிஸ்ட் கட்சி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்,

ஆளும் காங்கிரஸ், ஸ்தாபன காங்கிரஸ் ஆகிய எல்லாக் கட்சிகளையும் சார்ந்தவர்கள் இந்த விஷயத்தில் நியாயம் வழங்கப்பட வேண்டுமென்று கோரி ஒரு கண்டனப் பொதுக் கூட்டம் நடத்தியதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இன்னும் இதில் வரக்கூடிய முக்கியமான விஷயம் அந்தப் பெண்ணை பொறுத்த வரையில்—அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என்பது பெரிய விஷயம் அல்ல—ஒரு 21 வயது வந்த பெண், கல்யாணமான பெண், அதிலும் அந்தப் புருஷனுக்கு இரண்டாவது மனைவியாக வாழ்க்கைப்பட்டிருக்கிறார்கள், அப்படிப்பட்ட பெண் ஒரு வேலைக்குச் சென்று வரும் நேரத்தில், வேலைக்குப் போகும் இடத்தில் தாக்கப்பட்டிருக்கிறாள், கொலை செய்யப்பட்டிருக்கிறாள் என்று சொன்னால், அது மிகவும் பயங்கரமானதாகும்.

There must be protection to the worker on the work-spot and protection to the worker when he or she goes to work and return home.

இப்படி ஒரு பாதுகாப்பு இல்லாத முறை ஏற்படுமானால், அது யாருக்குமே இந்த ஆட்சியில் பாதுகாப்பு இல்லை என்ற கொடுமையான நிலையை ஏற்படுத்தும் என்று நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல், இந்தச் சம்பவம் நடந்ததற்குப் பிறகு பெண்கள் மத்தியில் ஒரு பலகீனம் ஏற்பட்டு இருக்கிறது. இந்தச் சம்பவம் நடந்ததற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகுதான் இம்மாதிரி நடந்து விட்டது என்று அங்கே பணியாற்றக்கூடிய ஒரு நண்பரிடத்தில் கூறி—தன்னுடைய கணவனிடத்தில் கூற வெட்கப்பட்டுக்கொண்டிருக்கிறாள்—அவர்கள் இதில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி அழைத்து வந்த பிறகு, இதைச் செய்தவர்களை அந்த பெண்ணிடத்தில் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்கச் சொல்லியிருக்கிறார்கள். காலில் விழுந்ததைப் பார்த்ததோடு மட்டுமல்லாமல், அந்த ஆட்களைப் பார்த்தவுடன், அந்தப் பெண்ணுக்கு ஒரு ஷாக் ஏற்பட்டு, அதிலிருந்து அவர்கள் ரிகவர் ஆகவில்லை என்று சொல்லப்படுகிறது. it is a gruesome thing. இப்படிப்பட்ட ஒரு சம்பவத்தை யார் நடத்தியிருந்தாலும், அதற்கு அரசு மட்டுமல்ல, யாராக இருந்தாலும், ஜனங்கள் கண்டிப்பாக விட மாட்டார்கள். இதிலே





சம்பந்தப்பட்டவர்களுடைய பெயர்களைக் கூட வைத்து இருக்கிறேன். ராஜூ, ராமசாமி, ஜகன்நாதன், வெங்கடேசன் என்ற நான்கு பேரைக் கைது செய்து இருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அதிலே வெங்கடேசன், ஜகன்நாதன் இரண்டு பேரும் குடித்து விட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விஷயத்திற்கு வாருங்கள், விளக்கம் தேவையில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தெருவில் பெரும் கலாட்டா செய்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. இவர்கள் த. பொ. சண்முகம், நமச்சிவாயம் ஆகிய இரண்டு பேர்களுடைய வீட்டில் அடைக்கலம் புகுந்து இருக்கிறார்கள். அந்த இரண்டு பேரும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. அது கூட முக்கியமான விஷயம் அல்ல, இதிலே முக்கியமான விஷயம் என்ன வென்றால், அடைக்கலம் புகுந்தவர்களை ஜனங்கள் வெளியே கொண்டு வரவேண்டுமென்று சொல்லி பிறகும் கூட வராததால், போலீசாரை வற்புறுத்தி, பிறகு போலீசார் கைது செய்து இருக்கிறார்கள். there has been inaction of the Police , இந்த மாதிரி பெரிய விஷயத்தில் அரசாங்கம் எவ்வளவு தயக்கமாக நடந்து கொண்டிருக்கிறது. ஒரு பெண் தகாத முறையில் கையாளப்பட்டு, இறந்து இருக்கிறாள், இம்மாதிரியான சமயத்தில்கூட இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால், இதைவிட ஒரு முக்கியமான விஷயம் வேறு இருக்க முடியாது.

ஆகவே, இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இந்த அரசாங்கத்தை 'சென்ஷர்' செய்கிற வகையில் இந்த விஷயம் குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று கவர்னர் அவர்களுடைய உரையின் மீது விவாதம் இருந்தாலும், இது ஒரு முக்கியமான விஷயம் என்பதால்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம். திரு. லத்தீப் அவர்கள்

சொல்லியது போல், இதைப்பற்றி விவாதிக்க ஒரு மணி நேரம், அல்லது ஒன்றரை மணி நேரம் இன்று பிற்பகலில் விவாதம் நடத்த அனுமதித்தால், இம்மாதிரியான சம்பவங்கள் எப்படி யெப்படி ஏற்படுகிறது, எந்தச் சூழ்நிலையில் ஏற்படுகிறது, இந்த மாதிரி நேரங்களில் அரசு எவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், எல்லாக் கட்சியைச் சார்ந்தவர்களும் எந்த வகையில் ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்ற முறையில் கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு வசதியாக இருக்கும் என்ற முறையில் இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அளவில் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, குறிப்பிட்ட இந்த விஷயத்திற்கு அரசியல் சாயம் பூச முன்வருவது நல்லதல்ல என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதிலும், தண்டிக்கப்படுவதிலும் இந்த அரசு பாரபட்சமாக நடந்து கொள்ளவில்லை என்பதற்குப் பல்வேறு எடுத்துக் காட்டுகள் உண்டு.

குமாரபாளையம் சம்பவத்தைப் பொறுத்தவரையில், பாத்திமா என்ற பெண் இறந்த சம்பவத்தைப் பற்றி சட்டசபையில் உள்ள முஸ்லீம் லீக் உறுப்பினர்கள் மூன்று நாட்களுக்கு முன்பு என்னைச் சந்தித்துப் பேசினார்கள். அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் கோரியதோடு, இறந்த பெண்ணின் சவத்தைத் தோண்டி எடுத்துப் பிரேத பரிசோதனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். உடனடியாக நான் ஐ. ஜி. அவர்களை அழைத்து குமாரபாளையம் சம்பவம் பற்றி விசாரித்தேன்.

12-ம் தேதி இரவு பாத்திமா என்ற பெண்ணிடத்தில் தகாத முறையில் நடந்து கொண்டதாகவும், குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு இருப்பதாகவும், மேற்கொண்டு போலீசார் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், ஐ. ஜி. அவர்கள்



அறிவித்தார்கள். அதன் பிறகு, அந்தப் பெண்ணின் பிணம் தோண்டி எடுக்கப்பட்டு, டாக்டர் பரிசோதனை நடைபெற்று இருக்கிறது. டாக்டர் அளித்த பிரேத பரிசோதனை சர்ட்டிபிகேட்டின் அடிப்படையில் மேலும் தேவைப்படுகிற நடவடிக்கைகளை போலீசார் மேற்கொள்வார்கள். மாநில குற்றப் புலனாய்வுத் துறை போலீசாரிடம் இந்த விசாரணை ஒப்படைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இது பற்றி மேலும் போலீஸ் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிற காரணத்தால், விவரங்களைப் பேசுவது நல்லதல்ல என்ற வகையில், இந்தத் தீர்மானத்தின் மீது பேசுவதற்கு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று, தலைவரவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்தத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

### 3. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்குதல்) திருத்த சட்ட முன்வடிவு

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

'That leave be granted to introduce the Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Amendment Bill, 1974".

The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

**(ஆ) 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) (திருத்த) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## 4. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் (தொடர்ச்சி)

* **திரு. ஏ. ஆர். சுப்பையா:** தலைவரவர்களே, தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

நம்முடைய அன்புக்கும், மரியாதைக்கும் உரித்தான தந்தை பெரியார் அவர்களின் மறைவுக்கு வருத்தத்தைத் தெரிவித்துக் கொண்டு, நாட்டுக்கு அவர்கள் செய்த தொண்டைக் கருத்தில் கொண்டு, அவர்களுடைய கொள்கையை வழி நடத்த வேண்டு மென்பதற்காக திட்டமிட்டு இருப்பதை நான் வரவேற்கிறேன்.

இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 19 புதிய நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு இருப்பது மிகவும் வரவேற்கக் கூடியதொன்றாகும். பெரியார் கால்வாய் மேம்பாடு செய்தல், புதிய ஏரிகள் அமைத்தல், தடைபடா நீர்ப்பாசன வசதி செய்தல் ஆகியவற்றிற்கு ரூ. 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப் பட்டிருக்கிறது. மேலும், ஏரி, குளங்களைச் சீராக்க ரூ. 15 கோடி ஒதுக்கியிருப்பதாகவும் கூறப்பட்டிருக்கிறது. இப்படித் திட்டங் களை அரசு மேற்கொண்டிருந்த போதிலும், இன்று முக்கியமாக



பஞ்சாயத்து ஒன்றிப்பு நீர்ப்பாசனத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க வேண்டுமென்பதற்காக பல திட்டங்களைத் தீட்டியிருப்பது வரவேற்கக்கூடியதே. இன்றைக்குப் புதிய குளங்களை அமைப் பதற்கும், க்ஷீண திசையில் இருக்கும் ஏரிகளைப் புதுப்பிப்பதற்கும், அதைச் சீரமைப்பதற்கும் தேவையான திட்டங்களைப் போட்டி ருப்பது வரவேற்க வேண்டியதொன்றாகும்.

மின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பது பாராட்டக் கூடியதே. அதோடு, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் வேலையை உடனடியாக மேற்கொள்ள வேண்டு மென்று அழுத்தம் திருத்தமாக மத்திய அரசைக் கேட்டுக்கொண்டி ருப்பது மகிழ்ச்சியை அளிக்கிறது. அதை மத்திய அரசு செவ்வனே செய்து தந்தால், நம்முடைய நாட்டில் மின் தட்டுப் பாடு இருக்காது. உற்பத்தியும் அதிகரிக்கும். கிராமங்களில் குடி நீர் திட்டம் கொண்டு வருவது மகிழ்ச்சியை அளிக்கிறது. கூட்டுறவுத் துறையில் ஒரு உரத்தொழிற்சாலை உருவாக்கு வதற்கும் திட்டம் தீட்டியிருப்பது வரவேற்கத்தக்கதாகும். தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற உரத்தொழிற்சாலை 1974 ஜூன் திங்களில் உர உற்பத்தியை முழு மூச்சில் தொடங்கும் என்பது மகிழ்ச்சியாக இருக்கிறது. அதுபோக, முக்கியமாக இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் 8 சர்க்கரை ஆலைகளை ஆரம்பிக்கத் திட்டம் இட்டு இருப்பது வரவேற்கத்தக்கது.

அது போக இன்றைக்கு உர விநியோகத்தில் ஒரு சிக்கலான போக்கு இருந்து கொண்டிருக்கிறது. நமக்கு உரத்தட்டுப்பாடு இருந்துகொண்டிருக்கிறது. இருக்கிற உரத்தை செவ்வனே வழங்க வேண்டுமென்பது நான் என்னுடைய வேண்டுகோள். இருக்கக்கூடிய உரத்தை மார்க்கெடிங் சொசைடி லாபத்திற்காக விநியோகிக்கக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ரூ. 930-க்கு வாங்கிய உரம் ரூ. 1,030-க்கு விற்கப்படுகிறது. கிட்டத்தட்ட ரூ. 100 ஊடே இருக்கக் கூடிய செலவு அல்லது ஆதாயம் என்ற கணக்கில் போய்க் கொண்டிருக்கிறது. இதை விவசாய மக்கள் தான் பொறுக்கவேண்டிய நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். இந்த லாபம் மார்கெடிங் சொசைடி அல்லது

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1974 சனவரி 21

மார்கெடிங் பெட்ரேஷன் சேருகிறது. உற்பத்திப் பொருள்களை செவ்வனே மார்கெட் பண்ணுவதற்காக மார்கடிங் சொசைடி உருவாக்கப்பட்டிருக்கிறது.

அது போக மார்க்கெடிங் காம்ப்ளெக்ஸ் போன்றவைகளுக்காக மார்கெடிங் சொசைடி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. விதை உற்பத்தி செய்யலாம், ரைஸ் மில் வைத்து நடத்தலாம். அதற்காக மாடர்ன் ரைஸ் மில்கள் கூட உருவாக்கப்பட்டிருந்தன, அந்த வேலைகளை யெல்லாம் அவர்கள் செய்வதற்கு முன்வராமல் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடம் மாடர்ன் ரைஸ் மில்கள் ஒப்படைக்கப் பட்டுவிட்டன. இப்படி யெல்லாம் நல்ல காரியங்களைச் செய்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு கெரோசின் டிஸ்டிரிபுயூஷன், பெர்டிலைசர் டிஸ்டிரிபுயூஷன் செய்து லாபத்தை அடைந்து, அதன் மூலம் மார்கெடிங் சொசைடி உயிருடன் இருக்க வேண்டும் என்று நினைப்பது அவ்வளவு சாலச் சிறந்தது அல்ல.

எதற்காக மார்கெடிங் சொசைடி உருவாக்கப்பட்டது என்றால், மக்கள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை செவ்வனே மார்கெட் பண்ணுவதற்கு செயல்படுவதற்காகத் தான். காமன் மார்கெட் உண்டாக்குவதற்கு மார்கெடிங் சொசைடி செயல்பட வேண்டும். சில பொருட்களை அன்னிய நாட்டிற்குக் கொண்டு போகலாம். உளுந்து, பருப்பு ஆகியவைகளை நாம் வாங்குவதற்கு வழி செய்யலாம். ஆனால் அவர்களை வைத்து உரம் விநியோகம் செய்வதற்கு வழிவகைகள் வகுப்பது சாலச்சிறந்தது அல்ல. அதை மாற்றி அமைப்பதற்கு சர்க்கார் முன்வர வேண்டும்.

உரகார்டு மூலம் விநியோகம் கூட நன்றாகச் செயல்படவில்லை. எல்லோருக்கும் கார்டுகள் கொடுக்கிறோம். அவைகள் சரியாகக் கொடுக்கப்படுகின்றதா, விவசாயிகளுக்கு பகிர்ந்து கொடுக்கப் பட்டிருக்கிறதா என்று ஃபாலோ அப் ஆக்ஷன் இல்லை. நமக்கு மத்திய சர்க்காருடைய உதவி ஒரு பக்கம் குறைவாக இருந்தாலும், உலகத்திலேயே உரத் தட்டுப்பாடு இருக்கிற சமயத்தில்,



1974 சனவரி 21] [திரு. ஏ. ஆர். சுப்பையா]

இருக்கிற உரத்தை ஒழுங்காக விநியோகம் செய்தோம், தமிழ் நாட்டில் உர விநியோகத்தில் குறைபாடு இல்லை என்ற ஒரு எண்ணத்தை உருவாக்கக்கூடிய நிலைமை ஏற்படுவதற்கு நாம் திட்டங்களை வகுக்க வேண்டும். உதாரணமாக கோவையை எடுத்துக் கொண்டால், கோவை மாவட்ட ஆட்சியாளர் ஒழுங்காகச் செய்கிறார் என்ற விளம்பரம் இருந்து கொண்டிருக்கிறது. இருக்கக்கூடிய உரம் குறைவு, அதைச் செவ்வனே விநியோகம் செய்கிறோம் என்ற எண்ணத்தை உண்டாக்குவதற்கு வழி வகுக்க வேண்டும். இல்லா விட்டால் எங்கே போனாலும் உர விநியோகம் ஒழுங்காக இல்லை என்ற குறைபாடு இருந்து கொண்டு இருக்கும்.

அது போக, நாம் அதிகமாக அழுத்தமாகச் சொல்லிக் கொண்டிருப்பது போக்குவரத்துக் கழகத்தைப்பற்றி. போக்குவரத்தை தேசிய மயமாக்கினோம், நன்றாகச் செயல்படுவதற்கு தேசியமயமாக்கிவிட்டோம். பொதுமக்கள் நன்மைக்காக அதைச் செய்யவேண்டும் என்பதற்காக 6 கார்ப்பரேஷனை உருவாக்கியிருக்கிறோம். அதோடு அரசுப் போக்குவரத்து என்று ஒன்று இருக்கிறது. கிட்டத்தட்ட 7 போக்குவரத்து ஸ்தாபனங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. இதற்கு ஒரு ஹோல்டிங் கம்பெனி கண்டிப்பாக தேவை. இல்லாவிட்டால் செயல்படுவதில் பல குறைபாடுகள் இருந்து கொண்டிருக்கும்.

நாம் ஒரு மணிக்கு ஓரிடத்திற்குப் போக வேண்டுமென்றால், 10 மணி முதல் நின்றாலும் பஸ் கிடைப்பது என்று கூட சந்தேகப் படக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இப்படி, ஸ்திரத் தன்மை இல்லாமல் போக்குவரத்து இருந்து கொண்டிருக்கிறது. 1972-ல் உருவாக்கப்பட்ட பொதுமக்களுடைய நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமாக இருந்தாலும், போக்குவரத்தில் இன்றைக்கு சர்வீஸ் ரூல்ஸ் இல்லை. சர்வீஸ் ரூல்ஸ் வகுத்தால் தான் ஒரு காரண்டி இருக்கும். அடுத்த இலாக்காக்களிலிருந்து பல பேர்கள் போக்குவரத்தில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். எனக்கு வந்திருக்கக்கூடிய ஒரு குறிப்பைப் பார்த்தால் 31 பேர்கள்

அடுத்த இலாக்காக்களிலிருந்து வந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஹைவேஸ், எலக்டிரிசிடி போர்டு, பி.டபிள்யூ.டி. லேபர் டிபார்ட்மெண்ட், பிஷரிஸ் டிபார்ட்மெண்ட் ஆகிய இலாகாக்களிலிருந்து வந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இதனால் டிபார்ட்மெண்டில் வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு பிரமோஷன் தாமதப்படுகிறது. அதனால் ஏற்படுகிற கெடுதல் என்னவென்றால், அங்கே வேலைபார்க்கக்கூடியவர்களிடையே ஃப்பரஸ்ட்ரேஷன் ஏற்படுகிறது. அந்த நிலைமையை மாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். டி.ஆர்.ஓ போன்றவர்களுக்கு பதவி உயர்வில் தாமதம் ஏற்பட்டால் இந்த போக்குவரத்து இலாகாவை ஒரு ஸ்டாப் காப்பாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். டி.ஆர்.ஓ. பிரமோஷன் வரக்கூடியவர்கள் இரண்டு, மூன்று மாதங்கள் இங்கே வந்து வேலை பார்க்கிறார்கள். மறுபடியும் டி.ஆர்.ஓ. பிரமோஷன் வந்த பிறகு அங்கே போய்விடுகிறார்கள். இதை யெல்லாம் மாற்ற வேண்டும். இந்த நிலைமையில் இதற்காக ஒரு ஹோல்டிங் கம்பெனி ஏற்படுத்தப் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பாடி பில்டிங் செய்ய வேண்டுமென்றால் டி.வி.எஸ்., எல்.ஜி.பி., ஆனைமலை டிரேடிங் கம்பெனி ஆகியவர்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்த நிலைமையை மாற்றி அமைக்க வேண்டும். பொது மக்களுக்கு நன்மைசெய்ய, வேலை வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். வேலை வாய்ப்பை மற்றவர்களிடம் கொடுத்துவிடுவது அவ்வளவு பொருத்தம் அல்ல. அதே மாதிரி தான் என்ஜின் ரீகண்டிஷனை எடுத்துக் கொண்டாலும், பிறருக்குத் தான் கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் மாற்றி அமைத்து செவ்வனே செயல்பட வேண்டும்.

ஒரு முக்கியமான செய்தியை அரசாங்கம் வெளியிட்டிருப்பதை நான் பார்த்தேன். மக்கள் தொடர்புத் துறை நல்ல செய்திகளைக் கொடுக்கிறார்கள். சமீபத்தில் கூட ஒரு பத்திரிகையில் தங்களுக்கு விளம்பரம் வேண்டும் என்பதற்காக பொது மக்கள் பீதி அடையக்கூடிய நிலைமையில், 'கொள்முதல் செய்யப்படும்' என்று பெரிய விளம்பரம் போடப்பட்டிருந்தது. ஆறு மணி நேரம் கூட தாமதிக்கவில்லை. மறு நாள் பேப்பரில் அரசுத் துறையினர் அதற்கு மறுப்புச் செய்தியை பிரசுரித்திருந்தார்கள். இந்த முறையில் அரசின் செய்தி பொதுமக்கள் தொடர்பு ஸ்தாபனம் நன்றாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இது மாதிரி பல நல்ல காரியங்களைச் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.



உதாரணமாக எடுத்துக் கொண்டால், எலக்டிரிசிடி பில்களைப் பொறுத்தவரையில் மொத்தமாகக் கொடுக்கப்பட்டாலும், அதைப் பிரித்துக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படும் என்று முதல் அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தினார்கள். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் செய்தி இலாக்கா மூலம் விளம்பரம் செய்து விட்டால், மக்களிடையே அனாவசியமான பீதி ஏற்படுவது குறையும்.

முக்கியமாக ஒரு அபிப்பிராயத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சர்க்காரிடம் தீர்வை விதிக்கப்பட்ட தரிசு நிலங்கள் நிறைய இருந்து கொண்டிருக்கின்றன. நஞ்சை நிலம் இருந்து கொண்டிருக்கிறது. புஞ்சை நிலம் இருந்து கொண்டிருக்கிறது. அவைகளை யெல்லாம் ஆங்காங்கு இருக்கக்கூடிய தனவந்தர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை யெல்லாம் ரெவின்யூ இலாக்கா மூலம் பரிசீலனை செய்து அசெஸ்டு வேஸ்டு லாண்டசை நிலம் இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பணம் படைத்தவர்கள் அந்த நிலத்தை வைத்துக் கொண்டிருப்பதை மாற்றி அமைத்து, அவற்றை நிலம் இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்து கொண்டிருக்கும்பொழுது, சர்க்கார் கைவசம் இருக்கக்கூடிய தீர்வை விதிக்கப்பட்ட நிலங்களை, நஞ்சை, புஞ்சை நிலங்களைப் பணம் படைத்தவர்கள், ஏற்கனவே நிலம் வைத்திருப்பவர்கள், கிராமத்தில் இருக்கும் முக்கியஸ்தர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் கவனம் செலுத்தி, அந்த நிலங்களை யெல்லாம் பிரித்து நிலம் இல்லாதவர்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1374 சனவரி 21

முக்கியமாக உரம் சம்பந்தமாக இருக்கக்கூடிய குறைபாடுகளை நீக்க வேண்டும். தனிப்பட்டவர்கள் நன்மைக்காக, மார்கெடிங் பெடரேஷன் நன்மைக்காக உரம் விநியோகம் செயல்படக் கூடாது. ரூ. 930 பூல் பிரைஸ் உரத்தை ரூ. 1,030-க்கு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. ரூ. 100 வித்தியாசத்தில் விநியோகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மத்தியில் இருக்கக் கூடிய செலவு இவ்வளவு ஏற்படுகிறது. இதற்குக் காரணம் என்ன என்பதைக் கவனிக்க வேண்டும். உரம் ஒழுங்காக குறைந்த விலையில் விவசாய மக்களுக்குக் கொடுப்பதற்கு உண்டான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)

* திரு. கே. எ. வ்காப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அறியாமைக் காரிருளை அழிக்க வந்த அணுக் கதிராக, மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற இந்த நாட்டிலே, நாடு மணக்க வந்த நல்ல மலர்த் தோட்டமாக, பகுத்தறிவுப் பகலவன், பார்ப்போரெல்லாம் பின்பற்றி வரச் செய்யும் தன்மையும் பண்பும் உடையவன், பால் போல் மனம் படைத்த பெரியார்—தலைவர் யாரையும் பெறாத தனிப் பெருந் தலைவர் பெரியார் அவர்கள் மறைவிற்கு முதலில் அனுதாபம் கூறி பெரியார் அவர்களுடைய மறைவிற்குப் பிறகு 1973-ம் ஆண்டினுடைய இடர்பாடுகளுக்குப் பிறகு, 1974-ம் ஆண்டின் புதிய இந்த ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி செலுத்தி நான் என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

பெரியார் அவர்களுக்கு நாம் அஞ்சலி செலுத்தி இருக்கிறோம். ஆனால் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட சரியான அஞ்சலி எது என்று கேட்டால் இந்த நாட்டிலே இன்றைக்கு நம்முடைய தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டு வருகிற இந்த ஆட்சி பெரியார் அவர்களால் அளிக்கப்பட்ட பரிசு என்பதை நன்றி உணர்ச்சியோடு குறிப்பிடும் விதத்திலே ஆளுநர் அவர்களின் உரை அமைந்திருக்கிறது. இப்படிப்பட்ட அஞ்சா நெஞ்சம் படைத்த அடலேறு



1974 சனவரி 21] [திரு. கே. எ. வகாப்]

பெரியார் அவர்களுக்கு, அப்படிப்பட்ட சரித்திர புருஷருக்கு நன்றி செலுத்துகின்ற விதத்திலே அமைந்த ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி கூறி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

ஆளுநர் அவர்களுடைய உரையிலே கூறப்பட்டுள்ளவைகளைப் பார்த்தால் பல காயங்கள் கனிந்து வருவதைச் சுட்டிக்காட்டி உள்ள திருப்தி நமக்கு ஏற்படுகிறது. அவர் சுட்டிக்காட்டி உள்ள செய்திகளில் நம்முடைய எதிர் காலத்திற்கு, எதிர்கால வாழ்விற்கு வேண்டிய நல்ல பல அம்சங்கள் அமைந்திருக்கின்றன. அவர்களுடைய இந்த உரையிலே தமிழக அரசைப் பாராட்ட வேண்டிய நேரத்திலே பாராட்டச் செய்து அதே நேரத்தில் மத்திய அரசு தவறுகளைச் செய்திருந்தால் அவற்றைத் தைரியமாகச் சுட்டிக் காட்டவும் செய்திருக்கிறார்கள். அதற்காக இந்த உரையை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவருடைய உரையில் குறிப்பிட்டிருக்கும் முக்கியமான நிகழ்ச்சிகளில் அவர்கள் கடைசியாகக் கூறி இருப்பது முதலமைச்சர்கள் மாநாட்டினைக் கூட்ட வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இதில் மத்திய அரசாங்கம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். முதலமைச்சர்களுடைய மாநாட்டினைக் கூட்டுவித்து அதிலே எடுக்கப்படுகின்ற நல்ல முடிவுகளை உடனடியாகச் செயல்படுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

அவர்கள் எல்லாக் கருத்துக்களையும் கூற முடியவில்லை, ஒரு சில கருத்துக்களை மட்டும் கூறியிருக்கிறார்கள். என்றாலும் கூட சில பொதுவான நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இன்றைய தினத்தில் நம்முடைய நாட்டிலே மழை வளம் குறைந்து விட்டது. பெய்ய வேண்டிய மழை சரியாகப் பெய்யத் தவறிவிட்டது. நாட்டின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று நாம் சொல்ல முடியாது. விவசாயம் இந்த நாட்டினுடைய உயிர்த் தொழிலாக இருக்கிறது. அப்படிப்பட்ட தொழிலுக்கு வேண்டிய பருவமழை சரியாகப் பெய்யாத காரணத்தினால் அதற்கு வேண்டிய நீர்ப்பாசன வசதிகளைச் செய்வதற்கு அரசாங்கம் ஒதுக்கியிருக்கிற தொகைகளைக் கொண்டு நல்ல பராமரிப்புச் செய்யவில்லை என்றால் இந்தத் தொழில்

நிலைத்து நிற்க முடியாது. விவசாயத்திற்காக அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முயற்சித்துக் கொண்டு வருகிற நேரத்தில் ஆண்டு தோறும் ஏற்படுகிற மின்சாரப் பற்றாக்குறை காரண மாகவும், எரி எண்ணெய் தட்டுப்பாடு காரணமாகவும் 50 சத விகித பம்பு செட்டுகள் கூட இயங்க முடியாத நிலை ஏற்படுகிறது. இந்தத் தட்டுப்பாடு இனியும் நீடித்துக் கொண்டே இருக்கும் என்பதை எண்ணுகின்றபோது சஞ்சலம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. ஆகவே இவற்றிற்கு மாற்றாக ஏதாவது சக்திகளைக் கண்டுபிடிப்பதற்கு மத்திய அரசாங்கம் மட்டுமல்லாமல் மாநில அரசாங்கமும், இது பற்றி ஆராய்ச்சி செய்கின்றவர்களுக்கு நல்ல உற்சாகத்தை அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக சென்னை மாநிலத்திலே இப்போது சில விஞ்ஞானிகள் சூரிய ஒளியிலிருந்து சக்தியைக் கண்டு பிடிப் பதற்கு சில சாதனங்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இப்படிப் பட்டவர்களுக்கு நல்ல ஆக்கமும், ஊக்கமும் அளித்து, அவர் களுக்கு உதவி செய்து அந்தப் பணிகள் சிறப்பாக நடப்பதற்கு ஊக்கமளிக்க வேண்டும். அது மட்டுமல்லாமல் இங்கே சாணத் திலிருந்து கோபர் கேஸ் தயாரிக்கலாம் என்று கூறியிருக்கிறார்கள். அதை யெல்லாம் அதிகப்படியாக நாம் எதிர்பார்க்க முடியாது. சிறு சிறு காரியங்களுக்கு, சிறு சிறு உபயோகங்களுக்கு அல்லது சமையலுக்கு இது உபயோகப்படுகிற விதத்திலே இதைக் கண்டு பிடிப்பவர்களுக்கு நல்ல ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குக் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் விவசாயி களின் எதிர்காலம் மிக இருண்டதாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்ல வேண்டியதவசியமாகிறது. விவசாயத்திற்கு நீர் கொடுக்கவில்லை, மின்சாரம் கொடுக்கவில்லை. ஆனால் இவ்வளவு இருந்தும்கூட விவசாயி இந்த நாட்டை உபரி நாடாக ஆக்கி வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய உழைப்புத் தான் இதற்குக் காரணம். இவ்வளவு சிரமங்கள் இவர்களுக்கு இருந்தாலும் கூட இன்றையதினம் அவர்கள் பாடுபட்டு மற்ற மாநிலங்களுக்கு நெல், அரிசி, ஆகியவற்றைக் கொடுக்கக் கூடிய



நிலையிலே இந்த மாநிலத்தை ஆக்கி வைத்திருக்கிறார்கள். இந்த விவசாயிகள் படுகிற கஷ்டத்தை இந்த நேரத்திலே எடுத்துச் சொல்லித்தான் ஆக வேண்டும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்று சொல்லி நாம் பாட்டுக்களை பாடி வைத்திருப்பது உண்மை. என்றாலும் அவர்களுக்கு நாம் இன்னும் ஆக்க பூர்வமாக பல உதவிகளைச் செய்வதற்கு முன் வர வேண்டுமென்று கூறிக் கொள் கிறேன்.

விவசாயிகளின் தொல்லைகளைப் பற்றிப் பேசுகிறபோது இன்றைக்கு அவர்களுக்கு உரம் கிடைப்பதில் உள்ள சிரமங்களைப் பற்றிக் குறிப்பிட்டாக வேண்டும். யூரியா மூட்டை 55 ரூபாய் என்று அரசாங்கம் விலை நிர்ணயம் செய்திருந்தாலும் கள்ள மார்க் கெட்டில் ரூபாய் 120-க்கு விற்கிறது. உரம் பற்றாக்குறையாக இருப்பதால் விவசாயி மிக்க சிரமப்படுகிற நிலை இருக்கிறது. ஒரு மூட்டை 120 முதல் 140 வரையில் விற்கிறது. இந்த நிலை எப்படி ஏற்படுகிறது என்பதைப் பார்க்கும்போது நம்முடைய தமிழக அரசு மட்டும் இதற்குப் பொறுப்பு ஏற்க முடியாது என்பது எனக்குத் தெரியும். நமக்கு வேண்டிய உரம் இங்கே கிடைக் கிறதா என்றால் இல்லை.

நமக்கு வேண்டிய உரம் சில நேரங்களில் வெளிநாடுகளிலிருந்து வரவேண்டிய நிலை இருக்கிறது. வெளிநாடுகளிலிருந்து உரத்தை நாம் வரவழைத்துக் கொள்ள முடியாது. வெளிநாடுகளில் கிடைக்கக் கூடிய உரத்தை மத்திய அரசாங்கம் நமக்குத் தருவ தில்லை. சில நேரங்களில் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் சென்ற மாதத்திலே கூட நம்முடைய மாநிலத்திற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து வந்து கொண்டிருந்த ஒரு உரக் கப்பலானது நடுக்கடலிலேயே ஆணையிடப்பட்டு கல்கத்தாவிற்குத் திருப்பப்பட்டு, உத்திரப் பிரதேசத்திற்கு அது அனுப்பப்பட வேண்டும். அங்கு தேர்தல் வருகிறது, அதனால் அங்கே அவர்களுக்கு அது கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலைமையிலே மத்திய அரசாங்கம் தலையிட்டதைப் பார்க்கிறோம்.

[திரு. கே. எ. வகாப்] [1974 சனவரி 21

உரத்தைப் பொறுத்த அளவில் நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி நாமே நேரடியாக, நேரடியாக என்று சொல்கிறபோது சுயாட்சி என்று சொல்கிற அந்தக் கோரிக்கை தானே என்று எதிர்க்கட்சிகள் நினைக்கக் கூடும். நமக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளைக் கேட்பதற்குக் கூட உரிமை இல்லாத நிலை இருக்க வேண்டுமா? அதனால்தான் சுயாட்சிக் கோரிக்கை கிளப்பப்படுகிறது. வெளிநாடுகளான ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து உரம் வாங்கிக் கொள்கிற உரிமை நமக்கு இருக்க வேண்டும். இதனால் இந்திய நாட்டின் ஒருமைப்பாடிற்குக் குந்தகம் ஏற்பட்டுவிடாது.

மத்திய அரசாங்கம் பாதுகாப்புத் தளவாடங்களைப் பெறுவதற்கு வேண்டுமானால் அனுமதி தர வேண்டாம். உரம் போன்ற அத்தியாவசிய பண்டங்களைப் பெறுவதற்கு வேண்டிய அதிகாரத்தைப் பெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இதற்கான நடவடிக்கைகளை எடுக்கின்ற நேரத்தில் மாற்றுக் கட்சிக்காரர்கள் அதிகாரத்தையெல்லாம் மாநில அரசிற்குக் கொடுப்பதா என்று கேட்பார்கள். உரம் போதுமானதாக இல்லை. நமக்கு வேண்டிய உரம் கிடைப்பதில் சிரமங்கள் இருக்கின்றன. உரவிலை ஏறிக் கொண்டே போகின்றது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இப்படியே நிலைமை நீடித்துக் கொண்டிருந்தால் நாம் கனவு கண்டு வருகிற அந்தப் பசுமைப் புரட்சி பாதிக்கப்படாதா? இதை அவர்கள் நினைக்கிறார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்..

ஆகவே இப்படிப்பட்ட அடிப்படையான கொள்கைகளை வைத்து எல்லாக் கட்சிகளும் ஒன்று சேர்ந்து மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். நெய்வேலியில் அதிக மின்சார உற்பத்தியோடு, இன்னும் அதிகமான உரம் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1974 சனவரி 21] [திரு. கே. எ. வகாப்]

அடுத்து, ஆளுநர் உரையில் தொழில் வளர்ச்சி பற்றி மிகச் சிறப்பாகக் கூறியிருக்கிறார்கள். தமிழக அரசு செய்துள்ளவற்றைப் பாராட்டியதோடு மத்திய அரசு செய்திருக்கிற காரியங்களை எடுத்துக் காட்டி இப்படியெல்லாம் நடந்திருக்கக் கூடாது என்று சொல்லி அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். 1,500 கோடி ரூபாய் 1973-74-க்கு தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டு இருந்தாலும் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டிருப்பது மிக மிகக் குறைவு. நம்முடைய தொழில் வளர்ச்சியைப் பாதிக்கிற அளவிற்கு மத்திய அரசாங்கம் நடந்து கொண்டிருக்கிறது. நிச்சயமாக இவற்றையெல்லாம் கேட்பதற்குத்தான் தனி உரிமை பெற்றாக வேண்டும். இந்த எண்ணம் இந்த நாட்டு மக்களிடத்திலே வளர்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இந்த நேரத்திலே எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

தொழில் வளர்ச்சியைப் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்திலே நம்முடைய தொழில் அமைச்சர் அவர்களைப் பற்றி நாம் குறிப்பிட்டாக வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்திலேயே உள்ள தொழில் அமைச்சர்களில் மிகத் திறமையாகச் செயல்படுபவர் நம்முடைய தொழில் அமைச்சரவர்கள். நம்முடைய தொழில் அமைச்சரவர்கள் மிகச் சிறிய சாதனங்களைக் கொண்டு மிகப் பெரிய சாதனைகளைச் செய்து வருகிறார்கள். ஒரு பெரிய சர்க்கஸ் கம்பெனி பெரிய கூடாரத்தைப் போட்டுக் கொண்டு செய்து வருகிற வேலைகளையெல்லாம் ஒரு கழைக்கூத்தாடி சாதாரணக் கயிற்றில் செய்து காட்டுவதைப் போல பெரிய சாதனைகளைச் செய்து காட்டி வருகிறார்.

இந்தத் தொழில் ஸ்தாபனங்களின் பொருளாதார வசதியைத் தாங்கிக் கொள்ள வங்கிகள் இப்போது முன்வருவதில்லை. நடுத்தரத் தொழில் செய்பவர்களுக்கும் உதவ வங்கிகள் முன் வருவதில்லை. அதனால் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சிக்குப் போபாயம் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் கட்டடம் கட்டுவதற்கு, நிலம் வாங்குவதற்கு அல்லது வேண்டிய இயந்திரங்களை வாங்குவதற்கு வேண்டிய பணம் வேண்டுமென்றால் அதை அவர்கள் வங்கிகளிடமிருந்து பெறுவதற்கு ரிசர்வ் பாங்கி கட்டுப்பாடுகளை விதிக்கிறது. இந்த விதமான கட்டுப்பாடுகளின் காரணத்தால் தொழில்

[திரு. கே. எ. வகாப்] [1974 சனவரி 21

ஸ்தாபனங்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. தொழில் வளர்ச்சியில் ஒரு பெரிய மந்த நிலை ஏற்படுகிற ஒரு பெரிய அபாயம் உருவாகி வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட அபாயத்தை நீக்குவதற்கு, மேலும் வங்கிகள் கொடுக்கிற அந்தக் கடன் வசதிகளை லைப் இன்ஷ்யூரன்ஸ் கொடுக்கிற கடன்களை நடுத்தர தொழில் நிறுவனங்கள் பெறுவதற்கும், மற்றும் "சிப்காட்" "சிட்கோ" போன்ற நிறுவனங்கள் இவர்களுக்கு உதவி செய்வதற்கும் அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அரசாங்கப் பணத்திலிருந்து அதிகமான உதவிகளை இவர்களுக்குச் செய்ய வேண்டும்.

தொழில் வளர்ச்சியைப் பற்றிப் பேசுகிற நேரத்தில் குறிப்பாக என்னுடைய தொகுதியைச் சேர்ந்த இராணிப்பேட்டையில் நம்முடைய மாண்புமிகு டாக்டர் கலைஞர் அனுமதித்து, நம்முடைய தொழில் அமைச்சர் அனுமதித்து, இன்றையதினம் ஏறத்தாழ 75 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் துவங்கி, 10 ஆண்டுகளாக காடாக இருந்த இடத்தை இன்றைய தினம் ஒரு பெரிய தொழில் வளமிக்க நகரமாக்கியதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலும் என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது மட்டுமல்ல; பலவிதமான பெரிய தொழில்கள், அதிலும் குறிப்பாக உரம் தயாரிக்கும் தொழில்களை இங்கே ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆறுவது நிதி ஆணைக் குழுவின் அறிக்கையிலே நாம் வருத்தப்பட வேண்டிய பல கருத்துக்களை அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கவில்லை. மதுவிலக்கை செயல்படுத்துவதற்கு நிதி உதவி அளிக்கப்படவில்லை. ஆனால் இன்றையதினம் பூரண மதுவிலக்கை அமல் செய்ய வேண்டுமென்கிறார்கள். தமிழக அரசும் நிதி உதவி இல்லாத நிலையிலும் பூரண மதுவிலக்கை ஏற்று நடத்தத் தயாராக இருக்கிறது. டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த முறையில் அறிவிப்பையும் கொடுத்திருக்கிறார்கள். மாபெரும் நஷ்டத்தை ஏற்றுக் கொண்டு மதுவிலக்கை அமுல் செய்து கொண்டு வருகிறது இந்த அரசு.



1974 சனவரி 21] [திரு. கே. எ். வகாப்]

நாங்கள் நிச்சயமாக அதை அமல் செய்யப் போகிறோம். மதுவிலக்கை அமல் செய்யப்போகிறோம் என்று சொல்கிற அந்த நேரத்தில் அதனால் ஏற்படுகிற நிதி இழப்புக்கு ஈடாகப் பணத்தைத் தாருங்கள் என்று கேட்டால், வடக்கே உள்ளவர்கள் மறுக்கிறார்கள் என்பது ஆளுநருக்கு மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள இதயம் படைத்த மக்கள் அனைவருமே வருந்தக்கூடிய சூழ்நிலைதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல காரியத்திற்கு 40, 50 கோடி ரூபாயைக் கொடுக்க அவர்கள் மறுப்பது, இந்த நல்ல அரசாங்கத்தின் பேரில் எப்படியாவது சில சிக்கல்களை, குழப்பங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான்.

முஸ்லிம் லீக் கட்சியின் சார்பில் நான் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களே, நீங்கள் எடுத்திருக்கிற முடிவு நல்ல முடிவு. கள்ளுக்கடைகள் போய்விட்டன, சாராயக் கடைகளும் அடுத்தப்படி போகப்போகின்றன. தயவு செய்து பிராந்திக் கடைகளையும் போக்கடித்துவிட்டீர்கள் என்றால் 76-இல் உங்களுக்கு நல்ல பரிசைக் கொடுக்க நாட்டு மக்கள் தயாராய் இருக்கிறார்கள் என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வதோடு என் உரையை நிறைவு செய்துகொள்கிறேன்.

* திரு. மா. வே. நாராயணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் தலைவர்களுக்கு எல்லாம் தலைவராக விளங்கியவரும், சமுதாயப் புரட்சியை நிகழ்த்தியவருமான தந்தை பெரியார் அவர்களுக்கு புகழ் அஞ்சலி செலுத்தித் துவங்கும் நமது ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தம் உரையில் நம்முடைய தமிழக அரசு நாட்டு மக்களின் நன்மைக்காகத் தீட்டியுள்ள நல்லபல திட்டங்கள் பலவற்றைத் தெளிவான முறையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஆளுநர் அவர்கள் தம் உரையில் கோடிட்டுக் காட்டியுள்ள நல்லபல திட்டங்கள் எல்லாவற்றையுமே நாம் எல்லோருமே ஏகமனதாகப் பாராட்டித்தான் தீரவேண்டும். அந்த அளவிற்கு இன்றைய தினம் தமிழக அரசு அற்புதமான திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றிக் கொண்டு வருகிறது. எதிர்காலத்தில்

[திரு. மா. வே. நாராயணசாமி] [1974 சனவரி 21

குறிப்பாக ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டிய பல்வேறு பணிகளைப்பற்றி நமது ஆளுநர் அவர்கள் தமது உரையில் தெளிவாகக் கூறினார்கள். குறிப்பாக மின்சாரத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு தூத்துக்குடி அனல் மின் திட்டத்தில் கவனம் செலுத்தியாக வேண்டும் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தமட்டில் 6,500 தொழிற்சாலைக்கும், 6.5 லட்சம் பம்பு செட்டுகளுக்கும் இன்றையதினம் மிகப் பெரிய அளவிற்கு மின்சக்தி தேவைப்படுகிறது. அந்த மின்சக்தியை அதிகப்படுத்த அனல் மின் திட்டங்கள் தூத்துக்குடியிலும், மேட்டூரிலும் துவங்கப்பட இருக்கக்கூடிய மகிழ்ச்சிகரமான செய்தியினை ஆளுநர் அவர்கள் தம் உரையில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

அதேநேரத்தில் என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய எண்ணூர் அனல் மின் திட்டத்தை இன்னும் அதிகமான அளவிற்கு—அதன் விஸ்தரிப்புப் பணியை மேற்கொள்ள என்ன என்ன காரியங்களைச் செய்யவேண்டுமோ அவற்றையெல்லாம் கூட உடனே மேற்கொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நெய்வேலியில் 2-வது சுரங்கம் நிச்சயமாக வெட்டப்பட வேண்டும். அதன் மூலமாக ஆயிரம் மெகா வாட் மின் சக்தி உற்பத்தி நமக்கு கிடைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அதை இப்போதே செய்தால்தான் 6 வது திட்டத்திலாவது தமிழகத்தின் உபயோகத்திற்கு அது கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி மாமன்றம் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அது மிக மிகத் தேவையான திட்டம் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்பாக்கம் அணுமின் நிலையம் மத்திய அரசின் நேரடிப் பார்வையில் இருக்கக் கூடியது. அது ஏழு ஆண்டுகள் தள்ளிப்போடப்பட்டது நாம் எல்லாம் வேதனைப்படக்கூடிய ஒன்று. 1970-1971-ம் ஆண்டிலேயே பணி துவங்கும் என்பது 1977-1978-ம் ஆண்டு என்ற அளவில் தள்ளிப்போடப்பட்டுவிட்டது. மேலும் கல்பாக்கம் செங்கற்பட்டு மாவட்டத்தில் இருக்கிறது. அது மத்திய அரசின் நேரடிப் பொறுப்பில் இருந்தாலும் கூட அந்த அணுமின் நிலையத்தைப் பார்க்கும்போது தமிழகத்தில்



1974 சனவரி 21] [திரு. மா. வே. நாராயணசாமி]

இருக்கக்கூடிய ஒரு தொழிலைப்போலக் காணப்படவில்லை. அந்த அளவிற்கு அங்கேயுள்ள குறைபாடுகளைப்பற்றி, அங்குள்ள தொழிலாளர்கள் எடுத்துச் சொல்கிறார்கள். எப்படியும் மேலும் ஒரு அணுமின் நிலையம் தூத்துக்குடியில் துவங்கியாக வேண்டும். என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். இதுபோன்ற திட்டமிட்ட பணிகளின் மூலம் மின் சக்தியை உற்பத்தி செய்து நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதுதான் உள்ளபடியே வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

அடுத்தது, குடிநீர்த் திட்டங்கள்—மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சி மன்றங்கள், கிராமங்கள் ஆகிய எல்லாப் பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கியாக வேண்டுமென்று இந்த அரசு குடிநீர் வாரியம் ஒன்றையே அமைத்திருப்பதை இந்த நாடு அறியும். பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கக்கூட, இதற்கு முன்னால் இருந்த அரசு நாட்டு மக்களின் நலனை கருதி முன்வராத நேரத்தில், இந்த அரசு குடிநீர் வாரியம் ஒன்றை அமைத்து மக்களுக்கு ஆங்காங்கே சிறப்பாகக் குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருவதை எல்லோரும் பாராட்டியாக வேண்டும். மத்திய அரசின் அனுமதிக்கு இதுபற்றி பல திட்டங்களை அளித்திருக்கிறது என்றாலும் எப்படியும் எல்லாக் கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கியாக வேண்டுமென்ற மனப்போக்கு நம்மிடம் இருந்தாக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் 74 லட்சம் டன் உற்பத்தியைப் பெற முடியும் என்ற நிலைமை இருந்தாலும் உரம், பூச்சிக்கொல்லி மருந்து தட்டுப்பாடின் காரணமாகப் பயிர் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சூழ்நிலையை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்றாலும் அதிலும் நாம் தொடர்ந்து வெற்றி கண்டாக வேண்டும். இதற்கு தூத்துக்குடியில் கூட்டுறவுத் துறையில் உரத்தொழிற்சாலை அமைந்து, உற்பத்தி தொடங்கக்கூடிய நிலை இருக்கிறது என்பது நம்பிக்கை ஊட்டக் கூடியதாக இருக்கிறது.

நமது தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் நமது வசதிகளை அதிகமாகப் பெருக்கிக் கொள்ள நமது அரசு மிகத் தீவிரமாக இருக்கிறது. குறிப்பாக மாண்புமிகு

திரு. மாதவன் அவர்கள் பொறுப்பில் உள்ள இந்தத்துறை மிக ஆக்க பூர்வமான பணிகளை எங்கெல்லாம் சிறப்பாக, பரவலாக தொழிற் சாலைகளை அமைக்க முடியுமோ, அங்கெல்லாம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது பாராட்டுவதற்குரியதாகும். அந்த வரிசையில்தான் வடாற்காடு மாவட்டம் ராணிப்பேட்டையில் சிப்காட் மூலமாக பல்வேறு தொழில்களை நமது அரசு துவக்கி யுள்ளது. இதை எல்லாம் ஆளுநர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக் கிறார்கள். என்றாலும், மத்திய அரசு தொழில்களுக்காக ஒதுக்கி யுள்ள 1,500 கோடியில் 1973-74-ம் ஆண்டிற்கு தமிழகத்திற்காக 40 கோடி மட்டும் ஒதுக்கியிருப்பது வேதனைக்குரியதாகும். ஆக, மத்திய அரசு தமிழகத்திலே நிரம்பத் தொழில்களை துவக்கு வதற்கு முதலீடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையினை நானும் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். புதிதாகத் தொழில் களைத் துவங்கும்போது, பெரிய அளவிலே மூலதனத்தைப் போட்டு தொழில்களைத் துவங்கும்போது, அதற்கேற்ற அளவிலே தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவில்லை என்றால் பலன் இல்லை. வேலை வாய்ப்பு பெரும் அளவிலே அளிக்கப்படுகிற எண்ணத்திலே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய எண்ணத்தை மனதிலே கொண்டுதான் தொழில்கள் துவக்கப்பட வேண்டும். 'Highly labour oriented industries' அதுதான் இன்றைக்குத் தேவை. மணலி பகுதியிலே மெட்ராஸ் பெர்டிலைசர்ஸ், மெட்ராஸ் ரிஃபைனரீஸ் இவைகளெல்லாம் ரூ. 60 கோடி, ரூ. 70 கோடி மூலதனத்திலே மத்திய சர்க்காருடைய நேரடிப் பொறுப்பிலே துவக்கப் பட்டாலும் பலன் இருந்ததா? அந்த வட்டாரத்திலே உள்ள மக்கள் மிக ஆவலாக எதிர்பார்த்தார்கள். ரூ. 3 கோடி, ரூ. 4 கோடி மூலதனம் போட்டு தனியார் தொழில்கள் ஆரம்பிக்கும் போது, 2,000 பேர் பணியாற்றும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஆனால், ரூ. 60 கோடி, ரூ. 70 கோடி மூலதனத்தில், மத்திய அரசின் நேரடிப் பொறுப்பிலே உள்ள இத் தொழிற்சாலைகளில் 400 பேர், 500 பேர் என்கிற அளவிலேதான் பணியாற்றுகிற நிலையை இன்றையதினம் நாம் காண்கிறோம். ஆகவே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கக்கூடிய அளவிலே, லேபர் ஓரியண்டட் இண்டஸ்ட்ரீஸ் என்பதாக அமைய வேண்டுமென்பதிலே மத்திய அரசு மிகத் தீவிரமான கவனம் செலுத்தியாக வேண்டும். இவ்விஷயத்தில்,





தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் தமிழக அரசு மிகத் தெளிவான கருத்து கொண்டிருப்பது நாம் அறிந்த ஒன்றாகும். ஆகவே, வேலை வாய்ப்பை பெருக்கக் கூடிய அளவிலே புதிய தொழில்கள் துவக்கப்பட்டாக வேண்டுமென் பதனை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக, மத்திய அரசு நேரடியாக 9 பெரிய வேலைத் திட்டங் களை மேற்கொள்ள வேண்டுமென்று ஆளுநர் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்கள். அது மிகமிக வரவேற்கக்கூடிய ஒன்று. அதிலும் நெய்வேலி இரண்டாவது சுரங்க வெட்டு மிக முக்கியமானது.

சென்னைப் புறநகர் வளர்ச்சி—மெட்ராஸ் மெட்ரோபாலிட்டன் ஏரியா என்பதாக அமைக்கப்படுவது வரவேற்கக் கூடிய ஒன்று. அதையொட்டி போக்குவரத்து வசதிகளை அதிகப்படுத்தியாக வேண்டும். அதிலே சுரங்க ரயிலை அமைக்க வேண்டுமென்ற திட்டம் மிக மிக முக்கியமான ஒன்றாகும். ஆக, சென்னை மாநக ரத்திலே 20 மைல் சுற்றளவுள்ள மெட்ராஸ் மெட்ரோபாலிட்டன் ஏரியாவைப் பொறுத்து, நமது அரசு மிகத் தீவிர கவனம் செலுத்தி வருவதை நான் அறிவேன். இந்தத் திட்டத்தை அமு லாக்குவதற்கு மிகப் பெரிய அளவிற்குப் பணம் தேவைப்படுகிறது. அதை மத்திய அரசுதான் செய்தாகவேண்டும். அதுபோன்று சிறப்பு அம்சத் திட்டத்திற்கு மத்திய அரசு உதவி செய்ய வேண்டு மென்று கோருகிறேன். காரணம், சென்னை மாநகரம், டெல்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய மாநகரங்களோடு ஒப்பிடக் கூடிய அளவிலே இருக்கிறது. இதற்கு வளர்ச்சித் திட்டங்கள் தேவை. அதை அரசு செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள் கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்களுக்கு சம்பளம்—ஊதியம். "National wage price policy" வேண்டும். உள்ளபடியே, தனியார் துறையிலேகூட இன்றையதினம் அகில இந்திய ரீதியில் உள்ள கம்பெனிகளில் ஒரே சீரான நிலை—யூனிபார்மிடி இன் சாலரி கண்டிஷன்ஸ்—இருக்கின்றது என்று சொல்கிறார்கள். அதை ஏற்கனவே ஒப்புக் கொண்டு தொழிற்சங்கங்களும், நிர்வாகத்தினரும் ஒப்பந்தங்கள் செய்து கொள்கிற நேரத்திலே, ஏற்றத்தாழ்வுகளைப் போக்குகிற நிலையில் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலே ஒரே சீரான சம்பளம் இருக்க வேண்டு மென்ற நிலையிலே, மத்திய அரசு கூட, ஊதியம் குறைவான

அளவிலே இருந்தாலும்கூட, ஒரே சீரான முறையிலே தேசிய அளவிலே ஒரே கொள்கையை வைக்க வேண்டுமென்று கூறுகிறது. அம்முறையில் ஆளுநர் அவர்கள் தேசிய அளவில் ஒரே சீரான கொள்கையை வகுத்தாக வேண்டும் என்று சுட்டிக் காட்டியுள்ளார்கள். அது மிக மிகத் தேவை என்பதை இந்த நேரத்திலே பல கிணறுகள் வெட்டப்பட்டு தண்ணீர் வராமல் இருப்பதும் மக்களுக்காக நல்ல திட்டங்களைத் தீட்டி, அவர்களுக்கு நல்வாழ்வு அளித்து வருகிறது. ஆகவே, மக்கள் இவ்வரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி ஆளுநர் உரையை ஆதரித்து அமைகிறேன்.

* **திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, ஆளுநர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஒட்டி, முதலில் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள் மரணம் அடைந்ததை ஒட்டி, அவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு செய்த பெரும் காரியங்களுக்காக, நான் அவருக்கு நன்றி கூறி அஞ்சலி செலுத்திக் கொண்டு இந்த உரையை ஆரம்பிக்கிறேன்.

கவர்னர் பெருமான் உரையிலே கூறி இருக்கின்றதைப் போல, நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழவேண்டுமென்றால், அத்தியாவசியப் பிரச்சினையான உணவு, உடை, வீடு இவைகளில் நிறைவு காண வேண்டுமென்று நாம் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம். உணவைப் பொறுத்த மட்டில் இந்த உரையிலே கூறி இருக்கிற நீர் வசதி, மின் வசதி இவைகளை ஒன்றாக மொபிலைஸ் செய்து, இவைகளின் ரிசோர்சுகள் எப்படி இருக்க வேண்டுமென்பதுபற்றி யூனியன் பிளானிங் கமிஷனிலிருந்து அதனுடைய டெப்டிட்டி சேர்மன் அவர்கள் வந்து தமிழ்நாடு, மகாராஷ்டிரா, கேரளா, கோவா, கர்நாடகம் போன்ற மாநிலங்களைச் சார்ந்த பிரதிநிதிகள் ஒன்றாகக் கூடி ஒரு திட்டம் வகுத்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. இந்த வெஸ்டர்ன் காட்ஸ் டெவலப்மெண்ட் ஸ்கீமை எடுத்துக் கொண்டு, தமிழ்நாட்டிற்கு ஏற்படக் கூடிய நன்மை இந்த தண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய அளவிலே எப்படி இருக்க வேண்டுமென்ற பேச்சு வார்த்தைகள் பிரதிநிதிகள் மூலமாக நடந்திருக்கிறது. ஆனால், அந்தப் பேச்சு வார்த்தைகள் எந்த விதத்தில் நடந்தது? அதனுடைய விளைவு எப்படி இருக்கும்? அதிலும் குறிப்பாக தமிழ்நாடுதான் அதிலே அதிகப்படியான



பெனிபிட் அடைய முடியும் என்ற காரணத்தினாலும் பல ஆறுகள் தமிழ்நாட்டில் உற்பத்தியாகி அண்டை மாநிலத்தில் முடிகின்றபடியாலும், அதை மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அவருடைய உரையிலே, பதில் அளிக்கையில் இதைப் பற்றி இச் சபைக்குக் கூறவேண்டிய அவசியத்தை நான் இங்கே வலியுறுத்துகிறேன்.

இயற்கை சில மாநிலங்களுக்கு அனுகூலமாகவும் சில மாநிலங்களுக்கு பிரதிகூலமாகவும் இருக்கிற காரணத்தால் ஒரு ராஜ்யத்தில் மழை அதிகமாகப் பெய்து வெள்ளம் வந்து பயிர்கள் அழிகின்றன. மற்ற மாநிலங்களிலே மழை இல்லாத காரணத்தினால் வறட்சி ஏற்பட்டு பஞ்சம் ஏற்படுகிற நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. நீர்வசதி, மின்சக்தி இவை ஒன்று சேர்ந்த திட்டம் இருக்குமானால், எந்த அளவு நன்மை கிடைக்கும் என்பதைப் பார்த்தால், இந்த வெஸ்டர்ன் காட்ஸ் டெவலப்மென்ட் ஸ்கீம் பெரும் துணையாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகையினால் அதைப்பற்றி கனம் முதலமைச்சர் அவர்கள் கூற வேண்டுமென்று நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

ஏதோ நாம் இந்த ஸ்கீம்களை எல்லாம் எடுத்துக் கொண்டு, இதிலே பேச்சு வார்த்தைகள் நடந்துவிட்ட காரணத்தினால் பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. ஆகையால் மத்திய அரசு செய்து விடும் என்று பக்தியான நம்பிக்கையோடு நாம் இருப்போமானால், அது எந்த அளவுக்குத் தமிழ் நாட்டைப் பாதிக்கும் என்பதை அரசு உணர்ந்து தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடத்தி ஒற்றுமையான மனப்பான்மையோடு ஒருங்கிணைந்த மனப்பான்மையோடு பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கு இந்த அரசு முன்வரவேண்டும்.

பசுமைப் புரட்சியின் காரணமாக நமக்கு தானியங்கள் உபரியாக இருக்கிறது என்று கூறப்பட்டிருக்கின்றது. பசுமைப் புரட்சியின் காரணமாக தானியங்கள் உபரியாக இருந்தாலும் கூட, கவர்னர் பெருமான் உரையிலே அதை அடுத்துக் கூறி இருக்கிறார்கள், 1973-74-ம் ஆண்டிலே ஏறத்தாழ 74 லட்சம் டன் உற்பத்தி செய்யக் கூடிய நிலைமை இருக்கும் என்றும். ஆனால், இதிலே ஒரு பயங்கரம் ஏற்பட்டிருக்கிறது. என்னவென்றால்

(Pesticides) பெஸ்டிஸைசர்ஸ் பூச்சிகொல்லி மருந்து கிடைக்காத நிலைமை ஏற்படுமானால் அந்த உற்பத்திக்கு ஆபத்து நேரிடும். நாம் எதிர்பார்க்கின்ற உற்பத்தி கிடைக்காது. நாம் ஒருபுறம் பசுமைப் புரட்சி செய்திருந்தாலும் இன்றைக்கு விலைவாசிகள் உயர்ந்து கொண்டே போவதை மறுக்க இயலாது. பணத்தினுடைய மதிப்பு என்னவாயிருந்த போதிலும் வாங்கக் கூடிய சக்தியற்ற நிலைமையிலே மக்கள் இருக்கிறார்கள் என்பதை எல்லோரும் உணர்கிறோம். வாங்கக்கூடிய சக்தி இப்படி குறைந்திருக்கிற காரணத்தினாலும் வாங்கக்கூடிய சக்திக்குக் கஷ்டம் ஏற்பட்டிருக்கிற காரணத்தினாலும் புரட்சியின் நிலையிலே, எனக்கு முன்பாகப் பேசிய அங்கத்தினர்கள் கூடக் குறிப்பிட்டதைப் போல, வேளாண்மைத் துறையிலே ஈடுபட்டிருக்கிற விவசாயிகளுக்கு எல்லாவித பொருள்களும் கிடைத்திட வழிவகை செய்திட வேண்டும். உரத்தின் விலையும் பூச்சிகொல்லி மருந்துகளின் விலையும் எப்படி ஏறிக் கொண்டே போகிறது.

(முற்பகல் 11.00)

நூறு மடங்கு ஏறியிருப்பதாகக்கூட மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி ஏறியதற்குக் காரணம் என்ன? மத்திய அரசாங்கம் அத்தியாவசியமான பொருட்களைக் கொடுக்காவிட்டால் விஷம்போல் ஏறிக் கொண்டிருக்கின்ற விலையை இந்த அரசாங்கம் ஒரு நாளும் கட்டுப்படுத்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பரட்டூர் வெளியிலே உள்ள பிரச்சினைகளைத் தீர்த்தால்தான் தானியங்கள் சந்தைக்கு வருகின்ற போது விலைவாசிகள் குறைகின்ற நிலை ஏற்படும்.

விவசாயிகள் கஷ்டப்பட்டு எத்தனையோ இடைஞ்சல்களுக்கு இடையிலேயும் உற்பத்திசெய்கின்ற தானியங்கள் பதுக்கல்காரர் களிடத்திலே போய்ச் சேருகிறது. பதுக்கல்காரர்கள் எத்தனை பேர்களைப் பிடித்து இருக்கிறோம், எத்தனை பேர்களுக்குத் தண்டனை விதித்து இருக்கிறோம் என்பதையெல்லாம் இந்தச் சபையிலே கூறப்பட்டது. அப்படிக் கூறப்பட்டிருந்தாலுங்கூட அந்தப் பதுக்கல்காரர்களை ஒழிப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்து இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். பதுக்கல்காரர்களை வைத்துக்கொண்டு விவசாயிகளுக்கு உற்பத்திக்குத் தகுந்த உபகாரம் செய்வதற்கு இயலாத நிலைமையை



வைத்துக்கொண்டு இருந்தால் விஷம்போல் ஏறுகின்ற விலை இன்னும் ஏறிக்கொண்டே போகின்ற நிலைமை ஏற்பட்டு நாடு எந்த நிலைமைக்குப் போகுமோ என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை.

கோயம்புத்தூருக்கு சிறுவாணித் தண்ணீர் கொடுக்க கேரள சம்மதத்தைத் தெரிவித்து இருக்கிறது என்று முதலமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார்கள். இதற்கு கேரளா சில கடும் நிபந்தனைகளை ஏற்படுத்தி இருந்தது. அந்த நிபந்தனைகள் எல்லாம் இல்லாமல் எவ்வாறு அந்தத் தண்ணீரைத் தருவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்குள்ளே முதலமைச்சர்களுக்குள்ளே என்ன உடன்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதையும் எந்தவகையிலே கோயம்புத்தூருக்கு சிறுவாணித் தண்ணீர் எந்த முறையிலே கொடுக்க முன்வந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த அவைக்கு தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற பணம் மத்திய அரசு 40 கோடி ரூபாய் தருகிறார்கள். தொழில் வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட 40 கோடி ரூபாய்தான்—தமிழ்நாட்டிலே தொழில் வளர்ச்சி வளரவேண்டுமென்பதுதான் எல்லோருடைய அவா. அதிலே வேற்றுமை இருக்காது—தொழில் வளர்ச்சி தமிழ்நாட்டில் ஏற்படட்டும். அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்திலே மத்திய அரசு central sector -ல் 19,200 கோடி ரூபாய் ஒதுக்குவதாக இருக்கிறது என்று கவர்னர் பெருமான் அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது.

அந்தப் பணம் ஒதுக்கப்படும்போழுது, ஒன்று நான் இந்த அரசிற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்த ஐந்தாண்டிலே ஏறத்தாழ 57 ஆயிரம் குடும்பங்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இங்கே வரப் போகிறார்கள். தொடர்ந்து அவர்கள் வருவதாக இருந்தால் 1964 ஆம் ஆண்டிலே மத்திய அரசுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி என்ன செய்யவேண்டுமென்று இருக்கிறது, அது இந்த அரசுக்கும் தெரியும் என்று நம்புகிறேன். 57 ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வந்தால் ஏற்றுக்கொள்வதாக இல்லை என்று ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. பத்தாயிரம் குடும்பங்கள் வந்தால்கூட மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 57 ஆயிரம் குடும்பங்கள்

என்றால் ஒரு குடும்பத்திற்கு ஐந்துபேர்கள் என்று வைத்துக் கொண்டால்கூட—தமிழ்நாட்டிலே உள்ளவர்களிலே பலர் ஏற்கனவே அகதிகளாக இருக்கிறோம்—இலங்கையிலிருந்து வருகிறவர்கள் அவர்களும் தமிழர்கள்தான். அவர்களை நாம் வரவேற்பதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது. 57 ஆயிரம் குடும்பங்கள் வருகிறார்கள் என்றால் எத்தனை நபர்களை ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதைப் பார்க்கவேண்டும். ஆகவே, தொழில் வளர்ச்சிக்கு என்று 19,200 கோடி ரூபாய் மத்திய அரசு Central sector -க்கு ஒதுக்குகின்ற போது இத்தொகையில் இலங்கையிலிருந்து வருகின்ற தமிழர்களுக்கு என்று தனிப்பட்ட முறையிலே, ஸ்ரீலங்காவில் இருந்து வந்தவர்களுக்கு என்று தனியாக—அங்கேயிருந்து இங்கே வருகின்ற தமிழர்களுக்கு பல தொழில்கள் தெரிந்திருக்கலாம், அவர்கள் ரப்பர் தோட்டங்களிலே வேலை செய்து இருந்திருப்பார்கள். தேயிலைத் தோட்டங்களிலே வேலை செய்து இருந்திருப்பார்கள், வியாபாரம் செய்திருப்பார்கள். அவர்களுக்குத் தெரிந்த தொழில்களில் அமர்த்தக்கூடிய முறையிலே தமிழ்நாட்டிலே அவர்களுக்கு ரப்பர் தோட்டம் வைப்பதற்கு இடம் இருக்கிறது, தேயிலைத் தோட்டம் ஏற்படுத்துவதற்கும் வசதி இருக்கிறது. ஆகவே, அந்தந்தத் தொழில்களுக்குத் தகுந்தபடி தொழில்கள் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக என்றே தனியாக செலவை ஏற்றுக் கொள்வதற்காக தனியாகப் பணத்தை ஒதுக்க வேண்டும், அவர்களைக் கவனிக்கின்ற முழுப் பொறுப்பு மத்திய அரசுக்கு இருக்கிற காரணத்தினாலே தனிப்பட்ட முறையிலே அவர்களுக்கு தொழிலுக்கும் வாழ்வுக்கும் என்று பணத்தை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு நம்முடைய அரசு எடுத்துக் கூற வேண்டும். அவர்களுக்கும் அந்தப் பணத்தைத் தனியாகக் கொடுப்பதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது என்று நினைக்கிறேன். அவர்களுக்கு வங்கிகளின் மூலமாகச் சிறுதொகை கடன் வாங்கிக் கொடுத்து சிறு சிறு தொழில்களை ஏற்படுத்துவதற்குப் பதிலாக அவர்களுக்கு என்று தனியாகத் தொழிற்சாலைகளையும் தொழில்களையும் ஏற்படுத்த மத்திய அரசிடம் வாதாடி அதிலே ஒரு பெரும்பங்கை இந்த அரசு பெற்று அவர்களுக்கு வாழ்வை செய்யவேண்டுமென்று என்னுடைய ஆலோசனையைத் தெரிவிக்கிறேன்.



நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதைப்பற்றி பிளானிங் கமிஷனிலே விவாதம் நடந்திருக்கிறது. அவர்கள் ஒப்புக்கொண்டு இவ்வாண்டு அதை எடுத்துக் கொள்வதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்களா என்று சரியான தகவல் இல்லை. முதலமைச்சர்கள் மாநாட்டிலே என்ன என்ன முடிவுகள் எடுத்திருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

என்னுடைய ஸ்ரீரங்கம் தொகுதியிலே இருக்கக்கூடிய மணச்சநல்லூரிலே ஏறத்தாழ 22 ரைஸ் மில்கள் மூடப்பட்டிருக்கின்ற நிலை இருக்கின்றன. அவைகளுக்குத் தஞ்சாவூரிலே நெல் கொண்டு வருவதற்கு பெர்மிட் கொடுக்கப்படவில்லை. அதனுடைய காரணம் என்ன என்று தெரியவில்லை. கனம் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் நான் இது பற்றிச் சொன்னேன். அவர்களும் கவனிப்பதாகச் சொல்லி வந்து இன்னும் தீர்வு காணவில்லை. அவர்களும் முதலமைச்சரிடத்தில் எடுத்துக் கூறுவதாகச் சொன்னார்கள். எல்லா ஜில்லாக்களுக்கும் பெர்மிட் கொடுக்கும் பொழுது தஞ்சாவூர் ஜில்லாவிலேயிருந்து நெல் கொண்டு வருவதற்கு மணச்சநல்லூருக்கு ஏன் பெர்மிட் கொடுக்கவில்லை என்று தெரியவில்லை. ஒரு வேளை அந்த ரைஸ் மில்களை மூடிவிடட்டுமென்ற எண்ணம் இருக்கிறதா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு உடனடியாகப் பெர்மிட் கொடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் ஆங்காங்கு ஏற்படுத்துவதற்கும் பல கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், புதிய கிணறுகளை வெட்டுவதற்கும் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. கவர்னர் பெருமான் உரையானாலும் சரி, பட்ஜெட் விவாதமானாலும் சரி நாம் தொடர்ந்து கூறிக் கொண்டே வருகிறோம். அரசு கிணறுகள் வெட்டுகின்ற திட்டத்திலும் நேரத்திலே சொல்லி, இந்த அரசு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட ஆழப்படுத்துகின்ற கிணறுகளிலே தண்ணீர் வற்றுவதற்கு என்ன காரணம் மழைகாலத்திலே எப்படித் தண்ணீர் வற்றிப் போகிறது என்று ஆராயப்பட வேண்டும்.

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1974 சனவரி 21

ஆயிரக்கணக்கான ரூபாய்கள் செலவிட்டு வெட்டிய பிறகு தண்ணீர் இல்லை, இடம் சரியில்லை, வெட்டக்கூடாத இடத்திலே வெட்டிவிட்டோம் என்று அதற்குப் பிறகு மன்னிப்புக் கேட்பதை விட இவற்றை யெல்லாம் முன்னமேயே ஆராய வேண்டுமென்றும் அதன் பிறகு இந்த வேலையில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடியிலே உற்பத்தி செய்யப்படுகிற உரத்தைப் பங்கீடு செய்வதற்கு இயலாத நிலைமை இருக்கின்றது என்று நினைக்கிறேன். மத்திய அரசாங்கத் திட்டத்திலே எடுத்துக் கூறும்பொழுது எந்த அளவிற்கும் இந்த நிலைமை சொல்லப்பட்டிருக்கிறது, இதிலே தீர்வு காணுவதற்கு அவர்கள் என்ன ஒப்புக் கொண்டிருக்கிருர்கள், மாற்றுவழிகள் என்ன என்ன சொல்லியிருக்கிருர்கள். இதை தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எப்படிச் சமாளிக்கப் போகிருேம்? (Charity begins at home) என்பதைக் கூறி நம்முடைய தமிழ்நாட்டிலே உள்ள மக்களுக்கு நாம் விநியோகம் செய்ததற்குப் பிறகு மற்ற மாநிலங்களுக்குக் கொடுப்பதைப்பற்றி முடிவு காண வேண்டும்.

அடுத்து ஹேண்ட்லூம் வீவர்சைப்பற்றி இங்கே கூறப்பட்டிருக்கிறது. ஆனுல் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் பெருங் கஷ்டங்களுக்கெல்லாம் ஆளாகி அவர்களுக்கு கோவாப்பரேடிவ் மூலமாக 'யார்ன்' விநியோகிக்க ஏற்பாடு செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது. கவர்னர் பெருமான் அப்படி விநியோகிப்பதையும் சரியாக விநியோகப்படுத்தவில்லை. இதை குற்றச் சாட்டாகக் கூறுவதாக நினைக்க வேண்டாம். அந்தத் தவறு எங்கே நடக்கிறது என்று அரசு ஆராய்ந்து அதற்கு ஆவன செய்து, அவர்களுக்கு வேண்டிய சமயத்தில் நூல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து, அதனுல் அவர்களது பிழைப்பிற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்தமைக்காக நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

***திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் சீர்கேடுகளைப் போக்கவும், தமிழ்ச் சமுதாயத்தை முன்னேற்றவும், மூட நம்பிக்கைகளை ஒழிக்கவும் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட தன்னிகரில்லாத் தலைவனுக்கு, தந்தை பெரியார் அவர்களின் மறைவிற்கு



1974 சனவரி 21] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

இரங்கல் செலுத்தியதற்காகப் பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக ஆளுநர் அவர்களுக்கு எனது நன்றியை மனமாரத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையில் ஏராளமான திட்டங்களையும், இந்த அரசாங்கத்தின் கொள்கைகளையும் தெளிவாகச் சொல்லி யிருக்கிருர். நான் என்னுடைய உரையில் முதலாவதாக எடுத்துக் கொள்ள விரும்புவது, குடிநீர்த் திட்டத்தைப்பற்றி. நகரப் பகுதிக்கும், கிராமப் பகுதிகளுக்கும் குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி இந்த நாட்டு மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க வழி வகை செய்யப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. நாட்டு மக்களின் நா வரண்டால் நாடே வரண்டு விடும், அவர்களின் எதிர்கால வாழ்வு இருண்டுவிடும், பொருளாதாரம் சுருங்கிவிடும் என்பது நம்முடைய சமூக பொருளாதாரக் கொள்கையாகும். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகும், அதற்கு முன்பும் ஏறத்தாழ 72,000 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. அந்தக் கிணறுகள் எல்லாம் வெட்டி முடிக்கப்பட்டு விட்டனவா, அவைகளில் தண்ணீர் வந்து விட்டதா என்ருல் இல்லை என்பதற்கு ஏராளமான சான்றுகளை எடுத்துக் காட்ட முடியும். என்னுடைய தொகுதியில் கோனப்ப நாயகன் குளம், வெள்ளியணை கிராமம், குளத்தூர் பாகநத்தம் பஞ்சாயத்துப் பகுதி ஆகிய இடங்களில் 1969 ஆம் ஆண்டில் கிணறுகளைத் தோண்டினுர்கள். ஆனுல் இதுவரையிலும் தோண்டப்பட்ட அந்தக் கிணறுகள் அப்படியே இருக்கின்றனவே தவிர இன்னும் முடிக்கப்படவில்லை, அவைகளில் தண்ணீர் வரவில்லை. இப்படிப்பட்ட நிலைமை தமிழகத்தில் ஏராளமான இடங்களில் இருக்கின்றன என்பதை முதல்வரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். விரைவில் நடவடிக்கை எடுத்து அவைகளெல்லாம் முடிக்கப்பட வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தவரையில் பேரூராட்சிகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதை நான் உள்ளபடியே வரவேற்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குளித்தலை பேரூராட்சியில் சுமார் 11 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு குடிநீர்த் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றி

1973-ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வரவர்கள் திறந்து வைத்திருக்கிறார்கள். அவசரம் அவசரமாகத் திறந்து வைத்தார்களே தவிர அதில் தண்ணீர் வருகிறதா என்றால் அங்கே தண்ணீர் வரவில்லை திட்டம் இன்னும் முற்றுப்பெறவில்லை. வீதிகளுக்கு பைப் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. இப்படி முற்றுப் பெறாத திட்டத்தை முதலமைச்சரவர்கள் திறந்து வைத்திருப்பது உள்ளபடியே வருந்தத் தக்கதாகும்.

இதேபோல் என்னுடைய தொகுதியில் சிவாயம் கிராமத்தில் இரும்பூதிபட்டில் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் ஒரு மேல்நிலை நீர்த் தேக்கத்தைத் திறந்து வைத்திருக்கிறார்கள். மேல்நிலைத் தொட்டியில் குடத்திலே தூக்கிச் சென்று தண்ணீரை ஊற்றித் திறந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் மறுநாள் அங்கேயுள்ள பெண்கள் பைப்பைத் திறந்தால் தண்ணீர் வரவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலை தமிழகம் முழுவதும் ஏராளமாக இருக்கிறது. ஆகவே, தரப்பட்டிருக்கும் புள்ளிவிவரத்தில் எவ்வளவு தவறு இருக்கிறது என்பதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன். இதுபோன்ற நிலைமைகளை மாற்ற தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் தலையாய பிரச்னையாக இருக்கின்ற ஒரு பிரச்னை நீர்ப்பாசன பிரச்னையாகும். நீர்ப்பாசனத்திற்காக நாம் எவ்வளவு ஒதுக்கினாலும் தகும். இதேபோல் நம்முடைய நீர்ப்பாசனத் துறையில் இருக்கும் ஏரிகள் அத்தனையையும் சீர்படுத்த தமிழக அரசு திட்டம் தீட்டி இருக்கிறது என்று கவர்னர் உரையில் கூறப்பட்டிருக்கிறது. 27,000 ஏரி குளங்கள் பழங்காலம் முதற் கொண்டு இதுவரையில் சீர்திருத்தப்படாமல் இருக்கின்றவைகளுக்காக ஐந்தாண்டுத் திட்டத்தில் சீர்படுத்த வரிவகை செய்யப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த 27,000 ஏரி குளங்கள் யாருடைய பொறுப்பிலே இருக்கின்றன என்றால் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் இருக்கின்றன. நான் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், பொதுப்பணித் துறையில் அந்த 27,000 ஏரி குளங்களையும் ஒப்படையுங்கள். அப்பொழுதுதான் நம்முடைய பணி பூர்த்தியடையும். செய்யும் காரியம் நேர்மையாகவும், விரைவாகவும் நடைபெறும்





என்று முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு விரைவில் இவைகளை ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பொதுப் பணித் துறைக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய மாநிலம் உணவுத் துறையிலே நல்ல முன்னேற்றம் அடைந்திருக்கிறது, 1973-74-இல் ஏறத்தாழ 74 இலட்சம் டன் உணவு உற்பத்தி பெருக நாம் திட்டம் தீட்டி இப்பொழுது உரப் பற்றாக்குறை காரணமாக சற்றுக் குறையக் கூடிய சூழ்நிலை இருக்கிறது என்று இந்த அறிக்கையில் பார்க்கிறோம். அதற்குத் தரப்படும் காரணம் பூச்சிக் கொல்லி மருந்து, உரம் நமக்குக் கிடைக்கவில்லை, ஆகவே, நம்முடைய புள்ளி விவரத்தை எட்ட முடியவில்லை என்று சொல்லப்படுகிறது.

உர வினியோகத்தில் ஏராளமான தவறுகளும், சேமிப்பு கிடங்களில் உரம் காணாமற்போகும் சூழ்நிலையும் தமிழகத்தில் நிரம்ப இருக்கிறது. மதுரை மாவட்டத்தில் உரத்தைப் பொறுத்த வரையில் ஒரு பயங்கரமான மோசடி நடந்துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மதுரை மாவட்டத்தின் மொத்த விற்பனை கூட்டுறவு சப்ளை மற்றும் விற்பனை கிடங்கிலிருந்து சுமார் 1,16,000 ரூபாய் மதிப்புள்ள உர மூட்டைகள் காணப்படவில்லை என்றும் சுமார் 106 டன் யூரியா மோசடி செய்யப்பட்டிருக்கிறது என்றும் கூட்டுறவு இலாக்கா அதிகாரிகள் போலீசாருக்குப் புகார் செய்துள்ளதாகவும், எழுத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அறிகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட மோசடிகள் தமிழ்நாடு முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தென்னார்க்காடு மாவட்டத்தில் அரசாங்கக் கிடங்குகளில் சேமிக்கப்பட்டிருந்த நெல்மூட்டைகள் காணப்படவில்லை என்றும், திருச்சி மாவட்டத்தில் சப் ஜெயில் காம்பவுண்ட் பகுதியில் இருந்த சிமெண்ட் மூட்டைகள் காணப்படவில்லை என்றும், கோதுமை மூட்டைகள் காணப்படவில்லை என்றும் அடிக்கடி செய்திகளைக் கேட்கிறோம். இப்படி எங்கே பார்த்தாலும் அரசின் சொத்துக்கள் காணப்படவில்லை என்ற நிலைமைகள் இருக்கின்றனவே தவிர யார் எடுத்தார்கள், யார் திருடினார்கள் என்று கண்டு பிடித்து

தண்டிக்கப்பட்டதாக எந்தப் பட்டியலும் இல்லை என்பதை வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதுபோன்ற நிலைமைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஏராளமான கோடி ரூபாய்களை இந்த அரசு ஒதுக்குவதாகவும், அவர்கள் வாழ்வில், அவர்கள் பொருளாதாரத்தில் ஏற்றத்தை உண்டாக்குவதற்காக பல கோடி ரூபாய்களை ஒதுக்கி வருவதாகவும் பட்ஜெட்டிலும் பார்க்கிறோம், கவர்னர் உரையிலும் பார்க்கிறோம், மானியக் கோரிக்கைகளிலும் கேட்கிறோம். ஆனால் இந்த நிலைமைகள் ஏட்டளவில் இருக்கிறனவே தவிர நாட்டளவில் செயல் படவில்லை. குடிசை வாழ்வோருக்கு நம்முடைய அரசாங்கம் ஒரு ஆண்டுக்கு 3,000 முதல் 4,000 வீடுகள் வரையில் கட்டித் தருவதை உள்ளபடியே வரவேற்கிறேன். அதேநேரத்தில் இப்படிப்பட்ட பணிகள் எங்கே நடைபெறுகின்றன என்றால் நகர்ப் பகுதிகளில் நடைபெறு கின்றன.

கிராமங்களில் ஏழை, தாழ்த்தப்பட்ட மக்கள், பின் தங்கிய மக்கள் குந்தக் குடிசையில்லாமல் அவதிப்படும் காட்சிகளைப் பார்க்கிறோம். இதுவரையில் சுமார் ஒரு லட்சம் வீட்டு மனைகளைக் கையகப்படுத்தி, அந்த வீட்டுமனைகளில் வீடுகள் கட்டப்படாமல் காலியாக இருப்பதைப் பார்க்கும்பொழுது வேதனைக் கண்ணீர் வடிக்கும் சூழ்நிலையில் இருக்கிறோம். ஆகவே, இதை இந்த அரசாங்கம் கவனத்திற் கொண்டு நகர்ப்புறத்தில் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் காலி மனைகளில் வீடுகளைக் கட்டும் திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தாழ்த்தப் பட்டோர் நல மேம்பாட்டுக் கழகம் ஒன்றை துவக்கி இருப்பதாக அறிக்கை கொடுத்து ஓராண்டு ஆகியும் அது எந்த நிலையில் இருக்கின்றது என்பதற்கு இது வரையில் எந்த வித பதிலும் இல்லை. ஆகவே இருக்கின்ற குறைகளை எவ்வளவு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொண்டு நீக்க முடியுமோ, இவற்றை





நீக்குவதற்கு ஏன் காலதாமதமாகிறது என்பதைக் கூர்ந்து கவனித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைகள் வழங்கவும், இன்னும் சுடுகாட்டுப் பாதைகள் அமைக்கவும், கிணறு வெட்டவும் மானியம் தருகிறோம் என்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் உள்ள நிலைமையை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். புலியூர் கிராமத்தில் புரவிபாளையம் என்ற ஊர் அரிசன மக்கள் மூதாதையர் காலத்திலிருந்து சுடுகாட்டிற்குப் போகின்ற பாதையையும், சுடுகாட்டையும், புறம்போக்கு நிலத்தில் அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால் அந்த இடத்தை இப்போது செட்டிநாடு சிமெண்ட் கம்பெனிக்கு திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் சொந்தமாக்கித் தர முயற்சி மேற்கொண்டிருக்கிறார் என்பதை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து இதில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பி, வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் அநுபவித்து வந்த உரிமையை அவர்களிடமிருந்து பறிக்காமல் அவர்களிடமே புறம்போக்கு நிலத்தை ஒப்படைக்கத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக அடுத்த 5 ஆண்டுக் காலத்தில் இலங்கையிலிருந்து வரப்போகிற குடும்பங்களைப் பற்றி கவர்னர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இலங்கையிலிருந்து வரப்போகிற 57 ஆயிரம் குடும்பங்களைக் காப்பாற்ற நம்முடைய நிலை என்ன என்பதைப் பற்றி நாம் முதலிலே பார்க்க வேண்டும். ஏற்கெனவே வந்தவர்களுக்கு நாம் தகுந்த முறையிலே வசதிகள் செய்து தரவில்லை. அவர்களுக்கு வீட்டு மனை வழங்கப்படவில்லை. தொழில் செய்வதற்கு கடன் தரப்படவில்லை. வீட்டு மனை உள்ளவர்களுக்கு வீடு கட்டுவதற்குத் தகுந்த உதவி செய்யப்பட வில்லை. தகுதி உள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட வில்லை. பொருளாதாரத் துறையில் பின்தங்கியவர்களுக்கு வாழ வழி காட்டப்படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம்மை நம்பி, நம்முடைய மூதாதையர்களுடைய நாட்டை நம்பி வந்துள்ள ஏராளமான இலங்கை அகதிகள் குடும்பங் குடும்பமாகத் தெருத் தெருவாக அலைகின்ற காட்சியை நாம் பார்க்கிறோம். அவர்

களுக்கெல்லாம் வாழ வழி செய்து கொடுக்க வேண்டும். அதில் ஏன் கால தாமதமாகிறது என்பதை மிகுந்த அக்கறையோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்டவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு அளிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு இந்த அரசு கைகொடுக்காவிட்டாலும், காலை வாரி விடாமல் பார்த்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். அதேபோல இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு மாணவர்கள் மீது எந்த அளவிற்கு அக்கறை காட்டப்படுகிறது? ஆங்காங்கு மாணவர்கள் தாக்கப்படுகிறார்கள். இதற்கு ஆதாரம் பல இருக்கின்றன என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய மாவட்டமாகிய திருச்சியிலே கிளைவ் விடுதிச் சம்பவத்தை எடுத்துக் கொண்டால் அங்கே நடந்த நிகழ்ச்சிகள் எந்த நாட்டு வரலாற்றிலேயும் இல்லாத ஒன்றாகும். நான் அந்த கிளைவ் ஹாஸ்டலுக்குச் சென்று பார்த்த நேரத்தில் அறைகளுக்குள்ளே ரத்தம் பீறிட்டுக் கிடந்ததைப் பார்த்தேன். சாப்பிடும் இடத்திலே ரத்தம் சொட்டப்பட்டிருந்ததைப் பார்த்தேன். இந்தச் சம்பவங்களுக்குப் போலீஸ் காரணம் என்றும், இன்னும் பல பெரிய அதிகாரிகள் காரணம் என்றும், நீதிபதி அவர்கள் தெளிவாகச் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள்.

மாணவர்கள் என் ரத்தத்தின் ரத்தம், சதையின் சதை என்று சொல்கிற முதலமைச்சர் அவர்களும், கல்வி அமைச்சர் அவர்களும் திருச்சிக்குப் பலமுறை சென்றிருக்கிறார்கள். ஒரு முறையாவது மாணவர்கள் விடுதியை பார்த்திருக்கிறீர்களா? மாணவர்களுக்கு அனுதாபம் தெரிவித்திருக்கிறீர்களா? கிளைவ் ஹாஸ்டல் சம்பவங்களுக்கு யார் காரணம் என்பது நம்முடைய முதல் அமைச்சருக்கும் தெரியும், திருச்சி நகரத்து மக்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். ஆகவே மூல காரணம் யார் என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் உள்ளபடியே சொல்கிறேன், வேதனைப்பட வேண்டும். இது போன்ற நிகழ்ச்சி இனிமேல் நிகழாவண்ணம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.





நம்முடைய கவர்னர் அவர்களுடைய உரையிலே காட்டப்பட்டுள்ள அத்தனையும் மக்கள் நல்வாழ்விற்காக என்றாலும், பாசன வசதியாக இருந்தாலும், குடிதண்ணீர் வசதியாக இருந்தாலும், தொழில் வளர்ச்சியைப் பெருக்குவதாக இருந்தாலும் எல்லாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அமையக் கூடியவையே தவிர நடப்பு ஆண்டிற்குப் போடப்படுகிற திட்டங்கள் என்பதற்கு எந்த வித ஆதாரமும் இல்லை, சுட்டிக்காட்டப்படவும் இல்லை என்பதை நான் மெத்த வருத்தத்தோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்றைக்கு முதல் நாள் இந்த மாமன்றத்திலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் இது என்ன இரயில்வே கைடா, எல்லாவற்றையும் புள்ளி விவரங்களுடன் எடுத்து வைப்பதற்கு என்றார்கள். இரயில்வே கைட் 3 மாதத்திற்கு ஒருமுறை, ஆறு மாதத்திற்கு ஒரு முறைதான் புதுப்பித்துப் போடப்படுகிறது. கவர்னர் அவர்களின் உரை ஒரு ஆண்டுக்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுகிற ஒரு இரயில்வே கைட் போன்றதாகும். இந்த உரை ஐந்தாண்டுத் திட்டத்திற்கு போடப்பட்ட ஒரு கைட் போன்றதாகும். நடப்பு ஆண்டிற்கு எந்தவிதமான திட்டமோ, அதை நிறைவேற்றுவதற்கு எந்தவிதமான ஆதாரமோ இல்லை என்பதை மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

**திரு. வை. பாலசுந்தரம்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மரியாதைக்குரிய ஆளுநர் அவர்களால் தரப்பட்டிருக்கிற இந்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

பக்தர்கள் தாங்கள் வழிபடும் கடவுளுக்கு பிள்ளையார் சுழி போட்டுக் கொள்வது போல இன்றையதினம் கவர்னர் பெருமான் அவர்கள் தன்மான இனத்தின் தலைவர் தமிழகத்தின் தந்தையாக விளங்கிய பெரியார் அவர்களுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நினைவுபடுத்துகிற வகையில் பெரியார் அவர்களை இந்தத் தமிழகம் பார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும் மறக்காது என்பதைத் தமிழகத்திற்குக் காட்டுகிற வகையில்

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 சனவரி 21

பெரியாருக்கு நாம் செய்கின்ற கடமை உணர்வையும், கட்டுப்பாட்டையும் காட்டுகின்ற வகையிலே இதிலே கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

பெரியாரைப்பற்றி உள்ளபடியே பலர் சொந்தம் கொண்டாடினாலும் இன்றைக்கு இந்த ஆட்சி பெரியாருக்கு அர்ப்பணம் என்பதை மறைந்த நம்முடைய அண்ணா அவர்கள் சொல்லியது இன்னும் நமக்குப் பசுமையான நினைவாக உறுதிப்படுத்திக்கொண்டிருப்பதை எண்ணிப் பார்க்கின்றபோது இன்றைக்குப் பெரியார் மறைந்து விட்டாலும், மாண்டு மண்ணாகி, மண்ணோடு மக்கிக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் அவர் இறந்தாலும் அவர் எந்தக் கொள்கைகளுக்காகப்பாடுபட்டாரோ; இந்த நாட்டின் சமுதாயத்தை அடிப்படையிலேயே கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிற ஜாதி வெறியை, இந்த நாட்டைக் கொடுமைப்படுத்திக் கொண்டிருக்கிற இதிகாசங்கள், சாஸ்திர சம்பிரதாயங்கள் ஆகியவைகளைக் குழி தோண்டிப் புதைத்தாக வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருந்த பெரியார் இன்றைக்கு அந்த ஜாதி சம்பிரதாயங்களைப் பற்றிக் குறைவான எண்ணத்தோடு மறைந்திருக்கலாம்.

நான் நினைக்கிறேன். பெரியார் அவர்கள் மறைந்து விட்ட-பின்னால் ஜாதி வெறியர்களுக்கு ஓரளவுக்கு குளிர் விட்டு இருக்குமோ என்ற எண்ணம் ஏற்படுகிறது. மறு பக்கத்தில் எனக்கு ஒரு ஆறுதல் ஏற்பட்டிருக்கிறது. காரணம் பெரியார் அவர்களின் வழியைப் பின்பற்றி, அண்ணா அவர்களின் வழியைப் பின்பற்றிச் செல்ல இருக்கிற நம்முடைய கலைஞர் அவர்கள் இந்த ஜாதி வெறியை ஒழிப்பதற்குக் கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் உள்ளபடியே எனக்கு ஒரு நிம்மதி ஏற்படுகிறது.

(திரு. என். இராஜாங்கம் தலைமை)

அதைத் தொடந்து இன்றையதினம் கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகிற நேரத்தில் ஒரு சிலர் கண்டனம் தெரிவித்துப் பேசினார்கள். ஒருவர் பேசுகின்றபோது இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள், இவர்கள்தான் இதற்கு முன்பு கவர்னர் அவர்களே வேண்டாமென்று சொல்லிக் கொண்டு இருந்தவர்கள் ஆயிற்றே, இன்றைக்கு கவர்னர் அவர்களுக்கு ஏன் நன்றி தெரிவிக்கிறார்கள் என்று சொன்னார்கள். உண்மையிலேயே



1974 சனவரி 21] [திரு. வை. பாலசுந்தரம்]

வருத்தப்பட வேண்டிய ஒரு கட்டமாகும். திராவிட முன்னேற்றக் கழகம் இந்த நாட்டினுடைய அரசியல் அமைப்பை எந்தெந்தக் கோணத்திலிருந்து மாற்ற வேண்டும், அரசியல் அமைப்பை மாற்றுவதன் மூலம் இந்த நாட்டினுடைய எதிர்கால வாழ்விற்கு வழி இருக்கிறது என்ற தத்துவத்தை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறது. எந்த எந்த மாற்றங்களின் மூலம் இந்த நாட்டு வாழ்வில் வளம் காண முடியுமென்ற கருத்தினை திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்துச் சொல்லி வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் அரசியல் அமைப்பை மாற்ற வேண்டும் என்று கூறி வந்திருக்கிறோம்.

ஒரு மாநிலத்திற்கு கவர்னர் அவசியம் இல்லை என்ற கருத்தை அந்த அடிப்படையிலேதான் கூறி வந்தோம். அரசியல் அமைப்பிற்கு மாற்றம் சொல்லுகிற நிலையில்தான் மாநிலத்திற்கு கவர்னர் தேவையில்லை என்பதைக் கூறி வந்தோம் என்பது என்னுடைய கருத்தாகும். அந்த அடிப்படையில் ஒருமைப்பாட்டு உணர்வோடு, தேசியத்திற்கு காட்ட வேண்டிய உணர்வோடு, இன்றையதினம் நாங்கள் கவர்னர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். கவர்னர் அவர்களுக்கு நன்றி சொல்லாத சூழ்நிலை உருவாகுமானால் அவர்கள் என்ன சொல்வார்கள் என்றால் பார்த்தாயா, பார்த்தாயா இந்தப் பிரிவினை கேட்கின்ற பாங்கு இன்னும் திராவிட முன்னேற்றக் கழகத்தை விட்டுப் போகவில்லை, நீங்கவில்லை என்ற நிலை ஏற்படும். ஆகவே அவர்களைப் பற்றி நாம் கவலைப்படவில்லை. இன்றையதினம் கவர்னர் பெருமானுக்கு நாம் நன்றி செலுத்திக் கொள்கிறோம். அவர்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை என்பதுதான் என்னுடைய கருத்தாகும்.

(முற்பகல் 11-30)

இந்த நாட்டில் கோடானுகோடி மக்கள் உண்ண உணவு இல்லை. உடுக்க உடை இல்லை, இருக்க இடம் இல்லை என்ற அளவிலே தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களும், பின்தங்கிய மக்களும் துடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்துதான் இந்த அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டி நல்வாழ்வுக்கு வழிகாட்டும் வகையில் போடப்படுகிற திட்டங்கள் எல்லாம் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கும் வகையில் அந்த அம்சங்கள் எல்லாம் தத்துவ வார்த்தைகளாக இந்த அறிக்கையில் இருப்பதை எண்ணி

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 சனவரி 21

உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். இந்த நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கு எந்தெந்த வகையில் ஆக்கம் தேடவேண்டும். எந்தெந்த வகையில் ஊக்கத்தை உருவாக்க வேண்டுமென்ற அந்தக் கோணத்திலே நின்று கொண்டு நம்முடைய முதல்வர் அவர்கள் திட்டங்களைத் தீட்டி நாட்டுமக்களுக்குத் தந்து கொண்டிருக்கிறார்கள். அதற்காகத் தமிழ்நாட்டு மக்கள் உள்ளபடியே நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்கள் முக்கியமாக மின்சாரத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மின்சாரம் எதிர்கால விஞ்ஞான உலகத்திற்கு எந்தெந்த வகையில் ஆக்கம் தேடக்கூடியது, எதிர்கால சமுதாயத்தின் ஏற்றத்திற்கு வழிகோலக் கூடியது என்பதை எண்ணிப் பார்க்கும்போது மின்சாரத்தைப் பெருக்கியாக வேண்டிய கடமையில் இருக்கிறோம். நான் என்னுடைய வேண்டுகோளாக இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்று சொல்லுகிற அதே நேரத்தில் மின்சாரக் கட்டுப்பாடு தேவை என்று கூற விரும்புகிறேன். இப்போதுள்ள 15 சதவிகிதக் கட்டுப்பாட்டைப் பற்றிக் குறை கூறுகிறார்கள். நிரந்தரமாக அந்த 15 சதவிகிதம் கட்டுப்பாடு இருக்க வேண்டுமென்ற வகையிலே சர்க்கார் தீர்மானம் கொண்டு வரவேண்டுமென்பது தான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். நம்முடைய நாட்டில் மின்சாரத்தைத் தவறான வழிகளில் எல்லாம் பயன் படுத்துகிறார்கள். கட்டுப்பாடு இருந்தால்தான் ஜாக்கிரதையாக மின்சாரத்தை பயன்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு உருவாகும். தமிழகத்திலேதான் என்ன தேவை என்றாலும் உடனுக்குடன் செய்கிற அரசு இருக்கிறது. கர்நாடகத்தை எடுத்துக் கொண்டால், மின்சாரத்தை உற்பத்தி செய்து மற்ற மாநிலங்களுக்குத் தருகிற கர்நாடகத்திலும் பல நேரங்களில் 25 சதவிகிதம், 30 சதவிகிதம், 40 சதவிகிதம் கட்டுப்பாடு இருந்து வந்ததை யாரும் மறுக்க முடியாது.



1974 சனவரி 21] [திரு. வை. பாலசுந்தரம்]

நம்முடைய அரசு 15 சதவிகிதம் கட்டுப்பாட்டைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லுகின்ற நேரத்தில் விவசாயத்திற்கு முக்கியத்துவம் தர வேண்டும். எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் மதிப்புமிக்க சௌந்தரப்பாண்டியன் அவர்கள் பேசும்போது விவசாயிகள் எல்லாம் கண்ணீர் வடிக்கிறார்கள். பட்டா என்ற பெயரில், மோசடி செய்யப்படுகிறது என்று பேசினார்கள். 'பட்டா' என்ற பெயரிலேதான் இன்றைக்கு 74 லட்சம் டன் நெல்லை விவசாயிகள் உற்பத்தி செய்திருக்கிறார்கள். 1961-62-ம் ஆண்டில் 22 லட்சம் டன் நெல் உற்பத்தி, இன்றைக்கு 74 லட்சம் டன் உற்பத்தி செய்யச் சாத்தியக்கூறு இருப்பதை எண்ணிப் பார்க்கும்போது மதிப்புக்குரிய சௌந்தரபாண்டியன் அவர்கள் நெஞ்சிலே கை வைத்துப் பார்த்து பதில் சொல்லட்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பின்னால் நலிந்து கிடக்கிற மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்குப் பட்டா என்ற அந்த அத்தாட்சி வழங்கிய பின்னால் தான் மகத்தான மகசூலைத் தமிழ்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்கள் செய்து காட்ட முடிந்ததே தவிர வேறல்ல என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

காழ்ப்புணர்ச்சியால் பேசிப் பயனில்லை. காழ்ப்புணர்ச்சி கொண்டு இவ்வாறு பேசி ஆதாயம் பெறலாம் என்று எண்ணுவது மிகவும் முரண்கேடான செயல் என்பதைப் பலத்த கண்டனமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய எரிப்பை, எரிச்சலை வேறு ரூபத்தில் காட்டுங்கள். ஒரு சாதனையைச் செய்து காட்டுகிற நேரத்தில், அதற்குக் குறுக்கே நந்தியாக இருக்க வேண்டாம் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் ஆகும். சுவர் இருந்தால்தான் சித்திரம் எழுத முடியும் என்ற பழமொழி போல் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தால்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பட்டா கிடைக்கும். பட்டா கிடைத்த பின்னால் கிணறு வெட்டுவதற்குப் பணம் கிடைக்கும்; கிணறு வெட்டிய பின்னால் தங்களுடைய வாழ்க்கையை வளமாக்க முடியும் என்று கிராமப்புறங்களில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் கருதுகிறார்கள். பிற்பட்ட மக்கள் கருதுகிறார்கள் என்பதை அருமை நண்பர் அவர்கள் உணர்ந்து பார்க்க வேண்டும். வகை விட்டு விட்டு இன்றையதினம் [illegible] பேசுவதன் மூலம் அந்த மக்களுக்குக்

[திரு. வை. பாலசுந்தரம்] [1974 சனவரி 21

கிடைக்கக்கூடிய ஆதாயத்தைக் கெடுக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்தே தவிர வேறல்ல. தமிழ்நாட்டைத் தவிர வேறு எங்கே இந்த அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கிக் காட்டியிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் நான் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால் தமிழகம் தொழிற்கூடமாக மாறவேண்டும். அப்படி மாறுவதற்கான சாத்தியக்கூறை எப்படி உருவாக்க வேண்டுமென்பதை எண்ணிப் பார்க்கும்போது வீட்டுக்கு ஒரு தொழில் என்ற அளவுக்கு உருவாக்க வேண்டும். ஜப்பானை எடுத்துக் கொண்டால் இரண்டாவது உலகப் போரின்போது மிகப் பெருந் தாக்குதலுக்கு ஆளாகி தரை மட்டமாகியது. அப்படிப்பட்ட ஜப்பான் நகரம் இன்றைக்கு உலக நாடுகளுக்கே அறைகூவல் விடுகிற அளவுக்கு, அமெரிக்காவிற்கே அறைகூவல் விடுகிற அளவுக்குத் தொழிலில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது.

நம்முடைய தமிழகத்திலும் சிறு சிறு தொழில்களுக்கு மேலும் ஊக்கமும் ஆக்கமும் கொடுக்க வேண்டும். 'சிட்கோ' நிறுவனத்தின் மூலமாக லோன் தருகிறார்கள். சிறு தொழில்களுக்கு 10 லட்சம் ரூபாய் வரை தருகிறார்கள். இதன்மூலம் பலன் பெறுகிறவர்கள் எவ்வளவு பேர் என்று பார்த்தால் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள்தான் பலன் பெறுகிறார்கள். வீட்டுக்கு ஒரு தொழில் என்ற அடிப்படையில் 100 ரூபாயிலிருந்து 10,000 ரூபாய் வரை கடன் வழங்க வேண்டும். கடன் வழங்கும் அதே நேரத்தில் சில கட்டுப்பாடுகள் இருப்பதைத் தளர்த்துவதன் மூலம் ஏழை எளிய மக்களும் ஆதாயம் பெறுகிற அளவுக்கு கடன்களை வழங்க 'சிட்கோ' முன்வரவேண்டும். சிறு சிறு அளவுக்குக் கடன்களை வழங்குவதற்கான நிலைமையை உருவாக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாகும். அப்போதுதான் சமுதாயத்தில் தாழ்ந்து கிடக்கிற மக்கள் ஓரளவு ஆதாயம் பெறும் அளவுக்கு வழிவகைகள் பிறக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 சனவரி 21] [திரு. வை. பாலசுந்தரம்]

அடுத்து, பெரிய அளவுக்குப் பேசப்பட்டது விலைவாசி ஏற்றத்தைப் பற்றியதாகும். விலைவாசி ஏற்றம் என்பது கடந்த 20 ஆண்டு காலமாக இந்த நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினை என்பதை யாரும் மறுக்க முடியாது. தமிழ்நாட்டு மக்கள் அதிலே சிக்கிச் சீரழிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. விலைவாசி ஏற்றம் என்பது தேசியப் பிரச்சினையாகும். இந்த தேசியப் பிரச்சினையில் முடிவு காண வேண்டியது மத்திய சர்க்காராகும். மத்திய சர்க்காரைத் தட்டிக் கேட்க வக்கு இல்லாதவர்கள் இங்கு வந்து பேசுகிறார்களே தவிர வேறல்ல. அங்கு பேசுவதற்குண்டான சக்தியை, திராணியை இழந்து விடுகிறார்கள்.

இது ஆளும் கட்சியை மட்டும் பொறுத்த ஒன்றல்ல. எதிர்க் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். அதிக விலைக்கு விற்கப்படும் போது வெளியே இருக்கும் வியாபாரிகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்போது, கள்ளமார்க்கெட்டில் விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்போது எதிர்க்கட்சிக்காரர்கள் 'ஓரவஞ்சனையாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது' என்று மக்கள் முன்னால் சென்று பேசுகிறார்கள். பொதுக்கூட்டங்களில் பேசுகிறார்கள். அந்த நிலை மாறி எதிர்க்கட்சிகளுக்கும் அதிலே கடமை இருக்கிறது என்று உணர்ந்து செயலாற்றினால் பலன் ஏற்படும். தமிழக அரசோடு சேர்ந்து மத்திய அரசை வற்புறுத்த வேண்டும். கட்டுப்பாடு தேவை என்ற அளவுக்கு நிலைமையை உருவாக்க வேண்டும்.

(மணியடிக்கப்பட்டு திரு. என். மருதாசலம் பேச அழைக்கப் பட்டார்.)

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தங்களிடமிருந்து நான் ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜோதி அம்மையார் அவர்களுக்குப் பதினைந்து நிமிடங்கள் தாங்கள் அளித்தீர்கள். எனக்குப் பின்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுந்தரம் அவர்களுக்கும் தாங்கள் பதினைந்து நிமிடங்கள் அளித்தீர்கள். ஆனால் எனக்கு மட்டும் பத்து நிமிடங்கள்தான் கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, பேசுகிற உறுப்பினர்களைப் பொறுத்து நேரம் ஒதுக்குகிறீர்களா அல்லது கட்சியைப் பொறுத்து ஒதுக்குகிறீர்களா என்பதுபற்றி ஒரு விளக்கத்தை நான் பெற விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். இராஜாங்கம்) :** அடுத்து பட்ஜட் கூட்டம் இருப்பதால் அதில் எவ்வளவு மணி நேரம் வேண்டுமானாலும் உங்கள் கட்சி சார்பில் எடுத்துக்கொள்ளலாம். சபாநாயகர் அவர்கள் செய்ததற்கு நான் பதில் சொல்ல முடியாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கொடுக்கப்பட்ட நேரத்தில் உள்ள பாகுபாட்டைத்தான் கேட்கிறேனே தவிர வேறு எதுவும் அல்ல. இந்தப் பாகுபாட்டிற்குக் காரணம் என்ன என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். இராஜாங்கம்) :** உங்களுக்கு பதினைந்து நிமிடங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் பத்து நிமிடங்கள் என்கிறீர்கள். கணக்கில் பதினைந்து நிமிடங்கள் என்று இருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மன்னிக்கவும். நான் பத்து நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**திரு. என். மருதாசலம்:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரையில் ஈரோட்டுப் பெரியார் ஈ.வெ.ரா. வின் நினைவு போற்றிக் கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். ஈ. வெ. ரா. அவர்கள் தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, அடித்தளத்தில் இருந்த, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்கள். ஈ.வெ.ரா. பெரியார் அவர்களுக்கும், அவர்களது குடும்பத்தாருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக நன்றியறிதலைச் செலுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

அடுத்தபடியாக, ஆளுநர் உரையில் தொழில் துறை சம்பந்தமாக சில முக்கியமான விஷயங்கள் கூறப்பட்டுள்ளன. தொழில் துறையிலும் சரி, விவசாயத் துறையிலும் சரி, பல திட்டங்களைப் போட்டு அவற்றின் மூலம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வறுமையையும் ஒழிக்கப் பாடுபட்டும் அவற்றை ஒழிக்க முடியவில்லை. வேலையில்லாதிருக்கும் ஐந்து இலட்சம் பேர்களில் 40,000 பேர்களுக்குத்தான் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று இந்த உரையில் கூறப்பட்டிருக்கிறது. ஐந்து இலட்சம் பேர்களில் 40,000 பேர்களுக்குத்தான் வேலை கொடுப்பது என்பது





சமுத்திரத்தில் கரைத்த பெருங்காயம் போலாகும். குறைந்தது ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் பேர்களுக்காவது வேலைவாய்ப்பளிக்க வேண்டும்.

இந்த வேலை கொடுக்கும் திட்டத்தில் பல குறைபாடுகள் உள்ளன. இன்று நகரப் பகுதிகளானாலும் சரி அல்லது கிராமப் பகுதிகளானாலும் சரி, உதாரணத்திற்கு கோவையை எடுத்துக் கொண்டால் அங்கு பல மில்கள் உள்ளன. அங்குள்ள மில் முதலாளிகள் வேலைப் பளுவை அதிகப்படுத்தி ஆள் குறைப்புத் திட்டத்தைக் கொண்டு வந்து வேலையில்லாத் திண்டாட்டத்தை உண்டுபண்ண அவர்கள் முயற்சித்துக்கொண்டிருக்கிறார்கள். விஜயலட்சுமி மில்லில் ஆள்குறைப்புத்திட்டத்தின் மூலம் ஒரு போராட்டம் நடந்து பலர் இன்று வேலையில்லாது அவதிப்பட்டு வரும் நிலை இருக்கிறது. ராஜலட்சுமி மில்லிலும் ஆள்குறைப்புத் திட்டத்தின் மூலம்—சர்வீஸ் அடிப்படையில் வேலை கொடுக்காமல் முதலாளிக்கு இஷ்டப்படி வேலையில் வைப்பது என்று செய்து அந்த மில் இப்போது சாத்தப்பட்டிருக்கிறது. ஆக இந்த மில் முதலாளிகள் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்துகிறார்கள். சர்க்காரும், ஐந்து லட்சம் பேர்களில் ஒரு லட்சம் பேர்களுக்குக் கூட வேலை கொடுக்க முடியாத நிலையில் எப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களை எடுத்துக் கொண்டாலும் சரி, நகரசபைகளை எடுத்துக்கொண்டாலும் சரி, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கவேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அப்படி 18 சதவீதம் அளவிற்குக் கொடுக்கப்படுவதில்லை. ஒரு யூனியனில் 15, 20 ஆயாக்களை எடுத்தார்கள். அதில் ஒரு ஹரிஜனப் பெண் கூடக் கிடையாது. அதுகுறித்து அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் சொல்லும்போது அந்தப் பிரிசிடென்ட் சொல்கிறார் தாழ்த்தப்பட்ட மக்களிலிருந்து யாரும் வரவில்லை என்று. எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் ஆபீசர் சொல்கிறார், நாங்கள் அனுப்பினோம் என்று. ஆகவே ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும், ஒவ்வொரு நகரசபையிலும் 1973-ல் இருந்து 1974-ம் ஆண்டு வரையில் எவ்வளவு பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள், எவ்வளவு எழுத்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்

டிருக்கிறார்கள், அதில் எவ்வளவு பேர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்பதைக் குறித்து பரிசீலிப்பதற்கு இந்த மன்றத்தின் உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து அதைப் பரிசிலனை செய்யவேண்டும். அப்படிப் பரிசீலனை செய்தால்தான் தாழ்த்தப்பட்டவர்களில் எவ்வளவு பேர்கள் வேலையில் அமர்த்தப் பட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வரும். ஆகவே அந்த முறையை அரசாங்கம் கையாளவேண்டும்.

அடுத்தபடியாக, வீட்டுவசதி வாரியத்தில் பல குறைபாடுகள் உள்ளன. கோவையில் வீட்டு வசதி வாரியம் இருக்கிறது. சென்ற ஆண்டு அங்கு வீட்டு வசதி வாரியம் வீடுகள் கட்டி திறப்பு விழா நடந்தது. 150 வீடுகள் கட்டி திறப்பு விழா நடந்தும் இதுவரையில் யாருக்கும் கொடுக்கப்படாது அவை பூட்டப்பட்டுக்கிடக்கின்றன. யாருக்காவது அதைக் கொடுத்திருந்தால் அரசாங்கத்திற்கு வாடகையாவது வந்திருக்கும். கார்ட் கொடுக்கப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றன. வீடு இருப்பவர்களுக்குத்தான் வீடு கொடுக்கப்படுகிறதே, அது சரியல்ல. வீட்டு வசதி வாரியத்தில் ஊழல் நடக்கிறது. அதை உடனடியாகப் பரிசீலிக்கவேண்டும்.

வீட்டு வசதி வாரிய என்ஜினியர் பல குறைபாடுகளைப் பிடித்திருக்கிறார்கள். வீடில்லாதிருக்கிற ஏழை மக்களுக்கு வீடுகள் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்தபடியாக, நகரப்பகுதிகள் விரிவடைவதற்காக நகரங்களுக்குப் பக்கங்களில் உள்ள இடங்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வசதிகள் செய்யப்படுகின்றனவே தவிர கிராமப்புறங்களிலும் வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டு அதன் மூலம் வீடுகள் கட்டித்தரப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் கிராமங்கள் முன்னேற்றம் அடைய ஏதுவாகும். ஆகவே அந்த முறையில் வீட்டுவசதி வாரியம் கிராம மக்களின் நன்மைக்காக கிராமப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பின்னர், தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்னென்னவோ செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. கடன் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. கடனுக்காக விண்ணபித்து தக்க சான்றுகள் கொடுத்தும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு கடன் கிடைப்பதில்லை. வீடு





கட்டுவதற்கு அல்லது வியாபாரம் செய்வதற்கு கடனுக்காக விண்ணப்பித்தால் அவை கிடைப்பதில்லை. விண்ணப்பித்து இரண்டு வருடங்கள் ஆகிறதே இன்னும் கடன் கிடைக்கவில்லையே விண்ணப்பம் என்னவாயிற்று என்று கேட்கிறார்கள். கடன் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறதே தவிர அவர்களுக்கு கடன் கிடைத்து அதை உபயோகப்படுத்தி அவர்கள் முன்னுக்கு வருவதற்கு வாய்ப்பில்லை. ஆகவே, தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றுவிக்கக் கொண்டுவரப்படுகிற திட்டங்களை நல்ல முறையில் நடைமுறைக்குக் கொண்டு வந்தால்தான், தாழ்த்தப் பட்ட மக்கள் முன்னேற முடியுமே தவிர அவை ஏட்டளவில் இருந்தால் பிரயோஜனமில்லை என்று கூறிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி:** கனம் மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த ஆளுநர் அவர்களது உரையின்மீது தோழமைக் கட்சி என்ற முறையில் தோழமைக் கட்சி எந்த முறையில் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமோ அந்த முறையில் இடித்துச் சொல்ல வேண்டியவற்றை இடித்துச் சொல்லியும், எங்கே நல்லவைகள் செய்யப்பட்டிருக்கின்றனவோ அவைகளைப் புகழ்ந்தும் சொல்லவேண்டிய முறைப்படி நான் சில கருத்துக்களை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆளுநர் உரையைப் படித்துப் பார்க்கும்போது ஒரு ஆண்டுக்கு முன்பு நம்முடைய அரசாங்கம் என்ன கொள்கைகளைச் சொன்னது, அந்தக் கொள்கைகளை எந்த அளவிற்கு அரசாங்கம் நிறைவேற்றியிருக்கிறது, இனிமேல் நம்முடைய அரசு என்ன கொள்கைகளை இந்த ஒரு ஆண்டுக் காலத்தில் கடைப்பிடிக்கப் போகிறது என்பதை நிச்சயமாக கருத்தில்கொண்டு ஆற்ற வேண்டிய ஒரு உரையாகும் ஆளுநர் அவர்களது உரை. நாம் இன்றைக்கு இந்த ரிப்போர்ட்டைப் படித்துப் பார்க்கிறபோது, இந்த உரையிலே எவ்வளவு தூரம் கடந்த காலத்தில் ஏற்பட்ட கிரைசிஸ், கடுமையான நிகழ்ச்சிகள் ஏற்பட்டன, அவைகளை எப்படி அரசு சமாளித்தது என்பதைப் பற்றியெல்லாம் சொல்லப் படவில்லை. அவைகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றனவா, அப்படி தொடர்ந்து வந்தால், அவைகளையெல்லாம் சமாளிப்பதற்கு அரசு எந்த அளவில் திட்டங்களைத் தீட்டி வைத்து இருக்கிறது

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1974 சனவரி 21

என்று கூறக் கூடிய அளவில் இந்த உரையில் கவனம் செலுத்தப் பட்டிருக்கிறதா என்று பார்க்கிற நேரத்தில் எனக்கு உண்மையிலேயே இந்த ரிப்போர்ட் It is only a formal report and it is not a serious one. என்றுதான் நான் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். சிறந்த அளவிற்கு, கவனம் செலுத்தப்பட வேண்டிய அளவிற்குச் செய்யப்படவில்லை என்றுதான் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

உதாரணத்திற்கு நான் ஒன்றிரண்டு விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த ஒரு வருட காலத்தில் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் எத்தனை கிரைசிஸ் வந்திருக்கின்றன—

Political crisis, power crisis, law and order crisis, handloom crisis, manure and pesticides crisis trade union movement crisis, students movement crisis, co-operative movement crisis. இவைகளையெல்லாம் நாம் கடந்த வருடத்தில் சந்தித்து இருக்கிறோம். இவைகளெல்லாம் இப்போது மறைந்து விட்டனவா, எப்படிச் சமாளித்தோம், அல்லது புதியதாக ஏதேனும் கிரைசிஸ் இதில் ஏற்பட்டிருக்கிறதா என்றும் சொல்லப்படவில்லை. அதோடு மட்டுமல்லாமல், இந்த வருஷம் நாம் ஆயில் கிரைஸிசையும் சந்திக்க வேண்டியிருக்கிறது. அதை எப்படிச் சமாளிக்க இருக்கிறோம் என்றும் சொல்லப்படவில்லை.

இந்த உணவு உற்பத்தியில் நமக்கு வேண்டிய உரங்கள் நமக்கு வேண்டிய அளவுக்குக் கிடைக்காதிருந்த சூழ்நிலையிலும் நாம் அதைச் சமாளிக்கும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது, அதை எப்படிச் சமாளித்தோம் என்றும் கூறப்படவில்லை. இனிமேல் ஏற்பட இருக்கிற நெருக்கடியையும் நாம் எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்பதைப் பற்றியும், இது குறித்து அரசின் கொள்கை என்ன என்பதைப் பற்றியும் கூறப்படவில்லை. இவைகளெல்லாம் இருந்தாலும்கூட, நம்முடைய அரசு அச் சிக்கல்களை ஓரளவு சமாளித்து இருக்கிறது. அதை நாம் இந்த நேரத்தில் பாராட்ட வேண்டிய நிலையில் இருக்கிறோம். இருந்தாலும்கூட நாம் எல்லா நெருக்கடிகளையும் நல்ல முறையில் சமாளித்து விட்டோம் என்று திருப்திப்படும் மனோபாவம் வந்து விடக்கூடாது. இதைப் படித்துப் பார்க்கிறபோது அப்படிப்பட்ட மனோபாவம் இருப்பது போல் தெரிகிறது என்று சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.



1974 சனவரி 21] [திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி]

நம்முடைய அரசின் உணவுக்கொள்கையில், புட் பாலிசியில் நான் ஒன்றைக் குறிப்பிட ஆசைபபடுகிறேன். நம்முடைய மாநிலம் தேவைக்குமேல் ஓரளவுக்கு 'சர்பிளஸ்' மாநிலமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. உண்மையிலேயே நம்முடைய அரசு எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாகத்தான் அது ஏற்பட்டிருக்கிறது. அதிலே நாம் நிச்சயமாக திருப்தி அடைந்துவிட முடியும். பூர்ண திருப்தியடைந்து விட முடியுமா என்றால் முடியாது. நாம் எவ்வளவுதான் உற்பத்தியை அதிகரித்து இருந்தாலும், தேவைக்கு மேல் உற்பத்தியைச் செய்து இருந்தாலும், விலைவாசிகள் ஏறியிருக்கிறது. இன்றைக்கு படியரிசி ரூ. 2.75 விற்கிற நிலையிருக்கிறது. இதற்கு அரசு மட்டுமே பொறுப்பு என்று எதிர்க்கட்சிகள் சொல்லிவிட முடியாது. இதைத் தடுப்பதற்கு என்ன செய்யவேண்டுமென்று அரசு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நமக்கு வேண்டிய உரங்கள் கிடைப்பது இல்லை, நமக்கு வேண்டிய பூச்சிக் கொல்லி மருந்துகள் கிடைப்பது இல்லை என்று சொல்கிறோம். அதை வினியோகிப்பதில் அரசு என்ன முறையை அனுஷ்டித்து வருகிறது என்பதைச் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறேன். நம்முடைய தேவை 3.15 லட்சம் டன் நைட்ரஜன் என்றாலும் 2.3 இலட்சம் டன் நைட்ரஜன் உரம் வழங்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய தேவையில் முக்கால் பங்குதான் கிடைத்திருக்கிறது. கிடைத்த உரத்தை எப்படி வினியோகம் செய்தீர்கள். வினியோகம் செய்யும் பொறுப்பு நம் அரசின் கையில்தான் இருக்கிறது. உரத்தை அளிப்பது மத்திய அரசின் பொறுப்பைச் சார்ந்தது என்று சொல்லிவிட்டு நாம் தப்பித்துக்கொள்ள முடியாது.

உதாரணத்திற்குச் சொல்கிறேன், என்னுடைய பகுதியைப் பொறுத்தவரையில் அங்கே யூரியா மூட்டை ரூ. 50 விற்க வேண்டியது ரூ. 170, ரூ. 200 வரை வெளி மார்க்கெட்டில் விற்கப் பட்டிருக்கிறது. ஏன் இதைச் சரியாக வினியோகம் செய்ய முடியவில்லை.

மதுரையைப் பொறுத்தவரையில், உர வினியோகத்தை பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கொடுத்து இருக்கிறார்கள். அதனால் அந்தப் பகுதியில் சரியானபடி உரம் விவசாயிகளுக்குக் கிடைத்து இருக்கிறது. ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் அருப்புக்கோட்டைத் தாலுக்காவைப் பொறுத்தவரையில் அங்கேயிருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வினியோகம் செய்தார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் எந்த மாதிரியான சூழ்நிலையில் உருவாக்கப் பட்டது என்றால், அங்கேயுள்ள உறுப்பினர்கள் சிலருக்கு நிலம் கூட இல்லை, அப்படிப்பட்டவர்கள் அந்தச் சங்கங்களில் இருக்கிறார்கள்.

இப்படிச் சங்கங்கள் மூலம் வினியோகம் செய்ததால் அவர்களிடத்தில் நிலம் இல்லாத காரணத்தால் வெளி மார்க்கெட்டில் விற்றிருக்கிறார்கள். நெருக்கடியாக இருக்கிற நேரத்தில், கிடைத்ததையாவது ஒழுங்காக விநியோகம் செய்து இருக்கவேண்டும். நமக்குத் தேவையானதில் நாலில் மூன்று பங்கு தான் கிடைத்தது என்றால், அதைச் சரியாக விநியோகம் செய்து இருந்தால் 100 டன் உற்பத்தி என்றால் 75 டன் உற்பத்தியாவது ஆகியிருக்கும். விவசாயிகளுக்கும் உரம் கிடைத்து இருக்கும். அவர்கள் வெளிமார்க்கெட்டிற்கு சென்று இருக்க மாட்டார்கள்.

அதோடு, இந்த உர விநியோகம் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஒருமாதிரியாகவும், மதுரை மாவட்டத்திற்கு ஒருமாதிரியாகவும், வேறு ஒரு மாவட்டத்திற்கு ஒருமாதிரியாகவும் இருக்கக் கூடாது. மாநிலம் பூராவிலும் ஒரேமாதிரியான அடிப்படையில் தான் உர விநியோகம் இருக்கவேண்டும். விநியோகம் செய்வதற்கு சகல அதிகாரத்தையும், பவரையும் இந்த அரசு வைத்துக் கொண்டிருக்கிறபோது ஏன் இந்த நிலைமையேற்பட்டது என்று தெரியவில்லை. மாநிலம் பூராவிலும் ஒரேமாதிரியான நிலைமை இருந்தால் இந்தச் சங்கடங்கள் வராது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. நா. வெ. குருசாமி:** பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். மதுரை மாவட்டத்தில் பஞ்சாயத்து யூனியன் மூலமாகக் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அங்கேயும் சொசைட்டி மூலமாகத்தான் உரம் விநியோகிக்கப்பட்டு, அங்கேயும் விவசாயிகளுக்குச் சரியான முறையில் உரம் கிடைக்காமல் இருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





(நண்பகல் 12-00)

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** நல்லது. நண்பர் அவர்கள் சொன்ன தகவலுக்கு மிகவும் நன்றி. நண்பர் அவர்கள் சொல்லக் கூடிய தகவல் பிரகாரம் பார்க்கும்பொழுது, அப்படியானால் மதுரை ஜில்லாவில் சில இடங்களில் யூனியன் மூலமாகவும், சில இடங்களில் சொஸைடி மூலமாகவும் உரம் விநியோகம் செய்யப் படுகிறது என்பது தெரிய வருகிறது. இம்மாதிரி ஒரு கொள்கை வேண்டாம். ஏனென்று கேட்டால், உரம் விநியோகம் செய்வதில் எப்படி ஒரு சரியான முறையை கைக்கொள்ள வேண்டும் என்று நினைத்துப் பார்த்து தக்கதோர் முடிவு எடுக்கவேண்டும். உரத் தை கம்பெனிகள் தயார் செய்கின்றன. கூட்டுத் துறை மூலமும், ஸ்பிக் மூலமும் நாம் உரத்தைப் பெறப்போகிறோம். மத்திய அர சாங்கமும் உரத்தை ஒதுக்கப்போகிறது. எல்லா உரத்தையும் அரசாங்கமே ஒட்டுமொத்தமாக வாங்கி அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, இப்படித்தான் உரத்தை விநியோகம் செய்ய வேண்டும் என்று உறுதியாக முடிவு செய்து, விநியோகத்தில் ப்ளாக் மார்கெட் இல்லாமல், குறைந்த விலையில் சரியான அளவில் விவசாயிகளுக்கு உரம் போய்ச் சேரும் என்பதை உறுதி செய்து கொண்டு, அந்த முறையைக் கையாண்டு விநியோகம் செய்வதற் கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

இன்னொரு காரியத்தையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படு கிறேன். என்னுடைய பகுதியிலே டேபிள் ஸால்ட்டிலிருந்து யூரியா போல் செய்கிறார்கள். அதைப்போல வேறு உரம் போல வும் செய்கிறார்கள். எங்கள் ஊருக்குப் பக்கத்தில் உப்பு அதிக மாக உள்ள இடத்தில் இப்படியெல்லாம் செய்கிறார்கள். இதெல் லாம் தெரியாமல், வேறு எந்த உரத்தையோ வாங்கிக்கொண்டு போகக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். விவசாயிகள் அந்த உரத்தை வாங்கிக்கொண்டு போய் நிலத்தில் கொண்டுபோய்ப் போட்டால், நிலம் பாழடைந்துவிடும், கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம், செய்த வேலை எல்லாம் வீணாகப்போய் அவர்கள் நஷ்டப் படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது.

கலப்படம் செய்கிறார்கள் என்றால், உணவுப் பண்டங்களில் கலப்படம் செய்பவர்களைத் தண்டிப்பதற்கு சட்டம் இருக்கிறது. 'ப்ரிவென்ஷன் ஆஃப் ஃபுட் அடல்ட்டரேஷன் ஆக்ட்' இருக்கிறது.

அந்தச் சட்டத்தின்கீழ் இப்படி உரத்தில் கலப்படம் செய்பவர்களைக் கொண்டுவர முடியுமா என்று கேட்டால், நிச்சயம் கொண்டு வர முடியாது. அப்படிப்பட்ட ஒரு சட்டச் சிக்கல் இருக்கிறது. ஆகவே, உரக்கலப்படத்தைக் கண்காணிக்கவேண்டிய அவசர நிலைமை ஏற்பட்டிருக்கிறது. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு எப்படி ஒரு சட்டம் இருக்கிறதோ, அதைப்போல நம்முடைய அரசு 'ப்ரிவென்ஷன் ஆஃப் ஃபுட் அடல்ட்ரேஷன் ஆக்ட்' என்பதைப்போல 'ப்ரிவென்ஷன் ஆஃப் மென்யூர் அடல்ட்ரேஷன் ஆக்ட்' என்ற ஒரு சட்டத்தை அவசரமாக இயற்ற வேண்டும். அப்படி ஒரு சட்டம் கொண்டுவந்தால் தான் இப்படிப்பட்ட குற்றங்கள் செய்யக்கூடியவர்களைக் கண்டு பிடித்து தண்டிக்கக்கூடிய நிலைமையில் நாம் நிச்சயமாக இருக்க முடியும், கலப்படத்தைத் தடுக்க முடியும். இதை நிச்சயமாக அரசாங்கம் பரிசிலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் இதை உதாரணமாகச் சொன்னேன்.

நமக்கு முன்னால் இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்னைகளை நாம் எப்படிச் சமாளிக்கப்போகிறோம் என்ற முறையில் ஆழ்ந்து பார்த்து, உரையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி நான் சொல்லும்பொழுதுதான் இந்தக் கருத்தை நான் சொல்லியிருக்கிறேன். இதைப்பற்றி நம்முடைய அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 'ப்ரிவென்ஷன் ஆஃப் ஃபுட் அடல்ட்ரேஷன் ஆக்டை' அமல் நடத்தும் பொறுப்பை சானிடரி இன்ஸ்பெக்டர்களிடம் ஒப்படைத்திருக்கிறோம். அவர்கள் மூலம் உணவுக் கலப்படத்தையோ அல்லது வேறு கலப்படத்தையோ நாம் எஃபெக்டிவாக தடுத்துவிட முடியுமா என்று கேட்டால், நிச்சயமாக முடியாது என்றுதான் நான் கருதுகிறேன். ஆனால் அதற்குப் பதிலாக ஆண்டி கரெப்ஷன் டிபார்ட்மெண்ட் என்று ஒரு பிரிவே தனியாக இருப்பதுபோல, ஆண்டி அடல்ட்ரேஷன் டிபார்ட்மெண்ட் என்று புதியதாக ஒரு பிரிவை ஏற்படுத்தி, அந்த டிபார்ட்மெண்டுக்கு அந்தப் பொறுப்பைக் கொடுத்து, எத்தகைய கலப்படமாக இருந்தாலும், உரக் கலப்படமாக இருந்தாலும் சரி, உணவுப் பொருள் கலப்படமாக இருந்தாலும் சரி, கலப்படம் நடக்க முடியாத அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



இன்னும் பல விஷயங்களை நான் சொல்ல முடியும். இருந்தாலும் கூட நான் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக்கொண்டு தலைவர் அவர்களின் அனுமதியோடு முடித்துக்கொள்கிறேன். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். முக்கியமாக இருக்கக்கூடிய ஒரு பிரச்னையில் சில கருத்துக்களை நான் இந்த நேரத்திலே சொல்லவேண்டியிருக்கிறது. அந்த நிலையிலே அதைப்பற்றி ஒரு சில விஷயங்களை மட்டும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

கைத்தறித் தொழிலை எடுத்துக்கொண்டால், நூலுக்கும், அதைப்போலவே செயற்கைப் பட்டுக்கும் போன வருடம் மிகப் பெரிய நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டது. அதை எப்படிச் சமாளித்தோம் என்பது பற்றி அறிக்கையிலே சொல்லப் பட்டிருக்கிறது. கோவாபரேடிவ் செக்டாருக்கு உள்ளே இருப்பவர்களுக்கு அவர்கள் கஷ்டப்படாத அளவுக்கு எந்த அளவுக்குச் செய்ய முடியுமோ அந்த அளவுக்கு வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். கோவாபரேடிவ் துறைக்கு வெளியே இருப்பவர்களுக்கு நாம் அதிகமாகச் செய்ய முடியவில்லை என்பதைப்பற்றியெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு விஷயத்தை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நாம் எதிர்பாராத முறையில் போன வருஷம் நமக்கு இந்தத் துன்பம் வந்தபொழுது நாம் அவர்களுக்கு உதவி செய்தோம். நூல் இல்லாமல் கஷ்டப்படுபவர்களுக்கு ரூ. 100 கொடுத்தோம். அதைப்போலவே பட்டு நூல் இல்லாமல் கஷ்டப் படுபவர்களுக்கு ஏதாவது பணம் கொடுக்க வேண்டுமென்று மனம் இருந்தாலும், பணம் இல்லை, அதனால் கொடுக்க முடியாத ஒரு நிலைமை நமக்கு ஏற்பட்டது. ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 18 கோடி ஒதுக்க இருக்கிறோம். வரக்கூடிய பட்ஜெட்டில் ஒதுக்கி வைக்கப்போகிறோம். ஆனால், எதிர்பாராத சூழ்நிலை ஏற்பட்டால், கஷ்டப்படும் கைத்தறி நெசவாளர்களுக்கு உதவுவதற்கு நாம் ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறோமா என்று கேட்டால், எடுத்திருப்பதாகத் தெரியவில்லை. எதிர்பாராத சூழ்நிலையின் காரணமாக நெருக்கடி ஏற்படும்பொழுது கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஏதாவது உதவி செய்வதற்கு மொத்தத் தொகையாக போன வருடம் ரூ. 2 கோடி ஒதுக்கினோம். அதற்கு மேல்

[திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி] [1974 சனவரி 21

செலவழிக்கக்கூடிய நிலைமை இருந்தால், எதுவும் செய்ய முடியாத சூழ்நிலை இருந்தது. ரூபாய் 18 கோடி ஒதுக்க இருக்கிறோம். இனிமேல் வரக்கூடிய பட்ஜெட்டில் முக்கியமாக இருக்கக்கூடிய அளவுக்கு மொத்தப் பணம் நாம் எவ்வளவு செலவழிக்கப் போகிறோம் என்பதைப் பற்றி இந்த அரசு இந்த நேரத்தில் நினைத்துப் பார்க்கவேண்டும்.

அதைப்போலவே நாம் அவர்களை வேறு தொழில்களுக்கு மாற்றவேண்டும் என்று சொல்கிறோம் அடிக்கடி. நாம் அதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறோம். அவர்களை வேறு தொழிலுக்குக் கொண்டு போகவேண்டுமென்றால், அந்த முறையில் ஏதாவது திட்டம் வகுத்து எதைச் செய்யப்போகிறோம் என்பது பற்றி சொல்லியிருக்கிறோமா என்றால், இல்லை. இதை அரசு பரிசீலிக்க வேண்டும்.

அருப்புக்கோட்டையில் பழையபடி பஞ்சம், ஆர்ட் ஸில்குக்குப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்று தந்தி வந்திருக்கிறது. கஷ்டமான நிலையில் மக்கள் உதவியை எதிர்பார்க்கிறார்கள். எனவே அரசு இதைப் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*THIRU K. M. SUBRAMANIAM: Hon. Chairman, Sir, now I am in a position to speak the truth without any mental reservation, because I am an independent. Wherever the Government does good, it is our duty to praise them and wherever they need our guidance, if it is needed, it is our duty to give them our guidance, and wherever they go wrong I feel it is our duty to tell them frankly that that is wrong. There have been, as Mr. Sowdi Sundara Bharathi said, national crisis in this country a crisis of character, a crisis of politics, an economic crisis and what not, and in these circumstances, the most important thing for patriotic men is, I think, to sit together and think what to do to solve these problems. Unfortunately, in this country, we find that everybody is trying to throw mud on others without attempting to solve or contribute to the solution of the most important problems.



1974 சனவரி 21] [Thiru K. M. Subramaniam]

Sir, today, there have been criticisms about price spiral. Who is responsible for this price spiral? I have felt that this is a national affair, not a State affair at all. It is credit policy, the industrial policy, the economic policy of the Government of India and all these things have contributed to the price increases and there is no use of accusing any particular Government about it, especially the State Government about it. The national leaders must have the courage of conviction to come out and say, " Look here, it is the Central Government that is responsible for this sort of crisis."

(Mr. Deputy Speaker in the Chair.)

We must do everything to bring down prices. Similarly, Mr. Sundara Bharathi said, the law and order crisis is not in the State alone that we find it from the Himalayas to Kanyakumari. The other day I was reading an article in " Mother India " where it is said that rape is the ordinary pleasure of the country. That is the way we are going. So, the recommendation of the Governor in page 15 to hold a conference of Chief Ministers is the most important in this Governor's Address. It is very necessary that all the Chief Ministers must sit together and find out ways and means of solving the country's problems; the problems are increasing—there is political crisis. What is this political crisis? The two Congresses are fighting in U.P. and the same two political parties are united in Pondicherry. To what limits they go we do not know.

Unless there is political honesty, we cannot solve this problem.

Now coming to other matters ................

THIRU R. PONNAPPA NADAR: Is political honesty your monopoly alone or the monopoly of somebody else?

THIRU K. M. SUBRAMANIAM: Political dishonesty is your monopoly ..................

THIRU R. PONNAPPA NADAR: We know your political honesty and now you are throwing stones at others..............

THIRU K. M. SUBRAMANIAM : I have seen your political honesty. For 22 years you have ruined this country and what is the price we are paying for it now? What is happening in this Country. Where is the political honesty to-day? I can ...

THIRU R. PONNAPPA NADAR : It is a welcome thing that you have left us for good . . .

THIRU K. M. SUBRAMANIAM : I am very happy that I have not given room for further exploitation. I do not want the exploitation of others. You feel that it is very good that I have left you. Many others also feel that it is very good that I have left them.

*திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :* தலைவரவர்களே, என்னுடைய பேச்சில் "பொலிடிகல் கிரைசிஸ்" என்று குறிப்பிட்டேன். அதற்கு எவ்வளவோ உதாரணம் சொல்லலாம். இந்த முறையில் சட்டசபையில் நடைபெறுகின்ற விவாதம் இன்னும் கொஞ்சம் தரம் உயர்ந்த முறையிலே அமைந்தால் நல்லது என்று சொல்லிக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* தனியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். "பொலிடிகல் கிரைசிஸ்" என்றால் அதிலே எத்தனையோ அர்த்தம் இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I do not want to ......

MR. DEPUTY SPEAKER : It is better to leave that matter. The word has thousand meanings and thousand explanations can be given.

THIRU R. PONNAPPA NADAR : This is a pot calling the kettle black ........

THIRU K. M. SUBRAMANIAM : Anybody can use any words. I can also use stronger words but I do not want to use them because it is unparliamentary to use them. Why should we quarrel about it?

Now the point is that I want this Government to help the people, especially the poor people . . .



THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order . . .

THIRU K. M. SUBRAMANIAM : I am not creating any disorder.

MR. DEPUTY SPEAKER : You are making the debate lively.

THIRU K. M. SUBRAMANIAM : Leaving all jokes apart, we are facing a serious problem to-day. We are going through a crisis in all aspects of life in this country. Take for instance, the increase in prices of essential commodities. What can the State Government do to put down the prices ? Unless we solve the problems like inflation, blackmarket money, P.L. 480 funds, huge interest taken by private creditors, etc., we cannot put down the prices, and no State Government can put down the prices. So, it is the duty of the leaders of all parties to do something in the matter. Let there be a meeting of all the Chief Ministers who can consult their advisers on how to bring down the prices. This is not the time for political controversy. This is the time for solution of the problem. So I think I am right in saying that we should congratulate the Government and the Governor for having thrown the suggestion that there should be a Chief Ministers' Meet.

Secondly, the most important problem is the priority allocation of funds. In spite of the fact that I am in the Opposition I must say that priority has been given to power and maximum funds have been allotted for it. Then priority has been given to water-supply and then to irrigation. So far as irrigation is concerned, we have tapped all the sources of running water. Unfortunately, this is a State with only one river, Cauvery and in spite of that, production has gone up. In the Governor's Address mention has been made about minor irrigation. Minor irrigation is the only thing that we can do now. So, I congratulate the Government and the Governor for having brought this matter to the forefront and so many tanks have to be improved.

Then I come to food production. The most important thing is fartiliser. What is happening to our fertiliser factory ? What is happening to the distribution of fertiliser ? Now the distribution is done in two ways, one by businessmen and another by

the Government. I know for certain that the fertiliser which has been purchased from Goa by a Madras dealer has been directly routed to Andhra Pradesh and sold in Andhra Pradesh at an extra price of Rs. 200 to 300 per tonne. I know black-marketing is going on in fertiliser and I can mention the names of the persons indulging in it. 1,000 tonnes of fertilisers allotted to a particular individual has never been brought to Tamil Nadu. As there is shortage of fertiliser, it is all the more necessary that the Government should control both production and distribution of fertilisers. Similarly in the case of sugar, 70 per cent is under control and 30 per cent under decontrol. So, there is black-marketing in sugar. Cent per cent of the production must be controlled. Only the prices can be increased a bit. So also in the case of cloth, what is happening? There are both controlled and decontrolled varieties of cloth and no Government knows what is happening to all the controlled cloth. Perhaps it may be known to the Textile Commissioner who gets statistics which is full of lies.

Now the price of sugar has been increased in U.P., because there is an election to take place there. When there was election in Kerala, the price of rubber was increased. Now the steel prices also have been increased. We should see that their prices are reduced.

Now I come to rural labour. Rural labour is getting Rs. 3 per day as wages for 90 days. Rupees 270 is their per capita income. Their income should be supplemented by aid from the Government of India. Certainly the State Government cannot do it. Now 30 per cent of the population are getting Re. 1 per day and more than 10 per cent less than Re. 1. It is for the Government to find a solution to this problem. They should sit together and think about the means of supplementing the income of 30 per cent of the people who are having a sub-normal life and getting less than Re. 1. What is the supplementary income you are going to provide for them?

Are you going to provide cows, buffaloes and extra work?



Next take the handlom sector. You talk of price reduction, supply of yarn, supply of dye-stuff, etc. But who is getting the benefit of all these ? Is it the poor handloom weaver ? No, it is the middleman, the master weaver who takes everything.

(The Deputy Speaker sounded the gong.)

I am not talking anything out of the way and I won't hurt anybody. Give me some more time.

The family of a weaver got Rs. 48 per mensem in 1947. Now the weaver gets Rs. 96 per mensem. You can ask any handloom expert. Rupees 18 crores is earmarked for them; that is there in the speech of Governor. With Rs. 96 income per month, what is the per capita income of the poor weaver? Unless and untill the middlemen are abolished in the handloom sector also, unless this Government takes upon itself the distribution of yarn to the weaver direct, the poor handloom weaver will not benefit.

Some time before, there was a restriction that the mills should not produce more than 5,000 million yards. But what is happening now? They increase production some times extending the width of the cloth. That is indirectly affecting the handloom industry.

Coming to my constituency, Madras City, there is clamour for re-election immediately. I think it is a very serious problem. Madras City's administration had been bad since many years and lot of things had to be improved. Unless improvements are effected there is no use of clamouring for re-election. Our Congress members may say 'Sri K. M. Subramaniam may not get re-elected and that is why he is saying this'. That is not the point. I can get re-elected without difficulty whether I am there or not. What I say is, let nobody hurry things. Let things be improved first. Otherwise, there would be trouble later.

One minute more and I am finished. Take the interior roads of Madras City, not Mount Road or Poonamallee High Road. If Rs. 12,000 is sanctioned for a street, only Rs. 8,000 is spent and Rs. 4,000 goes to somebody's pocket. I request the Hon. Chief Minister and Hon. Minister for Local Administration who is not here, that Rs. 5 crores should be allotted for improvement of interior roads in Madras City. Their present condition is very

[Thiru K. M. Subramaniam] [1974 சனவரி 21

bad. If Rs. 5 crores is allotted for their improvement, we can have a better city. Let democracy wait for some time. We can afford to make democracy wait for some time. Let things be improved first before we get into democracy.

Thank you, Mr. Deputy Speaker; I have taken some more time. Thank you.

* திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்கள் உரையின் மீது எனது கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆளுநர் அவர்கள் தம் உரையின் துவக்கத்தில் தமிழகத்தில் பெரியாருள் பெரியவராக வாழ்ந்து, மக்கள் அனைவரையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்தி, மக்களின் அன்புக் கண்ணீரைப் பெற்றுச் சென்ற தந்தை பெரியார் அவர்களைப்பற்றி நல்ல வார்த்தைகளைக் கூறி தம் அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு அரசாங்கத்தினுடைய லட்சியத்தை எடுத்து விளக்கத்தக்க வகையில் ஆளுநர் அவர்கள் "வறியவர்கள், வாழ்க்கையில் ஒடுக்கப்பட்டவர்கள், வாழ்வில் மெம்பெற வேண்டுமென்ற கொள்கையை நாம் எப்போதும் இலட்சியமாகக் கடைப் பிடித்து வந்துள்ளோம். இந்த இலட்சிய நோக்கமே நமது வளர்ச்சித் திட்டங்களுக்கு இயக்கச் சக்தியாக விளங்குகிறது. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஆகியோரை வாழ்வில் கைதூக்கிவிட்டு, அவர்களை முன்னேறச் செய்வதே இந்த அரசாங்கத்தின் இலட்சியமாக இருக்கிறது" என்பதனை ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த வகையில் பார்த்தால் தமிழ்நாடு அரசாங்கம் சகல தரப்பு மக்களின் பாராட்டுதலையும் பெறத்தக்க வகையில் 1967-ம் ஆண்டில் இருந்து நல்ல பணியினை விரிவாகச் செய்து வருகிறதென்பது நமக்குத் தெரியும்.

இன்றைக்கு நம்முடைய அம்மையார் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் பேசும்போது விலைவாசி ஏற்றத்தைக் குறிப்பிட்டு நாசூக்காக ஒரு விஷயத்தை இங்கே குறிப்பிட்டார்கள். விலைவாசி உயர்வைக் குறிப்பிட்டு வரும்போது இந்த



1974 சனவரி 21] [திரு. ஜே. எஸ். இராசு]

நாடு எங்கே போய்க்கொண்டிருக்கிறது என்று கேட்டார்கள். இந்த நாடு என்று அவர்கள் குறிப்பிட்டது நிச்சயமாக தமிழ்நாடாக மட்டும் இருக்காது என்று நான் கருதுகிறேன். இந்திய நாடு முழுமையையும் அவர்கள் கூறியிருக்கவேண்டும். இங்கே மதிப்பிற்குரிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விலைவாசி உயர்வைப் பற்றிப் பேசுகின்ற எல்லா நேரத்திலும் திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள் 'இந்த நாடு' என்று குறிப்பிட்ட கருத்தை இதயத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பம்பாய் போன்ற பெரிய நகரங்களில் வாழ்கிற—அரசாங்க அலுவல்களில் உள்ளவர்கள் சென்னைக்கு மாற்றிக்கொண்டு வரலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். நம்மைப்போல் இட்டிலி, தோசை, பழையது சாப்பிடாமல் பம்பாயில் இருக்கிற பல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ரொட்டி, பன் போன்றவற்றை வெண்ணெயில் சேர்த்துச் சாப்பிடுகிற பழக்கத்தை வைத்திருக்கிறார்கள். நமக்குத் தெரிகிற கருத்தெல்லாம் குறைந்தபட்சம் பன் கூடக் கிடைக்காமல் அங்கேயுள்ளவர்கள் சிரமப்படுகிறார்கள் என்பதை பத்திரிகைகளில் வருகிற கட்டுரை வாயில்களாக அறிகிறோம். அந்த அளவுக்கு உணவுப்பொருள்கள் எதுவும் கிடைக்காமல் மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் சிரமப் படுகிற நிலையில் தமிழ்நாடு நிச்சயமாக உணவுப்பொருள் விஷயத்தில் தன்னிறைவு பெற்றிருப்பது பாராட்டப்படவேண்டிய அம்சமாகும்.

நேற்றையதினம் பேசிய பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். இன்றையதினம் பலபேர் கஞ்சி குடித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றார்கள். கஞ்சிக்குக் கூட வழியில்லாது பலபேர்கள் பல்வேறு மாநிலங்களில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறபோது கஞ்சியாவது இங்கே குடிப்பதற்கு முடிகிறதே என்பதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் கிட்டத்தட்ட முதல் பத்து பக்கங்களில் முக்கியமான விஷயங்களுக்கும் மேலாகவே விளக்கியிருக்கிறார்கள். அதுவும் குறிப்பாக தென்மேற்கு, வடகிழக்குப் பருவ மழை பொய்த்தும் நாம் உணவுத் துறையில்

[திரு. ஜே. எஸ். இராசு] [1974 சனவரி 21

தன்னிறைவு பெற்றிருக்கிறோம். என்றாலும், மழையையே நம்பியிராமல் நமது விவசாயப் பொருளாதாரத்தை வளப்படுத்த நாம் சிறிய நீர்ப்பாசனத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று சிலர் குறிப்பிட்டார்கள். நானும் மிக வறண்ட பகுதியைச் சேர்ந்தவனாதலால் சிறு நீர்ப்பாசனம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்தப் பாசனத்தை சிறிய நீர்ப் பாசனம் என்று குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

**திரு. ஜே. எஸ். இராசு:** நமது தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எஸ்.எம்.ஐ.பி. திட்டங்களின் மூலமாக சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதை நாம் அறிவோம். எங்கள் பகுதியிலும் பல சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றித்தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12.30)

அடுத்து, நமது அரசின் மிக முக்கியமான திட்டமான குடிசை மாற்று வாரியத்தைப் பற்றியும் நம்முடைய கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக ஆண்டு ஒன்றுக்குக் கிட்டத்தட்ட 4,000 குடியிருப்புகள் கட்டப் படுகின்றன. குடிசை மாற்று வாரியம் மூலமாகக் கடந்த 1947-லிருந்தே காரியங்கள் ஒழுங்காக ஆற்றப்பட்டிருக்குமானால், நிச்சயமாக இன்றைக்கு இவ்வளவு பெரிய பொறுப்பினை நமது தமிழக அரசு ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. என்றாலும்கூட, இந்தக் குடிசை மாற்று வாரியம் இன்னும் நல்லமுறையிலே பணியாற்ற நாமெல்லாம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தொழுநோய் பிச்சைக்காரர்களைப் பற்றி நிச்சயமாக நாம் குறிப்பிட்டாக வேண்டும். பாரதம் என்று சொல்லப்படுகிற இந்தப் புண்ணிய பூமியில் கிட்டத்தட்ட 20 லட்சம் பேர் தொழு நோய்க்கு ஆட்பட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்ல, பல மாநிலங்களிலும் தொழுநோய்க்காரர்கள் இருக்கிறார்கள். அதுபற்றி அந்தந்த மாநில அரசுகளோ அல்லது மத்திய அரசோ எந்த விதமான சிறப்புத் திட்டத்தையும் தீட்டி



1974 சனவரி 21] [திரு. ஜே. எஸ். இராசு]

தொழுநோயாளர்களுக்காக திட்டங்கள் உருவாக்கப்பட்டு, 10, 12
தொழுநோயாளர்களுக்காக திட்டங்களி உருவாக்கப்பட்டு, 10, 12 விடுதிகள் கட்டப்பட்டு, இன்றைக்கு அவர்களுக்கு வாழ்வும் நிம்மதியும் அளித்துவருவது மிகவும் பாராட்டப்பட வேண்டிய காரியமாகும்.

அடுத்து, குடிநீர் வாரியம். அறிஞர் அண்ணா அவர்கள் பாராளுமன்றத்திலே பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். காங்கிரஸ் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் எங்களுக்கு நீங்கள் எதையும் தரவேண்டாம், ஒரு குவளை தண்ணீர் தாருங்கள் என்று குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டி, 18 ஆண்டுக் காலத்திற்கு பிறகு—அப்பொழுது 18 ஆண்டுகள்தான் முடிந்திருந்தன—எங்களுக்கு எதுவும் வேண்டாம், ஒரு குவளை தண்ணீர் தாருங்கள் என்று கேட்கத்தக்க அளவுக்கு நாட்டை வைத்திருக்கிறீர்களே, இது நியாயமா என்று கேட்டார்கள். அந்தக் கேள்விக்கு விடையாகத் தான் நம்முடைய தமிழக அரசு குடிநீர் வாரியம் என்ற ஒன்றை அமைத்து, இன்றைக்கு நல்லமுறையிலே பணியாற்றி வருகிறது. கோவை நகரத்திற்கும் சென்னை நகரத்திற்கும் கூட குடிநீர் கொண்டு வருகிற பிரச்னை எத்தனை ஆண்டுகளாக ஒத்திப் போடப் பட்டிருந்தது என்பதையும் நாம் கண்டோம். நியாயமான கோரிக்கைகளைச் சொன்னால்கூட யாரும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், தமிழக அரசு அப்பிரச்னையை எடுத்துக்கொண்டு நிறைவேற்றி வருவதை நிச்சயமாகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றி சில சொல்ல ஆசைப்படுகிறேன். சிறிய நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றி நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். என்னுடைய தொகுதியிலே நடைபெறாத பல திட்டங்கள் இருக்கின்றன. புதுநடுவலூர் என்ற கிராமத்திலே ஒரு திட்டம் முடிவுறாமல் இருக்கிறது. அதைப் போல் ரங்கநாதபுரம், கோனேரிபாளையம் போன்ற இடங்களிலும் சிறிய நீர்ப்பாசனம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், பூலாம்பாடி என்ற ஊருக்கு அருகில் கலிங்க ஓடை திட்டம் ஒன்றையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜெ. எஸ். இராசு] [1974 சனவரி 21

போன மார்ச் பட்ஜெட்டிலே பேசும்போது, கல்லூர் பாலம் பற்றி அமைச்சர் அவர்கள், சென்டரல் ரோடு பண்டிலே இந்த திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்தத் திட்டம் மத்திய அரசுக்கு நம்முடைய அரசால் பரிந்துரை செய்யப்பட்டு அனுப்பி அடுத்த மார்ச்சும் வரப்போகிறது. ஆனால், இதுவரை அத்திட்டம் டெல்லியிலே முடங்கிக் கிடக்கிறது. நம்முடைய பொதுப்பணி அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் அந்தத் திட்டத்திற்கு ஒப்புதலை வாங்குவதற்கான முயற்சி எடுத்து, அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான பிரச்னை பெரம்பலூர் வட்டம் பற்றியது. பெரம்பலூர் வட்டம் திருச்சி மாவட்டத்திலேயே மிகப் பெரிய வட்டம். நேற்றையதினம் திருச்சியை இரண்டாகப் பிரித்து, புதுக்கோட்டை என்ற மாவட்டத்தை அமைக்கும் இலட்சக் கணக்கான மக்கள் கலந்துகொண்ட விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். இப்பொழுது புதுக்கோட்டை பிரிக்கப்பட்டுள்ளதால், என்னுடைய பகுதியினுடைய நீண்டகால கோரிக்கையும் தீர்க்கப்படும் என்று கருதுகிறேன். பெரம்பலூர் வட்டம் மிகப் பெரிய வட்டம். இரண்டு சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியது, 4 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கியது, அங்கு வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 6 இலட்சம். ஏறத்தாழ 2 இலட்சத்து 20 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். எங்களுடைய பகுதியிலே இருக்கிற ஒவ்வொரு குடிமகனும் முன்சீப் கோர்ட்டுக்குச் செல்ல துறையூருக்கும் அரியலூருக்கும் செல்ல வேண்டியிருக்கிறது. ஆர்.டி.ஓ. ஆபீசுக்குச் செல்ல வேண்டுமானாலும் அரியலூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இக்குறையைப் போக்க பெரம்பலூரையே தலைநகரமாக ஆக்கி, ரெவின்யூ டிவிஷன் ஹெட்குவார்ட்டர்ஸை அங்கே அமைத்துத் தாருங்கள் என்று நீண்டகாலமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

பொதுமக்கள், ஒன்றியத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், கணக்குப் பிள்ளை, பொது மக்கள் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து அந்தக் கோரிக்கையை வேண்டுகோளாக விடுக்கிறோம். ஆகவே, பெரம்பலூரிலேயே ரெவின்யூ டிவிஷனல்



1974 சனவரி 21] [திரு. ஜெ. எஸ். இராசு]

ஆபீஸ் ஏற்படுத்தும் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வசதி ஓரிடத்தில் இருப்பதால், அங்கேயே எல்லா அலுவலகங்களும் இருக்கின்றன. அரியலூரில் பல வசதிகள் இருக்கின்றன. ஆகவே, அங்கேதான் அனிமல் ஹஸ்பண்ட்ரி அலுவலகம், டி.எஸ்.பி. அலுவலகம், கோர்ட்டு, எல்லா ஆபீஸ்களும் ஓரிடத்திற்கே போய் விடுவதாலே, மிகப் பின்தங்கிய என்னுடைய பகுதி வளராமலே போய்விடுகிறது. ஆகவே, வளரக்கூடிய அந்த வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெரம்பலூர் வட்டத்தை தலைமையகமாகக் கொண்டு புதிய ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸ் ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டு வசதித் துறையின் மூலமாக பெரம்பலூரில் உள்ள ஒரு கோயில் நிலத்தை, 4 அல்லது 5 ஏக்கர் நிலத்தை, அரசுக்குத் தரத் தயாராக இருக்கிறோம். அதற்கான தீர்மானத்தை நாங்கள் போட்டிருக்கிறோம். அந்த நிலத்தைக் கையகப்படுத்தி, அரசாங்கத்திலே பணியாற்றுகின்ற என்.ஜி.ஓ.-க்களுக்கு வீடு கட்டித் தருகிற ஃபைல் தலைமைச் செயலகத்திலே இருக்கிறது. அந்த நிலத்தை வீட்டு வசதி வாரியம் மூலம் அக்வயர் செய்வதற்கும், வீடு கட்டித் தருவதற்கும் விரைவில் அரசு உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டு, என்னுடைய தொகுதியினைச் சிறப்பிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, பெரம்பலூர் பெரிய ஊராக இருந்தாலும், அங்கே இருக்கிற அரசு மருத்துவ மனையிலே படுக்கை வசதிகள் மிகக் குறைவாக இருக்கிறது. அதை விரிவாக்கித் தரவேண்டும். 12 அல்லது 20 பெட் கொண்ட புதிய வார்டை உருவாக்கித் தரவேண்டுமென்று வேண்டுகோள் விட்டிருக்கிறோம். அந்தக் கோப்பும் தலைமைச் செயலகத்தில் சம்பந்தப்பட்ட இலாகாவில் இருக்கிறது. அதையும் பார்த்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கே பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த ஆளுநர் அவர்களுடைய உரையைப் பற்றி எனக்கு முன்னே பேசிய ஆளும் கட்சியின் தோழமைக் கட்சி உறுப்பினர் நண்பர் பாரதி அவர்கள் இது பார்மல் ஸ்டேட்மென்ட், சீரியஸ்ஸாக இல்லை என்று சொன்னார்கள். நான் அந்த அறிக்கையைப் பார்க்கும்போது This is only a formal statement, a bland statement என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. குறிப்பாக, கைத்தறி தொழிலைப்பற்றி, இந்த உரையினுடைய 14-வது பாராவிலே சொல்லியிருக்கிறார். இந்த அறிக்கையைப் பார்க்கும்போது பள்ளிகளிலே மாணவர்கள் நடத்துகின்ற கையெழுத்து சஞ்சிகையாக இருக்கிறதே தவிர, அந்தக் கையெழுத்துச் சஞ்சிகை கூட இதைவிட விவரம் அடங்கியதாக, தெளிவான அறிவிப்புகளைக் கொண்டதாக இருக்கும் என்று சொல்ல நேரிட்டதற்காக நான் வருந்துகிறேன். குறிப்பாக கைத்தறியைப் பொறுத்தவரையிலே, ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள், கடுமையான நூல் பற்றாக்குறையும் நூல் விலை உயர்வும் ஏற்பட்டன என்று. ஆனால், இந்தக் கடுமையான பிரச்னையை, 1973-ல் இம்மாநிலத்தில் ஏற்பட்ட மிகமிகக் கடுமையான பிரச்னையைத் தீர்க்க அரசு என்ன செய்திருக்கிறது. அல்லது என்ன செய்ய எண்ணி உள்ளது என்பதை இதிலே பார்க்க முடியவில்லை.

கடந்த 1½ ஆண்டுகளுக்கு மேலாக நெசவாளர்களுக்கு பருத்தி நூல் கிடைப்பதில்லை, ஆர்ட் சில்க் நியாயமான விலைக்குக் கிடைப்பதில்லை, சுத்தப் பட்டு கிடைப்பதில்லை என்ற நிலைமை இருந்து வருகிறது. இந்த மாநிலத்திலே இந்த அரசிடம் இருக்கிற கூட்டுறவு ஆலைகளிலும் டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் ஆலைகளிலுமாக ஏறத்தாழ 16,000 பேல்கள் மாதம் ஒன்றுக்கு உற்பத்தியாவதாகத் தெரிய வருகிறது. இதிலே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படுவது 1,000 பேல்கள்தான். நம்முடைய மாநிலத்தினுடைய மொத்த தேவை 20,000 பேல்கள் என்று சொல்லப்படுகிறது. ஆக, பிற நெசவாளர்களின் தேவையில் 50 சதவிகிதத்திற்கு வழங்கக்கூடிய வசதி நம்மிடத்திலேயே இருக்கும் போது நெசவாளர்களுக்கு நூல் கிடைக்காமல் அவர்கள் அவதிப்படுகின்ற நிலைமை, பட்டினி கிடக்கின்ற நிலைமை, தற்கொலை செய்துகொள்ளுகின்ற நிலைமை, ஊரை விட்டு ஊர் போகிற நிலைமை ஏன் வந்தது ?





தொழில் அமைச்சர் அவர்கள் இங்கேயும் சொன்னார்கள், வெளியேயும் சொல்கிறார்கள், இந்த நிலைமைக்குக் காரணம் மத்திய அரசுதான் என்று. அங்கே பழி போடுகிறார்கள். இப்பிரச்னையைத் தீர்க்க மத்திய அரசும் முயற்சி செய்யவேண்டுமென்பதை நான் மறுக்கவும் இல்லை, செய்துதான் தீரவேண்டும். ஆனால், இப்படி சொல்லி, மத்திய அரசு மீது பழி போட்டு மாநில அரசு தப்பித்துக் கொள்ளக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழக அரசு நூல் விநியோகித்ததிலே பல தவறுகள், பல கோளாறுகள் இருந்தன என்பது எல்லோருக்கும் தெரியும். கூபா விநியோக திட்டத்தின்கீழ் இங்கு நீங்கள் நூல் விநியோகம் செய்தபோது போலிச் சங்கங்களுக்கும் போலி கார்டுகளுக்கும் பேல் கணக்கிலே நூல் வழங்கப்பட்டது என்பதையும், உண்மையான நெசவாளர்களுக்கு நூல் கிடைக்காத நிலைமை இந்த மாநிலத்திலே நிலவியதையும் யாருமே மறுத்துவிட முடியாது. இதனால் 1973 மார்ச் மாதம் 13-ந் தேதி, மத்திய அரசு யார்ன் கன்ட்ரோல் ஆர்டர், நூல் கட்டுப்பாடு உத்தரவு ஒன்றைப் போட்டது. நூல் உற்பத்திக்கு, நூல் விலைக்கு, நூல் விநியோகிக்க என்று அந்த உத்தரவின்கீழ் மூன்றிற்கும் கட்டுப்பாடு உத்தரவு போட்டார்கள். அந்த உத்தரவு போட்டதற்குப் பிறகுதான் இங்கே ஒதுக்கப்பட்ட நூல்கள் இங்கு ஒழுங்காக விநியோகமாகவில்லை. வேறு மாநிலங்களுக்குக்கூடபோன நிகழ்ச்சிகள் உண்டு. இந்த மாநிலத்திலே நடந்தது அது. அது மட்டுமல்ல, அந்த உத்தரவுக்கு முதலாளிகள் சுப்ரீம்கோர்ட்டிலே தடை பெற்றார்கள். அந்த உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்ட நிலை இருந்தது. அந்த நேரத்திலேயாவது இந்த அரசு தலையிட்டு டி.ஐ.ஆர். விதிகள் மூலமாகவோ அல்லது வேறு பல சட்டங்களைப் பயன்படுத்தியோ நியாயமான விலைக்கு நூல் கிடைக்கச் செய்திருக்கவேண்டும் ....

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி நடவடிக்கை எடுக்கும் பொழுது இந்த மன்றத்திலே உள்ள உங்கள் கட்சியினுடைய உறுப்பினர் அது தவறு என்று சொன்னார்கள். அதை நீங்கள் கவனித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சொல்வதையெல்லாம் கேட்டு அமைச்சர் அவர்கள்

நடந்தால் நன்றாக இருக்கும். இந்த ஒன்றிற்கு மாத்திரம் அவர்கள் சொன்னதாகச் சொல்லித் தப்பித்துக் கொள்ளக்கூடாது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், எந்தக் கட்சி உறுப்பினர், எந்த உறுப்பினர் அப்படிச் சொன்னார், என்ன சொன்னார் என்று சொன்னால் பரவாயில்லை. நாங்கள் சொன்னது எந்த காண்டெக்ஸ்ட்டிலே சொன்னோம், மின்சார விநியோகத்திலே செய்யப்பட்டதைப் பற்றிச் சொல்லும் பொழுது சொன்னோம். எந்த முதலாளியாக இருந்தாலும் தவறாக நடந்தால் நடவடிக்கை எடுத்தால் யாரும் மறுக்கப் போவது கிடையாது. அதைக் காட்டி பாரபட்சத்திற்கு இடம் கொடுக்கலாம் என்று நினைக்கிறீர்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த மன்றத்தினுடைய நடவடிக்கையைக் கூட மறைத்துவிடக்கூடாது. இந்த மாதிரி நூல் கொடுக்க மறுத்தபோது உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் எந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொன்னார்களோ அந்த நடவடிக்கைகளைத்தான் எடுத்தோம், அவர்கள் சுப்ரீம்கோர்ட்டுக்குப் போனார்கள், ஆனால் இங்கே அதைப்பற்றிப் பேசியபொழுது அம்மையார் அவர்கள் ஏன் போகவிட்டீர்கள் என்று கேட்டார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சுப்ரீம்கோர்ட்டுக்குப் போனதைப் பற்றி சொல்லவில்லை. கீழ்கோர்ட்டிலே தீர்ப்புச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தின்மீது குற்றம்சொல்கிற அளவிற்கு ஏன் பாரபட்சம் காட்டினீர்கள் என்றுதான் சொன்னேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கூட்டுறவுத் துறையிலே நியாயமான விலைக்கு நூல் கிடைப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது உண்மைக்குப் புறம்பானது என்பதை நான் மிக வருத்தத்தோடு சொல்லிக்கொள்வேன். மேலும் மத்திய அரசின் உத்தரவின்படியே தனி நெசவாளருக்குக் கொடுக்கப்பட்ட நூல் 7 சதவிகிதம் லாபம் வைத்து விற்றிருக்கிறது இந்த அரசு; ஆனால் தனியார் வியாபாரிகள் 1 சதவிகிதம், 2 சதவிகிதம் லாபம் வைத்து விற்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று சொன்னார்கள். . .



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்படிப் பேசி தனியாருக்கு ஆதரவு கொடுத்துவிடக்கூடாது. அதுவும் ஸ்டேட் சொஸைட்டி தான். அதிலே கிடைக்கின்ற லாபமும் அந்த அங்கத்தினர்களுக்குத்தான் போகிறது. ஆகவே, அவர்கள் தனியாருக்குப் பார்த்து பேசக்கூடாது. ஏன் ஸ்டேட் சொஸைட்டிக்கு கொடுக்கிறீர்கள். நாங்கள் 1 சதவிகிதம் மட்டுமே வைத்து தருகிறோம் என்று சொல்கிறார்கள் என்று சொல்லி அவர்களுக்கு ஆதரவு கொடுக்க நாம் முயலக் கூடாது. ஸ்டேட் சொஸைட்டியிலேயிருந்து எந்த சொஸைட்டி வாங்கினாலும் அந்த சொஸைட்டிக்குத்தான் அந்த லாபம் போகிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** நான் தனியாருக்கு ஆதரவாகப் பேசவில்லை. அதை மாற்றவேண்டுமென்று நினைப்பவன் நான். தனியாரே கேலி செய்கின்ற முறையில் அரசு நடந்துகொள்ளக் கூடாது என்பதைத்தான் நான் சொல்கிறேன். நூலே வாங்க முடியாமல் நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையில் போனஸ் கொடுப்பதுபோல் பின்னாலே கொடுத்தால் யார் வாங்குவது? நெசவாளர்கள் பட்டினி கிடந்து பலவிதமான அல்லல்களுக்கு ஆளாகியபிறகு, தற்கொலை செய்துகொண்ட பிறகு யார் வந்து போனஸை வாங்குவார்கள்? அவர்களுடைய வாரிசுகளா வாங்குவார்கள்? அது மட்டுமல்ல, ஆலை முதலாளிகள் ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் ஆகிய நான்கு மாதங்களில் கோவையிலே ஒரு ஸ்பின்டிலுக்கு ஒரு நாளைக்கு ஒன்றரை ரூபாய் முதல் இரண்டரை ரூபாய்வரையில் நிகரலாபம், நெட் பிராபிட்—உற்பத்திச் செலவு, தேய்மானச் செலவு போக—கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள். இன்றைக்கு லாபம் கொஞ்சம் குறைந்த உடனே முதலாளிகள் கூக்குரலிடுகிறார்கள். அவர்களுக்கு கோடி கோடியாகச் சம்பாதித்தாலும் திருப்தி ஏற்படாது. லாபம் குறைந்துவிட்டது என்று அரசே சொல்லிவிட்டால் சரியாக இருக்காது. . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கொள்ளையடித்தார்கள் முதலாளிகள் அதை மத்திய அரசு தடுக்க முன்வரவில்லை. இந்த அரசாங்கத்தின்மீது குற்றம் சொல்வது சரியல்ல, முதலாளிகள் கொள்ளையடித்தார்கள் என்று மத்திய அரசைக் கேட்டீர்களா, அது மட்டுமல்ல, இன்றைக்கு 8 கோடி ரூபாய் அளவிற்கு நூல் தேக்கம் இருக்கிறது, அதற்கு யார் பொறுப்பு? அதுபற்றி மத்திய

அரசாங்கத்தைக் கேட்டீர்களா? ஏதோ எங்களைப் பற்றிச் சொல்வதில் உங்களுக்குச் சுவை இருந்தாலும் உண்மையை மறந்துவிடக் கூடாது, உங்களுடைய ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கையின் விளைவாகத்தான் முதலாளிகள் கொள்ளையடிக்கிறார்கள், பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா என்று கேட்டீர்களா? இன்றைக்கும் இங்கே நூல் விற்பனையாகாமல் தேங்கிக்கிடப்பதால் இங்கேயுள்ளவர்கள் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்களே, அதைப்பற்றிச் சொன்னீர்களா?

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** கொள்ளையடிப்பதை நான் கண்டிக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. ஆட்சிப் பொறுப்பிலே உள்ள நீங்கள்தான் கண்டிக்கவில்லை. நிறைய லாபம் சம்பாதித்த பொழுது பேசாமல் இருந்தீர்கள். என்னைவிட அதிகமான அதிகாரங்களை வைத்துக்கொண்டு இருக்கின்ற நீங்கள் நடவடிக்கை எடுத்தால் நன்றாக இருக்கும். என்னைப் பொறுத்தவரையில் கொள்ளை லாபம் அடிப்பதைத் தடுப்பதற்கான முயற்சிகளில் எப்பொழுதும் ஈடுபட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நீங்கள் கண்டிக்கவில்லை என்று சொல்வது சரியல்ல. நீங்கள் முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கிறீர்கள் என்று தொழில் அமைச்சர் அவர்கள் உங்களைப் பற்றிச் சொல்லவில்லை. முதலாளிகள் கொள்ளையடித்தால் மாநில அரசு நடவடிக்கை எடுக்கின்றபோது அதற்கு மத்திய அரசு ஆதரவு தரவில்லை என்பதையும், இப்பொழுது இங்கே தேங்கிக் கிடக்கின்ற நிலைமையையும் மாநில அரசு மத்திய அரசுக்கு எடுத்துச்சொல்லியும் கேட்கவில்லை என்பதைத்தான் குறிப்பிட்டார்கள். தொழில் அமைச்சர் அவர்கள் தங்களைச் சுட்டிக்காட்டியதாகக் கருதிக்கொண்டு பேச்சைத் திருப்பிவிடுவது சரியல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இந்தமாதிரி விவகாரங்கள் இருக்கின்றன என்று சொல்லி தீர்மானம் கொண்டுவந்தால் எதிர்க் கட்சிகள் எல்லாம்—நாங்கள் எல்லாம் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொல்லி எத்தனையோ தீர்மானங்கள் போட்டு அனுப்பியும் மத்திய சர்க்காருடைய ஊறுகாய்ப் பானையில் அவை நன்றாக ஊறிக்கொண்டு இருக்கின்றன.





**திரு. ஏ. சுப்பிரமணியம் :** முதலாளிகளின்மீது என்ன நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசைக் கேட்டோம், அவர்கள் மறுத்துவிட்டார்கள் என்று நீங்கள் சொல்லவில்லை . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த மன்றத்திலே நாம் விவாதித்து இருக்கிறோம். நாம் எல்லாம் தீர்மானம் போட்டோம், எல்லோரும் ஆதரித்தார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இந்த மன்றத்தின் மூலமாக நாம் கேட்டது விநியோக உரிமையைத்தான் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கனம் உறுப்பினர் அவர்களுக்கு முன்னாலே இருக்கின்ற உறுப்பினரை நான்கூட கேட்டேன். உங்கள் அமைச்சரிடத்திலே நீங்கள் சொல்லுங்கள், அவர் வீட்டுக்கு நானே வருகிறேன், பேசலாம் என்று சொன்னேன். பத்து லட்சம் உற்பத்தி செய்கிறோம், நம்முடைய தேவை ஐந்தரை லட்சம்தான். தேவைக்கு மேலாக இரண்டு மடங்கு உற்பத்தி செய்தும் கள்ளச் சந்தைக்கு இடம்கொடுத்து இருக்கிறீர்களே என்று நீங்களும் கேளுங்கள், நானும் சொல்கிறேன் என்று சொல்லிப்பார்ப்போம் என்று சொன்னேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** நமக்குத் தந்த நூலை வினியோகித்ததிலேயே கள்ளச்சந்தை நடக்கிறது என்பதைப்பற்றிச் சொன்னால் மத்திய அரசின்மீது பழிபோட்டுத் தப்பித்துக்கொள்ளவேண்டாம். மத்திய அரசு தவறு என்று சொல்லி நீங்களும் தவறு செய்யக் கூடாது என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் மத்திய அரசின்மீது எந்தப் பழியும் போடவில்லை. நான் சொல்வது எல்லாம் நமக்கு அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்பதுதான். இதைத் தடுக்க வேண்டும் என்பதைத்தான் நாம் சொல்லியிருக்கிறோம். இதைப் பற்றி அந்த அமைச்சரிடத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு மணி நேரம் வாதாடினார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக் கொண்டுகூட சரியான முறையிலே அதைப் பயன்படுத்தாமல் குறைகள் ஏற்படுகின்றன என்பதை நம்முடைய மாநிலம் முழுமையும் அறியும். இந்த அரசினிடத்திலே ஒரு அறிக்கை

இருக்கிறது. இந்த அரசு சந்தானம் அவர்கள் தலைமையிலே ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டி போட்டது 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலே. அந்த ஆணையிலே சொல்லப்பட்டிருக்கிறது, "பிரச்னைகளுக்குத் தீர்வு காணுவதற்காக உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்ற நிலைமை இருக்கிறது" என்று அரசு திருப்திபட்டதற்குப் பிறகுதானே அப்படிப்பட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது? அந்த கமிட்டி 1973 ஆம் ஆண்டுபிப்ரவரி மாதம் அறிக்கை கொடுத்துவிட்டது. அறிக்கை கொடுக்கப்பட்டு 11 மாதங்கள் ஆகியிருக்கின்றன. அந்த அறிக்கை தான் வெளிச்சத்திற்கு, இந்த அவைமுன், வந்திருக்கிறது. உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கமிட்டி ஒரு காம்ப்ரஹன்சிவ் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது, அதிலே எல்லாவகை பிரச்னைகளுக்கும் வழிவகை சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிற ஏதாவது ஒரு கருத்தை எடுத்துச்சொல்லி இந்த அரசாங்கம் தயக்கம் காட்டியது என்று சொன்னால் நான் அதற்குப் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். அதிலே நூல்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் ஏற்கனவே மத்திய அரசுக்கு அதைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறோம்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ஒரு கமிட்டியை அமைத்த அரசு, அந்தக் கமிட்டியின் அறிக்கை வெளியிடப்படும்பொழுது அதைப் பற்றி அரசின் கருத்துக்களையும், எடுக்க எண்ணும் நடவடிக்கைகளையும் கூடவே தெரிவிக்க வேண்டும். அதுதான் நடவடிக்கை எடுப்பதற்கான பொருள். இதுவரையிலே அந்த அறிக்கையைப் பற்றி அரசு என்ன நினைக்கிறது. அந்த பரிந்துரைகளை ஏற்றுக் கொள்கிறதா, அல்லது எதையெதை ஏற்றுக்கொள்கிறது. எதையெதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அறிக்கையைப் படித்துப் பார்க்க வேண்டும். அதிலுள்ள முக்கியமான சிபார்சுகளிலெல்லாம் இந்த அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்திருப்பது பத்திரிகையிலும் வந்திருக்கிறது. அறிக்கையைப்பற்றி காலதாமத



மாகிவிட்டது என்று சொல்லி விட்டுவிடக்கூடாது. சிபார்சுகளைப் படித்துப் பார்க்க வேண்டும். அதிலே இந்த அரசாங்கம் என்ன செய்திருக்கிறது, என்ன செய்யவில்லை என்பதைப்பற்றி சொல்ல வேண்டும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** துரதிருஷ்டவசமாக எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நேரம் குறைவு. இல்லையென்றால் இந்த அரசு செய்யக்கூடியது என்னென்ன இருக்கிறது, செய்யாமல் விட்டது என்னென்ன இருக்கிறது என்று தெளிவாகச் சொல்ல முடியும். ஆனால் அதற்கு நேரம் கிடையாது. எனவே பிறிதொரு நேரத்தில் அதைச் சொல்ல நேரம் கிடைத்தால் சொல்கிறேன். அமைச்சரிடத்திலும் தனியாகச் சொல்கிறேன். நெசவாளர்கள் அல்லல்படுகிறார்கள். சின்னாளப்பட்டி, சித்தையன்கோட்டை, சேலம் ஆகிய இடங்களில் ஆர்ட் சில்க்கைப் பொறுத்தவரையில் . . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஆர்ட்சில்கைப் பற்றிச் சொல்வதால் சொல்கிறேன். மத்திய அரசு முதலாளிகளுக்குச் சார்பாக அவர்கள் அமைத்த குழுவிலே அவர்களை மெஜாரிட்டியாகப் போட்டதால் இந்தத் தொல்லைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. நம்முடைய அரசாங்கம் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது, இந்த ஆலை அதிபர்களிடம் கொடுக்காதீர்கள், அசோசியேஷன் என்ற பெயரிலே கொள்ளையடிப்பவர்களிடம் கொடுக்காதீர்கள், அரசாங்கத்திடம் ஒப்படையுங்கள், சர்வ கட்சி கமிட்டி போட்டு கூட்டுறவுத் துறை மூலம் கொடுக்கி[illegible] என்பது எங்களது திட்டவட்டமான கொள்கை, உ[illegible]டைய கொள்கை என்ன ?

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ஆர்ட் சில்கைப் பொறுத்தவரையில் அதையும் சொல்கிறேன். ஆர்ட்சில்க் நியாயவிலை ரூ. 8, 9 இருந்தது, தீபாவளிக்கு முன்னால் 30 ரூபாய் வரை ஏறிற்று ; பிறகு 14 ரூபாயாகக் குறைந்தது. இப்பொழுது மீண்டும் 18 ரூபாயாக ஏறியிருக்கிறது. கொள்கை என்ன என்று சொல்கிறேன். ஆர்ட் சில்கைப் பொறுத்தவரையில் செண்ட்ரல் கமிட்டி ஒழித்துக் கட்டப்பட வேண்டியது என்று பலமுறை சொல்லியிருக்கிறேன். ஆனால் செண்ட்ரல் கமிட்டியினுடைய கிளை என்ற வகையில் ரீஜனல் கமிட்டி போடப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் நெசவுத் தொழிலுக்கும் சம்பந்தமில்லை.

[1974 சனவரி 21

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதே கேள்விகளைத்தான் நாங்கள் மத்திய அரசிடத்திலே கேட்கிறோம். நாங்கள் பே... தெல்லாம் நெசவாளர்கள். ஆனால் ஆலை முதலாளிகளை, ... நாட்டிலே குடியிருக்காத ஒருவரை, இந்தத் தொழில் சம்ப... படாதவரை போட்டிருக்கிறார்கள். அந்தப் பெயரையும் நல்... சுப்பிரமணியம் அவர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள். டெ... யிலே மத்திய அமைச்சரிடத்திலே இதைப்பற்றிச் சொன்ன... பொழுது அவர்கள் சிரித்துக் கொண்டே அப்படியும் நடக்கிறதா என்று கேட்கிறார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** மத்திய அரசு எதைச் செய்திருக்கிறதோ அதைத்தான் இவர்களும் செய்கிறார்கள். இந்த மாநிலத்திலே. . .

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அவர்கள் உண்மையை அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். சேலத்திலே ஒரு முதலாளி, இந்த நாட்டுக்கே சொந்தமில்லாத முதலாளி எப்படி போடப்பட்டார்? இது பற்றி நம்முடைய அரசாங்கத்தால் மத்திய அரசாங்கத்திற்குச் சொல்லப்பட்டிருக்கிறது. உங்கள் கட்சியின் கொள்கை என்ன ?

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** என்னைப் பொறுத்தவரையில் இந்தக் கமிட்டி ஒழிக்கப்பட வேண்டும். மாநிலக் குழுவில் உங்களால் போடப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் நெசவாளர்கள் என்று சொல்ல முடியுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாங்கள் போடுவதில்லை. நம்முடைய அரசாங்கம் சிபார்சு செய்தது கூட்டுறவு சம்பந்தப்பட்ட நெசவாளர்கள். ஆனால் மெஜாரிட்டி முதலாளிகள். பெரு முதலாளி, பெயரை மறந்திருந்தால் உங்களுக்குப் பின்னாலிருக்கும் சுரேந்திரன் அவர்களைக் கேட்டால் சொல்லுவார்கள்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** ரீஜினல் கமிட்டியில் உள்ள மூவர் அமைச்சரின் சிபார்சின்பேரில் போடப்பட்டுள்ளனரா இல்லையா ?



1974 சனவரி 21]

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வாதத்திற்காக ஒரு அவறைக் கூறித் தப்பித்துக் கொள்ளக்கூடாது. நம்முடைய அரசின் சார்பில் நெசவாளர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மெஜாரிட்டி அந்த முதாலாளிகளும், தனியார் துறையினரும்தான். ஒருவர் இந்த நாட்டிற்கே சொந்தமில்லாதவர். எனவே நானும் போட்டேன் என்று சொல்வதில் பயன் இல்லை. உண்மையைப் பேச வேண்டும். நாம் போடுவது நெசவாளர்களை மட்டும்தான். ஆனால் அவர்கள்தான் மெஜாரிட்டி. இதை இல்லை என்பதோ, பொய் பேசுவதோ தேவையில்லை. அந்த அமைச்சரிடத்திலேயும் நேரடியாகச் சொல்லப்பட்டு அவரும் வருத்தப்பட்டார். அந்தப் பெயரை சுப்பிரமணியம் அவர்கள் சொன்னால் சுவையாக இருக்கும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** பெயரை அமைச்சரே சொல்லலாம். அப்பொழுது நாட்டுக்கும் தெரியும். இங்கே போட்ட ரீஜினல் கமிட்டியிலே அவர்கள் போட்ட 3 பேர்களையும், நீங்கள் போட்ட 3 பேர்களையும் சொன்னால் நாட்டிற்குத் தெளிவாகத் தெரியும். (மணி யடிக்கப்பட்டது) இன்னும் கொஞ்சம் நேரம் கொடுக்க வேண்டும். இது முக்கியமான பிரச்னை.

இந்த அட்வைசரி கமிட்டி, சர்வ கட்சி கமிட்டி அமைப்பது பற்றி என் கருத்து என்ன என்று அமைச்சர் கேட்டார். மத்திய அரசின் உத்தரவில் கண்டிருந்தபடி மாநில மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் சர்வகட்சி கமிட்டிகள் அமைக்க வேண்டுமென்று நானே அமைச்சரிடத்திலே சென்ற வருஷம் பலதடவை வற்புறுத்தினேன். ஆனால் அக்கமிட்டிகளை நீங்கள் இன்னும் அமைக்கவில்லை. அது ஏன் என்று சொல்ல வேண்டும். தவறுகளைக் கண்காணிப்பதற்காக வட்டாரக் கமிட்டி அமைக்க வேண்டும். அதைக் கண்காணிக்க மாவட்ட கமிட்டி போட வேண்டும், அது சரியாக இருக்கிறதா என்று பார்க்க மாநில ஆலோசனைக் கமிட்டி போடவேண்டும் என்று சொன்னதைச் செய்யவில்லை. மத்திய அரசின் உத்தரவு இருந்தும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேலத்தில் ஒரு கமிட்டி போட்டார்கள். ஆனால் எங்களால் இந்தக் கமிட்டியில் இருக்க முடியாது, இருப்பதால் பயனில்லை, அசிஸ்டெண்ட் டைரக்டரின் தவறுகளை எங்களால் திருத்த முடியவில்லை என்று ஆளுங்கட்சி உறுப்பினர் உட்பட

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 சனவரி 21

அனைத்து உறுப்பினர்களும் இராஜினாமா செய்தார்கள். அதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள்?

சந்தானம் கமிட்டியின் அறிக்கையிலே பல பரிந்துரைகள் உண்டு. அவற்றில் பலவற்றை ஏற்றுக்கொள்ளலாம். சிலவற்றைத் திருத்தவேண்டும். உதாரணமாக கூலித் தொழிலாளர்களைப்பற்றிச் சொல்லும்போது கூலி நிர்ணயத்தை மிகவும் ஜாக்கிரதையாக செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இன்று ஒரு நெசவுத் தொழிலாளிக்கு அதிகப்பட்சமாக 3 ரூபாய்க்கு மேல் கிடைக்கவில்லை. மாதம் 300 ரூபாய் கிடைக்கும் நிலை உண்டாக வேண்டும். முந்தா நாளும் நேற்றும் சேலத்திலே மாநில கைத்தறி நெசவாளர்கள் மாநாடு நடந்திருக்கிறது. அதில் அரசியல் பற்றிப் பேசவில்லை. அமைச்சரவர்கள் அடிக்கடி சொல்வார்கள் அரசியல் அரசியல் என்று. ஆனால் அங்கே தொழில் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப்பற்றிப் பேசி தீர்மானம் போட்டிருக்கிறோம், 35 தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம். அதை அமைச்சரிடத்தில் கொடுக்கிறேன். அதன் அடிப்படையில் சந்தானம் கமிட்டி அறிக்கையிலே திருத்தம் செய்து அதை அமல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் நெசவுத் தொழிலைப்பற்றி ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்ல விரும்புகிறேன். அவைகளை நிறைவேற்ற இந்த அரசாங்கத்திற்கே அதிகாரம் உண்டு, மத்திய அரசு சம்பந்தப்படாத விஷயங்களைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். சென்ற ஆண்டு நெசவாளரின் "ரீஹேபிலிடேஷனு"க்காக—புனரமைப்புக்காக—100 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது. அமைச்சரவர்களுக்கும், முதலமைச்சரவர்களுக்கும் தெரியும், அது 'ரீஹேபிலிடேஷனுக்'காகப் பயன்படவில்லை, ஏதோ கொஞ்ச நாள் கஞ்சி குடிக்கத்தான் பயன்பட்டது என்பது. எனவே அதை வஜா செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல் சென்ற வருடம் கிளர்ச்சிகளில் ஈடுபட்டவர்கள்மீது சேலம், சங்கரன்கோயில் போன்ற இடங்களில் வழக்குகள் இருக்கின்றன. ஓராண்டுக்கு மேலே அப்படியே இருக்கிறது. ஆகவே, நெசவாளர்களின் நலனை எண்ணி அந்த வழக்குகளை உடனே வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 சனவரி 21] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

அரசு உத்தியோகங்களில் பிற்பட்ட மக்களுக்கு இருப்பதைப் போல் நெசவாளர்களுக்கும் ஒதுக்கீடு செய்து சலுகை காட்டப்பட வேண்டும். குறிப்பிட்ட சதவிகிதம் நெசவாளர்களுடைய பிள்ளைகளுக்கு என்று ஒதுக்கிச் செய்ய வேண்டியதை நியாயமாகச் செய்ய வேண்டியதாகும். அடுத்து நெசவாளர் காலனிகள் கட்டப்பட்டிருக்கின்றன. பல ஆண்டுக்காலமாகப் பணம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. இந்த பாக்கியை வஜா செய்துவிட்டு காலனி வீடுகளை அவர்களுக்குப் பட்டா செய்து தருவது சரியானதாக இருக்கும்.

அடுத்து, என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்னையைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டுமென்பது அரசின் நோக்கம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய மாவட்டம் வரட்சியான மாவட்டம் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த மாவட்டத்தின் பாசனத்திற்காக குந்தா கழிவு நீர்த் திட்டம் என்று ஒரு திட்டத்தை முந்தைய அரசு போட்டிருந்தது. இந்த அரசு வந்தபின் அது கழிவு நீரிலேயே போய்விட்டது. ஏன் அப்படிப் போனது, என்ன ஆயிற்று என்றபொழுது பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்தைக் கொண்டுவரலாம் என்று சொல்லப்பட்டது. ஆனால் இத்திட்டத்திற்கு கேரள அரசின் ஒப்புதல் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். எனவே நம்முடைய அதிகார எல்லைக்குட்பட்ட இந்த குந்தா திட்டத்தையாவது நிறைவேற்ற வேண்டும். அங்குள்ள விவசாயிகள் வேளாண்மையையே விட்டுவிட்டு பராரிகளாகப் போகும் நிலை இருக்கிறது. எனவே அப்படிப்பட்டவர்களுக்கு இந்தப் பாசனத் திட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவாணி திட்டம் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டாவதாக அடிக்கல் நாட்டப்பட்ட பொழுது சொன்னார்கள். கோவை மட்டும் அல்ல, சிங்காநல்லூர், பல்லடம் பகுதிகளுக்கும் பயன்படும் என்று சொன்னார்கள். ஆனால் கவர்னர் உரையில் வழியில் உள்ள நகரங்கள், கிராமங்களுக்கு வழங்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சிறுவாணித் திட்டத்தின் மூலம் அது கோவைக்கு வருகிற வழிகள் மட்டுந்தான் பயன்பெறுமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

நெல்லித்துறைத் திட்டத்திற்கு 1971-ம் ஆண்டில் இந்த அரசு

(பிற்பகல் 1-00)

ஒப்புதல் அளிப்பதாகக் கூறினார்கள். அப்போது பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த தற்போதைய ரெவின்யூ அமைச்சர் திரு. சாதிக்பாட்சா அவர்கள் உறுதியளித்தார்கள். அது என்ன வாயிற்று? அது நிறைவேற்றப்பட்டால்தான் என்னுடைய தொகுதியில் இருக்கும் பல கிராமங்களுக்குக் குடிநீர் கிடைக்கும். அந்தத் திட்டம் பற்றியும் அரசும், குடிநீர் வாரியத் தலைவர் அவர்களும் முன் முயற்சி எடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

**திரு. செ. கந்தப்பன் :** ஒரு கிளாரிபிகேஷன் கூற விரும்புகிறேன். கேரள-தமிழக அரசு ஒப்பந்தப்படி நெய்பர்ஹூட் ரீதியில் எது எதற்கு அரசு உறுதி கொடுத்திருக்கிறதோ அத்தனையும் இதில் அடங்கியிருக்கிறது என்ற விவரத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் அவர்களுடைய பிரசங்கம் சர்க்காருடைய கொள்கைப் பிரச்சினையாக இருக்க வேண்டும். ஆனால் இங்கு கொடுத்திருப்பது இந்தச் சபையில் ஒரு வருஷ காலமாகக் கொடுத்து வந்திருக்கக் கூடிய பதில்களைத் தொகுத்து விளக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளை எப்படித் தீர்க்கப் போகிறோம் என்று விளக்கமாகச் சொல்லப்படவில்லை.

உணவுப் பற்றாக்குறை, சிமென்ட் பற்றாக் குறை, மின்சாரப் பற்றாக்குறை, நிலக்கரிப் பற்றாக்குறை, பெட்ரோல் பற்றாக்குறை என்ற நிலையில் மிக நெருக்கடியான நிலைமை இருக்கிறது. தேசத்தின் பல பகுதிகளில் மக்கள் அவற்றை எல்லாம் எதிர்த்துப் போராடுகிறார்கள் என்று சொன்னால் சர்க்காருடைய கொள்கை என்ன?





1972-ம் ஆண்டுக்குள்ளாக இந்த நாட்டில் நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்து விடுவோம் என்றார்கள். 52 கோடி ஜனங்களில் 30 பங்கு ஜனங்கள் தினம் ஒன்றுக்கு ஆறு அணாவுக்கும் குறைவாகச் சம்பாதிக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு 1972-ம் ஆண்டுக்குள்ளாக நிலம் இல்லாத விவசாயிக்கெல்லாம் நிலத்தைக் கொடுத்து விடுவதாகச் சொன்னார்கள். அதன் காரணமாக கிராமப் புறங்களில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும் என்றார்கள். அந்த அடிப்படைக் கொள்கையை வைத்து காங்கிரஸ் 1971-ல் தேர்தலில் நின்றது. நடைமுறையில் என்ன? அதை மாநிலப் பொறுப்பாக விட்டு விட்டார்கள். மொத்த உணவு தானியத்தை மேற்கொள்வோம் என்றார்கள். அதைச் சரியாக அமல் நடத்தாமல் விட்டு விட்டார்கள். மார்க்கட்டின் சர்ப்ளஸ் பூராவையும் கொள்முதல் செய்வதற்குப் பதிலாக மார்க்கட்டட் சர்பிளஸை மட்டும் வாங்கியதால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் இதற்குப் பரிகாரம் செய்வதற்குப் பதிலாக, முற்போக்கான நடவடிக்கைகளை எடுப்பதற்குப் பதிலாக பிற்போக்குச் சக்திகளுக்கு சரண்டர் ஆகிவிட்டார்கள். பொருளாதார ரீதியிலும், அரசியல் ரீதியிலும் நல்ல முறையில் செயல்படவில்லை. சிண்டிகேடர்களுடன் கூட்டு, பம்பாயில் சிவசேனாவுடன் கூட்டு—எப்படி பிரச்சினை தீரும்? சிறு சிறு சீர்திருத்தங்கள் காரணமாகப் பாதிக்கப்பட்ட முதலாளிகள் பெரிய அளவுக்குச் சர்க்காரை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். நேரடியாக ஜனங்களோடு கலந்து தங்களுடைய அதிகாரத்தைக் காப்பாற்ற முடியாது என்ற காரணத்திற்காகப் போராட்டங்களைத் தூண்டி விடுகிறார்கள். கர்நாடகத்திற்கும் பம்பாய்க்கும் போராட்டம். ஜனங்களைத் தூண்டிவிட்டு சர்க்காரைக் கவிழ்க்க வேண்டும். புரட்சி நடத்த வேண்டும். சுதந்திரம் ஏற்பட்டதால் வந்த நன்மை குலையும் வகையில் சட்டசபையைக் கலைக்க வேண்டும், பார்லிமெண்டைக் கலைக்க வேண்டும், சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் நடந்து வருகிறது. இந்திரா காந்தியம்மையார் டில்லியில் பேசுகிறார்,

External forces linked with internal reactionaries. என்று சர்க்காரைக் கவிழ்க்கக்கூடிய நிலைமையில் நடக்கிறார்கள் இப்படிப்பட்ட நிலைமையைத் தவிர்க்க நாட்டில் இருக்கும் முற்போக்கு, இடது சாரிகள் ஒன்றாகச் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

[திரு. என். கே. பழனிசாமி] [1974 சனவரி 21

திட்டம் போட்டுக் கொண்டே இருக்கிறார்கள். உர நெருக்கடி இருக்கிறது. பெஸ்டிசைட்ஸ் நெருக்கடி இருக்கிறது. ஒரு போகத்தை இரண்டு போகமாக்கி, மூன்று போகமாகவும் செய்திருக்கிறோம். அடிப்படையானது உரந்தான். உரம் இல்லாவிட்டால் ஹைபிரிட் வெரைட்டியில் உற்பத்தி செய்ய முடியாது. பூச்சி மருந்தை எடுத்து ஒவ்வொரு வருஷமும் போடுவதால் இம்யூனிடி அதிகரித்துக் கொண்டே போகிறது. புதுப் புது மருந்துகள் தேவைப்படுகின்றன. உரப்பற்றுக்குறை, பெஸ்டிசைட்ஸ் பற்றுக்குறை காரணமாக எந்த அளவுக்கு டார்கெட்டைப் பூர்த்தி செய்யப் போகிறோம் என்று தெரியவில்லை. திட்டத்தை எடுத்துக் கொண்டால் 57 ஆயிரம் கோடி ரூபாய்க்குப் போட்டிருக்கிறார்கள். 1973-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையில் 23 பங்கு விலை ஏறியிருக்கிறது. திட்ட காலத்தில் 40 சதவிகிதம் அதிகப்படியாக விலை ஏறப் போகிறது. குறிக்கோள் என்ன? 24 ரூபாய் மாத வருமானம் வரக்கூடிய ஆட்களுக்கு 29 ரூபாய் ஐந்து வருஷம் கழித்து வரும். நடைமுறையில் 40 சதவிகிதத்திற்கு மேல் விலை ஏறிவிட்டது.

திட்டத்தில் நெருக்கடி, உணவுப் பிரச்சினையில் நெருக்கடி. இவ்வளவு பெரிய நெருக்கடி காலத்தில் ரஷ்யா உணவு கொடுக்கிறது, உரத்தைக் கொடுக்கிறது, கெரோசின் கொடுக்கிறது. அவர்கள் வந்து உதவி செய்கிறார்கள். 15 வருஷ கால ஒப்பந்தம்—ஸயன்ஸ் டெக்னாலஜி போன்றவற்றை அபிவிருத்தி செய்வது, திட்டத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்வது. சுதந்திரத்திற்கு எந்தவிதமான குந்தகமும் கிடையாது. சுதந்திரத்தைப் பாதுகாத்துப் பலப்படுத்துவது, காலகட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவது, இப்படிப்பட்ட பெரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தும்கூட ஒருவர்கூட அதைப் பற்றிச் சொல்லாதது பெருத்த ஆச்சரியமாக இருக்கிறது.

பெருமளவுக்குக் கொள்முதல் செய்ய முடியாமல் திண்டாடக்கூடிய நிலைமை இருக்கிறது. உணவுப் பொருள்களுக்கு 75 ரூபாய், கோதுமை 100 ரூபாய் என்று விலை நிர்ணயித்திருக்கிறார்கள். மார்க்கட்டுக்கு எந்த அளவுக்கு வந்ததோ அதைவிடக் குறைவாக இருக்கிறது. மகாராஷ்டிராவில் இரண்டு லட்சம் டன் கொள் முதல் செய்யத் திட்டமிட்டு 80,000 டன்தான் கொள்முதல்



1974 சனவரி 21] [திரு. என். கே. பழனிசாமி]

செய்ய முடிந்திருக்கிறது. தமிழ்நாட்டில் 6 லட்சம் டன் கொள் முதல் செய்யத் திட்டமிட்டு 1,20,000 டன்தான் கொள்முதல் செய்திருக்கிறார்கள்.

12 லட்சம் ஏக்கராவில் நெல் விளைவிக்கத் திட்டமிட்டு 7½ லட்சம் ஏக்கரில் இரண்டு போகம் விளைவிக்கத் திட்டமிருக்கிறது. ஜனங்களின் தேவைக்குப் போக எட்டு லட்சம் ஏக்கரில் ஒரு ஏக்கருக்கு 7 லட்சம் டன் நெல் உற்பத்தியாகிறது. இதைச் சரியான முறையில் வெளியில் கொண்டு போய் விற்றால் 40 கோடி ரூபாய் லாபம் கிடைக்கும். சர்க்காரே நேரடியாகக் கொள்முதல் செய்யாமல் சிவில் சப்ளைஸ் அதிகாரிகளிடம் ஆங்காங்கு ஆயிரம் ரூபாய் கொடுத்து கொள்முதல் செய்யச் சொல்லுகிறார்கள். ஆயிரம் ரூபாய்க்கு எத்தனை மூட்டை நெல் வாங்க முடியும்? பக்கத்து மாநிலங்களுக்கு அதிகப்படியான விலைக்கு விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. சர்க்கார் நிர்ணயித்த விலைக்கு நெல்லைக் கொடுக்க ஜனங்கள் தயாராக இருக்கிறார்கள். பின் ஏன் அவற்றை எல்லாம் கொள்முதல் செய்யக்கூடாது? அதைக் கொள்முதல் செய்து விற்றால் 40 கோடி ரூபாய்க்கு மேல் லாபம் வரும். மது விலக்குப் பிரச்சினையைக் கூடத் தீர்த்துவிட முடியும். பக்கத்து மாநிலத்திலிருந்து தண்ணீர் கேட்கலாம். பருப்பு முதலியவற்றைக் கேட்கலாம்.

கரும்பு விலை குறைந்து விட்டது. யாருக்கு லாபம்? இரண்டு லட்சம் டன் கரும்பு உற்பத்தியாகும் இடத்தில் 3 லட்சம் டன் உற்பத்தி செய்தால் ஒரு லட்சம் ரூபாய்க்கு ரிபேட் கொடுக்கிறார்கள். மில்களுக்குக் கோடிக்கணக்கான ரூபாய் லாபம். கொஞ்சமாக முதல் போட்டு மூன்று நான்கு பங்கு லாபம் அடைகிறார்கள். கொள்ளை லாபம் அடைகிறார்கள். சர்க்கரை ஆலைகளை ஏன் சர்க்கார் எடுத்து நடத்தக்கூடாது?

யு.பி.யில் 8.4 சதவிகித ரெக்கவரிக்கு ரூ. 135 கிடைக்கிறது. இங்கு 8.5 சதவிகிதத்திற்கு ரூபாய் 85. சில மில்களுக்கு மட்டும் ஐந்து ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். யு.பி. சர்க்கார் எடுத்திருக்கும்போது நாம் ஏன் இதை நாஷனலைஸ் செய்யக் கூடாது என்று கேட்கிறேன்.

[திரு. என். கே. பழனிச்சாமி] [1974 சனவரி 21

இன்று பஞ்சாலைகளை எடுத்துக்கொண்டால், மீனாட்சி மில்ஸ் மூடப்பட்டிருக்கிறது. விக்கிரமசிங்கபுரம் மில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்பே மூடப்பட்டுவிட்டது. விவகாரம் வந்து மில்லை மூடிவிட்டால் இருக்கிற மில்லை அதிக விலைக்கு விற்க முடியும். அதோடு விவசாயிகளிடமிருந்தும் குறைந்த விலைக்கு பஞ்சு வாங்க முடியும், ஆலை ஓடவில்லை என்று சொல்லி. ஆகவே நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், எந்தக் காரணத்தைக் கொண்டும் லாக் அவுட் கூடாது என்று அரசு அதை தடை செய்யவேண்டும்.

இன்று நமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிற தொகை, 626 கோடி ரூபாய். இது மொத்த மத்திய தொகுப்பில் 5.4 சதவிதமே யாகும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆறாவது பினான்ஸ் கமிஷனில் 5 சதவிகிதம் சேர்த்துக் கிடைத்திருக்கிறது. ஆக்ஸிலரி எக்ஸைஸ் ட்யூட்டி நமக்கு 20 சதவிகிதம் வர வேண்டும். அது வர வில்லை கார்பரேட் செக்டாரில் இருந்து வரவேண்டிய பங்கு வர வில்லை.

விற்பனை வரியை மாற்றி அமைக்க வேண்டுமென்ற கோஷம் இங்குள்ள ஏகபோக முதலாளிகளின் கோஷம். அதற்கு சர்க்கார் வக்காலத்து வாங்கவேண்டியதில்லை. விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்லி விற்பனை வரியை நிறுத்தி வைத்தீர்களே? எந்த அளவிற்கு விலைவாசி குறைந்திருக்கிறது?

முதல் அமைச்சர்கள் மாநாட்டில் என்ன சொல்ல வேண்டு மென்று கேட்டார்கள். நிறையப் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவேண்டும். அவர்களை வைத்து யார் யார் கள்ள மார்கெட்டில் ஈடுபட்டிருக் கிறார்கள், யார் யார் வரி ஏய்க்கிறார்கள் என்பதைக் கண்டு பிடிக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது).

திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த தலைவர் தந்தை பெரியார் அவர்களுக்கு எனது அஞ்சலியைத் தெரிவித்துக் கொண்டு மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



1974 சனவரி 21] [திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி]

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் செலவாகும் தொகையில், ரூபாய் 1,200 கோடியில் முக்கியமான துறைகளில் செலவிடுவதற்கு ஒதுக்கியுள்ள ரூபாய் 548 கோடி. இந்த 548 கோடி ரூபாயில் முக்கியமாக மின்சாரத்திற்காக 326 கோடி ரூபாயும், பாசனத்திற்காக 129 கோடியும், நகர்ப் பகுதி களிலும் நாட்டுப்புறத்திலும் குடி தண்ணீர் வசதிக்காக 93 கோடி ரூபாயும் ஒதுக்கியிருப்பதை உள்ளபடியே தமிழக மக்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதேபோல் சிறு பாசனத் திட்டத்திற்காக 14 திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ. 15.90 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் 19 புதிய நடுத்தரத் திட்டங்களுக்காக 15 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதே போல் புதிய ஏரிகளை அமைப்பதற்கும், உள்ள ஏரிகளைச் சீரமைப் பதற்கும் சிறு பாசன சிறப்பு வேலைத் திட்டத்தின்கீழ் 30 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது 27,000 கண்மாய்கள், ஏரிகள் இவற்றைப் பராமரிப்பதற்காக 15 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக் கிறது இந்த உரையில்.

அதேபோல் பசுமைப் புரட்சித் திட்டத்தின் அடிப்படையில் ஐந்தாவது திட்டக் காலத்தில் 10,000 வடிமுனைக் குழாய்க் கிணறுகள், 12,500 குழாய்க் கிணறுகள் இறக்கவும், சாதாரணக் கிணறுகளில் 400 துளைகள் போடவும், 10,000 கிணறுகளை ஆழப் படுத்தவும் கருதியுள்ளதாக இதில் காணப்படுகிறது. இது விவ சாயப் பெருங்குடி மக்களுக்கு நல்லதொரு ஆறுதல் தருகிற நல்ல தொரு செய்தியாகும். 1973-74-ல் 74 இலட்சம் டன் உற்பத்தி யாகும் என்று எதிர்ப்பார்த்திருந்து பருவமழை தவறிய காரணத்தினால் அது சற்று குறைவாக இருக்கும் என்று குறிப் பிட்டுள்ளார்கள். இருந்தாலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் நமக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்படாது என்ற நல்ல நம்பிக்கை இருக்கிறது. காரணம், பசுமைப் புரட்சித் திட்டம் காரணமாக ஐந்தாறு ஆண்டுகளாக அரசு ஆற்றியுள்ள அரும்பெரும் சாதனைகளினால், விவசாயத் துறையில் செய்துள்ள மாபெரும் சாதனைகளினால் நமக்கு அதிகப்படி விளைச்சல் கிடைக்க வழி இருக்கிறது. ஐ.ஆர். 8, ஐ.ஆர். 20, ஐ.ஆர். 25, கருணை, பத்மா, காஞ்சி போன்ற அதிக விளைச்சல் தருகிற வீரிய விதைகளை விளைவித்ததன் காரணமாக நமக்கு திருப்திகரமான விளைச்சல்

கிடைக்கும். அதனால் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்க இருக்கிறது. நானும் ஒரு விவசாயி என்ற முறையில் அதற்காக இந்த அரசுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை நினைக்கும்போது பண்டைய காலத்தில் பாண்டி நாட்டினைப் பற்றி புலவர் ஒருவர் கூறியுள்ளது என் நினைவிற்கு வருகிறது. தென் பாண்டி மண்டலத்தில் எந்தக் காலத்திலும் நல்ல விளைச்சலைக் காணாத மிக மிக வரட்சிப் பகுதியாக இருந்த காலத்தில் வாழ்ந்தவர்கள் இப்போது ஐந்தாறு ஆண்டுகளாக அதிசயமான விளைச்சலை, அதிகப்படியான விளைச்சலைத் தரக்கூடிய அளவிற்கு உள்ள விதைகளைப் பயன்படுத்தி அதிக உற்பத்தி செய்யும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். பாண்டிய நாட்டில் உலவி வந்த கவிதை என் நினைவிற்கு வருகிறது. மாடு கட்டி போரடித்தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டி போரடிக்கும் அழகான தென் மதுரை என்று சொல்வார்கள். அப்படி பாண்டிய மன்னர்கள் காலத்தில் யானைகளைக் கட்டி போரடித்தார்கள் என்று வரலாறு கூறுவதற்கு மாறாக இப்போது நம் அரசு அரும்பெரும் சாதனைகளைச் செய்து ட்ராக்டர்கள் போன்ற கருவிகளை வைத்து எங்கள் பகுதிகளில் தார் சாலைகளில் அதிகப்படியான அளவிற்கு நெல் போரடிக்கிற காட்சியைக் காண்கிறோம் இன்று. அந்தளவிற்கு அரும்பெரும் சாதனைகளை ஆற்றியுள்ள இந்த அரசுக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் நன்றிக் கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு இன்னொரு நல்ல செய்தி. தூத்துக்குடி உரத் தொழிற்சாலையில் உற்பத்தி 1974-ம் ஆண்டு ஜூன் மாதம் உற்பத்தி தொடங்கும் என்ற நல்ல செய்தியினை வழங்கியிருக்கிறார்கள் இந்த உரையில். தூத்துக்குடி உரத் தொழிற்சாலையில் உர உற்பத்தி ஜூன் மாதம் தொடங்கும் என்பதால் விவசாயிகளுக்குத் தேவையாக இருக்கிற உரத்தின் பற்றாக்குறை அதன் மூலம் நீங்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அரசு நல்ல பல திட்டங்களை நிறைவேற்றியிருந்தபோதிலும் இந்த ஆண்டு மதுவிலக்குத் திட்டத்தினை அமல்படுத்துவதாக நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்த செய்தியையும், நம் தமிழக சட்ட மன்றத்தில் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட நல்ல செய்தியையும் அறிந்து பொதுமக்கள் பெருமைப்படுகிறார்கள்,





அதைப் பாராட்டுகிறார்கள். அதற்காகவும் இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மின்சக்தி பற்றாக்குறையை நீக்கும் விதத்தில் நல்ல பல திட்டங்களைத் தீட்டியும், தொழில் வளம் பெருகவும் ஒன்பது திட்டங்களை மத்திய அரசு தன்னுடைய திட்டங்களாக மேற்கொள்ளும் வகையில் ஆய்ந்து பார்க்கவேண்டும் என ஆளுநர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். தொழில், மின்சாரம், விவசாயம் இவை சேர்ந்து செயல்படுகிற அளவிற்கு தமிழகம் நல்ல முன்னேற்றத்தைக்காண இருக்கிறது என்பதால் நெய்வேலியில் இரண்டாவது நிலக்கரிச் சுரங்கத் திட்டத்தையும், பெரிய பெரிய திட்டங்களையும் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். எனக்கு முன்னால் பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் சொன்னார், மத்திய அரசு மீது பழி போட்டு விடாதீர்கள், பழி போட்டு விடாதீர்கள் என்று.

1973-74-ம் ஆண்டிற்கு தொழில் வளர்ச்சிக்காக மொத்த நிதி ஒதுக்கீட்டான 1,500 கோடி ரூபாயில் நமக்கு 40 கோடி ரூபாய் மட்டுமே மத்தியப் பேரரசு ஒதுக்கியுள்ளது. இந்த 40 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு தமிழகத்தில் தொழில் வளத்தில் என்ன முன்னேற்றம் காண முடியும் என்று மத்தியப் பேரரசைக் கேட்க நாம் கடமைப்பட்டுள்ளோம். சிமெண்ட் உற்பத்தியை 14 கோடி ரூபாய் செலவில் 4 இலட்சம் டன்னிலிருந்து 7 லட்சம் டன்னாகப் பெருக்குவதற்கு கருதியுள்ளோம். ஒருசில தினங்களுக்கு முன்பு யு.பி.க்கு சிமெண்ட் அனுப்பவேண்டுமென்று மத்திய அரசிடமிருந்து தாக்கீது நம் அரசுக்கு வந்திருப்பதாக கேள்விப்படுகிறேன். நமக்கு ஒதுக்கியிருப்பது 40 கோடி ரூபாய் தான். ஆனால் யு.பி.க்கு சிமெண்ட் அனுப்பவேண்டுமென்று சொல்கிறது மத்தியப் பேரரசு. ஏன் இந்த ஓரவஞ்சனை, ஏன் இந்த மாற்றான்தாய் மனப்பான்மை மத்தியப் பேரரசுக்கு என்று கேட்க விரும்புகிறேன். அதை வைத்துக்கொண்டுதான் தமிழகத்திற்கும், மற்ற மாநிலங்களுக்கும் மாநில சுயாட்சி வேண்டுமென்ற கோரிக்கையினை, எல்லோரும் ஏகோபித்துக் சொல்கிற கோரிக்கையினை சமர்ப்பித்திருக்கிறோம். ஏன் நம் தமிழகத்தைப் பொறுத்து இந்த மாற்றான் குழந்தை மனப்பான்மை என்று தெரியவில்லை. இங்கிருப்பவர்கள் நாட்டு ஒற்றுமைக்கு பாடுபட உரியவர்கள் இல்லையா, இங்கிருப்பவர்கள் இந்த நாட்டிற்கு பாத்தியதை உள்ளவர்கள் இல்லையா, இங்கிருப்பவர்கள் சம உரிமை பெற

உரிமையற்றவர்களா ? நாட்டின் லாப நஷ்டங்களுக்கு தமிழ் நாட்டுக்கும் சம பங்கு உண்டு என்பதை மத்தியப் பேரரசு உணர்ந்து நமக்கு நல்ல விதத்தில் நிதி ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எட்டு புதிய ஆலைகளை நடப்பு ஆண்டில் ஆரம்பிக்க இருக்கிறோம் என்ற செய்தியைப் பார்க்கிறோம். இதே போன்று ஒவ்வொரு முறையும் ஆளுநர் பேருரையில் பலவிதமான முன்னேற்றத் திட்டங்களை இந்த அரசு அறிவித்துக் கொண்டிருக்கிறது. அதற்காக தமிழக மக்கள் இந்த அரசுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி நல்ல பல திட்டங்களை நாளும் தீட்டிக்கொண்டிருக்கும் இந்த அரசு இன்னும் பல ஆண்டுகள் ஆட்சியில் இருந்து நல்ல பல திட்டங்களை போட வேண்டுமென்று தமிழக மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்ல பல மரபுகளை உருவாக்கும் இந்தச் சட்டமன்றத்தில், நான் ஒன்றை மட்டும் ஆலோசனையாக மாண்புமிகு தலைவரவர்களே, உங்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும் தெரிவிக்க விரும்புகிறேன். நமது மேலவையில் உறுப்பினர்கள் வருவதை அங்கேயுள்ள அதிகாரிகள்தான் பார்த்து குறித்துக் கொள்கிறார்கள். அங்கே கையெழுத்துப் போடும் வழக்கம் அமலில் இல்லை. நாடாளுமன்றத்திலும் அந்த நிலைமைதான். ஆனால் இங்கே மட்டும் அலுவலகத்திற்கு வரும் பணியாளர்கள் போல் வெளியே கையெழுத்துப் போட்டு விட்டுத்தான் உள்ளே வரவேண்டுமென்று இருக்கிறது. எனக்கு ஒரு பெரிய சந்தேகம், இங்கே இரண்டு தினங்களுக்கு முன்பாக சட்டமன்றம் செத்து விட்டது என்று சொன்ன உறுப்பினர் ஒருவர் வெளியே வந்து கையெழுத்துப் போட்டுவிட்டுப் போனதாக பத்திரிகைகளில் செய்தி வந்தது. உள்ளே வந்து உட்கார்ந்த பிறகு பொறுப்பில் உள்ள அதிகாரிகள் குறித்துக்கொண்டால் நல்லது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, ஒரு உறுப்பினர் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கும் பதிவேட்டில் கையெழுத்துப் போட உரிமை உண்டு. * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படிச் சொல்வது நன்றாக இருக்காது. நம்மை நாமே இழிவுபடுத்திக்கொள்வதுபோல் ஆகும் * * என்பதைப் பத்திரிகைகளில் போட வேண்டாம். என்பதைப் பத்திரிகைகளில் போட வேண்டாம்.

**திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி :** தலைவரவர்களே, நான் யாரையும் குறை சொல்லவேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவற்றையெல்லாம் வருகிற பட்ஜெட் கூட்டத்தொடரின் போது சட்டமன்றம் குறித்த டிமாண்ட் வரும்போது பேசுங்கள். இப்போது பேசவேண்டாம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** குறிப்பிலிருந்து அவற்றை நீக்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கையெழுத்துப் போட்டு விட்டு, உள்ளே வராத செய்தி பத்திரிகையில் ஏற்கெனவே வந்து விட்டது. இனிமேல் போடவேண்டிய அவசியம் இல்லை.

**திரு. காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி :** என்னுடைய தொகுதியைப்பற்றி ஓரிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேசுவதற்கு வேறு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். உட்காருங்கள். திரு. கோபால்.

* **திரு. கே. பி. கோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கவர்னர் பெருமான் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசுகிற நேரத்தில் எங்கள் கட்சியின் சார்பில் கொடுக்கப்பட்டு இருக்கும் திருத்தங்களையும் ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்களின் மறைவு நமக்குப் பேரிழப்பாகும் என்பதில் இரண்டுவித கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால் அதே சமயத்தில் அவருடைய 50 வருட

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. கே. பி. கோபால்] [1974 சனவரி 21

அரசியல் வாழ்வில் ஆடம்பர செலவுகளைத் தவிர்த்து, சிக்கனத்தைக் கடைப்பிடித்தார்கள் என்பதை ஆளுநர் அவர்கள் குறிப்பிடவும், அதை இந்த அரசு பின்பற்ற வேண்டுமென்பதை வலியுறுத்தவும், தவறிவிட்டார்கள். மேலும், மதுவிலக்குக் கொள்கையை அமல்படுத்தவேண்டுமென்று காந்திஜி அவர்கள் சொன்னவுடனே, தன்னுடைய தோட்டத்தில் இருந்த 500 தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தினார்கள். அதை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சேலத்தில் நடைபெற்ற கவியரங்கில் குறிப்பிட்டிருக்கிறார்கள். "மதுவிலக்குத் தேவையென மகாத்மா சொன்னவுடன், மதுக்கலயம் கட்டாமல் இருப்பதற்கு, தோட்டத்தில் மண்டி நின்ற தென்னைகளை வெட்டிச் சாய்த்தார் வைக்கத்து வீரர்" என்று சொல்லி இருக்கிறார்கள்.

ஆனால் அந்த மதுவிலக்குக் கொள்கை குறித்து இந்த அரசாங்கத்தின் திட்டவட்டமான கொள்கை என்ன என்பதை குறிப்பிடவில்லை. இந்த மதுவிலக்கு ஒத்தி வைக்கப்படும் என்று இந்தப் பேரவையில் அறிவிக்கப்பட்டபோது நாம் அதை வன்மையாக எதிர்த்தோம். அப்போது நமது மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் மற்ற மாநிலங்களில் மதுவிலக்கு அமல் படுத்தவேண்டுமென்று கேட்டார்கள். மேலவையில் மறைந்த எங்கள் கட்சித் தலைவர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் 2 கோடி பெண் மக்களின் அமைதியான வாழ்வைக் கெடுத்து விடாதீர்கள் என்று கேட்டார்கள். அப்போது, முதலமைச்சர் அவர்கள் மற்ற மாநிலங்களில் பெண்கள் வாழவில்லையா என்று தம்முடைய வாதத் திறமையால் பதில் அளித்தார்கள். முஸ்லிம் லீக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், இந்த மாநிலத்தில் மதுவிலக்கை அமல் செய்ய வேண்டுமென்று கேட்டபோது, மற்ற இஸ்லாமிய நாட்டில் இல்லையா என்று கேட்டார்கள். அண்ணா வழியில் செல்பவர்கள், தயவுசெய்து மதுவிலக்கை அமல் செய்யுங்கள் என்று கேட்டபோது. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, பாண்டிச்சேரி தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரகடனத்தில் மதுவிலக்குக் கொள்கை இடம் பெறப்போவதாகக் கேள்விப்பட்டேனே, அது உண்மையா ?



1974 சனவரி 21]

**திரு. கே. பி. கோபால் :** தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில் 67-ல் என்னென்ன உறுதி மொழிகள் கொடுக்கப்பட்டன, 71-ல் என்னென்ன உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டன, அவைகள் நிறைவேற்றப்பட்டனவா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நாங்கள் கொடுக்கப் பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டனவா என்பதைப்பற்றி வினா எழுப்பவில்லை. வரப்போகிற பாண்டிச்சேரித் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரகடனத்தில் மதுவிலக்குக் கொள்கை இடம் பெறப் போவதாகக் கேள்விப்பட்டேன், அது உண்மையா ?

**திரு. கே. பி. கோபால் :** அப்படியே இடம் பெற்றாலும், அது நிறைவேற்றப்படுமா என்பதை நாம் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். ஏற்கனவே தேர்தல் பிரகடனத்தில் சொல்லப் பட்டவை நிறைவேற்றப்படாமல் இருந்தது. அண்ணாவழி, ஜன நாயக வழி பொதுக்குழு தீர்மானத்தின்படி என்றெல்லாம் சொல்லி நாங்கள் மதுவிலக்கை ஒத்தி வைக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது கள் விற்பனை தடை செய்யப்பட்டிருக்கிறது. சாராயம் விற்பனை அடுத்த ஆண்டில் தடை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பூரண மதுவிலக்கு அமல் நடத்தப்படாது என்று முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்த முடிவுகள் பொதுக் குழுவைக் கேட்டு எடுக்கப் பட்ட முடிவுகளா என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

சென்ற ஆண்டு ஆளுநர் உரையில் ஒருசில பகுதிகளில் தொழில் துறையில் அமைதியின்மைபற்றிக் குறிப்பிட்டு இருந்தார்கள். அப்போது திருச்சி கிளைவ் ஹாஸ்டலில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு, அதற்கு வருத்தம் தெரிவித்து, அதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாது என்று அறிவிப்பார்கள் என்று எதிர் பார்த்தேன். அதைப்பற்றிக் குறிப்பிடவில்லை. திருச்சி கிளைவ் ஹாஸ்டல் சம்பவம் பற்றி நாங்கள் எங்கள் கட்சியும், சுதந்திராக் கட்சியும் சபைக்கு வந்து, இந்த சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து அது குறித்து விவாதிக்கவேண்டும், அதற்கு நீதி விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டோம். மற்ற சில கட்சியினர் அந்தச் சமயத்தில் சட்டசபைக்கு வராமல் இருந்தார்கள்,

அன்று எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல, நாங்கள் வெளிநடப்புச் செய்ததையும் ஏளனம் செய்தார்கள். வெளிநடப்புச் செய்வதற்காகவே சட்டசபைக்கு வருகிறார்கள் என்று சொன்னார்கள். அதுமட்டுமல்லாமல், அப்போது சில விளக்கங்களையும் கொடுத்தார்கள்.

நாங்கள் மற்ற துறைகளிலிருந்து கிடைத்த செய்தியை வைத்துச் சொல்லவில்லை. திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறிய கருத்தை வைத்தும், திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர் மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் கொடுத்த செய்தியை வைத்தும் கூறினேன், 3 டிரைவர்கள் ஹாஸ்டல் விடுதிக்குள் கொண்டு செல்லப்பட்டார்கள் என்றும், அதன் பிறகு விடுவிக்கப்பட்டார்கள் என்று. ஆனால், இந்த கமிஷனின் அறிக்கையிலே திட்டவட்டமாகக் குறிப்பிட்டு இருக்கிறது. அந்த 3 டிரைவர்களும் கிளாஸ் ஹாஸ்டலுக்கு எடுத்துச் செல்லப்படவில்லை என்று. இந்த அவைக்குத் தவறான தகவலை முதலமைச்சர் கொடுக்கிற அளவிற்கு இருந்த திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் மீதும், அந்த மாவட்ட அமைச்சர் மீதும் என்ன 'நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அல்லது அவர்கள் அறியாமலேயே அவர்களுக்குத் தவறான தகவல் தரப்பட்டிருக்கிறது என்றால், அப்படித் தகவல் தந்த மற்ற அதிகாரிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அல்லது யார் அந்தச் செய்தியைக் கொடுத்தார்களோ அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-30)

சிறுவாணித் திட்டத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, அண்டை மாநிலத்துடன் நம்முடைய மாநிலம் எந்த அளவுக்கு சுமுகமாக உறவு வைத்துக்கொண்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு என்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இதிலே நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கேரள மாநில காவல் துறையினருக்கும் தமிழ் நாடு காவல் துறையினருக்கும் ஒரு சுமுகமான உறவு இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். முக்கியமாக சமீபத்தில் கம்பத்தில் ரூ. 100 கள்ள நோட்டு அச்சடிக்கப்பட்டு அது சம்பந்தமாக ஒரு போலி சாமியார் கைது செய்யப்பட்டதாக பத்திரிகையில் செய்தி வந்தி-





ருக்கிறது. இது சம்பந்தமாக கேரளத்திலிருந்து வெளியாகும் கேரள மனோரமா என்ற பத்திரிகையிலே ஒரு கடுமையான குற்றச் சாட்டு நமது காவல் துறையினர் மீது சாட்டியிருக்கிறார்கள். அதாவது, கள்ள நோட்டு வழக்கில் நமது தமிழக போலீஸார் முழு ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை என்பது மட்டுமல்ல, கம்பத்தில் காவல் நிலையத்தில் உள்ள சில அதிகாரிகள் உடந்தையாக இருக்கிறார்கள் என்பது. இது மிகவும் கடுமையான குற்றச்சாட்டு. இப்படி மனோரமா பத்திரிகையில் மட்டும் வந்தது அல்ல. அதைத் தமிழ் படுத்தி, தீக்கதிர் என்ற பத்திரிகையிலும், தினமலர், செய்தி ஆகிய பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. கடுமையான குற்றச் சாட்டு, தமிழக போலீஸார் ஆதரவு இல்லை, மறைமுகமாக ஒத்துழைக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டிற்கு இதுவரையில் அரசாங்கத் தரப்பில் ஒரு பதிலோ, விளக்கமோ. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** கள்ள நோட்டுக்காரர்களோடு தமிழக போலீஸார் மறைமுகமாக ஒத்துழைக்கிறார்கள் என்பது பத்திரிகை செய்தியா, அல்லது கேரளத்தில் உள்ள அதிகாரிகள் யாராவது தெரிவித்திருக்கிறார்களா என்பதைச் சொல்லவேண்டும்.

**திரு. கே. பி. கோபால் :** 15—12—1973-ம் தேதியிட்ட மலையாள மனோரமாவில் வந்த செய்தியை ஒட்டி, 23—12—1973-ம் தேதியிட்ட தீக்கதிரில். . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தமிழக அதிகாரிகள் கள்ளநோட்டு அச்சடிப்பவர்களைப் பிடிப்பதில் தங்களோடு ஒத்துழைக்கவில்லை என்று சொல்லியிருப்பது கேரள அதிகாரி யாராவது சொல்லியிருக்கிறாரா? அல்லது பத்திரிகை செய்தியா? நடவடிக்கை எடுப்பதற்கு தயங்க மாட்டேன். விவரம் தெரிந்து கொள்வதற்காகக் கேட்கிறேன்.

**திரு. கே. பி. கோபால் :** கேரளத்தில் அதிகாரிகள் கூறியிருப்பதாக பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அது மட்டுமல்ல. அது சம்பந்தமாக கம்பத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் நோட்டீஸ் அச்சடித்துக் கொடுத்திருக்கிறார். அந்த நோட்டீஸை நானே முதல் அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருக்கிறேன் . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கேரளத்துப் பத்திரிகையில் எந்த அதிகாரி, கேரள அதிகாரி, அறிவித்திருக்கிறார் என்ற குறிப்பு இருக்கிறதா? நான் பத்திரிகையைப் பார்க்கவில்லை. அதனால்தான் கேட்கிறேன்.

**திரு. கே. பி. கோபால்:** காவல் துறையினரால் நமது தமிழக ஐ.ஜி. அவர்களுடைய கவனத்திற்கு இந்த விஷயம் எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்ன அதிகாரி என்று இல்லை. தலைவர் அவர்களே, உங்கள் அனுமதி பெற்று, அந்த நோட்டீஸை. . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கேரள அதிகாரியின் பெயர் அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா?

**திரு. கே. பி. கோபால்:** அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்படவில்லை.

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்பதைப்பற்றி திரு. வீராசாமி அவர்கள் வலியுறுத்தினார்கள். . .

THIRU K. T. K. TANGAMANI: Sir, are we sitting beyond 1:30 p.m.?

THIRU R. PONNAPPA NADAR: Let the hon. Member finish his speech.

THIRU K. T. K. THANGAMANI: He can continue his speech tomorrow.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஐந்து நிமிடம் பேசி முடித்து விடுகிறீர்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாளைக்கு ஐந்து நிமிடம் தந்து கொடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பிற்பகல் 1.34 மணிக்கு பேரவை ஒத்திவைக்கப்பட்டது.



## 5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

43. Notification issued with G.O. Ms. No. 743, Labour and Employment, dated the 21st November 1973 in regard to an amendment to the Tamil Nadu Weights and Measures (Enforcement) Rules, 1967. [Laid on the table of the House under section 43 (4) of the Tamil Nadu Weights and Measures (Enforcement) Act, 1958 (Tamil Nadu Act XX of 1958).]

44. Notification issued with G.O. Ms. No. 1921, Agriculture, dated the 27th August 1973 in regard to nomination of members to the Thanjavur Market Committee. [Laid on the table of the House under Section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

45. Notification issued with G.O. Ms. No. 311, Excise and Prohibition, dated the 24th September 1973 in regard to certain amendments to the Madras Chloral Hydrate Rules, 1959 [Laid on the table of the House under Section 34 (5) of Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971).]

46. Notification issued with G.O. Ms. No. 2029, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Cumbum Local Planning Area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972) [Laid on the table of the House under Section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

47. Notification issued with G.O. Ms. No. 2031, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Mettur Local Planning Area under the Tamil Nadu Town and Country Planning Act,1971 (Tamil Nadu Act 35 of 1972) [Laid on the table of the House under Section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

*B. Reports, Notifications and other papers.*

@ 11. Administrative Reforms Commission's report on Panchayat Development Administration (English and Tamil).

@ 12. Administrative Reforms Commission's report on District Revenue and General Administration (English).

* 13. Report of the Expert Committee on Handloom Industry (English and Tamil).

---

@ Circulated to Members on 18th January 1974.

* Laid on the table of the House on 19th January 1974.

## தமிழ்நாடு சட்டப் பேரவை

---

*செவ்வாய்க்கிழமை, 1974 ஜனவரி 22.*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **புலவர் கா. கோவிந்தன்** *அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** *61, 62, 63, 64, 65 ஆகிய எண்கள் உள்ள வினாக்கள் பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.*

*Bagalur Primary Health Centre*

* 66 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is a proposal to construct a shed for the stay of persons who bring the patients to the Primary Health Centre at Bagalur in Hosur taluk during nights; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** *பாகலூர் தொடக்க நல்வாழ்வு நிலையத்தில் ஆரம்பச் சுகாதார நிலையக் கொட்டகை யொன்று கட்ட மதிப்பீட்டுக்குழு பரிந்துரைத்திருக்கிறது. ஆனால், இது தேவைதானா என்பது அரசின் ஆய்வில் இருக்கிறது.*

THIRU K. S. KOTHANDARAMIAH : The primary health centre at Bagalur is working very well and people are coming to that centre not only from this State but also from the neighbouring State of Mysore, because the doctors there are doing good work. But when people bring patients including children and ladies, there is no place even to sit there; they have to sit under the trees or in the road. The doctors told me that the matter may be represented to Government. May I know from the hon. Minister whether he would take steps to provide a shed at the primary health centre for the stay of people.

[1974 சனவரி 22

THE HON. THIRU K. ANBAZHAGAN : It is reported that the average number of out-paients treated in this centre is only 66 per day. In other primary health centres it ranges between 200 to 300 and the number of inpatient per day is not even one. Therefore the suggestion given by the Estimates Committee is to be scrutinised further and if there is absolute necessity, then only we will be able to implement it.

### மருத்துவர்கள், செவிலியர்கள் ஹஜ்ஜிப் பயணம்

* 67 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) 1973-ல் ஹஜ்ஜிப் பயணம் செய்து பணிபுரிய எத்தனை டாக்டர்கள், நர்சுகள் மனுச் செய்தனர் ?

(இ) இவர்களில் எத்தனை பேருக்கு வாய்ப்பளிக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) 1973-ல் ஹஜ்ஜி பயணம் சென்று பணிபுரிய மனு செய்தவர்கள் எண்ணிக்கை:

| | | |
|---|---|---|
| டாக்டர்கள் | .. | 32 |
| மருந்தாளுநர்கள் | .. | 14 |
| நர்சுகள் | .. | 10 |

(இ) ஒருவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** ஹஜ் யாத்திரை செல்பவர்களை ஏற்றிக் கொண்டு பம்பாயிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு கப்பல் செல்கிறது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த யாத்திரிகர்களுடைய உதவிக்காக டாக்டர்கள், மருந்தாளுநர்கள், நர்சுகள் போன்றவர்களை அனுப்பி வைக்க மாநில அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, மத்திய அரசு அந்தப் பயணிகளுக்கு உதவி செய்வதற்காக டாக்டர்கள், மருந்தாளுநர்கள், நர்சுகள் ஆகியோரைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் ஒரு பட்டியல் கேட்கிறார்கள். அந்தப் பட்டியல் கேட்பதையும் கடைசி நேரத்தில் கேட்கிறார்கள். 20 நாட்கள், 30 நாட்களுக்கு முன்னர் பட்டியல்



1974 சனவரி 22]

தயாரிக்கச் சொல்கிறார்கள். அதற்கு முன்னரே மத்திய அரசு அவர்களுக்குக் கிடைத்திருக்கும் பட்டியல் அடிப்படையில், பக்கத்து மாநிலங்களிலிருந்து வந்துள்ள பட்டியலின் அடிப்படையில். தேர்ந்தெடுத்துச் சிலரை அனுப்புகிறார்கள். அதன் காரணமாக, இனி பட்டியலை நாம் முன்கூட்டியே தயாரித்து அனுப்பிவிட்டு, அவர்கள் அப் பட்டியலிலிருந்து விரும்புகிறவர்களை எடுத்துக் கொள்ளட்டும் என்ற முறையைக் கடைப் பிடிக்கலாமா என்ற எண்ணம் இப்பொழுது அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** என்ன காரணத்தினால் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களே தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, இது ஹஜ் யாத்திரை போவதற்கு கேட்கிற விண்ணப்பம் அல்ல. அப்படிப் போகிறவர்களுக்குத் துணை செய்வதற்கு, தேவையானால் அரசு பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று கேட்டுக்கொள்வது. அந்தப் பட்டியலை நாம் தயாரித்து அனுப்பும்போது அவர்களுடைய இசைவு தெரிந்து அனுப்ப வேண்டியிருக்கிறது. அதனால், ஆறு மாதங்களுக்கு முன்னரே கேட்டுக்கொள்கின்ற முறையைக் கடைப்பிடித்தால் நாம் பட்டியல் அனுப்பி, மத்திய அரசு அதைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். அப்படியில்லாமல், முப்பது நாட்களுக்கு முன் பட்டியல் கேட்டு, நாம் அனுப்பும் போது, கடந்த ஆண்டு தாமதம் ஏற்பட்டது. இனி வருகிற ஆண்டில் முன்கூட்டியே அனுப்பலாம் என்று நாமாக ஆலோசித்திருக்கிறோம்.

**திரு. வை. பாலசுந்தரம் :** ஹஜ் யாத்திரைக்குத் தமிழ் நாட்டிலிருந்து ஆண்டுதோறும் எத்தனை பேர் போகிறார்கள் என்பதை அறியலாமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் நான் தெரிவிப்பதற்கில்லை.

## Cheshire Home, Katpadi

* 68 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the Government have discontinued the grants for the Cheshire Home at Katpadi; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. வீராசாமி:** காட்பாடி நகரத்தில் அமைக்கப்பட்டிருக்கிற செஷைர் ஹோம் என்பது, அரசு ஊழியர்கள், தனியார் நிறுவன ஊழியர்கள் கணவன்—மனைவி இருவரும் வேலைசெய்யக்கூடியவர்களாக இருந்தால், அவர்களுடைய குழந்தைகளைப் பராமரிக்க கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்ட இல்லமாகும். அது பல ஆண்டு காலத்திற்கு முன்னால் உருவாக்கப்பட்டு, இப்பொழுது ஏராளமான குழந்தைகள் அங்கு வருகிறார்கள். அவர்களைப் பேணிக் காப்பதற்கு ஏற்கெனவே அன்னிய நாட்டிலிருந்து அந்த மானிய உதவி வராத காரணத்தால், இப்போது இருக்கிற குழந்தைகளைக் காப்பாற்ற முடியாமல் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட இல்லத்தார் விண்ணப்பித்தால் இன்னும் அதிக மானிய உதவி வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** கேள்வி பொருத்தமானதுதான். ஆனால், சமூக நலத் துறையில் இந்த செஷைர் ஹோம் கவனிக்கப்படுகிறது. சென்ட்ரல் சோஷல் வெல்ஃபேர் போர்டும், மாநில சோஷல் வெல்ஃபேர் போர்டும் அவர்களுக்கு உதவி செய்கிறது. அவர்கள் தொழு நோய் உள்ள குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு மருத்துவத் துறையின் சார்பாக உதவி வழங்க முடியும் என்ற நிலையில் ஏற்கெனவே வழங்கிய உதவி கூட தவறான அடிப்படையில் வழங்கப்பட்டுவிட்டது என்று திருப்பிக் கேட்கத்தக்க செய்தி உட்பட இருக்கிறது.

## Drinking water supply scheme for Kanyakumari district

* 69 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state whether it is a fact that the Vilathurai Lift Irrigation Scheme in Kanyakumari district is to be utilised as a Drinking water supply scheme?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தற்போது விளத்துறை இறைவைப் பாசனத் திட்டத்தை விளவங்கோடு வட்டத்தில் உள்ள ஊராட்சிகளுக்கு நம்பகமான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் திட்டத்திற்குப் பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்வது பற்றி, விரிவாக ஆய்வு செய்யப்பட்ட பின்னரே முடிவு செய்ய முடியும்.

**திரு. என். டென்னிஸ் :** இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, குடி தண்ணீர் வசதிக்காகவும், விவசாய அபிவிருத்திக்காகவும் சேர்த்து ஆரம்பிக்கப்பட்ட திட்டமாகும். அந்தப் பகுதி வறட்சிப் பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்குள்ள மக்கள் கஷ்டப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. ஆகையால், இதைக் குடிநீர் திட்டமாகவும் மாற்றியமைக்க அரசு வேண்டிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தொடங்குகிறபோது அப்படித் தொடங்கினாலுங்கூட, அங்கே பக்கத்திலேயே ஆற்றும் பாசனத் திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டுவிட்டதன் காரணமாக, இப்பொழுது இறைவைப் பாசனத் திட்டம் பாசனத் திட்டத்திற்குப் பயன்படவில்லை. ஆகவே, இந்தத் திட்டத்தைப் பக்கத்திலுள்ள ஐந்தாறு பஞ்சாயத்துக்களுக்கும் சேர்த்த அளவில் குடிநீர்த் திட்டமாக மாற்றியமைப்பது பற்றிய பரிசீலனை நடைபெற்றது. அப்படி அந்தப் பரிசீலனைக்கு உட்படுவதற்கு பஞ்சாயத்துக்கள் அனைத்தும் இசைந்து வரவில்லை. அவற்றிலே ஒரு பஞ்சாயத்து, 'எங்களுக்கு அது தேவை இல்லை' என்று தெரிவித்து விட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மற்ற பகுதிகளுக்கு என்ன என்ன திட்டங்களுக்கு முன்கூட்டி ஆய்வு நடைபெற வேண்டும், அந்த ஆய்வு நடைபெறுவதற்கான செலவை மீதமிருக்கும் பஞ்சாயத்துக்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா என்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அந்த ஆய்வின் அடிப்படையில்தான் செயல்முறைப்படுத்த முடியும். நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்துகிற முறை வேறு; குடிநீருக்கு அதே தண்ணீரைக் கொண்டு சேர்க்கிற முறை வேறு.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு இசைவு தராத ஒரு பஞ்சாயத்து நீங்கலாக எஞ்சிய பஞ்சாயத்துக்கள் இதனையும் ஏற்றுக்கொள்ள இசைவு தந்து,

பரிந்துரையும் வந்திருக்கிறது. அது மட்டுமின்றி, புதுக்குடி டவுன் பஞ்சாயத்தில் முன்பிருந்த அரசாங்கம் 65,000 ரூபாய் செலவிட்டு மேல்நிலைத் தொட்டி கூட ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால், அந்தத் தொட்டியில் ஒரு சொட்டுத் தண்ணீர்கூட வரவில்லை. ஏனென்றால், தண்ணீர் இல்லை. ஆகவே, இந்த இரண்டு திட்டங்களையும் ஒருங்கிணைத்து வேண்டிய ஏற்பாடு செய்ய அரசு முற்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, நீர் வழங்கல் திட்டத்திலிருந்து மான்கோடு ஊராட்சியை நீக்க வேண்டும் என்றும் இணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் மதிப்பீட்டையும் வாரியம் ஒப்பளிப்பதற்காக எஞ்சியுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய திருத்தியமைக்கப்பட்ட வீதாசாரச் செலவுகள் எவ்வளவு என்பதை உடனடியாகக் குறிப்பிடுமாறும் தமிழ்நாடு நீர் வழங்கல்-கழிவு நீர் அகற்று வாரியத்தின் தலைமைப் பொறியாளர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். வாரியத்திடமிருந்து திருத்த மதிப்பீடு எதிர்பார்க்கப்படுகிறது. அது வரப் பெற்றவுடன், வாரியம் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முயற்சிக்கும்.

## அம்மூர் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கு திட்டம்

*70 வினா—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு ஜில்லா வாலாஜா ஒன்றியத்தில் உள்ள அம்மூர் பேரூராட்சியில் ஒரு குடி-நீர் விஸ்தரிப்புத் திட்டம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) அம்மூர் பேரூராட்சியினர் முன் வந்து தங்களுடைய பேரூராட்சிக் குடி தண்ணீர் விஸ்தாரிப்புத் திட்டம் வேண்டுமென்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை அணுகி, ஆய்வுச் செலவை ஏற்றுக் கொள்வதாய் இருந்தால், அம்மூர் பேரூராட்சிக்கு குடிநீர் விஸ்தரிப்புத் திட்டம் அமுலாக்குவதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.





**திரு. நா. வீராசாமி :** அம்மூரைப் போல வடாற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய டவுன் பஞ்சாயத்துக்கள் எல்லாம் ஆய்வு செய்வதற்காகக் கட்டணத்தைச் செலுத்திவிட்டன. அப்படிக் கட்டணம் செலுத்தியுள்ள டவுன் பஞ்சாயத்துகளுக்காவது உடனடியாகக் குடி-தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஆய்வு செய்வதற்கு கட்டணம் கட்டுவது பெண் பார்ப்பதுபோல. அதற்குப் பின்னர் பிடித்திருந்தால் திருமணம் நடக்கும், இல்லாவிட்டால் நடக்காது. ஆய்வு செய்து, அந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவை 30 ஆண்டுக் காலத்தில் திருப்பித்தர அவை ஒத்துக்கொள்ள வேண்டும். செலவு அதிகமாக இருக்கிறது என்றால் குறைந்த செலவில் புதியதாக ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும். ஆய்வு செய்வதற்காக, ஒரு குறைந்த தொகையைத் தந்துவிட்ட காரணத்தினாலேயே திட்டங்கள் நேரிடையாக நிறைவேற்றப்படாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி எண்கள் 71, 72, 73 தள்ளிவைக்கப்படுகின்றன. அடுத்த கேள்வி 74.

## *Regulator across Mudavanar in Vettangudi*

*74 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether it is a fact that the construction of a regulator at Mudavanar drain in Vettangudi of Sirkali taluk has been taken up for execution: and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) சீர்காழி வட்டம், வேட்டங்குடி கிராம எல்லைகளுக்குள் முடவனாற்றின் குறுக்கே ரூ. 2.89 லட்சம் செலவில் பொறி மதகு ஒன்றைக் கட்டும் பணி நிறைவேற்றப்படுவதற்காக 1973 ஜூலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது. கட்டுமானப்பொருள்கள் சேகரிக்கும் பணி நிறைவேறி வருகிறது. மண்கரை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடிகாலில் நீரோட்டம் தொடங்கிவிட்டபடியால் கட்டுமானப் பணி 1974-ல் வடிகாலில் நீர் வரவு நின்றுபோகும் காலத்தொடக்கத்தில் மீண்டும் தொடங்கப்படும். 1973 ஜூலை வரை இத் திட்டம் முழுவதற்கும் செலவிட்ட தொகை சுமார் ரூ. 60,000 ஆகும்.

[1974 சனவரி 22

திரு. என். டென்னிஸ்: இந்தத் திட்டம் எப்போது முடிவு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: எப்போது முடிவு அடையும் என்ற தகவல் இல்லை. நீர் நின்றவுடன் வேலை துவங்கப்படும் என்ற குறிப்பு இருக்கிறது.

தானிப்பாடியருகே வரட்டாற்றின் குறுக்கே அணை.

* 75 வினா.—திரு. எம். எஸ். இராதாகிருட்டினன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்திற்கு தெற்கே உள்ள வரட்டாற்றில் புதிய அணை ஒன்று கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(இ) செங்கம் வட்டம் தானிப்பாடி கிராமத்திற்கு தெற்கே உள்ள வரட்டாற்றில் ஒரு புதிய அணை கட்டும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ. 1,84,600-க்கு அரசு அங்கீகாரம் கொடுத்துள்ளது. இத்திட்டத்தினால் 176 டன் அதிக உணவு உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது. ஒரு டன் உணவின் விலை ரூ. 1,048 ஆகும்.

*Sulagiri Dam*

*76 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) the stage at which the investigation work of the construction of Vempatti Dam near Sulagiri village in Hosur taluk stands; and

(b) the total number of acres which can be brought under irrigation under this scheme?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஓசூர் தாலுக்கா எம்பள்ளி கிராமத்தருகில் சூளகிரி சின்னாற்றின் குறுக்கே ஓர் நீர்த் தேக்கம் அமைக்கும் திட்டம் உள்ளது. இத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகளும் வரைபடங்களும் பாசனத் தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளது.



(இ) இத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் சுமார் 880 ஏக்கர் புதிய நிலப்பரப்பு பாசன வசதி பெறும்.

THIRU K. KOTHANDERAMIAH: Sir Sulagiri area where it is proposed to do this work is a Zamindari area. Even in the Governor's address it has been stated that Government are taking steps to do such work in Zamindari areas. May I know from the Hon. Minister for Public Works and when the work will be completed?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் விரிவான ஆய்வில் இருக்கிறது. அங்கிருந்து சிபார்சு போர்டுக்கு வந்து, ரெவின்யூ போர்டில் இருந்து அரசுக்கு வந்தவுடன், அதனைப் பரிசீலனை செய்து ஆணை பிறப்பிக்கப்படும்.

கடம்பாகுளம் தலை மதகினை அகலப்படுத்தல்

* 77 வினா—திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதியிலுள்ள கடம்பாக்குளத்தின் தலை மதகினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், வேலைகள் எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம். அரசு ஆணை எண் 1899, பொதுப்பணித்துறை, நாள் 13—9—1973-ல் கடம்பாக் குளத்தின் பொறையூர் தலை மதகினில் மேலும் நான்கு புதிய கண்ணறைகள் (Vents) அமைக்க ரூ. 3.35 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

(இ) இவ்வேலை வரும் எப்ரல் திங்களில் அதாவது பாசனத்திற்கு விடப்படும் தண்ணீர் நிறுத்தப்படும் காலத்தில், ஆரம்பிக்கப்படும்

பொதுப் பணித்துறை இளநிலைப் பொறியாளர்களது பணிகள்

* 78 வினா—திரு. மே. சி. தாயமணி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970 முதல் பொதுப் பணித்துறை நெடுஞ்சாலைத் துறை முதலியவற்றில் 500-க்கும் மேற்பட்ட இளம் பொறியாளர்களது பணி வரன் முறைப்படுத்தப்படாமல் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) தற்சமயம் நெடுஞ்சாலைத் துறையிலும், பொதுப் பணித் துறையிலும் மொத்தம் 95 பேர் தற்காலிக இளநிலைப் பொறியாளர்களாக 1970-ம் ஆண்டிலிருந்து பணியாற்றி வருகிறார்கள். தமிழ்நாடு பொதுப் பணிக் கழகம் இவர்களைத் தேர்ந்தெடுத்த பின்னால்தான் இவர்களின் பணி முறைப்படுத்தப்படும். இதுவரை இவ்விரு துறைகளிலும். 272 இளநிலைப் பொறியாளர்களின் பணி முறைப்படுத்தப்பட்டுள்ளது.

### ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலர் மாநாடு

*79 வினா—**திரு. தி. சி. அ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள பஞ்சாயத்து யூனியன், போர்டு இவைகளில் பணிபுரியும் அலுவலர்கள் மாநாடு 1972 டிசம்பர் மாதத்தில் கூடி அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் அனுப்பி உள்ளார்களா?

(இ) ஆம் எனில், அக் கோரிக்கைகளின் பேரில் அரசாங்கம் தற்சமயம்வரை எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை? அதன் விவரம் யாது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) ஆம்.

(இ) அம் மாநாட்டினரின் 70 தீர்மானங்கள் அடங்கிய முறையீடு 7—3—1973 அன்று அரசுக்கு வரப்பெற்றுள்ளது. அக் கோரிக்கைகளும் அவற்றின்மீது அரசு இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகளையும் காட்டும் பட்டியல் * பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சோ. அழகர்சாமி :** அதிலுள்ள பெரும்பாலான கோரிக்கைகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருப்பதாகவும், பொருளாதார நெருக்கடி காரணமாக நிறைவேற்ற முடியவில்லை என்றும்

---

475-496 பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.





கூறப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி வளர்ச்சித் துறையில் பத்தாண்டுகளுக்கும் அதிகமாகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறவர்கள் எந்தவிதமான ப்ரமோஷனும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்களே, அந்தக் குறிப்பிட்ட கோரிக்கையாவது ஏற்று ஒவ்வொரு இடத்திலும் க்ரேடு 1, 2 ஐ 3·7-க்குப் பதில் 5:5 என்பதாக அமைத்து உடனடியாக ப்ரமோஷன் கிடைக்கச் செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** இப்போதுதான் நிர்வாகச் சீர்திருத்தக் குழு தன் அறிக்கையை அவைக்கு அனுப்பியிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுக்கிறபோது பெரும்பாலான கோரிக்கைகள் நிறைவேறிவிடும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இந்தப் பரிசீலனை எவ்வளவு காலத்திற்குள், எத்தனை வாரத்திற்குள் முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் கூற முடியுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தற்போது இயலாது.

**திரு. நா. வீராசாமி :** அவர்களது தீர்மானங்களில் ஒன்று ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் டிராக்டர் டிரைவர், டிரில்லர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்பது. அவர்களை நிரந்தரமாகச் செய்வது சாத்தியமன்று என பதிலளிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் டிராக்டர் டிரைவர், ட்ரில்லர் விவசாயிகளுக்கு இன்றியமையாத உதவியாளராக இருப்பதால் அவர்களை நிரந்தரமாக்க மறுபரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அவர்களது கோரிக்கைகளில் ஒன்று அவர்களை அரசுப் பணியாளராக ஆக்க வேண்டும் என்பது. அது பரிசீலனையில் இருக்கிறது. அந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படுமானால் அவர்களது கோரிக்கையினைத் தீர்க்குமே ஓரளவு பரிகாரம் கிடைக்கும்.

**திரு. ஆ. பாந்தாமன் :** அவர்கள் அனுப்பிய தீர்மானங்களில் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு இளநிலை உதவியாளர், தட்டெழுத்தாளர் நியமிக்கப்பட வேண்டும் என்பது, இதையாவது உடனடியாகப் பரிசீலனை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அதைத்தான் நான் சொன்னேன். மொத்தமாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். நிர்வாகச் சீர்திருத்தக் குழு இதற்குமேலே சில சிபார்சுகளைச் செய்திருக்கிறது. அதன் பரிசீலனை முடிந்த பிறகு முடிவான அபிப்பிராயம் சொல்லப்படும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** 1971-ம் ஆண்டே அவர்கள் இதே தீர்மானங்களை நிறைவேற்றி, தங்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்க வேண்டுமென்று சொன்னார்களே, அது சம்பந்தமாக உடனடியாக முடிவு எடுப்பதுபற்றி ஆலோசனை உண்டா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அது சம்பந்தமாகவும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. என். மருதாசலம்:** பஞ்சாயத்து யூனியன், நகரசபை பணிகளில் 18 சதவிகிதம் கண்டிப்பாக அரிசனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற நியதியை நிர்ணயிக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இப்போதே ஒருசில இடங்களில் அது பின்பற்றப்படுகிறது. எல்லா இடங்களிலும் நிரந்தரமாகப் பின்பற்ற என்ன என்ன செய்யலாம் என்பது யோசிக்கப்படும்.

## ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம்

*80 வினா—**திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணியாற்றின் குறுக்கே, புதுவாயல்-பெரியபாளையம் நெடுஞ்சாலை புதுப்பாளையம் கிராமத்தை இணைக்கும் தரைப் பாலம் அமைக்கப்படும் திட்டம் தற்போது எந்த நிலையிலுள்ளது?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** அரசு தனது 27–11–73 நாளிட்ட ஊர்வளர்ச்சி-உள்ளாட்சித் துறை ஆணை எண் 2651-ல் ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டில் இந்தத் தரைப் பாலத்தை அமைக்க அனுமதி வழங்கியிருக்கிறது. இந்த வேலை நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.



**திரு. கா. வேழவேந்தன்:** அமைச்சர் அவர்களுக்கு இதற்கு நன்றி செலுத்துகிற நேரத்தில் மொத்தம் முன்பு 8 லட்சம் ரூபாய் மதிப்பிடப்பட்டதே. மேலும் தொகை ஒதுக்கப்படுமா? அடிப்படையான வேலைகள் எப்போது துவங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பால வேலைக்குத் தோராயமாக 8.25 இலட்சம் ரூபாய் தேவைப்படும் என்ற மதிப்பீட்டின்படி 1973 ஜூலை மாதம் கூடிய நிதிநிலைக்குழு இவ்வேலைக்கு ஒப்புதல் அளித்தது. ஆனால், திருத்திய மதிப்பீட்டின்படி இவ்வேலைக்கு ரூபாய் 4 இலட்சம் போதுமானது என்ற கருத்துக்கு ஏற்ப இப்பால வேலையை 4 இலட்ச ரூபாய் செலவில் கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

## மேலவெள்ளூர்-அம்பலத்தாடி இணைப்புச்சாலை

*81 வினா.—**திரு. த. சோணையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம். திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர் வெள்ளக்கரை சாலையில் இருந்து அம்பலத்தாடிக்குச் செல்லும் இணைப்புச்சாலை எப்பொழுது பழுது பார்க்கப்படும்?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், மேலவெள்ளூர்-வெள்ளக்கரை சாலையிலிருந்து அம்பலத்தாடிக்குச் செல்லும் இணைப்புச் சாலை மராமத்து வேலை தற்போது ஊரக வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்தின்கீழ் (Crash Scheme for Rural Employment) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ் வேலை 31–12—1973-க்குள் பூர்த்தி செய்யப்படும்.

## சின்னக்கண்ணனூர் சாலை

*82 வினா.—**திரு. த. சோணையா:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம். மானாமதுரை ஊராட்சி ஒன்றியம். சின்னக்கண்ணனூருக்கு தார்ச்சாலை போடும் திட்டம் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. த. சோணையா:** மானாமதுரைக்கு அருகாமையில் இருக்கிற சின்னக்கண்ணனூர் என்பது ஏறத்தாழ இரண்டாயிரத்திற்கு மேற்கொண்ட மக்கள் தொகை கொண்டதாகும். 1,500 மக்கள் தொகைக்கு மேற்கொண்ட கிராமங்களுக்கு தார் சாலை போட வேண்டுமென்ற திட்டத்தை உருவாக்கி கிராமப்புறங்களில் அருமையான தார் சாலைகள் போட்டுக் கொண்டிருக்கக்கூடிய இந்தக் காலத்தில் சின்னக்கண்ணனூர் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்டதாக இருந்தும், வழி நெடுக ஓரத்தில் இரண்டாயிரத்திற்கு அதிகமாகவும் மக்கள் தொகை உள்ளது; ஆக நாலாயிரம் மக்கள் தொகை உள்ள சின்னக்கண்ணனூருக்கு தார் சாலை வராதது அங்குள்ள மக்களுக்கு ஒரு பெருங்குறையாக இருக்கிறது. ஆகவே தமிழக அரசு அந்தப் பெருங்குறையைத் தீர்த்து வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தேசிய நெடுஞ்சாலை 49-லிருந்து சின்னக்கண்ணனூரை இணைப்பதற்கு புதுக்குளம் ஊர் வழியாக ஒரு சாலை இணைப்பு வேண்டும். தற்போது சின்னக் கண்ணனூரிலிருந்து புதுக்குளம் வரை ஒரு சாலை உள்ளது. தேசிய நெடுஞ்சாலை 49 மேலுள்ள கரிசல்குளம் என்ற ஊரையும் புதுக்குளம் என்ற ஊரையும் இணைக்கும் சாலை வேலையை ஊராட்சி ஒன்றியம் தற்போது எடுத்துக்கொண்டுள்ளது. நெடுஞ்சாலை தலைமைப் பொறியாளர் தெரிவித்துள்ளார். இச் சாலை அமைப்பு முடிவடைந்தால் சின்னக்கண்ணனூரும் தேசிய நெடுஞ்சாலை 49-ல் உள்ள கரிசல்குளம் ஊர் இணைக்கப்பட்டு குறிப்பிட்ட ஊருக்கு தேசிய நெடுஞ்சாலையுடன் நேரடி இணைப்பு ஏற்படும் என்று. சின்னக்கண்ணனூர் என்ற கிராமத்தின் மக்கள் தொகை 1,500-க்கு கீழ் இருப்பதால் இச்சாலை வேலையை தனி ஊர்ச்சாலை திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது. வளமான காலம் வரும்வரை பொறுத்திருக்க வேண்டும்.

**திரு. த. சோணையா:** சின்னக்கண்ணனூர் என்பது 1,500 ஜனத் தொகைக்கும் குறைந்தது என்று சொல்வது சரியல்ல. அந்தப் பஞ்சாயத்தில் ஐந்து கிராமங்கள் உள்ளன. அதில் பரமக்குடி யூனியனில் மூன்று கிராமங்கள், மானாமதுரை யூனியனில் இரண்டு



கிராமங்கள் என்று இருக்கின்றன. இரண்டு யூனியன்களில் உள்ளதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். இரண்டு பகுதிகளில் ஒரு பகுதிதான் வந்திருக்கிறது. இரண்டு பகுதிக் கணக்குகளையும் நான் எடுத்துக்கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே இந்த இரண்டு பகுதிகளையும் இணைத்துப் பார்த்து சின்னக்கண்ணனூருக்கு தார் சாலை போட ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** 1,500 மக்கள் தொகை கொண்டவற்றிற்கு சாலை அமைப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி இப்போது சொல்வது சரியல்ல என்று கருதுகிறேன். ஏனெனில் மத்திய அரசின் உதவி ஒருசிலவற்றிற்குப் பெற வேண்டியிருப்பதால் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்வது அவ்வளவு சரியல்ல.

*Supply of rice to other States*

* 83 *Q.*—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether the representatives of the West Bengal Government had met the Hon. Chief Minister in July 1973 to seek rice supplies; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) ஆம்.

(இ) மேற்கு வங்காள மாநிலத்தில் உணவுப் பற்றாக்குறை இருந்த காரணத்தால், அம்மாநில அரசின் உணவு அமைச்சர், 19—7—1973 அன்று மாண்புமிகு உணவு கூட்டுறவு அமைச்சர் அவர்களை சந்தித்து அம்மாநிலத்திற்கு அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டார். அதன் பின்னர், துர்கா பூஜையின்போது அரிசி வழங்கக் கோரி மேற்கு வங்காள முதலமைச்சர் கேட்டுக் கொண்டார். அதையொட்டி இரு தரப்பு அடிப்படையில் 3,000 டன் அரிசியை மேற்கு வங்காளத்திற்கு வழங்குவதென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** 1973-74-ல் தமிழ்நாட்டில் அதிக உற்பத்தி இருந்தபோது பக்கத்து மாநிலங்களுக்கு அரிசி வழங்கப்பட்டதே, எந்தெந்த மாநிலங்களுக்கு எவ்வளவு எவ்வளவு அரிசி வழங்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** மகாராஷ்ட்ராவிற்கு 10,000 டன், குஜராத்திற்கு 8,000 டன், கேரளாவிற்கு மத்தியத் தொகுப்பிலிருந்து 1 லட்சம் டன், தனியாக 7,300 டன். மைசூருக்கு 4,039 டன், மேற்கு வங்காளத்திற்கு 780 டன் அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அண்மையில் மத்திய அரசு வழியாகத்தான் இந்த உணவுப் பொருள்களை மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று தாக்கீது வந்ததாக அறிகிறேன். அப்படி ஏதாவது தாக்கீது வந்திருக்கிறதா? அப்படி வந்திருந்தால் அந்தத் தாக்கீதை எதிர்த்து இந்த அரசு ஏதாவது முறையீடு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அப்படி தாக்கீது வந்திருக்கிறது. அதுவும் கேரளா முதல் அமைச்சர் அவர்கள் கேட்டதற்காக அந்தத் தாக்கீது வந்திருக்கிறது. நாம் அதுபற்றி அவர்களுக்கு எழுதியிருக்கிறோம். அவர்களும் மத்திய அரசைக் கேட்டிருக்கிறார்கள். நாங்களும் கேட்டிருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பொதுவாக பற்றாக்குறை இருக்கிற மாநிலங்களுக்கு, அண்டை மாநிலங்களான மைசூர், கேரளா போன்ற மாநிலங்களுக்கு குறைந்த அளவிற்கு இவ்வளவாவது நாமே சப்ளை செய்கிறோம் என்ற அளவிற்கு மத்திய அரசுக்கு எழுதி அரசு உத்தரவு பெற்றுக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** நாங்கள் ஓரளவிற்கு உத்தரவு இல்லாமலேயே சாதாரணமாக மத்திய அரசின் உணவு அமைச்சரிடம் பேச்சு மூலம் கேட்டு கொடுத்துக் கொண்டு வந்தோம். முதலில் அனுமதித்தார்கள். திடீரென்று என்ன காரணமோ கேரளா முதல் அமைச்சர் அவர்கள் கேட்டதற்கு இப்படி பதில் அனுப்பியிருக்கிறார்கள். அதுபற்றிய செய்திகள் எல்லாம் பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. கனம் உறுப்பினர் அவர்கள் அதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** அண்டை மாநிலங்களுக்கு நாம் நேரடியாக அனுப்புவதால் ஒரு மாநிலத்துடன் சுமுகமான உறவை பெற்றுக் கொள்ளவும் மற்றப் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ளவும் அது வாய்ப்பாக இருக்குமாதலால் இதை வற்புறுத்தி நாமே நேரடியாக உதவி செய்வதற்கு தக்க நடவடிக்கைகளை பல முனைகளில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.



**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அதற்கான நடவடிக்கைகள் பல முனைகளில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. என். குமாரசாமி:** பற்றாக்குறை மாநிலங்களுக்கு நேரடியாக அரிசி அனுப்ப முடியாதது குறித்துச் சொல்லி நேரடியாக அனுப்ப ஒரு முடிவு ஏற்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு முன்னால் தமிழ்நாட்டுக்குத் தேவையான கோதுமை குறித்து மத்திய அரசிடம் நம் அரசு கேட்டிருக்கிறதா? கோதுமைப் பொருள்கள் இன்று எந்தப் பிரதேசத்திலும் கிடைக்காத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே கோதுமை, கோதுமைப் பொருட்கள் மத்திய அரசின் மூலம் நமக்குக் கிடைப்பதற்கு மாநில அரசு ஏதாவது வழிவகை செய்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** இதற்குச் சம்பந்தப்படாத கேள்வியாக இருந்தாலும் 35,000 டன் கொடுத்து வந்தது இப்போது 10,000 டன்தான் இரண்டு மூன்று மாதங்களாக கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். மேலும் அதிகம் வேண்டுமென்று ஜனவரியில் பக்ரீத் பண்டிகைக்கும் பொங்கலுக்கும் தனியாக ஒரு ஆயிரம், இரண்டாயிரம் டன் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். மத்திய அரசு கொடுக்கவில்லை. கோதுமை பற்றாக்குறை காரணமாக தமிழ்நாடு வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

*34 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரள மாநிலத்திற்கு ஆண்டுக்கு 15 ஆயிரம் டன் அரிசி தருவதென நமது அரசு வாக்குறுதி அளித்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) ஆம்.

(இ) சிறுவாணி திட்டப் பணியைத் தொடங்கி வைத்தபோது முதலமைச்சர் கேரளாவுக்கு ஒவ்வோர் ஆண்டும் 15,000 டன் அரிசி வழங்கப்படும் என்று அறிவித்தார். ஒரு மாநிலத்தில் உபரியாக

உள்ள நெல், அரிசி, பற்ருக்குறையாக உள்ள மாநிலங்களுக்கு இந்திய அரசின் ஒதுக்கீடுகளையொட்டி மத்தியத் தொகுப்பு மூலம் வழங்கப்பட வேண்டுமாதலால். அவ்வாறு கேரளாவுக்கு வழங்குவதற்கு இந்திய அரசின் இசைவு தேவைப்படுகிறது. எனவே, இந்திய அரசின் இசைவைப் பெறுமாறு கேரள முதலமைச்சர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிருர்.

* 85 விளு.—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 3,000 டன் அரிசி கேட்டு கேரள முதல்வரிடமிருந்து தமிழக முதல்வருக்கு அவசரக் கடிதம் ஏதேனும் அனுப்பப்பட்டதா?

(இ) ஆம் எனில், கேரள அரசுக்கு 3,000 டன் அரிசி தமிழ்நாடு அரசு வழங்கியதா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** (அ) & (இ) ஆம். கேரள முதல்வர், தமிழ்நாடு முதல்வரை ஓனம் பண்டிகைக்கு முன்பாக 3,000 டன் அரிசியை உடனடியாகத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்கி, தமிழ்நாடு அரசு 3,000 டன் அரிசி வழங்க ஒப்புக் கொண்டது.

**திரு. வை. பாலசுந்தரம்:** கேரளாவிற்கு வழங்குகிற அரிசியை வைத்துக்கொண்டு—கேரளாவோடு ஏதாவது ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரிசி வழங்கப்பட்டிருக்கிறதா? அதனுல் ஏதாவது பயன் உண்டா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கேரளாவோடு சிறுவாணி நீர் சம்பந்தமாகப் பேசுகிறபோது கேரளா முதல் அமைச்சர் அவர்கள் 15,000 டன் அரிசி ஆண்டுதோறும் வேண்டுமென்று கேட்டார்கள். அப்படி ஆண்டுதோறும் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து, மத்திய அரசின் அனுமதி வேண்டும் என்பதற்காக அனுப்பியிருக்கிருேம். அதை அனுமதிக்க வேண்டும் என்று நாம் கேட்டிருக்கிருேம். கேரளா முதல் அமைச்சர் அவர்களும் அதை அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கோரியுள்ளார்கள்.





**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** கேரளா முதல் அமைச்சர் அவர்கள் சிறுவாணி தண்ணீரைத் தமிழ்நாட்டு விவசாயத்திற்கு உபயோகித்துக்கொள்ள ஒப்புக் கொண்டிருக்கிருர்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** அந்தக் கேள்வி நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டிய கேள்வியாகும்.

**திரு. ஏ. எம். இராஜா:** கேரளா, மகாராஷ்டிரா, மைசூர் போன்ற மாநிலங்கள் எல்லாம் இந்திய உப கண்டத்தின் பகுதிகளாகத்தான் இருக்கின்றன. அகண்ட பாரதம் பேசுகிறவர்கள், எந்த மாநிலமாக இருந்தாலும் எல்லோரும் ஒரே நாட்டுக்காரர்கள் என்று சொல்கிறவர்கள், ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு அரிசி கொடுக்கும்போது மேலே இருக்கிறவர்கள் ஏதோ அந்நிய நாட்டிற்கு, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது போல் எண்ணிக் கொண்டு எங்களைக் கேட்காமல் கொடுக்கக் கூடாது என்று சொல்கிருர்கள். அகண்ட பாரதம், இந்தியா ஒரே நாடாக இருக்க வேண்டும், ஒருமைப்பாடு இருக்க வேண்டும் என்று சொல்கிறவர்கள் உண்மையிலேயே ஒருமைப்பாட்டில் அக்கறை உள்ளவர்களாக இருக்கிருர்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. ஆக, அவர்கள் இந்த நாட்டை தனித் தனியாக விடுதலை பெற்ற தனி நாடுகளைப்போல் எண்ணுகிருர்களா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை).

**திரு. கு. பெரியசாமி:** தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய அனுமதி வழங்கப்படாவிட்டாலும் கூட நாம் மீறி அனுப்பலாமா? அனுப்ப சாத்தியக் கூறுகள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, நாம் கேரள அரசிற்குக் கொடுக்கின்ற அரிசியை என்ன விலைக்கு கொடுக்கிருேம்? நமது மாநிலத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ. 1.50-க்கு விநியோகிக்கின்ருேமே, விற்கிருேமே, மற்ற மாநிலங்களுக்குக் கொடுக்கின்ற அரிசியை அந்த விலைக்குக் கொடுக்கிருேமா அல்லது விலையில் வித்தியாசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 சனவரி 22

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மத்திய தொகுப்பிற்கு என்ன விலை நிர்ணயித்திருக்கிறார்களோ, அதே விலைக்குக் கொடுக்கிறோம்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை :** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மாநில அரசிற்கு வழங்க வேண்டிய கோதுமையை வழங்கத் தவறி விட்டது என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், தமிழ் நாட்டில் பருவ மழை இந்த ஆண்டில் உரிய வகையிலே பெய்யாமல் பொய்த்து விட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த நிலையிலே மேலும் பிற மாநிலங்களுக்கு உணவு தானியங்களை வழங்குவதன் மூலம் எதிர்காலத்திலே தமிழ்நாட்டிலே உணவுப் பஞ்சம் ஏற்படும் என்ற நிலை இருக்கிறதே, அதுபற்றி அமைச்சருடைய கருத்தை நான் அறிய விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நமது கஷ்டத்தையும் பொறுத்துக் கொண்டு பிற மாநிலங்களிலே இருப்பவர்களுக்கு ஓரளவு அவர்களுடைய பசியைத் தீர்க்க வேண்டியது மனிதனுடைய கடமை என்ற வகையிலே நமது மாநில சர்க்கார் அதையும் சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. கே. எ. வகாப் :** பேரவைத் தலைவரவர்களே, வருடம் பூராவும் மழையைப் பெறுகின்ற கேரளாவும், ஜீவ நதியில் ஒன்றாகிய கங்கையும் காவிரியிடத்திலே கையேந்தி நிற்கின்ற நிலை தமிழகத்திற்குச் சிறப்புத்தான். இருந்தாலும் கேரளத்திலேயிருந்து மின்சாரத்தைப் பெறுவதைப் போல, மேற்கு வங்காளத்திலேயிருந்து சணலை—இப்பொழுது இங்கே சணல் பற்றாக்குறை இருக்கிறது—நியாய விலையில் பெறுவதற்கு நமது அரசு முன் வருமா ? மற்ற மாநிலங்களுக்கு அரிசி வழங்குகின்ற நமது அரசு, அரிசி பெறுகின்ற மாநில முதலமைச்சர்களை ஒன்றுகூட்டி, ஒருமித்த கருத்தை உருவாக்கி மத்திய அரசாங்கத்திடம் தெரிவித்து, எதிர்ப்புக் குரலை எழுப்பி, மாநிலங்களிடையே ஸப்ரியாக உணவு சப்ளை செய்ய வேண்டிய உரிமையைப் பெறுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** கனம் உறுப்பினர் அவர்கள் கேட்பது மாதிரி, மாநிலத்திற்கு மாநிலம் ஒரு உணவு அமைச்சர் இருந்தாலும் மத்தியிலே எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து ஒரே ஒரு உணவு அமைச்சர் இருக்கிற காரணத்தாலே,



1974 சனவரி 22]

அந்தந்த மாநிலங்கள் தனித் தனியாகக் காரியங்களைச் செய்வதற்கு அவர் விடவில்லை. இந்தியாவிற்கே தாம் உணவு அமைச்சர் என்ற அதிகாரத்தைக் காண்பிப்பதற்கு அந்த அந்த மாநிலங்கள் தனித்து இயங்குகின்ற பண்ட மாற்றுதலை அவர் அனுமதிப்பதில்லை. அந்த அதிகாரத்தை எப்படிப் பெற வேண்டுமென்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு நா. வெ. குருசாமி :** தலைவர் அவர்களே, நாம், கேரளாவிற்கு வருஷம் ஒன்றுக்கு 15,000 டன் அரிசி கொடுக்கிறோம். அப்படிக் கொடுத்தும் கள்ள மார்க்கெட்காரர்கள் கடத்தல் மூலமாகக் கொண்டு செல்கிறார்கள். அப்படிக் கொண்டு செல்லும்போது நமது தமிழகத்தைச் சேர்ந்த எங்களுடைய பகுதி நோட்டிஃபைட் ஏரியா என்று அறிவிக்கப்பட்டு, தடுப்புக் காவல் போடப் பட்டிருக்கிறது. கேரளாவிற்கு அருகில் நோட்டிஃபைட் ஏரியா என்று போடாமல் சுமார் 70 மைலுக்கு இப்பால் பிடிப்பது முறையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியை ஆரம்பிக்கும்போதே, கடத்தப் படுகிறது என்று சொன்னார்கள். 70 மைலுக்கு இப்பாலே நோட்டிஃபிகேஷன் பண்ணியும் கூட கடத்தப்படுகிறது. ஆகவே, இன்னும் விரிவாக்கலாமா என்று கூட யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திலிருந்து தென் மண்டலத்தை மறுபடியும் உருவாக்க வேண்டுமென்று ஓர் ஆலோசனை கூறியதாகத் தெரிகிறது. அதற்கு நமது அரசாங்கம் என்ன கருத்து தெரிவித்து இருக்கிறது ? தனி யூனிட்டாக இருக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, உணவுப் பிரச்சினையைப் பொறுத்த வரையிலே தமிழ் நாடு தனி மண்டலமாக இருக்க வேண்டுமென்றுதான் நாங்கள் எழுதி இருக்கிறோம். அவர்கள் இப்பிரச்சினை குறித்து நீண்ட நாட்களாக எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

[1974 சனவரி 22

**திரு. அ. தேவேந்திரன் :** தலைவர் அவர்களே, கடந்த 25 ஆண்டுகளாக இல்லாத அளவுக்கு 1972-73 ஆண்டில் தமிழகம் தன்னிறைவு பெற்று அட்சய பாத்திரமாக மாறி பல மாநிலங்களுக்கு உணவு தந்து கொண்டிருக்கிறது. ஆகவே, உரத் தட்டுப்பாடு இருக்கிற இந்தக் காலத்தில் இதைக் காரணம் காட்டி, மத்திய சர்க்காரிடமிருந்து அதிக உரம் பெற மாநில அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** கடந்த 2 நாட்களாகக் கூட மாண்புமிகு உறுப்பினர்களில் பலர் இதைப்பற்றிப் பேசி இருக்கிறார்கள். 40 கோடியை வைத்து அதிகமாகச் சலுகைக் காட்டவில்லை. எல்லாப் பிரச்சினைகளிலும் தமிழகத்திற்கு இந்நிலைதான். நாம் சீனி உட்பட எல்லாவற்றையும் கொடுக்கிறோம் என்று சொன்னாலும் கூட, தனிச் சலுகையை அவர்கள் காட்டியதாகத் தெரியவில்லை. அதிக உரம் பெறவேண்டுமென்பதிலே நமது மாநில சர்க்கார் மிகவும் தீவிரம் கொண்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the demand for rice by Kerala Government is a continuous and endless one. We are giving rice frequently and they are also getting rice from the Central Government. Therefore, it is better to remove the inter-State barriers for rice. The Hon. Minister in his reply has stated that he wants a separate zone for Tamil Nadu. If it is done, every State will think that Tamil Nadu is granary for rice and demand rice from us. Will the Government consider the desirability of removing the inter-State barriers and allow free movement of rice so that the Kerala Merchants can purchase rice from the open markets and thus help us?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை நீக்க முடியாது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து கேரளாவுக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு ஆண்டுதோறும் அரிசி வழங்கினால்தான் சிறுவாணித் திட்டத்திற்கு ஒப்புக்கொள்வோம் என்று கேரள அரசு ஏதாவது வலியுறுத்தியதா? அரிசி வழங்க ஏதாவது நீண்ட கால ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1974 சனவரி 22]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, சிறுவாணி நீர் கிடைப்பதற்கும் நாம் அரிசி கொடுப்பதற்கும் சம்பந்தமே இல்லை. அவர்கள் நாம் கேட்டதற்கு சிறுவாணி நீர் கொடுப்பதற்கு ஒத்துக் கொண்டார்கள். சிறுவாணி நீர் திட்ட கால்கோள் விழாவிற்கு கேரள முதலமைச்சரவர்கள் வந்திருந்த போது, தமிழகத்தின் நல்லெண்ணத்தைத் தெரிவிப்பதற்காக 15,000 டன் அரிசி ஆண்டுதோறும் கேரளாவிற்குத் தருவதாக நமது முதலமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள்—அதுவும் மத்திய சர்க்கார் இசைந்தால்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவர் அவர்களே, கேரள மாநிலத்தில் அரிசி பற்றாக்குறை என்பது நமக்குத் தெரியும். நம்முடைய மாநிலத்தில் கோயம்புத்தூர் ஏரியா வறட்சி என்பதும் நன்றாகத் தெரியும். அந்தக் கேரளத்திலே வீணாகப் போகிற தண்ணீரை நாம் கேட்டு அதன் மூலமாக உற்பத்தியாகிற நெல்லைக் கூட கேரளாவிற்கு அனுப்ப வாய்ப்பிருக்கிறதே, அந்த வாய்ப்பின் பிரகாரம், புன்னம்புழா—பாண்டியாறு நீர்த் தேக்கம் கட்டப் பெறுவதற்கு மத்திய அரசாங்கத்தின் மூலமோ அல்லது பேசியாவது முடிவு காண ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, பாண்டியாறு—புன்னம்புழா பற்றி இரு அரசுகளும் பேச வேண்டுமென்று கேரளப் பொதுப்பணித் துறை அமைச்சரோடு நாம் தொடர்பு கொண்டிருக்கிறோம். அவர்களும் தேதிகள் சொல்வதாகச் சொல்லி இருக்கிறார்கள். திருவனந்தபுரம் வரவேண்டுமென்றுச் சொல்லியிருக்கிறார்கள். நாமும் வருவதாகச் சொல்லியிருக்கிறோம். தேதிகள் இன்னும் நிச்சயம் ஆகவில்லை.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** தலைவர் அவர்களே, பிற மாநிலங்களுக்கு அரிசி வழங்குகிற நமது அரசு, கன்னியாகுமரியிலே படி அரிசி ரூ. 4.50 விற்கிறதே, ஆகவே, அங்கு அரிசியைத் தாராளமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** கன்னியாகுமரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வளவு சலுகை செய்தாலும் குறைசொல்லி இலாபம் பெறுவதற்காகத் தவிர, வேறு ஒன்றிற்காகவும் இப்படிச் சொல்லவில்லை.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I emphatically protest.

[1974 சனவரி 22

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** அங்கே, கிட்டத் தட்ட 1,25,000 குடும்பங்களுக்கு நாங்கள் ரூ. 1.40 காசு என்ற அளவிலே அரிசி கொடுக்கிறோம். ஆகையினாலே நாங்கள் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். கள்ளக்கடத்தல் காரர்கள் வாங்கிச் செல்கிற அரிசியைப் பற்றி உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இதற்குக்கூட அவர்களிடம் வேண்டுகோள் விடுத் திருக்கிறோம். உங்களுடைய மாவட்டத்திலே உற்பத்தியாகக் கூடிய நெல்லை—மாநில சர்க்காருக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். ஆகையால், அதைக் கொடுத்தால் ரூ. 4½-க்கு விற்காது என்று தெரிவிக்க விரும்புகிறேன்.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, இந்தியா முழுமையும் வறுமையாக இருக்கிற இந்த நேரத்தில் நம்முடைய அரசு எல்லா மாநிலங்களுக்கும் உணவு தானியம் வழங்குகிறது. கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்னும் கொள்கையை நமது அரசு அமலாக்குகிறது. எனவே, இந்த நாட்டில் நமது தமிழகத்திற்கு மட்டும் நல்ல பெயர் வரக் கூடாது என்பதற்காக இப்படி மத்திய அரசு செய்கிறது என்ற கெட்ட பெயர் மத்திய அரசுக்கு வருகிறது. அதைப் போக்குகின்ற வகையில் நம்முடைய அரசு நாம் உருவாக்கும், நாம் உற்பத்தியாக்கும் பொருள்களை வழங்குவதற்கு நமக்கு அதிகாரம் வேண்டுமென்ற அளவில் முயற்சியை நமது அரசு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** அதைப்பற்றி தினமும் பேசிக் கொண்டிருக்கிறோம். அதைப் பற்றிய முயற்சியை தினமும் செய்து கொண்டிருக்கிறோம். எந்த நேரத்தில் எந்த பிரச்சினை குறுக்கிட்டாலும் அப்படிப்பட்ட அதிகாரம் தேவை என்பதை கருத்து வேறுபாடில்லாமல் மற்ற எதிர்க் கட்சிக்காரர் கள் எல்லாம் இந்தப் பிரச்சினையிலே ஒத்துக்கொள்கிறோம் என்று நேற்று முன்தினம் கூட இங்கே பேசும்பொழுது சொல்லியிருக்கி றார்கள். நாம் எந்த அளவு உரிமை பெற முயல வேண்டுமோ, அதைப்பற்றி அந்த அளவு நிச்சயமாக நாம் முயலுவோம் என்று நான் தெரிவிக்கிறேன்.



1974 சனவரி 22]

### திருவண்ணாமலையில் வனஸ்பதி தொழிற்சாலை

* 86 வினா—**திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் கூட்டுறவுத் துறையின் கீழ் ஒரு வனஸ்பதி தொழிற்சாலை அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** (அ) & (இ) இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டத்திலே அதிகமாக மணிலா விளைகிறது. அது மட்டு மல்ல, அதற்குப் பக்கத்திலே தென் ஆர்க்காடு மாவட்டம் இருக்கிறது. அங்கேயுள்ள திருவண்ணாமலையிலே மணிலா அதிக மாக இருக்கிறது. இந்த நிலையிலே கையிலே இருக்கின்ற வெண்ணெயைக் கொடுத்துவிட்டு, பம்பாயிலிருந்து நெய்யை வாங்குவதைப்போல் இல்லாமல் இங்கேயே ஒரு வனஸ்பதி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு நம்முடைய அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, அப்படி எண்ணெய் உற்பத்தி செய்வதற்காக 60 இலட்சம் ரூபாய் செலவிலே ஒரு திட்டத்தை ஏற்படுத்த அதற்கான இடத்தையும் திருவண்ணாமலையிலே பார்த்து ஏற்பாடு செய்திருக்கிறோம். அதை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் அப்ருவலுக்காக அனுப்பியிருக்கிறோம். அவர்கள் தான் அப்ரூவ் செய்ய வேண்டும், அவர்களுடைய அப்ருவல் வந்ததற்குப் பிறகுதான் அது தொடங்கப்பட வேண்டும். முதல் கட்டமாக கடலையிலிருந்து எண்ணெய் எடுக்கின்ற தொழிற் சாலையை வைத்துவிடலாம் என்ற அடிப்படையிலேதான் வனஸ்பதி தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு முன்னதாக இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறோம்.

[1974 சனவரி 22

ஏற்கனவே நம்முடைய மாநிலத்திலே ஐந்து தனியார்கள் வனஸ்பதி தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருக்கின்றன, அவற்றி லிருந்து 20 ஆயிரம் டன்கள் வனஸ்பதி உற்பத்தியாகிறது. நம்முடைய மாநிலத்திற்கு அதிகமான வனஸ்பதி தேவையில்லை—காரணம் நம்முடைய மாநிலத்திலேயுள்ளவர்கள் கொழுப்பு சத்து அதிகமாகவுள்ள வனஸ்பதியை அதிகமாக ஒத்துக்கொள்வதில்லை என்ற காரணத்தினால் 12 ஆயிரம் டன் நமக்குச் செலவாகிறது. இதிலேயே மீதம் உள்ள 8 ஆயிரம் டன்னை வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிறோம். இந்தத் தொழில் கூட்டுறவுத் துறையிலே ஆரம்பிக்கப்படுகிற காரணத்தினாலே ஏற்கனவே உள்ள தனியார் துறையோடு போட்டிபோட்டு செம்மையாக நடத்தமுடியுமா, லாபகரமாக நடத்தமுடியுமா என்பதை யோசித்துத்தான் வனஸ்பதி தொழிற்சாலையை ஆரம்பிக்காமல் முதல் கட்டமாக திருவண்ணாமலையிலே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே எண்ணெய் ஆலை ஒன்று ஆரம்பிக்கத் திட்டம் போட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மோட்டார் வாகனங்களின் முகப்பு விளக்குகள்

*87 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பஸ், லாரி, கார்களில் கண்களைக் கூசும் வகையில் புதிய ரக பல்புகளை உபயோகப்படுத்தி வருவதைத் தடை செய்யும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மோட்டார் வாகனங் களின் முகப்பு விளக்குகள் வெள்ளை நிறத்தில்தான் இருக்க வேண்டும் என்று, 1940-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன விதி, 296-ல் ஏற்கனவே வழி செய்யப்பட்டு இருக்கின்றது. முகப்பு விளக்குகளில் வெள்ளை நிறமல்லாத எந்த பல்புகளை உபயோகித் தாலும் மேற்சொன்ன விதியின்படி குற்றமாகும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, மேற்கண்ட விதிகளை மீறியதற்காக நடப்பு ஆண்டிலே எத்தனை பேர்கள் கைது செய்யப்பட்டார்கள்? அல்லது அபராதம் விதிக்கப்பட்டார்கள் என்பதை அறிவிக்க இயலுமா?



1974 சனவரி 22]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலே முழுவதற்குமான விவரம் என்னிடத்திலே இல்லை. 1973 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலே 50 பேர்கள் மீதும், ஜூலை 71-ல் 100 பேர்கள் மீதும் வழக்குகள் தொடரப்பட்டன.

**திரு. ஏ. சி. நரசிம்மன்:** தலைவர் அவர்களே, நல்ல மழை காலத்திலோ அல்லது பனி பெய்கிற காலத்திலோ வெள்ளை விளக்குகள் மூலம் வெளிச்சம் அதிகமாகத் தெரியாது. அந்த நேரங்களிலே மஞ்சள் விளக்குகள் இருந்தால்தான் ஓட்டுபவர் களுக்குச் சௌகரியமாக இருக்கும். வெள்ளை விளக்குகளை மட்டும் வைத்து ஓட்ட முடியாது. ஆகவே, அந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் நுட்பம் நிறைந்த கருத்தைத் தெரிவித்து இருக் கிறார்கள் என்று கருதுகிறேன். தொழில் நுட்ப வல்லுநர்கள் மஞ்சள் விளக்குகளை வைத்து ஓட்டுவதால் கண்கள் கூசும். அது மட்டுமல்ல. அதைப் பார்ப்பவர்களுக்கும் தலைவலி போன்றவை வரும், அதனால் விபத்துக்கள் ஏற்படக்கூடிய தோற்றுவாயாக அவை இருக்கும் என்ற கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, வெள்ளை விளக்குகளில் வெளிச்சம் தெரியாது என்று சொல்வது சரியான கருத்து அல்ல என்று நினைக்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, இந்தச் சட் டத்தை மீறி பஸ், லாரிகள் போன்றவற்றிலே அதிகமான பிரகாச முள்ள லைட்டுகளையும் பயங்கரமான சத்தங்கள் உள்ள ஹாரன் களையும் பயன்படுத்துகிறார்களா? இன்றைக்கு அப்படி மீறப்படு வதைத் தடுப்பதற்காக ஒரு சுற்றறிக்கையாவது விடுவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, சுற்றறிக்கையைவிட விதிகளே தீவிரமாக இருக்கின்றன, அவற்றைத் தீவிரமாக அமல்படுத்துவதற்கு நடவடிக்கை வேண்டு மானால் மேற்கொள்ளலாம்.

**திரு. கு. காமாட்சி:** தலைவர் அவர்களே, பொதுவாகவே முகப்பு விளக்குகள் எரிவதற்கு ஒரு பேட்டரி போதுமானது. ஆனால் இப்பொழுது 2, 3 பேட்டரிகள் வைத்து அதனால் 'பிரிக்ளிங்' ஏற்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு அதனால் திணறக்கூடிய அளவுக்கு இருக்கிறது, அதைக் கவனிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையிலேதான் இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன, நான் ஏற்கனவே சொல்லியபடி நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும்.

**திரு. எம். தேவராசன்:** இப்பொழுது புதிதாக ஆட்டோ டிப்பர் என்று கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோமே, அதைப் பயன்படுத்த அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அது ஒரு புதிய தகவல்.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவர் அவர்களே, இப்படி விபத்துக்களைத் தடுப்பதற்கு நம்முடைய அரசு கவனம் செலுத்தி வருகிறது என்று பொதுவாகச் சொல்லப்படுகிறது. லாரிகளுக்கு இப்பொழுது மஞ்சள் வர்ணம் பூசப்படுவதால் விபத்துக்கள் தடுக்கப்படுகின்றன. ஆனால் அந்த உத்தரவை இப்பொழுது தளர்த்தியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அது உண்மை இல்லை.

### *Tyres for motor vehicles*

* 88 Q.—THIRU N. DENNIS,
THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that there is a shortage of tyres in the open market; and

(*b*) if so, the action taken thereon?





**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) பேருந்து, டிரக்குகளில் பயன்படுத்துகிற டயர்களைப் பொறுத்தவரையில் மட்டுமே பற்றாக்குறை நிலவுகிறது.

(இ) கிடைக்கும் டயர்களை சிரான முறையில் வினியோகிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

THIRU N. DENNIS : Since it is difficult to get tyres normally, will the Government take steps to sell these tyres through fair price shops?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, டயர்களுக்குரிய விலையை நிர்ணயம் செய்து ஏற்கனவே அரசாங்கம் உத்தரவுகளைப் பிறப்பித்திருக்கிறது. அதே விலையிலேதான் விற்கவேண்டுமென்று கட்டளை ஏற்கனவே டயர் விற்கின்ற விநியோகஸ்தர்களுக்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கூடுதலான விலைக்கு விற்றால் தவறானதாகும்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவர் அவர்களே, இந்த டயர் பற்றாக் குறையைப் போக்குவதற்கு அரசாங்கமே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, டயர் பற்றாக்குறையைப் போக்குவதற்காக மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். தொழிற்சாலையைப் புதிதாகத் துவங்குவதைப் பற்றியோ அல்லது இருக்கின்ற தொழிற்சாலையை விரிவுபடுத்துவதைப் பற்றியோ, திட்டக் கமிஷனோ அல்லது மத்திய சர்க்காரோதான் முடிவு செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** சார், பல்லவன் போக்குவரத்திலே ஒரிஜினல் டிக்கட், டூப்ளிகேட் டிக்கட் என்று இரண்டு விதமான டிக்கட்டுகளை ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி டயர்களைப்பற்றி; உட்காருங்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த டயர்கள் கிடைப்பதற்கு இல்லாமல் போவதற்கு ரேட் கான்ட்ராக்ட்டும் ஒரு காரணமாக இருக்கிறது. ஆனால் வெளிமார்க்கட்டில் டயர்கள் கிடைக்

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 சனவரி 22

இன்றன. ரேட் காண்ட்ராக்ட் என்பதை மாற்றி நீண்ட தூர பஸ்
களைப் பொறுத்தவரையிலாவது டயர்களை வாங்கிக் கொடுப்பதற்கு
அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : டயர்கள் விநியோகத்
தைப் பொறுத்தவரையில் சரியான முறையில்லை என்பதை இந்த
அரசு ஒப்புக் கொள்கிறது. தேவை அதிகமாகவும் உற்பத்திக் குறை
வாகவும் இருக்கிறது. நாடு முழுவதும் ஒரே மார்க்கட் ஆகவும்
இருக்கிறது. ஆகவே, மாநிலங்களில் ஓடுகின்ற வாகனங்களின்
தொகைக்கு ஏற்றபடி உற்பத்தியாகிற டயர்களைப் பிரித்துக்
கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் சொல்லியிருக்கிறோம்.
அப்படி அவர்கள் தந்தால் இப்படிப்பட்ட விநியோக முறையை
மாநில அரசாங்கங்கள் சீர்படுத்துவதற்கும், இதிலே நடக்கிற
கள்ளச் சந்தையைத் தடுப்பதற்கும் பயன்படும். ஆனால் இதைப்
பற்றி போக்குவரத்து அமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்துச்
சொல்லியுங்கூட இதுவரையிலே எந்தவிதமான நடவடிக்கையும்
எடுக்கப்படவில்லை. அது மட்டுமல்ல, உற்பத்தியாளர்கள் நினைத்
தால் டயர்களை விற்பதில் எவ்வளவு வேண்டுமானாலும் விபரீத
விளையாட்டுக்களை மேற்கொள்ளலாம் என்பதுதான் இன்றைக்கு
இருக்கக்கூடிய நிலைமை.

THIRU M. A. LATHEEF : There seems to be lot of mal-
practices, as the Hon. Minister himself has admitted, in the
distribution of tyres. The Hon. Minister stated that it has been
taken up with the Central Government. Has it been done
officially and if so, what is the reply? Will the Government bring
some official measure to have effective control over the distri-
bution of tyres in this State?

THE HON. THIRU S. RAMACHANDRAN : I entirely agree
with the suggestion of the hon. Member. This matter has been
already taken up with the Government of India, that tyres which
are manufactured should be distributed according to the population
of vehicles in the States. This has been represented by us very
often but in spite of repeated representation the scarcity is keenly
felt. But unfortunately tyres are available in some unknown or
known place at higher rates. What can I do? The whole Indian
economy is a black-market economy.



1974 சனவரி 22]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, டயர் பற்றுக்
குறையின் காரணமாக அரசாங்க பஸ்கள் ஏதாவது ஓடாமல் இருக்
கின்றனவா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நம்மு
டைய நாட்டிலே மட்டுமல்ல, நான் அண்மையிலே செய்திப் பத்திரி
கையிலே பார்த்தேன். மகாராட்டிரத்திலே பஸ்கள் ஓடாமல்
கணிசமாக இருக்கின்றன என்ற செய்தியைப் பார்த்தேன். இருந்
தாலும் நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையில்
இங்குள்ள டயர் கம்பெனிகளோடு நேரடிப் பேச்சு வார்த்தை
களின் மூலமாகக் கூடுமானவரையில் அந்தக் கஷ்டம் அதிக
மில்லாத அளவில் பார்த்துக் கொள்கிறோம்.

*Introduction of Mini-buses*

* 89 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI : Will the
Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the Government have taken a decision on the
question of introducing mini-buses: and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடம் இல்லை.

**இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோருக்கு வாடகைக் கார்கள் ஒதுக்கீடு**

* 90 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 சனவரி முதல் ஆகஸ்ட் வரை இலங்கையிலிருந்து
தாயகம் திரும்பி வந்துள்ள அகதிகள் எத்தனை பேர் டூரிஸ்ட் டாக்சி
தொழில் நடத்துவதற்காக அம்பாசிடர் கார் ஒதுக்கித்தர
வேண்டும் என மனு போட்டுள்ளனர் ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்குக் கார் ஒதுக்கித் தரப்
பட்டுள்ளது ?

திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மூன்று.

(இ) மூவருக்கும் அம்பாசிடர் கார் ஒதுக்கீடு செய்யப்பட்
டுள்ளது.

[1974 சனவரி 22

## திருக்குறளை தேசீய நூலாக்கல்

* 61 வினு.—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-சுற்று லாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்குறளை இந்தியாவின் தேசீய நூலாக ஆக்கிட மத்திய அரசை நம் மாநில அரசு கேட்டுக்கொள்ளும் செயற் குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, இந்தியாவினுடைய தேசீயப் பறவையாக, தேசீய மலராக ஒவ்வொன்றும் இருப்பதைப் போல் தேசீய நூலாக தமிழ்மறையாகிய திருக்குறளை இந்திய அரசு ஏற்க வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் எழுதப் படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, எந்தவொரு நாட்டிலேயும் தேசீய இலக்கியமாக ஒன்று தேர்ந் தெடுக்கப்பட்டிருப்பதாக, மரபு இருப்பதாகத் தெரியவில்லை. தேசீய பறவை, தேசீய விலங்கு என்ற முறையில் வைத்திருக்கிறுர் களே தவிர, எந்த ஒரு நாட்டிலும் தேஷனல் புக், நேஷனல் லிட்ட ரேச்சர் என்று குறிப்பிட்டு அதுதான் என்று கூறும் மரபு இருப்ப தாகத் தெரியவில்லை. அப்படியிருந்தால் அதனைச் சுட்டிக்காட்டி நாமும் வற்புறுத்திக் கேட்கலாம். அப்படியிருந்தால், இந்தியாவின் தேசிய இலக்கியம் என்ற முறை ஏற்பட்டால் அப்படி வைப்பதற்கு எல்லாவிதமான பொருத்தமும் உடைய நூல் திருக்குறள் என்று திட்டவட்டமாகச் சொல்லலாம். பொதுவாக உலகப் பொது மறையாக இருப்பதாலும், எல்லா நாட்டு மக்களுக்கும் பொருந்து கின்ற தன்மையிருப்பதாலும் அதை உலக மக்களுக்குப் பொது வான நூல் என்று சிறப்பித்துச் சொல்கிறேம். எனவே ஒரு இலக்கியத்தை தேசீய இலக்கியம் என்று ஏற்படுத்துகிறுர்கள் என்ற நிலை வரும்பொழுது திருக்குறளைச் சொல்லலாம். அப்படி எந்த நாட்டிலேயாவது இருந்தால் அதைச் சுட்டிக்காட்டலாம். ஆனல் இப்பொழுது அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை.



1974 சனவரி 22]

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவரவர்களே, திருக்குறள் இந்த நாட்டிலே எத்தனை மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டிருக் கிறது? எல்லா பிரதானமான இந்திய மொழிகளிலேயும் மொழி பெயர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இது கிட்டத்தட்ட உலக மொழிகளிலே 30 மொழிகளிலே, எல்லா மொழிகளையும் சேர்த்து 30-க்கும் மேற்பட்ட மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்தியாவில் சமஸ்கிருத மொழியில், இந்தி மொழியில், மராட்டிய மொழியில், வங்காள மொழியில், தெலுங்கில், மலையாளத்தில், கன்னடம் ஆகிய இப்படிப்பட்ட முக்கியமான மொழிகளில் திருக்குறள் மொழி பெயர்க்கப்பட்டிருக் கிறது. சின மொழியிலேகூட திருக்குறள் மொழி பெயர்க்கப் பட்டு 1968-ம் ஆண்டிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலே அந்த நூல் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்று சிறப்பித்துக் கூறப்படும் கருத்தாழம் மிக்க அந்தக் குறளை எல்லா சர்வ கலாசாலைகளிலும் ஆராய்ச்சி செய்யும் நடைமுறையை அரசு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் துணைக் கேள்விக்கும் நேரடித் தொடர்பு இல்லை யென்றாலும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் மூன்று பல்கலைக் கழகங்களிலே திருக்குறள் ஆராய்ச்சிக்காக மூன்று மூன்று இலட்சம் ரூபாய் அறக் கட்டளையாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் சார்பாக ஆராய்ச்சி நடைபெறுகிறது. சென்னை பல்கலைக் கழகம் இதுவரையில் 5 நூல்களைக் கொண்டு வந்திருக்கிறது. மற்ற பல்கலைக் கழகங்களும் நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட் டிருக்கின்றன.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, திருக்குறளை தேசிய நூலாக அமைக்க இப்பொழுது சாத்தியமில்லை என்று கூறினுர்கள். இருந்தாலும் குறைந்தபட்சம் அதைத் தேசிய நூல் என்ற எண்ணத்தை உருவாக்கும் வகையில் சில காரியங்களைச் செய்ய முடியும். உதாரணமாக, நம்முடைய சட்டமன்ற நூலகத்திலே

திருக்குறளைப்பற்றிய ஆராய்ச்சி நூல் இருக்கிறதா என்று நேற்று முன்தினம் நான் தேடித் தேடிப் பார்த்தேன். ஒரு ஆராய்ச்சி நூல்கூட இல்லை. சட்டத் துறைக்கும், ஆட்சித் துறைக்கும் திருவள்ளுவர் கொடுத்த நல்ல கருத்துக்கள் நமக்குக் கிடைக்கும் வகையிலே நல்ல ஆராய்ச்சி நூல்களை வைத்து இதுதான் நமது தேசிய நூல் என்று சட்டமன்ற உறுப்பினர்கள் எண்ணும் அளவிற்குச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, சட்டமன்றங்கள் வைத்திருக்கின்ற நூலகங்களிலே நம்முடைய மாநில சட்டமன்ற நூலகம் மிகச் சிறப்பான ஒன்று என்பதை எல்லோரும் அறிவார்கள். வேறு பல மாநிலங்களிலுள்ள சட்ட மன்ற நூலகத் துறையை நான் பார்த்திருக்கிறேன். அவைகளில் இல்லாத அருமையான நூல்கள் இங்கே உண்டு. திருக்குறள் நூலும் உண்டு என்று கருதுகிறேன். அப்படி விடப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட நூல்களை வாங்கி வைப்பதற்கு அந்தத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. இளங்கோவன் :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விடை சொல்லும்பொழுது சென்னை பல்கலைக் கழகம் 5 நூல்களை வெளியிட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதன் விவரம் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அந்த நூல்களின் பெயர்களைச் சொல்ல வேண்டுமென்றால் தனிக் கேள்வி போட வேண்டும். 5 நூல்களை அந்த ஆராய்ச்சிக் குழுவினர் வெளியிட்டிருக்கிறார்கள்.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவரவர்களே, இந்திய நாட்டில் தேசியப் பறவை என்றும், தேசிய விலங்கு என்றும் சிலவற்றைக் குறித்து வைத்திருக்கிறார்கள். வேறு சில நாடுகளில் தேசிய மலர்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சில நாடுகளில் நூல்களைக் கூட குறிப்பிட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். பொதுவாக இப்படிப்பட்ட அடிப்படை ஒன்று இருந்துதான் ஆக வேண்டுமென்ற கட்டாயமில்லை. தேசிய கீதம் வங்காள மொழியில் எழுதப்பட்டிருக்கிறது. தேசிய மொழியாக இந்தப் பிராந்தியத்திற்கு அப்பாற்பட்ட வேறொரு மொழி பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழில் எல்லா மதத்தினரும், எல்லா இனத்தினரும் நாட்டினரும் ஒத்துக்கொள்ளக்கூடிய கருத்துக்களைத் தாங்கியுள்ள



திருக்குறளைத் தேசிய நூல் என்று பிரகடனப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, நான் முதலிலே கூறியபடி ஒரு மரபைச் சுட்டிக்காட்டி வற்புறுத்தினால் விடிவு ஏற்பட முடியும். நாம் எழுதிய பிறகு அவர்கள் மறுத்துவிட்டால் அந்த அளவில் நின்றுவிடாமல் மாச்சர்யங்கள் ஏற்படவும், பல்வேறு போராட்டங்களில் இறங்கவும் வேண்டிய நிலை வரும். மத்திய அரசுக்கு எடுத்துக் கூறும்பொழுது அவர்கள் 14 மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுத்திருக்கும் நாட்டில் என்று ஆரம்பித்தால் விபரீதமான விளைவுகள் ஏற்படக்கூடும். ஆகவே அப்படிப்பட்ட மரபு இருந்தால், அதைச் சுட்டிக் காட்டி கேட்க வழியிருக்கும். ஆனால் அப்படிப்பட்ட நிலைமையில்லை. அப்படி இல்லாததால் அந்தச் செயற்குறிப்பு இல்லை என்று குறிப்பிட்டேன்.

### கால்டுவெல், போப் ஆகியோர் சிலைகள்.

* 62 வினா—**திரு. க. உரொ. எட்மண்ட் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை மெரினா கடற்கரை சாலையில் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடந்தபோது அமைக்கப்பட்ட வெளிநாட்டு கிறிஸ்துவத் தமிழ் அறிஞர்களான கால்டுவெல், ஜி. யு. போப் ஆகியோர்களின் சிலைகள் தற்சமயம் அதற்கான இடங்களில் இல்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், காரணங்கள் யாவை ?

(உ) அதன்மேல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) சிலைகள் அதற்கான இடங்களில் இல்லை என்று தெரிய வருகிறது.

(ஆ) ஏற்கெனவே இருந்துவந்த சிலைகள் தற்காலிகமாக நிறுவப்பட்ட மாதிரி சிலைகள் என்றும், இப்போது இவை வெண்கலத்தில் நிரந்தரச் சிலைகளாக வடிக்கப்படுகின்றன என்றும்

[1974 சனவரி 22

இதற்கு வசதியாக இருக்கும்பொருட்டு மாதிரிச் சிலைகள் சிற்பக்கூடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளன என்றும் தெரிய வருகிறது.

(உ) அரசுக்கு இதில் நேரடித் தொடர்பு இல்லை. ஆகவே, அரசாங்கம் நேரடியாக நடவடிக்கை எடுப்பதற்கில்லை. ஆனால் அதற்கு உரியவர்களிடத்தில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

*Training in the art of Sculpture*

* 63 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) the total number of trainees in Sculpturing who have come out of the Training Institute, run by the Directorate of Industries and Commerce during the last three years; and

(*b*) the number of them who have been placed in employment?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) பதினெட்டு

(ஆ) இந்த பதினெட்டு நபர்களும் பணியில் அமர்ந்துள்ளனர்.

**திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, அவர்கள் அரசுப் பணிகளில்தான் அமர்த்தப்படுகிறார்களா ? தனியார் துறையிலும் வாய்ப்பிருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அரசுப் பணியில் சிலவிடங்களில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் தனியாக சிலபலவிடங்களில் சிற்பக் கூடங்கள் அமைத்துத் தொழில் நடத்தி வருகிறார்கள்.

*Pichavaram as tourist centre*

* 64 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to develop Pichavaram near Chidambaram into a Tourist Centre; and

(*b*) if so, the details thereof?



1974 சனவரி 22]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

வந்தவாசியில் சுற்றுலா மாளிகை

* 65 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சரித்திரப் பிரசித்தி பெற்ற வந்தவாசி கோட்டையைக் காணவரும் உல்லாசப் பயணிகள் வசதிக்கென அங்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, வந்தவாசி சரித்திரத்தில் மிகவும் புகழ்பெற்ற இடம். அங்கே ஒரு பாழடைந்த கோட்டை இருக்கிறது. தெள்ளாறு என்ற இடத்தில் பல்லவன் காலத்து குகைக்கோயில் இருக்கிறது. எனவே அங்கு வரும் பயணிகளுக்கு வசதியாக சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு இனியாவது முயற்சிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, வந்தவாசியில் கோட்டையின் பழமையையும், வரலாற்றுச் சிறப்பான பகுதிகளையும் காப்பாற்றுவதில் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆனால் சுற்றுலா மாளிகை கட்டும் அளவிற்கு இன்றியமையாமை ஏற்படுகிறதா என்று பார்க்கும்பொழுது வரும் பயணிகள் அங்கே தங்குகிறார்களா அல்லது நின்று பார்க்கிறார்களா அல்லது ஓட்டத்திலேயே பார்க்கிறார்களா என்ற அடிப்படையில் சுற்றுலா மாளிகை ஏற்படும். திருச்செந்தூருக்கு ஏராளமான பேர் வருகிறார்கள் என்றால், சுற்றுலா மாளிகை கட்டி போதுமான அளவில் யாரும் தங்காத அளவிற்கு அங்கே ஏன் கட்டினோம், திருநெல்வேலி, பாளையங்கோட்டையிலே கட்டியிருக்கலாமே என்று எண்ணத் தோன்றுகிறது. எனவே வந்து தங்கும் பயணிகள், இருக்கின்ற நேரம் ஆகியவைகளைக் கொண்டு கட்ட வேண்டியவர்களாக

இருக்கிறோம். ஆனால் வந்தவாசியில் கோட்டையின் பழமையை யும், வரலாற்றுச் சின்னங்களையும் காப்பாற்றும் அளவில் தொல் பொருள் ஆராய்ச்சித் துறை ஈடுபட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்--விடைகள் முடி வுற்றன.

[**குறிப்பு :** ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அமைச்சரின் அறிக்கை.

## ஒரு துணை வினாவிற்கான விடையைத் திருத்தி கல்வி-சுற்றுலா அமைச்சர் அளித்த அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 32- விதியின் கீழ் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நேற்று கேள்வி நேரத்தின்போது மாண்புமிகு உறுப் பினர் திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் ஒரு கேள்வியைக் கேட்டார்கள், 'தமிழ்நாட்டு வரலாற்றை எழுதிப் புதைத்து வைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ?' என்று தமிழ்நாட்டு வரலாற்றைப் பதிப்பிக்கும் நோக்கம் இருக்கிறதா ? என்று கேட்கிறார் என்று எண்ணிக்கொண்டு 'இந்தக் குழுவின் பணியே அதுதான்' என்று விடையிறுத்தேன். ஆனால் எல்லாப் பத்திரிகைகளிலும் கேள்வி ஒன்றாகவும், நான் சொன்ன பதில் வேறொன்றாகவும், வினாவுக்கும் விடைக்கும் தொடர்பு இல்லாத முறையிலே வெளியிடப்பட்டிருப்பதால் அதுபற்றித் தெளிவு படுத்த விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வரலாற்றை எழுதுவது வெளி யிடுவதற்கே தவிர, புதைத்து வைப்பதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் கேள்வி கேட்டிருப்பதிலும் அவர் 'இந்திய சரித்திரத்தை எழுதி மத்திய அரசினர் புதைத்து வைத்திருக்கிறார்களே' என்பதிலும் உண்மை இல்லை. 1947-ம் ஆண்டு முதல் இதுவரை சிறப்பான வரலாற்றுக் குறிப்புகளை எழுதி வைத்து வேறுபல பொருள்களையும்





அதனுடன் வைத்து புதைத்து வைத்திருக்கிறார்கள். ஐயாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு மக்கள் பார்க்க வேண்டுமென்ற முறையிலே புதைத்து வைத்திருக்கிறார்கள். அதிலே என்ன இருக்கிறது என்று உறுப்பினர்கள் கேட்கிறார்கள் என்று மத்திய அரசை எழுதிக் கேட்டால் அதுபற்றிய விவரங்களை அனுப்ப முடியாது என்று பதில் எழுதிவிட்டார்கள்.

நாம் வரலாற்றை எழுத புதைந்து கிடப்பதை எல்லாம் தோண்டிக் கொண்டிருக்கிறோம். அகழ்ந்தெடுத்து வரலாற்றுக் குறிப்புகளை அறிந்து வரலாற்றை எழுதுகிற நிலைமையில் இருக்கிறோம். எழுதப்படுகிற வரலாற்றைப் பதிப்பித்து வெளி யிட வரலாற்றுக் குழுவினர் கருதுகிறார்களே தவிர, புதைத்து வைப்பதற்காக அல்ல. ஆகவே, வினாவுக்கும் விடைக்கும் தொடர்பு இல்லாத நிலைமையில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (3) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. கே. பி. கோபால் :** தலைவர் அவர்களே, தொடர்ந்து பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி அமைப்பு 1947-ல் ஆரம்பிக்கப்பட்டது. காங்கிரஸ் 20 ஆண்டுக் காலம் ஆட்சி செய்தபோதும் ஆசிரியர் கூட்டணி பல கோரிக்கைகளை வைத்தனர். அவர்கள் கோவையில் 20—1—73-ம் தேதி மாநில வெள்ளி விழா மாநாடு என்று ஏற்பாடு செய்து அரசியலுக்கு அப்பாற்பட்ட அமைப்பு என்பதை எடுத்துக் காட்டும் வகையில் நமது கல்வியமைச்சர் அவர்களையும், முதலமைச்சர் அவர்களையும், கோவை நகரசபைத் தலைவர் அவர்களையும் விழாவுக்கு அழைத் திருந்தார்கள். அப்படி அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் 25 ஆண்டு காலமாகப் பணியாற்றி வருகின்ற அமைப்பு இருக்கும் போது சமீப காலத்தில் 'ஆசிரியர் கழகம்' என்ற ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்ற அரசின் குறிக்கோளுக்கும் கொள்கைக்கும் முரண்பாடாக இருக்கிறது. இந்த அரசு முன்மாதிரியாக வழிகாட்ட வேண்டிய நிலைமையில் இருக்க வேண்டாமா ?

[திரு. கே. பி. கோபால்] [1974 சனவரி 22

தமிழ்நாடு மத்திய அரசால் புறக்கணிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு சொல்லப்படுகிறது. 1969 முதல் 1972 வரை திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மத்திய அரசை ஆண்டு கொண்டிருக்கும் இந்திரா காங்கிரஸ்-க்கும் நல்ல சுமுகமான உறவுகள் இருந்தன. அந்தச் சமயத்தில் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தத் தவறிவிட்டார்கள். உறவுக்குக் கை கொடுத்துவிட்டு உரிமைக் குரல் கொடுக்கத் தவறி விட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கார்ப்பரேஷன் நிர்வாகத்தில் முறைகேடுகள், ஊழல்கள்பற்றிப் பத்திரிகைகளில் பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. சமீபத்தில் வந்த செய்தி ஒன்று—சென்னை கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான தியாகராயநகரில் உள்ள கண்ணம்மாபேட்டை மயானத்தில் புதைக்கச் செல்லும் பிணங்களுக்கு வசூலிக்கப்பட வேண்டிய தொகை ரூ. 32. ஆனால் அதிகப்படியாகப் பணம் வசூலிக்கப்படுவதாகக் கேள்விப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே மயானத்திற்குச் செல்லுபவர்கள் மன வேதனையோடு செல்வார்கள். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் அங்கும் முறைகேடுகள் நடக்கின்றன.

ஆசிரியர் மாற்றங்களைச் செய்யும்போது மாவட்ட அளவிலே உள்ள கல்வி அதிகாரிகள் லஞ்சம் வாங்குகிறார்கள். அந்த வகையில் சேலம் மாவட்டம் கல்வி அதிகாரி பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற செய்தி வந்திருக்கிறது. இது வருந்தத்தக்க ஒன்றாகும்.

நாட்டில் நிலவி வரும் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம் பற்றி ஒவ்வொரு ஆண்டும் ஆளுநர் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். படித்தவர்களிடையே எந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது என்பதற்கு ஒருசில உதாரணங்களை எடுத்துக் கூற விரும்புகிறேன். 603 இளநிலைப் பொறியாளர் பதவிகளுக்கு வந்த விண்ணப்பங்கள் 3,728. அதைப்போல் 2,600 தட்டச்சர்களுக்கு வந்த விண்ணப்பங்கள் 1,41,535. தொழில் பழக ஆசிரியர்கள் பதவிக்கு வந்த விண்ணப்பங்கள் 25,498. படித்தவர்களிடையே இந்த அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிறது. இவர்களுக்கு உடனடிப் பரிகாரம் என்ன என்று இந்த உரையில் கூறப்படவில்லை.



1974 சனவரி 22] [திரு. கே. பி. கோபால்]

இந்த அரசு மேற்கொள்ளும் ஸ்திரமற்ற கொள்கைகளைப் பற்றி ஒருசில சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சினிமா தியேட்டர்களை அரசுடைமையாக்குவோம் என்று தேர்தல் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். பத்திரிகையிலும் வந்தது. தியேட்டர்களை நாட்டுடைமையாக்குவோம் என்று கூறிக் கொண்டே தியேட்டர் பினான்ஸ் கார்ப்பரேஷன் அமைத்திருக்கிறார்கள். முன்பு செமி பர்மனென்ட் தியேட்டருக்கு ஒரு லட்சம் ரூபாய் கடன் உதவி கொடுத்து வந்தது இப்போது 20,000 ரூபாய் அதிகமாக 1,20,000 ரூபாய் கொடுக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள் நேரடியாகவே மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என்று 11—3—1972-ம் ஆண்டு நடந்த சமுதாய வளர்ச்சி மானியக் கோரிக்கை விவாதத்தின்போது அன்றைய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஆதரிப்பதாகவும், அதை இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றும் கூறினார்கள். ஆனால், அடுத்து நடைபெற இருக்கும் நகரசபைத் தலைவர்கள், ஒன்றியத் தலைவர்கள் தேர்தலில் இந்த முறையில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட மாட்டார்கள் என்று அறிகிறேன்.

மதுவிலக்கை எடுத்துக் கொண்டால்—இன்று அறிஞர் அண்ணாதுரை அவர்கள் சமாதியில் அணையா விளக்கை வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய மதுவிலக்குக் கொள்கையை அணைத்து விட்டார்கள் என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மு. சுருளிவேல்** : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரையின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையின் துவக்கத்திலே நம்மை எல்லாம் மனிதர்களாக்கிய நம்முடைய அறிவுக் கண்களைத் திறந்து விட்ட, தன்னுடைய சூறாவளிச் சுற்றுப் பயணத்தால் மூடப் பழக்க வழக்கங்களை, ஜாதியம் பேசிய சழக்கர்களை, ஏற்றத்தாழ்வு பேசிய முதலாளித்துவ வாதிகளை சாடி வந்த தமிழ்ச் சமுதாயத்திற்கு, தமிழ் மொழிக்கு, தமிழர் நாகரீகத்திற்கு,

தமிழ்ப் பண்பாட்டுக்கு எடுத்துக் காட்டாக வாழ்ந்து உலகத்திலே தமிழ்ச் சமுதாயத்திற்கு மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்த உத்தமத் தலைமகன், நம்மை எல்லாம் ஆளாக்கி வளர்த்த ஐயா அவர்களின் மறைவு பற்றி இங்கே கூறியிருக்கிறார்கள். அவர்களுடைய உரையிலும் இரங்கலைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

சனவரி மாதம் 22-ம் தேதி ஐயா அவர்களின் மறைவைப் பற்றி பேசும் நான், சென்ற ஆண்டு சனவரி மாதம் 22-ம் தேதி ஐயா அவர்களை என்னுடைய போடி நகருக்கு அழைத்துச் சென்று பகுத்தறிவு வார விழாவினைத் துவக்கும் பாக்கியத்தைப் பெற்று இருந்தேன். மனிதன் தோன்றிய வரலாற்றை, மனிதன் கடவுளைப் படைத்த வரலாற்றை, மதத்தின் பெயரால், ஜாதியின் பெயரால் சில சுயநல சக்திகள், பிற்போக்குச் சக்திகள் பாமர மக்களை எந்த அளவுக்கு ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறார்கள், எதற்காக இந்த நாட்டிலே பகுத்தறிவு இயக்கம் வளர வேண்டுமென்பதற்காக தந்தை பெரியார் அவர்கள் அன்றைய தினம் கூறிய விளக்கங்கள் இன்றையதினமும் என்னுடைய காதிலே ஒலித்துக்கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட தியாகச் செம்மலை, தமிழனின் தலைமகனை இழந்து நாம் இன்றைக்குத் தவித்துக் கொண்டிருக்கிறோம்.

தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணா அவர்களும் தோன்றியிருக்காவிட்டால், 60 ஆண்டுகாலம், 50 ஆண்டுகாலம் இந்த நாட்டிலே தன்னுடைய பேச்சாலும், எழுத்தாலும், தன்னுடைய உழைப்பாலும் இந்தச் சமுதாயத்தை திருத்தி இருக்காவிட்டால், இச் சமுதாயத்தின் நிலை எப்படியிருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்றைய தினம் யார் யார் குறை கூறினார்களோ, நல்ல தரம் உள்ள பத்திரிகைகள் என்று நாம் கூறிக்கொண்டிருக்கிறோமோ, அவர்களெல்லாம் கூட இன்றைய தினம் தந்தை பெரியார் அவர்களைப்பற்றி தலையங்கத்தை எழுதியிருக்கிறார்கள். யார் யாரிடமிருந்து நாம் ஒரு முழுமையான தலையங்கத்தை எதிர்பார்க்கவில்லையோ அவர்களெல்லாம் கூட தந்தை பெரியார் அவர்களைப் பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நேரத்தில் தமிழர்களால் நடத்தப்படுகிற ஒரு சில பத்திரிகைகள், அதிலும் குறிப்பாக 'குமுதம்' பத்திரிக்கை அவர்களைப் பற்றி தலையங்கம் எழுதுகிற நேரத்தில் நல்லவை,





தீயவை என்று எடுத்துக்காட்டி, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞருக்கு அறிவுரை கூறியிருக்கிறது. யார் யாரோ எந்தெந்த மாதிரி எல்லாமோ தந்தை பெரியார் அவர்கள் மறைவு குறித்துப் பேசினார்கள், கருத்துக்கள் கூறினார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தானைத் தலைவர், நம்மை வழிநடத்திச் செல்லும் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் மிகவும் சுருக்கமாகச் சொன்னார்கள். 'பெரியார் அவர்கள் தன்னுடைய சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டார், நாம் தொடருவோம்' என்று கூறினார். அது பொறுக்கவில்லை அந்தப் பத்திரிக்கைக்கு. சும்மா இருந்துவிட்டால் இந்திரா காந்தி எங்கே அவர்களுடைய பத்திரிக்கைக்குத் தரும் காகிதக் கோட்டாவைக் குறைத்து விடுவார்களோ என்று பயந்து, நல்லவை, தீயவை என்று எடுத்துப்போட்டு, நல்லவைகளைப் பின்பற்றுங்கள் என்று நமக்கு புத்திமதி சொல்லப்புறப்பட்டிருக்கிறது அந்த ஏடு. தந்தை பெரியார் அவர்களின் எண்ணத்தில், செயலில், எழுத்தில் தீயவை என்பது கிடையாது. தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாத பத்திரிக்கைகள், அரசியலில் தாங்கள் இழந்து விட்டச் செல்வாக்கை மீண்டும் பெற்றுவிடத்துடிக்கும் சக்திகள் இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இன்று நாம் தமிழன் என்று தலைநிமிர்ந்து நிற்கிறோம், மனிதன் என்று தலைநிமிர்ந்து நடக்கிறோம். 30 ஆண்டுகளுக்கு முன்பு சில தெருக்களில் பன்றிகள் செல்லலாம், ஆடு மாடுகள் செல்லலாம், ஆனால் சூத்திரர்கள், பிரமன் காலில் இருந்து பிறந்தவர்கள்தான் என்று சொல்லி அந்தத் தெருக்களில் நாம் அனுமதிக்கப்படவில்லை. அந்த இழிவை, அந்தக் களங்கத்தை தந்தை பெரியார் அவர்களின் பகுத்தறிவுப் பிரசாரத்தின் வாயிலாக தடுத்து நிறுத்தி, நம்மையும் தமிழன், மனிதன் என்று தலை நிமிர்ந்து நடக்கும் வகையில் செய்து இருக்கிறார்கள்.

தந்தை பெரியார் அவர்களைப் பற்றி, அவர்களுடைய தொண்டினைப் பற்றி பேசிக்கொண்டே போனால் நீண்டு கொண்டே போகும். கலைஞர் அவர்களே, தாங்கள் கூறியது போல் நாம் சுற்றுப்பயணம் தொடருவோம், நம்முடைய சமுதாயம்

முன்னேறுவதற்கு அவசியம் தொடரவேண்டும். தந்தை பெரியார் காட்டிய வழியில் சென்றால்தான் தமிழ் சமுதாயத்திற்கு ஒளிமயமான எதிர்காலம் இருக்கும்.

பெரியார் அவர்களின் அரசியல் கருத்துக்களை மற்ற இயக்கங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் 100 ஆண்டுகள், 1,000 ஆண்டுகள் கழிந்த பிறகு தந்தை பெரியார் அவர்கள் நமக்குக் காட்டிச்சென்று இருக்கும் அரசியல் கொள்கைதான் வெற்றி பெறும். காரல் மார்க்ஸ் கூறிய கருத்துக்களை எப்படி இன்றைக்கு விஞ்ஞான சோசலிசம் என்று கூறுகிறார்களோ, அதேபோல் தந்தை பெரியார் அவர்கள் கூறிய கருத்துக்களையும் விஞ்ஞான தத்துவம் என்று ஒரு நாள் கூறத்தான் போகிறார்கள். ஆகவே, கலைஞர் அவர்களே எங்களை அவர் வழி நடத்திச் செல்லுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து தன்னுடைய உரையைத் துவக்கிய மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் வீராசாமி அவர்கள் மாநில சுயாட்சியின் அவசியத்தைப் பற்றியும், மாநில சுயாட்சி இல்லாததால், மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் இல்லாததால் நாம் எந்த வகையில் பாதிக்கப்பட்டு இருக்கிறோம் என்பதைப் பற்றியும் விளக்கினார்கள். கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையில் 6-வது நிதி ஆணைக் குழுவைப் பற்றி குறிப்பிட்டு இருக்கிறார்கள். மாநில சுயாட்சி என்று கலைஞர் கூறியவுடனே, இது மாநில சுயாட்சி இடம் என்று சில பத்திரிக்கைகளில் இடம் ஒதுக்கியிருக்கிறார்கள் ஏதோ சுதந்திரம் என்பது 1880 ஆண்டு காங்கிரஸ் ஆட்சி துவக்கப்பட்ட உடனே ஆரம்பித்து, 1881 ஆண்டிலே சுதந்திரம் பெற்று விட்டமாதிரி பேசுகிறார்கள். நீண்ட போராட்டங்கள், பல தோழர்கள் சிறை சென்று தியாகங்கள், நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தோழர்கள் தியாகத்தழும்புகளை ஏற்றதன் பலனைத்தான் சுதந்திரம் என்பது 1947-ம் ஆண்டு கிடைத்தது. ஏறத்தாழ 70 ஆண்டுகள் போராடிய பிறகுதான் நாம் சுதந்திரத்தைப் பெற்றோம்.

இன்றைக்கு மாநில சுயாட்சி என்றவுடனே, சிலர் அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சி நண்பர்கள், கழகத்தை அரசியல் ரீதியாக எதிர்ப்பவர்கள் இதன் மூலம் இந்த ஆட்சியைக் கவிழ்த்து





விடலாம் என்று பார்க்கிறார்கள். ஸ்தாபன காங்கிரஸ் கட்சித் தலைவராகட்டும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராகட்டும், சற்று சிந்தித்துப் பாருங்கள், முதலமைச்சர் அவர்கள் எதற்காக மாநில சுயாட்சி வேண்டுமென்று கூறுகிறார்? அரசியல் ரீதியாக கருத்துக்களை எடுத்துச் சொல்கிறோம் மாநில சுயாட்சி ஏன் வேண்டுமென்பதற்காக. எந்தெந்த வகைகளில் நம்முடைய மாநிலமானது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. 1947-ல் சுதந்திரம் பெற்றோம். இதுவரையில் ஆறு நிதி ஆணைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முறையும் நாம் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறோம். இந்திரா காந்தி அவர்களைத் தலைவராகக் கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் மாரிமுத்து அவர்களே, உங்களை கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள், மாநில சுயாட்சிக் கோருவதாலே இந்த இயக்கத்திற்கு பாதகம் வந்தாலும் பரவாயில்லை. இந்த இயக்கம் ஆளும் கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்கட்சியாக இருந்தாலும் சரி, இந்த இயக்கத்திற்கு என்று தனிப்பட்ட தத்துவம் உண்டு. இந்த இயக்கம் தோன்றுவதற்கு சில காரணங்கள் உண்டு. இந்த இயக்கம் தோன்றியது ஆட்சிபீடம் ஏறுவதற்கு மட்டுமல்ல. இந்த இயக்கம் கூறுகிற கருத்துக்களை ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், நம்முடைய தமிழகத்திற்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை, தமிழகம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆதாரபூர்வமாக நான் எடுத்துக் காட்ட முடியும். நான் கூறுவது திராவிட முன்னேற்றக் கழகம் தயாரித்த புள்ளி விவரங்கள் இல்லை, மத்திய சர்க்காரின் அதிகாரபூர்வமான ஏட்டில் வந்தது. அதிலிருந்து எந்த அளவுக்கு நாம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறோம் என்பதைப் பார்க்கிறோம். இந்திரா காங்கிரஸ் கட்சியோடு புதிதாக தொடர்புவைத்துக் கொண்டிருப்பவர்களும் சிந்திக்கவேண்டும். ஏதேதோ பேசினீர்கள், அதையெல்லாம் மறந்துவிட்டு இன்றையதினம் உறவு வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் உறவு வளரட்டும். அதைப்பற்றிக் கவலையில்லை.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா மாநிலங்களுக்கும் மொத்த ஒதுக்கீடு ரூ. 332.00 கோடி. அதிலே தமிழகத்திற்குக் கிடைத்தது ரூ. 36 கோடி. பர்சன்டேஜ் கணக்குப் பார்த்தால் 10.8 சதவிகிதம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா

[திரு. மு. சுருளிவேல்] [1974 சனவரி 22

மாநிலங்களுக்கும் ஒதுக்கிடு ரூ. 1,058 கோடி. தமிழகத்திற்குக் கிடைத்தது ரூ. 95 கோடி. பர்சன்டேஜ் 9.0 சதவிகிதம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா மாநிலங்களுக்கும் ஒதுக்கீடு ரூ. 2,315.30 கோடி. தமிழ் நாட்டிற்குக் கிடைத்தது ரூ. 186.80 கோடி. பர்சன்டேஜ் 7.4 சதவிகிதம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா மாநிலங்களுக்கும் ஒதுக்கிடு ரூ. 1,763 கோடி. தமிழ்நாட்டிற்குக் கிடைத்தது ரூ. 119.40 கோடி. பர்சன்டேஜ் 6.8 சதவிகிதம். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த ஒதுக்கிடு எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து ரூ. 3,600 கோடி. தமிழ்நாட்டிற்குக் கிடைத்தது ரூ. 202 கோடி. பர்சன்டேஜ் 4.7 சதவிகிதம்.

(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, in support of the amendments given notice of on behalf of the Anna Dravida Munnetra Kazhagam to the Motion of Thanks to the Governor's Address, I wish to offer a few remarks.

Sir, the Governor's Address has been prepared in a rather peculiar way without making proper mention to the policy of the Government of our State. I wonder whether the Governor's Address has taken into consideration any of the important discussions that the Government of Tamil Nadu had with the Planning Commission. It is a tragedy that our wonderful Chief Minister, in spite of the brilliant set of Officers that he is having and also with the luxury of State Planning Commission, which luxury quite a few States did not possess, has failed to convince either the Central Planning Ministry or the Sixth Finance Commission. Both of them have not been properly briefed on the needs of the Government of Tamil Nadu. It is due to non-presentation of facts properly before the twin bodies, namely, the Planning Ministry and the Sixth Finance Commission, our State has been treated badly by them. It has been treated very badly by them and poor allocations have been made to Tamil Nadu. It is because of the inefficiency and incapacity of our Hon. Chief Minister to put the facts before them. I level this serious charge against the Hon. Chief Minister, Dr. M. Karunanidhi and against



1974 சனவரி 22] [Dr. H. V. Hande]

the Government of Tamil Nadu. I hope the Hon. Chief Minister in his reply to the debate will give the reasons for them. I level this charge with a sense of responsibility.

Sir, there has been consistent, persistent and deliberate attempt on the part of the Chief Minister to develop smoke screen of State autonomy for everything. He has been accusing the Central Government for partiality forgetting his own responsibility. He has completely let down our State requirements. I want to level this charge with a sense of responsibility. I can prove this. I have a number of facts to prove this. I need not go or travel very far.

Paragraph 21 of the Governor's Address clearly demonstrates how the Hon. Chief Minister has failed to place the facts before the Sixth Finance Commission. It clearly shows how inadequately he has furnished details to the Sixth Finance Commission. In Paragraph 21 of the Governor's Address, it has been clearly stated that 'one positive aspect of the Sixth Finance Commision's Report is we are to obtain a reielf of nearly Rs. 87 crores. . . . .' It is rather funny that a State like Tamil Nadu is to get 87 crores whereas a small State like Orissa, which is half the size of Tamil Naidu, was able to get an allocation of Rs. 100 or Rs. 200 crores. The Government thought it fit to complement the Central Government for this allocation of Rs. 87 crores.

The normal phenomenal excuse of the Hon. Chief Minister is 'State autonomy'. He is making this demand for State autonomy from house tops. Instead of making this cry from the house tops and making it a political issue, he can spend his time and energy usefully and demand for more allocations with the Central Government and Planning Ministry.

I would like to quote an interesting item of information to the House. The news item is this. The plan expenditure sanctioned by the Planning Minister D. P. Dhar for Tamil Nadu for 1974–75 is Rs. 108·80 crores (67·65 mobilisation by the State Government and 41·15 Central grants) as against Rs. 165·85 crores demanded by the State Government. The Planning Minister has told our Chief Minister that if he is interested in having longer plan outlay, he must mobilise a further amount of over Rs. 40 crores

by extra taxation in the area of irrigation, agriculture, electricity and transport. Our Chief Minister has accepted this amount. I charge the Hon. Chief Minister for accepting this fantastic quantum of amount. It clearly shows that he has not placed the needs and requirements of Tamil Nadu properly before the Central Government.

Then I would like to refer to certain other serious tragedies and atrocities committed by the officials including the Police Department. The officials of the Police Department have stopped acting without fear or favour. There has been a lot of pressures from the members of the Ruling Party and Treasury Benches.

I have got a lot of information to bring to the notice of the House. Because there is no time, I am not able to place them before the House. A number of strictures have been passed both by the High Court and Supreme Court. For instance, I would like to quote the strictures passed by the Madras High Court in quashing the order of termination of the services of Thiru V. Selvaraj, a part-time lecturer in the Law College. Thiru Selvaraj was completely removed from service because he appeared in the Royappa's Case. The petitioner submitted that the impugned order was mala fide as it really amounted to punishment and consequently, the provisions of Article 311 of the Constitution had not been complied with. His Lordship Ismail observed that Thiru Selvaraj was victimised. This is one example.

Like that I can give another example with regard to the strictures passed on the Accommodation Controller. Very serious strictures were passed against the Accommodation Controller. In that case his Lordship Ismail said: 'I must place on record the strong disapproval and deprecation of the court of the statement made in the counter-affidavit of the respondent. He is a responsible Officer of the Government invested with vast powers and it was utterly unworthy and unbecoming of him to make irresponsible and incorrect statements before the court . . . it was his duty to place before the Court only true facts.' In other words, I charge this Government for not allowing the Accommodation Controller to place the true facts.





Then again, there is a petition from Mrs. Lazarus with regard to allotments made by the Housing Board. It is a very serious petition with regard to the atrocities committed by the Housing Board in making allotments. In that petition she has pointed out a number of malpractices and anomalies committed by the Housing Board. This petition clearly proves that there is a lot of pressure brought on the Housing Board by the ruling party members in the matter of allotments. This is the way in which the ruling party people are interfering in each and every affair.

There is another tragedy with regard to Sooramangalam Town Panchayat. In that Town Panchayat, a lot of ruling party interference is going on. The entire Sooramangalam Panchayat has been prevented from functioning in a democratic manner. The Chairman of the Panchayat has been silenced. The Executive Officer, one Thiru Gopal has been made the sole Officer. He has committed a lot of malpractices. I have a number of records to prove this. I can prove how a very important member of the Cabinet is interfering in the affairs of the Sooramangalam Panchayat. At any time, I can place the facts before the House or before the Hon. Speaker. I would like to quote a few instances. I hope the Hon. Chief Minister in his reply will give information with regard to them.

I would like to pose some questions. They will show how the Panchayat is interfered with by a member of the Cabinet and family members of the Minister. Firstly, whether about 30 works were done without any tenders being accepted by the Panchayat, without any reference to the Panchayat or to the Prresident, at the instance of the Executive Officer, and if so how those illegalities were allowed to occur by the Inspecting Officers and if so what action has been taken on the appeal made to the Government by the President? Secondly, whether several appointments of clerks, sweepers, maistries, bill collectors, etc., have been made by the Executive Officer without reference to the Appointment Committee or even sanction by the Panchayat? Thirdly, whether the Executive Officer has been constantly refusing to allow the President to peruse the records of the Panchayat, in spite of written requests by the President, even sent by registered post, and if so what action has been taken against him? Fourthly, whether the Executive Officer has not applied even for a day's

[Dr. H. V. Hande] *[1974 சனவரி 22*

leave throughout 1973, but has been absenting himself from the area and has been at Madras and other places? He has not applied for leave even for a day during that period. Lastly whether many services like supply of bullocks, etc., have not been supplied, but moneys were drawn by the Executive Officer and that in spite of resolutions passed by the Panchayat, no open enquiry or action has been taken by the department. When this is the position with regard to a Panchayat, *மாநில சுயாட்சி என்று கேட்கிறார்கள். என்ன யோக்யதை இருக்கிறது மாநில சுயாட்சி கேட்பதற்கு?* With what right he is asking this? When there is a Panchayat like this, how can he ask for State autonomy? I have got a lot of materials to show that there are such malpractices throughout in all the Panchayat Unions, Corporation and Municipalities. The whole thing stinks because of the interference by the members of the Cabinet and by members of the Ruling Party. Last year there was one Minister.

Now, there is another Minister. An enquiry was sought to be made with regard to that Panchayat. No enquiry was made with regard to such irregularities. The Executive Officer is getting protection from the Members of the Cabinet and from the members of the Ruling Party. I am prepared to place all the facts for an enquiry before the Hon. Speaker or Hon. Minister. I will place all the records available with me at the disposal of the persons concerned.

*(முற்பகல் 10.30)*

Then again I can give hundreds of examples with regard to interference. The whole administration stinks . . .
(Mr. Speaker sounded the gong)

Sir, in the meeting of the Business Advisory Committee we have made a request that time should be allotted to all the parties. Tomorrow one of our Members who wanted to speak would not speak and that is why extra time should be allowed to me . . .

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் என்று ஒதுக்கியிருக்கிறோம். ஒவ்வொருவருக்கும் இவ்வளவு நேரம் என்று ஒதுக்கியிருக்கிறோம். ஒரு உறுப்பினருக்கும் மற்றவருக்கும் வித்தியாசம் காட்ட முடியாது.*



*1974 சனவரி 22]*

Dr. H. V. HANDE : That is our business . . . . . .

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *ஒவ்வொரு கட்சிக்கும், ஒவ்வொரு உறுப்பினருக்கும் இவ்வளவு நேரம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறோம்.*

***டாக்டர் எச். வி. ஹாண்டே :*** *நீங்கள் சொல்வது நியாயமில்லை. எங்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் நான் பேசுகிறேன். அதை மறுக்க, அதிலே நீங்கள் தலையிட முடியாது. எங்களுக்கு ஒதுக்க வேண்டிய நேரத்தை ஏற்கெனவே தங்களுடைய அறையிலே பேசியிருக்கிறோம். எங்கள் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை எங்களுக்கு நியாயமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *உங்கள் கட்சிக்கு 20 நிமிடம் கொடுக்கப்பட்டது. இரண்டு உறுப்பினர்கள் பேசியாக வேண்டும்.*

***டாக்டர் எச். வி. ஹாண்டே :*** *மீண்டும் சொல்கிறேன், இந்த விவகாரத்தில் இவ்வளவு நேரம் என்று கட்டுப்படுத்தக் கூடாது. நான் தொடர்ந்து பேசுவதற்கு 10 நிமிட நேரம் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *நீங்கள் சொல்வது சரியில்லை. ஒவ்வொரு கட்சிக்கும் இவ்வளவு நேரம் என்று ஒதுக்கப்பட்டு, ஒவ்வொருவருக்கும் நேரம் ஒதுக்குகிறோம். உங்கள் கட்சிக்கு 20 நிமிடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உங்களுக்கு பத்து நிமிடமும், திரு. முனு ஆதிக்கு பத்து நிமிடமும் ஒதுக்கப்பட்டது. ஒரு கட்சிக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தை ஒருவருக்கே கொடுக்க முடியாது.*

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :*** *திரு. முனு ஆதி அவர்களும் பேச வேண்டுமென்கிறார்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *ஒவ்வொருவருக்கும் நேரம் ஒதுக்குவது என்பது பேரவைத் தலைவருடைய விருப்பத்தைப் பொறுத்தது. கட்சியின் முடிவல்ல.*

***திரு. முனு ஆதி :*** *தலைவரவர்களே, நான் இன்றைக்குப் பேசவில்லை. நாளைக்குப் பேசிக் கொள்கிறேன்.*

Dr. H. V. HANDE : Then I come to another matter which relates to the Ramanathapuram district, Tiruvadanai taluk, R.S. Mangalam Panchayat Union. One Thiru G. Ganapathy, formerly President of the Panchayat Board, Anandur, was suspected by the higher authorities that he had misappropriated nearly Rs. 30,000 and according to the Audit Report, the liability of Rs. 5,000 lies on him. Though he was ordered by the Government to remit the amount immediately, he failed to act accordingly. The Devakottai R.D.O. produced a warrant to arrest Thiru Ganapathy through R.S. Mangalam Sub-Inspector of Police, Mr. Latheef. The Sub-Inspector either out of fear or favour has omitted to submit the warrant to the offender who has got high political connections. Therefore, even after the issue of the warrant three months back, no action has been taken. Why the Police Department and other officials hesitate to exercise their executive duty against the culprit? I know the Hon. Chief Miister will not be able to answer this point. If he answers it the entire thing will come out, including the secrets.

Then again with regard to the misappropriation of funds in the Institute of Film Technology at Adyar, we have given an amendment to the Governor's Address. A sum of about Rs. 62 lakhs has been allotted in the name of the Institute of Film Technology but a major portion of it has not been spent on the Institute but only for the advertisement of the Government. A lot of such malpractices are going on in the Institute of Film Technology.

Then I come to the incidents at Periyakuppam. After the Commission of Enquiry was appointed, houses of the people were burnt and poison was mixed in the well because they boldly came forward to give evidence before the Commission of Enquiry. Also, police officials have threatened the people there and I have got valid evidence to prove it. Harijan colonies and fields were destroyed by them. Then under the leadership of S. P. Thiru Narayanan, 400 persons were collected and beaten in almost all the police stations of Acharapakkam and Madurantakam constituencies for giving evidence before the Commission. This has been brought to the notice of the Hon. Chief Minister who first denied about those incidents. Afterwards it was conclusively proved that a lot of malpractices are going on there.



Then I come to another matter which relates to Thirukovilur. One gentleman belonging to the D.M.K. is a businessman and he is also the Paddy Levy dealer in the same town. He swindled 13,000 bags of paddy and 14,000 gunny bags and cheated the Government. He sold the above paddy in blackmarket at Rs. 60 to Rs. 70 per bag with the help of the Taluk Supply Officer, Thiru Kantharaj. The paddy godowns were situated 2 furlongs from Penniyaru. With the help of some important persons belonging to the ruling party, he transferred his levy licence to his brother-in-law who had already declared himself insolvent. That is the most shocking thing. On 9th December 1973 the river was overflowing and the town was flooded. At that time he used the opportunity and announced that the whole paddy and gunny bags were spoiled by the flood. Members belonging to all parties have submitted a petition against his announcement to the Government for further action. Thiru Kantharaj was finally suspended by the R.D.O. Meanwhile the accused removed pages No. 24 and 25 from the levy paddy purchase register and attached fresh papers with 'correction'. Page 40 also has been corrected by the accused for his safety. In these circumstances, members belonging to all the parties have published and distributed bit notices about the irregularities. He became angry and with the help of rowdies and dogs beat the persons who belonged to other parties, especially Anna D.M.K. Members like Thiru Jeeva. All these things have been done with the connivance of the ruling party. In this connection, I have to point out that the P.W.D. report also mention the fact that the godown was not flooded. Step by step the public has realised the truth. That is why the Hon. Chief Minister, Thiru Karunanidhi has become a most unpopular man and there is fantastic interference in such matters.

Then I come to victimisation against our party members and this is going on in full swing. After the election in 1971 victimisation was directed against Congress (O) members. Now the victimisation is directed against our Members. One Thiru Chitti Babu was one of the victims and he belongs to my constituency. So also one Thiru Nagalingam belonging to Division 34, was admitted in the General Hospital for multiple injuries and no action has been taken by the Police Department

[Dr. H. V. Hande] [1974 சனவரி 22

against the concerned persons. So also, one Thiru Jayaraman belonging to the A.D.M.K. was beaten by the Sub-Inspector of Police and was admitted in the hospital but no action has been taken against the Sub-Inspector. So also with regard to the incident at Paramathur Velur, no charge sheet has been filed against the concerned persons . . .

(Mr. Speaker sounded the gong) I want five minutes.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இப்பொழுதே 20 நிமிடம் ஆகி விட்டது. உங்களுக்குக் கொடுக்க வேண்டிய நேரம் கொடுக்கப் பட்டுவிட்டது. இனிமேலும் நேரம் கொடுக்க முடியாது.

DR. H. V. HANDE : I want only three or four minutes.

It is a tragedy that when we are mentioning such important facts, the Hon. Speaker is not giving us extra three or four minutes. I want only three or four minutes. There are a number of other subjects. I want it to go on record that I have been denied time for mentioning important things.

What I want to say to the Hon. Chief Minister is that his political days are numbered. He cannot go on like this for a long time. I have already mentioned it on a number of occasions in this House and outside. I mention this again. This fictitious majority that he has in this House is in fact nothing when compared to the fantastic opposition that he is having outside. That is why I have been repeating *ad nauseam* both inside and outside this House that there is no comparison between the fantastic opposition he is having outside and the majority he is having here. If he has any belief in parliamentary method of life, let him leave this and face the electorate again.

We know what is going to happen in Pondicherry. I demand on the floor of this House that if only he has the guts, the only thing he can do is to dissolve the Assembly and face fresh election. Have you got the guts to do it? (சிரிப்பு)



1974 சனவரி 22] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

நீங்க சிரிக்கலாம், இன்றையதினம். ஆனால் ஒரு மாதத்திற்குப் பிறகு பட்ஜெட் செஷனின்போது மீண்டும் வரத்தான் போகிறீர்கள், ஒவ்வொருவரும் அழுத மூஞ்சியோடு வரப் போகிறீர்கள். இப்போது நீங்க சிரிக்கலாம். நாளைக்கு நீங்கள் சிரிக்க முடியாது. எனக்குத் தெரியும்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : நாங்கள் சிரித்துக் கொண்டோ, அழுதுகொண்டோ இந்த அவைக்கு வருகிற துணிவைப் பெற்றிருக்கிறோம். சிலருக்கு இந்த அவைக்கு வருகிற துணிவே கிடையாது.

*__திரு. எ. க. துரைசாமி__ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்து திரு. என். வீராசாமி அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை நான் ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றை உங்கள் மத்தியில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நாட்டில் அடக்கி, ஒடுக்கப்பட்டிருந்த மக்களின் முன்னேற்றத்திற்கு, அவர்களை உன்னதமான மேன்நிலைக்குக் கொண்டு வருவதற்கு, தம்முடைய 95 ஆண்டுகளில் 65 ஆண்டு காலத்திற்கும் மேலாக பொது வாழ்வில் பணியாற்றிய தந்தை பெரியார் அவர்களின் மறைவு குறித்து, "நாம் ஒரு மாபெரும் விடுதலை வீரரை இழந்துவிட்டோம். அஞ்சாமையை அணிகலனாக கொண்ட சமூக சீர்திருத்தக்காரர் அவர்" என்பதாக ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த நாட்டில் மனிதனை மனிதன் தொடக் கூடாதென்ற அவல நிலையை மாற்றுவதற்காக எத்தனையோ கஷ்ட நஷ்டங்களை 65 ஆண்டுகளுக்கும் மேலாக ஏற்று, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகப் போராடிய தந்தை பெரியாருக்கு நாம் என்றென்றைக்கும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்து, தந்தை பெரியார் குறித்து ஆளுநர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளதற்காக நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தாற்போல், ஆளுநர் அவர்கள் தம் உரையில் **அண்மையில்** ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகளைக் குறிப்பிட்டுச் சொல்கிற நேரத்தில் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்கள். "கடந்த ஆண்டில்

மின்விசை வெட்டு தவிர்க்க முடியாததாயிற்று. பருத்தி விலையும் உயர்ந்தது. இவற்றின் காரணமாக, கடுமையான நூல் பற்றாக் குறையும் நூல் விலை உயர்வும் ஏற்பட்டன. அவற்றின் விளைவாக நெசவாளர்களுக்குப் பெரிதும் இடர்ப்பாடு ஏற்பட்டது. கூட்டுறவு நூற்பு ஆலைகள் உற்பத்தி செய்த நூலையும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு நடத்தப்படும் ஆலைகள் உற்பத்தி செய்த நூலையும் கூட்டுறவுத்துறையைச் சேர்ந்த நெசவாளர்களுக்குச் சீராக வழங்கினோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும், "கூட்டுறவுத்துறையைச் சேராத நெசவாளர்களுக்கு பெரிதும் இடர்ப்பாடு ஏற்பட்டது. கூட்டுறவு பிரச்சனை தொடர்ந்து கவலை அளிப்பதாக உள்ளது" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கூட்டுறவுத்துறையில் இருக்கிற மில்கள், அரசு ஏற்றுக்கொண்டிருக்கிற மில்கள் மூலம் உற்பத்தி செய்கிற நூல்கள் மட்டும் நமக்குப்போதுமானதாக இல்லை. ஆகவே இருக்கிற மில்களின் உற்பத்தித் திறனை இரண்டு, இரண்டரை மடங்காக ஆக்குவதன் மூலமும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று அல்லது இரண்டு மில்களை மேலும் இந்த அரசு அமைத்துத்தர முன்வரவேண்டுமென்று இந்த அரசினைக் கேட்டுக் கொள்வேன். இந்தத் துறைபற்றி மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து, சந்தானம் தலைமையில் அமைந்த குழு அளித்துள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசு தன் சக்திக்கு உட்பட்ட நடவடிக்கைகளை எல்லாம் எடுக்கவேண்டும், மத்திய அரசோடு வாதாடி பெற வேண்டியதைப் பெற முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் சுற்றுலா வாரியத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சியினை நான் பார்க்கிறபோது, எல்லோரும் வியக்கத்தக்க வண்ணம்--அந்த அந்த மாநில கலாச்சாரத்திற்கேற்ற, ஏன் உலக நாடுகளுக்கேற்ற வண்ணம் கைத்தறி ஆடைகள் தயாரிக்கப்பட்டு ஒப்பனை செய்யப் பட்டிருந்தது. உலக நாடுகளின் சந்தையைத் தேடவேண்டும் என்கிற அடிப்படையில் அந்த கண்காட்சி அமைக்கப்பட்டிருக் கிறது. அதற்குக் காரணமாக இருந்தவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அதுமட்டுமல்லாமல், கவர்னர் தம் உரையில் மற்றொன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ரிசர்வ் பாங்க் கடன் கொடுப்பதில் இப்போது கையாண்டு இருக்கிற முறை காரணமாக மிகப்பெரிய அளவு தொழில் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. நெசவாளர் களால் உற்பத்தி செய்யப்படுகிற துணிகள்—கோடிக்கணக்கான மதிப்புள்ள துணிகள் இன்றே மார்கெட்டில் தேங்குகிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி, வியாபாரத் துறையில் மந்த நிலை ஏற்படாத வாறு, ரிசர்வ் பாங்க் கட்டுப்பாடுகளைத் தளர்த்த முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் கைத்தறித்துறை வளர்ச்சிக்காக ஏறத்தாழ 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கம் செய்ய கருதப்பட்டுள்ளது பற்றியும் கவர்னர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். உள்ளபடியே அதன் வளர்ச்சிக்கு இது மிகவும் அவசியமாகும். கடந்த காலத்தில் மத்திய அரசின் சட்டத்தால் பொற்கொல்லர்களுக்கு வேலையில்லாதுபோன நிலை ஏற்பட்டபோது அவர்களுக்கு எல்லாம் கடன் தந்து உதவ முன் வந்ததுபோல, தமிழ்நாடு வரலாறு காணாத அளவில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே எங்கும் செய்யப்படாத அளவில், இந்த மாநிலத்தில் நெசவாளர்களுக்காக 1 கோடி ரூபாய் கடன் வழங்க முன் வந்ததை நெசவாளர் சமுதாயம் பாராட்டும். அதற்காக நானும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஆண்டுக்கு ஆண்டு பெருகி வருகிற தொழில்களைப் பார்க்கும்போது மின்சாரம் நமக்கு மிகவும் இன்றியமையாத தாகும். எத்தனை திட்டங்கள் போட்டாலும் மின்சாரப் பற்றாக் குறையே அவற்றுக்கு எல்லாம் தடங்கலாக இருக்கிறது. அதை உணர்ந்து நமது மாநில அரசு அடுத்த ஐந்தாண்டுத் திட்டத் திற்காக நாம் செலவிட உத்தேசித்துள்ள 1,200 கோடியில் 326 கோடி ரூபாயை மின் சக்தி உற்பத்திக்காக செலவிட இருப்பதைப் பாராட்டுகிறேன். அடுத்து பாசனத்திற்கு 126 கோடி ஒதுக்கி யிருப்பதையும் வரவேற்கிறேன்.

மக்களுக்கு அத்தியாவசியத் தேவையாகக் கருதப்படுகிற உணவு, உடை, உறைவிடம் ஆகிய மூன்றிலும் இந்த அரசு பல படிப்படியான திட்டங்களை போட்டுச் செயல்படுத்தி வருவது

பாராட்டுக்குரியதாகும். அந்தவகையில் உணவுக்கு அடுத்த படியாக உள்ள உடை பிரச்னையில் நமக்குத் தேவையான நூல் முழுவதையும் உற்பத்தி செய்யும் முயற்சியினையும் நாம் எடுத்துக் கொண்டாகவேண்டும்.

நிதி ஆணைக்குழு தமிழ்நாட்டை புறக்கணித்திருக்கிறது என்பதையும் ஆளுநர் அவர்கள் தம் உரையில் சுட்டிக்காட்டியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக நமக்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கியுள்ள தொகை 5.4 சதவிகிதமே ஆகும். மேலும் நம்முடைய மாநிலத்திற்கு அதிகமான தொகையைப் பெற இந்த அரசுக்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல மதுவிலக்குப் பிரச்சனையைப்பற்றி பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள். குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஓ. என். சுந்தரம் அவர்கள் இந்த மன்றத்தில் பேசும்போது, நாங்கள் இதற்காக 1½ லட்சம் பேர்கள் போராடியிருக்கிறோம், பூரணமான மதுவிலக்கு அமல் செய்யப்படவில்லை என்றால் எதிர்காலத்திலும் போராடுவோம் என்றார்கள். அகில இந்திய ரீதியில் ஒற்றுமையை பேசுகின்ற அவர்கள் அகில இந்திய ரீதியில் மதுவிலக்கு அமல் செய்யப்படவேண்டும் என்பதாக நமது முதல்வர் அவர்கள் தெரிவிக்கிற கருத்தை என் ஏற்றுக்கொள்ளக் கூடாது? அதனை ஏற்றுக்கொள்ள அகில இந்திய ரீதியில் செயல்படுகிற அவர்களது கட்சி முன்வரவேண்டுமென்று கேட்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்ததற்கு நன்றி கூறி திரு. வீராசாமி அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானத்தை முழுமையாக ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.





இந்த 20-வது நூற்றாண்டினுடைய சீர்திருத்தச் செம்மலாக விளங்கி, மக்களுடைய வாழ்க்கை முறையிலே பெரிய மாறுதலை ஏற்படுத்திய தந்தை பெரியாருடைய மறைவு உண்மையிலேயே தமிழகத்திற்கு மாத்திரமல்லாமல் இந்தியத் திருநாட்டிற்கே ஒரு பேரிழப்பாகும்.

நீண்ட நெடுங்காலமாக மக்களிடையே மூண்டுகிடந்த பழம் புராதன பழக்கவழக்கங்களையும், ஆசாரங்களையும், மதத்தின் பெயரால் மனிதன் மனிதனை ஏமாற்றிவந்த பழக்கத்தையும் மதத்தின் பெயரால் உயர்வு தாழ்வு கற்பித்த தன்மைகளையும் மாற்றியமைக்க, சமுதாயத்தில் மண்டிக்கிடந்த மூடநம்பிக்கைகளை மாற்றியமைக்க அவர்கள் வாழ்க்கை முழுவதும் செய்த புரட்சிகரமான போராட்டங்கள் உண்மையிலே பெரிய மாற்றத்தை தமிழகத்திலே ஏற்படுத்தி, சிறப்புமிக்க தமிழக அரசை தமிழகத்திற்கு அன்பளிப்பாகத் தந்திருக்கிறது என்பதை நான் பெருமையுடன் நினைவுகூர்கிறேன்.

இறைவனைப் பற்றி பெரியார் அவர்கள் கொண்டிருந்த கருத்தை நான் முஸ்லீம் என்ற முறையிலும், மதத்திலே நம்பிக்கை கொண்டவன் என்ற முறையிலேயும் ஒப்புக்கொள்ள முடியாவிட்டாலும், அவருடைய சீர்திருத்தக் கருத்துக்களில் பலவற்றை நான் ஒப்புக்கொண்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேதகு ஆளுநர் தமது உரையில் இந்த மாநிலத்திலே 40 சதவிகித நிலங்களுக்கு பாசன வசதி செய்யப்பட்டுள்ளது, ஆனால் இன்னும் 60 சதவிகித நிலங்களுக்கு பாசன வசதி செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள். மாநிலத்தில் உள்ள பெரிய ஆறுகளில் எல்லாம் பாசன வசதி நிறைவு பெற்றுவிட்டன என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது முழுமையான உண்மை, அந்த 60 சதவிகித பாசன வசதி பெறாத பகுதியிலே என்னுடைய தொகுதியும் இருக்கிறது.

25 ஆண்டுகளிலே ஏதேனும் ஒரு உருப்படியான திட்டமும் என்னுடைய தொகுதியிலே நிறைவேற்றப்படவில்லையென்று பார்க்கும் போது, உள்ளத்திலே மிகுந்த வேதனையோடு நான் இதை ஒவ்வொரு முறையும் கூறிக்கொண்டு வருகிறேன். இந்த நாட்டில் தாழ்ந்தவன் தாழ்ந்து கொண்டே போகின்ற நிலை

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 சனவரி 22

இருக்கிறதே தவிர, மேம்பாடுடையவன் மேம்பாடடைகின்ற தன்மைகள் இருக்கின்றனவே தவிர, என் தொகுதி போன்ற பின்தங்கிய பகுதிகள் கைதூக்கிவிடப்படக்கூடிய நல்ல திட்டம் ஒன்றும் ஏன் கொண்டு வரப்படவில்லை என்பது என்னுடைய சிந்தனைக்கு எட்டவில்லை.

என்னுடைய தொகுதியிலே நொய்யலாறு என்ற ஒரு திட்டம் 1½ ஆண்டுகளாகியும் இன்னும் இன்வெஸ்டிகேஷன் நிலையிலேயே இருக்கிறது. சிறிய ஆற்றுத் திட்டம், ஏறக்குறைய ரூ. 1கோடி, ரூ. 2 கோடி உள்ள திட்டம், அதற்கு இன்வெஸ்டிகேஷனே இன்னும் முடியவில்லையென்று சொன்னால், 21-வது நூற்றாண்டிலே இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறதா என்றே நான் அறிய விரும்புகிறேன். உண்மையிலே என் அமைச்சர் அவர்கள் அந்த அதிகாரிகளுக்குக் குறிப்பிட்ட மாதங்களுக்குள் முடிக்கவேண்டுமென்று உத்தரவிட்டு, உடனடியாக முடிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாது? நாங்கள் 27 ஆண்டுகள் காத்திருந்துவிட்டோம். இனியும் எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகள் காத்திருக்க மாட்டார்கள், போர்க்கொடி தூக்குவார்கள் என்று வேதனையுடன் நான் சொல்லிக் கொள்கிறேன்.

மற்றொரு திட்டம், எங்களுடைய பகுதியிலே ஓடுகிற அமராவதி ஆற்றுத் திட்டம். வெள்ளக் காலத்திலே ஓடுகிற தண்ணீரை மாத்திரம்—நிரந்தரமாகப் பாசன வசதி கேட்கவில்லை—வெள்ளக் காலத்திலே ஓடுகிற தண்ணீரை மாத்திரம்—வீணாகப் போகிற தண்ணீரை மாத்திரம்—எடுத்து அங்குள்ள குளங்களுக்குத் திருப்பிவிட்டால், 100 அடி ஆழமுள்ள கிணறுகளிலாவது ஊற்றுகள் ஏற்பட வாய்ப்பிருக்கும். அது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும்; ஒரு ஓரளவு விவசாயப் பிரச்சினையைத் தீர்க்கும். ஆகவே, இதை அருள்கூர்ந்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் தமது உரையிலே, 27,000 குளங்கள் ரூ. 15 கோடியிலே வெட்டப்படப் போவதாக குறிப்பிட்டிருக்கிறார். என்னுடைய தொகுதியிலே உள்ள மக்களுக்கு குளம் என்பது எப்படி இருக்கும் என்று கூடத் தெரியாது. அதை சொல்லப் போனால், குளம் வெட்ட விரும்பும் இடத்தில் நிலச் சொந்தக்காரர்கள் நிலம் கொடுக்க மறுக்கிறார்கள். கட்டாய முறையில் ஆர்ஜிதம்



1974 சனவரி 22] [திரு. வா. மை. அப்துல் ஜப்பார்]

செய்ய முடியவில்லை என்று அரசு சொல்கின்றது. அப்படிப்பட்ட நிலங்களை ஏன் ஆர்ஜிதம் செய்யக் கூடாது? மக்களுடைய நலனுக்கு விரோதமாக இருக்கிறது அவர்களுடைய செயல் என்றால், ஏன் கட்டாய முறையிலே ஆர்ஜிதம் செய்யக்கூடாது? அதை ஆர்ஜிதம் செய்ய முடியும் என்று ஏன், நீங்கள் சட்டம் கொண்டுவரக் கூடாது. அந்த முறையிலே சட்டம் இயற்றி, ஒரு சில பகுதிகளிலாவது பாசன வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, அரிசன மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழக்கூடிய பகுதியிலே குடி தண்ணீரே இல்லாது 1½ மைல், 2 மைல் சென்று தண்ணீர் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை வேனிற் காலங்களிலே இருந்து வருகிறது. குடிநீர் வாரியத் தலைவர் அவர்கள் கருணையிலே 1, 2 கிராமங்களுக்கு என்னுடைய தொகுதியில் குழாய்க் கிணறுகள் மூலம் குடிநீர் கிடைத்திருக் கிறது. அதை மேலும் விஸ்தரிக்க வேண்டுமென்று நான் கோரிக்கை விடுக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே திண்டுக்கல்லுக்கும் கரூருக்கும் இடையிலே இருப்புப்பாதை அமைக்கவேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால், மாநில அரசு வற்புறுத்தவில்லையோ என்னவோ, ஏறக்குறைய 10 ஆண்டுகளாக இந்தத் திட்டம் கைவிடப்பட்ட நிலையிலேயே இருக் கிறது. ஆகவே, மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி, திண்டுக்கல்லுக்கும் கரூருக்கும் பள்ளிப்பட்டி-வேடசந்தூர் வழி யாக செல்லும் வகையிலே இருப்புப்பாதை அமைக்கப்பட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ளது ஒரே ஒரு நூற்பாலை. அதை அதை விஸ்தரிக்கத் திட்டங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அதை விஸ்தரிக்க வேண்டும். அப்படி விஸ்தரிக்கும்போது, அதே இடத் திலே விஸ்தரிக்காமல், என்னுடைய தொகுதியிலே இன்னொரு மூலை யிலே அந்நூலாலையினுடைய பகுதியாக, அதனை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டுக்குப் பாதுகாப்பான தொழில்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஆளுநர் உரையிலே எழுப்பப்பட்டிருக் கிறது. அப்படிப்பட்ட தொழிற்சாலை என்னுடைய தொகுதியில் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வருமான வரி சீரமைப்பு என்பதுபற்றியும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் முழுமையாக ஆதரிக்கிறேன். இன்று மத்திய தர மக்கள், சிறு சிறு வியாபாரிகள் தங்களுடைய வருவாயில் பெரும் பகுதியை, கணக்கை சரியாகக் கொடுப்பதன் காரணமாக இழக்கிறார்கள். இவர்கள் உண்மையான கணக்குகளைக் கொடுப்பதன் காரணமாக, இங்குள்ள அதிகாரிகள் மிகுந்த விஸ்வாசமாக, அரசுக்கு விஸ்வாசமாக நடந்து கொள்வதால், கணக்குகளை ஆராய்ந்து, அதிக வரிகளை வசூலிப்பதால், இந்த மாநிலத்திலேயுள்ள சிறுசிறு வியாபாரிகள் வருவாயிலிருந்து எந்த முதலீட்டையும் செய்ய முடியாத காரணத்தாலே தொழில்கள் குன்றி இருக்கின்றன. அவர்கள் ஓரளவு பொருளாதாரத்தை சேமித்து, தொழில் துறையிலே வருவாயை ஈட்டுகின்ற வகையிலே மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி வருமான வரி சட்டத்தில் திருத்தம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும், அதிலே வெற்றியும் காணவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பல சட்டச் சிக்கல்கள் எல்லாம் இருந்தன உருது பேசுகிற மக்களுக்கு உரிமை அளிக்கும் விஷயத்திலே, பின் தங்கியவர்கள் என்ற பட்டியலிலே சேர்க்கும் அளவிலே. அலுவலர்கள் குறுக்கிட்டார்கள், மற்றவர்கள் குறுக்கிட்டார்கள். இருந்தபோதிலும், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முஸ்லீம் சமுதாயத்தின்மீது கொண்டுள்ள பற்றின் காரணமாக, பாசத்தின் காரணமாக, முஸ்லிம் சமுதாயத்தின் தலைவர் காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களுடைய மரணப் படுக்கையிலே அவருக்குக் கொடுத்த வாக்குறுதியின் காரணமாக, எல்லாச் சட்டச் சிக்கல்களையும் சுக்கு நூறாக்கி, எங்களது நீண்டகாலக் கோரிக்கையான, உருது பேசும் முஸ்லீம்களை பின்தங்கியவர்கள் என்று அறிவிப்பு செய்தது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இதற்காக முஸ்லீம் சமுதாயத்தினர் நமது அரசுக்கும் கலைஞர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கர்நாடகம்-மகாராஷ்டிர எல்லைப் பகுதிகளிலே நடந்த சச்சரவுகள் காரணமாக, அங்கே பல தமிழ் மக்கள் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். பல தொழில்களை இழந்து அவர்கள் நிர்வாணமாக ஓடி வரவேண்டிய நிலை மகாராஷ்டிர எல்லையிலே ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட மக்களுக்குப் போதுமான பாதுகாப்புத் தர இனி





யாவது நம்முடைய மாநில அரசு முன்வரவேண்டும், பாதுகாப்புத் தரவேண்டும். இந்த இழப்புக்கு ஓரளவுக்கு நஷ்ட ஈடு தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்கள் இந்திய நாடு கடுமையான கால கட்டத்திலே இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ' very trying time due to national and international developments ' என்று சொல்லியுள்ளார். இதிலுள்ள பொருள் நன்றாக விளங்குகிறது. இன்று குஜராத்திலும் மற்ற மாநிலங்களிலும், நடைபெறுகிற அமைதியின்மை, துப்பாக்கிச் சூடுகளாலே அரசே நடத்த முடியாது ஸ்தம்பித்துப் போகிற அளவு பயங்கரமான கிளர்ச்சிகளைக் காணும்போது, தமிழ்நாட்டிலே நிலவுகிற அமைதியைக் காணும்போது உள்ளத்திலே உவகை ஏற்படுகிறது. சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கக்கூடிய மக்கள் நிம்மதியாக வாழ வழி வகுத்துள்ள அரசு தமிழ் நாடு அரசு. இந்திய நாட்டிலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவு இங்கு அமைதியான நிலைமை இருக்கிறது என்பதை குறை கூறுபவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆனால், அப்படிப்பட்ட இந்தியத் திருநாட்டில் ஒரு கட்சி ஆட்சிதான் மத்திய அரசிலே இருக்கிறது. அது நீங்கி, கோயலிஷன் கவர்ன்மென்ட் அமைக்கப்படுமானால் இந்த இந்தியத் திருநாட்டில் அமைதி ஏற்படும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, தோல் பதனிடும் தொழில் சம்பந்தமாக வேண்டுமென்றே மத்திய அரசு கொண்டுவந்த ஒரு சட்டத்தின் காரணமாக, இன்று பங்கீட்டு முறை, கோட்டா முறை அமுலாக்கப்பட்டிருக்கிறது. இதனால் சிறு சிறு தொழில்களைச் செய்தவர்கள் எல்லாம் மிகுந்த அளவு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஏற்றுமதி செய்திருந்ததில் சரி பாதி அளவு குறைகின்ற நிலைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த உத்தரவினால் சிறு அளவில் வியாபாரம் செய்பவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கோடிக் கணக்கிலே போட்டு, லட்சக்கணக்கிலே ஏற்றுமதி செய்பவர்கள் மேலும் அதிக பலன் அடைய வாய்ப்பேற்பட்டுவிட்டது. இதுதான் சமதர்மமா, சோஷலிசமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

[திரு. வா. மை. அப்துல் ஜப்பார்] [1974 சனவரி 22

களைச் சுட்டிகாட்டி இந்தச் சட்டத்தைத் திருத்தச் செய்ய வேண்டும், ஏனென்றால் நம்முடைய மாநிலத்திலேதான் சிறு சிறு தோல் உற்பத்தியாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள், நம்முடைய மாநிலத்திலிருந்துதான் அதிகமான தோல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. சற்றேறக்குறைய 140 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற இந்த எதிர்பாராத சங்கடங்களைப் போக்குவதற்கு இதைப் பற்றி நம்முடைய அரசு மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி இந்தச் சட்டத்தைத் திருத்தச் செய்யவேண்டும்.

நகரங்களிலே உள்ள வார்டுகளைப் பிரிக்கின்ற வேலை அண்மையிலே நடைபெற்றது. ஒரு ஊரிலே சில பகுதிகளில் முஸ்லீம் மக்கள் இருப்பார்கள், அந்தப் பகுதிகளிலிருந்து ஒன்றிரண்டு முஸ்லீம்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள், அவர்கள் அந்தப் பகுதிகளிலேயுள்ள முஸ்லீம் மக்களுக்குப் பாதுகாப்பாகவும், அவர்களுக்குவேண்டிய வசதிகளை எடுத்துச் சொல்லவும் வசதி இருந்தது. துரதிருஷ்டவசமாக காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலே முஸ்லீம் வாழுகின்ற பகுதிகள் சரியாகப் பிரிக்கப்படாத காரணத்தினால் அப்படி முஸ்லீம் பெருமக்கள் தேர்ந்தெடுக்கப்பட முடியாத நிலைமை ஏற்பட்டது. அதைப்போன்று இன்றைக்கு அலுவலர்களின் குறைகளினாலே முஸ்லிம் மக்கள் வாழுகின்ற பகுதிகள் சரியாகப் பிரிக்கப்படாததால் அவர்கள் தேர்தலிலே போட்டியிட்டு வெற்றி பெற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமை, வாணியம்பாடி, திருப்பூர் போன்ற பகுதிகளில் ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்றி உடனடியாக முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பகுதியை ஒன்றாக அமைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசு பெருமைக்குரிய அரசாகவும், பாராட்டுக்குரிய அரசாகவும், ஏழை மக்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்கின்ற பாராட்டுக்குரிய அரசாகவும் இருக்கிறது என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன், நன்றி.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** கிளாரிபிகேஷன் சார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்தியிலே கூட்டாட்சி வேண்டுமென்று கேட்டார்கள். அப்படியானால் தமிழகத்திலே தோழமைக் கட்சிகளுடனிணைந்து கூட்டாட்சி வேண்டுமா வேண்டாமா என்பதைப் **பற்றி** என்ன கருத்தைக்கொண்டிருக்கிறார்கள்?



1974 சனவரி 22]

(திரு. வா. மை. அப்துல் ஜப்பார் எழுந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிளாரிபிகேஷன் எல்லாம் வேண்டாம். உட்காருங்கள். அடுத்து திரு. ரா. ரா. முனுசாமி பேசட்டும்.

**திரு. ரா. ரா. முனுசாமி:** பெருமதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நம்முடைய மதிப்பிற்குரிய ஆற்காடு வீராசாமி அவர்கள் கொண்டுவந்துள்ள அந்த தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் நம்முடைய சட்ட மன்றத்திலே கடந்த இரண்டு மூன்று நாட்களாக நடைபெறுகின்ற கூட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்படி ஏற்படுத்தப்பட்ட அரசு என்றும், எப்படி இந்த அரசு யாரால் கட்டிக் காக்கப்பட்ட அரசு என்றும், நம்மையெல்லாம் ஆளாக்கி இந்த நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் நல்ல பல கருத்துக்களை வழங்கி தமிழன் எப்படி வாழவேண்டும் என்று சொல்லி பல சீர்திருத்தக் கருத்துக்களை யெல்லாம் எடுத்துரைத்து நாட்டு மக்களுடைய பிரச்சினைகளில் அன்றாடம் கவனம் செலுத்தி நாட்டினுடைய அறிவு வளர்ச்சிக் கண்ணைத் திறந்து வைத்த பெரியார் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்கள் என்ற காரணத்தால் அவரைப் பிரிந்தது இந்த நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே ஒரு பேரிழப்பு என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு தினங்களுக்கு முன்பு இங்கே பேசிய காங்கிரஸ் உறுப்பினர் ஆட்டுக்கு தாடி, இந்த நாட்டிற்கு ஒரு கவர்னர், தேவையா என்ற திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையை விட்டு விட்டார்கள் என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை ஒரு கவர்னர் தேவையில்லை என்றும், கவர்னருக்காக எவ்வளவு செலவு செய்யப்படுகிறது என்றும் சொல்லி 1957 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 15 பேர்கள் இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரத்திலே, என்று கூறிய நேரத்திலே அப்பொழுதெல்லாம் இங்கே ஆண்டுகொண்டி

ருந்த காங்கிரஸ் சர்க்கார் மத்திய சர்க்காரிடம் தி.மு.க. பிரிவினைக் கட்சி என்றும், கவர்னர் தேவையில்லையென்று சொல்கிறார்கள் என்றும்தான் காட்டிக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள். 1962-ஆம் ஆண்டிலே, 15 பேர்களாக இருந்தவர்கள் 50 பேர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பிறகு 1967-ஆம் ஆண்டிலே 138 பேர்களைக் கொண்ட கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே பெரும்பான்மை பெற்று ஆட்சியை அமைத்த நேரத்திலே பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். அவர்கள் பொறுப்பையேற்றுக்கொண்ட நேரத்திலே பல கொள்கைகளை எடுத்து வைத்து விளக்கியபிறகுதான் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். இரண்டு தினங்களுக்கு முன்பாகப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் ஆட்டுக்கு தாடி, இந்த நாட்டுக்கு கவர்னர் தேவையா என்று சொன்னோம் என்று சொன்னாரே அவர், இதே நிலைமையிலே திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு தீர்மானம் கொண்டுவருமானால் அந்தத் தீர்மானத்திற்கு காங்கிரஸ் நண்பர்கள் ஆதரவு அளிப்பார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் . . .

**திரு. ஓ. என். சுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபொழுது சொன்ன கருத்தைத்தான் நான் சொன்னேன். இன்றைக்கு ஆட்சிக்கு வந்தபிறகு அந்தக் கொள்கைகளை அவர்கள் விட்டுவிட்டார்களா அல்லது வைத்திருக்கிறார்களா என்றுதான் கேட்டேன்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கொள்கையை எடுத்து வைக்கிறபோது திராவிட முன்னேற்றக் கழக அரசு பிரிவினை கேட்கிற அரசு என்று இந்த அரசின்மீது குற்றம் சாட்டிக்கொண்டிருக்கிறார்கள் என்று கருதித்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒத்திவைத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையாக இருந்தாலும் அதை ஒத்திவைத்தார்கள்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** ஒத்திவைத்திருக்கிறார்களா அல்லது விட்டுவிட்டார்களா? அவர்கள் மீண்டும் எதிர்க் கட்சியாக வந்தால் மீண்டும் அதைக் கொண்டு வருவார்களா அல்லது அந்தக் கொள்கையை விட்டுவிட்டார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.





**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவர் அவர்களே, கவர்னர் பதவி தேவையில்லை என்பது இன்னும் விட்டுவிடப்படவில்லை, ஒத்திவைக்கப்பட்டதாகச் சொன்னார்கள், அதுவும் இல்லை. இருக்கின்ற கவர்னருக்கு அவமானம் ஏற்படுத்தவேண்டுமென்று எங்களுடைய கட்சி எண்ணவில்லை. திரு. ஓ. என். சுந்தரம் அவர்கள் இருக்கின்ற கவர்னருக்கு அவமரியாதையை ஏற்படுத்த என்னவேண்டுமானாலும் செய்யலாம். கவர்னர் தேவையில்லை என்ற கொள்கையை விட்டுவிடவில்லை, மாநில சுயாட்சி கோரிக்கையிலேகூட அதை வலியுறுத்தியிருக்கிறோம்.

**திரு. ஓ. என். சுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, என்றைக்குமே ஆளுநர் அவர்களை மரியாதைக் குறைவாகவோ அல்லது கௌரவத்தைக் குறைத்தோ நான் பேசியதாக அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆளுநர் தேவையில்லை என்று அவர்கள் சொன்ன கொள்கையை ஒத்திவைத்திருக்கிறார்களா அல்லது விட்டுவிட்டார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி. அமைச்சர் அவர்கள் ஓ. என். சுந்தரம் கவர்னருக்கு அவமரியாதை செய்துவிட்டார் என்று சொல்கிற இந்த சந்தர்ப்பத்திலே நான் என்னுடைய நிலைமையை விளக்கிவிட விரும்புகிறேன். எப்பொழுதும் காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயும் சரி, உங்களுடைய ஆட்சிக் காலத்திலும் சரி கவர்னருக்கு உள்ள மரியாதையைக் கொடுப்பதற்கு ஒரு இஞ்ச் கூட நான் குறைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் தேவையில்லை என்று அவர்கள் சொல்லி வந்தார்களே, அந்தக் கொள்கையை விட்டு விட்டார்களா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, கவர்னர் இருக்க வேண்டுமா வேண்டாமா என்பது ஒரு அரசியல் பிரச்னை. அது அரசியல் மேடைகளிலே விவாதிக்கப்பட வேண்டிய பிரச்னை, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஒரு கொள்கை இருக்கலாம், மற்ற கட்சிகளுக்கு கொள்கை வேறு விதமாக இருக்கலாம். சாதாரணமாக கவர்னரைப்பற்றி சட்டமன்றத்திலே சர்ச்சைக்கு இடமான பேச்சுகளைப் பேசக்கூடாது என்பதை நாம் ஒரு மரபாகக் கடைப்பிடித்துவருகிறோம், ஆகவே இங்கே அதைப் பற்றிப் பேசுவது சரியல்ல, திரு. ஓ. என். சுந்தரம் அவர்கள்

வேண்டுமானால் மேடைகளிலே அதைப்பற்றி வைத்துக்கொள்ளலாம், இங்கே தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** சபாநாயகர் அவர்களே, சபையிலே சொல்லக்கூடாது என்று சொன்னார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள் . . .

**திரு. எம். சுரேந்திரன் :** அங்கத்தினர் அவர்கள் ஆளுங்கட்சியின் கொள்கை என்ன என்று கேட்டார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்குத்தான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்களே.

**திரு. எம். சுரேந்திரன் :** சபையிலே அதைப்பற்றிப் பேசக்கூடாது என்று லத்தீப் அவர்கள் சொன்னார்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள், அமைச்சர் பதில் சொல்லிவிட்டார்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு, 1971-72-ஆம் ஆண்டில் உணவுப் பிரச்னையிலே கவனம் செலுத்தி உற்பத்தியைப் பெருக்கி அண்டை மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம், கேரளம் போன்ற மாநிலங்களுக்கு உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டபொழுது நம்முடைய மாநிலம் தமிழக அரசு எந்தவிதமான தங்குதடையுமின்றி உணவு வழங்கியிருக்கிறது. ஆனால் மத்திய அரசுதான் என்னைக் கேட்காமல் ஏன் கொடுத்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டு தடை விதித்து இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் இன்றையதினம் எந்த அளவிற்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று பார்க்கும் பொழுது அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு, இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலும் இந்திரா சர்க்கார் மாநிலங்களை ஆண்டு கொண்டிருக்கும்பொழுது தமிழகத்தில் மட்டும் முன்னேற்றக் கழகம் ஆள்வதா என்று நினைக்கிறார்கள். தமிழகம் மட்டும் உணவு



உற்பத்தியிலே முன்னேற்றமாக இருப்பதா, அப்படியிருப்பதால் மற்ற மாநிலங்களுக்கு நம்மைக் கேட்காமல் கொடுத்தால் அவர்கள் கேட்கும் மாநில சுயாட்சிக்கு பக்கத்து மாநிலங்களிலிருப்பவர்கள் உதவி புரிவார்களே என்ற அச்சம் ஏற்படும் அளவிற்கு மாநிலங்களுக்கு உணவு கொடுக்கும்பொழுது மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு தர வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்து இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகளெல்லாம் வளர்ந்தால் ஏன் மாநில சுயாட்சி நாம் கேட்கக்கூடாது? மாநில சுயாட்சி கேட்கும் பொழுது மதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் இங்கே பேசினார்கள், மாநில சுயாட்சி கேட்பதற்கு இவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று. ஹாண்டே அவர்களுக்கு மட்டும் யோக்கியதை இருப்பதைப்போலவும், நமக்கெல்லாம் யோக்கியதை இல்லாததைப் போலவும் ஹாண்டே அவர்கள் பேசுகிறார்கள்.

ஆனால் ஹாண்டே அவர்கள் இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். மாநில சுயாட்சி என்பது ஹாண்டே அவர்களின் பாக்கெட்டில் இருப்பதைப் போலவும், அதை முன்னேற்றக் கழகத்திற்குத் தருவேனா, தர முடியாது என்று சொல்கிறார். மாநில சுயாட்சி கேட்டது இந்திய அடிப்படையிலே இந்த அரசுதான் என்பது ஹாண்டே அவர்களுக்குத் தெரியவில்லை என்பதை இப்பொழுது சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா அவர்கள் இந்தப் பிரச்னையை, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றபிறகு மட்டுமல்ல, எதிர்க்கட்சியாக இருந்தபோதும், திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முன்னால் வெளியிலேயிருந்து சமுதாயப் பிரச்னைகளைச் சொல்லியபோதும் இந்த நாட்டிற்கு மாநில சுயாட்சி தேவை என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லியிருக்கும்பொழுது மாநில சுயாட்சி கேட்பதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு யோக்கியதை இல்லை என்றும் சொல்லும் ஹாண்டே அவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது என்று தெரியவில்லை. இன்னொன்றும் சொன்னார்கள். (மணியடிக்கப்பட்டது)

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவரவர்களே, இன்றைய விவாதத்தில் கவர்னர் பெருமானின் உரையின்மீது பார்வர்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக உரையாற்ற முயலும்பொழுது என்னுடைய கட்சியின் சார்பாக, கவர்னர் அளித்துள்ள உரையை நான் மனமார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அப்படி வரவேற்கும்பொழுது இதிலே அளிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் அத்தனையும் மன நிறைவுடையதாக இருக்கிறதா என்ற கேள்வியை எழுப்பும்பொழுது வேண்டிய அளவிற்கு இல்லை என்பதுதான் பதிலாக அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழக அரசைப் பொறுத்தவரையில் இந்தியாவில் எந்த அரசும் சாதித்திராத அளவிற்குப் பல சாதனைகளைச் சாதித்திருப்பதும், பலவிதமான பிரச்னைகள் இந்த மாநிலத்திலே எழுந்தபோதும், பலவிதமான பிரச்னைகள் இங்கே தானாகவே எழுந்ததும் உண்டு, பலரால் அரசியல் காரணங்களுக்காக எழுப்பப்பட்டதும் உண்டு என்றாலும் அத்தனையையும் பல கோணங்களிலேயிருந்து தன்னுடைய அரசின் அதிகாரத்தைப் பயன் படுத்தியது மட்டுமல்லாமல், தான் ஒரு மனிதன் என்ற நிலையிலேயிருந்து மாறுபடாமல் மனிதாபிமானத்தோடு கலைஞர் அவர்களும், ஏனைய அமைச்சர் பெருமக்களும் கடமையாற்றியிருக்கிறார்கள் என்பதற்காக அவர்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சிகள் ஜனநாயகத்திலே இயங்க வேண்டியது கடமை, மரபு என்று இருந்தாலுங்கூட, ஏதோ எதிர்க்கட்சிகளாக இருப்பதாலேயே செய்கின்ற நன்மைகளையெல்லாம் எதிர்த்துப் பேசுவதும், ஆதரிக்கிறோம் என்ற நிலையில் எங்களைப் போன்ற தோழமைக் கட்சிகளெல்லாம் எதற்கெடுத்தாலும் ஆதரிக்கிறோம் என்பதும் வேண்டாத ஒன்று என்பதை நடைமுறையில் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகின்றவர்களில் நானும் ஒருவன். ஆகவே, குறுகிய காலத்தில் சாதித்துள்ள கலைஞர் அரசின் சாதனைகள் பொன்னெழுத்துக்களால் எழுதக்கூடியவை என்று சொன்னால் அது உண்மையிலேயே மிகையாகாது. அதே நிலையில் இன்றைக்கு உதாரணமாக ஒன்றைச் சொல்வேன்.

உணவுப் பிரச்னை இந்தியா முழுவதும் முக்கியமான பிரச்னையாக, மனிதாபிமானப் பிரச்னையாக இருக்கிறது. பல குறிப்புகளை ஆரம்ப உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். vagaries of



monsoon; இயற்கையாக வழக்கம்போல் பெயய வேண்டிய மழை தவறியதாலும், அதாவது மிகவும மழை குறைவாக இருந்ததாலும் கஷ்டமாக இருநதது.

உரப்பிரச்னை குறித்து நான் உள்பட பலரும் அமைச்சரவர்களைச் சந்தித்துக் கேட்டோம். விவசாயத்தில் 'ஷார்ட் டேர்ம் கிராப்ஸ்', ஹை யீல்டிங் வெரைட்டீஸ் பரப்புகிறார்கள். ஆனால், முன்பெல்லாம் இயற்கை உரங்களான இலைகளையும், தழைகளையும், மாட்டு சாணங்களையும் போடுவதுபோல் வாய்ப்புகள், சூழ்நிலைகள் இல்லாமலிருப்பதால், குறைந்த இயற்கை உரங்களைப் பயன் படுத்துவது 'ஷார்ட் டேர்ம் கிராப்ஸ்', ஹை யீல்டிங் வெரைட்டீஸ்களுக்குப் போதாத காரணத்தால் செயற்கையாக இட வேண்டிய 'ஃபெர்டிலைசர்ஸ்' 'மென்யூர்ஸ்' தேவைப்படும் எங்களுக்கு வேண்டிய அளவிற்கு இல்லையே என்று கேட்டபொழுது, அகில இந்திய அளவில் எவ்வளவு பற்றாக்குறை இருக்கிறது, எந்தெந்த முறைகளில் எந்தெந்த நேரத்தில் நாங்கள் முயற்சிகளை எடுத்துள்ளோம் என்ற விவரங்களை மாண்புமிகு விவசாய அமைச்சரவர்களும், உணவு அமைச்சரவர்களும் எங்களுக்குத் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறினார்கள். அவ்வளவு கொடுத்தும்கூட காணாத நிலையில் விவசாயப் பெருமக்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அத்தனைபேரும் அறிவோம்.

இருந்தாலும், வேண்டிய அளவிற்குக் கொடுக்க முடியவில்லை என்ற நிலை நடைமுறையில் இருந்தாலும், பருவ மழை தவறியதால் வேண்டிய அளவிற்குத் தண்ணீர் வசதி கிடைக்காதிருந்தாலும் அரசின் நல்ல பல முயற்சிகளால், அதிகாரிகளின் ஒத்துழைப்பினால், விவசாயிகளின் உழைப்பால் 'சர்ப்ளஸ் ஸ்டேட்' என்ற வகையில், தன்னிறைவு பெற்றது மட்டுமல்லாமல் பிறருக்கும், கேரளா போன்ற பஞ்சத்தால், பட்டினியால் வாடும் மக்களுக்கும் உதவுகிறோம் என்ற பெருமிதத்தோடு இந்த ஆட்சி நடைபெறுகிறது. தமிழகம் இன்றையதினம் தலைநிமிர்ந்து நிற்கிறது. அரசின் சாதனைகளை எந்த எதிர்க் கட்சியாக இருந்தாலும் எடுத்துச் சொல்வதில் என்ன தவறு இருக்கிறது ?

இன்னும் பிரச்னைகள் வருகின்றன. மாணவர்கள் பிரச்னை, தொழிலாளர்கள் பிரச்னை, ஆசிரியர்கள் பிரச்னை என்று வருகின்றன. இன்னும் எத்தனையோ பிரச்னைகள், எத்தனையோ

கோணங்களிலிருந்து மனிதாபிமானத்தோடு நாம் அணுக வேண்டிய பிரச்னைகள் பல வருகின்றன. கடந்த வாரம் கரும்பு விவசாயிகளின் சார்பில் மாநிலம் முழுவதுமிருந்து பல தலைவர்கள், விவசாயப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டார்கள். நானும் சென்றிருந்தேன். மாநில தொழில் அமைச்சரவர்களிடம், கரும்பு விவசாயிகளுக்கு 100 ரூபாய் கொடுப்பது போதாது, 120 ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை விடுத்தவர்களில் நானும் ஒருவன். இன்னும் பல சட்ட மன்ற உறுப்பினர்களும் வந்திருந்தார்கள். அந்தப் பிரச்னையில் அவர்கள் எந்த அளவிற்கு மனிதாபிமானத்தோடு அணுக வேண்டுமோ அந்த அளவிற்கு அணுகி, இந்த நிலை போதாது, நானும் உங்களில் ஒருவனாக இதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நாங்கள் எப்படிப் பகிர்ந்து கொடுக்க முடியும் என்று கேட்டார்கள். அப்பொழுது வந்திருந்த அத்தனை உறுப்பினர்களும் கட்சி வேறுபாடற்ற முறையில் அவர்களது கருத்தைப் பாராட்டினோம். எந்த அளவிற்கு நிவாரணம் கொடுக்க முடியுமென்று விளக்கமாகச் சொன்னார்கள். அதிகாரிகளும் சொன்னார்கள். கூட்டுறவு ஆலைகளில், பிரைவேட் ஆலைகளில் உற்பத்தியாவதில் 100-க்கு 70 சதவிகிதம் மத்திய அரசு எடுத்துக் கொள்கிறது. மீதியுள்ள 30 சதவிகிதம்தான் மாநில அரசுக்கு ஃப்ரீ டிஸ்ட்ரிப்யூஷனுக்கு அனுமதிக்கிறது. இந்த நிலையில் வெளி மார்க்கெட்டில் 365 ரூபாய்க்கு ஒரு மூட்டை விற்கிறது. ஆனால், மத்திய சர்க்கார் நமக்குக் கொடுப்பது 150 ரூபாய் அல்லது 160 ரூபாய்தான். அந்த அளவிற்குக் குறைந்த விலையைக் கொடுக்கிறது. நமக்கு பர்செண்டேஜ் 100-க்கு 30 தான் கொடுக்கிறது என்றால் எந்த அளவிற்கு நமக்கு நஷ்டம் ஏற்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த 30 சதவிகிதம் என்பதை எங்களுக்கு 50 சதவிகிதமாவது ஒதுக்கித் தரவேண்டுமென்ற தீர்மானத்தை அத்தனை விவசாயிகளின் சார்பாக அமைச்சரவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டபொழுது இதை அரசியல் பிரச்னையாகக் கொண்டுவர விரும்பவில்லை என்று சொன்னார்கள்.

அரசியல் பிரச்னையாக நான் இதைச் சொல்லவில்லை. இது விவசாயிகளின் பிரச்னை. மிக மிக முக்கியமான சமுதாயப் பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, இங்கு அரசியல் தேவையில்லை. மத்திய மாநில உறவு என்பது தேவையில்லை. நமக்குக் கிடைக்க வேண்டிய





நியாயமான பங்கு கிடைத்தால் விவசாயிகள், அவர்கள் கன்சம்ஷன் செய்யும், உபயோகிக்கக்கூடிய பொருள்களை அவர்களுக்கு நியாயமான விலையில் வாங்கிக் கொடுக்க முடியும். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு விவசாயிகள் உபயோகிக்கும் பொருள்களின் விலைகள் உயர்ந்துவிட்டன. விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் விலையை உயர்த்தினால்தான் அவர்கள் நியாயமான விலைகளைப் பெற்று தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொள்ள முடியும். எனவே, இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு மத்திய அரசினுடைய சட்டங்கள், மத்திய அரசினுடைய நடைமுறைகள், கோட்பாடுகளில் குறுக்கீடு இருக்குமானால் அவற்றை மாற்றி அமைக்க வேண்டும். இது ஒரு சமுதாயப் பிரச்னை. அந்த முறையிலே இதை அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே! ஒரு விளக்கத்தைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். கரும்பு விவசாயிகளுக்கு இப்போது கொடுப்பதை விட அதிக விலை கொடுக்கப்பட வேண்டும் என்பதை எல்லோரும் ஆதரிக்கிறோம். ஆனால், எங்கே இந்தச் சங்கடம் வருகிறது என்று கேட்டால், இங்கு உற்பத்தியாகிற சர்க்கரையில் 70 சதவிகிதம் மத்திய அரசு எடுத்துக்கொள்கிறது. இப்படி எடுத்துச் சென்று மத்தியப் பிரதேசத்தில், ராஜஸ்தானில் கரும்பு உற்பத்தி ஆகாத மாநிலங்களில் கொடுக்கிறார்கள். தமிழகத்தில் ஏறத்தாழ 3, 4 லட்சம் டன் சர்க்கரை உற்பத்தியாகிறது. இந்தச் சர்க்கரையில் மத்திய அரசு 3 லட்சம் டன் எடுத்துக் கொள்கிறார்கள். அதற்கு அவர்கள் கொடுக்கிற விலை "லெவி பிரைஸ்" ஒரு குவிண்டாலுக்கு 155 ரூபாய். ஆனால், அதே சமயத்தில் ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் வாங்குகிற சர்க்கரைக்கு 195 ரூபாய் கொடுக்கிறார்கள். பஞ்சாபில் தயாராகும் சர்க்கரையைப் பார்த்தால், நம்முடைய சர்க்கரையைவிட உயர்வாகத் தெரியவில்லை. நம்முடைய சர்க்கரையே உயர்ந்ததாகத் தெரிகிறது. ஆனால், நம்முடைய சர்க்கரைக்கு ரூ. 155 தான் கொடுக்கிறார்கள். ஏறத்தாழ 40 ரூபாய் குவிண்டால் ஒன்றுக்குக் கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவேதான் நாம் கரும்புக்கு அதிக விலை கொடுக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டு இருக்கின்றன. நாம் இந்தப்

[திரு. சி. பா. ஆதித்தனார்] [1974 சனவரி 22

பாகுபாட்டைச் சுட்டிக் காட்டுவதற்குத் தூதுக்குழு ஒன்றை, அரசாங்கச் செயலாளர் ஒருவரும், ஆலைப் பிரதிநிதி ஒருவரும், விவசாயப் பிரதிநிதி ஒருவரும் கொண்டு, அடுத்த வாரம் டில்லிக்குப் போய் இதைத் தெளிவுபடுத்த இருக்கிறோம். அங்கே வாங்குகிற அளவுக்கு இங்கேயும் வாங்க வேண்டும் என்று கேட்க இருக்கிறோம். அங்கே கொடுக்கிற விலை இங்கேயும் கொடுக்கப் பட்டால் நாம் கரும்பு விவசாயிகளுக்கு இப்போது கொடுப்பதை விட அதிகமான, நியாயமான விலையைக் கொடுக்க முடியுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே! அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இங்கே டன்னுக்கு 85 ரூபாய் கொடுக்கிறோம், அங்கே டன்னுக்கு 110 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால், அங்கே டன்னுக்கு 195 ரூபாய் கொடுக்கிறார்கள், இங்கே மத்திய சர்க்கார் 155 ரூபாய் கொடுக்கிறார்கள் என்றார்கள். அங்கே 110 ரூபாய் கொடுப்பதால் 195 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "இன்வர்ஸ் ஆர்டரில்" சொல்கிறார்கள். இங்கே விலை குறைவாகக் கொடுப்பதனால் தான் நாம் குறைந்த விலை கொடுத்து வாங்குகிறோம். அங்கே அதிக விலை கொடுப்பதால் அவர்கள் அதிக விலை கொடுக்கிறார்கள். 70 சதவிகிதம் சர்க்கரையை, 3 லட்சம் டன் சர்க்கரையை, இங்கிருந்து வெளி மாநிலங்களுக்கு மத்திய அரசு கொண்டு செல்கிறது. 155 ரூபாய் நமக்குக் கொடுக்கப்படுவதனால் தான் நாம் கரும்புக்கு அதிக விலையைக் கொடுக்க முடியவில்லை. கரும்பு விவசாயிகளுக்கு இன்னும் அதிக விலை கொடுக்கப்பட வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் ஒப்புக் கொள்கிறோம். ஆனால், எங்கே சங்கடம் வருகிறது என்றால் பஞ்சாபிலே 195 ரூபாய்க்கு சர்க்கரை வாங்குகிற மத்திய அரசு ஏன் இங்கே 155 ரூபாய்க்கு வாங்குகிறது? அங்கே கிடைக்கிற ரெகவரிதான் இங்கேயும் கிடைக்கிறது. இரண்டும் ஒன்றுதான். அங்கே கொடுக்கிற அளவிற்குக் கொடுத்தால் இங்கேயும் கரும்பு விவசாயிகளுக்கு இன்னும் அதிக விலை கொடுக்க முடியும்.



1974 சனவரி 22]

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். அதைப் பற்றி நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். பஞ்சாபிலே 195 ரூபாய் கொடுக்கப் பட்டு வருகிறது என்று சொன்னார்கள். எத்தனை நாட்களாகக் கொடுக்கப்பட்டு வருகிறது? இதற்காக நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? இப்போது தூதுக்குழுவை அனுப்புவதாகச் சொல்கிறீர்கள். இதற்கு முன்னாலே என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? அங்கே 195 ரூபாய் கொடுக்கிறார்கள் என்றால் அங்கே கொண்டு போகிற செலவு, டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாக இருக்கலாம். இங்கே டிரான்ஸ்போர்ட் சார்ஜ் குறைவாக இருக்கலாம். அதனால் இந்த வித்தியாசம் இருக்குமென்று கருது கிறேன். இந்த வித்தியாசம் எத்தனை நாட்களாக இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, கரும்பு சீசன் அக்டோபர் முதல் தேதியிலிருந்து தொடங்குகிறது. அப் போதிலிருந்து இந்தப் பாகுபாடு நடந்து கொண்டிருக்கிறது. அங்கே 195 ரூபாய்க்கு வாங்குகிறது என்றால் அங்கே டிரான்ஸ் போர்ட் சார்ஜ் மிகவும் குறைவு. இந்த 195 ரூபாயும் டன்னுக்கு அல்ல குவிண்டாலுக்கு. இங்கே 155 ரூபாய் கொடுக்கப்படுகிற காரணத்தினால் தான் நாம் அதிக விலை கொடுக்க முடியாமல் இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதைப் பற்றித் தனியாக விவாதம் வரும்பொழுது பேசிக் கொள்ளலாம்.

**திரு. எம். சுரேந்திரன் :** அமைச்சர் என்ன நினைக்கிறார் என்று நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? ஒரு சந்தேகம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் பேசப் போகிறீர்கள். அப்போது பேசிக்கொள்ளலாம்.

**திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்திற்கு நான். . .

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்கிறபோது மத்திய அரசு இன்னும் அதிக விலையைக் கொடுத்தால் கரும்பு விவசாயிகளுக்கு அதிக விலையைக் கொடுக்க முடியுமென்றார்கள். ஆனால் சர்க்கரை ஆலைகள் நியாயமான விலையை கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கவில்லை என்று உணர்கிறேன். 350 ரூபாய் "ப்ரி மார்க்கெட்" விலை இருக்கும்போது சக்தி சுகர்ஸ் 125 கொடுத்திருக்கிறார்கள். 382 ரூபாய் இருக்கும் போது இன்னும் அதிகவிலையை கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கந்தசாமி அவர்கள், தம்முடைய பேச்சைத் தொடரலாம்.

**திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு அமைச்சரவர்கள் பேச்சிலிருந்தும், உறுப்பினர்களின் குறுக்கீடுகளிலிருந்தும் எனக்குக் கிடைத்த விளக்கத்திற்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கரும்பு விவசாயிகளுக்கு இன்னும் அதிக விலை கிடைக்க வேண்டும் என்பதை நாம் உணர்கிறோம். மத்திய அரசின் கொள்கையினால் விவசாயிகளுக்கு பாதகம் விளைகிறது என்பதை நாம் மனப்பூர்வமாக உணர்கிறோம். இதை நேரிடையாக உட்கார்ந்து பேசுவதற்கு விவசாயிகள் பிரதிநிதிகளாக இருந்தாலும், கட்சித் தலைவர்களாக இருந்தாலும் நான் தயாராக இருக்கிறேன். அவர்களுக்கு மனச்சாட்சி ஏதாவது இருக்குமானால் இதற்கு விளக்கம் கூறுவதற்குத் தூதுக்குழு அல்லது தனிக் குழுவோடு சென்று மத்திய அரசோடு வாதிடுவதற்குத் தயாராக இருக்கிறேன். கொள்கை அளவில் போராடத் தயாராக இருக்கிறேன். இன்றைக்குப் பிரச்னையை அணுகுவதற்குத் தயாராக இருக்கிறேன்.

அடுத்தபடியாக, உள்ளபடியே பல கோணங்களில் பார்த்தால் நாட்டின் பிரச்னை மாநில அரசால் மட்டும் தீர்க்கப்பட முடியாது. நேற்று மேலவையில் பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தெள்ளத் தெளிவாக ஒன்றைச் சொன்னார்கள். ஆறு, ஏழு ஆண்டுகளாகியும் கல்பாக்கம் அனல் மின் நிலையம் காகிதத்திலேயே இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் எத்தனை ஆண்டுகளாகுமோ அது நிறைவேற என்றார்கள். மத்திய



அரசு மாநிலப் பிரச்னைகளை, அது தமிழகமானாலும், குஜராத்தானாலும், வங்காளமானாலும், எந்த மாநிலமாக இருந்தாலும், "மதர்லி டெண்டன்சி" யோடு அணுக வேண்டும். அந்த மனப்பான்மையோடு மத்திய அரசு மாநிலங்களுக்கு உதவிகளைப் பகிர்ந்து அளிக்க வேண்டும். நிதி ஒதுக்குகிறபோது தேசப் பிரச்னை, இந்தியப் பிரச்னை என்ற நிலையில் அவர்கள் பார்க்க வேண்டுமேயொழிய அதிலே "பார்ஷியாலிடி" காட்டுவது இருக்கக் கூடாது. நிதி ஒதுக்கீட்டைப் பார்த்தால் இருக்கும்படியான புள்ளி விவரங்களைப் பார்த்தால் எந்த அளவிற்கு நமக்குச் சாதகமில்லாத நிலை இருக்கிறது என்ற விவரத்தையெல்லாம் நான் இங்கே சொல்ல முடியும். நேரமில்லாத காரணத்தினால் அவற்றையெல்லாம் தொடாமல் குறிப்பாக ஒன்றிரண்டை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11.30)

பழனித் தொகுதியில் வெற்றிலைக் கொடிக்கால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இரண்டாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. ஆகவே, இன்றைக்கு உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை அமைச்சர் அவர்களுக்கு விடுக்கிறேன்.

உசிலம்பட்டி தொகுதியைப் பற்றி ஏற்கனவே ஃப்ளோர் ஆப் தி ஹவுசில் இண்டஸ்ட்ரிஸ் மினிஸ்டர் அறிவித்தார்கள். இரண்டு கோடி ரூபாய்க்கு டெக்ஸ்டைல் மில் ஒன்று கட்டதேவன்பட்டி என்ற கிராமத்தின் அருகே ஆரம்பிக்கப் போவதாக அறிவித்தார்கள். அதற்காக நன்றி தெரிவித்து அந்த மில்லை உடனடியாக கொண்டு வருவதற்கு அதிகாரிகள் மூலமாக முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரூரல் ரோட்ஸ் டெவலப்மென்ட் ஸ்கீமின்படி உசிலம்பட்டியில் பல ரோடுகள் போடப்படுவதாகச் சொன்னார்கள். ஆனால் ஏ.இ. டி.இ. ஆகியவர்கள் ஃபண்ட் இல்லை என்று தட்டிக் கழிக்கும் பதிலைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உறுதி கொடுத்தபடி உடனடியாக வேலைகள் செயல்பட ஆவன செய்யவேண்டும்.

இந்த அரசைப் பாராட்டுவதற்கு இன்னொரு காரணத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சர்வதேசக் கண்ணோட்டத்தோடு, தேசியக் கண்ணோட்டத்தோடு பார்க்கும்போது 1970-ம் ஆண்டு

[திரு. கே. கந்தசாமி] [1974 சனவரி 22

இன்டிவிஜுவல் பர்காபிடா இன்கம் ரூ. 345.6 ஆக இருந்தது. 1971-72-ல் ரூ. 343.6 ஆகக் குறைந்திருக்கிறது. 1972-73-ல் ரூ. 337.52 ஆகக் குறைந்திருக்கிறது. வருஷா வருஷம் பார்க்கும்போது இது குறைந்துகொண்டே வருவதைப் பார்க்கிறோம். முந்தா நாள் "மெயில்" பத்திரிகையில் ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள்.

'Agricultural produce total income is not in proportion to the population.'

ஜனத்தொகை கூடி வருகிறது. அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள் உற்பத்தி கூடவில்லை, குறைந்து வருகிறது என்ற நிலையைச் சொல்லி இருக்கிறார்கள். நாட்டில் விவசாயத்தின் நிலை அது. தொழிலை எடுத்துக் கொண்டாலும் எங்கு பார்த்தாலும் ஓய்வின்மை, உற்சாகம் இல்லாத தன்மை, ஒத்துழைப்பு இல்லாத தனமை நிலவுகிறது. ஆசிரியர் மாணவர் உறவு சரியில்லாத நிலை இருக்கிறது, டெஸ்ட்லஸ்னஸ் இருக்கிறது.

'National production has been affected adversely, as a result of which the entire economy of the Nation is affected.'

என்ற நிலையில் இந்தியப் பொருளாதாரத்தின் நிலையை அறிய முடியும். இதற்கெல்லாம் காரணம் என்ன? சுதந்திரம் வாங்கினோமே தவிர அதை வகிக்கும் தகுதி இல்லையா? அதை இழந்து விட்டோமா? இதைத்தான் தேவர் திருமகன்—"பெரியோர் வாய்ச் சொல்லும், பெருநெல்லிக் கனியும் முன்னால் கசக்கும், பின்னால் இனிக்கும்" என்று சொன்னார்கள்.

'Political independence without economic independence is worse than slavery'

என்று நேத்தாஜி அவர்கள் சொன்னார்கள். அரசியல் சுதந்திரம் கிடைத்தும் பொருளாதார சுதந்திரம் கிடைக்காத காரணத்தால் நாம் அடைய வேண்டிய இலக்கை அடைய முடியவில்லை. காரணம் கையாள்கிற மார்க்கமாக இருக்கலாம். ஜனநாயகத்தில் குறிப்பிட்ட அரசியல் கட்சிகள் வருகிற காரணத்தால் திறமைசாலிகளுக்கு, நியாயவான்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அவர்களுக்குப் பங்கு அநேகமாகக் கொடுக்கப்படுவதில்லை. இந்த மார்க்கத்தின் மூலமாக நம்முடைய சந்ததிகளுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைகள் கிடைக்கவில்லை என்ற நிலையில் வேறு மார்க்கத்தை



1974 சனவரி 22] [திரு. கே. கந்தசாமி]

அரசியல் நிபுணர்கள், தேசியவாதிகள் ஆராய்ச்சி செய்து ரெமடி கண்டுபிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மு. சத்தியமூர்த்தி:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் அறிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பாகக் கொடுத்திருக்கும் திருத்தத்தை வற்புறுத்தி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

(திரு. கு. காமாட்சி—தலைமை)

கவர்னர் உரையிலே வேலையின்மை, விலைவாசி ஏற்றம், தாழ்த்தப்பட்ட மக்களுடைய நல்வாழ்வு இவற்றுக்கான வழிமுறைகள் எதுவும் அந்த அறிக்கையிலே திட்டவட்டமாகச் சொல்லப்படவில்லை. அண்ணல் காந்தியடிகளுடைய திட்டம், கிராம மட்டத்திலே திட்டங்கள் நல்ல முறையில் அமைந்தால்தான் இந்த நாடு சுதந்திரம் அடைய முடியும், நாட்டு மக்கள் சுதந்திரமாக வாழ முடியும் என்று கூறினார்கள், அன்று கனவு கண்டார்கள் அந்தக் கனவுக்கு ஏறுக்கு மாறாக இன்று திட்டங்களைப் பார்க்கும்போது இந்த நாட்டுக்கு அடிப்படையாக அமைந்திருக்கும் கிராமங்களிலே அடிப்படைத் திட்டம் நல்ல முறையில் செயல்படவில்லை என்றுதான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். குடிசைமாற்று வாரியம், மற்றும் முன்னேற்றங்கள் எல்லாம் நகரத்திலேதான் அமைந்திருக்கின்றன. அடிப்படையாக இருக்கக்கூடிய கிராமங்களிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு இதுமாதிரித் திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் அமைந்தால்தான் இந்த நாடும் இந்த நாட்டு மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் நல்ல முறையில் வாழ்வதற்கு வழிவகைகள் ஏற்பட முடியும் என்பதைக் கூறிவிட்டு என்னுடைய தொகுதிப் பிரச்சினையைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அண்மையில் எங்களது புதுக்கோட்டையானது தனி மாவட்டமாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நான் இந்த அரசுக்குச் சட்டசபை மூலமாக நன்றியினைச் சொல்ல ஆசைப்படுகிறேன். ஏனென்றால் என்னைப் போன்றவர்கள் எதிர்க் கட்சியில் இருக்கும் காரணத்தாலோ என்னவோ அந்த மாவட்ட அமைப்பு விழாவிலே வாய்ப்பு, சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்ற காரணத்தால்தான்

நன்றியை இந்தச் சட்ட மன்றத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதனைத் தனி மாவட்டமாக ஆக்கிவிட்டால் மட்டும் போதாது. அந்த மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்து மத்திய அரசோடு வாதாடி நல்ல திட்டங்களை எல்லாம் பெற்றுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே குடுமியாமலையிலே அண்ணா பண்ணை இருக்கிறது. அந்தப் பண்ணையில் நல்ல பெரிய, அரிய சாதனைகளை எல்லாம் செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதி மக்கள் ஒரு விவசாயக் கல்லூரியை அங்கு அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் விவசாயிகள் ஏராளமாக இருக்கிற காரணத்தால் கரும்பு அதிகமாக விளைகிறது. அங்கு ஒரு கரும்பாலை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் குளத்தூர் தாலுகாவில் நல்ல மழை பெய்யாத காரணத்தால் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, வரி வஜா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பித்து அந்த மக்களுடைய துயர் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தப் பகுதியில் நல்ல ரோடுகள் கிடையாது. மின்சார வசதி கிடையாது. குடிதண்ணீர் வசதி கிடையாது. இந்த அபிவிருத்தி வேலைகளை எல்லாம் நல்ல முறையில் செய்து கொடுக்கும் வகையில் புதுக்கோட்டை மாவட்டத்தைப் பின்தங்கிய மாவட்டமாக அறிவித்து அந்தப் பணிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

***திரு. பு. செ. முத்துச்செல்வன்:** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழக மேதகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து எனது கருத்துக்களைக் கூற விழைகிறேன்.



மேதகு ஆளுநர் அவர்கள் தம்முடைய உரையின் முகப்பில் நம்முடைய தமிழ்நாட்டின் விடிவெள்ளியும், தன்மானத் தலைவருமாக விளங்கிய தன்னிகரற்ற தலைவர் தந்தை பெரியார் அவர்களுக்கு இரங்கலைத் தெரிவிக்கிற முகத்தான் அவர்களது உரையை ஆரம்பித்திருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் ஏறத்தாழ ஐம்பது, அறுபது ஆண்டுகள், தன் வாழ் நாள் பூராவுமே ஏழை எளிய மக்களின், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஏழை மக்களின் சீரான வாழ்க்கைக்காக, அவர்கள் முன்னேற்றத்திற்காக, அவர்கள் எப்படி நசுக்கி ஒடுக்கப்பட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்டு அவர்களின் நிலையை மேலே தூக்கி விடுவதற்காக அயராது தனது தள்ளாத வயதில்கூட இரவு பகல் என்று பாராது தமிழ் நாட்டில் இருக்கிற பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று தம்முடைய பிரசாரத்தைச் செய்து வந்தார்கள்.

தந்தை பெரியார் அவர்கள் அவர்களுக்கு இயல்பான முறையில் மற்றவர்களுக்கெல்லாம் எடுத்துக் காட்டும் வகையில் பிறரிடம் அன்போடும் பாசத்தோடும் எளிமையான முறையில், பழகும் முறைக்கு இலக்கணம் என்று சொல்லத்தக்க வகையில், எவ்வளவு சாதாரணமானவர்களாக இருந்தாலும் கூட தானே எழுந்து நின்று மரியாதை தெரிவித்த பாங்கினை நினைக்கும்போது இனி அத்தகைய தலைவரை எப்போது காண்போம், எப்போது காண்போம் என்று ஏங்கித் தவிக்கிற நிலையில் நம்மையெல்லாம் அழ வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அத்தகைய சிறந்த தலைவர் நமக்கு பேரறிஞர் அண்ணா அவர்களைத் தந்திருக்கிறார்கள். அவர்கள்தான் நமக்கு டாக்டர் கலைஞர் அவர்களைத் தந்திருக்கிறார்கள். நாவலர் அவர்களை, பேராசிரியர் அவர்களை, இன்னும் மற்ற மற்ற அமைச்சர்களை எல்லாம் அவர்கள் தான் நமக்குத் தந்திருக்கிறார்கள். நம்மையெல்லாம் ஆளாக்கிய பெருமை அவர்களுக்குத்தான் உண்டு. ஏனெனில், இந்த நாட்டிலே சாமான்ய மக்கள் எல்லாம், பாமர மக்கள் எல்லாம் ஒடுக்கப்பட்டவர்களாக சாக்கடையில் நெளிகிற புழுக்களைப்போல் தாழ்த்தப்பட்ட மக்களைக் கருதி வந்த நாட்களில் எல்லாம் மிகத் துணிச்சலோடு ஜாதிச் சாக்காட்டினை ஒழித்த பெருமை தந்தை பெரியாருக்கு உண்டு. அத்தகைய நம் தந்தை பெரியார் அவர்களுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்

டிருக்கிறோம் என்ற முறையில் அவர்களுக்கு நாம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் அவர்களுக்கு இந்த உரையில் நன்றி தெரிவித்திருப்பது மிகவும் பொருத்தமான ஒன்றாகும்.

குறிப்பாக திருச்சி மாவட்டத்திற்கு தந்தை பெரியார் அவர்களின் சேவை மிகவும் அதிகமான ஒன்றாகும். திருச்சி மாவட்டத்தில்தான் அவர்கள் தம்முடைய மாளிகையை நிறுவியிருக்கிறார்கள். அங்கிருந்துகொண்டுதான் அவர்கள் தமிழ்நாடு பூராவும் சென்று பிரசாரம் செய்து வந்தார்கள். திருச்சி மாவட்டத்தில் அவர்கள் ஐந்தரை லட்சம் ரூபாய் செலவில் ஒரு கல்லூரியை நிறுவி, அரசாங்கத்தின் சார்பில் நிறுவி, அது சிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்தக் கல்லூரியில் ஏறத்தாழ 90 சதவீதம் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினைச் சார்ந்தவர்கள் படித்து பயனடைந்து வருகிறார்கள். அதேபோல் அங்கு அரசு மருத்துவமனையில் குழந்தைகள் பகுதியாக ஒரு மருத்துவ மனையை நிறுவ ஒரு லட்சம் ரூபாய் அளித்திருக்கிறார்கள். அதேபோல் அங்கு ஒரு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியும் நிறுவி நடத்தி வருகிறார்கள். இன்னும் அங்கு அனாதைக் குழந்தைகளுக்காக, ஏறத்தாழ 175 அனாதைக் குழந்தைகள் பயில்கிற ஒரு பள்ளியை நிறுவி அங்கு அனாதைக் குழந்தைகள் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறார்கள்.

இப்படி பல சிறந்த பணிகளைத் திருச்சி மாவட்டத்திற்கு அவர்கள் செய்திருப்பதை நினைக்கும்போது அவர்களை மறந்துவிட முடியாத நிலை மீண்டும் மீண்டும் எங்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அத்தகைய சிறந்த தலைவருக்கு எங்கள் மாவட்டத்தின் சார்பாக நன்றி செலுத்தி அவர்களின் மறைவிற்கு இரங்கலைத் தெரிவிக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களது குடும்பத்தாருக்கும், அவர்களது துணைவியார் மணியம்மை அவர்களுக்கும் எங்கள் நன்றியையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அடுத்து, கவர்னர் பெருமான் அவர்கள் உரையில் நம் மாநிலத்திற்கு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த ஆண்டுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை 150 கோடி ரூபாய் என்ற அளவில் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தத் தொகை போதுமான தொகை அல்ல. அதை மேலும் அதிகம் பெறுவதற்கு



நம் டாக்டர் கலைஞர் அவர்கள் முயற்சி எடுத்து வருகிறார்கள். வாதாடி வருகிறார்கள். அதிகப்படியான தொகை தருவதற்கு மத்திய அரசு உதவி புரிய வேண்டும். இன்னும் நம் பாசன வசதிகள் எல்லாம் தமிழ்நாட்டில் அற்றுப் போயிருக்கிற நிலையில் அவைகளை மேம்படுத்துவதற்காக அறிவியல் துறையில் அதுகுறித்து ஆராய்ச்சி செய்து ஊற்று கிடைக்கிற இடங்களில் எல்லாம் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கெல்லாம் திட்டங்கள் தயாரித்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் அதற்கு வேண்டிய தொகைகளை மத்திய அரசு வழங்க வேண்டும் என்றும் இந்த அரசு அந்தத் திட்டங்களை விரைவுபடுத்த உதவிகரமாக இருக்கவேண்டுமென்றும் மத்திய அரசை இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அரசு எவ்வளவோ முனைந்தபோதிலும் அவர்களுடைய பொருளாதார வளம் குறைந்துகொண்டே போய்க் கொண்டிருக்கிறது. கிராமப்புற பொருளாதார வளம் நகரப் பொருளாதார வளத்தைவிட குறைந்த நிலையில்தான் இருக்கிறது. கிராம மக்களின் பொருளாதார வளத்தைப் பெருக்கினால்தான் நாட்டுப் பொருளாதாரம் செம்மையுற்றதாக இருக்கும். ஆகவே அந்த வகையில் விவசாய மக்களின் பொருளாதார வளத்தைப் பெருக்குகிற வகையில் இன்னும் நல்ல பல திட்டங்களைத் தீட்டுவதற்கு நம்முடைய தமிழக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் ஒரு தொழிற்சாலைகூடக் கிடையாது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எட்டு சர்க்கரை ஆலைகள் நிறுவ இருப்பதாக கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த எட்டு சர்க்கரை ஆலைகளில் ஒரு சர்க்கரை ஆலையை முசிறியில் நிறுவுவதற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் என் தொகுதி தொழில் துறையில் மிகவும் பிற்பட்ட தொகுதியாக இருக்கிறது, இதுவரையில் இருந்து வருகிறது.

அந்தப் பகுதியில் இப்போது குளித்தலையையும் முசிறியையும் இணைத்து ஒரு கோடி ரூபாய் செலவில் ஒரு பாலம் கட்டப்பட்டு வருகிறது. அந்தப் பாலம் கட்டப்பட்டு விட்டால் அதற்குப் பிறகு

[திரு. பு. செ. முத்துச்செல்வன்] [1974 சனவரி 22

அந்தப் பகுதியில் தொழில் வாய்ப்பு ஏற்பட வழியிருக்கிறது. அங்கு ஒரு சர்க்கரைத் தொழிற்சாலை ஏற்பட்டால் அந்தப் பகுதியில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வருமானம் அதிகம் கிடைக்கும். ஆகவே முசிறியில் ஒரு சர்க்கரை ஆலை நிறுவுவதற்குத் தமிழக அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மேலமலைத் தொடர்ச்சி மேம்பாட்டுக் கழகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இத்தகைய சீரிய திட்டங்கள் எல்லாம் இருப்பதைக் கண்டு கவர்னர் பெருமான் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவித்து இந்த அளவிற்கு எனக்கு பேச வாய்ப் பளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கும் நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்களின் உரைமீது நடை பெறுகிற விவாதத்தில் கலந்துகொண்டு எனது சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.

கவர்னர் அவர்களது உரையில் பாசன வசதிக்கென 15.90 கோடி ரூபாய் செலவில் 14 திட்டங்களும், 15 கோடி ரூபாயில் 19 புதிய நடுத்தரத் திட்டங்களும் சேர்க்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக் கிறது. இந்தத் திட்டங்கள் எல்லாம், குறிப்பாக பாசன வசதிகள் அதிகமாக உள்ள பகுதிகளில்தான் நிறைவேற்று கிறார்களே தவிர பாசன வசதி இல்லாத இடங்களில் இந்தத் திட்டங்களை அதிகமாக நிறைவேற்றுவதில்லை. காரணம், இதில் கட்சிக் கண்ணோட்டம்தான் இருக்கும் என்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட திட்டங்கள் எல்லாம் கட்சிக் கண்ணோட்டத்துடன் அல்லாது பாசன வசதி இல்லாத இடங்களைப் பார்த்து ஏற்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்னை. குடிநீர்த் திட்டத்தில் குறிப்பாக பல திட்டங்கள் சேர்க்கப்பட்டு இருப்பதாகக் கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. எங்களுடைய ஆண்டிப்பட்டி பகுதியில் ரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு பரிசோதனைகள் நடத்தப்பட்டு, ரூ. 19,000 கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் இது



1974 சனவரி 22] [திரு. நா. வெ. குருசாமி]

வரையில் அந்தத் திட்டத்தை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. நேற்றைய முன்தினம் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சுந்தரம் அவர்கள் கூறினார்கள், இப் போது கோவைத் தேர்தலுக்காக இந்த கவர்னர் உரையில் சிறுவாணித் திட்டத்தைச் சேர்த்து இருக்கிறார்கள் என்று. அதையே நானும் கூற ஆசைப்படுகிறேன்.

என்னுடைய ஆண்டிப்பட்டித் திட்டத்தையும் திண்டுக்கல் பாராளுமன்றத் தேர்தலின்போது, அங்கே நடைபெற்ற கருத் தரங்குகளில் நமது மதிப்பிற்குரிய வாரியத்தின் தலைவர் கந்தப்பன் அவர்கள் கூறினார்கள். குருசாமி அவர்கள் கூறும் ஆண்டிப்பட்டி திட்டத்தை இப்போது சேர்த்து இருக்கிறோம் என் றார்கள். மேலும் சென்ற மாதம் 31-ம் தேதி நடைபெற இருந்த கூட்டத்தில் அந்தத் திட்டம் குறித்து மீட்டிங் நடத்தப்பெற்று, அது சேர்க்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அந்தக் கூட்டம் 7-ம் தேதி நடைபெறும் என்று பிறகு சொன்னார்கள். அந்தக் கூட்டம் நடந்தது, ஆனால் அந்த ஆண்டிப்பட்டித் திட்டத்தை அதில் சேர்த்ததாகத் தெரியவில்லை. இதையெல்லாம் பார்க்கிற போதுதான் இந்த அரசு இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிற நோக்கில் கட்சிக் கண்ணோட்டம் கொண்டு காரியங்களைச் செய் கிறது என்று தோன்றுகிறது. இம்மாதிரியான குடி நீர்த் திட்டங் களில் கட்சிக் கண்ணோட்டம் கூடாது, எங்கெங்கே விரைவில் செயல்படுத்த வேண்டுமோ அங்கே செயல்படுத்த முன் வரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உர விஷயத்தை எடுத்துக்கொண்டால் 73–74-ம் ஆண் டிற்கு தேவைப்பட்ட 3.15 இலட்சம் டன் நைட்ரஜன் உரத்திற்குப் பதிலாக மொத்தம் 2.3 இலட்சம் டன் நைட்ரஜன் உரம் மட்டுமே நமக்குக் கிடைத்து இருப்பதாகக் கவர்னர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இவ்வளவு கிடைத்து இருந்தும் ஏன் விவசாயி களுக்கு சரியான முறையில் உர விநியோகம் நடைபெறவில்லை. சென்ற மாதம் மதுரை மாவட்டத்தில் உள்ள குடோனில் இருந்து 150 டன் உரம் காணமல் போய்விட்டதாகக் கூறப்பட்டு, அதில் சம் பந்தப்பட்டவர்களைக் கைது செய்ததாகக்கூடப் பார்த்தேன். இவை களெல்லாம் எப்படி நடைபெற்றன. இப்படி அவர்கள் வெளியே

எடுத்துக்கொண்டுபோய் விற்று விட்ட காரணத்தால் விவசாயிகளுக்கு உரம் வந்து சேரவில்லை, அதனால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்பட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பூச்சிகொல்லி மருந்தைப் பொறுத்தவரையில், விவசாய டெப்போக்களின் மூலம் கொடுக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. விவசாய டெப்போக்களில் பாலிடால் போன்ற மருந்துகள் வந்தால் அதை அவர்கள் கடைகளுக்கு விற்று விடுகிறார்கள். அதனால் விவசாயிகளுக்குச் சகாய விலையில் கிடைக்காமல் போய் விடுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அக்ரிகல்சுரல் டெப்போக்களில் பூச்சிகொல்லி மருந்து கொடுக்கிறபோது விவசாயிகளிடத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு தான் கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறது. ஆதலால் ஒவ்வொரு விவசாய டெப்போவிலும் ஒரு ரிஜிஸ்டர் வைத்து இருக்கிறார்கள். அதிலே விவசாயிகளிடமிருந்து கையெழுத்தும் வாங்கப்படுகிறது. அவர்கள் சொல்கிறமாதிரி விவசாய டெப்போக்களிலிருந்து பூச்சி கொல்லி மருந்தை கடைகளுக்கு விற்று இருப்பார்களானால், அதை எனக்குத் தெரிவித்தால் நான் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

**திரு. நா. வெ. குருசாமி :** நான் எனக்குத் தெரிந்த விஷயத்தை கூறுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் தீவிர கவனம் செலுத்தி வருகிறேன். முன்னால் கையெழுத்து இல்லாமல் கொடுத்து வந்தார்கள்.. அப்படி கொடுக்கப்பட்டு வந்ததில், அதை மற்றவர்கள் வாங்கி ஆந்திராவிற்கு அனுப்புகிறார்கள் என்று கிடைத்த தகவலின் பேரில், யாருக்கு—எந்த விவசாயிக்கு—பூச்சி கொல்லி மருந்து கொடுக்கிறார்களோ, அவர்களிடத்திலிருந்து கையெழுத்து வாங்கவேண்டுமென்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. இதைவிட, இனிமேல் அரசு செய்யக்கூடியது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு யாராவது விவசாயி கையெழுத்துப் போட்டமாதிரி வாங்கி அதை வெளியே விற்கிறார் என்று தெரிந்து





இருக்குமானால், புகாராகக்கூடச் சொல்ல வேண்டாம், ஒரு போஸ்ட் கார்ட் அல்லது துண்டு காகிதத்தில் எழுதி அனுப்பினால் போதும், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. நா. வெ. குருசாமி :** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. சிமெண்ட் நம் நாட்டில் அதிகமாக உற்பத்தி செய்கிறோம். இருந்தபோதிலும், சிமெண்ட் எல்லோருக்கும் சரியாகப் போய்ச் சேருவது இல்லை. குறிப்பாக இப்போது சிமெண்ட் விநியோகம் பஞ்சாயத்து யூனியன் கமிஷனரிடத்தில் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு மூட்டைக்கும் ரூ. 2 லஞ்சம் வாங்கிக்கொண்டுதான் சிமெண்ட் கொடுக்கிறார்கள். இதற்கு எங்கே ஆதாரம் என்று கேட்பீர்கள். பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஆதாரத்தை எழுதிக் கொடுத்து விட்டு லஞ்சம் வாங்குவதில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது முறையல்ல. பொதுவாக பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்கள் மீது ஒரு 'எஸ்டாபிளிஸ்ட் பாக்ட்' மாதிரி, நிரூபிக்கப்பட்ட உண்மை மாதிரி சொல்லக்கூடாது. குறிப்பிட்ட பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் யாராவது இருந்தால் அவரைப்பற்றிச் சொல்லுங்கள்.

**திரு. நா. வெ. குருசாமி :** ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் சந்திரமோகன் இந்த மாதிரி செய்து வருகிறார். இதை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறேன். கடந்த 2 மாதம் ஆகிறது. எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த முறையை அரசு மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி நெசவாளர்கள் குறித்து பல சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது இந்த உரையில். என்னுடைய தொகுதியில் பல சங்கங்கள் வைத்து இருக்கிறோம். என்னுடைய தொகுதியில் ஜக்கம்பட்டி, சுப்பலாபுரம் பகுதியில் இருக்கும் கைத்தறி நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவ்வளவு சங்கங்கள் இருந்தும் அவர்களுக்கு எந்தவிதமான நன்மையும் செய்யவில்லை. குறிப்பாக என்னுடைய தொகுதியில் ஜக்கம்பட்டியில் ஒரு சில சொசைடிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. இதில், கலைஞர் கருணாநிதி, நாவலர் நெடுஞ்செழியன், அறிஞர் அண்ணா, மாதவன் இப்படிப்

[திரு. நா. வெ. குருசாமி] [1974 சனவரி 22

பட்ட கட்சித் தலைவர்களின் பெயரைச் சொன்னால்தான் சொசைட்டி துவங்க லைசென்சு தருகிறார்கள். அங்கேயுள்ள மக்கள் 3 சொசைட்டி ஆரம்பிக்க வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்கள். அதில் பெரியார் சொசைட்டி ஒன்று, ஸ்ரீவில்லிபுத்தூர் குருசாமி சொசைட்டி இரண்டாவது, சிதம்பரனார் சொசைட்டி என்று மூன்றாவது. இதில் இரண்டு சொசைட்டிக்கு, அதாவது பெரியார் சொசைட்டி, ஸ்ரீவில்லிபுத்தூர் குருசாமி சொசைட்டி ஆரம்பிப்பதற்கு லைசென்சு தந்துவிட்டார்கள். இந்த அரசு சிதம்பரனார் செக்கை இழுத்துக் கொண்டுவந்து இங்கே நிப்பாட்டி இருக்கிறார்கள். ஆனால் சிதம்பரனார் பெயரில் ஆரம்பித்து இருக்கும் சொசைட்டிக்கு லைசென்சு வழங்க முன் வரவில்லை. ஆகவே, அங்கேயுள்ள மூன்று சொசைட்டிகளுக்கும் லைசென்சு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வேலை வாய்ப்புத் திட்டத்தை எடுத்துக்கொண்டால், நமது தமிழ்நாட்டில் எவ்வளவோ பேர் வேலையில்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறார்கள் என்று சொல்லவேண்டிய தேவையில்லை. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களை அடிக்கடி சந்தித்து வேலை வாங்கித் தாருங்கள் என்று எத்தனை பேர் கேட்கிறார்கள்? காரணம் ஒவ்வொரு வேலைக்கும் இப்போது லஞ்சம் கொடுத்தால்தான் நடக்கிறது. ஒரு ஆசிரியர் வேலைக்குப் போக வேண்டுமென்றால் ரூ. 2,000 அல்லது ரூ. 3,000 தரவேண்டி இருக்கிறது. ஆகவே, இந்த வேலையில்லாதோர் பிரச்னையில் அரசு மிகுந்த கவனம் கொண்டு, அவர்களுக்கு விரைவில் வேலை கிடைக்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் சாலை வசதி சரியாக இல்லை. காரணம் அந்த ஊராட்சி ஒன்றியம் மிகவும் பரப்பளவில் அதிகமாக இருக்கிறது. வருஷநாடு பகுதியைப்பற்றி எல்லா அமைச்சர்களுக்கும் தெரியும். அங்கே சாலை வசதி சரியான முறையில் இல்லை. அமைச்சர் மதிப்பிற்குரிய அன்பில் தர்மலிங்கம் அவர்களிடத்தில் கூட இதுபற்றிச் சொல்லி இருக்கிறோம். வருகிற ஆண்டில் ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தை இரண்டு ஊராட்சி ஒன்றியங்களாகப் பிரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டி-சேடப்பட்டியை இணைக்கும் மயிலாடும்பாறை எம். கல்லுப்பட்டி சாலையைச் செப்பனிட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 சனவரி 22] [திரு. நா. வெ. குருசாமி]

எங்கள் பகுதியில் ஒரு தொழிற்சாலைகூட இல்லை. வைகை அணைப் பகுதியில் நைலான் தொழிற்சாலை ஒன்று வருவதாகத் தெரிகிறது. நிபுணர் குழுவும் அதை ஆராய்ந்து அந்த இடத்தை சிபார்சு செய்து இருக்கிறது. இருப்பினும் ஏதோ அது வர தடைப்படுகிறது. அந்த நைலான் தொழிற்சாலையை அந்த வைகைப் பகுதியிலே வைப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12-00)

மதுவிலக்கு திட்டத்தைத் தீவிரமாக அமுல்படுத்தவேண்டும் என்று சர்க்கார் சென்ற ஆண்டு கூறியது. ஆனால், இந்த ஆண்டு மேல் நாட்டு மதுபானங்கள் இருக்க வேண்டியதாக இருக்கிறது என்று அறிவித்திருக்கிறது. ஆகவே, தமிழகம் மது விலக்கு விஷயத்தில் தீவிரமாக அமுல்படுத்துகிறது என்ற நல்ல பெயரை ஏற்படுத்துவதற்கு, மேல் நாட்டு மது வகைகளைப் பொறுத்த வரையிலும் கூட மதுவிலக்கை அமுல் நடத்தவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் இப்பொழுது கள்ள டிக்கெட்டுகள் அடித்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள். திருச்சி, இதர ரயில்வே ஸ்டேஷன்களில் கள்ள டிக்கெட் விற்பதைப் போல், இப்பொழுது பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் ஒரே நம்பரில் இரண்டு டிக்கெட் உள்ளதுபோல் நடந்துகொண்டிருக்கிறது. இரண்டு டிக்கெட் ஒரே நம்பரில்தான் நடந்து கொண்டு வருகிறது. இதைக் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நான் காலையில் கேள்வி நேரத்தில் ஒரு பிரச்னையை எழுப்பினேன். என்னுடைய மதுரை மாவட்டத்திலிருந்து கேரளாவுக்கு அரிசி கள்ளத்தனமாகக் கடத்திச் செல்லப்படுகிறது. என்னுடைய பகுதியிலே சுமார் 70 மைலுக்கு இப்பால் ஒரு செக் போஸ்டு போட்டிருக்கிறார்கள். என்னுடைய பகுதி வறண்ட பகுதி. ஆண்டிப்பட்டி, ஐக்கம்பட்டி ஆகியவைகள் நெசவாளர்கள் நிறைந்த பகுதி. அங்கே படி அரிசி ரூ. 4 என்று விற்கின்ற அவல நிலை இருக்கிறது. இந்த செக் போஸ்ட்டை [illegible] என்று அறிவிக்காமல், கம்பம் பக்கத்தில் கேரளா பார்டரில் அங்கு செக் போஸ்ட்டை போட்டு, இந்த செக் போஸ்ட்டை

[திரு. நா. வெ. குருசாமி] [1974 சனவரி 22

எடுத்து, ஆண்டிப்பட்டி பகுதி மக்களுக்கு அரிசி கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கவர்னர் உரையில் சாதனைகளைப்பற்றி சரிவரச் சொல்வதற்கு இயலாமையால், வேதனையை விரித்துரைக்கும் உரையாகவே அது இருக்கிறது என்று கூறி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

* THIRUMATHI ALDA M. FOWLER: Mr. Deputy Speaker, Sir, I wish to offer a few comments on His Excellency the Governor's speech.

First of all, I would like to congratulate the Government on the progress it has made in every aspect of its work, especially on the plans for construction, those that have been achieved and those that are going to be achieved. One does not need to be an expert in going around the various improvements effected in the City itself. Many visitors who came to this City and especially those who have travelled abroad for some time or who have been on holiday and who came back, are very much struck by the vast improvements made in regard to bridegs, very wide bridges, fly-overs and various buildings that thave been raised. For this, we must give our praise and congratulations to the Government which has achieved so much.

I feel very sincerely that when the history of India and Tamil Nadu comes to be written, this special phase will need to be recorded. It is as though some past memory has been awakened in this Government; which although it is of short duration up to now: and which; as people thought, had no past experience, which has so quickly put up so many very fine monuments to its credit.

But, Sir, I do feel that one aspect has to be mentioned just as a corrective. Even today all the beauty of the City will be spoiled unless we maintain cleanliness and that is where we fall short. We cannot blame the Government for that. We have to blame ourselves. We do not train our children to be clean and hygienic. We are not a hygienic people. So let us face the fact that if we want a clean city we need clean people and we have to take steps to conduct ourselves and our young, to keep the city clean. Otherwise, instead of getting the praise of the visitors who come to us, they will go back with bad memories of their visit. If you examine any spot in tourist places of attraction, it is always



1974 சனவரி 22] [Thirumathi Alda M. Fowler]

spoiled and this we cannot allow. Therefore, I appeal to the Government to take radical steps to clean our city and to punish those who misuse public places.

Sir, we have been promised more water for the district of Coimbatore, nothing can be a more heartening piece of information. We only hope that Coimbatore which is such a great city producing so much for the welfare of the State, will be given water quickly. Whereas it progresses by leaps and bounds, once water comes, I think the progress will be multiplied tenfold. Tohugh Coimbatore is a large industrial city, we must not forget the neighbouring suburbs. I have in my mind, Pothanur, a distance of five miles from Coimbatore—which when developed will make a very, very beautiful suburb of Coimbatore and it is waiting for development.

Sir, hon. Members have made their comments on His Excellency the Governor's speeck, especially on employment or lack of it. I feel, Sir, that it has been left to me to mention the needs of my own community, the Anglo-Indian community. It would seem that on reading the Address or on reading the plans for the State, either the community is immune to the plans of the Government or the Government is immune to the community. Now this cannot be. I do feel that plans must also include the needs of this community, small as it is. You see a back-door has been prepared for the escapists. The back-door is for the backward Classes,, Scheduled Castes and what not. The escape route in made so that we can get through the door and enter these classes where people can get everything for nothing. That in itself is bad. Psychologically if you get everything for nothing, then you are no use at all. The Report of the Backward Classes Commission suggests that not all really benefit by the scholarships, hostels, fees, employment and seats in colleges. When you give too much, well this is too much and people cannot take it and so. Sir, a time must come when people should be treated according to their requirements and according to the needs of the community and not necessary because of the category to which they belong. Eventually the healthiest thing that can happen to thhe State and the whole country will be that these categories are removed and people are helped because of their needs.

[Thirumathi Alda M. Fowler] [1974 சனவரி 22

When we examine the needs of the community, they fall into two groups, education and employment or lack of education and lack of employment. Education is given by every single school or convent. Some schools are carrying the maximum of their commitments. They are doing a fine piece of work. But there are schools which do not share such responsibility. All English medium schools are committedt o give five per cent of all admissions in free ships to Anglo-Indian children, if this were carried out to every school, then we shall not be having this gap of uneducated people.

But there again the responsibility is not only on the schools but on parents of children do not take the responsibility or make use of the opportunities provided. What are we to do in this matter? We have children, orphons, who fail in their examinations but since they come under the 156 Grant, are not allowed to repeat the class in that school because the school cannot affod it. It is an orphanage. What are we to do?

I met only yesterday, a poor boy who was coming in a bicycle. I asked him ' why are you not going to school '. He said that he was not going to school because he had failed last year and his father and mother could not pay again the fee of Rs. 50 per month. They cannot afford to pay. Can they afford to pay? It is a difficult question to answer. What can the child do if the father cannot put him in school again? Very obviously the parent cannot manage the 50 rupees fee for the school and the consequent food, clothing and books, because the child cannot pass his examination. So they do not go to school; they drop out and they are the first class of unemployable people because they are not educated enough.

Secondly you have restless young men, boys, who drop out voluntarily in standards VII, VIII or X. They do not complete the education. What are we to do for them? They should be chanelled into training schools or technical schools so that they are not lost sight of and so that they will not become a liability to society, or to the State. We have to look after them and we have to utilise their potential. Let the drop-outs be utilised. Let them be given vocational training. But who is going to utilise



1974 சனவரி 22] [Thirumathi Alda M. Fowler]

their potential and who is going to start it? At least an attempt has been made as in the district of Salem, I think. I think we should experiment with that idea in Madras City itself.

I am keenly aware of the needs of the poor in the community. One does not like to touch upon the well-to-do, the professional middle-class. But this group, which goes to the wall because of some element of neglect of training, should be looked after care. They are good; some have a mechanical bent of mind. Their talent should be used. Why can't we make use of their talent? One cannot do it oneself. I feel, that if a group of well-wishers of the community can come forward they would change the misfortunes of this group of people. But we cannot do it ourselves. We must have the active participation of Government. Government must come forward in a very big way to settle this problem, to make them get out of the rutin to which they have sunk and to plant them firmly on their feet. There is no need to label people as Backward and Scheduled Castes. We must help ourselves to . All I ask is fou the opportunity to help us to help ourselves. Thank you.

* திரு. எம். சுரேந்திரன்: சபாநாயகர் அவர்களே, இங்கே சபை முன் வைத்திருக்கும் ஆளுநர் அவர்களின் உரைமீது சில கருத்துக்களைச் சொல்வதற்கு முன்னால் பட்ஜெட் கூட்டத் தொடரினுடைய தொடக்க உரையாக ஆளுநர் உரை இருக்குமென்றும் அந்த உரை இந்த பட்ஜெட் ஆண்டிலே இந்த அரசு என்னென்ன காரியங்களைச் செய்யப் போகின்றது, இவற்றை எப்படிச் செய்யப் போகின்றது என்பதை விளக்குமென்றும் எதிர்பார்ப்பது இயல்பான ஒன்றாகும். ஆனால் இந்த முன் உரையிலே அந்த மாதிரியான காரியங்களுக்குப் பதிலாக தங்களால் செய்ய முடியாத காரியங்களுக்கு மத்திய அரசுதான் பொறுப்பாளி என்று அமையும் படியான முறையிலே இந்த முன் உரை அமைக்கப்பட்டிருக்கிறது என்று பார்க்கும்போது இந்த தேசத்தில் அரசியல் சட்டப்படி தேர்ந்து எடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட வரையறுக்கப் பட்ட அதிகாரங்களுடன் இருக்கிற மத்திய அரசும் மாநில அரசும் ஒருவரையொருவர் குற்றம் சொல்லிக்கொண்டு காரியங்களை மாற்றிக்கொள்ள முயலுமென்ற அந்த எண்ணம் இந்த நாட்டுக்கு நல்லதாகத் தோன்றவில்லை.

இன்றைக்கு சமீபத்திலே ஏற்பட்டிருக்கிற நம்முடைய அனுபவம், அரபு நாடுகளுக்கும், இஸ்ரேல் நாட்டுக்கும் ஏற்பட்ட சண்டை காரணமாக, அதன் விளைவாக அவர்கள் பெட்ரோலும், டீசலும் மற்ற நாடுகளுக்குத் தர முடியாது என்ற ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டார்கள். பின்னால் விலையை ஏற்றிக் கொண்டார்கள். இதனால் உலகத்தினுடைய எல்லா நாடுகளையும் பாதிக்கின்ற நிலை, பெரும் பணக்கார நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளைப் பாதிக்கின்ற ஒரு நிலை இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிறது என்ற அனுபவத்தை நாம் பார்க்கின்றோம். இப்படி ஒரு நாட்டிலே இருக்கின்றவர்கள் நினைத்தால் கூட மற்றொரு நாட்டிலே உள்ளவர்களைத் துன்புறுத்த முடியும், துன்பத்திற்குள்ளாக்க முடியுமென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கால கட்டத்தில் ஏதோ நம்முடைய மாநிலம் மட்டும்தான் முன்னேற வேண்டும், இதற்குத் தனி அதிகாரம் வேண்டுமென்று எண்ணுகின்ற எண்ணம் எவ்வளவு பழமையானது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதோடு நம்முடைய மாநிலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று இருக்கிறது. அதிகமான உணவு உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

ஆனால் மின்சாரத் துறையைப் பொறுத்த மட்டில் மின்சார உற்பத்தியில் நமக்குப் பற்றாக்குறை இருக்கிறது. மின்சார உற்பத்தியில் கேரளம் அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இன்னும் அதிக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்குத் திட்டங்களைப் போட்டிருக்கிறது. ஆகவே ஒரு மாநிலம் ஒன்றில் அதிகமாகவும், இன்னொன்றில் குறைவாகவும் இருப்பது இயல்பானதாகும். எல்லா மாநிலங்களும் ஒரேமாதிரி அமைந்து விடவில்லை. எல்லா மாநிலங்களிலும் ஒரேமாதிரிப் பொருட்கள் கிடைப்பதில்லை. எல்லா மாநிலங்களிலும் இயற்கை அமைப்பு வேறு வேறு மாதிரியாக இருக்கிறது. ஒரு சில மாநிலங்களில் ஒரு சில இயற்கைப் பொருட்கள் அதிகமாக இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எல்லாக் கனி வளங்களும் இங்கே கிடைப்பதில்லை என்பது தெளிவு. சில பொருட்கள் வெளியிலிருந்து வர வேண்டும். இது இயற்கையான, இயல்பான தன்மையாகும். எல்லா மாநிலங்களும் ஒரே மாதிரியாக



வளர்வதற்கு மார்க்கம் கண்டு பிடித்துச் செயல்படுத்துவது நாட்டின் முன்னேற்றத்திற்கு நல்லதே தவிர, ஏதோ ஒரு இடத்தில் முன்னேறி விட்டால் போதும் என்ற கண்ணோட்டத்தை வைத்துக் கொண்டு இருப்பது இந்தக் காலத்திற்குச் சிறிது கூடப் பொருத்தமானதல்ல என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த மாநில சட்டசபையில் கூட பல நேரங்களில் அமைச்சர்கள் சொல்லியிருக்கிறார்கள் எந்த மாவட்டம் பிற்போக்கானதாக இருக்கிறதோ அந்த மாவட்டத்தைத் முன்னுக்குக் கொண்டு வருவதற்கு அதிகமாகச் செலவிட வேண்டும் என்று. பல மாநிலங்களில் பல மாவட்டங்களைப் பிற்போக்கான மாவட்டங்கள் என்று மத்திய அரசும், மாநில அரசும் தீர்மானித்து, அவற்றின் முன்னேற்றத்திற்கு அதிகமாகச் செலவிட்டு வருகின்றன. அதை ஏன் நாம் அப்படிச் செய்ய வேண்டும் ? ஒரு மாநிலத்தில் இருக்கிற மாவட்டங்களே வெவ்வேறு மாதிரியாக இருக்கின்றன. வட்டங்கள் வேறு வேறு மாதிரியாக இருக்கின்றன. கிராமங்கள் வேறு வேறு மாதிரியாக இருக்கின்றன. ஒவ்வொன்றையும் தனித் தனியாகப் பார்த்து அதன் குறைகளைப் பூர்த்தி செய்து, நிறைவுகளை பகிர்ந்து கொள்வதுதான் இயல்பான ஒன்றாகும்.

சோஷலிசம் வரவேண்டுமென்று எல்லோரும் பேசுகிறோம். சோஷலிசம் என்பதை ஒரு மாநிலத்தில் மட்டும் நிலைநிறுத்த முடியாது. அதைத்தான் ருஷ்ய சரித்திரம் நமக்குக் கூறுகிறது. ருஷ்யாவில் சோஷலிசம் என்று கொண்டு வந்தவுடனே, அதை எதிர்த்த அண்டை நாடுகளுடன் இரும்புத்திரை போட்டு எத்தனை நாள் வைத்திருந்தார்கள் என்பது நமக்குத் தெரியும். அண்டை மாநிலம் சீரழிந்த நிலையில் இருக்கிறபோது நாம் மட்டும் சிறப்பாக ஒன்றை பாதுகாத்துக்கொள்வது என்பது மிகவும் கஷ்டமாக இருக்கும். இப்போதுகூட உணவுக் கடத்தலைத் தடுக்க இந்த மாநில அரசு எவ்வளவோ காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. எவ்வளவோ பணம் செலவிட்டுக்கொண்டிருக்கிறது என்றாலும் கடத்தல் நிறுத்தப்பட்டதா என்றால் நிறுத்தப்பட முடியவில்லை என்ற உண்மையை யாரும் மறுக்க முடியாது. காரணம் நமக்கு அடுத்துள்ள அண்டை மாநிலம் மிகவும் பற்றாக்குறையாக இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் நாம்

[திரு. எம். சுரேந்திரன்] [1974 சனவரி 22

எத்தனைதான் தடைகளை விதித்தாலும் அவற்றை எல்லாம் சமாளித்து அரிசியைக் கொண்டுபோகத் தயாராக இருப்பார்கள். அண்டை மாநிலமும் நம்மைப்போல சிறப்பான முறையில் இருந்தால்தான் நாமும் சிறப்பாக இங்கே இருக்க முடியுமே தவிர, அது இல்லாவிட்டால் நாமும் பாதிக்கப்படுகிற நிலைமைதான் ஏற்படும் என்பதை ஒவ்வொரு நாளும் நாம் அனுபவத்தின் மூலம் தெரிந்து கொண்டு வருகிறோம்.

பக்கத்திலுள்ளவர்களும் மற்ற அம்சங்களில் விரிவு அடைந்த பின்னால் நாமும் நன்றாக நமது சிறப்பு அம்சங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்கிற உணர்வு இல்லாது, எப்படியோ நாம் வாழவேண்டும் என்கிற அடிப்படையில் மாநில உணர்வு எழுவது யாருக்கும் நல்லதல்ல என்று முதலிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேநேரத்தில் ஆளுநர் உரையில் எனக்கு ஒன்றும் ஏமாற்றம் கிடையாது. ஏனென்றால் இந்த அரசு ஏற்பட்ட பின்னால், இந்த அரசு எந்த ஒரு காரியத்தைச் செய்கிறபோதும் ஆழ்ந்து, ஆராய்ந்து, ஆலோசனை செய்து, அதன் பொருளாதாரப் பொறுப்புகள் எவ்வளவு என்பதனை எல்லாம் எண்ணிப் பார்த்துச் செய்கிறதா என்றால், இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மற்ற மாநிலங்கள் பின் தங்கிய நிலையில் இருந்தால் இருக்கட்டும், தமிழகம் முன்னேற வேண்டும் என்று கேட்பது சரியல்ல. நாமும் அப்படிச் சொல்ல வில்லை. நம்மைப்போல அவர்களும் வளரவேண்டுமென்றுதான் விரும்புகிறோம். ஆனால் நான் தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், தமிழ்நாடு அரசு நம் மாநிலத்திற்காகக் கேட்டிருக்கிற சலுகைகள் தேவையில்லை என்று உறுப்பினர் சொல்கிறாரா என்பதுதான்.

**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இம் மாதிரி கேள்வி கேட்பதன் மூலம் திசை திருப்பிவிடக் கூடாது. **தம்முடைய கண்ணோட்டத்தில் அடிப்படையில் மாற்றம் வேண்டும் என்று சொல்கிறேனே தவிர . . . .**



1974 சனவரி 22]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கண்ணோட்டத்தை நான் குறை சொல்லவில்லை, தமிழ்நாட்டுக்கு என்ன என்ன தேவை என்று நாம் சொல்கிறோமோ அவை ஒன்றும் தேவை இல்லை என்று உறுப்பினர் கருதுகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். சுரேந்திரன் :** யாரும் அப்படிச் சொல்லமாட்டார்கள். தமிழ்நாடு முன்னேற வேண்டுமென்றுதான் எல்லோரும் கருதுவார்கள். நாம் பெரிய மாளிகையில் இருந்தாலும், அடுத்துப் பலர் நம்மைச் சுற்றியே குடிசையில் இருக்கிறபோது நம்முடைய ஆடம்பர வாழ்வு எப்படி இருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதுதான் பிரச்சினையே தவிர, நமக்குத் தரவேண்டிய எல்லாச் சலுகைகளையும் தந்துவிட்டார்கள், நமக்கு எதுவுமே தேவையில்லை என்பது என் வாதம் அல்ல என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

**நான் ஏற்கெனவே சொல்லிவந்ததைப்போல**, இந்த அரசு ஏற்பட்டதற்குப் பின்னால் எதையும் ஆராய்ந்து, முறையாக பொருளாதாரப் பொறுப்புகளை எல்லாம் கணித்து எதையாவது செய்கிறதா என்று சொன்னால் இல்லை என்றுதான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த மாநிலத்தில் உணவுப்பொருள் பற்றாக்குறையாக இருந்த காலத்திலே ரூபாய்க்கு ஒரு படி அரிசி தருகிறேன் என்று முடிவு எடுத்தார்கள். அதை நிறைவேற்ற முடிந்ததா? அதனால் ஏற்படுகிற பொருளாதாரப் பொறுப்பு என்ன அதை நம்மால் தொடர்ந்து சமாளிக்க முடியுமா என்று கணித்துப் பார்த்தார்களா? அப்படி இல்லை என்பதை பின்னால் அந்தத் திட்டத்தைக் கைவிட்ட நேரத்திலே புரிந்துகொள்ள முடிந்தது.

அதேபோன்று மின்சாரத்தைப்பற்றிய பிரச்சினை. இன்றைக்கு 15 சதவீதம் வெட்டு இருக்கிறது. இந்த 15 சதவீதம் வெட்டு இன்றைக்கு கேரளாவில் இருந்து நமக்கு 30 கோடி யூனிட் மின்சாரம் கிடைக்கிறபோதே செய்யப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னால் நெய்வேலியில் உற்பத்தியாகிற மின்சாரத்தை வாங்கிக் கொள்கிறீர்களா என்று கேட்டபோது அதற்கு இந்த அரசு தயாராக இருக்கவில்லை. அதன் காரணமாக அவர்கள் அந்த மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேறு தொழிற்சாலைகளை

அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்பது யாருக்கும் தெரியாத ஒன்று அல்ல. நமக்கு மின்சார நெருக்கடி ஏற்பட்டதற்குப் பின்னர் நெய்வேலி மின்சாரத்தை நாடினோம், அவர்களும் மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த ஆரம்பித்தார்கள். நமது மாநிலத்தில் 75 சதவிகிதம் மின்சார வெட்டு கொண்டுவரவேண்டிய நிலை எப்படி ஏற்பட்டது? மின்சாரம் உற்பத்தி செய்வதிலே, விநியோகம் செய்வதிலே நாம் நிச்சயம் எதையும் ஆராய்ந்து, கணித்துப் பார்த்துக் காரியங்கள் செய்யாத காரணத்தினால்தான் ஏற்பட்டது என்பதைச் சொல்வேன். எதையும் மதிப்பீடு போடாமலேயே எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் தருகிறோம் என்று அறிவித்தார்கள். அதை முதலமைச்சரின் பெருமையாக மின்சார அமைச்சர் பேசினார்கள். அப்படித் தரப்போகிறோம் என்று சொல்லும்போது நமக்கு எவ்வளவு உற்பத்தியாகிறது, தேவை எவ்வளவு என்பதை கணக்கிட்டுச் செய்தார்களா என்றால் இல்லை. எண்ணிப் பார்த்தால் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. பல இடங்களில் கம்பிகள் இல்லை. பல இடங்களில் கம்பங்கள் இல்லை. பல்புகள் இல்லை என்ற பிரச்சினை இருந்து கொண்டேதான் இருக்கிறது. மின்சாரத்திற்கு வரக்கூடிய கட்டண பாக்கிகளை வசூலிக்கக் கூட நாதியில்லை என்கிற நிலைமையைத்தான் நாம் பார்க்கிறோம்.

அடுத்து இந்த மாநிலத்தில் இருக்கிற அத்தனை பேர்களும் சொன்னார்கள் மதுவிலக்கை ரத்து செய்யக்கூடாது என்று. நமக்கு வரவேண்டிய வருவாய் இழப்பு ஏற்படுகிறது, குற்றங்களும் அதிகமாகின்றன என்றெல்லாம் சொல்லிவிட்டு மதுவிலக்கை நிறுத்திவைத்தார்கள். இப்படி எடுப்பதனால் இது நமது சமுதாயத்தில் எத்தகைய விளைவுகளை உண்டாக்கும் என்பதை எல்லாம் எண்ணிப் பார்த்தார்களா என்றால் இல்லை. இன்றைக்கு ரத்து செய்த சட்டத்தை அமலுக்குக் கொண்டுவருவது என முடிவு செய்திருக்கிறார்கள். எல்லாமே அப்படி வரும் என்றார்களா என்றால் இல்லை. முதலில் கள்ளுக்கடையை எடுக்கப் போகிறோம் என்று சொன்னது, அடுத்து, சாராயக் கடைகளை எடுக்கப் போகிறோம் என்று சொன்னது, மேல்நாட்டு மதுவகைகள் இருக்கலாம் என்பது—இவை எல்லாம் இந்த அரசு எந்த ஒரு காரியத்தையும் தெளிவாக, திடமாக, ஆழ்ந்து, நன்கு ஆராய்ந்து பார்த்துச் செய்வதே இல்லை. அந்த அந்த நேரத்தில் அரசியல் காரணங்களுக்காக, மக்களைக் கவருவதற்காக திடீர் திடீர் என்று வருகிற அறிவிப்புகளாகத்தான் இருக்கிறதே தவிர வேறு மாதிரியாக இல்லை என்பதைத்தான் காட்டுகிறது.





அதன் காரணமாகச் சொல்கிறேன். எனக்கு ஆளுநர் உரையில் ஏமாற்றம் எதுவும் இல்லை. இந்த உரையும் அதேபோல அமைந்திருக்கிறது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மத்திய அரசு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும் என்பதில் ஆட்சேபனை கிடையாது. ஆனால் இன்றைக்கு உங்களிடத்தில் இருக்கிற அதிகாரத்தை சரியாகப் பயன்படுத்துகிறீர்களா? கிடையாது. நூல் விநியோகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எந்த முறையில் நடந்தது, எப்படி நடந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். சர்க்கரை விநியோகத்தை எடுத்துக்கொள்ளுங்கள். சர்க்கரையை விநியோகம் செய்ய பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. பு. செ. முத்துச்செல்வன்:** கூட்டுறவு சங்கம் மூலமாகத்தான் விநியோகத்திற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன்:** மாசிலாபாபுலம், பி. என். பட்டி இங்கெல்லாம் பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டுகள்தான் விநியோகிக்கிறார்கள். எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். தெரியாதது பல இருக்கலாம். கிராம மக்கள் சர்க்கரை வாங்குவதிலே அக்கறை காட்டுவதில்லை. அவர்கள் அப்படியே மூட்டையாக கொள்ளை லாபத்திற்கு விற்று விடுகிறார்கள். அதற்கு டி.எஸ்.ஓ. முதற்கொண்டு பங்காளிகள் ஆக இருக்கிறார்கள் என்பதற்கான தகவல் என்னிடத்தில் இருக்கிறது. இதை நீங்கள் ஆராய வேண்டும். நான் அதற்காகத்தான் சொல்கிறேனே தவிர, வேறு காரணத்திற்காக அல்ல. ஆக, விநியோக முறையில் திறமையற்ற போக்கு. நூல் விநியோகமும் அதே நிலைதான். சிமெண்டைப் பற்றி எற்கெனவே சொன்னார்கள். அங்கே இருக்கிற பி.டி.ஓ., கலெக்டர், தாசில்தார், இவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கே அதற்கென புரோக்கர்களை வைத்து, அதிலே பங்கிட்டுக்கொள்கிற அதிகாரிகளும், மற்றவர்களும் இருக்கிறார்கள்

நாம், 400 டன் சிமென்டை கேரளத்திற்கு அனுப்புகிறோம். நமக்கே இங்கே சிமென்ட் பற்றாக்குறை இருக்கும்போது, நம்முடைய சிமென்டிலே பெரும் பங்கை கேரளத்திற்கு அனுப்புகிறோம். ஆகவே, இங்கே மேலும் போதாத நிலை ஏற்படுகிறது. இதை சரிக்கட்டுவதற்கான முறையிலே நம்முடைய விநியோகம் அமையவில்லை என்றால், அதனால் பல கெடுதல்கள் நடைபெறுகின்றன. ஆகவே, நம்முடைய நிர்வாகம் சரியாக அமையவில்லை, எல்லா நிலைகளிலும் ஊழல் இருக்கிறது என்று ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்றவர்களும் ஒருமுகமாக ஒத்துக்கொள்கிற விஷயமாகும் அது.

நம்மிடத்திலே இருக்கிற அதிகாரத்தைச் சரியாகப் பயன் படுத்தவில்லையென்று இப்பொழுது குறை சொல்லப்படுகிறது. கார்ப்பரேஷன் விவகாரம்—ஊரே சிரிக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அது சரித்திரத்திலே முக்கியமான இடம் பெற்றிருக்கிறது. இது எதைக் காட்டுகிறது? அங்கே ஆடிட்டர்கள், லோக்கல் ஃபண்ட் ஆடிட்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தெரியாமல் இவ்வளவு காலம் இது நடந்திருக்க முடியாது. நமக்கு அதிகாரம் வேண்டும், சுயாட்சி வேண்டுமென்று கேட்பதற்கு முன்னால் நம் தகுதிக்கேற்ப, ஏற்றுக்கொள்ளக் கூடியவைகளுக்கேற்ப, காரியங்களை இந்த அரசு செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள ஒன்றிரண்டு அரசியல் ரீதியான பிரச்சினைகளைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே, கல்லூரி ஒன்று ஏற்படுத்துவதற்கான முயற்சி 3 ஆண்டுகளுக்கு முன்னால் ஜில்லா கலெக்டர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அவர் ஒரு கமிட்டி அமைத்து எல்லா காரியங்களையும் செய்தாகிவிட்டது. நிதி திரட்டியாகிவிட்டது. தொழிலாளர்கள் ஒரு நாள் வருமானத்தை அளிக்கவேண்டுமென்று அவர்கள் வருமானத்தையும் அளித்தாகிவிட்டது. வசூலும் முடிந்தாகிவிட்டது. ஆனால் 3 வருஷங்கள் ஆகியும் கலெக்டரோ, மற்றவர்களோ எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், அதற்குப் பின்னாலே, சேலத்திலே ஒரு கல்லூரி வந்துவிட்டது, ஆத்தூரிலே ஒரு கல்லூரி வந்துவிட்டது. இதற்கு அரசியல்தான் காரணமே தவிர, வேறு காரணம் இருக்கமுடியாது என்பது என்னுடைய கருத்து.



அடுத்து, மேட்டூரிலே டவுன்ஷிப் கமிட்டி என்ற ஒன்று இருக்கிறது. அதைக் கலைக்க வேண்டுமென்று வெகு நாளாக எல்லா மக்களும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முன்பு அதற்காக ஒரு மசோதா கொண்டு வந்தேன். பின்னால் அதைப்பற்றி யோசிக்கலாம் என்று சொன்னார்கள். இது சர்க்காரிலே செய்ய வேண்டிய காரியமே அல்ல. வருமானம் இருக்கிறது, ஜனத்தொகை இருக்கிறது, மக்கள் விரும்புகிறார்கள். ஆகவே, அதிலே தடை இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, அந்தப் பிரச்சினையையும் இந்த சந்தர்ப்பத்திலே உங்களுடைய ஞாபகத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1967-லிருந்து ஒரு பிரச்சினையை கொண்டு வந்து கொண்டிருக்கிறேன். அங்கே பாலமலை ஒன்று இருக்கிறது. அங்கே மலைவாசிகள் நடந்துசெல்ல பாதை இல்லை. மலையிலேயிருந்து கீழே மலைவாசிகள் நடந்து வருவதற்கானப் பாதையை போடுங்கள் என்று 1967-லிருந்து ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லி வருகிறேன். அதில் அரசாங்கம் உரிய கவனம் எடுத்துச் செயல்படவில்லை. அரசியல் பார்த்திருக்கிறார்களோ—அதன் காரணமாக, அதை கவனத்தில் எடுத்துக்கொள்ளாமல் இருக்கிறார்களோ என்று நான் சொன்னால், அதில் தவறு ஒன்றும் இருக்கமுடியாது. ஏனென்றால், 1967-லேயிருந்து, 1974 வரை ஆறு, ஏழு வருஷங்கள் ஆகிவிட்டன.

இந்த விஷயங்கள் மட்டுமல்லாமல் ஆளுநர் உரையிலே மேட்டூர் அனல் மின்சார நிலையத்தை மத்திய அரசாங்கம், வேண்டியதில்லையென்ற முறையிலே எடுத்துக்கொள்ளவில்லையென்று கூறப்பட்டிருக்கிறது. அதை வேண்டிய முறையிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அனல் மின்சாரம் வருவது மிகவும் அவசியம் என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சேலம் உருக்காலையை ஆரம்பித்து விரிவுபடுத்துகிறபொழுது, அனல் மின்சார நிலையம் மிகத் தேவையாகும். அதை நிறைவேற்றுகின்ற முறையிலே இந்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையின்மீது என்னுடைய சில கருத்துக்களையும் கூற விரும்புகிறேன்.

இன்று, நம்மை வளர்த்து ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்த அந்தத் துயரத்தை நம்முடைய ஆளுநர் அவர்கள் நமக்கெல்லாம் மிகத் தெளிவாகவும் விளக்கமாகவும் இந்த சட்ட மன்றத்திலே கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அதற்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துள்ளமைக்காக கவர்னர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று நமது அரசு பொறுப்பேற்ற பிறகு, 1967-ல் பொறுப்பேற்ற பிறகு, கிராம மக்களுக்கும், நகர மக்களுக்கும், குடிசை வாழ் மக்களுக்கும் நாம் பல காரியங்களைச் செய்திருக்கிறோம்: கிராமங்களிலே குடிநீர் திட்டத்தை மிகத் தீவிரமாகச் செயல்படுத்தியிருக்கிறோம். அதுபோல், பாமர மக்களுக்குக் கிராமந்தோறும் தெரு விளக்குகளை மிகச் சிறப்பான முறையிலே அமைத்திருக்கிறோம். அதேபோல் மன நிறைவோடு உற்பத்தியைப் பெருக்கி இருக்கிறோம். உற்பத்தியைப் பெருக்கி, நம்முடைய நாட்டுத் தேவைக்குப் போக மீதத்தைக் கூட வெளி மாநிலங்களுக்கு அனுப்பிக்கொண்டு இருக்கிறோம்.

அதே நேரத்தில், உற்பத்தியைப் பெருக்குகிற விவசாயிகளுடைய நிலையை எண்ணிப் பார்க்கும்போது வேதனைக்குரியதாக இருக்கிறது. விவசாயிகளுக்குத் தேவையான உரம், சல்பேட், யூரியா போன்றவைகள் அவ்வளவு சுலபமாகக் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும்கூட, அதிகமான விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. 75 கே.ஜி. நெல் விலை ரூ. 50-லிருந்து ரூ. 60 என்ற அளவிற்கு இருக்கிறது. அதுபோல் ஒரு மூட்டை உரம் வாங்கவேண்டுமென்றால், நெல்லைக் கொடுத்துத்தான் வாங்கவேண்டிய நிலை இருக்கிறது. உரம் கிடைக்கவில்லையென்றால், மத்திய அரசாங்கம் அதற்குப் பொறுப்பேற்க வேண்டியிருந்தாலும் நம்முடைய மாநில அரசு அதைப் பெறுவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டும். ஒரு தொழிலாளிக்கு போனஸ் இல்லையென்றாலும் அல்லது தொழிலிலே குறைந்த அளவு ஊதியம் கிடைக்கிறது என்றாலும், உடனடியாகப் போராட்டம் நடத்திப் பெறமுடிகிறது.

அதுபோல அரசு ஊழியர்கள். அவர்களுக்குப் போதுமான ஊதியம் கிடைக்கவில்லை என்றால் போராட்டம் நடத்தி, அவர்களால் போதுமான ஊதியம் பெறமுடிகிறது.





ஆனால், விவசாயிகளுக்கென்று கோவை மாவட்டத்தில் சங்கம் இருந்தாலுங்கூட; அச்சங்கம் பெரிய மிட்டா மிராசுதாரர்களுக்குச் சொந்தமான சங்கமாக இருக்கிறது. அது சிறிய விவசாயிகளுக்குப் பயன்படவில்லை. ஆக, விவசாயிகளுடைய நிலையை உயர்த்த வேண்டும் என்றால், ஒவ்வொரு மாவட்ட வாரியாகவும் ஒவ்வொரு குழுவை அமைத்து, சிறிய விவசாயிகளைக் கொண்ட குழுவை அமைத்து, ஆண்டுக்கு இரண்டு மூன்று முறை கூடி, அவர்களுக்குரிய கூலியை நிர்ணயித்து, அதற்கு தக்கவாறு அரசு நடந்து கொள்ளுமானால், நிச்சயமாக அது விவசாயிகளுக்குப் பயன் உள்ளதாக இருக்கும்.

நாம் சுதந்திரம் பெற்று 25 ஆண்டுகளானாலும்கூட, கிராமங்களிலே உள்ள அரிசனக் குடிமக்களுக்கு, விடிவில்லாத மக்களுக்கு, உடனடியாக நிலம் கொடுக்க முடியவில்லை. அதற்குப் பல காரணம் சொல்கிறார்கள். ஒரு கோர்ட்டு அல்ல, 3, 4 கோர்ட்டுகளுக்குச் சென்று தடை உத்தரவு பெறப்படுகிறது. 1964-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பில்லுக்குறிச்சி என்ற சேரிக்கு 10 ஆண்டுகள் ஆகியும் கூட நிலம் எடுக்க முடியவில்லை. பல சட்டச் சிக்கல் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் இங்கே முன்பொரு முறை குறிப்பிட்டார்கள். நம்முடைய அரசுச் சட்டமாக இருந்தாலும் அல்லது மத்திய அரசிடம் வற்புறுத்த வேண்டியிருந்தாலும் வற்புறுத்தி சட்டத்தைத் திருத்தவேண்டும். அதற்கு நாம் முன்வரவேண்டும். நீண்ட நெடுங்காலமாக, அரிசன மக்களுக்கு, ஆதித்திராவிட மக்களுக்கு வீட்டுமனைக் கொடுக்கக் கூட முடியவில்லை. அது மிகவும் பரிதாபத்திற்குரியதாகும். ஆகவே, அதைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் வற்புறுத்தி, உணவு உற்பத்தியைப் பெருக்கி விவசாயிகளை ஊக்குவித்தாகவேண்டும். விவசாயிகள் நிலவள வங்கியிலே கடன் கொடுத்தாலும் பெற்றுவிடுகிறார்கள், கூட்டுறவு நாணய சங்கங்களிலேயும் பெற்று விடுகிறார்கள். பெறுகின்றார்களே தவிர, திருப்பிக் கட்ட முடியவில்லை. காரணம், போதிய வருவாய் இருந்தாலும்கூட, அவர்களாலே திருப்பிக்கட்ட முடியாத நிலை ஏற்படுகிறது. ஒரு ஏக்கருக்கு ரூ. 700 செலவாகிறது. ஒரு ஏக்கரிலே வருகின்ற வருமானம் ஆவரேஜாக 20 மூட்டை வருகிறது. மூட்டை ரூ. 50 என்றால், ரூ. 1,000 வருகிறது. ரூ. 700 செலவாகிறது. அது போக நீர்த் தீர்வை. உழுதவன் கணக்கைப் பார்த்தால் உழக்குக்

கூட மீதி இருக்காது என்பார்கள். ஆகவே, விவசாயிகளை ஊக்குவித்தாகவேண்டும். அதற்கு அரசு பொறுப்பேற்று உரம் தருகிறபொழுது, அவர்களுக்குப் பாதி விலையிலே கொடுத்தால்கூட நன்றாக இருக்கும் என்பது என்னுடைய யோசனை. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே என்னுடைய தொகுதியிலே நீண்ட நெடுங்காலமாக காவிரியாற்றிற்குக் குறுக்கே கோவை மாவட்டத்தையும் சேலம் மாவட்டத்தையும் இணைக்கின்ற ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே 1967-க்கு முன்னாலே இருந்த அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி மத்திய அரசுக்குக் கொடுத்து, அதற்கு மத்திய அரசும் ஒப்புதல் அளித்தும்கூட அப்பொழுது அந்த சட்ட மன்ற உறுப்பினர் அதற்குத் தடையாக இருந்ததால் அது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று அறிகிறேன். நம்முடைய அரசு அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே நகரத்தின் குறுக்கே சரபங்கா நதி என்ற நதி ஓடுகிறது. அந்த நதியைச் சீர்திருத்தம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசாங்கம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எடப்பாடி தொகுதியில் ஒரு மருத்துவ மனை இருக்கிறது, அங்கே ஒரு பெண் டாக்டர் வேண்டுமென்று பலமுறைகள் நான் சொல்லியிருக்கிறேன். ஒரு பெண் டாக்டர் அங்கே போடப்பட்டு அவர்கள் விடுமுறையிலே சென்று விட்டார்கள். இப்பொழுது அங்கே பெண் டாக்டரே கிடையாது, ஆகவே அதையும் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய கிராமங்களுக்கு பஸ் வசதிகள் கிடையாது. அங்கேயெல்லாம் பஸ் வசதிகள் தேவையென்பது ஒன்று. சிறு கிராமங்களுக்குப் பாதை சரியாக இல்லை. அதனால் அங்கே பஸ்விட முடியாத நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே சிறிய பாதைகளாக இருந்தால் அந்தப் பாதைகளில் மினி பஸ்கள் விடுவதற்கும், ஒரு பஸ்ஸிலே 20 அல்லது 30 பிரயாணிகள் பயணம் செய்தால்கூட போதும், அந்த அளவிற்கு சிறு பஸ்களை விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



சேலத்திற்கு ஒரு விமான தளம் தேவைப்படுகிறது என்று ஒரு மத்திய அமைச்சர் கருத்துத் தெரிவித்தார். நாடுகள் முன்னேறிக் கொண்டிருக்கின்ற நேரத்திலே சேலத்திற்கு இரும்பாலை வருகின்ற நிலையிலே அங்கே ஒரு விமான தளம் அவசியமாக தேவைப்படுகிறது. ஆகவே நம்முடைய அரசு மத்திய அரசிற்கு எடுத்துச் சொல்லி, அங்கே ஒரு விமான தளத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறிய சிறிய பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன, அவற்றிற்கு நிதி வசதிகள் போதுமானதாக இல்லை. அதனால் அவை குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்ற முடியவில்லை. அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு குடிநீர் அதன் காரணமாகக் கிடைக்கவில்லை. அந்தப் பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் அந்தப் பஞ்சாயத்துகள் பாதித் தொகையைக் கொடுத்தால்தான் குடிநீர்த் திட்டம் வரும் என்ற நிலைமை இருக்கின்றது, அப்படியில்லாமல் அரசாங்கமே அப்படிப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு முழுத் தொகையையும் மானியமாகக் கொடுத்து, குடிநீர் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே பல பகுதிகளிலே சிறிய நீர்த்தேக்கங்கள் வேண்டுமென்று பலமுறைகள் நான் எடுத்துரைத்திருக்கிறேன். இப்பொழுது ஒரு நீர்த்தேக்கம் கட்டிக்கொடுக்கப்படுகின்ற நிலையில் ஒரு ஆண்டுக்காலமாக அந்த வேலை நிறுத்திவைக்கப்பட்டது, காரணம் மதிப்பீடுகளில் தவறுகள் ஏற்பட்டுவிட்டன என்று சொல்லப்படுகிறது. எனவே அதைக் கவனித்து உடனடியாக அதைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சாயம்பாளையத்தையும் புதுப்பாளையத்தையும் இணைக்கவேண்டுமென்ற கோரிக்கை அந்தப் பகுதி மக்களிடமிருந்து வந்துகொண்டிருக்கின்றது. அதையும் நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே போல் நல்ல பல திட்டங்களை இந்த அரசு செய்துகொண்டிருந்தாலும்கூட மாற்றுக்கட்சிக்காரர்கள் தவறான கருத்துக்களை மக்கள் மத்தியிலே எடுத்துச்சொல்லி கெட்ட பெயர் ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள். நம்முடைய அரசு ஏழை நடுத்தர மக்களுக்கு உதவி செய்வதைப் போல் விவசாய மக்களுக்கும் உதவிகளைச் செய்

[திரு. அ. ஆறுமுகம்] [1974 சனவரி 22

வதைப்போல் விவசாய மக்களுக்கும் உதவிகளைச் செய்ய வேண்டும்,. விவசாயிகளை ஊக்குவித்தால்தான் உற்பத்தியைப் பெருக்கமுடியும், விவசாயிகள் உள்ளம் பூரித்தால்தான் நாட்டிலே உணவு உற்பத்தியைப் பெருக்கமுடியும். ஆகவே அதிலேயும் நம்முடைய அரசு கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரம் பகலிலே ஒரு வாரமும், இரவிலே ஒரு வாரமும் கொடுக்கப்படுகிறது. இரவு நேரத்திலே விவசாயிகளுக்குக் கொடுத்தால் அவர்கள் தோட்டங்களுக்குச் சென்று விவசாயம் செய்ய முடியவில்லை, சில நேரங்களிலே ஆபத்து ஏற்படுகிறது. ஆகவே தொழிற்சாலைகளுக்கு இரவு நேரங்களிலே மின்சாரத்தைக் கொடுத்துவிட்டு, பகலிலே விவசாயிகளுக்கு மின்சாரத்தைக் கொடுத்தால் பயனுடையதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அளவிற்கு கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நான் கொடுத்திருக்கின்ற திருத்தத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக நாட்டிலே பெரும்பகுதி மக்களாக இருக்கின்ற விவசாயிகளுக்கு ஏற்பட்டு இருக்கக்கூடிய நெருக்கடியைப்பற்றி இந்த உரையிலே சொல்லப்படவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். அடுத்து, பெரிய ஜனத்தொகையாக உள்ள நெசவாளர்கள் ஈடுபடும் கைத்தறி நெசவுத் தொழிலைப்பற்றியும் இதிலே ஒன்றும் சொல்லப்படவில்லை. எனக்கு முன்னாலே பேசிய திரு. ஆறுமுகம் அவர்கள் விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைப்பற்றிச் சொன்னார்கள். விவசாயிகள் அரசாங்கத்தின் தீவிரப் பிரச்சாரத்தை நம்பி வீரிய வித்துக்களை விதைத்து விட்டு உரம் கிடைக்காமல் அல்லல்பட்டு ஒரு மூட்டை உரத்திற்கு நான்கைந்து



1974 சனவரி 22] [திரு. சோ. அழகர்சாமி]

மூட்டை விலையைக் கொடுத்தால்கூட உரம் கிடைக்காமல் கள்ள மார்க்கட்டிலே அந்த விலைகொடுத்து வாங்குவதற்கு சக்தியில்லாமல் பயிர்கள் கெட்டுவிட்டன.

அமைச்சர் அவர்கள் கொஞ்ச நேரத்திற்கு முன்பு சொன்னார்கள் மின்சார வெட்டைப்பற்றி. கரும்புக்கு நியாய விலைக்காக விவசாயிகள் கிளர்ச்சி செய்துகொண்டிருக்கிறார்கள். உரம் கிடைக்காததற்குக் காரணம் பற்றி ஆளுநர் உரையிலே சொல்லப் பட்டிருக்கிறது என்னவென்றால், 3.15 லட்சம் டன் நைட்ரஜன் தேவை என்றும் 2.3 லட்சம் டன்கள்தான் விநியோகிக்கப் பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் 75 சதவிகிதம் வந்திருக்கிறது. ஒருவனுக்கு 10 மூட்டை தேவையென்றால் 7 மூட்டைதான் கிடைத்திருக்க வேண்டும். இந்த அளவு கிடைக்கும் முறையில் விநியோகம் நடந்துள்ளதா? 60 ரூபாய்க்கு விற்க வேண்டிய உரம் 160 ரூபாய், 170 ரூபாய்க்கு விற்கிறது என்றால் அதைக் கண்டுபிடிக்க, தண்டிக்க உங்களுக்கு அதிகாரம் இல்லையா? அல்லது எண்ணம் இல்லையா? எண்ணம் இல்லை என்றுதான் சொல்லவேண்டும், அதிகாரம் இல்லையென்று சொல்ல முடியாது. யார் யார் என்ன என்ன செய்தார்கள் என்று எல்லாம் பார்த்து கேஸ்களைப் போடுகிறார்கள். எங்களுடைய தலைவர் கே. டி. கே. அவர்கள் ஏதோ பேசினார்கள் என்பதற்காக இங்கேயிருந்து வெளியே போனவுடனே பிடித்துக்கொண்டு போன போலீஸுக்கு, 50 ரூபாய்க்கு விற்கவேண்டிய உரம் 150, 160 ரூபாய்க்கு விற்கிறது என்றால் அதைப் பிடிக்கக்கூடிய எண்ணம் இல்லை. உங்களிடம் போலீஸ் இல்லையா? ஏன் அவர்களை பிடிக்கவில்லை? என்ன காரணம்? கொள்ளை அடிக்கக்கூடியவர்களைத் தடுக்கவேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை.

(திரு. கு. காமாட்சி—தலைமை)

அதேபோன்றுதான் கரும்புக்கு அதிகமாக விலை கொடுக்க இந்த அரசு முன்வரவில்லை. மத்திய அரசு ஒரு விலை நிர்ணயம் செய்திருந்தாலும் அவர்கள் குறைந்தபட்சம் 80 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள் என்றால் மாநில அரசு விவசாயிகளுக்குக் கட்டுபடியாகக்கூடிய விலையைத்தான் ஆலை முதலாளிகள் கொடுக்க வேண்டுமென்று இப்பொழுது உள்ள விதிகளின் பிரகாரம் ஏன் செய்யக்கூடாது. அப்படி மில் முதலாளிகள் செய்யாவிட்டால் அந்த ஆலைகளை தேசியமயமாக்கிவிடுவோம் என்று ஏன் சொல்லக்

கூடாது? சர்க்கரை ஆலை முதலாளிகள் ஏற்கெனவே கோடி கோடியாக சம்பாதித்து விட்டார்கள். அதைப்பற்றிய கணக்குகூட என்னிடம் ஒன்றிரண்டு இருக்கிறது. பல லட்சக்கணக்கான ரூபாய்களை அவர்கள் சம்பாதித்துவிட்டார்கள். அதிகமான விலை கொடுக்கச் சொல்லக்கூடிய அதிகாரம் இந்த அரசாங்கத்திற்கு உண்டா இல்லையா?

உத்திரப்பிரதேசத்திலே டன்னுக்கு 135 ரூபாய் கொடுக்கிறார்களே, இதே விதிகளை வைத்துக்கொண்டுதானே கொடுக்கிறார்கள், நீங்கள் ஏன் கொடுக்கச் செய்யக்கூடாது? ஆலைமுதலாளிகள் கொள்ளையடிப்பதற்கு அனுசரணையாக கொள்கையை வைத்திருக்கிறீர்கள். சென்ற ஆண்டு அவர்கள் கொள்ளையடித்து லாபம் சம்பாதித்துவிட்டார்கள். வெளி மார்க்கட்டிலே 30 சதவீதம் விற்கலாம் என்றால் அதிலே நல்ல லாபம் சம்பாதித்து விட்டார்கள். 70 சதவிகிதம் கன்ட்ரோல் விலைக்கு கொடுத்த நிலையிலேயும் அவர்கள் அடித்த லாபம் கொஞ்ச நஞ்சம் அல்ல, அது அமைச்சர் அவர்களுக்கும் செரியும். கரும்பு உற்பத்தியாளர்களுக்கு அதிகமான விலையைக் கொடுக்கச் சொல்வதற்கு ஏன் உங்களுக்கு எண்ணம் இல்லை?

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** கரும்புக்கு அதிகமான விலையைத் தரச்சொல்லி வற்புறுத்துவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது, வேண்டுமானால் சிபாரிசு செய்யலாம், வற்புறுத்துவதற்கு அதிகாரம் கிடையாது. அந்த ஸ்டேச்சுட்டரி பவர் இல்லை. ஆனால் சர்க்கரை ஆலை முதலாளிகள் கொடுக்கவேண்டும், அப்படி கொடுக்காவிட்டால் தேசியமயமாக்கி விடுவோம் என்று பயமுறுத்துவதற்கு நம்முடைய அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஒரு விளக்கம். அவர்கள் சொன்ன தகவலின்படி, மத்திய சர்க்கார் குறைந்த பட்ச விலையை ஃபிக்ஸ் பண்ணுகிறார்கள். 85 ரூபாய் என்று ஃபிக்ஸ் பண்ணுகிறார்கள் என்றால் பல மாநிலங்களில் அவர்கள் நிர்ணயித்ததை விட அதிக விலை கொடுக்கப்படுகிறது. அப்படி என் இந்த மாநிலத்திலும் கொடுக்கக்கூடாதா? அதற்கு உங்களுக்கு மனம் வரவில்லை. ஐந்து ரூபாய் என்ன அதிகம் கொடுப்பது? பிற மாநிலங்களில்





கொடுப்பதைப்போல கொடுங்களேன். மத்திய சர்க்கார் குறைந்த பட்ச விலையைத்தான் நிர்ணயிக்கிறார்களே தவிர அதிக பட்சத்தை நிர்ணயிக்கவில்லை. ஏன் நீங்கள் அதிகபட்சமாகக் கொடுக்கவில்லை? உங்களுக்கு மனமில்லை என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவரவர்களே, மத்திய அரசு 'எசன்ஷியல் கமாடிட்டீஸ் ஆக்ட்'-இன் கீழ் கரும்புக்கு 1 டன்னுக்கு 80 ரூபாய் கொடுங்கள் என்று சொன்னதற்குப் பிறகு கூட மாநில அரசு கொஞ்சம் துணிச்சலோடு 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையில் அதிகமாகக் கொடுக்கும்படி வற்புறுத்துகிறது. இன்னும் அதிகமாகக் கொடுக்கச் சொல்ல முடியும். ஏற்கெனவே ஒருமுறை விளக்கியாகிவிட்டது. ஏறத்தாழ பஞ்சாபில் மத்திய அரசு சர்க்கரையை 195 ரூபாய்க்கு வாங்குகிறது, ஆனால் நம் மாநிலத்தில் 155 ரூபாய்க்குத்தான் வாங்குகிறார்கள். எவ்வளவு வாங்குகிறார்கள் என்றால் 3 இலட்சம் டன், 30 இலட்சம் குவிண்டால் வாங்குகிறார்கள். பஞ்சாப் அரசோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சுமார் 12 கோடி ரூபாய் குறைவாக இருக்கிறது இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று நாம் விரும்பினாலும் உடனடியாக வற்புறுத்த முடியவில்லை. ஆனால் மத்திய சர்க்கார் நம் மாநிலத்திலிருந்து வேறு மாநிலங்களுக்குக் கொண்டு போகும் இந்த சர்க்கரைக்கு, எப்படி பஞ்சாபிற்குக் கொடுக்கிறார்களோ அதைப்போல் நமக்கும் கொடுக்கக்கூடாதா என்று வற்புறுத்திக் கேட்பதாக இருக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மத்திய சர்க்காரை ஏன் கெஞ்சிக் கேட்க வேண்டும்? சண்டை போடுங்களேன், எங்களுக்கும் 195 ரூபாய் கொடுங்கள் என்று. நீங்கள் ஏமாந்து விட்டுவிட்டு விவசாயிகளுக்குப் பணம் கொடுக்க மாட்டேன் என்றால் எப்படி?

**திரு. சோ. அழகர்சாமி:** விளக்கம் கூறிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும், அமைச்சரவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த ஆலைகளை விவசாயிகளுக்கு அதிகமாகக் கொடுக்கச் சொல்லி வற்புறுத்தி விலை நிர்ணயம் செய்யும் அதிகாரம் இல்லை என்று சொன்னாலும்கூட, உற்பத்திச் செலவு அதிகமாகியிருக்கிறது, உரத்திற்கும் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில்

[திரு. சோ. அழகர்சாமி] [1974 சனவரி 22

விலை அதிகம், மற்றபடி எல்லாச் செலவினங்களும் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டில் அதிகமாகியிருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டைவிட குறைந்த விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. உத்தரப் பிரதேசத்திலே இதே அதிகாரத்தை வைத்துக்கொண்டு 135 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அப்படிக் கொடுக்க மறுத்தால் நாங்கள் தேசிய உடைமையாக ஆக்கப் போகிறோம் என்று பயமுறுத்தியிருக்கிறார்கள். இவ்வளவு ரூபாய் லாபம் வந்திருக்கிறது.

அது மட்டுமல்ல. அவர்கள் ரிபேட் வாங்குகிறார்கள். அதை அந்த ஆலை முதலாளிகள் லாபமாக வைத்துக் கொள்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு அதிகமாகக் கொடுங்கள், இல்லையென்றால் சர்க்கரை ஆலைகளை நாங்கள் எடுத்து நடத்தப் போகிறோம் என்று நீங்கள் சொல்வதற்கு என்ன தயக்கம் என்று கேட்க விரும்புகிறேன். ஏன் உங்களுக்குப் பயம் வருகிறது, ஆலை முதலாளிகள் உங்களுக்கு வேண்டியவர்களாக இருப்பதால்தான். ஏன் அவைகளை தைரியமாக எடுக்கக்கூடாது, சர்க்காரே எடுத்து நடத்தினால் அதிக வருமானம் வரும். ஆகவே, கரும்பு சம்பந்தப்பட்ட வரையில் விவசாயிகளுக்கு பாரபட்சமாக, அனுசரணையில்லாத முறையில், அதே நேரத்தில் ஆலை அதிபர்களுக்கு அனுசரணையாக நடக்கிறீர்கள். அப்படியில்லாமல் விவசாயிகளுக்கு உரிய பங்கைப் பெற்றுத் தருவதிலே உரிய கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இன்றைக்கு மின் வெட்டைப் பற்றி எடுத்துக் கொண்டால் விவசாயிகளுக்கு மின் வெட்டு இல்லை என்று சொன்னார்கள். தொழில்களுக்கு 75 சதவிகிதம் வெட்டு என்று சொன்னார்கள். ஆனால் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகளிலே கிடைக்கும் லாபத்திலே பங்கு கொடுக்க வேண்டியது நியாயம். எவ்வளவு கொடுக்கலாம் என்று சொல்லுங்கள். லாபத்தை நிர்ணயித்த பிறகு விவசாயிகளுக்குக் கொடுக்கும் லாபத்தில் எவ்வளவு கொடுக்க வேண்டும்? அதேபோல் ஆலைக்கு எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று உங்கள் கருத்தைச் சொன்னால் முடிவு சொல்ல வாய்ப்பாக இருக்கும்.



1974 சனவரி 22]

**திரு. சோ. அழகர்சாமி :** அது கூட்டுறவு ஆலை அதிபர்களும், விவசாயிகளும் பேசி முடிவு செய்து கொள்ள வேண்டிய விஷயம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் தனியாரே நடத்தக் கூடாது. தனியார் நடத்தும் ஆலைகளை எல்லாம் எடுத்து அரசாங்கமே நடத்த வேண்டும். தனியாரிடம் விட்டு விட்டு பிச்சை வாங்குவது போல் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றுதான் கூறுகிறேன்.

அடுத்து, சென்ற காலத்திலே விவசாயிகளுக்கு மின்வெட்டு இல்லை என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு 6 மணி நேரம் தான் மின்சாரம் வழங்கப்பட்டது. அப்படிப் பார்க்கும்பொழுது நடைமுறையில் 75 சதவிகித மின்வெட்டு என்றுதானே அர்த்தம்? ஆனால் அதே நேரத்தில் 75 சதம் மின் வெட்டு என்று சொல்லியும் பல தொழிற்சாலைகள் ஓடிக் கொண்டேயிருந்தன. எனவே மின் வெட்டு விவசாயிகளுக்கு இல்லை என்பது இருந்தாலும் நடைமுறையிலே 4 மணி நேரம், 2 மணி நேரம் என்று மின்சாரம் கொடுத்ததால் நடைமுறையிலே மின் வெட்டால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனால் விவசாயிகள் நஷ்டத்திற்குள்ளாகியிருக்கிறார்கள்.

அடுத்து, உலக பாங்கிடமிருந்து கடன் வாங்கி 30,000 பம்பு செட்டுகளை செங்கற்பட்டு மாவட்டம், சேலம் மாவட்டம், தர்மபுரி மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் பொருத்தப்பட்டன. அவைகளுக்கு மின் இணைப்புக் கிடைக்காமல் அங்கே வாங்கி வைத்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக, உலக பாங்கில், உபகரணங்களை வாங்குவதற்காக 8 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன். அது என்ன ஆயிற்று? பம்பு செட்டுகள் வழங்கப்பட்டவர்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கவில்லை. ஆனால் பம்பு செட்டுகளை வாங்கிய கடனுக்காக ஜப்தியாக பம்பு செட்டுகளையே ஜப்தி செய்யும் நிலைமை இருக்கிறது. சர்டிபிகேட் வாங்கிப் பொருத்திய பிறகு கடனுக்காக ஜப்தியாகப் போகும் நிலைமை இருக்கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) :** இன்று 5 உறுப்பினர்கள் பேச வேண்டும். 35 நிமிடங்கள்தான் இருக்கின்றன.

**திரு. சோ. அழகர்சாமி:** கடைசியாக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகிறேன். மக்களுக்கு அத்தியாவசியமான பொருள்களை விநியோகிப்பதில் இந்த அரசு சரியான நடைமுறைகளை மேற்கொள்ளவில்லை. நெல்லுக்குக் கொள்முதல் விலை 70 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை முழுவதும் அரசாங்கமே கொள்முதல் செய்து விநியோகம் செய்ய வேண்டும். அப்படிச் செய்வதற்குப் பதிலாக வியாபாரிகளைக் கொள்முதல் செய்யச் சொல்லிவிட்டு அவர்களிடமிருந்து 25 சதவிகிதம் லெவி மட்டும் வாங்குவதால், மீதியை அவர்கள் என்ன விலைக்கு வேண்டுமானாலும் விற்க அனுமதிப்பதால் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடிக்க வசதியாக இருக்கிறது. 100 மூட்டை கொள்முதல் செய்கின்ற ஒருவர் 25 மூட்டைகளை மட்டும் நியாயமான விலைக்குக் கொடுத்துவிட்டு மீதி மூட்டைகளை அதிக விலைக்குக் கொடுக்கிறார். அந்த நிலை மாற வேண்டும். எனவே அரசாங்கமே சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாகவோ அல்லது ஃபுட் கார்ப்பரேஷன் மூலமாகவோ கொள்முதல் செய்ய வேண்டும், அவர்களே நேரடியாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற கொள்கையை அரசு கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அடுத்து, இங்கே தேசியத் தலைவர்களுக்கு அவமதிப்பு ஏற்படுத்தும் நிலைமை ஏற்பட்டுள்ளது. தேசியக் கவி பாரதியாரின் சிலையின் கையை உடைத்திருக்கிறார்கள், அதேபோல் காந்திஜியின் சிலைக்கு அவமதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இம்மாதிரியான மோசமான சம்பவங்கள் ஏற்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதில் சர்க்கார் கண்காணிப்போடு இல்லை என்று தெரிகிறது.

அடுத்து ஒரு விஷயம். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூறிவிட்டார்கள். அதேபோல் பெண்ணையாற்றில் வெள்ளம் வந்து 13,000 அரிசி மூட்டைகளைக் கொண்டுபோய்விட்டது என்று ஒரு பெரிய ஊழல். 14,000 சாக்குகளையும் காணோம் என்று சொல்லப்படுகிறது. அப்படி ஊழல் புகார்களைக் கொடுத்தவர்களைப் பாராட்டி, அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டியிருக்க, அதை வெளியிட்டவர்களையே அடித்து நொறுக்கி, அவர்கள்மேல் ரௌடிகளை ஏவிவிட்டிருக்கிறார்கள். போலீசில் புகார் செய்தும் பாதுகாப்பு இல்லை. குற்றவாளிகளைக் கைது செய்யவும் இல்லை.



திருக்கோயிலூரிலே நடந்திருக்கிறது. இம்மாதிரி 7 லட்சம் 8 லட்சம் ரூபாய் அளவில் சர்க்கார் சொத்து அபகரிக்கப்படுகிறது என்று தகவல் கொடுப்பதற்கு ரிவார்ட் கொடுக்கவில்லை என்றாலும் கூட அவர்களுக்குப் போதிய பாதுகாப்பும் கொடுக்கப்படவில்லை. அவர்கள் கொடுத்த கேசில் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அவர்கள் சொல்லும் அந்தத் திருக்கோயிலூர் பிரச்னை சம்பந்தமாக கிட்டத்தட்ட நான்கைந்து மாதங்களாகப் பரிசோதனை செய்துகொண்டிருக்கிறார்கள். நடவடிக்கை எடுப்பதற்கு ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. எனவே யார் யாரோ அடித்துக் கொள்வதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அதை இதிலே சேர்த்துப் பேச வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** யார் யாரோ அடித்துக்கொள்ளவில்லை. அரசாங்கத்தின் கொள்முதல் ஏஜண்ட் 7 இலட்சம் ரூபாய் மோசடி செய்து விட்டார் என்று கூட்டம் போட்டுப் பேசியிருக்கிறார்கள். அதற்காக அடி. யார் யாருக்கோ நடந்த அடி அல்ல. (மணியடிக்கப்பட்டது)

(பிற்பகல் 1-00)

**திரு. இ. இராமசாமி:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்காக மகிழ்ச்சியடைகிறேன்.

ஆளுநர் அவர்கள் உரையின் தொடக்கத்தில் இந்த நாட்டில் இருக்கின்ற மூடப் பழக்க வழக்கங்களை ஒழிக்கவும், தொட்டால் தீட்டு என்று சொல்லப்படுகின்ற தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும் பாடுபட்டு வந்த, தன்னுடைய வாழ்நாள் முழுவதும் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டு வந்த தந்தை பெரியார் அவர்கள் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி ஆரம்பித்தார்கள். அந்த அஞ்சலியில் என்னுடைய அஞ்சலியையும் இணைத்துக்கொள்கிறேன்.

இந்த நாட்டுக்குத் தேவையான நல்ல பல அம்சங்களையும், திட்டங்களையும் ஆளுநர் அவர்கள் உரையில் காண்கிறோம். தமிழக அரசு பொறுப்பேற்ற பின்னல் மலைப் பகுதிகளிலே கடல் மட்டத்தி

லிருந்து ஆயிரம் மீட்டருக்கு மேல் உள்ள மலைப் பகுதிகளிலே இருக்கும் அரசுப் பணியாளருக்கு குளிர்காலப் படி கொடுக்க வேண்டுமென்ற முடிவை நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் எடுத்தது. பல்வேறு துறைகளில் இருக்கும் அரசு ஊழியர்கள் அதை அனுபவித்து வருகிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வால்பாறை அரசு உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியர் குளிர்காலப் படி பெற்றாலும் மற்ற ஆசிரியர்களுக்கு அது கிடைக்கவில்லை. அதேபோன்று அரிசன நலப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இந்தப் படி கிடைக்கவில்லை. இதை அரசு கவனத்தில் கொண்டு அவர்களுக்கும் குளிர்காலப் படி கிடைக்கும் வகையில் உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோவையில் இருக்கும் கல்வி அதிகாரியை இதுபற்றிக் கேட்டபோது சென்னையில் இயக்குநர் அவர்களுக்கு எழுதியிருப்பதாகக் கூறினார்கள். இயக்குநர் அலுவலகத்தில் கேட்டால் கவர்ன்மெண்டுக்கு அனுப்பி இருப்பதாகச் சொன்னார்கள். தயவு கூர்ந்து இதனை அந்த ஆசிரியர்களுக்கும் கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரியானாலும், வால்பாறையானாலும் தேயிலைத் தோட்டப் பகுதிகளில் தனியார் தோட்ட நிர்வாகத்தைச் சேர்ந்த பள்ளிகளில் பணி புரிபவர்களுக்கான சலுகைகள் அத்தனையும் அவர்கள் அளிக்க வேண்டும். பிளாண்டேஷன் சட்டப்படி அவர்கள் அளித்தாக வேண்டும். ஆனால் வால்பாறையில் பணி புரிகின்ற ஆசிரியர்களுக்கு எவ்விதச் சலுகைகளும் அளிக்கப்படவில்லை. மருத்துவ வசதிகூட அளிக்கப்படவில்லை. ஒரு ஆசிரியர் கேஸ் போட்டார். சாதகமான தீர்ப்பு கிடைத்திருக்கிறது. சட்ட அடிப்படையில் இவர்களுக்கு இந்தச் சலுகைகளை அளிக்க வேண்டுமென்ற நிலை இருப்பதால் சாதகமான தீர்ப்புக் கொடுக்கும்கூட மானேஜ்மெண்டார் அதை நிறைவேற்றாமலே இருந்து வருகிறார்கள். ஆகவே, மானேஜ்மெண்டாரைப் பணிய வைக்கும் வகையில் அதற்கான உத்தரவுகளை அரசாங்கம் பிறப்பிக்க வேண்டும்.



பிளாண்டேஷன் அட்வைசரி கமிட்டிக் கூட்டத்தில் தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு மின் விளக்குக் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. தோட்ட நிர்வாகிகளும், தொழிற்சங்கத் தலைவர்களும், அரசு தரப்பு அமைச்சரும் கூடிய முக்கூட்டுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு அந்த முடிவு. அது நீலகிரி மலையில் செயல்பட்டு வருகிறது, ஆனால் வால்பாறையில் ஆரம்ப வேலையைக்கூட மானேஜ்மெண்டார் செய்யவில்லை. ஆகவே, வால்பாறையில் பணிபுரிகின்ற தோட்டத் தொழிலாளர்கள் வீடுகள் மின்விளக்குப் பெற வேண்டிய நடவடிக்கைகளை விரைவில் அரசு மேற்கொள்ள வேண்டும்.

வேட்டைக்காரன்புதூர், கலியபுரம், சாமிநாதபுரம் ஊர்களில் வாழும் அரிசன மக்களுக்கு அந்தப் பகுதியில் புறம்போக்கு இல்லாத காரணத்தால் வீடு கட்டும் மனை வழங்கப்படாமலே இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களிடமிருந்து நிலத்தை அக்வைர் செய்ய அதிகாரிகள் எடுத்த நடவடிக்கை முடங்கிக் கிடக்கிறது. இதிலே உடனடியாக நடவடிக்கை எடுத்து வீடு கட்ட நிலத்தை அக்வைர் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கலியபுரம் மாமரத்துப் பகுதி என்ற இடத்தில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த மக்களுக்கு பட்டா கொடுக்கவில்லை. சாமிநாத புரத்திலும் அரிசனக் காலனியில் 30 வருஷகாலமாகக் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கும் பட்டா கொடுக்கவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரையும், வருவாய்த் துறை அதிகாரிகளையும் அணுகிக் கேட்டோம். கொடுக்கலாம் என்று கேட்கும்போது சொல்லுவார்களே தவிர, இதுவரை கொடுக்கவில்லை. ஆகவே, உடனடியாக அவர்கள் இருக்கும் வீட்டு மனைக்குப் பட்டா வழங்குமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப் பல்வேறு பணிகள் நடைமுறைக்கு வராமல் இருக்கும் காரணத்தால் விரைவாக நடவடிக்கை எடுத்துச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வால்பாறை ஒரு லட்சம் மக்கள் வாழும் பகுதி. நாடு ஆளுநர் அவர்கள் வருகை தந்தபோது இவ்வளவு பெரிய ஊரில் ஒரு கல்லூரி இல்லை என்று எடுத்துச் சொன்ன பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரும் பொதுமக்களும் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின்

பேரில் ஐந்து லட்சம் ரூபாய் அரசாங்கத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கல்லூரியை விரைவாகத் திறக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் ஆசியாவிலேயே முதன்மையான திட்டம் என்று சொல்லும் அளவுக்கு காடம்பாறை மின்நிலையத் திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நீராறு திட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து கொண்டிருந்தன. திடீரென்று வேலை நிறுத்தப்பட்டிருக்கிறது, ஏன் நிறுத்தப்பட்டது என்று புரியவில்லை. நீராறு அணைக்கட்டுத் திட்டம் முடிந்தால் மின்சாரமும் கிடைக்கும், நீர்ப்பாசனத்திற்கும் போதிய அளவு தண்ணீர் கிடைக்கும். கேரள அரசு தடை விதித்து விட்டதா என்று புரியவில்லை. அப்படி ஏதாவது இருந்தால்கூட மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் இதிலே தலையிட்டு கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி அந்த வேலையை விரைவாக முடித்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொண்டு கவர்னர் உரையை வரவேற்று இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. ஆ. கு. சுப்பையா:** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் தன்னுடைய உரையில் மறைந்த தந்தை பெரியார் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் பல விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்கள் தேசியத் தலைவர் மட்டுமல்லாமல் நம்முடைய நாட்டிலே கண்மூடித்தனமான பத்தாம்பசலிப் பழக்கவழக்கங்களைத் தீவிரமாக எதிர்த்து, ஜாதிக் கொடுமைகளை எதிர்த்து அஞ்சா நெஞ்சத்துடன் போராடிய கர்மவீரரை நாம் இழந்திருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய நாட்டில் பெரிய அணைக்கட்டுகளைக் கட்டி தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தும் வேலைகள் எல்லாம் செய்து முடித்தாகி விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள்.





இனிமேல் சிறு சிறு அணைகள் கட்டுவது, குளங்கள், ஏரிகள் மராமத்து செய்வது கிணறுகள் வெட்டுவது மூலம் பாசன வசதி செய்து விவசாய அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பூமிக்கடியில் ஓடுகின்ற தண்ணீரை வெளியே கொண்டு வருகின்ற முறையில் அரசாங்கம் திட்டமிட வேண்டும். ஐக்கிய நாட்டுச் சபையைச் சேர்ந்தவர்கள் நம்முடைய மாநிலத்தில் பூமிக்கடியில் ஓடுகின்ற தண்ணீரை எடுப்பதற்கு ஆராய்ச்சி நடத்தியபோது தஞ்சை மாவட்டத்தில் கடற்கரை ஓரமாக இருக்கும் பகுதிகளில் பூமிக்கடியில் இருந்து தண்ணீரை எடுத்தால் உப்புத் தண்ணீராக இருக்குமென்று முடிவு செய்து அந்தப் பிரதேசங்களை எல்லாம் ஒதுக்கியிருக்கிறார்கள்.

அவ்வாறு ஒதுக்கியிருப்பதை மறுபரிசீலனை செய்தாவது அல்லது அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை என்றால் நம் அரசே சர்க்கார் நிதியிலிருந்து 48 அடி, 50 அடி ஆழமுள்ள குழாய்க் கிணறுகளை வெட்டி அந்தத் தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்தமுடியும். கடற்கரைப் பிரதேசத்திலுள்ள மேட்டு நிலங்கள், விவசாயத்திற்கு லாயக்கான நிலங்கள் பாசன வசதி இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அவற்றிற்கெல்லாம் பாசன வசதிகள் செய்து கொடுக்கக்கூடிய அளவில் அரசாங்கம் ஆலோசனை செய்து அந்த முயற்சியில் ஈடுபடுவதன் மூலம் தஞ்சை மாவட்டத்தில் இன்னும் லட்சக்கணக்கான நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முடியும். அதையும் அரசாங்கம் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு கூறியது பிரகாரம் 74 லட்சம் டன் உற்பத்தி இன்றையதினம் எதிர்பார்ப்பது மிக அபாயமான ஒரு நிலையில் இருப்பதாக கவர்னர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதற்குக் காரணம், நமக்குத் தேவையான உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் இவை காலத்தில் கிடைக்காதது மாத்திரமல்ல, மிகக் குறைவாகக் கிடைத்ததன் காரணமாக இம்மாதிரியான ஒரு குறைவு ஏற்பட்டிருக்கிறது என்று கவர்னர் அவர்கள் தம் உரையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனது ஆலோசனை, தமிழகத்தில் நெய்வேலியில் தயார் செய்யக்கூடிய உரங்கள் அனைத்தும் தமிழ் நாட்டின்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 சனவரி 22

தேவைக்குப் போக உபரி இருந்தால் மற்ற ராஜ்யங்களுக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு நிலையினை நம் அரசு ஏற்படுத்த வேண்டும். அவ்வாறு ஏற்படுத்துவதன் மூலமாகத்தான் தேவையான உரத்தை நம் விவசாயிகளுக்குக் கொடுத்து உதவி செய்ய முடியும்.

அதேபோல் இன்னும் அதிகப்படியான அளவில் உரங்கள் தயாரிக்கக்கூடிய வகையில் அரசு திட்டமிட்டு அதிகப்படியான உரத் தயாரிப்புத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும். அதேபோல் பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைக்காததால் இந்த ஆண்டு லட்சக்கணக்கான எக்கர் நிலங்கள் பூச்சியால் பாதிக்கப்பட்டு விவசாயம் சேதமடைந்திருக்கிறது. வேறு ஒரு வியாதி—நுரை வியாதி என்று சொல்கிறார்கள்—காரணமாக ஒரு போக சம்பாப் பயிர் பாதிக்கப்பட்டு அதன் காரணமாக விவசாயிகள் குத்தகை அளிக்க முடியாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் நான் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். குத்தகை விவசாயிகள் குத்தகை அளிக்க முடியாத ஒரு நிலை ஏற்படுமானால் சட்டப்படி அவர்களை எல்லாம் வெளியேற்றி விடுவார்கள். அப்படி பெரியதொரு அபாயமான நிலைமை தமிழகத்தில் ஏற்படும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தமாதிரியான பாதகங்கள் ஏற்படுகிற காலத்தில் விவசாயிகளுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை என்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்காக பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தை தமிழகத்தில் விவசாயிகளுக்காகக் கொண்டு வந்தாக வேண்டும். மற்றவைகளுக் கெல்லாம் இன்ஷ்யூரன்ஸ் வைத்திருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாகத்தான் விவசாயிகளுக்கு திடீர் திடீரென்று ஏற்படுகின்ற ஆபத்துக்களினால் வருகிற நஷ்டத்தை ஈடுகட்ட முடியும்.

அடுத்தபடியாக, நெல் விலை க்விண்டாலுக்கு ரூ. 57 என்றிருந்தது. இன்றையதினம் ரூ. 70 ஆக நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. விவசாயிகளுக்கு அது நல்லதொரு ஆதாயமாக இருந்தாலும்கூட இன்றையதினம் உள்ள செலவில் அது கட்டுபடி-



1974 சனவரி 22] [திரு. ஆ. கு. சுப்பையா]

யாகாது. ஆகவே இன்னும் அதிகப்படியான விலையை விவசாயிகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்குத் தேவையான அத்தனை அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளும் இரண்டு மடங்கு உயர்ந்துள்ள நேரத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்கிற தானியத்திற்கு மட்டும் விலை அந்த அளவிற்கு உயரவில்லை. ஆகவே அதைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, விவசாயிகள் உற்பத்தி செய்கிற உற்பத்திப் பொருளுக்கு அதிக விலை கொடுப்பதன் மூலந்தான் கிராமப்புறங்களிலுள்ள விவசாய மக்களுக்குப் பொருளாதாரத் துறையில் அரசு நன்மை செய்து கொடுத்ததாகும். ஆகவே அந்த வகையில் பரிசீலனை செய்து க்விண்டாலுக்கு 70 ரூபாய் என்றிருப்பதை மேலும் உயர்த்திக் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பைப்பற்றி அதிகம் பேசியாகிவிட்டது. நம் ராஜ்யத்தில் இருக்கிற நிலப்பிரபுக்கள் தங்களுடைய நிலங்களை, ஏமாற்றி எழுதி வைத்த நிலங்களை, அதற்கான விதிவிலக்குகளை எல்லாம் ரத்து செய்துவிட்டு இன்றையதினம் தமிழக அரசு தமிழ் நாடு சுகர்கேன் பார்ம் கார்ப்பரேஷன் ஒன்றை அமைத்திருக்கிறார்கள். அந்தக் கார்ப்பரேஷன் அரசாங்க மேற்பார்வையில் இயங்கக்கூடிய ஒரு ஸ்தாபனமாகும். அந்த ஸ்தாபனம் கரும்பு உற்பத்தி செய்து தன் நிர்வாகச் செலவு போக கடன் வரக்கூடிய ஒரு அபாய நிலை ஏற்படக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். 6,400 ஏக்கரா நிலத்தில் வருகிற ஆண்டு கரும்பு விவசாயம் செய்ய இருக்கிறார்கள். அந்தக் கரும்பிற்கு நியாயமான விலையை—மற்ற ராஜ்யங்கள் தங்கள் இஷ்டப்படி விலை நிர்ணயம் செய்கிறது என்று சொல்லும் போது தமிழக அரசு தீவிரக் கவனம் செலுத்தி கரும்புக்கு ஒரு நியாயமான விலை நிர்ணயம் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

சென்ற ஆண்டு பட்ஜட் பிரசங்கத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஹரிஜனங்கள் மீது அக்கறை கொண்டு ஹரிஜனங்களுக்கு கிராமப்புறங்களில் வீடு கட்டுவதற்கு வேண்டிய திட்டத்தைக் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். வருடம் ஒன்றாகியும் அது சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே ஹரிஜனங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாக இருக்கக்கூடிய முறையில் ஹரிஜன நல மேம்பாட்டுக் கழகம்

[திரு. ஆ. கு. சுப்பையா] [1974 சனவரி 22

என்று தனியாக அமைத்தாவது அவர்களுக்குப் பொருளாதார உதவி, தொழில் நடத்தக்கூடிய முறையில் உதவி செய்தல், வீடு கட்டிக்கொள்ள உதவி செய்தல் போன்றவைகளைச் செய்ய வேண்டு மென்று எனது திருத்தத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். அதையும் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அகதிகள் அதிகமாக வரப் போகிறார்கள் என்ற அபாயமான அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் பிழைப்ப தற்கு வழி இல்லாமல் அயல்நாடுகளுக்குப் பிழைப்பதற்காகச் சென்றார்கள். பர்மா, சிலோன், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்றார்கள். இன்றைய தினம் அவர்கள் அந்த நாடுகளிலிருந்து விரட்டப்பட்டு தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். மலேயா, சிங்கப்பூர் சென்றவர்கள் பல்லாயிரக்கணக்கில் வந்து இருக்கிறார்கள். மலேயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலிருந்து விரட்டப்பட்டிருப்பவர்கள் இன்று பிழைப்பதற்கு வழியில்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு வந்திருப்பவர்களை கணக்கெடுத்து அவர்களுக்கு என தனியாக ஒரு திட்டத்தைத் தயார் செய்து அவர்களுக்குத் தக்க வாய்ப்பு வசதிகள் அளிக்கும் ஏற்பாட்டினைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

நிலச் சீர்திருத்தம் பற்றி அடிக்கடி பேசிக் கொண்டு வருகிறோம். இன்னும் முற்றுப் பெறவில்லை. நிலச் சீர்திருத்தத்தை தீவிரமாக செய்தாக வேண்டும். நிலத்தில் யார் யார் உழைத்துக் கொண்டிருக் கிறார்களோ அவர்களுக்குத்தான் நிலம் சொந்தம் என்ற அந்தக் கொள்கையை இந்த அரசு ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லக் கூடிய அந்தக் கொள்கையை, நிச்சயமாக நிறைவேற்றுவதன் மூல மாகத்தான் நம் நாட்டில் அதிகமான அளவில் உணவு உற்பத்தியை காண முடியும். சில பத்தாம் பசலிப் பேர்வழிகள் சொல்கிறார்கள், நிலப்பிரபுக்கள், தொங்குசதைகள் சொல்கிறார்கள், நிலச் சீர் திருத்தச் சட்டம் மூலமாகத்தான் இன்றையதினம் உற்பத்திக் குறைவு ஏற்பட்டிருப்பதாக. அந்தச் சட்டம் வந்த பிறகுதான் 74 லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய முறையில் அதை சந்தோஷமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஆக, மேலும் நாம் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் நிலத்தில் உழைப்பவர்களுக்கு நிலம் சொந்தமாக இருத்தல் வேண்டும். அந்த நிலத்திற்கும் அவர்களுக்கும் ஒரு உறவு



1974 சனவரி 22] [திரு. ஆ. கு. சுப்பையா]

ஏற்படுத்துவதன் மூலமாகத்தான் உணவு உற்பத்தியின் அளவை நாம் மேலும் பெருக்க முடியும். நில பிரபுக்கள் ஏமாற்றி நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் தங்கள் பண்ணைகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இது அரசுக்கும் நன்கு தெரியும். விதிவிலக்கு என்பதன் அடிப்படையில் பண்ணை களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவற்றை எல்லாம் எடுப்பதன் மூலம், மற்ற மாநிலங்களில் இருக்கக்கூடியவர்களின் நிலங்களை எல்லாம் எடுத்தும் அவற்றில் நேரடியாக உழைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு விநியோகம் செய்யவேண்டும். அப் போதுதான் பரிபூர்ணமான ஒரு நிலச் சீர்திருத்தத்தை எதிர் பார்க்க முடியும். அப்படிப்பட்ட ஒரு தீவிரமான நிலச் சீர்திருத்த சட்டத்தை இந்த அரசாங்கம் கொண்டுவரும் என்று கிராம மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதையும் செய்யவேண்டும். அப்படிச் செய்வதால் தீவிரமான நிலச்சீர்திருத்தத்தைக் கொண்டு வந்தோம் என்ற நற்பெயரை எடுக்க முடியும்.

கிராமங்களில் மக்கள் கடன் தொல்லை தாங்க முடியாத அளவிற்கு இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கடன்களை எல்லாம் பரிசீலனை செய்து கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்களின் கடன்களை ரத்து செய்யவேண்டிய ஒரு நிலையையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அபிவிருத்தி வேலைகள் கிராமப் புறங்களில்தான் செய்யப்பட வேண்டும். நகரங்களைத்தான் அபி விருத்தி செய்து பெரிய மாடமாளிகைகளை எல்லாம் கட்டிக் கொண் டிருக்கிறார்கள். ஆகவே கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களை நோக்கி படை எடுத்து வருகிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று சொன்னால் கிராமப்புறங்களில் அபிவிருத்தி வேலைகள் செய்வதன் மூலமாகத்தான், அதிகப்படி கட்டடங்கள் கட்டுவதன் மூலமாகத்தான், கிராமப்புறங்களில் பெரிய அபி விருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் கிராம மக்கள் பொருளாதார உயர்வு பெறச் செய்யமுடியும். அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் கிராம மக்கள் நல்லதொரு விதத்தில் வாழ்க்கை நடத்த வழிவகை செய்ய முடியும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. என். டென்னிஸ் :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறலாம் என்று நினைக்கிறேன்.

ஆளுநர் உரையைப் படித்துப் பார்த்தால், அது ஆளும் கட்சியின் சாதனைகளை விளம்பரப்படுத்தும் ஒரு விளம்பரப் பலகை போல் அது உபயோகிக்கப்பட்டு இருக்கிறதே தவிர மக்களின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கும் கொள்கைகள், திட்டங்கள் இதில் எடுத்துக் கூறப்படவில்லை. இன்று மக்களை வாட்டி வதைக்கும் மாபெரும் பொருளாதாரப் பிரச்னைகளான விலைவாசி உயர்வு, அதனால் பொதுமக்கள், ஏழைகள் படும் கஷ்டங்கள், வேலையில்லாத் திண்டாட்டம், அதனால் பொதுமக்கள் அடைந்து கொண்டிருக்கும் அவதிகள், மன அமைதியின்மை, மாணவர்கள் மத்தியில் காணப்பட்டு இருக்கும் அமைதியின்மை, கல்விசாலைகளில் இருக்கும் அமைதி இன்மை, மாணவர்களுக்கு எதிர்காலத்தில் படித்தால் வேலை கிடைக்குமா என்ற பீதி, விவசாயிகள் அடையக் கூடிய கஷ்டங்கள், அவர்களுக்கு உரம் முதலானவை கிடைக்காமல் படும் கஷ்டங்கள், நெசவாளர்களுக்கு நூல் முதலியன கிடைக்காமல் அவர்கள் படும் கஷ்டங்கள், தொழிற்சாலைகளில் அமைதியின்மை, அதனால் அவர்கள் படும் கஷ்டங்கள், தொழில் துறை முதலானவை சீரழிந்து இருப்பது, ஏழை, எளிய நடுத்தர மக்களிடையே இருக்கும் பொருளாதார வீழ்ச்சி முதலியவைகளைப் பற்றி கவர்னர் உரையில் எடுத்துக் கூறப்படவில்லை. அவைகளை எடுத்து விளக்காதது மட்டுமல்ல, அதைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் எதுவும் எடுத்துக் காட்டப்படவில்லை. கவர்னர் உரையில் இவைகளில் சில காரியங்கள் பற்றி பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறதே தவிர அதைத் தீர்வு காண்பதற்கு அக்கறை காட்டியதாக கவர்னர் பெருமான் உரையில் காணோம்.

ஸ்தாபன காங்கிரஸ் பல பிரச்னைகள்—மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சிகளை மக்கள் முன் வைத்து போராட்டம் ஒன்றை சமீபத்தில் நடத்தியது. பொது மக்கள் எல்லாம் ஒத்துழைப்புக் கொடுத்தார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் சிறைவாசம் சென்றார்கள். பொதுமக்களுக்கு இந்த ஆட்சியின் மீது உள்ள வெறுப்பையும் அதன் மூலம் எடுத்துக் காட்ட முடிந்தது. அதனால் பிரதிபலிக்க முடிந்தது. இதனால் ஆளும் ஆட்சியாளர்கள் மத்தியில் நிர்வாக முறை ஏதேனும் மாறுதல் உண்டா என்றால் அதில் ஒன்றும் காணோம்.



அரசின் வருமானம் மிகவும் உயர்ந்து இருக்கிறது. வரி உயர்ந்து இருக்கிறது. ஆனால் அழிமதியும் மக்களின் கஷ்டமும் மிகவும் உயர்ந்து இருக்கிறது. ஆட்சியாளர்கள் தங்கள் கட்சியைக் காப்பாற்றுவதற்கும், ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ளவும் ஆகிய அரசியல் பிரச்னைகளில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தி வருவதால் பொருளாதாரப் பிரச்னையில், மக்கள் பிரச்னையில் தங்களுடைய கவனத்தைச் செலுத்த முடியாமல், நிர்வாகத்தில் திறமையில்லாமல், அதன் காரணமாகத் தவித்துக் கொண்டிருக்கும் மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் இருக்கிற ஒரு அவல நிலையைப் பார்க்கிறோம்.

அரசாங்கம் தரும் உதவிகள், பணம் யாருக்குப் போய்ச் சேர வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேருவதாக இல்லை. ஏழை நடுத்தர மக்களுக்குச் சேர வேண்டிய பணம் அவர்களுக்குப் போய் சேராத காரணத்தால் பொதுமக்களிடத்தில் அமைதியின்மை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. பொருளாதாரப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் இல்லை, திட்டம் இல்லை என்ற நிலைமை இருக்கிறது. ஆளுநர் உரையில் பல பிரச்னைகள் கூறப்பட்டிருக்கிறதே தவிர அந்தப் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காணக்கூடிய வழிவகைகள் கூறப்படவில்லை.

உதாரணமாக, விலைவாசிகள் உயர்த்த இருக்கிறது. ஏழை, எளிய மக்கள் வாங்க முடியாத அளவிற்கு விலைவாசிகள் உயர்ந்து இருக்கிறது. இதைக் கட்டுப்படுத்த வேண்டியது மத்திய அரசின் கடமை என்று மாநில அரசும், மாநில அரசின் கடமை என்று மத்திய அரசும் சொல்லிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இதைத் தடுக்கவேண்டிய பொறுப்பு மாநில அரசிற்கும் உண்டு. மாநில அரசு தான் அந்தக் கடமையிலிருந்து தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். மத்திய அரசு இது ஒரு உலக பிரச்னை, ஐ.நா. சபை போன்ற உலக சபை தான் இதைத் தீர்க்க வேண்டும் என வாதித்தால் இப் பிரச்னைக்கு யார் தான் முடிவு காண்பது என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாநில அரசும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக் கடமைப்பட்டிருக்கிறது. அது தன்னுடைய பொறுப்பிலிருந்து விலகிவிட்டது. மாநில அரசு பொறுப்பை சரியாகச் செய்யவில்லை என்று குற்றம் சாட்ட விரும்புகிறேன்.

## (4) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. Statutory Rules and Orders

48. Notification issued with G.O. Ms. No. 2032, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Colachel Local Planning Area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

49. Notification issued with G.O. Ms. No. 1736, Rural Development and Local Administration, dated the 23rd August 1973 in regard to inclusion of certain areas within the jurisdiction of the Thiruvarur Municipality. [Laid on the table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

50. Notification issued with G.O. Ms. No. 2191, Rural Development and Local Administration, dated the 4th October 1973 in regard to inclusion of Survey Block Nos. 55 and 56 of the Mettur Town within the jurisdiction ofthe Mettur Township. [Laid on the Table of the House under section 4 (1) of the Mettur Township Act, 1940 (Tamil Nadu Act XI of 1940).]

51. Notification issued with G.O. Ms. No. 2763, Home dated the 23rd October 1973 in regard to reduction in the rate of motor vehicles tax in respect of the vehicles TMC 4738 and MSM 7806 belonging to the Little Sisters of the Poor, Madras. [Laid on the Table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

### B. Reports, Notifications and Other Papers

14. Notification issued with G.O. P. No. 1499, Revenue, dated the 30th March 1973 in regard to certain amendments to the Central Sales Tax (Tamil Nadu) Rules, 1957.



## இணைப்பு I.

[358 ம் பக்கத்தில் 79 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

1972 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16, 17 ஆம் நாட்களில் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பினர் நடத்திய முதல் மாநில மாநாட்டின் கோரிக்கைகளும் அவற்றின்மீது இதுவரை அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளும் கீழே பட்டியலிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன :—

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
| --- | --- |
| தீர்மானம் 1— மாவட்ட வருவாய் அதிகாரி நிலையில், மாவட்ட வளர்ச்சி அதிகாரிப் பதவி ஒன்று, ஊராட்சித் துறைக்கு தனியே அமைக்கப்படல் வேண்டும். | ஊராட்சி துறையினைத் தனித்துறையாகச் செய்ய, ஏற்கனவே செயற் குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன. இந்த இரண்டு தீர்மானங்களும் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினரின் பரிந்துரையின் பேரில் ஆய்வில் உள்ளது. |
| தீர்மானம் 2— கோட்ட வருவாய் அதிகாரி நிலையில் கோட்ட வளர்ச்சி அதிகாரிப் பதவி ஒன்றும் ஏற்படுத்தப் பட வேண்டும். | |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| **தீர்மானம் 3—** ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பதவிகளை அரசிதழ் பதவியாக மாற்ற வேண்டும். | ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் பதவிகளை அரசிதழ் பதிவுற்றதாக அரசாணை எண் 2645, ஊ.வ.உ.து. நாள் 21-12-72-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு விட்டன. |
| **தீர்மானம் 4—** ஊர்நல ஊழியர்களை ஊராட்சித் துறையிலிருந்து பிரித்து வேளாண்மைத் துறைக்கு மாற்றப்போவதாக ஒரு கருத்து நிலவி வருகின்றது. கிராம நல ஊழியர்கள் ஊராட்சி வளர்ச்சிப் பிரிவில் தான் பணிபுரிய வேண்டும். | இந்த கருத்துக்கு ஆதாரமில்லாததால் இதன் மேல் நடவடிக்கைத் தேவையில்லை என்று கருதப் பட்டது. |
| **தீர்மானம் 5—** ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களை அரசு ஊழியர்களாக்க வேண்டும். இதற்கு முன்னோடியாக ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கு நகராட்சி ஊழியர்களுக்கு அளிக்கப்படும் ஓய்வூதியம்போன்ற சலுகைகள் வழங்கிட வகை செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும். | அரசு ஊழியர்களுக்கு வழங்கும் சலுகைகள் எல்லாம் ஊராட்சி ஒன்றிய பணியாளர்கள் பெறுவதால் அவர்களுக்கு அரசு பணியாளர்களைப் போல ஓய்வூதியம் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| **தீர்மானம் 6—** பேரூராட்சியில் பணியாற்றும் முழுநேர ஊழியர்கள் அனைவரையும் அரசுப் பணியாளர்களாக மாற்றம் செய்ய வேண்டும். ஓய்வூதியம் மற்றும் சலுகைகள் அளிக்கப்பெற வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |



| | |
|---|---|
| **தீர்மானம் 7—** ஊரக வளர்ச்சித் துறையிலுள்ள அரசிதழ் பதிவுறு ஊழியர்கள் அனைவருக்கும் ஒரு மொத்தமான ஊழிய விதி (Common Service Rules) ஏற்படுத்த வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 8—** ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையத் துணை முதல்வர் பதவிகளை மாவட்ட வளர்ச்சி அலுவலர் நிலைக்கு உயர்வு செய்யவேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 9—** ஊராட்சி ஒன்றிய மேலாளர், ஊராட்சி விரிவாக்க அலுவலர், கல்வி விரிவாக்க அலுவலர் பதவிகளை வருவாய்த்துறை வட்ட ஆட்சித் தலைவருக்கு ஒத்த நிலையில் உயர்வு செய்து வளர்ச்சிப் பிரிவு தலைமை எழுத்தருக்கு நிகராக மாற்றம் செய்யவேண்டும். | இச் செயற்குறிப்பும் மாநில நிர்வாக சீர்திருத்தக் குழுவின் குறிப்புரையின் பேரில் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 10—** முதல் நிலை, இரண்டாம் நிலை பேரூராட்சி நிர்வாக அதிகாரிகளின் ஊதிய விகிதங்களை முறையே கோட்டாட்சித் தலைவர், அலுவலக கணக்கர் நிலைக்கும், ஊராட்சி ஒன்றிய உதவியாளர் நிலைக்கும் உயர்த்த வேண்டும். | முதல் நிலை, இரண்டாம் நிலை பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள் ஊதிய விகிதங்களும் அவரின்கீழ் பணிபுரியும் பணியாளர்கள் ஊதிய விகிதங்களும் சமமாக உள்ள முரண்பாட்டினை நீக்கும்பொருட்டு முதல் நிலை, இரண்டாம் நிலை பேரூராட்சி நிர்வாக அதிகாரிகளுக்கு முறையே திங்களொன்றுக்கு ரூ. 15, 10 சிறப்பு ஊதியமாக அளிக்கப்பட அரசாணை எண் 2617, ஊ.வ.உ.து. நாள் 18-12-72-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. எனினும் இவ்வூதிய மாற்றம் குறித்து மீண்டும் அரசு பரிசீலிக்கும். |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| **தீர்மானம் 11—** | |
| இப்போதிருக்கின்ற இரண்டு தர ஊர்நல உதவியாளர்களை மூன்று தரமாகப் பிரித்து தேர்வு நிலை ஒன்று, வளர்ச்சிப் பிரிவு கணக்கர் நிலையில் உருவாக்கி, இரண்டாம் தரம், முதல் தரம், தேர்வு நிலை இப்பதவிகளின் விகிதம் 50:30:20 என்று வரையறுக்கப்பட வேண்டும். | அரசின் ஆய்வில உள்ளது. |
| **தீர்மானம் 12—** | |
| இரண்டாம் நிலை ஊர்நல ஊழியர்கள் பதவி உயர்வின்மையினைக் கருதி, ஒவ்வொரு வட்டாரத்திலும் முதல் நிலை, இரண்டாம் நிலை ஊர்நல ஊழியர்கள் பதவிகள் 3:7 விகிதத்தில் இருப்பது 5:5 விகிதத்தில் மாற்றி அமைத்து ஆணையினைப் படிப்படியாக நிறைவேற்றுமல், ஒரே ஆண்டில் நிறைவேற்ற வேண்டும். முதல் நிலை ஊர் நல உதவியாளரும் பயன்காணும் வகையில் தேர்வு நிலை பதவிகள் ஏற்படுத்த வேண்டும். | ஊராட்சி ஒன்றியங்களில் முதல், இரண்டாம் நிலை ஊர்நல ஊழியர்களின் விகிதம் 5:5 ஆக இருக்க வேண்டுமென்பதை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. இதனால் 870 முதல் நிலை ஊர்நல உதவியாளர்கள் பதவிகள் ஏற்படுத்தப்படும். இது நான்கு அல்லது ஐந்து ஆண்டு காலத்தில் பூர்த்தி செய்யப்படும். இதன் மூலம் ஆண்டொன்றுக்கு ரூ. 9,81,000 அரசுக்கு அதிகப்படியான செலவு ஏற்படும். எனவே தற்போதுள்ள நிதி நிலைமையினைக் கருதி இதனை உடனடியாக நிறைவேற்ற இயலாது. எனவே இக்கோரிக்கை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. |
| **தீர்மானம் 13—** | |
| சமூக நல ஊழியர்களை ஊர்நல உதவியாளர்களைப் போல் முதல் நிலை, இரண்டாம் நிலை என்று பாகுபடுத்தி ஒரு குறிப்பிட்ட சதவிகிதப் பதவிகளை முதல் நிலையாக உயர்வு செய்யவேண்டும். | இப் பதவிகள் குறித்து மாநில நிர்வாக சீர்திருத்தக் குழுவினரின் பரிந்துரை ஆய்வில் இருப்பதால் சமூக நல ஊழியர்கள் பதவியில் தேர்வு நிலை ஏற்படுத்துவது தற்போது அவசியமில்லை என்று அரசு கருதியுள்ளது. |
| **தீர்மானம் 14—** | |
| பேரூராட்சி சுகாதார ஆய்வாளர் பதவிகளின் தேர்வு நிலை ஏற்படுத்தி தகுதியும் திறமையும் பெற்றவர்களை நியமனம் செய்யவேண்டும். | மக்கள் நல்வாழ்வு குடும்பக்கட்டுப்பாடு துறையினரின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுவிட்டது. |
| **தீர்மானம் 15—** | |
| கிராம சேவிகா பதவியில் 50 சதவிகிதத்தை முதல் நிலையாக உயர்வு செய்யவும், முக்கிய சேவிகா பதவிகளில் தேர்வுநிலை ஏற்படுத்தி அவர்களைக் கோட்ட அளவில் நியமனம் செய்யவும் வேண்டும். | சமுதாய நலத்துறையினரின் நடவடிக்கைக்காக மாற்றப்பட்டுவிட்டது. |
| **தீர்மானம் 16—** | |
| ஊராட்சி ஒன்றிய முக்கியசேவிகா பதவிகளை வளர்ச்சிப் பிரிவு கணக்கர் நிலைக்கு உயர்வு செய்ய வேண்டும். | சமுதாய நலத்துறையினரின் நடவடிக்கைக்காக மாற்றப்பட்டுவிட்டது. |
| **தீர்மானம் 17—** | |
| ஊராட்சி வளர்ச்சித் துறையினரின் மூலம் செயல்படுத்தப்படும் குடும்ப நலத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம், பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம் | தற்பொழுது மாவட்ட அளவிலுள்ள குடும்பக் கட்டுப்பாடு பதவிகள், வட்ட ஆட்சியாளர் அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களால் நிரப்பப் |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
| --- | --- |
| (தீர்மானம் 17—தொடர்ச்சி) போன்ற பல் வேறுத் திட்டங்களிலுல் ஏற்படுத்தப் படும் பதவிகளை ஊராட்சி வளர்ச்சித் துறையின ருக்கு அளிக்க வேண்டும். | படுகின்றன. ஊராட்சி வளர்ச்சித் துறை பணி யாளர்களையும் ஒன்றிய அளவில் உள்ள பதவி களுக்கு அமர்த்த அரசு ஆய்ந்து வருகின்றது. சிறுசேமிப்பு பொறுத்தவரை மாவட்ட சேமிப்பு அதிகாரி பதவிகளில் ஊராட்சி ஒன்றிய ஆணை யாளர்களை அமர்த்த இடம் இருக்கிறது. மற்ற திட்டங்களில் ஏற்படுத்தப்படும் பதவிகளில் ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களை அமர்த்துவது குறித்து செயற்குறிப்பு, மாநில நிர்வாக சீர் திருத்தக் குழுவினரின் பரிந்துரைக்கேற்ப ஆய்வில் உள்ளது. |
| தீர்மானம் 18— தற்பொழுது தொழில் விரிவாக்கு அலுவலர்களை சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தமிழ் நாடு தொழில் வளர்ச்சிக் நிறுவனம், தமிழ்நாடு சிறு தொழில் சங்கம், தமிழ் நாடு வேளாண்மை தொழில் வளர்ச்சி கழகம் முதலியவைகளில் தகுந்த முறையில் ஈடுபடுத்தி எல்லா சிறு தொழில் வளர்ச்சிப் பணிகளையும் வட்டாரம் மூலமாக நடத்தப்பட வேண்டும். | இக்கோரிக்கை சம்பந்தப்பட்ட கழகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் தக்க நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுவிட்டது. |
| தீர்மானம் 19— இரண்டாம் நிலை ஊர்நல உதவியாளர்களுக்கு, அவர் கள் ஊரக விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் | முதல்நிலை ஊர்நல உதவியாளர்களின் ஊதிய விகிதம் ரூ. 250—10—300—15—450 என்றும் |



| | |
| --- | --- |
| பெறும் பயிற்சியின் காலத்தைக் கருதி அடிப்படை ஊதிய விகிதத்தை மாற்றி அமைக்கவேண்டும். | இரண்டாம் நிலை ஊர்நல உதவியாளர் களின் ஊதிய விகிதம் ரூ. 210—5—245—10—325 என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இதை மேலும் மாற்றத் தேவையில்லை எனக் கருதப் படுகிறது. |
| தீர்மானம் 20— இளநிலை உதவியாளர்களுக்கு தனி நபர் குழு பரிந்துரையின் அடிப்படையில் திருத்தி அமைக் கப்பட்ட புதிய ஊதிய விகிதத்தை சுகாதார உதவியாளர்களுக்கும் வழங்கிடல் வேண்டும். | மக்கள் நல்வாழ்வு குடும்பக் கட்டுப்பாடுத் துறை யினரின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டு விட்டது. |
| தீர்மானம் 21— சமூக நல ஊழியர்களுக்கு இதுவரையிலும் இளநிலை உதவியாளர்களது ஊதியமே வழங்கப்பட்டு வந்தது. ஆகவே தனி நபர் குழு பரிந்துரையின் அடிப்படையில் திருத்தி அமைக்கப்பட்ட புதிய ஊதிய விகிதத்தை சமூக நல ஊழியர்களுக்கும் வழங்கிட வேண்டும். | இக் கோரிக்கையை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. |
| தீர்மானம் 22— ஓராண்டு வேளாண்மை தீவிர பயிற்சிபெறும் ஊர்நல ஊழியர்களில், ஒவ்வொரு ஆண்டிலும் முதலிடம் பெறும் ஊர்நல உதவியாளர்களுக்கு இரு ஊதிய முன் உயர்வும், மற்ற அனைவருக்கும் ஒரு ஊதிய முன் உயர்வும் அளிக்கவேண்டும். | தற்பொழுது ஒவ்வொரு பயிற்சி தொடரிலும் முத லிடம் பெறும் ஊர்நல உதவியாளருக்கு இரண்டு ஊதிய உயர்வும் மற்ற ஐந்து இடங்களை பெற்ற வர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஊதிய உயர்வும் அளிக்கப்பட ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. எனவே இது குறித்து ஆய்வு செய்யப்பட்டு இக் கோரிக்கையினை நிறைவேற்ற அவசியமில்லை என முடிவு செய்யப்பட்டது. |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| **தீர்மானம் 23—** ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 100 சிறப்பு ஊதியமாக வழங்க வேண்டும். | இக் கோரிக்கை மறுக்கப்பட்டுவிட்டது. |
| **தீர்மானம் 24—** அனைத்துப் பேரூராட்சி ஊராட்சி ஒன்றிய தலைமை எழுத்தர்களுக்கு மேற்பார்வைப்படி வழங்கப்பட வேண்டும். | மூன்று எழுத்தர்கள் வரை மேற்பார்வையிட ரூ. 10-ம் மூன்றுக்கு மேற்பட்ட எழுத்தர்களை மேற்பார்வையிட ரூ. 15-ம் மேற்பார்வைப் படியாக வழங்கப்பட ஆணைகள் வெளியிடப்பட்டு விட்டன. |
| **தீர்மானம் 25—** கிராம அதிகாரிகளை ஊராட்சிகளில் வரி வசூல் பணியினின்றும் முழுமையாக விடுவித்து அவர்களுக்கு கொடுக்கப்பட்டு வரும் வளர்ச்சிப்பணி சிறப்பூதியமான ரூ. 75-ம் அந்தந்த ஊராட்சிகளிடம் கொடுத்து ஒவ்வொரு ஊராட்சியும் அதனதன் நிதியிலிருந்து தற்சமயம் பகுதி நேர எழுத்தருக்கு ஊதியமாக வழங்கிடும் ரூ. 25-ம் சேர்த்து மாதம் ரூ. 100 சம்பளத்தில் எழுத்துப் பணிகளையும், வசூல் பணிகளையும் கவனித்துக் கொள்ள ஒரு முழு நேர ஊராட்சி உதவியாளரை நியமனம் செய்திட வேண்டும். | இச் செயற்குறிப்பை நிறைவேற்ற தேவை இல்லை என்று அரசால் முடிவு செய்யப்பட்டது. |





| | |
|---|---|
| **தீர்மானம் 26—** ஊராட்சி ஒன்றியத்தின் கணக்குப் பிரிவிற்கு கோட்டாட்சி அலுவலக கணக்கர் நிலையில் ஒரு கணக்குப் பிரிவு மேலாளர் பதவியை ஏற்படுத்த வேண்டும். | இச் செயற்குறிப்பு அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. |
| **தீர்மானம் 27—** ஊராட்சி ஒன்றிய கல்விப் பிரிவிற்கு கோட்டாட்சி அலுவலக கணக்கர் நிலையில் ஒரு கண்காணிப்பாளர் பதவியை ஏற்படுத்துதல் வேண்டும். | ஊரக வளர்ச்சி இயக்குநர், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக் கல்விப் பிரிவிற்கும் இரு உதவியாளர்கள் பதவியை ஏற்படுத்த அனுப்பிய செயற்குறிப்பு அரசினால் ஏற்கப்படவில்லை என்பதால், கண்காணிப்பாளர் பதவி ஏற்படுத்த அவசியமில்லை. |
| **தீர்மானம் 28—** 1967-ஆம் ஆண்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் ஆள் குறைப்பு செய்யப்பட்ட பணியிடங்களை மீண்டும் புதுப்பிக்க வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 29—** ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு இளநிலை உதவியாளர் பதவியும், ஒரு உதவியாளர் பதவியும், ஒரு தட்டெழுத்தர் பதவியும் ஏற்படுத்த வேண்டும். | மறுக்கப்பட்டுவிட்டது. |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| **தீர்மானம் 30—** | |
| ஊரக வளர்ச்சி அலுவலகத்தில் மூன்று கண்காணிப்பாளருக்கு ஒரு தேர்வுநிலை கண்காணிப்பாளர் பதவிகள் ஏற்படுத்தப்பட வேண்டும், | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 31—** | |
| முதல் நிலை ஊர்நல உதவியாளர்கள், குடும்ப நலத் திட்டங்களுக்கு மிகுந்த பணி ஆற்றுவதால், ரூ. 350-15-500-20-600 என்னும் ஊதிய விகிதத்தில் குடும்ப நல விரிவாக்கு அலுவலர் பதவி ஒன்று ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஏற்படுத்தப்படவேண்டும். | குடும்பக் கட்டுப்பாட்டுத் துறையின் செலவினங்கள் இந்திய அரசினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எனவே இந்தக் கோரிக்கையை மாநில அளவில் ஏற்றுக்கொள்ள முடியாது. |
| **தீர்மானம் 32—** | |
| ஊரக வளர்ச்சித் துறைப் பொறியியல் பணிகள் வேகமாகவும், நல்ல முறையிலும் செயற்பட வேண்டுமாயின் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை என்ற அமைப்பினை மாற்றி நெடுஞ்சாலைக்குத் தனியாகவும் கிராமப் பணித்துறைக்குத் தனியாகவும், பொறியியல் பிரிவுகள் ஏற்படுத்தி, ஊரக வளர்ச்சித் துறைப் பொறியியல் பணிகளைக் கவனித்துக் கொள்தற்கென ஊரக வளர்ச்சித் துறைப் பொறியியல் பிரிவு ஒன்று தனியாக தோற்றுவிக்கப்பட்டு, மாநில பொறியாளரும், மாவட்டத்துக்கு ஒருவர் வீதம் கோட்டப் பொறியாளரும் கோட்டத்துக்கு ஒருவர் வீதம் உதவிப் பொறியாளரும் நியமனம் செய்யவேண்டும். | பொதுப் பணித்துறையினரின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுவிட்டது. |
| **தீர்மானம் 33—** | |
| தக்க கல்வித் தகுதி உள்ள சமூக நல ஊழியர்களை வேறு பதவிகளில் நியமனம் செய்து பதவி உயர்வு வாய்ப்பினை அளிக்க வேண்டும். வானொலி பராமரிப்பு சிறப்பு பயிற்சி பெற்ற சமூக நல ஊழியர்களை வானொலி மேற்பார்வையாளராக நியமனம் செய்திடும் வகையில் விதிகளில் தேவையான திருத்தம் செய்துதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. | இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| **தீர்மானம் 34—** | |
| கலைக்கப்பட்ட கழக உள்ளாட்சி வட்ட ஆய்வாளர் (R. I. L. B) அலுவலகங்களில் பணி புரிந்து தற்போது உதவியாளராகவும் மேலாளராகவும் பணிபுரிவோர்க்கு விதியைத் தளர்த்தி ஊராட்சி விரிவாக்க அலுவலர் பதவியினை அளிக்க வேண்டும். | இக்கோரிக்கை ஏற்கனவே அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 35—** | |
| தேவையான விதி விலக்களித்து மகப்பேறு உதவியாளர் தேர்வுபெற்றவர்களையும், ஏ.என்.எம். தேர்வுபெற்றவர்களையும் பாகுபாடின்றி ஒரே | இக் கோரிக்கையை ஏற்கத் தேவையில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. எனினும், மகப்பேறு உதவியாளர்கள் சுகாதார பார்வையாளர் |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
| --- | --- |
| **தீர்மானம் 35—தொடர்ச்சி.** | |
| சீராக நடத்தி, ஆரம்ப சுகாதார நிலைய சுகாதார பார்வையாளர் பதவிகளை இப்பேறு கால உதவியாளர்களின் அடுத்த உயர் பதவியாக உறுதி செய்தல் வேண்டும். | பயிற்சியை வெற்றிகரமாக முடித்தால், அவர்கள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் சுகாதார பார்வையாளர்களாக நியமிக்கப்படுவர். |
| **தீர்மானம் 36—** | |
| தாய்-சேய் நல விடுதிகளில் பணியாற்றும் ஆயாக்களில் தகுதி பெற்றவர்களை தனிச் சலுகைகாட்டி எ.என்.எம். தேர்வு நிலைக்கு அனுப்பி வைக்கவும், அவர்களை மீண்டும் சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் பேறுகால உதவியாளர்களாக நியமனம் செய்திடவும் கேட்டுக்கொள்கிறது. | இக் கோரிக்கையை ஏற்கத் தேவையில்லை என்று முடிவெடுக்கப்பட்டது. |
| **தீர்மானம் 37—** | |
| பத்தாண்டு காலம் பணிபுரிந்த பதிவறை எழுத்தர்களுக்கு விதிவிலக்கு அளித்து இளநிலை எழுத்தர் பதவி அளிக்கவேண்டும். | குறிப்பிட்ட நான்கு தகுதிகள் கொண்ட பதிவு எழுத்தர்களுக்கு கல்வித் தகுதியைத் தளர்த்தி இளநிலை உதவியாளர்களாக நியமிக்க அரசு ஏற்கனவே ஆணை வெளியிட்டுள்ளது. |
| **தீர்மானம் 38—** | |
| பத்தாண்டு காலம் பணிபுரிந்த கடைநிலை ஊழியர்களுக்கு, கல்வித் தகுதியை தளர்த்தி பதிவறை எழுத்தர், சிற்றெழுத்தர்களாக நியமனம் செய்ய வேண்டும். | கடைநிலை ஊழியர்களுக்கு பதிவறை எழுத்தர், இளநிலை உதவியாளர்கள் பதவிகள் அளிக்க சில விதிமுறைகள் உள்ளன. எனவே இக் கோரிக்கையை ஏற்க இயலவில்லை. |
| **தீர்மானம் 39—** | |
| பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றும் தலைமை எழுத்தர்கள், இளநிலை உதவியாளர்கள் ஆகியவர்களை நிர்வாக அதிகாரியாக நியமனம் செய்ய நிர்ணயம் செய்யப்பட்ட வயது உச்ச வரம்பு 35 என்பதை தளர்த்தி வயது வரம்பின்றி பதவி உயர்வு வழங்கவேண்டும். | இக் கோரிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 40—** | |
| ஊராட்சி ஒன்றியத் தட்டெழுத்தர்கள், பொருளாளர்கள் எவ்விதத் தடையுமின்றி இளநிலை ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதுபோல் நேரடியாக உதவியாளராக தேர்வு செய்யப்படும் வகையில் ஊழிய விதியில் தேவையான திருத்தம் செய்திட வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 41—** | |
| மாவட்ட ஆட்சித் தலைவர், கோட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஒதுக்கப்பட்ட உதவியாளர் பணியிடங்களை நிரப்புவதில் மொத்தமுள்ள காலி இடங்களில் 50 சதவிகிதம் மட்டிலுமே ஊராட்சி ஒன்றிய இளநிலை எழுத்தர்களது பதவி உயர்வு வாய்ப்பாகக் கொள்ளப்பட்டுள்ளது. மொத்த எண்ணிக்கையான 2,995 ஊராட்சி ஒன்றிய இளநிலை எழுத்தர்களுக்கு இது மிகவும் குறைந்த அளவு பதவி உயர்வு வாய்ப்புதான். எனவே இவ்விகிதத்தை 50 சதவிகிதத்திலிருந்து 90 சதவிகிதமாக உயர்வு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. | அரசின் ஆய்வில் உள்ளது. |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
| --- | --- |
| **தீர்மானம் 42—** | |
| வருவாய்த் துறையினரை தஞ்சை மாவட்ட சத்திர இலாக்கா அலுவலர்களாக நியமனம் செய்து வரும் நடைமுறையினை விடுத்து மாவட்டக் கழகத்தின் பணிகளை மேற்கொண்டு நடத்திடும் ஊரக வளர்ச்சித் துறை ஊழியர்களையே நியமனம் செய்திட வேண்டும். | **வருவாய்த் துறையினரின் நடவடிக்கைக்காக மாற்றப்பட்டுவிட்டது.** |
| **தீர்மானம் 43—** | |
| இதுவரை தற்காலிகமாகத் தொடரப்பட்ட தொழில் விரிவாக்கு அலுவலர் பதவிகளை நிரந்தரமாக்க வேண்டும். | தொழில் விரிவாக்கு அலுவலர் பதவிகளை படிப்படியாக ஒழித்து விட ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு விட்டது. எனவே தொழில் விரிவாக்கு அலுவலர் பதவிகளை நிரந்தரமாக்க தற்போது இயலாது. |
| **தீர்மானம் 44—** | |
| ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் டிராக்டர் டிரைவர், டிரில்லர், தேனீ காப்பாளர், நச்சு கொல்லு உற்பத்தி போதகர், தையல் ஆசிரியை, ஆகியோர் பணியை நிரந்தரமாக்க வேண்டும். | இப்பதவிகளில் உள்ளோரை நிரந்தரமாக செய்வது சாத்தியமன்று என முடிவு செய்யப்பட்டது. |
| **தீர்மானம் 45—** | |
| சமூக நலத்துறையில் பணியாற்றும் கிராம சேவிகைகள், முக்கிய சேவிகைகள் பதவிகளில் பல இன்னும் நிரந்தரமாக்கப்படாமலுள்ளன. அதேபோன்று இவர்களில் பலரது பதவி காலம் வரன் முறைப்படுத்தப்படாமலும், பதவிகள் ஒழுங்குமுறை செய்யப்படாமலும் உள்ளன. இக்குறைகளைக் களைந்திட வேண்டும். | சமுதாய நலத் துறையினரின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுவிட்டது. |
| **தீர்மானம் 46—** | |
| ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் பள்ளி நடத்தாட்டிகளை (Conductresses) முழுநேர ஊழியர்களாக ஆக்க வேண்டும். தையல் ஆசிரியைப் பதவிகளை நிரந்தரம் ஆக்குவதுடன் நிரந்தரப் பயணப்படி வழங்கப்படவேண்டும். | ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் உள்ள நடத்தாட்டிகளை முழுநேர ஊழியர்களாக நியமனம் செய்தல் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல. ஆசிரியைப் பதவிகள் குறித்து சில வரைமுறைகள் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. |
| **தீர்மானம் 47—** | |
| சுகாதார ஆய்வாளர்கள் குடும்ப நலத் திட்ட சுகாதார ஆய்வாளர், மற்றும் முதன்மை சுகாதார நிலையங்களின் கட்டுப்பாட்டில் பணி புரிவோர் ஊராட்சி ஒன்றிய நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்படவேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 48—** | |
| முதன்மை சுகாதார நிலையங்களில் பணியாற்றும் சுகாதார பார்வையாளர்கள் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் பணிபுரிய வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 49—** | |
| வளர்ச்சிப்பணி கால்நடை மருத்துவர் ஒன்றிய நிர்வாகக் கட்டுப்பாட்டில் பணிபுரிய வேண்டும். | வேளாண்மைத் துறையினரின் நடவடிக்கைக்காக அனுப்பப் பட்டுவிட்டது. |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
| --- | --- |
| தீர்மானம் 50— விரிவாக்கு அலுவலர்களிடையே பயணப்படியில் உள்ள வேறுபாட்டினைக் களைந்து அனைவருக்கும் திங்கள் ஒன்றுக்கு நிலையான பயணப்படியாக ரூ. 60 வழங்கவேண்டும். | தற்பொழுதுள்ள ஆணைகள் படி, அனைத்து விரிவாக்கு அலுவலர்க்கும் ரூ. 45 நிரந்தர பயணப்படி வழங்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் வேளாண்மை விரிவாக்கு அலுவலர் ரூ. 37·50 பயணப்படியாக பெறுவர். |
| தீர்மானம் 51— முதல் நிலை ஊர்நல உதவியாளருக்கு ரூ. 30-ம், இரண்டாம் நிலை ஊர்நல உதவியாளருக்கு ரூ. 25-ம் பயணப்படியாக வழங்க வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| தீர்மானம் 52— ஊராட்சி ஒன்றிய சுகாதார உதவியாளர்களுக்கு, அரசு தரப்பு உதவியாளர்களுக்கு அளிக்கப்படுவது போல் மாதம் ரூ. 35 நிரந்தர பயணப் படியாக வழங்கப்பட வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| தீர்மானம் 53— தேனீ வயலரது நிரந்தர பயணப்படி ரூ. 30 ஆக உயர்த்த வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| தீர்மானம் 54— ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் பேறுகால உதவியாளர்களுக்கு "ஹெல்த் விசிட்டர்" பதவி உயர்வும், தகுதியுள்ள ஆயாக்களுக்கு பயிற்சி அளித்து, பேறுகால உதவியாளர்களாகவும், நியமித்து, குறிப்பிட்ட நிரந்தர பயணப்படி வழங்கவேண்டும். | தீர்மானம் 35, 36-ஐக் காண்க. மகப்பேறு உதவியாளர்களுக்கு நிரந்தர பயணப்படியாக மாதம் ரூ. 20 அளிக்கப்பட ஆணைகள் வெளியிடப்பட்டு விட்டன. |
| தீர்மானம் 55— பேரூராட்சி வரித்தண்டலர்களுக்கு தற்சமயம் வழங்கப்பட்டுள்ள துவிச்சக்கர வண்டி பராமரிப்பு உதவித் தொகை (cycle allowance) யினை பேரூராட்சி துப்புரவு மேலாட்களுக்கும் வழங்கிட வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| தீர்மானம் 56— கோட்ட ஊராட்சி அலுவலர்களுக்கு ரூ. 150 நிரந்தர பயணப்படியாக வழங்க வேண்டும். | கோட்ட ஊராட்சி அலுவலர்களுக்கு நிரந்தரப் பயணப்படியாக ரூபாய் 100 அளிக்கப்பட ஆணைகள் வெளியிடப்பட்டுவிட்டன. |
| தீர்மானம் 57— ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து (திரை மறைவுக் குழுவினால்) எடுத்துக்கொள்ளப்படும் உதவியாளர்களின் ஊதியத்தை நிர்ணயிக்கும்போது அவர்களுடைய ஊராட்சி ஒன்றியங்களில் பணி புரிந்து ஊழிய காலத்தினையும் கணக்கில் சேர்க்க வேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
| --- | --- |
| **தீர்மானம் 58—** | |
| திரைமறைவுக் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு உதவியாளராக நியமனம் பெற்று 31–12–1969-க்குள் இலாகா தேர்வுகளில் தேர்ச்சி பெறுதிருப்பினும் அவர்களை இளநிலை உதவியாளர்களாகப் பதவி இறக்கம் செய்யாமல் உதவியாளர்களாகத் தொடர்ந்து பணியாற்றச் செய்யவேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 59—** | |
| 1959-ஆம் ஆண்டு முதல் பேரூராட்சி நிர்வாக அதிகாரி நிலையிலிருந்து பதவி உயர்வு பெற்று ஊராட்சி விரிவாக்க அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ள முது நிலையினை, அவர்கள் பதவியில் சேர்ந்த நாளிலிருந்து கணக்கிட வேண்டும். | ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 60—** | |
| ஊராட்சி ஒன்றியங்களில் அரசு ஊழியர்களாக நியமனம் செய்யப்பட்ட முன்னாள் மாவட்டக் கழக ஊழியர்கள் மற்றும் ஊராட்சி, பேரூராட்சியிலிருந்து நியமிக்கப்பட்ட சிலருக்கு கல்விச் சலுகை கோரி விண்ணப்பங்கள் மீது | இத்தகையப் பணியாளர்களின் விண்ணப்பங்கள், எவ்வப்போது ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து அரசினால் பெறப்படுகிறதோ அவ்வப்போது அவைகள் தனித்தனியே வெளியிடப்படும். |



| | |
| --- | --- |
| அரசாணை கிடைக்கப் பெறாத காரணத்தால் அப் பணியாளர்களின் ஊழிய காலம் வரன்முறைப் படுத்தப்படாமல் உள்ளது. இம்மாதிரி பாதிக்கப் பட்ட ஊழியர்களுக்கு விரைவில் கல்விச் சலுகை வழங்கி அவர்களது ஊழிய காலத்தை வரன் முறைப்படுத்த வகை செய்ய வேண்டும். | |
| **தீர்மானம் 61—** | |
| பேரூராட்சி, ஊராட்சி ஒன்றிய கடைநிலை ஊழியர்களை தற்பொழுது போனஸ் பண்ட் நிதியில் சேர்த்து வருவதற்குப் பதிலாக சேம நல நிதியில் சேர்க்க வேண்டும். | ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 62—** | |
| ஒன்றிய வேளாண்மைக் கிடங்கு சம்பந்தப்பட்ட கடிதப் போக்குவரத்துப் பணிகளை ஊராட்சி ஒன்றிய உதவியாளர்களுக்கு பதிலாக, அதற்கெனவே உள்ள கிடங்கு அமைச்சுப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும். | ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 63—** | |
| ஊரக வளர்ச்சித் துறையினைச் சேர்ந்த மேல்மட்ட ஊழியர்களில் தகுதியும், திறமையும் படைத்தவர்களுக்கு ஐ.ஏ.எஸ். வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறது. | பொதுத் துறைக்கு மாற்றப்பட்டுவிட்டது. |

| தீர்மானங்கள். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| **தீர்மானம் 64—** | |
| கிராமிய பயிற்சி நிலையம், மாநில சமுதாய வளர்ச்சி பயிற்சி நிலையம் இவைகளின் முதல்வர்கள், நெறியாளர் அலுவலக துணை இயக்குநர் (பணியாளர் பகுதி) இப்பதவிகளை மாவட்ட வருவாய் அதிகாரி நிலைக்கு உயர்வு செய்யவேண்டும். | மாநில நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் பரிந்துரையின்பேரில் இது ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 65—** | |
| ஊரக வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் இணை இயக்குநர் பதவியை மீண்டும் புதுப்பித்து அப்பதவியில் ஊரக வளர்ச்சித் துறையினரையே முதுநிலை, தகுதி இவைகளின் அடிப்படையில் நியமனம் செய்திடவேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 66—** | |
| ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர் ஆணையாளர்கள் மாநாடு ஒன்றினை ஆண்டுதோறும் அலுவல் முறையில் நடத்த வேண்டும். | ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 67—** | |
| தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சித் துறை பணியாளர் சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகி களுக்கு 30 நாட்கள் சிறப்பு விடுப்பு அளிக்க வேண்டும். | ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 68—** | |
| ஊராட்சி வளர்ச்சி அலுவலர், கல்வி விரிவாக்க அலுவலர், ஒன்றிய மேலாளர், கைத்தொழில் வளர்ச்சி அலுவலர், வளர்ச்சி பிரிவு தலைமை எழுத்தர், ஒன்றிய ஆணையாளர், கோட்ட ஊராட்சி அலுவலர் இப்பதவிகளில் பணியாற்றும் ஊழியர்களின் முதுநிலைப் பட்டியல் (Seniority list) ஒவ்வொரு பதவி நிலைக்கும் தனித்தனியே தயாரித்து மாவட்ட மாநில அரசிதழ்களில் (District Gazette) வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். | அரசின் ஆய்வில் உள்ளது. |
| **தீர்மானம் 69—** | |
| அமைப்புச் செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட "தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சித் துறைப் பணியாளர் சங்கங்களின் கூட்டமைப்பின்" "சங்க அமைப்பு விதிகள்" திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ள அங்கீகரிக்கப்பட்டது. | அரசின் அளவில் நடவடிக்கை எதுவும் தேவையில்லை. |
| **தீர்மானம் 70—** | |
| தமிழ்நாடு ஊராட்சி வளர்ச்சித் துறை பணியாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் அடித்தள அமைப்பான ஒன்றியங்களின் கிளைகள் முதல் மாநில அமைப்பு வரையிலும் முறையான தேர்தல்களை நடத்த கீழ்க்கண்டவர்களைக் கொண்ட தேர்தல் குழு அமைக்கப்பட்டது :— | அரசின் அளவில் நடவடிக்கை எதுவும் தேவையில்லை. |
| 1. திரு. சத்தியநாராயணன், ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், திருப்பரங்குன்றம், மதுரை (குழுத் தலைவர்). | |

| தீர்மானங்கள். | எடுக்கப்பட்ட நடவடிக்கை. |
| --- | --- |
| (1) | (2) |
| 2. திரு. ஜி. விஜயராகவன், தலைமைக் கணக்கர் (அபிவிருத்தி பிரிவு), மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், இராமநாதபுரம் மாவட்டம், மதுரை-2 (உறுப்பினர்). | |
| 3. திரு. கோடிலிங்கம், கண்காணிப்பாளர், ஊரக வளர்ச்சித் துறை நெறியாளர் அலுவலகம், சென்னை (உறுப்பினர்). | |
| 4. திரு. ஆர். இராமநாதன், சிரஸ்ததார், வளர்ச்சிப் பிரிவு, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், சேலம் (உறுப்பினர்). | |
| 5. திரு. டி.என். இராதாகிருஷ்ணன், ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், கணியம்பாடி, வட ஆற்காடு மாவட்டம் (உறுப்பினர்). | |

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## புதன்கிழமை, 1974 சனவரி 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

*Tamil Nadu Administrative Reforms Commission*

*91 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Tamil Nadu Administrative Reforms Commission has completed its work; and

(b) if not, when is its work likely to be completed?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) இல்லை.

(இ) உத்தேசமான திட்டத்தின்படி, நிர்வாக சீர்திருத்தக் குழுவின் வேலை ஏப்ரல், 1974-ல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, The Administrative Reforms Commission have submitted a report on panchayat development administration. அது இங்கு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் 83 சிபார்சுகள் இருக்கின்றன. குறிப்பாக டிஸ்ட்ரிக்ட் டெவலெப்மென்ட் கவுன்சில் பற்றியெல்லாம் சிபார்சு கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலனை செய்திருக்கிறதா? அப்படியானால், எந்த எந்த சிபார்சுகளை அமல் நடத்துவதாக அரசு உத்தேசித்திருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மொத்தமாக இந்தக் குழு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய துறைகள் 17 துறைகள் என்று பிரித்துக் கொடுக்கப்

பட்டிருக்கின்றன. அவற்றிலே இதுவரை ஆறு துறைகளுக்கான அவர்களுடைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தருகின்ற அந்த அறிக்கைகளை மீண்டும் அரசின் சார்பில் ஆராய்ந்து அரசின் முடிவுகளை மேற்கொள்ளுவதற்காக ஒரு துணைக் குழு அமைக்கப்பட்டு, தலைமைச் செயலாளருடைய தலைமையில் அந்தத் துணைக் குழு இயங்கி வருகிறது. இதுவரை தரப்பட்டுள்ள ஆறு அறிக்கைகளைப் பரிசீலித்து வருகிறது. அப்பரிசீலனை முடிந்தபிறகு அவைகளைப்பற்றிய அறிக்கைகள் அவையிலே வைக்கப்படும்.

**திரு. நா. வீராசாமி :** நம்முடைய பப்ளிக் சர்விஸ் கமிஷன் நல்ல திறமையான முறையில் டெபுடி கலெக்டர்களையும், டி.எஸ்.பி.-க் களையும், தேர்ந்தெடுக்கிறது. இன்றையதினம் நிர்வாகத்தில் 'காடர் போஸ்ட்', 'நான்-காடர் போஸ்ட்' என்று இருப்பதில், நான்-காடர் பதவிகள் ஐ.ஏ.எஸ்.-க்குச் சமமாக இருக்கின்றன. தமிழ்நாடு அட்மினிஸ்ட்ரேடிவ் சர்விஸில் அப்படிப்பட்ட பதவிகளை உருவாக்கி, நம்முடைய பப்ளிக் சர்விஸ் கமிஷன் மூலமாக நபர்களைத் தெரிந்தெடுக்கலாம் என்பது குறித்து ஏதாவது சிபார்சு செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** குழு அப்படியொன்றும் சிபார்சு செய்ததாகத் தெரியவில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய பிரச்சினையைப்போன்று ஒரு புதுமையான மாறுதல் தேவை என்கிற எண்ணம் நாட்டில் இருந்து வருகிறது. அதுபற்றி அரசு தேவையானபோது யோசிக்கும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** இந்தக் குழு, டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷன் சர்விஸ் சம்பந்தமான ரிபோர்டில் சர்க்காரால் கைவிடப்பட்ட புஞ்சை நில வரியை மீண்டும் கொண்டுவரவேண்டு மென்ற ஒரு சிபார்சு செய்திருக்கிறதா ? அதுபற்றி அரசின் கருத்து என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, குழு சமர்ப்பிக்கின்ற எல்லா சிபார்சுகளையுமே அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றில்லை. குழுவினுடைய அறிக்கையை வைத்தே, அது அரசின் முடிவு என்று யாரும் எடுத்துக்கொள்ளக்கூடாது. முழு அறிக்கையின்மீது துணைக் குழு பரிசீலித்துக் கருத்துத் தெரிவித்த பிறகு அரசின் முடிவுகள் அமைக்கப்படும்.



**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநிலத்திலும் தனி அட்மினிஸ்ட்ரேஷன் சர்விஸ் ஸுக்கு ஐ.ஏ.எஸ். போன்ற ஆபீசர்களை நியமனம் செய்கிற அமைப்பு முன்பு இருந்ததே, அதை மறு முறையும் கொண்டுவர இந்த அரசுக்கு உத்தேசம் உண்டா ? அப்படிச் செய்தால் அது நல்லதொரு அமைப்பாக இருக்கும் என்று அரசு கருதுகிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இந்த நிர்வாக சீர்திருத்தக் குழுவின் வேலை முழுவதும் முடிவுற்றபிறகு வேண்டுமானால், மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவருடைய யோசனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படலாம்.

*District Training for Section Officers in Secretariat*

* 92 Q.—THIRU R. R. MUNUSAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether the Tamil Nadu Secretariat Association has requested the Government to depute the Section Officers in the Secretariat for District Training; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த பிரிவு அலுவலர் 35 பேருக்கு ஓராண்டுக் காலத்திற்கு மாவட்ட நிர்வாகத்தில் பயிற்சியளிப்பதற்கான பயிற்சித் திட்டமொன்றைக் கொண்டு வந்து பொதுத் (பணிகள்-ஜே) துறையின் 16—11—1973 நாளிட்ட 2991-ஆம் எண் அரசாணையில் உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டுள்ளன. இத்திட்டம் குறித்த விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ரா. ரா. முனுசாமி:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த பிரிவு அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்தில் பயிற்சி பெற அனுப்பப்படும்போது, மாவட்ட வாரியாகவும் வட்ட வாரியாகவும் பணியாற்றவேண்டும். அவர்கள் எந்த எந்தத் துறையில் எப்படி எப்படிப் பணியாற்றவேண்டும் என்று நம்முடைய அரசு நிர்ணயித்துள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இப்பொழுது பிறப்பிக்கப் பட்ட உத்தரவுப்படி, பொதுத் துறையைக் கலந்தாலோசித்து, இத்திட்டம் குறித்த விவரங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. அதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்ட பின்னர்தான் இத்திட்டம் குறித்த விவரங்களை எடுத்துச்சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 93, 94, 95, 96 ஆகிய எண்கள் உள்ள கேள்விகள் பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைகள்

* 97 வினா—**திரு. நா. வெ. குருசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டியில் ஒன்றியத்தால் நடத்தப்படும் மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்க அரசு எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஆண்டிப்பட்டி ஒன்றிய மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக்க, 1973-74-ஆம் ஆண்டிற்கான திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. நடைமுறையில் ஏற்படுகிற தாமதம் விரைவில் நீக்கப்படும்.

**திரு. கே. என். குமாரசாமி:** ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கக்கூடிய இந்த மருத்துவ மனையை அரசு மருத்துவ மனையாக எடுத்துக் கொள்ள ஊராட்சி ஒன்றியத்தில் அதற்கு ஈட்டுப்பணம் கொடுக்கத் தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அதை விரைவில் அரசு எடுத்துக்கொள்ள முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஒவ்வொரு மருந்தகத்தையும் அரசு எடுத்துக்கொள்ளுகிறபோது, அந்த மருந்தகம் அடிப்படை வசதிகளைப் பெற்றுள்ளதாக இருக்கவேண்டும். நடைமுறையில் ஏற்படுகிற செலவைத்தான் அரசு ஏற்றுக் கொள்ளுகிறது. அடிப்படை வசதிகளை நிறைவு செய்வதற்காக அங்கங்கே பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் ஒன்றியத்திலிருந்து தரவேண்டும் என்று கேட்கப்படுகிறது. அந்த நிதி கொடுத்தவுடன்





அதுபோன்ற 15, 16 மருந்தகங்களை சேர்ந்தாற்போல் எடுத்துக் கொள்ள அரசு இசைந்திருக்கிறது. எடுத்துக்கொள்வதற்கான நடைமுறை இப்பொழுது ஆய்வில் இருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** நமது மாநிலத்தில் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலுள்ள அநேக டிஸ்பென்சரிகளில் டாக்டர் பற்றாக்குறை இருக்கிறது. இம்மாதிரி டாக்டர்கள் பற்றாக்குறை இருப்பதினால் அநேக டிஸ்பென்சரிகள் சரியாக நடப்பது கிடையாது. இப்பொழுது எம்.பி., பி.எஸ். டாக்டர்கள் அதிகமாக இருப்பதன் காரணத்தினால் அம்மாதிரி டிஸ்பென்சரிகளில் எம்.பி., பி.எஸ். டாக்டர்களைப் போடுவதற்கு அரசாங்கம் ஒத்துக் கொள்ளுமா? அந்தத் திட்டத்தைப் பற்றி கவனிக்குமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, எல்.ஐ.எம். டாக்டர்களை ஏற்கனவே நியமித்திருக்கிற ஒன்றிய மருந்தகங்களில் அவர்களைக் கொண்டு நடத்தும்பொழுது செலவு சிக்கனமாக ஆகிறது. எம்.பி., பி.எஸ். டாக்டர்களைப் போட வேண்டுமென்றால் செலவு அதிகமாக ஆகும். அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டுமென்றால் ஒன்றியம் எடுத்து நடத்தும்பொழுது ஏற்படும் செலவை விட, அதிக செலவு ஆகிறது. ஒன்றிய மருந்தகங்கள் ரூ. 15,000 செலவில் நடந்துகொண்டிருக்கிறது. அரசாங்கம் எடுத்து நடத்தவேண்டுமென்றால், அலுவலர்களை நியமிக்கவேண்டியிருக்கிறது. ரூ. 35,000 செலவாகிறது. ஒன்றிய மருந்தகங்களுக்கு ஏறத்தாழ ரூ. 8,000 முதல் ரூ. 10,000 வரையில் ஆண்டு ஒன்றுக்கு வழங்கப்படுகிறது. ஒன்றிய மருந்தகங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால், இந்த சிக்கல் ஏற்படுவது ஒரு பக்கம் இருக்க, ஒன்றியத்தின் மேற்பார்வையில் நடக்கும்பொழுது சில வசதிகள், பொது மக்களோடு தொடர்புகள் ஏற்படுகின்றன. அரசாங்கமே எடுத்துக்கொள்வது என்றால், அரசாங்க அதிகாரிகள் போய்ப் பார்த்தால் தான் பார்வையிட முடியும். மக்களுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கு உள்ளாட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் அந்தப் பொறுப்புகளை ஏற்று நடத்தவேண்டும் என்ற அடிப்படையில் இவற்றைப் பற்றி தீர்மானிக்கும் பொறுப்பும் அவர்களுக்குத் தான் இருக்கிறது.

[1974 சனவரி 23

**திரு. ஏ. எம். இராஜா:** மருந்தகங்களை அரசு எடுத்துக் கொள்ளும் திட்டம் இந்திய உப கண்டத்திலேயே நம்முடைய மாநிலத்தில் தான் செயல்படுகிறது என்று நான் கருதுகிறேன். அதே மாதிரி அரசு எடுத்துக்கொள்கிற மருந்தகங்களுக்கு மத்திய அரசு ஏதாவது மாநில அரசுக்கு உதவி செய்கின்றதா மருந்தகங்கள் நடத்துவதற்கு? இல்லையென்றால், மத்திய அரசு இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று நம்முடைய அரசு போராடிப் பெறுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** கிராம மக்களுக்கு சிறந்த மருத்துவத்தை வழங்கவேண்டும் என்ற பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களுக்கு, அவர்களுக்கே ஆட்சி உரிமை இருக்கிற காரணத்தினால் அவர்களுக்கே இருக்கிறது. மாநில அரசுக்கும் இருக்கிறது. இந்தத் திட்டங்களை விரிவுபடுத்தி நடத்தவேண்டும் என்று சொல்லிவருகிற பொறுப்பு மத்திய சர்க்காருக்கு இருக்கிறது. மத்திய அரசு ஆலோசனை வழங்குகிறதே தவிர, நிதி வழங்குவதில்லை. மாநில அரசு தனது திட்டங்களுக்கு குறிப்பிட்ட அளவுக்கு நிதி வழங்குகிறது. ஒன்றிய மருந்தகங்களை அரசு ஏற்றுக்கொள்வதோ, அல்லது புதிய மருந்தகங்களை ஏற்படுத்த வேண்டுமென்பதோ அதை ஒன்றியம் தான் செய்யவேண்டும்.

**திரு. நா. வெ. குருசாமி:** ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கட்டட வசதி இருக்கிறது. நிர்வாகச் செலவில் அதிகமாக அரசு ஈடுபாடு கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஆகவே, மருந்தகத்தை உடனே அரசு மேற்கொண்டால் அங்குள்ள பொது மக்கள் பயன் அடைவார்கள். ஆகவே, அதை அரசு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** எந்த ஒரு பிராந்தியத்தில் இருந்தாலும் மருந்தகங்களுக்கு ஒரு ஆண்டுக்கு குறைந்தது ரூ. 20,000 அளவுக்கு ஒன்றியம் செலவிட்டுக்கொண்டு தான் நடத்த முடியும். அரசாங்கம் எடுத்தவுடன் ஒரு ஆண்டுக்கு ரூ. 30,000 முதல் ரூ. 40.000 வரையில் செலவு ஆகிறது. அதற்கு முன் பணம் ரூ. 10,000, 15,000 'ஃபார் தி அதர் அரேஞ்மெண்ட்ஸ்' அதற்கு வேண்டிய சில ஏற்பாடுகள், திருத்தங்கள் அல்லது பழுதுபார்த்தல் இவைகளுக்கு ஆகிற செலவை முன்பணமாகக் கட்டவேண்டுமென்று நாங்கள் ஒன்றியத்தைக் கேட்கிறோம். அந்தத் தொகையை உடனே கட்டுவதற்கு அங்கத்தினர் அவர்கள் முயற்சிப்பார்களேயானால் பயன் தரும்.



1974 சனவரி 23]

* 98 **வினா—திரு. கோ. இளங்கோவன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பூதலூர் பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்தில் இருக்கும் செங்கிப்பட்டி மருந்தகத்தை அரசின் நேரடி நிர்வாகத்தில் கொண்டுவரும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தற்போது இல்லை.

## பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்கள்

* 99 **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-73 ஆம் ஆண்டில் எந்தெந்த நகராட்சி மன்றங்கள் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்களுக்கென அரசிடம் கடன் கோரியுள்ளன?

(இ) எந்தெந்த நகராட்சி மன்றங்களுக்குக் கடன் அனுமதிக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) 8 நகராட்சி மன்றங்கள் 1972-73 ஆம் ஆண்டில் பாதாள சாக்கடை அமைப்புத் திட்டங்களுக்கென அரசிடம் கடன் கேட்டன. அரசு இந்த 8 நகராட்சி மன்றங்களுக்கும் 1972-73 ஆம் ஆண்டிற்கு கடன் தொகை வழங்கியுள்ளது. நகராட்சி மன்றங்களின் பெயர்களும் கடன் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு:—

| | ரூபாய். |
|---|---|
| 1. பெரியகுளம் | 1,85,000 |
| 2. மன்னார்குடி | 17,800 |
| 3. திருநெல்வேலி | 10,84,000 |
| 4. கும்பகோணம் | 1,30,600 |
| 5. காஞ்சீபுரம் | 6,61,000 |
| 6. கோயம்புத்தூர் | 3,62,000 |
| 7. திருச்சி | 6,87,000 |
| 8. திருவொற்றியூர் | 3,51,000 |

[1974 சனவரி 23

**திரு. என். டென்னிஸ்:** எந்த அடிப்படையில் இந்த முனிசிபாலிடிகளுக்கு இது தரப்படுகிறது? மாவட்ட அடிப்படையில் இந்த லோன் தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மாவட்ட அடிப்படையில் ஒதுக்குவது என்பதெல்லாம் தேவைகளை நிறைவு செய்வதற்கு வாயில்களை தெளிவாக்குவதற்கு உகந்தது அல்ல. மாறாக, ஒரு நகர சபை, நகரசபைத் தலைவர், உறுப்பினர்கள் தங்களுடைய தேவைகளை, திட்டத்தின் அவசியத்தை எடுத்துச் சொல்கிறார்கள். இந்தத் திட்டங்கள் பரிசீலிக்கப்படுகின்றன. அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மொத்த செலவு எவ்வளவு என்பது ஆய்வு செய்யப்படுகிறது. நிறைவேற்றுவதற்கு ஆகிற காலம், 8 ஆண்டு காலம், 4 ஆண்டு காலம் என்று தீர்மானிக்கப்படுகிறது. ஆண்டுக்கு இவ்வளவு தொகை தேவை, எவ்வளவு கடன் பெறுவது என்பது ஆலோசிக்கப்பட்டு ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலம் கடன் கேட்கப்படுகிறது. அந்தக் கடனை வைத்து நிறைவேற்றப்பட்ட திட்டத்தை பயன்படுத்தி நகர மக்கள் திருப்பிக் கட்டுகின்ற வாயில்களும் ஆராயப்படுகின்றன. இப்படி பல்வேறு கட்டங்களில் ஆராயப்படுகிறது. ஆகவே, மாவட்ட அடிப்படை அல்லது வட்டார அடிப்படை என்பது அவசியமில்லை.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற பொழுது மன்னார்குடி நகராட்சிக்கு ரூ. 17,800 என்று சொன்னார்கள். ரூ. 17,800 மன்னார்குடி நகராட்சி கேட்டார்களா? அரசாங்கம் ரூ. 17,800 மட்டும் ஒதுக்கினார்களா? அது அந்தத் திட்டத்திற்குப் போதுமானதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு கடன் கொடுக்கிறபொழுதும், இந்தத் திட்டங்கள் 1, 2, 3 என்று படிப்படியாக நிறைவேற்றப்படுகின்றன. ஏற்கனவே திட்டம் நிறைவேற்றி மிச்சம் ரூ. 17,800 தேவை என்றால் அதைத் தான் கொடுப்பார்கள். அதிகக் கடன் கேட்கவில்லை என்று அங்கத்தினர் அவர்கள் குறைபட்டுக்கொள்ளக் கூடாது.

**திரு. என். மருதாசலம்:** கோவை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் இன்னும் பூர்த்தி ஆகவில்லையே? கோவை நகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்திற்காக அரசினிடம் கடன் கேட்டுள்ளார்களா?



1974 சனவரி 23]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஏற்கனவே தரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட கடன் தொகை ரூ. 3,62,000 பாதாள சாக்கடைத் திட்டத்திற்காகத் தரப்பட்டுள்ளது. ஆனால், சில மாவட்டங்களில் குறைவு என்றால், அதை நிறைவேற்றும் பொழுது மேலும் கடன் தேவையானால், அவர்கள் கேட்பார்கள். முறைப்படி வழங்கப்படும்.

*100. வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்திற்கென பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) திருச்சி நகரத்திற்கான பாதாள சாக்கடை அமைக்கும் திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் 25—5—1970-ல் அளிக்கப்பட்டு, வேலைகள் படிப்படியாக நடைபெறுகின்றன.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** திருச்சி நகரத்தின் பாதாள சாக்கடை திட்டத்திற்கு எவ்வளவு செலவு செய்வதாக திட்டமிடப்பட்டுள்ளது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மொத்த செலவு ரூ. 2,85,06,000 என்று போடப்பட்டிருக்கிறது. ஒரு ஆண்டுக்கு குறிப்பிடப்பட்டுள்ள செலவு ரூ. 7,57,000 என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** அரசாங்கம் இதற்கு ஏதாவது மானியம் வழங்கியிருக்கிறதா அல்லது இனிமேல் வழங்குவதை குறித்து ஆலோசனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தனியாக ஒரு நகரசபைக்கு மானியம் வழங்குவது என்பது இயலாத காரியம். கடன் வழங்க, வதற்கான திட்டம், முழு அளவிற்கு கடன் தொகை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதே ஒரு பெரிய முயற்சி.

[1974 சனவரி 23

**கோவை மாவட்டத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு**

*71. **வினா—திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள நகராட்சிப் பகுதிகளிலுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவுக்கென ரொட்டி வழங்கப்படுகின்றதா?

(இ) ஆம் எனில், இது மதிய உணவுக்குப் பதிலாக வழங்கப் பட்டதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**சிறுவாடா அரிசனக் காலனியில் சமுதாயக்கூடம்**

*72 **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் 12—3—1973 அன்று வினா எண் 332-ன் மீதான துணை வினாவுக்கு அளித்த விடையையொட்டி தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், சிறுவாடா அரிசனக் காலனியில் சமுதாயக்கூடம் அமைக்கும் திட்டத்தின் மீதான மறு பரிசீலனை முடிந்து விட்டதா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** சிறுவாடா அரிசனக் காலனியில் சமுதாயக்கூடம் 1973-74-ம் ஆண்டில் கட்ட, அண்மையில், அதாவது 28—9—1973-ல் அரசு அனுமதியும், அதற்குத் தேவையான செலவு தொகையும் வழங்கியுள்ளது. கூடிய சீக்கிரம் கட்டி முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கா. வேழவேந்தன்:** சென்ற ஆண்டுக்கு முன்னாலேயே இந்தத் திட்டம் துவங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டது. இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து:** கட்டடம் கட்ட துவங்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். சீக்கிரம் கட்டடம் கட்டி முடிக்கப்படும்.



1974 சனவரி 23]

**ஏடூர் அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர்த்தொட்டி**

*73 **வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஏடூர் அரிசனக் காலனியில் மேல்நிலைக் குடிநீர்த் திட்டம் அமைக்கும் பணி எப்போது முடிவடையும்?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** கும்முடிப்பூண்டித் துணை வட்டம், ஏடூர் அரிசன காலனியில் மேல்நிலைக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றும் பொருட்டு முதலில் குழாய்க்கிணறு நடப்பு ஆண்டிலேயே அமைக்க செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளார்.

**திரு. கா. வேழவேந்தன்:** இந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து, இந்த ஆண்டு இறுதிக்குள் திட்டம் நிறைவேறுவதற்கு சிறப்பு ஆணை பிறப்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** முதலில் ஒரு போர் வெல் போட வேண்டும் என்று கலெக்டர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதற்கு ரூ. 5,000 செலவு ஆகும். அதற்கான தண்ணீர் கிண்டி இன்ஸ்டிட்யூட்டிற்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டு பரிசோதனை முடிந்தவுடன் இந்த குடிநீர் மேல்நிலைத் தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர் கிண்டி இன்ஸ்டிட்யூட்டிற்கு எப்பொழுது அனுப்பப் பட்டது? அங்கிருந்து பதில் எப்பொழுது எதிர்பார்க்கப்படுகிறது?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** அதைப்பற்றிய விவரம் தற்பொழுது இல்லை.

[1974 சனவரி 23

## கொரூரிலுள்ள அயன்குளத்தைப் புதுப்பித்தல்

*101 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை வட்டம், கொரூர் அயன்குளத்தைப் புதுப்பிக்கும் திட்டம் எப்போது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது?

(இ) தற்போது எந்த நிலையில் உள்ளது?

(உ) காலதாமதத்திற்குரிய காரணம் யாது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) 1968-ம் வருடம்.

(இ) & (உ) எதிர்பார்க்கப்படும் உணவு உற்பத்திக்கு ஆகும் செலவும், நில ஆர்ஜிதத்திற்காக ஒதுக்கப்பட வேண்டிய தொகையும் மிக அதிகமாக இருந்ததால், இத்திட்டம் 1970-ல் கைவிடப்பட்டது. பின்னர், இத்திட்டம் மறுபடியும் பாசனப் பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்ட ரூ. 1.62 லட்சத்திற்கான மதிப்பீட்டுடன் உற்பத்தி வருவாய் வாரியத்தின் மூலம் அரசுக்கு ஜனவரி 1973-ல் பரிந்துரைக்கப்பட்டு அரசிற்கு வந்துள்ளது. இது சிக்கனமற்ற திட்டமாதலால் இத்தகைய திட்டங்களுக்கென நிதி ஒதுக்கப்பட்டால் எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** இந்த கொரூர் பகுதி மிகமிகப் பின்தங்கியபகுதி. மக்கள் குடிப்பதற்கும் தண்ணீர் இல்லாமல் சிரமப்படுகிற பகுதி. ஆகவே, கொஞ்சம் அனுதாபத்தோடு இதை அனுமதி விரைவிலே முடித்துத் தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதில் அனுதாபம் இருக்கிறதா, இல்லையா என்பதல்ல பிரச்னை. சிக்கனமற்ற திட்டம் என்று அரசாங்கம் இதை ஒத்தி வைத்திருக்கிறது. சிக்கனமற்ற திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்படும்போது இதுவும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படும்.



1974 சனவரி 23]

## வடார்க்காடு மாவட்டத்தில் புதிய அணைக்கட்டுகள்

*102 வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆண்டியப்பனூர் அருகே பாம்பாற்றின் குறுக்கே அணை ஒன்று கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) அதன் மதிப்பீடு ரூபாய் நாற்பத்தைந்து லட்சங்கள். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. தொ. ப. சீனிவாசன்:** தலைவர் அவர்களே, போளூர் தொகுதியில் ஜவ்வாது மலை அருகே சண்பக அணை கட்ட ஏற்கனவே திட்டமிடப்பட்டிருக்கிறதா என அறியவிரும்புகிறேன். ஆமென்றால், அதை அரசு ஏற்றுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

*103 வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், புல்லூர் அருகே பாலாற்றில் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) ஆம்.

(இ) பாலாற்றின் குறுக்கே புல்லூர் கிராமத்தினருகே அமைக்கப்படவிருக்கும் நீர்த்தேக்கத்திற்கு மதிப்பீடும், வரைபடங்களும், பாசனத் தலைமைப் பொறியாளர் அவர்களின் அலுவலகத்தில் பரிசீலனையில் உள்ளன.

## மதுரை-குமுளி சாலை

*104 வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-குமுளி சாலையினை அகலப்படுத்த திட்டமிடப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்படும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இவ்வேலையை சேர்த்து 'மாநில அரசு வேலையாக' இதை எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**திரு. நா. வெ. குருசாமி:** தலைவர் அவர்களே, இந்த மதுரை-குமுளி சாலை தார் ரோடுக்கு இரு புறமும் மிகவும் பள்ளமாக இருக்கிறபடியால், போக்குவரத்துக்கு மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. குறிப்பாக, அப்பகுதியில் செல்லும் பாண்டியன் போக்குவரத்து பஸ்களும், லாரி போன்றவைகளும் சேதப்படுகின்றன. இதனால் டயர்கள் எல்லாம் பஞ்சராகி இடையிலே நிற்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இச்சாலையை அகலப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அதற்காகத்தான் நான் அகலப்படுத்துவதற்காக, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே இத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** மதுரை–தேனி ரோடினுடைய ஒரு பகுதியாக, இந்த மதுரை-குமுளி சாலை இருக்கிறது. ஏற்கனவே, ஜவஹர்லால் நேரு அவர்கள் வந்தபொழுது அந்த ரோடைக் கொஞ்சம் அகலப்படுத்தினார்கள். இப்பொழுது அந்த ரோடை அகலப்படுத்த வேண்டியது ரொம்ப அவசரமாக இருக்கிற காரணத்தாலே, வருகிற 1974-75-ல் இதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப் படும் என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இதற்காக மொத்தம் ரூ. 22.5 இலட்சம் செலவாகும். அது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறது. நிதிநிலையைப் பொறுத்து எடுத்துக்கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

## இரயில் பாதைகளை மாற்றியமைத்தல்

*105 வினா—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலிருக்கும் மீட்டர் கேஜ் ரயில் பாதைகளை எல்லாம் பிராட்கேஜ் பாதைகளாக மாற்றக்கோரி மத்திய அரசுக்கு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தமிழகத்தில் இருக்கும் சில மீட்டர் கேஜ் இரயில் பாதைகளை பிராட்கேஜ் பாதைகளாக மாற்றக்கோரி மத்திய அரசுக்கு பரிந்துரை செய்துள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Works whether the Salem-Bangalore metre gauge lines will be converted into broad-gauge lines ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Sir, we have not recommended that scheme.

**திரு. ஆ. பரந்தாமன் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே சில ரயில் பாதைகளை பிராட்கேஜாக மாற்ற வேண்டுமென்று முதலமைச்சர்கள் மாநாட்டிலே நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஐந்தாண்டு திட்டத்திலே சேர்க்க வேண்டுமென்று வற்புறுத்தினார்களே, அதில் எந்த எந்தத் திட்டங்களை மத்திய அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது என்று அறியலாமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** எந்தத் திட்டத்தையும் மத்திய அரசு இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை. முதல்வர் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் பரிசீலனையில் இருப்பதாகத் தான் தகவல் இருக்கிறது.

**திரு. ஓ. என். சுந்தரம் :** தலைவர் அவர்களே, கரூர்-திண்டுக்கல் தூத்துக்குடி அகல ரயில் பாதை ஏற்கனவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

அப்படி சேர்க்கப்பட்டு, சர்வே எடுக்கப்பட்ட அந்தத் திட்டத்தை முதல் பிரையாரிட்டியாகக் கொண்டு, நிறைவேற்ற அரசு முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சேலத்திலிருந்து திண்டுக்கல் வரையில் கரூர் வழியாக புதிய ரயில் பாதை போடும் திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருந்து, மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் ரெயில்வே சிபாரிசு செய்யுயப்பட்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் ரெயில்வே அமைச்சரோடு பேசும்போது, இதை வலியுறுத்திக் கூறி இருக்கிறார்கள்.

திரு. க. உரா. எட்மண்ட்: சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையில் இருக்கும் ரயில் பாதையை அகலப் பாதையாக்க அரசு சிபாரிசு செய்திருப்பதாக பத்திரிகையில், படித்த ஞாபகம் எனக்கு இருக்கிறது. மணியாச்சியிலிருந்து தூத்துக்குடிக்கு அந்தப் பாதை விலகிச் செல்கிற காரணத்தால், மணியாச்சியிலிருந்து திருநெல்வேலிக்கு 18 மைல்தான் இருக்கிறது. ஆகவே, அப்பாதையை அகலப் பாதையாக்க அரசு சிபாரிசு செய்யுமா? கூடுமானால், புதிதாக அமைக்கின்ற கன்னியாகுமரி பாதையையும் அகலப்படுத்திப் போட இந்த அரசு சிபாரிசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சென்னையிலிருந்து தூத்துக்குடி வரையில் நேரடியாக அகலப் பாதை போட நாம் சிபாரிசு செய்யவில்லை. ஆனால், மணியாச்சியிலிருந்து அந்தப் பாதையை அகலப்படுத்தி அமைக்க வேண்டுமென்று நாம் சிபாரிசு செய்திருக்கிறோம். அதை அவர்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

THIRU B. VENKATASWAMY : Sir, I came to understand that it is the policy of the Government of India to lay broad-gauge lines because the metre-gauge lines are not economical. May I know from the Hon. Minister for Works whether our State Government had recommended the conversion of metre-gauge lines into broad-gauge lines and if so whether the Government of India has accepted the proposal to convert them into broad-gauge lines ?



**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கிற இருப்புப் பாதைகளை அகல இருப்புப் பாதைகளாக மாற்றுவது என்று சொன்னால் வருவாயைப் பொறுத்துத் தான் மாற்றமுடியும், சிக்கனம் உள்ளதாக இருக்குமா என்று பார்த்துதான் செய்ய முடியும் என்று சொல்கிறது மத்திய அரசு. மாண்புமிகு அங்கத்தினர் சொல்வது போல் எந்தக் கருத்தும் இருப்பதாகத் தெரியவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, அண்மையிலே மத்திய ரயில்வே அமைச்சர் திரு. மிஸ்ரா அவர்கள் இங்கே விஜயம் செய்தார்கள். அவர்களோடு என்னென்ன பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. என்ன முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அவர்களை நான் சந்திக்கவில்லை.

## நெல்லை மாவட்டத்திலுள்ள கோட்ட நிலநீர் பொறியாளர் அலுவலகம்

*106 வினா—**திரு. தி. சி. அ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் Tamil Nadu Ground-Water Engineering Division நிர்வாகப் பொறியாளர் அலுவலகம் (Executive Engineer) எப்பொழுது திறக்கப்பட்டது?

(இ) அந்த அதிகாரி தன் கீழ் வேலை பார்க்க எந்தெந்த வேலையாட்களை நியமனம் செய்திருக்கிறார்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) 4—12—1971 அன்று தொடங்கப்பட்டது.

(இ) கீழ்க்கண்ட சிப்பந்திகள் திருநெல்வேலி நிலநீர்க் கோட்டம் நிலநீராளர் அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளனர்:—

| | |
|---|---|
| 1. படிவரைவாளர் | 1 |
| 2. நீலப்படிவரைவாளர் | 1 |
| 3. கடைநிலை ஊழியர்கள் | 7 |

| | | |
|---|---|---|
| 4. | காவல்காரன் | 4 |
| 5. | இரசாயன உதவியாளர் | 1 |
| 6. | பணி உதவியாளர்கள் | 7 |
| 7. | உதவி துணையர்கள் | 1 |
| 8. | உதவியாளர், முதல்நிலை | 18 |
| 9. | உதவியாளர், இரண்டாம்நிலை | 13 |
| 10. | வடிவரைவாளரும் களப்பணியாளரும் | 1 |
| 11. | ஓட்டுநர் (பெரிய ஊர்திகள்) | 3 |
| 12. | ஓட்டுநர் (சிறிய ஊர்திகள்) | 4 |
| 13. | சுத்தம் செய்பவர் | 1 |

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** தலைவர் அவர்களே, வேலை நியமனம் செய்யப்பட்டவர்களில் சிலபேர் வேலைதேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலம் தேர்வு செய்யப்படவில்லையென்று அரசுக்கு ஏதாவது புகார் வந்ததா? அரசு அதன்மேல் எடுத்த நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** ஏற்கனவே, எல்லா வேலைகளுக்கும் வேலை தேடித் தரும் ஸ்தாபனத்தின் மூலம் தான் ஆட்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அங்கத்தினர் சொல்வதுபோல் ஏதேனும் புகார் இருந்து, அதுபற்றி குறிப்பு தருவாரானால், அரசு விசாரிக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்த கிரவுண்ட் வாட்டர் இன்ஜினீயரிங் டிவிசனிலே நாம் கிரவுண்டில் வாட்டர் இருக்கிறதா என்று சோதனை செய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டால் அதற்கு ஏதாவது கட்டணம் செலுத்த வேண்டுமென்று விதி இருக்கிறதா? அல்லது அவர்கள் எந்தவிதமான கட்டணமும் பெறாமல் சோதனை செய்து தண்ணீர் இருக்கிறது என்று அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** கட்டணம் இல்லையென்று கருதுகிறேன். தனியாகக் கேள்வி கேட்டால் விவரங்கள் சேகரித்துக் கொடுக்கலாம்.





*Production of Mangoes*

*107 Q.—Thiru N. DENNIS: will the Hon. the Minister for Agriculture be pleased to state the total quantity of mangoes grown in this State and the total quantity exported during this year?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, 1971-72-ல் 290,000 டன் மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டன 12 டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

**திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, மாம்பழ உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை? முந்தைய ஆண்டைவிட கடந்த ஆண்டில் ஏற்றுமதி அதிகரித்திருக்கிறதா? மாம்பழமாக அனுப்புவதை விட, பக்குவப்படுத்தி, ஃப்ரூட் ஜூஸாக அனுப்ப அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, மாம்பழங்கள் பக்குவம் செய்துதான் அனுப்பப்படுகின்றன. டின்களில் அடைத்து இப்பொழுது அனுப்பி வருகிறோம். முக்கியமாக ரஷ்ய நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9.30)

Thiru B. VENKATASWAMY: Sir, I came to understand that there is a large area in mango plantation in Dharmapuri district. May I know from the Hon. Minister for Agriculture whether any package scheme will be implemented so as to increase the export potential which is already there and also to cater to the export needs?

The Hon. Thiru Si. Pa. ADITANAR: There is not only great export potential but there is also a good internal market. It is quite true that Dharmapuri district is one of the largest producing areas as far as mangoes are concerned. As a matter of fact, the Dharmapuri district leads in the production of mangoes and the suggestion of the hon. Member would be taken into account.

**திரு. த. சோனையா:** தலைவர் அவர்களே, வெளிநாட்டுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறதே, அது உபரியாக இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 சனவரி 23

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, இந்த நாட்டில் டின்னிலே அடைத்த மாம்பழங்களை அதிகம் சாப்பிடுவது இல்லை. பழங்களாகச் சாப்பிடுகிறார்கள். ஏறத்தாழ 3 லட்சம் டன்னில் 12 ஆயிரம் டன் மட்டும் டின்னில் அடைத்து வெளிநாட்டுக்கு அனுப்பி வருகிறோம்.

### *Research on Pine apple*

* 108 *Q.*—THIRU R. R. MUNUSAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any research into the cultivation and production of Pine apple has been conducted in this State; and

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்த ஆராய்ச்சியை நடத்தி வருகிறது.

**திரு. ரா. ரா. முனுசாமி:** அன்னாசிப் பழம் நமது மாநிலத்தில் எந்த எந்த மாவட்டத்தில் விளைவிக்கப்படுகிறது என்று அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** சேலம் மாவட்டத்தில் விளைகிறது. இப்போது தெடாற்காடு மாவட்டத்தில் விளைவிக்க திட்டங்கள் செயல்முறைக்கு வந்து கொண்டிருக்கிறது.

**திரு. நா. வீராசாமி :** இன்றையதினம் அன்னாசிப் பழத்தை நம்பி கன்னியாகுமரியில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிற காரணத்தினால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசாங்க நிலத்தில் அன்னாசிப் பழத்தை பயிரிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தத் தொழிற்சாலை இன்னும் துவங்கப்படவே யில்லை. ஆரம்பிக்கப்பட்டு மூடப்படவில்லை. அன்னாசிப் பழம் அங்கே தாராளமாகக் கிடைக்கிறது. மற்ற இடங்களிலும் புதிதாக உற்பத்தி செய்யப்படுகிறது.



1974 சனவரி 23]

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** இந்தத் தொழிற்சாலையைத் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன. அதுபற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா? அப்படி இருந்தால் அரசாங்கம் அதனை வரவேற்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** திரு. பொன்னப்ப நாடார் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்குத்தான் 2 லட்சம் ரூபாய் அந்தத் தொழிற்சாலையை துவக்க அளிக்கப்பட்டிருக்கிறது. அதை இன்னும் தொடங்கக்கூடிய நிலைமை வரவில்லை. அதனால் திறப்பு விழா நடத்துவதற்குரிய சாத்தியக் கூறுகள் வரவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொன்னப்ப நாடார் கட்சியைச் சார்ந்த ஒருவருக்கு 2 லட்சம் வழங்கியதாகச் சொன்னார். அது தவறு, அவர் எங்கள் கட்சியைச் சார்ந்தவர் அல்ல. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர் என்பதை அமைச்சர் அவர்களுக்கு அறிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I would like to have a clarification. The Hon. Minister was saying that the person to whom the money had been given is a member who belongs to my party. May I know the name of that member, at whose instance sanction was made and whether that sanction has been made at the instance of the present Minister for Agriculture who was then holding the portfolio of Co-operation and whether he was not responsible for it ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : The name of the gentleman who received the money is Thiru Ramachandra Nadar. Whether he belongs to his party still, I do not know (laughter). When he received the money he belonged to that party. The person who sanctioned the money was myself.

### *Incentives for cultivation of papayas.*

* 109 *Q.*—THIRU R. R. MUNUSAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have offered any incentives for cultivating papayas in this State; and

(*b*) if so, the details thereof ?

[1974 சனவரி 23

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) & (இ) பயிர் செய்ய விரும்புகிறவர்களுக்கு விதை வழங்குவதைத் தவிர, வேறு சலுகை இல்லை.

**திரு. ரா. ரா. முனுசாமி :** ஊராட்சி ஒன்றியங்களில் அப்படிப் பயிர் செய்ய முன்வந்தால் விதைகள் அளிப்பதோடு, சலுகைகளும் அளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இப்போது நல்ல தரமுள்ள விதைகளை வழங்கி வருகிறோம். வேறு சலுகைகள் தேவைப்படுமானால் கவனிக்கப்படலாம். இப்போது பப்பாளிப் பழம் தயாரிக்க திட்டம் எதுவும் கைவசம் இல்லை.

**திரு. ஆ. பரந்தாமன் :** பப்பாளி, அன்னாசி, மாம்பழம் போன்ற உயர்ந்தரக பழங்கள் பற்றி, வடக்குக் குடகு பகுதியில் கத்தாலி ஆராய்ச்சி நிலையத்தை மைசூர் மாநிலம் வைத்திருப்பதைப்போல தமிழ்நாட்டிலும் ஒரு ஆராய்ச்சி நிலையத்தைத் துவங்க அரசு முன் வருமா ?.

**மாண்புமிகு திரு. சிபா. ஆதித்தனார் :** தமிழ்நாட்டில் ஒன்று அல்ல, அதைப்போல 5 ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. ஆராய்ச்சிக்குக் குறைவு இல்லை. பப்பாளியை உயர்ந்த ரகம் என்று உறுப்பினர் சொல்வதை நான் ஏற்பதற்கில்லை. அதுதான் மிகக் குறைந்த விலையில் விற்கப்படுகிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** காலஞ்சென்ற ஜி.டி. நாயுடு அவர்கள் பப்பாளியில் அதிகப்படியான ஆராய்ச்சி நடத்தி, அரசுக்கு ஒரு அறிக்கையே கொடுத்திருக்கிறார்களே, அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** அதிசய மனிதர் ஜி.டி. நாயுடு உயர்ந்த ரக பப்பாளி ரகத்தை உற்பத்தி செய்தார்கள். அதன் விதையை நானும் வாங்கி வந்து என் வீட்டில் வளர்த்துப் பார்த்தேன். அரசாங்கமும் அந்த ரகத்தைத்தான் விருத்தி செய்து மக்களுக்குக் கொடுத்து வருகிறார்கள்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** வடமாநிலத்தைச் சேர்ந்த மக்கள் உணவிற்குப் பிறகு பப்பாளிப் பழத்தைச் சாப்பிடுவதால் தளதளவென்று இருக்கிறார்கள். அதைப்போல தமிழக மக்களும் சாப்பிட ஆவன செய்வார்களா ?



1974 சனவரி 23]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : வட மாநிலத்தில் உள்ளவர்கள் மட்டுமல்ல, வெளிநாட்டில் உள்ளவர்களும் சாப்பிடுகிறார்கள். ஒரு பழம் அங்கே நான்கைந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால் ஏற்றுமதி செய்ய, வெகு தூரம் கொண்டு செல்ல சாதனம் இல்லை. சீக்கிரம் கெட்டுப் போகிறது.

THIRU B. VENKATASWAMY : Sir, I came to understand that there is a very great demand for raw papayi juice in America and whether such a demand has been received from America and if so, what are the steps taken by the Government in that regard ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : What is demanded in America is not the juice of the fruit but it is the papayi which is taken out of the skin of the fruit. We are exporting some quantity of it.

THIRU K. M. SUBRAMANIAM : Is the Hon. Minister aware of the fact that the Food Processing Unit at Katpadi in the North Arcot district is not working .........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பப்பாளி பழத்தைப் பற்றி.

THE HON. THIRU SI. PA. ADITANAR : It is quite correct We are not able to do full justice in regard to export because of want of fruits for feeding the food processing unit ?

THE HON. THIRU Si. Pa. ADITHANAR : It is quite correct that the fruit processing unit in North Arcot at Katpadi is not working to full capacity for want of fruits. We have tried to can tomatoes but there is no good export market. We also tried to can mangoes and there is not very great demand for mangoes.

But there is ample demand for pine apple and we are able to export it even to places like Palghat and Tiruchur in Kerala which is near the hon. Member's original home. (Interruption from Thiru K. M. Subramaniam). We are now trying to can it in North Arcot district.

[1974 சனவரி 23

## பலாப்பழ உற்பத்திக்குக் கடன்

* 110 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பலாப்பழங்களை உற்பத்தி செய்ய அரசு ஏதேனும் உதவி வழங்கி வருகின்றதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

## தாசானிட் மீதான சுங்க வரி

* 111 வினா.—**திரு. கு. அ. பொம்மன் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாசானிட் இறக்குமதி மீதான சுங்க வரியை விலக்களிக்கும்படி மத்திய சர்க்காரை இவ்வரசு கேட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** உருளைக் கிழங்கைத் தாக்குகிற பூச்சிகளை ஒழிக்க ஜெர்மனியிலிருந்து தாசானிட் என்ற இந்த மருந்து வரவழைக்கப்பட்டது. அந்த மருந்திற்கு விலையில்லை. ஆனால் அதற்கு இறக்குமதி வரியாக 56,42,000 ரூபாய் மாநில அரசால் செலவிடப்பட்டது. அந்தப் பணத்தைத் திரும்பத் தந்துவிடவேண்டுமென்று மத்திய அமைச்சருக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன்.

**திரு. கு. அ. பொம்மன் :** தலைவர் அவர்களே, இந்த தாசானிட்டுக்கு சுங்கவரி விதிக்கப்படுவதால் விவசாயிகளுக்கு வரிச் சுமை அதிகமாகிறது. ஏக்கருக்கு குறிப்பிட்ட தொகையை இதற்காக வசூலிக்கிறார்கள். இதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு மீண்டும் இந்த அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவர் அவர்களே, அதைப்பற்றி நானே நேரிலே கடிதம் எழுதியிருக்கிறேன், நேரில் பேசியும் இருக்கிறேன். அடுத்த தடவை நம்முடைய மாநிலத்திலிருந்து அமைச்சர்கள் செல்லும்பொழுது இதுபற்றி அங்குள்ள விவசாயத் துறை அமைச்சரிடம் நேரில் வற்புறுத்திக் கேட்க



1974 சனவரி 23]

வேண்டுமென்றிருக்கிறோம். இந்த 56,42,000 ரூபாயை அவர்கள் திருப்பித் தந்தால் அதை எவ்வாறு விவசாயிகளுக்குச் சலுகைகளாகக் கொடுக்க முடியும் என்பது ஆராயப்படும்.

**திரு. எம். தேவராசன் :** கோல்டன் நெமடோட் நோய் இந்த தாசானிட் மருந்தால் சரிசெய்யப்பட்டு வருகிறது. இதற்காக விவசாயிகளிடமிருந்து 100 ரூபாய் விதம்தான் முன்னாலே வசூலிக்கப்பட்டது. இப்பொழுது 250 ரூபாயாக அதை ஆக்கியிருக்கிறார்கள். ஆதலால் விவசாயிகளுக்கு சிரமங்கள் இருக்கின்றன, எனவே பழையபடி இருந்த அந்த 100 ரூபாய் விதமே 20 ஏக்கருக்கு வசூலிக்கச் செய்வதற்கு அரசாங்கம் உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நண்பர் அவர்கள் சொன்ன கருத்து ஆராயப்படும். நான் ஏற்கெனவே சொன்னபடி. இந்த மருந்து நாமாக வரவழைத்ததாக இருந்தாலும்கூட இந்தோ-ஜெர்மன் ப்ராஜக்ட் அடிப்படையிலே முற்றிலும் இனமாகக் கொடுக்கப்படுகிறது. ஆனால் அதற்கு வரி என்ற அளவிலே பெருத்த தொகையைக் கொடுக்கிறோம். 56,42,000 ரூபாய் என்று சொன்னேன். அதனால்தான் விவசாயிகளிடமிருந்து அதிகமாக வசூலிக்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை அமல் நடத்துவதினாலே அரசுக்கு எந்தவிதமான லாபமும் கிடையாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

## கோதுமை ஒதுக்கீடு

* 112 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படும் கோதுமையின் மாதாந்திர சராசரி அளவு எவ்வளவு ?

(இ) 1973 ஆம் ஆண்டில், முதல் நான்கு மாதங்களில் வந்து சேர்ந்த கோதுமையின் அளவு எவ்வளவு? மாதவாரியாக ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) 1972-ம் ஆண்டில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு 35,000 டன் கோதுமை தமிழ் நாட்டிற்கு மத்திய அரசினரால் ஒதுக்கப்பட்டது.

(இ)

| | |
|---|---|
| சனவரி 1973 | 15,000 |
| பிப்ரவரி 1973 | 15,000 |
| மார்ச் 1973 | 15,000 |
| ஏப்ரல் 1973 | 15,000 |

## *Distribution of wheat*

*113 Q.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the basis on which the wheat allotted to Tamil Nadu by the Food Corporation of India is being distributed to the public ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஒரு குறிப்பிட்ட அளவு பொது மக்களுக்கு முழு கோதுமையாக வழங்கப்படுகிறது. எஞ்சிய கோதுமையை மைதா, ரவை, ஆட்டா, கோதுமைத் தவிடு போன்ற பொருட்களாக மாற்றப்படுகிறது. சில்லரை வியாபாரிகளுக்கும், பங்கீட்டு அட்டைகளின் பேரில் பொது மக்களுக்கும் தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகத்தின் மூலம் கோதுமை வழங்கப்படுகிறது.

சென்னை மாநகரத்திலும், மாவட்டங்களிலும் வழங்கப்படும் கோதுமை அளவு விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கோதுமை

| | | |
|---|---|---|
| கோதுமை உண்பவர்கள் | .. | 6 கிலோ கிராம் கோதுமை. |
| நீரிழிவு நோயாளிகள் | .. | 5 கிலோ கிராம் கோதுமை. |

கோதுமைப் பொருட்கள்.

| | |
|---|---|
| (அ) திங்களொன்றுக்கு ரூ. 300-ம் அதற்கு குறைவாகவும் வருவாய் உடைய குடும்பங்கள். | மைதா 1 கிலோ கிராம் ரவை 1 கிலோ கிராம். |
| (இ) திங்களொன்றுக்கு ரூ. 300-ம் அதற்கு மேல் வருவாய் உடைய குடும்பங்கள். | மைதா 2 கிலோ கிராம் ரவை 2 கிலோ கிராம். |





**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோதுமையை பழக்கமாகச் சாப்பிடக்கூடியவர்கள் சென்னையிலே ஏராளமாக இருக்கிறார்கள், குறிப்பாக பார்க் டவுனிலே ஏராளமாக இருக்கிறார்கள். முழுமையாகக் கோதுமை தரவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு கோதுமையினால் தயாரிக்கப்படுகிற மைதாவும் மற்றவையும் கொடுக்கப்படுகின்றன, கோதுமை சரியான அளவிற்கு அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய அளவில் கோதுமை பழக்கமாக சாப்பிடக்கூடியவர்களுக்கு முழுமையாகக் கோதுமை போதுமான அளவிற்குக் கொடுக்கச் செய்யக்கூடிய முயற்சிகளை அரசாங்கம் எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, கோதுமையை 35 ஆயிரம் டன்னிலிருந்து 10 ஆயிரம் டன்னாகக் குறைத்துக் கொடுப்பதை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று நாம் ஒவ்வொரு மாதமும் கேட்டுக்கொண்டிருக்கிறோம், எழுதிக்கொண்டிருக்கிறோம். கார்டு வைத்திருக்கக்கூடியவர்களுக்கு 6 கிலோ கொடுக்கப்படுகிறது. அது பற்றாது என்று சொல்கிறார்கள். மீண்டும் மீண்டும் நாம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், 10 ஆயிரம் டன்னிலிருந்து நாம் கோதுமையாகவே கொடுப்பது எவ்வளவு? மத்திய சர்க்காரிலிருந்து நம்முடைய கார்ப்பரேஷன் டன் ஒன்றுக்கு என்ன விலை கொடுத்து வாங்குகிறது ? இங்கு என்ன விலைக்கு ஒரு கிலோ கொடுக்கப்படுகிறது என்ற தகவல்களை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** அவர்கள் கொடுக்கிற பத்தாயிரம் டன்னில் சுமார் 9,000 டன்களை அரைக்கும் பொழுது 55 சதவிகிதம் மைதாவாகவும், 15 சதவிகிதம் ரவையாகவும், 8 சதவிகிதம் ஆட்டாவாகவும் கிட்டத்தட்ட 20 சதவிகிதம் தவிடாகவும் கிடைக்கின்றன. ரவை 1.30 என்ற விலையும், மைதா 1.30 என்ற விலையும், முழு ஆட்டா 1.00 விலையும், கம்பி ஆட்டா 1.00 என்ற விலையும், தவிடு 0.60 என்ற விலையும் வைத்து விற்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இப்பொழுது நாம் பார்க்கிறோம், சம்பா கோதுமை, சாதாரணக் கோதுமை என்றெல்லாம் கொடுக்கபடுகிறது. அங்கேயிருந்து வருகின்ற கோதுமையில் நாம் கோதுமையாகவே எத்தனை சதவிதம், 5 சதவிதமா? 10 சதவிதமா எத்தனை சதவிதம் கொடுக்கிறோம்?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ஆயிரம் டன்னைத் தான் கோதுமையாகவே கொடுக்கிறோம். கோதுமை சாப்பிடக் கூடியவர்களுக்கு வெளிமாநிலங்களிலிருந்து வந்துகொண்டிருந்த கோதுமையை நிறுத்திவிட்டதால் தான் இந்த முடை ஏற்பட்டிருக்கிறது.

**திரு. மா. வெ. கரிவேங்கடம் :** அமைச்சர் அவர்கள் விடையளிக்கின்ற போது வருமான அடிப்படையிலே கார்டுக்கு இத்தனை கிலோ என்று கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். தர்மபுரி மாவட்டத்திலே கடந்த நான்கு மாதங்களாக நகரத்திற்கு மாத்திரம்தான் கோதுமை கொடுக்கப்படுகிறது. மற்ற இடங்களிலே கொடுக்கப்படுவதில்லை, மாவட்டம் முழுவதும் கோதுமை, கோதுமையிலிருந்து தயாரிக்கப்படுகின்ற பொருட்கள் விநியோகம் ஆகவில்லையே என்ன காரணம் என்று கூறுவார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட அளவிற்குத்தான் நகரங்களிலேயும் மற்ற பகுதிகளிலேயும் கொடுத்து கொண்டிருக்கிறார்கள். நம்மிடம் இல்லாத நால்தான் பற்றாக்குறை ஏற்படுகிறது, முழு அளவும் நமக்கு கொடுக்கப்பட்டால்தான் நாம் அதைப்பற்றி யோசிக்கலாம்.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவர் அவர்களே, கோதுமை கோயம்புத்தூர் மாவட்டத்திலே உள்ள டையபிட்டிக் பேஷன்ட்களுக்குத்தான் கொடுக்கப்படுகிறது, மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. ஜோத்ஜி என்ற ரவை அத்யாவசியமாக இருப்பதால் அதை அதிகமாக இறக்குமதி செய்து கொடுக்க நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** ரவை என்று தனியாக நாம் இறக்குமதி செய்வதில்லை. கோதுமையிலிருந்து நாமே ரவை தயாரிக்கிறோம். மைதா, ஆட்டா, ரவை தவிடு போன்றவைகளாக ஆக்கிக் கொடுக்கிறோம். அவர்கள் கொடுக்கிற





பத்தாயிரம் டன்னில் 9 ஆயிரம் டன்களில் இவற்றைக் கொடுக்கிறோம். எது வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்ற முறையிலேதான் அப்படிக் கொடுக்கப்படுகிறது. நமக்கு நிறைவாகக் கொடுத்தால்தான் எல்லோருக்கும் கொடுக்க முடியும், இல்லாவிட்டால் கொடுக்க முடியாது என்ற நிலைமைதான் இருக்கிறது.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** சார், கோதுமையைக் கொடுக்கின்ற போது ஆட்டாவாகவும் ஆக்கிக் கொடுக்கிறார்கள். கோதுமையை அரைத்து ரவையை அப்புறப்படுத்தி, மைதாவை அப்புறப்படுத்தி அதனுடைய 'செம்லைட்ஸ்' என்று சொல்லக் கூடிய அளவிற்குத்தான் அவை தவிடாகவும் உமியாகவும் இருக்கிறது. மக்கள் சாப்பிடக்கூடிய அளவிற்கு இருந்தால்தான் ஆட்டா கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் கோதுமையையே கொடுக்கவேண்டுமென்ற முறையிலே ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** மைதா, ஆட்டா போதிய அளவு இல்லாத காரணத்தினாலேதான் 60 சதவிகிதத்தை மைதாவும், 40 சதவிகிதத்தை ஆட்டாவும் ஆக அவர்கள் விரும்பினால் வாங்கிக்கொள்ளலாம் என்று வைத்திருக்கிறோம் விரும்பினால்தான் வாங்கிக் கொள்ளலாம், இல்லாவிட்டால் வாங்கிக்கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை. முன்னாலே கொடுத்ததிலே 60 சதவிகிதம்தான் கொடுக்க முடியும் என்ற நிலைமைதான் இருக்கிறது.

## திருநெல்வேலி மாவட்டத்தில் லெவி சர்க்கரை வியாபாரிகள்

***114 வினா—திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் நியாய விலை சர்க்கரை விநியோகம் செய்ய நியமிக்கப்பட்டுள்ள சில்லறை வியாபாரிகள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் தனி நபர் எத்தனை பேர், கூட்டுறவு சங்கங்கள் எத்தனை?

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** (அ) 893.

(இ) 23—11—1973 நிலவரப்படி.

| | |
|---|---|
| தனி நபர்கள் | 384 |
| கூட்டுறவு பண்டகசாலைகள் | 505 |
| அரசு மாதிரிக் கடைகள் | 4 |

[1974 சனவரி 23

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, இந்த நியாய விலை சர்க்கரை விநியோகிப்பதிலே தனியாரைவிட கூட்டுறவு முறையில் ஓரளவு தாராளமாகக் கிடைக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் கோயில்பட்டியில் தனியாரிடமிருந்து கூட்டுற வுக்கு மாற்றிய பிறகு ஒவ்வொரு மாதமும் இருபது இருபது மூட்டைகள் ஒவ்வொரு கடையிலேயும் ஸ்டாக் வைக்கும் நிலைமை இருக்கிறது. 384 பேர் தனியார் என்றார்கள். அவர்களையும் மாற்றி எல்லா விநியோகத்தையும் கூட்டுறவுச் சங்க முறையிலே விநியோகிக்க கட்டாயமாக உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, சர்க்கார் உத்தரவு போட்ட பிறகு இந்த நடவடிக்கைகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. கோயில்பட்டியிலே 74 கடைகள் ஹைகோர்ட் டுக்குப் போய் ரிட் வாங்கியிருக்கிறார்கள். நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டே இருக்கிறோம். எவ்வளவு வேகமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு வேகமாக கூட்டுறவுத் துறையிலே செய் கிறோம். ஆகவே, கூட்டுறவுத் துறையிலே அதை விநியோகிக்கும் முறையிலே நன்றாக இருக்கிறது என்று சொன்னதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எ. சுவாமிதாஸ்:** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள அனைவரும் இப்பொழுது கோதுமையை அதிகமாக விரும்பி சாப்பிடுவதால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கோதுமையைப் பற்றி அல்ல, சர்க்கரையைப் பற்றியது.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்த சர்க் கரையை விநியோகிக்கும் முறையிலே குறிப்பிட்ட ஒரு நாளிலே, இரண்டு நாட்களிலே விநியோகிப்பது என்று முடிவு செய்து விநி யோகிக்கிறார்கள். அந்த இரண்டு நாட்களுக்குள்ளே ஜனங்கள் வந்து வாங்கிக்கொண்டால் வாங்கிக்கொள்ள வேண்டியது, இல்லை யென்றால் மீதியுள்ள சர்க்கரையை ப்ளாக் மார்க்கெட்டிலே விற்கி றார்கள். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு பல ரிப்போர்ட்டுகள் வந்திருக்கின்றன. அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? சர்க்கரை விநியோகத்தில் அது முழு வதும் தீரும் வரையில் மாதம் முழுவதும் தொடர்ந்து கொடுப்ப தற்கு அரசாங்கம் முன்வருமா?



1974 சனவரி 23]

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, இப்படி ஏதாவது கவனத்திற்கு வந்திருந்தால் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மாதம் பூராவும் மக்கள் நல்ல முறையிலே உபயோகிக்க வேண்டுமென்ற முறையிலே அதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். புதிதாக சில சொசைட்டிகளை ஏற்பாடு செய்வதால் கொஞ்சம் காலதாமதம் இருக்கிறது. அது விரைவாக நிவர்த்தியாக இருக்கிறது கூட்டுறவுத் துறையிலே செயல்படுவதால்.

## வீட்டுவசதி சிறப்புத் திட்டம்

*115 வினா—**திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டில் ஒரு லட்சம் வீடு கட்டுகின்ற திட்டத்தை அமுல்படுத்த, தமிழ்நாடு அரசுக்கு ஏதாவது உத்தரவு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, இந்தத் திட்டம் கேரள மாநிலத்திலே செயல்பட்டு மத்திய சர்க்காரின் மூலம் ஒரு இலட்சம் வீடுகள் கட்ட திறப்பு விழா நடத்தப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதேபோல் திட்டத்தை நம்முடைய மாநிலத் திற்குக் கொடுத்திருக்கிறார்களா? இல்லையென்றால் அந்தத் திட் டத்தின் பெயரால் கொடுக்காமல் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, கேரள மாநிலத்தில் இப்படி ஒரு திட்டத்தை திரு. கோவிந்த நாயர் அவர்கள் நீட்டி நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. அதன் காரண மாக இப்பொழுது அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதா இல்லையா என்ற ஆராய்ச்சியில் இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### மதுரையில் குடிசைப்பகுதி மாற்றுத் திட்டம்

* 116 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரூ. 6 கோடி செலவில் சேரி ஒழிப்புத் திட்டம் ஒன்றினை மதுரை மாநகராட்சி தயாரித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மாதிரி ஸ்லம் க்ளியரன்ஸ் ஸ்கிம் சென்னையிலே இருக்கிறது. அதற்கு அடுத்த பெரிய கார்ப்பரேஷனாக இருக்கும் மதுரையிலேயும் இப்படிப்பட்ட திட்டத்தைக் கொண்டுவரும் ஆலோசனை அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, சென்னையிலே குடிசை மாற்று வாரியம் செய்யும் வேலைகளை விட்டு வசதி வாரியம் மாவட்ட தலைநகரங்களிலே செய்து வருகிறது. அந்த அடிப்படையில் 65.82 லட்சத்தில் இப்பொழுது மதுரைக்காக திட்டங்கள் போடப்பட்டு வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன.

### *Supply of diesel oil*

* 117 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken by the Government to increase the supply of diesel oil in this State ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தற்சமயம் டீசல் எண்ணெய் கிடைப்பதில் தட்டுப்பாடு எதுவும் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, டீசல் சப்ளையை அதிகரிக்காவிட்டாலும் அது குறையாமல் இருக்கவாவது மத்திய சர்க்கார் உறுதி கொடுத்திருக்கிறார்களா ? அல்லது இந்த சப்ளை குறையாமல் இருக்க சர்க்கார் ரேஷன் முறையைக் கொண்டுவருவதற்கு உத்தேசித்திருக்கிறதா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாநிலத்தினுடைய தேவை அதிகரிக்கும்பொழுது மத்திய அரசுக்கு நாம் இது சம்பந்தமாக எழுதி அந்தத் தேவையை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். மத்திய அரசு நமக்கு எந்த உத்தரவாதமும் அளிக்க முடியாது. ஏனென்றால் மத்திய அரசுக்கே மற்ற நாடுகளிலேயுள்ள சர்க்கார்கள் உத்தரவாதம் அளிக்க முடியாத நிலைமை இந்த பெட்ரோலியம் பொருட்களிலே இருப்பதால் அவர்கள் நமக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று கூறுவது நியாயமாகாது.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பேருந்துகளில் பணியாற்றியோர்

* 118 வினா—திரு. எ. சுவாமிதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் தனியார் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த வழித் தடங்களை அரசு போக்குவரத்துத்துறை எடுத்து தேசியமாக்கிய பின்னர், அதன் காரணமாக வேலையிழந்தவர்களுள் எத்தனை பேர் வேலை கேட்டு விண்ணப்பித்துள்ளனர் ?

(இ) அவர்களுக்கு எப்போது வேலையளிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) 61 பேர்கள் வேலைக்கு விண்ணப்பித்துள்ளனர்.

(இ) அதில் 36 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, எஞ்சியுள்ளவர்களுக்கும் வேலை அளிக்க அரசு முற்படுமா ? தனியார் துறை போக்குவரத்துத் துறையில் பணியாற்றி அரசுத் துறையில் பணியாற்ற வருபவர்களுக்கும் அவர்கள் ஓய்வு பெற்ற பிறகு ஓய்வுகால ஊதியமும் மற்ற சலுகைகளும் வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 61 பேர்களில் 51 பேர்கள்தான் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டு வந்தார்கள். அவர்களில் 15 பேர்கள் தாங்கள் தனியார் நிறுவனங்களில் வேலை செய்தவர்கள் என்று நிரூபிக்க முடியாமல் போனதால் அவர்களை எடுக்க முடியவில்லை. ஆகவே 36 பேர்கள்தான்

எடுக்கப்பட்டார்கள். ஓய்வு ஊதியத்தைப் பொறுத்த வரையில் தனியார் துறையில் இருக்கும் வரையில் ஓய்வு ஊதியம் பெறுவதற்கு தகுதியற்றவர்களாகத்தான் இருப்பார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, பல கம்பெனிகளிலிருந்து அவர்கள் அரசாங்கத்திற்கு மனுச் செய்தார்கள். அந்த கம்பெனியாளர்கள் தகுந்த சான்றுகளைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற அடிப்படையிலே அவர்களுக்கு வேலை கொடுக்க முன்வருமா ? ஏதோ 15 பேர்கள் நிரூபிக்க முடியவில்லை என்று கூறுகிறார்கள். இது சம்பந்தமாக அரசாங்க ஏடுகள் பரிசோதனை செய்யப்பட்டனவா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தனியாரிடத்திலேயிருந்து சில சமயங்களிலே யார் வேண்டுமானாலும் சர்டிபிகேட் வாங்கி வந்துவிட முடியும். ஆனால் அவர்களுக்காக ஏற்கனவே அந்த சர்விஸ் ரோல் அல்லது பிராவிடெண்ட் ஃபண்ட் ஏதாவது கட்டியிருக்கிறார்களா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் எடுக்கப்படுகிறார்கள். அந்த வகையிலே 'Fifteen have been rejected due to their failure to establish their *bona fides*' என்ற தகவல் எனக்குக் கிடைத்திருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, நிரூபிக்க இயலாத காரணத்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க முடியவில்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நாம் மாதந்தோறும் ஆயிரக்கணக்கான புதிய நியமனங்களைச் செய்கிறோம். ஏற்கனவே அவர்கள் நிரூபிக்க முடியவில்லை என்றாலும் கூட உண்மையிலேயே பழைய கம்பெனிகளில் வேலை செய்த தொழிலாளர்களை அரசாங்கம் தயவு கூர்ந்து மீண்டும் அரசாங்கத்தில் அமர்த்த ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, போதிய தகுதியுடையவர்களாக இருந்தால் எல்லோரையும் போல அவர்களும் வேலையிலே கட்டாயம் நியமனம் பெறுவார்கள். ஆனால் மாண்புமிகு அங்கத்தினர் குறிப்பிட்டதைப்போல ஆயிரக்கணக்கான நியமனங்கள் நடப்பதாக எனக்குத் தகவல் இல்லை.



## மாயூரம்-புங்கனூர் பேருந்து வழித்தடம்

* 119 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரத்திலிருந்து பட்டவர்த்தி மதகடி வழியாக புங்கனூருக்கு பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாயூரத்திலிருந்து பட்டவர்த்தி வழியாகப் புங்கனூர் செல்லும் வழித்தடத்தில், தற்காலிக அனுமதியின் பேரில் சோழன் போக்குவரத்துக் கழகம் 1—7—1973 முதல் ஒரு பேருந்து விட்டு வருகிறது.

## தேனி-இராஜபாளையம் பேருந்து வழித்தடம்

* 120 வினா.—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தேனி-இராஜபாளையம் இடையில் அரசு விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. நா. வெ. குருசாமி :** தலைவரவர்களே, தேனிக்கும் ராஜபாளையத்திற்கும் சுமார் 70 முதல் 75 மைல்கள் தொலைவில் உள்ளது. தேனியும், ராஜபாளையமும் வியாபார ஸ்தலமாக இருப்பதால் பொது மக்களின் வசதியை முன்னிட்டு அங்கே விரைவுப் பேருந்துகள் விடுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், விரைவுப் பேருந்துகள் 200 கிலோ மீட்டர்களுக்கு மேல் விடுவதுதான் சாத்தியமானது என்ற அடிப்படையில் இயங்குகிறது. பாண்டியன் போக்குவரத்துக் கழகம் தேவைப்பட்டால் இதைப் பரிசீலிக்கும்.

## மானியம் பெறும் கல்லூரிக் கணக்குகள் தணிக்கை

*93 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள உதவி பெறும் கல்லூரிகளின் கணக்குகளை அரசே தணிக்கை செய்ய உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், இதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் உள்ள மானியம் பெறும் கல்லூரிகளின் கணக்குகளை 1972-73-ம் நிதி ஆண்டிலிருந்து தணிக்கை செய்வதற்காக கல்லூரிக் கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் ஒரு தணிக்கை பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(முற்பகல் 10.00)

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தனியார் கல்லூரி நிர்வாகத்தினர் ஆட்சேபணைக் குறிப்பு ஏதேனும் அரசுக்கு அனுப்பி இருக்கிறார்களா? அரசு என்ன பதில் அனுப்பி இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தனியார் கல்லூரியைச் சேர்ந்த நிர்வாகிகள் அப்படிப்பட்ட முறை வேண்டாமென்றும் ஏற்கனவே இருந்து வருகிற முறையே வேண்டுமென்றும் வற்புறுத்தினார்கள். ஆயினும் இப்படி ஒரு தணிக்கைப் பிரிவைக் கல்லூரி கல்வி இயக்குநரின் அலுவலகத்தில் ஏற்படுத்துவதன் மூலம் தெளிவாகத் தணிக்கை செய்ய இயலும் என்ற காரணத்தால் அரசு இந்த முறையை மாற்றுவதாக இல்லை. ஆயினும் கல்லூரி நிர்வாகத்தினர் தனிப்பட்ட தணிக்கையாளர்களை வைத்து தங்கள் கணக்குகளைத் தணிக்கை செய்வது பற்றி ஆட்சேபணை இல்லை. ஆனால் அவர்களுக்குக் கொடுக்கிற தொகையைக் கணக்கில் சேர்த்து கொள்ள இயலாது என்று தெரிவித்திருக்கிறோம். இந்த ஆண்டில் மட்டும் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படும். அரசாங்கத்தின் சட்ட திட்டங்களைத் தெளிவாகத் தெரிந்தவர்கள் மூலம் தணிக்கை செய்வது வாயிலாக நல்ல நிலை ஏற்படும் என்ற நோக்கத்தோடு இந்தப் பிரிவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.



**திரு. ஏ. சுப்பிரமணியம்:** இம்மாதிரித் தணிக்கை செய்பவர்கள் தவறுகளைக் கண்டுபிடித்திருக்கிறார்களா? எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பொதுப்படையாகச் சொல்லுவதற்கில்லை. ஒவ்வொரு கல்லூரியைப் பொறுத்தும் தணிக்கையாளர்கள் தணிக்கை செய்து அதுபற்றிய அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். குற்றங்கள், குறைகள் இருக்குமானால் நிவர்த்திக்க வேண்டுமென்று அந்தந்தக் கல்லூரித் துறையினர் கேட்டுக்கொள்ளப்படுவார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** ஸ்பெஷல் பீஸ் என்றும், டொனேஷன் என்றும் தனியார் கல்லூரிகளில் மாணவர்களிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் வசூலிக்கிறார்கள். இதை முறைப்படுத்த தணிக்கை அதிகாரிகள் என்ன வழிவகைகளைச் செய்கிறார்கள், இன்ஸ்பெக்ஷன் இருக்கிறதா? அது சம்பந்தமான விவரங்களை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஏற்கனவே இவற்றைப் பரிசீலித்து மாறுதல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. டியூஷன் பீஸ், நன்கொடையாக வருகிற தொகை எல்லாம் கணக்கில் வர வேண்டுமென்றும் மொத்தச் செலவில் வருவினத்தை கழித்த பிறகு டெபிசிட் ஏற்படுமானால் அதில் 80 சதவிகிதத்திற்கு அரசு பொறுப்பேற்றுக்கொள்ளும்.

## ஓசூரில் புதிய கல்லூரி

*94 வினா.—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூரில் பல்கலைக் கல்லூரி ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று அப்பகுதி மக்களிடமிருந்து 1973 ஆகஸ்டில் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கையின் விவரம் என்ன?

[1974 சனவரி 23

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) & (இ) ராஜாஜியின் ஞாபகார்த்தமாக ஒரு அரசு கல்லூரியை ஓசூரில் ஏற்படுத்த வேண்டும் என்று ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் மூலமாக ஆளுநரிடம் ஒரு மனு 8—8—1973 அன்று கொடுக்கப்பட்டது. அந்த வேண்டுகோளை அரசு ஆராய்ந்து பார்த்து, வழக்கமாக விதிக்கும் நிபந்தனைகள் நிறைவு செய்யப் பட்டால், அரசு கல்லூரி ஒன்று அமைக்குவது பற்றிப் பரிசீலிக்கலாம் என்று குறிப்புரை அவர்களுக்கு அனுப்பப்பட்டது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** ஓசூர் பகுதி மக்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய தொகையையும் நிலத்தையும் தரத் தயாராக இருக்கிறார்கள். அடுத்து வருகிற ஆண்டில் இந்தக் கல்லூரியை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதுபற்றிய விவரக் குறிப்பு ஒன்றும் அரசுக்குக் கிடைக்கவில்லை. ராஜாஜிக்கு நினைவுச் சின்னங்கள் வைக்கவேண்டுமென்ற முறையில் ஓசூரில் ராஜாஜி பிறந்த வீட்டை நினைவுச் சின்னமாக மாற்றும் வகையில் அதைப் பெறுவதற்கான முயற்சியில் அரசு ஈடுபட்டிருக்கிறது. அங்கு கல்லூரி வேண்டுமென்பது பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. அரசே புதிய கல்லூரிகளைத் திறப்பதை நிறுத்தி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்ட கல்லூரிகளில் வசதி வாய்ப்புகளைப் பெருக்க வேண்டுமென்பதிலே கவனம் செலுத்தி வருகிறது. ஓசூரைப் பொறுத்தவரை 40 ஏக்கர் நிலமும் 5 இலட்சம் ரூபாய் பணமும் தர முன்வந்தால் அந்தக் குழுவினர் கல்லூரி தொடங்கப் படும் போது அந்தப் பெயரை வைத்துக் கொள்வதில் ஆட்சேபனை இல்லை. அப்போது அரசு அதுபற்றிப் பரிசீலிக்கும்.

THIRU B. VENKATASAMY : Sir, we have given a representation to His Excellency the Governor and we have also received a reply stating that it would be considered if the conditions as already told by our Hon. Minister for Education, were satisfied. The Hon. Chief Minister and everybody knows that Hosur is a backward area. We are prepared to give 40 acres of land for the construction of Arts College. May I request the Hon. Minister for Education to give exemption with regard to deposit amount of Rs. 5 lakhs due to the backwardness of the area. Now many industries are coming up and the persons employed in such



1974 சனவரி 23]

industries are interested in educating their children there. May I once again request the Hon. Minister to give exemption from payment of Rs. 5 lakhs?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** எங்கேங்கு புதிய கல்லூரி தேவை என்று கேட்டாலும் இந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால்தான் அனுமதி கொடுக்கிறோம். இந்தப் பகுதி பிற்பட்ட பகுதி, இந்தப் பகுதி முற்பட்ட பகுதி என்றெல்லாம் பிரிக்க முடியாது. ஐந்து லட்சம் ரூபாய் தந்தாலும் அரசு 25 லட்சம் ரூபாய் செலவழித்தால்தான் முதல்தரமான கல்லூரியாக அமையும் ஒரு இடத்திற்கு இந்த விதியைத் தளர்த்தினால் தொடர்ந்து தளர்த்தும்படியான நிலைமையில் எல்லோரும் கேட் பார்கள். ஆகவே, அந்த விதியைத் தளர்த்துவதற்கில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Government has great regard for revered Rajaji and also interest to put up a memorial for his memory. Of all the memorials, the best one will be the construction of a College at Hosur. This is a most important one. May I know whether the Government will give preference to the sanction of an Arts College at Hosur at the cost of Government itself ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலி லேயே குறிப்பிட்டபடி ராஜாஜியின் நினைவாக பல்வேறு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. ஏற்கனவே ராஜாஜி மண்டபம் இருக்கிறது என்றாலும் நினைவுச் சின்னமாக ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் கிண்டியில் மண்டபம் கட்டும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஓசூரில் பிறந்த வீட்டை ஆர்ஜிதம் செய்து நினைவுச் சின்னம் ஏற்படுத்தும் நிலைமை இருக் கிறது. கல்லூரிக் குழுவினர் விரும்பினால் அந்தப் பெயரை வைக்க ஆட்சேபணை இல்லை. நிபந்தனைகளை நிறைவேற்ற முன் வரவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அரசாங்கக் கலைக் கல்லூரி களுக்கு அமைச்சர்கள் பெயரை வைத்திருக்கிறார்கள். தலைவர் ராஜாஜி மிகச் சிறந்த அரசியல் வாதி. அவர்கள் பெயரால் கல்லூரி அமைக்க 5 இலட்சம் ரூபாய் கொடுங்கள் என்று கேட் காமல் கொஞ்சம் தாராள மனப்பான்மையோடு இனிமேல்

கட்டுகின்ற கல்லூரிக்கு ராஜாஜி பெயரை வைக்க முன்வரு வார்களா? குறிப்பாக ஓரூரில் அரசாங்க கலைக் கல்லூரியைக் கட்டி ராஜாஜி பெயரை வைக்க முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது வைக்கப்பட்டிருக்கும் பெயர்கள் எல்லாம்கூட ஆங்காங்கு நிதி வசூலில் ஈடுபடுகின்ற குழுவினர் என்ன பெயரைச் சிபாரிசு செய்கி றார்களோ அந்தப் பெயர்தான் அந்தந்தக் கல்லூரிகளுக்கு வைக்கப் பட்டிருக்கிறது. அமைச்சர் என்ற பெயரில் எந்தக் கல்லூரிக்கும் பெயர் வைக்கப்படவில்லை. ஐந்து லட்சம் ரூபாயைத் திரட்டிக் கொடுத்து இன்னார் பெயரை வைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி முறைப்படி அனுப்பி வைத்தால் அந்தப் பெயரை வைக்கலாம். அதற்கான முயற்சியில் ஈடுபடும்படியாக அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

### *Grants to Nayanam, Thavil Music Research Academy at Tiruvarur*

* 95 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether the Government have given any grants to the Nayanam, Thavil Music Research Academy at Tiruvarur in Thanjavur district during the past five years; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. என். டென்னிஸ் :** இங்கு எல்லா மியூசிகல் இன்ஸ்ட்ரு மென்ட்சும் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்படி நாயனம், தவில் போன்றவற்றை ஊக்குவிக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் ஈடுபடவில்லை, இயல் இசை நாடக மன்றத்தின் மூல மாக வசதி வாய்ப்புகள் செய்து தரப்படுகிறது. சிலபல கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் மற்றவைகளை ஏற்பாடு செய்யவும், நாதஸ்வரம், தவில் கச்சேரி ஏற்பாடு செய்யவும் இயல் இசை நாடக மன்றம் உதவி செய்து வருகிறது. வயதான கலைஞர்கள், தவில், நாயன வித்வான்கள் 58 வயதானவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டு உதவிச் சம்பளம் அளிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.





### பரிசுப் பொருள்கள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை

* 96 வினா.—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு Gift Goods (Unlawful Possession) Act ன் கீழ் எத்தனை நபர்கள் பேரில் நடவடிக்கை கடந்த இரண்டு நிதி ஆண்டுகளில் எடுக்கப்பட்டுள்ளது?

(இ) அதன் விவரம் யாது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) & (இ) 1973 பிப்ரவரியில் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோவில் பட்டியில் அமெரிக்க சோயாபீன் எண்ணெய் டின்கள் 2,742-ஐ சட்ட விரோதமாக வைத்திருந்ததாக ஒருவர் கைது செய்யப்பட்டு அவர் மேல் காவல் துறையினரால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** இவ்விதப் பொருள்கள் பெரும் பாலும் மதிய உணவுத் திட்டத்திற்காக வரக்கூடிய பொருள்கள். அப்படி வந்த பொருள்கள் இவ்வாறு துர்விநியோகம் செய்யப்பட் டிருக்கிறதா? எவ்விதம் இவர்களுக்கு இது கிடைத்தது? அவர்கள் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழ்நாடு கிஃப்ட்ஸ் கூட்ஸ் அன்லாஃபுல் பொசஷன் ஆக்ட் 1961படி நன்கொடையாக வரக்கூடிய பொருள்களைப் பதுக்கி வைத்திருப்ப வர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்தக் குறிப்பிட்ட வழக்கைப் பொறுத்தவரை எங்கிருந்து பெற்றார் என்று விசாரித்ததில் கேரளத்தைச் சேர்ந்த திருவனந்தபுரம் செல்லப்பிள்ளை என்பவரிடமிருந்து விலைக்கு வாங்கியதாக கோயில் பட்டியைச் சேர்ந்த திரு. குருசாமி நாடார் குறிப்பிட்டிருக்கிறார். கேரளத்தை இதுபற்றிக் கேட்ட நேரத்தில் அவை கொச்சி துறை முகத்தில் வந்து இறங்கவில்லை, வேறு வகையில் வந்திருக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அது எப்படி இறக்குமதி ஆகியது என்ற விவரங்களை எல்லாம் காவல் துறையினர் ஆராய்ந்து கொண் டிருக்கிறார்கள். வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. குருசாமி நாடார் கைது செய்யப்பட்டு பெயிலில் விடுவிக்கப்பட்டிருக்கிறார். புலன் விசாரணை நடந்துகொண்டிருக்கிறது.

[1974 சனவரி 23

**திரு. முனு ஆதி :** இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்க யூனியன் அளவில் சமையற்கூடங்களை ஏற்பாடு செய்து பள்ளிக் கூடங்களுக்கு விநியோகம் செய்யும் திட்டத்தை அமல்படுத்தினார்களே, அதை தமிழ்நாடு பூராவும் விரிவுபடுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா ? அல்லது குறிப்பிட்ட இடங்களில் மட்டும் வைத்து அதை நடைமுறைக்குக் கொண்டுவரப் போகிறார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது இப்படிப்பட்ட பொருள்களை நேரடியாகக் கொடுக்காத அளவிற்கு சென்ட்ரல் கிச்சன் மையச் சமையற்கூடங்கள் வழி கொடுப்பதற்கு செங்கற்பட்டு, தென் ஆற்காடு, வட ஆற்காடு இவை முடிந்து மற்ற மாவட்டங்களில் மேற்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதுவரையில் 95, 96-க்கு மேற்பட்ட அத்தகைய சமையற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. 374 ஒன்றியங்களிலும் இந்த முறையை நிறைவேற்றுகிற அளவிற்கு நாம் கேர் நிறுவனத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். படிப்படியாக இந்த எண்ணம் நிறைவேறும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** 'கிஃபிட் குட்ஸ்' என்ற தலைப்பில் வெளி ராஜ்யங்களிலிருந்து சர்ச்சஸ், சோஷல் சர்வீஸ் செய்கிற நிறுவனங்கள் போன்றவற்றிற்கு இவற்றையெல்லாம் கொடுக்கிறார்கள். அங்கு அது குறிப்பிட்ட சில காரியங்களுக்காகக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுப்பதை பராமரிப்பதற்கு ஏதாவது வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படியிருந்தால் அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 'கேர்' நிறுவனம் அதிகமாகக் கொடுக்கிறது. யுனிசெப் நிறுவனம், கிறித்துவப் பணி நிறுவனம், லூதரின் பணி நிறுவனம், கத்தோலிக்க உதவி நிறுவனம் இவைகளும் கொடுக்கின்றன. அவற்றை கல்வித் துறை சார்பாக கோடவுனில் வைத்து வழங்குகிற உரிமையைக் கேட்டுப் பெற்றிருக்கிறோம். மைய சமையற்கூடங்கள் மேலும் வரும் போது—முன்பு நடந்த அவ்வளவு தவறுகள் இப்போது இல்லை—எல்லா ஒன்றியப் பகுதிகளிலும் இந்த முறை ஏற்பட்டால் இதில் அதிகம் தவறு ஏற்பட வழியிருக்காது.



1974 சனவரி 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அரசினர் சட்டமுன்வடிவுகள்.

### (அ). தமிழ் நாடு 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்டமுன்வடிவு.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு பொதுப்பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### (ஆ) தமிழ் நாடு 1974-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு கேட்டுப் பெறுதல் (தற்காலிக அதிகாரங்கள்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

### 3. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம்—தொடர்ச்சி.

* **திரு. என். டென்னிஸ்:** தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களது உரையில் 12-வது பத்தியில் கொடுக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களைப்போல் நமது மாநிலம் உணவுத் துறையில் ஒரு உபரி மாநிலமானால் நம் மாநிலத்தில் உள்ள சில பகுதிகளில் அரிசி ஏன் ஐந்து ரூபாய்க்கு விற்கப்பட வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன். ஆகவே விநியோக முறையில் உள்ள பெரியதொரு கோளாறுதான் அதற்குக் காரணமாக இருக்கவேண்டும். அண்டை மாநிலங்களுக்கு அரிசி அனுப்புவதற்கு அரசு முன்வந்திருக்கும் போது நம் மாநிலத்தில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும், பார்டர் ஏரியாக்களுக்கும், அரிசி நியாயமான விலையில் கிடைக்கச் செய்வது அரசின் முதல் கடமையாகும். அரசின் தவறான உணவுக் கொள்கையினால்தான் இந்த விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது.

எங்களது அண்டை மாவட்டமான நெல்லை மாவட்டத்தில் அரிசி 1.50 ரூபாய்க்கு விற்கும்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி ரூ. 5-க்கு விற்கக்கூடிய ஒரு நிலை இன்று இருக்கிறது. மாவட்டத்திற்கு மாவட்டம் இருக்கக்கூடிய தடுப்புச் சாவடிகள், மாவட்டத்திற்குள் இருக்கும் தடுப்புச் சாவடிகள் இவைகள் எல்லாம் மாற்றப்பட்டு மாநிலத்தின் எல்லைகளில் மட்டும் தடுப்புச் சாவடிகள் வைக்கவேண்டும். ஆகவே பார்டர் ஏரியாக்களிலும் அரிசி நியாயமான விலையில் கிடைப்பதற்கு அரசு வழிவகை செய்யவேண்டும்.

அடுத்தபடியாக, படிக்காதவர்களிடத்திலே இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்குரிய திட்டங்கள் எதுவும் கவர்னர் அவர்கள் உரையில் குறிப்பிடப்படவில்லை. வேலை வாய்ப்பை ஏற்படுத்தும் திட்டங்க்ள் எதுவும் கவர்னர் அவர்கள் உரையில் காணப்படவில்லை. தொழில் துறையில் உற்பத்தியின் அளவு குறைந்து போயிருக்கிறது. புதிதாக தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதாக இல்லை. மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தைக் குறித்து, வேலைவாய்ப்பு குறித்து மிகவும் பீதியடைந்திருக்கிறார்கள். இளைஞர் அணியில் பலர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நிரந்தர வேலை கிடைக்குமா என்ற



பீதி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்கும் நிரந்தர வேலை கொடுப்பதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழில்துறையில் அமைதியான மாநிலமாக நம் மாநிலம் இருந்து வந்தது. ஆனால் இன்று இங்கு தொழில் வளம் கெட்டு விட்டது. தொழில் வளம் கெட்டுவிட்டது என்றால் தொழிலாளர்கள் கஷ்டப்படுகின்ற நிலைமை. இன்று வேலையில்லாது பல தொழிலாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். எனவே தொழில் அபிவிருத்திக்காக மாவட்ட அளவில் திட்டங்களைத் தீட்டவேண்டும். மாவட்ட அளவில் தொழில் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாவட்ட அளவில் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி மாவட்ட அளவில் இருக்கக்கூடிய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான திட்டங்களைத் தீட்டவேண்டும். படித்துவிட்டு, வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்து விட்டு இன்று பலர் வேலையின்றி திரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கான திட்டங்களை அரசு தீட்ட வேண்டும். இல்லாவிட்டால் மாநிலத்தில் அமைதியின்மை ஏற்பட்டு, நிம்மதி இருக்காது, கொந்தளிப்பான நிலைமை ஏற்படும்.

இன்று மாணவர்களிடத்தில் அமைதியின்மை ஏற்பட்டிருக்கிறது. அப்படி அமைதியின்மை ஏற்படக் காரணம் அவர்கள் போலீஸ் அட்டூழியங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். படித்தும், அரசு இயந்திரத்தின் கோளாறு காரணமாக வேலை கிடைக்காது போகுமோ என்ற எண்ணம் அவர்களிடையே இருப்பதால் அவர்களிடையே அமைதியில்லாததொரு நிலை ஏற்பட்டிருக்கிறது. பாளையங்கோட்டை, திருச்சி கிளைவ் ஹாஸ்டல் சம்பவங்கள் நீதி விசாரணை மூலம் அவை தவறானவை என்று குறிப்பிட்டும் ஆளுநர் அவர்கள் உரையில் அதற்கு வருத்தம் தெரிவித்ததாக இல்லை. அடுத்தபடியாக போக்குவரத்துத் துறையை எடுத்துக்கொண்டால் பல பஸ்கள் இன்று பழுதடைந்திருக்கின்றன. அடிக்கடி பஸ்கள் ப்ரேக்டவுன் ஆகின்றன. எக்ஸ்பிரஸ் பஸ்கள் குறித்த நேரத்தில் புறப்படாமல் இருக்கும் ஒரு நிலை இருக்கிறது. வண்டிகளில் முக்கிய பாகங்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. பஸ் போக்குவரத்து இன்று பல கழகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அக்கழகங்களில் உள்ள ஊழியர்கள் அவர்கள் சர்க்கார் ஊழியத்தில் இருந்தபோது

இருந்துவந்த உரிமைகள் பாதிக்கப்படுமோ என்ற பீதியில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஏற்கனவே இருந்த உரிமைகள் உரிமைகளோடு கூட வேலை பாதுகாப்பிற்கெல்லாம் நிரந்தரமானதொரு முடிவு காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது. நாகர்கோவிலில் அதன் தலைமை ஸ்தானம் என்றென்றும் நிரந்தரமாக இருப்பதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த மாநிலத்தில் எங்கு பார்த்தாலும் சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. மத்திய அரசில் வேலைவாய்ப்புத் திட்டத்தில் பல சாலைகள் அமைக்கப்பட்டன. அவற்றில் பல சாலைகள் பழுதடைந்துள்ளன. அந்தச் சாலைகள் பழுதுபார்ப்பதற்கு வழிவகைகள் ஒன்றும் செய்யப்படவில்லை. எங்கு பார்த்தாலும் பழுதடைந்த சாலைகள் காணப்படுகின்றன. பல பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் இந்தச் சாலைகள் பழுதுபார்க்க உரிய நிதி நிலை இல்லை. ஆகவே அவை பழுதடைந்த நிலையிலேயே இருக்கின்றன. இந்த மோசமான நிலை நீக்கப்பட வேண்டும். பஸ் போக்குவரத்து உள்ள எல்லாச் சாலைகளையும் ஹைவேஸ் எடுத்துக் கொள்ளும் திட்டத்தை மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் குடிநீர் வசதி மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. அதற்கு அரசு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாவட்டப் பிரச்னைகளைப் பற்றிச்சொன்னால், இன்று தொழிற்சாலைகள் இல்லாத மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டம் ஒன்றுதான். இந்த மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை ஒன்றை நிறுவ நல்ல வாய்ப்பு இருக்கிறது. அங்கு ரப்பர் அதிகமாக உற்பத்தியாகிறது. படித்தவர்கள், படிக்காதவர்கள் அதிகம்பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஆகவே, அங்கே ஒரு ரப்பர் தொழிற்சாலையை நிறுவ இந்த அரசு முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தில் சித்தார்—பட்டணம்கால் திட்டம் அமல் நடத்தப்பட்டு வருகிறது. அதில் பட்டணம்கால் திட்டத்தில் 15,000 எக்கர் நிலம் விவசாயத்திற்காகத் திருத்தப்படவேண்டியிருக்கிறது. ஆனால் இன்று வரை 8,000 எக்கர் வரை தான் திருத்தப்பட்டு இருக்கிறது, மந்தமாக செயல்படுகிறது. கால்வாய் மடை அமைக்க எத்தனையோ விண்ணப்பங்கள் வந்திருந்தும் காலதாமதம் ஆகிறது. அங்கேயிருக்கிற இன்ஜினீரிங் செக்ஷன் சரியான வகையில் நடவடிக்கை எடுக்கவில்லை; செயல்படவில்லை. டாமில் தண்ணீர் இருக்கும்போது கூட அங்கு சரியான வகையில் ஒழுங்காக தண்ணீர் விநியோகம் செய்யாமல் இருக்கிறார்கள். அதைச் சரிசெய்ய அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மைனர் இர்ரிகேஷனைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாக ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மைனர் இர்ரிகேஷனுக்குக் கொடுக்கவேண்டிய தொகை இந்த ஆண்டு இன்னும் கொடுக்கப்படவில்லை. நிதி ஆண்டும் முடியும் தருவாயில் இருக்கிறது. இனிமேல் காலதாமதமாக கொடுத்தாலும் அந்தப் பணம் 'லாப்ஸ்' ஆகித்தான் போகும். வேலை செய்ய முடியாது.

லோகல் ரோடு கிராண்ட்ஸ்ஸை எடுத்துக்கொண்டால், மாநில அளவில் 1—4—1967-லிருந்து பஞ்சாயத்து ரோடுகளின் நீளத்தின் அடிப்படையில் லோகல் ரோடு கிராண்ட்ஸ் கொடுக்கப்பட்டு வருகிறது. 1—4—67-க்குப் பிறகு எவ்வளவோ ரோடுகளை பஞ்சாயத்து யூனியன் ரோடுகளாகத்தான் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இன்றைக்கு இருக்கும் பஞ்சாயத்து யூனியன் ரோடுகளின் நீளத்தின் அடிப்படையில் லோகல் ரோடு கிராண்ட்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டு, அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

* திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): மாண்புமிகு சட்டபேரவைத் தலைவரவர்களே, மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து, தமிழகத்தின் பகுத்தறிவு இயக்கத்தின் தலைவர், வடமாநிலத்தில் இருக்கக்கூடிய தலைவர்களால் எல்லாம் பாராட்டப்படுகிற விதத்தில் பகுத்தறிவுப் பிரசாரங்களை இந்த நூற்றாண்டில் செய்த தலைவர்

மறைந்ததைப் பற்றிக் குறிப்பிட்டு ஆழ்ந்த துயரத்தை வெளியிட்ட கவர்னர் அவர்களுக்கு நாம் நன்றி உடையவர்களாக இருக்கிறோம், என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கவர்னர் அவர்களின் உரையில் பொதுவாக தமிழகத்திலே, தமிழக அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் திட்டங்களையும், இனிமேல் செயல்படுத்த இருக்கிற திட்டங்களையும், வர இருக்கின்ற ஆண்டில் செய்யப்படவிருக்கிற திட்டங்களைப்பற்றியும் விளக்கும் விதத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில் நாம் மிகவும் மகிழ்ச்சியோடு இருக்கலாம். அகில இந்தியாவிலும் இந்த மாநிலம் தான் பெருமைப்படுகிற அளவில் பல இன்னல்களுக்கு இடையிலும் தமிழக விவசாயிகள்—மின்சாரம் கிடைக்காத இன்னல்கள், உரம் கிடைக்காத இன்னல்கள்—இன்றையதினம் தங்களுடைய கடும் உழைப்பின் காரணமாகவும், தமிழக அரசாங்கத்தின் ஒத்துழைப்பின் காரணமாகவும் அதிக அளவுக்கு நெல்லை உற்பத்தி செய்து தந்து இருக்கிறார்கள். இதைப் பார்த்து விட்டு, இந்தியாவில் இருக்கும் மற்ற மாநிலங்களும் நாமும் ஏன் இப்படிச் செய்யக்கூடாது என்று பாடம் கற்றுக்கொள்ள இருக்கிறார்கள். இந்த அவையின் சார்பில் தமிழகத்தில் இருக்கும் விவசாயிகளுக்கு நாம் மீண்டும் நன்றி சொல்லவேண்டியவர்களாக இருக்கிறோம். பல சிரமங்கள் இருந்தாலும் விவசாயப்பெருங்குடி மக்கள் சிறந்தமுறையில் உணவை உற்பத்தி செய்து இருக்கிறார்கள். அவர்களுடைய மனம் கோணாமல், அவர்களுக்குச் சிக்கல்கள் வராமல், அவர்களுக்கு இன்னல்கள் வராமல் பார்த்துக்கொள்வது அரசாங்கத்தின் மிகவும் முக்கியமான நோக்கமாக இருக்கவேண்டுமென்று நான் மிகத்தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நாம் அதிகமாக உணவு உற்பத்தி செய்கிறோம். நாம் உண்டது போக எஞ்சியுள்ள அரிசியை மற்ற மாநிலங்களுக்குக் கொடுப்பதற்கு நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்கள் தாராளமாக இருக்கிறார்கள்.

குஜராத்திற்கு, மராட்டியத்திற்கு, வங்காளத்திற்கு, கேரளாவிற்கு, மைசூருக்கு நம்முடைய மாநிலத்திலிருந்து அரிசியும், நெல்லும், மற்ற தானியங்களும் தருகிறோம் என்றால், அவர்கள்





ஏதோ நமக்கு 'கான்டக்ட் சர்ட்டிபிகேட்' கொடுப்பார்கள், அல்லது மற்ற மாநிலத்தில் இருப்பவர்கள் தமிழக அரசாங்கத்திற்கு ஆதரவாக இருப்பார்கள் அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவாக இருப்பார்கள் என்ற எண்ணத்தில் அல்ல. அகில இந்தியாவிலும் இருக்கும் மக்கள் இந்திய மக்கள், நாமும் இந்திய மக்கள் என்கிற ஒருமைப்பாட்டின் காரணமாகத்தான் எந்தப் பகுதியிலே உணவுப் பற்றாக்குறை வந்தாலும், எந்த மாநிலத்திலேயாவது உணவுப் பற்றாக்குறை என்று தெரிந்தாலும், உடனடியாக நம்மால் முடிந்த அளவுக்கு, நம்மால் இயன்ற அளவுக்கு நாம் உணவுப்பொருள்களை அனுப்புகிறோம். இதிலே என்ன தவறு இருக்கிறது.

ஆனால் மத்திய அரசாங்கம் இதிலே குறை கண்டுபிடித்து, என்னைக் கேட்காமல் எப்படித் தருவீர்கள், என்னைக் கேட்டுக் கொண்டு, நான் கொடுங்கள் என்றால் தான் கொடுக்கவேண்டும் என்று சொல்கிற அளவுக்கு இருக்கிறார்கள் என்றால் அது எவ்வளவு வேடிக்கையாக, வேதனையாக இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கேரளாவில் அரிசி தேவை என்றதும் நம்முடைய முதல்வர் கொடுக்கிறேன் என்று சொல்லி விட்டார்கள். என்னைக் கேட்காமல் எப்படிக்கொடுப்பீர்கள் என்று நம்முடைய முதலமைச்சரையும், என்னைக்கேட்காமல் எப்படி வாங்குவீர்கள் என்று கேரள முதலமைச்சரையும் மத்திய அரசு சொல்லியிருக்கிறது. அவர்களுடைய பதிலை எதிர் பார்த்து இன்றையதினம் கேரளத்தில் இருக்கிற சகோதரர்கள் உணவு இல்லாமல் பட்டினியால் அவதிப்படுகிறார்கள் என்பதை நேற்றையதினம் கூட அந்த மாநில முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். இது மிகவும் வேதனையான விஷயம் ஆகும்.

ஒரு கதை கூட உண்டு. பிச்சைக் கேட்கிறவருக்கு, இல்லை என்பதைக் கூறும் அதிகாரம் கூட மருமகளுக்கு இல்லை, மாமியாருக்குத்தான் உண்டு என்று. அது போல் இது பிச்சை கூட இல்லை. பட்டினியால், பசியால் மக்கள் வாடுகிறார்கள் என்று தெரிந்தால் உடனே அவர்களுக்கு உதவுவது தான் தமிழனின் பெருமை, மற்றவர்களின் கஷ்டத்தை உணர்ந்து உதவி செய்வது தான் தமிழனுக்கு இருக்கும் பெருமை. அந்தப் பண்பாட்டின் அடிப்படையில் உதவி செய்கிறோம் என்றால் அதிலும் குற்றம் காண்கிறார்கள்.

குஜராத்தில் உணவுப் பற்றாக்குறை பஞ்சம் வந்தது, அங்கே பெரிய போராட்டம் வருகிறது என்றால், உடனடியாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குஜராத்திற்கு உணவு அனுப்ப வேண்டும். குஜராத்தில் இருக்கும் முதலமைச்சர் கேட்கிறாரா, அல்லது மத்திய அரசாங்கம் அனுமதி அளிக்கிறதா இல்லையா என்று பார்க்கக் கூடாது. நம்மால் முடிந்த அளவுக்கு மற்ற மாநிலங்களுக்கு கொடுக்க முன் வரவேண்டும். மத்திய அரசாங்கம் இதிலே குறுக்கே வரக்கூடாது என்று நான் மீண்டும் வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10.30)

இரண்டாவது, உணவு விஷயம். இங்கே உணவை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உரம் கிடைக்கவில்லை. பற்றாக்குறை இருக்கிறது. அதைச் சமாளிக்க வேண்டும். மத்திய அரசாங்கத்திற்குச் சிரமம் இருக்கிறது. நமக்குத் தெரிகிறது. நாப்கா கிடைக்கவில்லை. ஆகவே உரம் உற்பத்தி செய்ய முடியவில்லை. வெளிநாட்டிலிருந்து, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து நமக்கு வர வேண்டியிருக்கிறது. உரம் கிடைக்காத காரணத்தால் பற்றாக்குறை இருந்தாலும் அதையும் சமாளித்து நாம் இன்றைய தினம் முன்னுக்கு வருகிறோம். இப்படித் தொல்லைகளைச் சமாளித்து உற்பத்தி செய்யும் இந்த மாநில விவசாயிகளுக்கு இந்த அரசாங்கம் மேலும் ஆதரவாக இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றைய தினம் கூட விவசாயத் துறை அமைச்சரவர்கள் கரும்பு விலையைப்பற்றிப் பேசினார்கள். நான் அவர்கள் பேசுகிற சமயத்தில் குறுக்கிட்டுக் கூட பேசவேண்டிய சந்தர்ப்பம் வந்தது. இரண்டு மூன்று தினங்களுக்கு முன்பு நம்முடைய அரசாங்கம் தனிப்பட்ட கரும்பு ஆலைகள் அவர்கள் கொடுக்க வேண்டிய விலைகளை வெளியிட்டிருக்கிறார்கள். ஓரளவிற்கு மகிழ்ச்சி தரக் கூடியது தான். நம்முடைய கரும்பு விவசாயிகள் 50 கிலோ காம்ப்ளெக்ஸ் உரத்தை 85 ரூபாய்க்கு வாங்கிப் போடுகிறார்கள். 50 கிலோ காம்ப்ளெக்ஸ் உரம் முன்பு 60 ரூபாய் இருந்தது. இப்போது 85 ரூபாய்க்குக் கூட கிடைக்கவில்லை. பாம்பாஸ் உரத்தின் விலை 90 ரூபாய் இருந்தது, 140 ரூபாய். உரத்தின் விலை ஒன்றுக்கு இரண்டு பங்கு ஏறிவிட்டது. விலை ஏறி விட்டதை ஏற்றுக்





கொள்கிறோம். ஆனால் கரும்பு விலை ஏற்கெனவே 90 ரூபாய் இருந்தது இந்த ஆண்டும் 90 ரூபாய் இருப்பதில் அர்த்தமில்லை. ஆகவேதான் இதில் முதலமைச்சரவர்களும், தொழில் அமைச்சரவர்களும் மேலும் கவனம் செலுத்த வேண்டும். நமக்கு எந்த தனிப்பட்ட ஆலைக்காரர்களையும் வதைக்க வேண்டும், கஷ்டம் உண்டாக்க வேண்டுமென்ற எண்ணமில்லை. அவர்கள் தங்களுடைய பணத்தைக் கொடுக்க வேண்டியதில்லை. நாம் கரும்பு கொடுக்கிறோம். சர்க்கரை உற்பத்தி செய்கிறார்கள். அதிக விலைக்கு விற்கிறார்கள். இப்படி விற்று வரக்கூடிய உபரி லாபத்தில் பங்கு கேட்கிறோம். நஷ்டம் என்றால் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். 30 சதவிகிதம் சர்க்கரையை அவர்கள் 320 ரூபாய்க்கு விற்ற சமயத்தில் கோயம்புத்தூரில் இருக்கக் கூடிய சக்தி சுகர்ஸ் 115 ரூபாய் கொடுத்தார்கள்.

ஆனால் இப்பொழுது 382 ரூபாய்க்கு 30 சதவிகிதம் சர்க்கரையை "ஓபன் மார்க்கெட்டில்" விற்கையில் அவர்கள் நியாயமாக எவ்வளவு கொடுக்க வேண்டும் ? 140 ரூபாய் கொடுக்க வேண்டுமா அல்லவா ? 140 ரூபாய் கொடுக்க வேண்டும். ஆனால் அவர்கள் 102.30 தான் கொடுப்பார்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம் ? ஆகவே தான் கரும்பு விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே நம்முடைய அரசாங்கம் இதில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்திலே தான் நான் இதனைச் சொல்கிறேன்.

அரசாங்கத்திற்கு நான் சுட்டிக்காட்ட விரும்புவது உத்திரப் பிரதேசத்தில் இருக்கக் கூடிய ஆலை அதிபர்கள் ஒரு அறிக்கையை, ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் 2 தினங்களுக்கு முன்பு வந்திருக்கிறது. அவர்கள் அந்த மாநிலத்தில் 92 ரூபாய் ஸ்டாட்டுடரி பிரைஸ் பிக்ஸ் பண்ணியிருக்கிறார்கள், உத்திரப் பிரதேசத்தில். இதை ஆலைகள் ஏற்றுக் கொண்டு இருக்கின்றன. ஏன் ? The Damocle's sword of nationalisation is hanging on the sugar industry in U.P. ஆலைகளை தேசிய மயமாக்குகின்ற கருத்தில் அரசாங்கம் இருக்கின்ற காரணத்தால் ஆலையாளர்கள் அங்கு விவசாயிகளை மோசம் செய்யவில்லை. அதிகமான விலை கொடுக்கிறார்கள். அங்கு சர்க்கரை கண்டு முதலில் 75 சதவிகிதம் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். அதோடு அவர்கள் சொல்கிறார்கள் In deference to

the wishes of U.P. Government, sugar factories are paying an average price of Rs. 130 per tonne by increasing Rs. 38 per tonne. 130 ரூபாய் நாங்கள் தருகிறோம் என்று மாநில அரசாங்கம் சொல்கிறது. மத்திய அரசின் ஆலோசனையின் பேரில் மாநில அரசாங்கம் சொல்கிறது. கரும்பு விவசாயிகளைத் திருப்திப் படுத்த அவர்களுக்கு நாங்கள் 130 ரூபாய் கொடுக்கிறோம் என்கிறார்கள். நான் கேட்கிறேன் இங்கே மட்டும் 90, 95, 100 ரூபாய் என்று வைத்திருக்கிறார்களே. என்ன காரணம்? இதன் காரணமாகத் தமிழகத்தில் கரும்பு விவசாயிகளுக்கு வர வேண்டிய சுமார் 8 கோடி ரூபாய் வராமல் நின்று விடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. முதலமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் தனி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே சர்க்கரை விற்பனையில் 75 சதவிகிதம் மொத்த கண்டு முதலில் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இங்கே அதேமாதிரி 75 சதவிகிதம் கொடுக்க வேண்டுமென்று கேட்கவில்லை. 75 சதவிகிதம் கொடுக்கமுடியாவிட்டாலும் 55 சதவிகிதம் கொடுங்கள் என்று தான் கேட்கிறேன். "ஷுகர் பிராடெக்ட்ஸ் கமிஷன்" 55 சதவிகிதம் உற்பத்தி ஆகிற மொத்தத்தில் கரும்புக்கு விலையாகக் கொடுங்கள். நாங்கள் ஒப்புக் கொள்கிறோம். 55 சதவிகிதம் கரும்பு விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டு 45 சதவிகிதம் ஆலைக்காரர்கள் எடுத்துக் கொள்ளட்டும். உத்திரப் பிரதேசத்தைப் போல 75 சதவிகிதம் கொடுங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை. 55 சதவிகிதம் போதும். அப்படிக் கொடுத்தாலும் இன்றையதினம் 120, 130, 140 கிடைக்கும். அந்த நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் வைத்தியம் செய்யும் டாக்டராக இருக்கிறார். அப்படிப்பட்ட முதலமைச்சர் இந்த கரும்பு விவசாயிகளுக்கும் சிறந்த டாக்டராக இருந்து குறைகளைத் தீர்க்க வேண்டுமென்று நான் மீண்டும் பணிவன்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் ஆலை அதிபர்களுக்கு அதிக விலை தேவை, லெவி சர்க்கரைக்கு விலையைக் கூட்ட வேண்டுமென்று நேற்றைய தினம் சொன்னார்கள். லெவி சர்க்கரைக்கு விலையை ஏற்றினால் அதனால் கன்ஸ்யூமரின் விலை அதிகமாகும். கன்ஸ்யூமர் அதிக



விலை கொடுக்க முடியுமா? லெவி சர்க்கரையின் விலை அதிகப் படுத்தினால் வாங்குகிறவர்கள் தலையில் தான் விழும். இதைக் கேட்க வேண்டுமா? அவர்களுக்கு பரிந்து நாம் கேட்க வேண்டிய அவசியம் இல்லை. சர்க்கரை ஆலைகளுக்கு நஷ்டம் என்றால் நாங்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஏற்கெனவே ஆலை முதலாளிக்கு 2 கோடி, மூன்று கோடி லாபம் அதிகமாக வந்து கொண்டிருக்கிறது. அவர்களுடைய லாபத்தில் எதுவும் குறையவில்லை. ஆனால் கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயியின் விலையை மட்டும் அதிகப்படுத்தாமல் இருப்பதில் என்ன அர்த்தம்? விவசாயிகளின் உழைப்பை மறைமுகமாக ஆலைகள் லாபமாக எடுத்துக் கொள்கின்றன. எனவே தான் அதில் எங்களுக்குப் பங்கு வேண்டும், நியாயமான பங்கு கரும்பு விவசாயிகளுக்கு வேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை. கோவிந்தராசன்:** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் உரைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் இங்கே நிற்கிறேன்.

இந்த ஆளுநர் உரையில் பல்வேறு அம்சங்களைக் குறித்துக் குறிப்பாக வேளாண்மை பற்றியும், தொழில் துறை பற்றியும், பல்வேறு நிலைமைகளைப் பற்றியும் விரிவாகவும் விளக்கமாகவும் பார்ப்பதற்கு அழகாகவும், புள்ளி விவரங்களோடு தந்திருக்கிறார்கள். நாட்டிலே வேலையில்லாமல் இருக்கிற அத்தனை பேர்களுக்கும், வேளாண்மை வாயிலாக ஏறத்தாழ 40 ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கின்ற ஒரு திட்டத்தைக் குறிப்பாகத் தந்திருக்கிறார்கள். அதைப் பார்க்கிற நேரத்தில் பல்வேறு துறைகளிலும் வேலை வாய்ப்புகளுக்கு வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆனால் அதே சமயத்தில் மின்சாரத் துறையில், ஒரு மின்சார நிலையத்திலிருந்து 200-க்கு மேற்பட்டவர்கள் திடீரென்று வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எனக்குச் செய்தி வந்திருக்கிறது. இந்த உரையில் பல்வேறு நிலைமைகளைப் பற்றிச் சொல்லி இருக்கிறார்கள். ஆளுநர் அவர்களின் உரையில் நாட்டிலே நடைபெறுகின்ற மாணவர்கள் கிளர்ச்சி பற்றியோ, அல்லது நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த

அரசாங்கத்தின் குறைபாடுகளைப் பற்றியோ, நிர்வாகத்தில் இருக்கிறவர்களை, நிர்வாகத்தை ஆளுங்கட்சியினர் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதைப் பற்றியோ, நடைபெறுகிற தேர்தல்களில் ஆளுங்கட்சியினர் அதிகாரத்தைத் தவருகப் பயன்படுத்திக் கொள்வதைப் பற்றியோ ஒன்றும் காணப்படவில்லை. இதைப் பார்க்கிற நேரத்தில் கூட்டுறவுத் துறை வளர்ந்து வருகின்றது என்று சொல்கிருர்கள், ஆனல் அந்தக் கூட்டுறவுத் துறை இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துறையாக ஆக்கப்படுகிற அளவிற்குப் பல்வேறு தேர்தல்கள் ஆங்காங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் தேர்தல்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், ஏற்கெனவே வாங்கிய கடனைக் கட்டத் தவறியவர்கள் அல்லது அடிப்படையிலே தேர்தலில் நிற்கத் தகுதி இல்லாதவர்கள் என்று இருந்தாலும் தேர்வு பெற்று வருகிற நிலைமைகளைப் பல்வேறு இடங்களில் பார்க்க முடிகிறது.

குறிப்பாகத் தஞ்சையில் பல கூட்டுறவு வங்கிகளுக்கு நடைபெற்ற பல்வேறு இயக்குநர் தேர்தல்களில் கடன் கட்டத் தவறியவர்கள், அவர்கள் இந்த இடங்களுக்கு வர முடியாது என்ற நிலைமைகள் இருந்தும் அவர்கள் ஆங்காங்கு டைரக்டர்களாக நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். எப்படி என்று கேட்டால் அங்கே இருக்கிற பல்வேறு சட்ட மன்ற உறுப்பினர்களை வைத்துக் கொண்டு, அமைச்சர்களின் ஆணைப்படி அங்கே இருக்கிற சிறு விவசாயிகள் நீர் ஏற்று சங்கம், பார்ம் சர்வீஸ் போன்ற இப்படிப்பட்ட எல்லா வகையான இடங்களில் என்று இருந்து வந்த அந்த நிறுவனங்களின் தலைவர்களை நீக்கி விட்டு இரவோடு இரவாக மறுநாள் காலையில் புதிய தலைவர்களை ஏற்படுத்திக் கொள்கிற நிலைமைகள் ஏற்பட்டிருப்பது குறித்து மிக மிக வேதனையோடும், வருத்தத்தோடும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதையெல்லாம் எண்ணிப் பார்க்கிற நேரத்தில் எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. ஒரு முறை அமைச்சர் அவர்களின் பக்கத்திலே உள்ள ஒருவர் கடற்கரையில், பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த நேரத்தில் அமைச்சர்களைக் கல்லால் அடிக்க வேண்டுமென்று சொன்னர்கள். அதை இந்த நேரத்தில் நான்



எண்ணிப் பார்க்கிறேன். எண்ணிப் பார்க்கிறபோது நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் பயன்படாத காரியங்களைச் செய்கிற அமைச்சர்களை அல்லது அவர்களுக்கு உடந்தையாக இருக்கிற அதிகாரப் பெரு மக்களை இப்படிச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை உள்ளடக்கித் தான் அன்றைக்கு அவர்கள் அப்படிச் சொல்லி இருக்கக் கூடும். அப்படிச் சொன்னவர் இன்றையதினம் இந்தப் பேரவையில் அமைச்சராக இருக்கிருர்கள். இப்படிப்பட்ட நிலைமையிலே இப்படிப்பட்ட காரியங்களைச் செய்கின்றவர்களை, அல்லது வேறு வகையான திசை திருப்புகிற பல் வேறு நிலைமைகளைச் செய்கிறவர்களை இப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்லக் கூடிய அளவிற்கு சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட எல்லா வகையான நிலைமைகள் வருகின்ற நேரத்தில் குறிப்பாக அந்தக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்த மட்டும், எதை எடுத்துக்கொண்டாலும், இப்படிப்பட்ட பிரச்னையாகத் தான் இருந்துகொண்டிருக்கிறது என்பதை நான் திட்டவட்டமாக இங்கே சொல்ல விரும்புகிறேன்.

சோழ வளநாடு என்று சொல்கின்ற நேரத்தில், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு முறைகளில் பொதுவாகப் பிரச்னைகளை எடுத்துச் சொல்லியிருந்தாலும், இங்கே ஆளுநர் அவர்களின் உரையிலே ஒன்று வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனல் இல்லை. என்னவென்று கேட்டால், பல இடங்களில் சொல்லி வருகிற நேரத்தில் தஞ்சை மாவட்டம் தன் நிறைவு பெற்று, விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த மாநிலத்திற்கு மட்டுமல்லாமல், பல்வேறு இடங்களுக்கும் உணவை வழங்குகின்ற நிலைமைக்கு உற்பத்தியைப் பெருக்குகின்ற அவர்களுக்கு, அந்தப் பகுதியிலே ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கவேண்டும் என்று பல்வேறு துறையினருடைய எல்லா விதமான கருத்துக்களும் இதில் அடங்கும் என்று கருதினேன். ஆனல், அதுவும் இதிலே இல்லை.

குறிப்பாக இங்கே இன்றையதினம் இந்த உரையின்மீது பேசுவதற்கு முன்னல் ஆளுநர் உரையைப் பார்க்கும்பொழுது மறைந்த தலைவர் பெரியார் அவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்ற வகையிலே இந்த மன்றத்திலே வைத்திருப்பது குறித்து நாம் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறோம்.

அதே நேரத்தில் முதல்வர் அவர்களால் இங்கே அறிமுகம் செய்யப் பட்டிருக்கிற ஊழல் பாதுகாப்புச் சட்டம், அந்தச் சட்டமானது பொறுப்பிலே இருக்கின்றவர்களுக்கு, ஆளுகின்ற வகையிலே இருக்கின்றவர்களுக்கு அல்லது பப்ளிக் மென் என்று சொல்கிற அதிகாரத்தில் இருக்கிற அமைச்சர் பெருமக்களுக்கு அல்லது அந்தத் துறையிலே இருக்கிற சேர்மன் அப்படிப்பட்டவர்களுக்கு தன்னைக் காத்துக்கொள்கின்ற வகையில் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது என்பதை இன்றைக்கு நாம் உணர்ந்திருக்கிறோம். இந்த ஊழல் பாதுகாப்புச் சட்டத்தில் சொல்லப் பட்டிருக்கிற விதிகளைப் பார்க்கிற நேரத்தில், குறிப்பாக அரசு மக்கள் குறையைப்பற்றி அங்குலம் கூட கவனிக்காமல் லஞ்சம் வாங்கிய ஒருவர்மீது ஒரு வருஷத்திற்குள் லஞ்சம் வாங்கியது பற்றி அந்த ஓராண்டு காலத்தில் அவர் மேல் குற்றம் சொல்லவில்லை என்றால் அந்த லஞ்சம் நீங்கிவிடுகிறது என்ற அமைப்பு இந்த சட்டத்தில் இருக்கிறது. ஊழல் புகார் சொல்கின்ற ஒருவருக்கு அந்தப் புகார் நிரூபிக்கப்படாவிட்டால் மூன்று ஆண்டு காலம் அவருக்குத் திரும்பி தண்டனை தரவேண்டும் என்பதும் இந்த சட்டத்தில் இருக்கிறது. இதையெல்லாம் அடுத்து நியமிக்கப் பட்ட கமிஷனரும், அடிஷனல் கமிஷனரும் துணிந்து மந்திரி மீது உள்ள புகாரை குறிப்பாக நியாயமாக விசாரித்தால் அந்த அதிகாரி முறைப்படி ராஜிநாமா செய்யவும், கமிஷ்னர் மறுத்தால் கமிஷனரைத் தூக்கி எறிகின்ற வகையிலே இந்த சட்டத்தில் இடம் இருக்கிறது. இந்தக் கமிஷனர் ஊழல் புகாரை புலன் விசாரணை செய்யாமலேயே ஆதாரமற்றது என்று தள்ளுபடி செய்யவும் இந்தச் சட்டத்தில் இடம் இருக்கிறது.

இந்தச் சட்டத்தைப் பார்க்கிறபொழுது, இங்கே அறிமுகம் செய்யப்பட்டிருக்கிற சட்டத்தில், குறிப்பாக ஏதோ ஒருவர் ரோடு ஓரத்தில் இறந்து கிடக்கிறார் என்று சொன்னால், காவல் துறையினரிடத்தில் ஒருவர் இறந்து கிடக்கிறார் என்று சொன்னால், அவர் எப்படி இறந்தார், எதற்காக இறந்தார் என்று அப்படிச் சொல்லியவர் ஆதாரங்களைத் தராவிட்டால், அப்படிச் சொல்லியவருக்கு மூன்று ஆண்டு கடுங்காவல் தண்டனை என்று சொல்லும் வகையில், இந்த நாட்டில் லஞ்சம் தருபவர்களுக்கு வாய்ப்





பூட்டாக, இந்த ஆட்சியையும், கட்சியையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்கிற நிலைமைக்கு ஏற்றவாறு இந்தச் சட்டத்தை இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள்.

இதற்கு முன்னாலே எழுதிவைக்கப்பட்டிருக்கிற 'இண்டியன் எவிடன்ஸ் ஆக்ட்' 123, 124, 129 ஆகிய மூன்று பிரிவுகளில் அங்கே சட்டத்திற்கு உடந்தையாக துப்புத் தருகிறவர்களுக்கு அல்லது அதைப்பற்றி தனிமையாகச் சொல்கிறவர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறது. ஆனால், இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிற 2—1—1974-ல் குடியரசுத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிற சட்டத்தில் தமிழகத்தில் இருக்கிற மக்கள் தங்களுடைய எண்ணங்களை ஜனநாயகத்தில் வெளிப் படுத்துவதற்குத் தடையாக பல்வேறு நிலைமைகளை நம்மாலே காணமுடிகிறது

குறிப்பாக, ஓரிரு உதாரணங்கள் சொல்லவேண்டுமென்றால், ஒரு முதல் அமைச்சர் ஒரு கோடி ரூபாய் லஞ்சமாக வாங்கிவிட்டார் என்று சொன்னால், அந்த முதல் அமைச்சர் 6 மாத காலத்திற்கு அந்தப் பகுதியில் இல்லாமல், வெளியே சென்றுவிட்டு, அதற்குப் பின்னால் ஏழாவது மாதத்தில் உள்ளே வருவார்களேயானால், அந்த லஞ்ச ஊழல் என்பது, இந்தச் சட்டப்படி அவர் மீது குற்றம் சாட்டுவதற்கு வழியில்லாமல் நீதிபதிகளை நியமிக்கின்ற அதிகாரம் இந்த அரசுக்கு இருக்கிறது. ஹைகோர்ட்டில் இருக்கிற நீதிபதிகள் அரசாங்கத்தினுடைய துணை இல்லாமல், அவர்கள் குடியரசுத் தலைவருடைய நியமனத்தைப் பெற்று, இந்த அரசாங்கத்தினுடைய பல்வேறு நிலைமைகளை நீதியாக நேர்மையாக அவர்கள் விசாரித்து தீர்ப்புகள் வழங்க முடியும். ஆனால், இப்படிப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரித்து தீர்ப்பு வழங்குவதற்கு இந்த அரசுதான் இந்தக் கமிஷனரை நியமிக்கும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** * *

என்ற தொனியில் பேசுவது சரியல்ல. ஆகவே, அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடுவர்களுக்கு ஒரு உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது முறையாகாது. நீதிமன்றத்திலுள்ள நடுவர்களுக்கு ஒரு உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது முறையாகாது. ஆகவே, அதைப்பற்றிப் பேசிய பேச்சு . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அது மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்டத்தைப் பற்றி தவறான தகவல்களை தந்து கொண்டிருக்கிறார்கள். நேரம் குறைவாக இருப்பதினால் நான் குறுக்கிடவில்லை. ஏதோ ஒருவர் இறந்து கிடக்கிறார் என்று சொன்னாலே குற்றம், மூன்று வருடம் தண்டனை என்று போடப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். இறந்து கிடப்பவர் யாரோ ஒருவரால் கொலை செய்யப்பட்டிருக்கிறார் என்று பொய்யைச் சொன்னால் அது தவறு. ஆனால், இறந்து கிடக்கிறார் என்று இன்பர்மேஷன் கொடுப்பதே தவறு என்று சொல்ல முடியாது. இந்தச் சட்டத்திற்கு திருத்தம் வர இருப்பதால் அப்பொழுது விரிவாகப் பேசலாம் என்று இருக்கிறேன். ஆகவே, இந்தச் சட்டத்தைப்பற்றி தவறான தகவல்களைப் கொடுப்பது நல்லது அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரை கோவிந்தராசன் அவர்கள் * *

என்ற வகையில் சொன்ன அந்தப் பகுதிகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன்:** சட்டமன்றத்தில் பேசுகின்ற பொழுது ஆளுகின்ற கட்சி உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில் எதையும் குறிப்பேட்டிலிருந்து எடுப்பதில்லை. சட்டமன்றத்தில் எல்லா உறுப்பினர்களுக்கும் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. சட்டத்தினுடைய நுணுக்கங்களை கூறுகிறபொழுது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்தில் பேசுவதற்கு உரிமை இருந்தாலும் பேசுவதற்கு ஒரு வரம்பு இருக்கிறது. வரம்புக்கு உட்பட்ட உரிமையே தவிர, வரம்பிற்கு அப்பாற்பட்ட உரிமை இல்லை.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**திரு. துரை கோவிந்தராசன்:** இந்தச் சபையில் பார்க்கிறோம். சில பேர்கள் இங்கே படித்துக்காட்டும் தபால் சிலவற்றை சபைக் குறிப்பேட்டிலிருந்து எடுத்துவிடுவது, சில பேர்கள் விஷயத்தில் எடுப்பதில்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிவிட்டது. நீங்கள் பேசி முடியுங்கள்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** சட்டமன்ற விதிமுறைகள் பிரகாரம் நீதி மன்றத்தில் உள்ள வழக்குகளைப் பற்றியோ அல்லது நீதிபதிகள் அளித்த தீர்ப்புகளைப் பற்றியோ தங்களுடைய கருத்துக்களை சட்டமன்றத்தில் பேசக்கூடாது என்று இருக்கிறதே தவிர, நீதித் துறையைப் பற்றியோ அல்லது அந்தத் துறையை நிர்வகிக்கின்ற நீதிபதிகளைப் பற்றியோ பேசக்கூடாது என்று விதிமுறைகள் இல்லை. சட்டமன்றத்தைப் பொறுத்த மட்டில் 'தி மெம்பர்ஸ் ஆர் இம்யூன்'. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீதிமன்றத்திலுள்ள நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பித்து * *

என்று சொல்வது நல்லது அல்ல. எட்மண்ட் அவர்கள் ஒரு வழக்கறிஞர், அவர்களுக்குத் தெரியும். இது அவைக் குறிப்பில் இருப்பது நல்லது அல்ல.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** * *
என்று சொல்வதில் தவறே கிடையாது. மக்கள் ஆட்சி காப்பாற்றப்பட வேண்டியதற்காக சொல்லப்பட வேண்டிய ஸ்டேட்மெண்ட்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பாராளுமன்றத்தில் திரு. மோகன் குமாரமங்கலம் இதைபற்றிக் கூறியிருக்கிற அடிப்படையில், * * மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். இங்குள்ள நிலை நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசக் கூடாது என்பதுதான்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நான் அந்த அடிப்படையில் பேசவில்லை. என் சொந்த அடிப்படையில்தான் பேசுகிறேன். * * இந்தச் சட்டத்தினுல் நாளைக்கு மக்களுக்கே நீதிமன்றத்தில் நம்பிக்கை இல்லாது போகும் என்று சொல்வதும் தவருகாது, மக்கள் பிரதிநிதியின் கடமை.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நமது விதிமுறைகளில் சப் ஜுடிஸ் ஆக இருக்கக்கூடிய விஷயங்களை இந்த அவையில் பேசக்கூடாது என்று இருக்கிறது. மேலும் . . . .

MR. SPEAKER: Rule 67 (iv) says that a member while speaking must not reflect upon the conduct of the President or Governor or any Court of Justice . . . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Supposing in a judgment justice is not done and to say that about that judgment is not wrong; but if whe have some other *MENS REA* behind it, it is bad. When I in a common fashion say that the Judges should be above all such influences, that is only in the interest of the public.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பேரவை விதி 64 (iv)-ல் reflect upon the conduct of...........any Court of justice என்பதாக, குறிப்பிட்ட ஒரு தீர்ப்பின் அடிப்படையில் அந்தத் தீர்ப்பு சரியல்ல என்று விமர்சிப்பது கூடாது என்பதல்ல—நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பித்துப் பேசுவது கூடாது என்பதுதான். பல தீர்ப்புகளைப்பற்றி நீதி மன்றத்திலேயே எடுத்துச் சொல்லப்படுகின்றன. அதற்கு ஒரு உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * என்று பொதுவாக நீதி மன்றங்களை எல்லாம் தாழ்வுப்படுத்தும் வகையில் பேசுவதும் கூடாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** * * என்று சொல்வது எந்த நீதிபதியையும் குறிப்பிட்டுச் சொல்வது அல்ல. அங்கே பார்லிமெண்டில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிற கொள்கைக்கு

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



விரோதமாக நீதிபதி தீர்ப்பு சொல்லக்கூடிய அம்சம் வந்த நேரத்தில் தான்—நீதிபதிகள் பற்றி ரீ எஜுகேட் பண்ணும்படி வந்தது. டாக்டர்கள் மகாநாட்டில் கூட டாக்டர்கள் அரசியல் தலையீடு அதிகமாக இருக்கிறது என்றுர்கள், அது போல இங்கே ஜுடிஷியரியில் அரசியல் தலையீடு ஏற்படக்கூடிய ஆபத்துத்தான் இருக்கிறது என்று சொல்வது தவறு அல்ல . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது சரி. * * என்பது நீதிபதிகளுக்கு உள்நோக்கம் கற்பிப்பதுபோல இருக்கிறது, அது கூடாது என்பதுதான்.

THIRU K. T. K. THANGAMANI: It all depends................. supposing certain grounds are prepared by the Government, it is impossible for the judge to go against ........... நாளைக்கு நான் பேசுகிறபோது சில விவரங்கள் வரும். அதற்கு ஒரு பாதுகாப்பாக தெளிவுபெறவேண்டும் என்றுதான் சொல்கிறேன். வழக்குகளில் சில பேர்களை தவருன முறையில் சேர்த்துவிடுகிருர்கள். இவர்களுக்கும் தண்டனையாகிறது. இப்பேர்ப்பட்ட வழக்குகளில் கூட நீதிபதிகள் தவருகச் சேர்க்கப்பட்டவர்களை விடுவிப்பது இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவாக உறுப்பினர் பேசும்போது நீதிபதிகளுக்கு எந்தவிதமான உள்நோக்கமும் கற்பிக்காமல் பேசுவதுதான் நல்ல மரபு.

THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker, what the rule says is regarding reflections on the conduct of the Judge. That will have to be interpreted in a liberal manner. That is my first point.

Any reflection should not be personal; it can be impersonal and it can be based on the decision that has been rendered by any judge in any given case. That is so far as the judiciary is concerned.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[Thiru R. Ponnappa Nadar] [1974 சனவரி 23

Now there is a controversy ranging whether the Judges should be committed or what should be the commitment. What I submit is 'committed judiciary' should be according to the interpretation and the natural interpretation is that the Judges should be committed to the Law and committed to the Constitution and not committed to any executive authority or Government. That is the fair interpretation that can be placed.

So far as this rule is concerned, it would be erroneous if we assume nothing can be mentioned about any decision, and any fair comment that is made against any decision is not to be objected to.

So far as this House is concerned, we shall not say that the judge is motivated to give such a decision; that would be wrong and that would come within the mischief of the law. That is the reason why there is no definition given about the conduct of the judge. What the conduct of the judge is will depend upon facts of each case and that will have to be taken notice of. The Speaker is the protector of the rights of Members of this House. He can just cull out from the speeches of the various hon. Members and see whether the rule has been infringed or not. In this particular case I do not think there is anything palpably wrong or erroneous and so much so a fair interpretation should be given and that should be borne in mind. That is all my submission.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவர் அவர்களே, இந்த விதிப்படி நீதிபதிகளுடைய காண்டெக்டைப் பற்றித்தான் ரிப்ளெக்ட் பண்ணக்கூடாது என்று இருக்கிறது. கோர்ட்டின் தீர்ப்பை விமர்சனம் செய்ய உரிமை இருக்கிறது. அப்படி விமர்சனம் செய்கிறபோது உள்நோக்கம் கற்பிக்கக்கூடாது என்பதுதான். * * என்று சுட்டிக்காட்டக்கூட கூடாது என்பதாக தாங்கள் அளித்திருக்கிற தீர்ப்பை புனர் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோல வெளியில் கூட பேச உரிமை இருக்கிறது. வெளியில் இருக்கிற உரிமை கூட உறுப்பினர்களுக்கு இந்த அவையில் பேச

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



1974 சனவரி 23] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

இல்லை என்பது சரியாகாது. இந்த தேசத்திற்கு ஏற்பட இருக்கிற ஆபத்தினைக் கூடச் சுட்டிக்காட்ட முடியாது, தடை செய்து விட்டால். உறுப்பினர்கள் தங்கள் கடமையினை நிறைவேற்றுவது சங்கடமாகிவிடும் என்பதினால் தங்கள் தீர்ப்பினை புனர் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Mr. Speaker, the Leader, of the Congress Party has made the position sufficiently clear and his observation gives the proper guidance.

I submit, Sir, that so far as the observation of Mr. Ponnappa Nadar is concerned, the judiciary is a committed judiciary and so far as the commitment is concerned, it is an exclusive commitment to the Law and the Constitution. Therefore, we have that concept about the judiciary being committed. There should not be any presumption, even a remote presumption that the judiciary will be committed to anything other than Law and the Constitution. The healthy convention in this House is that the Government may be charged with any motive in bringing in any legislation.

** Of Course, I do not question the *bona fide* of the Member. But the healthy convention in this House, the healthy deliberations in this House should be that we may not cast generalised reflection upon the judiciary. Not only no particular officer has been singled out, but the judiciary itself in general has been generalised and it has been said that the influence of the Government is upon the judiciary. That is why I submit that it should not be part of the proceedings.

(முற்பகல் 11.00)

**திரு. செ. கந்தப்பன்:** தலைவர் அவர்களே, நீங்கள் கொடுத்த தீர்ப்பை புனராலோசனை செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை சில மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர்கள் எழுப்பியதால், நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். * * இந்த வாதம் ஒப்புக்கொள்ளப்பட்டால் இந்த நாட்டில் உயர்நீதி மன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவை அரசியல்வாதிகளுக்கப்பாலே செயல்படுவதில்லையென்ற ஆபத்தான முடிவுக்கு நாமெல்லாம் வரவேண்டியவர்களாக இருக்கிறோம். சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் அரசியல்வாதிகளால், ஹோம் மினிஸ்ட்ரியால் நியமனம் செய்யப்

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

படுகிறார்கள். அதனால் ஹோம் மினிஸ்ட்ரி அனுப்புகிற அல்லது மத்திய சர்க்காரால் அனுப்பப்படுகிற மசோதாக்கள் அத்தனையும் சுப்ரீம் கோர்ட்டால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எத்தனையோ மசோதாக்கள் அங்கே தள்ளப்படுவதை நாம் பார்க்கிறோம். உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் மாநில அரசுகள் கலக்கப் படுகின்றன. அதனால் மாநில அரசினுடைய மசோதாக்கள்மீது தீர்ப்புகள் வழங்கப்படுகின்றபோது வழக்கு மன்றங்களிலே அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனவே, சில சட்ட வரம்புகளுக்கு உட்பட்டு, ஜனநாயகக் கடமையைச் செம்மையாகச் செய்கிற நீதித் துறைக்கு உள்நோக்கம் ஏற்படுத்துவதுதான் அவருடைய வாதம். அது தவறு என்கிற உங்கள் தீர்ப்பை நீங்கள் அமுல் நடத்த வேண்டுமென்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் துரை கோவிந்தராசன் * * என்று சொல்வது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கந்தப்பன் அவர்கள் கூறியதைப் போல், இந்த நடுவர்களுக்கு மட்டுமல்லாமல், நாட்டிலே உள்ள எல்லா நடுவர்களுக்கும் பொருந்துகிற நிலைமை உண்டாகிவிடும். மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் சொன்னதைப் போல், நீதிபதிகள் கொடுக்கின்ற தீர்ப்பை விமர்சிக்க வேண்டாமென்று சொல்லவில்லை. அத்தீர்ப்பை விமர்சிக்கலாம். அப்படி விமர்சிப்பது நீதிமன்றத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிதான். ஆனால், அதற்கு உள்நோக்கம் கற்பித்து பேசுவது கூடாது. எதிர்காலத்திலே குறிப்பிட்ட நீதிபதி இப்படிச் செய்வார், நடுவர்கள் இப்படிச் செய்வார்கள் என்று சொன்னதால், அதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கவேண்டுமென்று சொன்னேன்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு சம்பவத்தைச் சுட்டிக்காட்ட விரும்பு கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிகழ்ச்சியையெல்லாம் இங்கே சொல்வதற்கு இடமில்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நடந்த நிகழ்ச்சியைத்தான் சொல்லக் கூடாது என்று சொல்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





**திரு. துரை கோவிந்தராசன் :** தலைவர் அவர்களே, தாங்கள் தீர்ப்பு தந்ததற்குப் பின்னால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் நேரம் அப்பொழுதே முடிந்து விட்டது. ஆகவே, 2 நிமிடத்திலே முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. துரை கோவிந்தராசன் :** தாங்கள் தீர்ப்பு தந்ததற்குப் பின்னால், அதன்மீது ஒன்றும் சொல்லமுடியவில்லையென்றாலும் தங்கள் மூலமாக ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். நடந்து முடிந்த திருச்சி, பாளையங்கோட்டை நிகழ்ச்சிகளது மீதான நடுநிலையாளர்களுடைய தீர்ப்புக்குப் பின்னால்; இப்படிப்பட்ட ஒரு சட்டம் வருவது. அந்தச் சட்ட திட்டத்தை விரிவாகப் பார்க்கிற நேரத்தில் அத்தனையும் தெரி கிறது என்பதுதான்.

அதே நேரத்தில் இங்கே இருக்கிற அமைச்சர் பெருமக்களைப் பொறுத்தமட்டில் நாட்டிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உரம் கிடைக்காத நேரத்தில், அப்பகுதிகளுக்கு அமைச்சர்கள் சென்று திரும்புகிற சில ஊர்களில், விவசாயிகளுக்கு 50 கிலோ, 20 கிலோ என்று உரம் தருவதாக, கார்டுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக வழங்கிவிட்ட பிறகு, அமைச்சர்களுக்கு மாலை போடுக்கை விட்டதற்குப் பின்னால், வரவேற்பு தந்ததற்குப் பின்னால், நூற்றுக்கணக்கான மூட்டை உரங்களை அங்கே இருக்கிற கூட்டுறவு சங்கத் தலைவர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர், வெளியே எடுத்துச் செல்கிறார் என்ற செய்தி என் போன்றவர்களுக்குத் தெரிந்த பின்னால், குறிப்பாக, தஞ்சையிலே இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் ஓரிடத்திலே இருந்து 170 மூட்டை உரம் அமைச்சர்கள் வந்து போனதற்குப் பின்னால், அந்த இடத்திலேயிருந்து கடத்தப்பட்டது என்று தெரிவித்து அதற்குப் பின்னால் அந்த சொசைட்டியினுடைய தலைவர் கைது செய்யப்பட்டு, இரண்டு மூன்று தினங்களுக்குள்ளாக அவர் வெளியிலே விடப்பட்டு, இதுவரையிலே எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பது, இப்படிப்பட்ட உரத் தட்டுப்பாடு இருக்கிற நேரத்தில், அப்படி கள்ள மார்க்கெட்டிலே விற்பவர்களுக்கு அமைச்சர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்களோ என்ற ஐயப்பாட்டை என்னுடைய பகுதியிலே ஏற்படுத்தி இருக்கிறது.

[திரு. துரை கோவிந்தராசன்] [1974 சனவரி 23

குறிப்பாக, அமைச்சர்கள், எதிர்க் கட்சியிலே இருக்கிறவர்கள், அல்லது அவர்களுக்கு எதிராக ஏதாவது ஒன்றை மேற்கொள்ளுகிற நேரத்தில், நாட்டில் அவர்கள் பெயர்கள் தெரிவிக்கப்படக் கூடாது என்ற அடிப்படையிலேதான் அரசாங்கத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்கிற நேரத்தில், தமிழகத்திலே அரசாங்கத்தினால் அந்நிகழ்ச்சி பற்றி அட்டைகள் அச்சடிக்கப்படுகின்றன. ஆனால், அந்தந்தத் தொகுதியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களது பெயர்கள் அதிலே இருப்பதில்லை. என்னுடைய தொகுதிக்குப் பக்கத்து ஊரில் உயர்நிலைப் பள்ளி துவக்க விழாவில் அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள். அதில் அந்தந்தப் பகுதியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர்கள் கலந்துகொள்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே, தஞ்சையிலே இருக்கிற மருத்துவக் கல்லூரியில் 23—12—1973-ம் தேதி அன்று டைரக்டர் ஆப் மெடிக்கல் எடுக்கேஷன் அலுவலகச் சார்பில், சூப்பரின்டென்ட்ஸ் ஹவுஸ் என்கிற கட்டடத்தைத் திறந்திருக்கிறார்கள். காஷுவால்ட்டி டிபார்ட்மெண்ட் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது. மதிப்பிற்குரிய அமைச்சர் அன்பழகன் அவர்கள் அதிலே கலந்து கொண்டிருக்கிறார்கள். டாக்டர் நாராயணன், எம்.டி. அங்கு இருக்கிறார்கள். அந்த விழா அட்டையில் பின்னால் பார்த்தால், என்னுடைய தொகுதியிலிருந்து 20, 30 மைலுக்கு அப்பால் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள், கூட்டுறவு சங்கத் தலைவர்கள் இன்னும் பலர் அதில் கலந்துகொண்டிருக்கிறார்கள் என்பது தெரிகிறது. நான் அமைச்சர் அவர்களிடம் தொலைபேசி மூலமாக, இப்படிப்பட்ட என்னுடைய தொகுதியிலே நடைபெறுகிற நிகழ்ச்சிக்கு என்னுடைய பெயர் இல்லையென்றாலும்கூடப் பரவாயில்லை, எங்கே நடைபெறுகிறது என்றுகூட எனக்கு தெரிவிக்கவில்லை. என் போன்ற அங்கத்தினர்கள், அதிகாரிகளை அல்லது அமைச்சர்களைப் பார்த்தால் ஆபத்து இருக்கும் என்று கருதுகிறார்களா என்று கேட்டேன்.

இதுபோல் அமைச்சர் பெருமக்கள் வாய்மையே வெல்லும் என்ற தமிழக அரசு எம்பிளத்தைப்போட்டு நடத்துகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளைப்பற்றி எங்களுக்குத் தெரிவிக்காமல் இருப்பது வருத்தத்தைத் தருகிறது என்று சொன்னாலும், நாங்கள்



1974 சனவரி 23] [திரு. துரை கோவிந்தராசன்]

அரசாங்கத்திற்குத் தேவையில்லையென்று சொன்னாலும், இப்படிப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் பல்வேறு பகுதிகளிலே நடக்குமானால், மக்களைக் கூட்டி, மக்களெல்லாம் கொதித்தெழுந்து பல்வேறு காரணகாரியங்களை ஆராயத்தக்க வகையில் மாண்புமிகு என்.வி.என். அவர்கள் சொன்னதை இந்த நேரத்தில் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF: Mr. Speaker, Sir, let me at the outset pay my respectful tributes to the departed leader our Great Periyar. Periyar had been instrumental to bring in the basic change in the thinking and ideas of the people of Tamil Nadu, who had basically revolutionised the very concept of social life and it is due to his untiring efforts that the people of Tamil Nadu have occupied a respectful place in the social life of our State and in the social life of our Indian community. Therefore, on behalf of my party, I also associate myself with the sentiments expressed by His Excellency the Governor in His Address.

Now talking on various economic points that have been raised by His Excellency, I would like to submit to you, Sir, that so far as our people are concerned in the State as well as in India, there has been a tendency, fortunately or unfortunately, to believe in the very personal efficiency rather than in the efficiency of the State. The State must take measures to infuse confidence in the efficiency and resourcefulness of the State and the Government or Governments that rule the State or the States. It is because of the lack of this confidence, every individual in India as well as in our State feels that in order to safeguard or to provide safety to his future, it is necessary for him not only to find the means for livelihood but also to conserve means of livelihood that leads to a sens e of necessity for the accumulation of wealth.

You take any section of the society now, whether they belong to the educated section or to the uneducated section of the people, people who are connected with the agricultural field or the people who are connected with the industrial field or the people who are employed in the Government offices or private offices, they feel that they should accumulate wealth in order to

safeguard their future. Now this idea of conserving and accumulating wealth leads to a sense of irresponsibility towards the society. We must make the people understand that the State is there to safeguard their interest and to conserve the resources of the community. The State is there to see that their future is safeguarded. So long as that sense is not imbued in the minds of the people, I submit that whatever measures the Government here or elsewhere will take, will meet with failure because we cannot control the people indulging in anti-social activities. Because of this, I submit that the entire fabric of the society and the entire aspect of the economic life must be re-scheduled and sincere efforts must be made to see that the future of the people is secure in the hands of the Government. It is because of the lack of this sense, we are having all these problems.

So far as the agricultural sector in our State is concerned, His Excellency the Governor has pointed out that so long as our agricultural sector is entirely dependent upon the vagaries of the monsoon and so long as proper and effective and continuous supply of water is not ensured to the people, we will not be able to have the achievements in the agricultural field. In order to ensure proper supply of agricultural products and the conservation of the products that were made in the previous year, what are the steps taken by the Government here and elsewhere, I would like to know.

So far as irrigation facilities are concerned, I submit that His Excellency the Governor has pointed out that all the irrigation sources have been tapped and very little has been left untapped. In this connection, I want to submit that thousands and thousands of tanks that had been constructed by our great Kings and great emperors, particularly in Tamil Nadu, our able predecessors, have been left without proper care. There must be a proper survey of the tanks in Tamil Nadu to find out how many tanks have been left uncared for. Also most of the tanks have been encroached upon. The bunds and supply channels have been encroached upon. As supply channels have been closed, most of the tanks have been rendered dry. In these dry tanks the encroachers are having a free day without there being any



hindrance. Instead of going in for new irrigation facilities and spending more money on it, let us devote attention to safeguard the already existing tanks which are a perennial source of irrigation. I feel a committee must be constituted at the State level to see that all these tanks are cleared of the encroachers.

Now we have completely tapped all the irrigation sources. But still there are rivers. You take the river in my district. People feel that Palar is not a river and that is a wrong idea. Palar was one of the perennial rivers and it was more perennial than our Cauvery. The Palar civilization is a great civilization than the Cauvery civilization.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I object to this statement of the hon. Member.

THIRU M. A. LATHEEF : That is part of the history and that cannot be challenged.

Palar is now more or less dry because of the construction of the dam in the Karnataka State. But in spite of that, even the Hon. Speaker who hails from that district knows that Palar water is flowing throughout the year. Even in the Chingleput district as you pass across the bridge, you will see that water is flowing below that bridge even at this time of the year. So, a request had been made even in 1952 that there should be a reservoir constructed at the mouth of the Palar near Pullur. This request has been pending for the last 25 years. Now I understand that this Government have taken up this scheme and it has been referred to the experts to find out whether there is any feasibility for the construction of the dam near Pullur. I also understand that the experts have opined that it is feasible and therefore I request the Government to take up this scheme immediately.

Now I come to Javadu Hills which has an extent of 80 sq. miles and whenever we get rain, the entire Hill conserves the rain water and it flows throughout the year in different parts of the district and it can be utilised. A dam may also be constructed near Andiappannur. Now the State is facing very acute shortage of power and according to the recent note of the Government of India, Tamil Nadu will be the most affected State in the matter

of acute power shortage and then comes the U. P. and other States. So in order to mitigate the power shortage these new schemes may be drawn up in such a way that they will provide not only irrigation facilities but also hydel power. In Andiappanur there is scope for providing irrigation and hydel power facilities and therefore such a scheme should be taken up there.

Then I come to economic development. We are heading towards economic development. Our country has been characterised as a developing economy. But let us have a correct picture as to what exactly is meant by economic development. We are indulging in such things which give hardly any opportunity, economic opportunity, to the lower sections of the community. That is what I want to submit.

There should be proper stages of economic development, primitive stage, developing process, etc. Then comes the stage when every man must have the basic sources to earn his livelihood. That is what is called the stage of 'mass consumption'. After that stage of 'mass consumption' comes the 'stage of automobile'. But what do we see now? We see the fourth or last stage of economic development because of the most sinister distribution of economic resources, by certain people. You can go to the streets of Madras and you can find how it is crowded with all sorts of vehicles on the road: that is one case in one part of the country. Some people have amassed wealth, amassed the resources of the community. But the poor are becoming poorer. There is no co-ordination between the industrial and agricultural sector. You start new industries and you give new employment to people in industrial sector. But when people work in industry, they indulge in what is called as 'consumption' and you have the spectacle of more people chasing few goods. There are not enough 'consumer goods' for them to consume.

So, what I say is, there should some co-ordination between agricultural and industrial sector. Otherwise you cannot have proper system of economic distribution. But what I want to submit is that the Central Government has been consistently refusing to extend the benefits to the States of Indian Union.



In the speech of His Excellency we find that out of Rs. 11,000 and odd crores that are distributed to the States by the Central Government, Tamil Nadu would receive only Rs. 500 crores. From what sources does the Centre get this money? It is the people of Tamil Nadu, the entire administrative machinery in Tamil Nadu and other machineries in Tamil Nadu—who raise that money. It is they who pay the Income-tax and other Central taxes. If after getting the money from the people, the Central Government does not pay heed to the repeated requests of State Governments, then we come across a precarious situation which hits the economy of the States. The sooner it is realised that the States must have the major share in the taxes collected from the States, the better for the economy of the States in Indian Union. I would request the Central Government to pay serious attention to this question as early as possible.

So far as industrial development is concerned it should not be confined to a particular locality. There should be proper decentralisation. That is the accepted national policy. But in actual practice we find that in the matter of setting up industries, a single particular State is singled out for development by the Centre. We find from the papers that the Prime Minister has laid the foundation stone of an industry costing Rs. 45 crores, another industry costing Rs. 50 crores, etc. Do you know in which State? It is in Uttar Pradesh. May I know whether the entire Indian Union consist of only one State, viz., Uttar Pradesh? Are there not States like Tamil Nadu, Karnataka, Kerala, etc? I would like to draw the attention of the Hon. Chief Minister that he should make the Centre know that there is a State like Tamil Nadu in Indian Union and that the Centre should help that State in industrial and economic development. Unless the resources of Tamil Nadu are exploited for the benefit of the people of Tamil Nadu by setting up of major industries here, unless the Centre helps in proper measure in that, the people of Tamil Nadu will rise in revolt and the entire blame for the same will be on the Central Government and Central Government alone. In this connection I wish to submit that we must also see that all the districts of Tamil Nadu are properly developed and not only Madras Citty, Tiruchirappalli, etc.

[Thiru M. A. Latheef] [1974 சனவரி 23

Take Dharmapuri, undeveloped parts of North Arcot, etc., for development. Let all districts get equal treatment. In this connection, I wish to point out that the constituency which I represent, Vaniyambadi, has not got even one industry.

(Mr. Chairman sounded the gong.)

I am the only member from my party speaking today and I may be given some more time.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): ஏற்கெனவே தாங்கள் 20 நிமிடம் எடுத்துக் கொண்டு விட்டீர்கள்.

THIRU M. A. LATHEEF: You ask your officers whether there is any single industry in Vaniyambadi. But yet my place is full of tanneries and when the time comes I will speak on the problem of tanners. Let the Hon. Chief Minister see that in my constituency, which is at present not having even one single industry, some big industry is started.

I will finish in a minute. His Excellency has spoken about 'credit squeeze by the Reserve Bank of India'. But let us see the financial accommodation given by nationalised banks, co-operative banks, etc. What is the object with which the banks were nationalised. The laudable words of the Prime Minister were that the banks were nationalised in order to extend credit to the poorer sections of the community. But is it being done now? No. Do you want the credit squeeze to be permanently there I would request the Hon. Prime Minister of India to see that enough financial accommodation is accorded by these banks. . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI: I hope the hon. Member realises that he is not speaking in Parliament but in the State Assembly.

THIRU M. A. LATHEEF: As representative of the Prime Minister here, Mrs. Anandanayaki may carry my remarks to the Prime Minister and get necessary redress.



1974 சனவரி 23] [Thiru M. A. Latheef]

With these words, I wholly associate myself with the sentiments expressed by His Excellency the Governor, even though the picture painted is dismal. I applaud the laudable and commendable way in which the Government of Tamil Nadu is carrying on the administration of Tamil Nadu. Both the people and Government are happy. With these words, I support the resolution of thanks to the Governor for the Address he has delivered.

(முற்பகல் 11.30)

திரு. சீ. வடிவேலு: சட்டப் பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அளித்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற முன்வருகிறேன் நம்மையெல்லாம் வளர்த்த சுயமரியாதை இயக்கத் தந்தை பெரியார் அவர்களுடைய மறைவிற்கு இரங்கலை கவர்னர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். தந்தை பெரியார் அவர்களைப் பாராட்டியிருக்கிறார்கள். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென்ற அவருடைய தீவிர நடவடிக்கையால் தமிழகத்தில் நல்ல நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. தமிழன் வாழ வேண்டும். தமிழ்ச் சமுதாயம் நல்லமுறையில் இருக்க வேண்டுமென்று பாடுபட்ட தந்தை பெரியார் அவர்கள் மறைந்ததற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு ஆறேழு ஆண்டுக்காலமாகத் தமிழக மக்களுக்கு எப்படியெல்லாம் நல்ல காரியங்களைச் செய்திருக்கின்றது என்று பார்க்கும்பொழுது பொதுவாக அதை எதிர்க்கட்சிகள் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. இருந்தாலும் எதிர்க்கட்சிகள் என்ற காரணத்தால் கெட்ட எண்ணத்தோடு ஏதோ குறைபாடுகளைக் கூறிக்கொண்டேயிருக்கிறார்கள்.

முதலாவதாக நம் தமிழக மக்களுக்குத் தேவையான உணவுக் உற்பத்தி நல்லமுறையிலே வளர்ச்சியடைய வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடுதான் உணவு உற்பத்திக்குப் பல கோடி ரூபாய்களையும், மின் உற்பத்திக்குப் பல கோடி ரூபாய்களையும் கவர்னர் அவர்கள் உரையிலே தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் குடிதண்ணீருக்காக 93 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அதுமட்டுமல்ல, தமிழக அரசு, உழுகின்ற நிலங்களெல்லாம் அந்தந்த

[திரு. சி. க. வடிவேலு] [1974 சனவரி 23

விவசாயிகளுக்கே இருக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தின்மூலம் நிறைவேற்றிய காரணத்தால்தான் இன்றைக்கு நம் தமிழகத்திலே பருவமழை தவறியபோதும், போதிய மின் வசதியில்லாமல் இருந்தாலும், போதிய உணவு உற்பத்தியாகி, உணவு கிடைத்திருக்கிறது. பொதுவாக பக்கத்து மாநிலங்களை எடுத்துக் கொண்டால், கேரளம், ஆந்திரம், மைசூர் போன்ற மாநிலங்களைப் பார்க்கும்பொழுது எவ்வளவு வறட்சியாக இருக்கிறது, உணவுக்கு எப்படித் தட்டுப்பாடு இருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, தமிழகத்திலே பெரு முயற்சியாலும், பல அமைச்சர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியாலும், அதிகாரிகளும் தீவிரமாக முயற்சிகளை எடுத்துக் கொண்டதாலும்தான் உணவு உற்பத்தியில் வெற்றி பெற்றிருக்கிறோம்.

பொதுவாக தமிழக அரசு ஏழை எளியவர்களுக்கு அடிக்கடி நல்ல திட்டங்களைத் தந்திருக்கிறது என்பதைப் பார்க்கும் பொழுதும் நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. அதுமட்டுமல்லாமல் ஐந்தாண்டுத் திட்டத்திலே முதலிலே பாசனத் திட்டம் என்று இருக்கிறது. பொதுவாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் இருக்கின்ற ஏரி குட்டைகளுக்கெல்லாம் நல்ல வசதி தர வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு பல கோடி ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பகுதியிலே நீண்ட காலமாக இருக்கின்ற காட்டுப்புத்தூர் வாய்க்காலின் தலைப்பிலே நல்லமுறையிலே இல்லாமல் இருந்து வருகிறது. நானும் பலமுறை சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன். அந்தத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் நம்முடைய தமிழகத்திலே விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் பல இருக்கின்றன. கொடிக்காலை எடுத்துக்கொண்டால் கொல்லு சேரியில் இருக்கின்றன. அவைகள் திடீர் திடீரென்று காய்ந்து விடுகின்றன. எனவே அதற்குத் தீவிர முயற்சியெடுத்துக்கொண்டு அவைகள் காயாமல் இருப்பதற்குப் பாதுகாப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் இந்த மன்றத்தில் கேட்டுக் கொள்கிறேன்.



1974 சனவரி 23] [திரு. சி. க. வடிவேலு]

எதிர்க் கட்சி நண்பர்கள் உரத் தட்டுப்பாடு என்றெல்லாம் குறிப்பிடுகிறார்கள். உரத் தட்டுப்பாட்டை எப்படித் தீர்க்க வேண்டுமென்ற அடிப்படையிலே தூத்துக்குடியிலே பெரிய அளவில் உரத் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதுகூட வருகிற ஜூன் மாதத்திலேயிருந்து உர உற்பத்தியைச் செய்து விடும் என்ற கருத்தை கவர்னர் அவர்கள் உரையிலே தந்திருக்கிறார்கள். இதனால் உரத் தட்டுப்பாடு உறுதியாக நீங்கும் என்று நான் நம்புகிறேன். அந்தத் தட்டுப்பாடு இல்லாவிட்டால் உணவு உற்பத்தியிலே தமிழகத்திலே இன்னும் அதிகமாக இருந்திருக்கும் என்பதை நாம் யாரும் மறுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியிலே நீண்டகாலமாகவே கூட்டுறவு சர்க்கரை ஆலை வர வேண்டுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கேட்டபொழுது அவர்களும் உறுதியாகத் தருகிறேன் என்று கூறியிருக்கிறார்கள். நானும், முசிறி சட்டமன்ற உறுப்பினரும் முசிறிப் பகுதியிலே சர்க்கரை ஆலை வருவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கிறோம். அந்த முசிறி பகுதி பிறண்ட பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. எந்தத் தொழிற்சாலையும் அந்தப் பகுதியில் ஏற்படாமல் இருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, திரு. ஆர். விஸ்வநாதன் என்பவர், குன்னியூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஏறக்குறைய 400 ஏக்கர் அளவிலே அனுமதி பெறாமலே காட்டுப்புத்தூர் வாய்க்காலிலிருந்து தண்ணீரை எடுத்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் நேரடியாகச் சொல்லியிருக்கிறேன். அவர்களும் துரித நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மூன்றில் ஒரு பகுதி சொந்தம் என்று அக்ரிமெண்ட் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையிருந்தால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதாவது காட்டுப்புத்தூர், காடுபட்டி, நத்தம் பகுதிகள் பாதிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு அரசாங்கம் இதில் தீவிர நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சி. க. வடிவேலு] [1974 சனவரி 23

என்னுடைய பகுதியில் ரூரல் டெவலெப்மெண்ட் ரோடு என்பது ஒன்றியத்தின் மூலம் இன்னும் வராமல் இருக்கிறது. அதற்கும் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்டகாலமாக அந்தப் பகுதியில் வாழை அதிகமாக இருக்கிறது. எனவே அங்கே ஒரு ஆராய்ச்சிப் பண்ணை வேண்டுமென்று சட்டமன்றத்தில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். காட்டுப்புத்தூர், தொட்டியம் போன்ற பகுதிகளில் நிறைய இருக்கிறது. எனவே அங்கே ஒரு ஆராய்ச்சிப் பண்ணை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பைத் தந்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. என். குமாரசாமி :** மாற்றுத் தலைவரவர்களே, கவர்னர் அவர்களின் உரையின்பேரிலே சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கவர்னர் அவர்களின் உரையிலே சொல்லப்பட்டிருக்கிற அரசாங்கத்தின் கொள்கை எதிர்காலத்திலே வலுவற்றோருக்கு வாய்ப்பளிக்கும் என்று சொல்ல முடியாத அளவிற்கு இந்த உரையிலே பிரச்னைகள் இருக்கின்றன. இரண்டாவதாக, விவசாய உற்பத்தியிலே தன்னிறைவு பெற்று மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்ற ஒரு பெருமையை இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறோம். அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பினாலே விவசாயத்திலே அமோக விளைச்சல் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வது ஒருபுறத்திலே உண்மையாக இருந்தாலும்கூட இன்னொரு புறத்திலே விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் சிரமங்கள், விவசாயத்திற்குத் தேவையான பொருள்கள் கிடைப்பதிலே ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களைப்பற்றி அரசு அக்கறை எடுத்துக் கொண்டதாக என்றால் சொல்ல முடியாது. காரணம் என்னவென்றால் விவசாயத் துறையிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் விவசாயத்தினுடைய உற்பத்திச் செலவு இரண்டாண்டுகளுக்கு முன்னால் இருந்ததைக் காட்டிலும், குறிப்பாக சென்ற ஆண்டு இருந்ததைக் காட்டிலும் இந்த ஆண்டில் கிட்டத்தட்ட ஒரு ஏக்கருக்கு எங்கள் பகுதியிலே உற்பத்திச் செலவு இரண்டாயிரம் ரூபாய் அளவில் மாறியிருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால் இன்றைக்கு உரமோ, பூச்சி மருந்துகளோ



1974 சனவரி 23] [திரு. கே. என். குமாரசாமி]

விநியோகிக்கும் முறையிலே கோளாறுகள் ஏற்பட்டு, அவைகளைக் கள்ளத் தனமாக வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதனால் உற்பத்தியிலே ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் எதிர் காலத்திலே எப்படி விவசாயம் செய்வது என்பதுபற்றித் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு இந்த நேரத்திலே கொண்டு வருகிறேன்.

அடுத்து, தேசத்தில் உரம் பற்றாக்குறை காரணமாக விவசாயம் பாதிக்கப்படப் போகிறது என்று அரசாங்கத்தை எச்சரிக்க விரும்புகிறேன். தமிழ் நாட்டில் பெரிய பாசன வசதிகளை எல்லாம் செய்து முடித்துவிட்டதாகக் கூறியிருக்கிறார்கள். அதே சமயத்தில் சிறு பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? 1969-70-ம் ஆண்டு அதற்கு முக்கியத்துவம் கொடுத்து ஓரளவு செயல்பட்டு வந்தார்கள். பிறகு அது நின்றுவிட்டது. ஏற்கனவே போடப்பட்ட திட்டங்களைப் பராமரிக்கும் பொறுப்பு யார் கையில் கொடுப்பது என்ற பிரச்சினையில் பஞ்சாயத்து யூனியனில் கொடுப்பதா, மராமத்து இலாகாவில் கொடுப்பதா என்பதில் தீர்வு காணாத நிலையில் பழுது பார்க்கக்கூட நடவடிக்கை எடுக்கப்படாமலே இருந்து வருகிறது. மராமத்து இலாகாவில் ஒப்படைத்தால் நிச்சயமாக நல்லமுறையில் திட்டத்தை அமல் நடத்த முடியும்.

நிலவள வங்கிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நிலத்திலே கிணறு வெட்டப் பணம் கேட்கும்போது மத்திய ரிசர்வ் வங்கியிலிருந்து பணம் கிடைக்கவில்லை என்று கூறுகிறார்கள். அதனால் அந்த வங்கிகள் செயல்பட முடியாத நிலைமை இருக்கிறது. அபிவிருத்தி வேலைகளுக்குப் பணம் வழங்க வேண்டுமென்றால் பணம் கிடையாது. பஞ்சாயத்து யூனியன் மூலமாக விவசாயிகளுக்குக் கிணறு வெட்டப் பணம் வழங்கப்பட்டு வந்ததும் நிறுத்தப்பட்டு விட்டது. ஆறு நீர்த் திட்டங்களுக்கு அரசு பல கோடி ரூபாய்களைச் செலவழிக்கிறது. அதே போன்று கிணறு வெட்டி பம்ப் செட் வைத்து விவசாயம் செய்கிற விவசாயிகளுக்கும் அரசாங்கமே பொறுப்பேற்று இலவசமாக அந்தக் கிணறுகளை வெட்டிக் கொடுப்பதில் என் தயக்கம் காட்ட வேண்டும்? இப்படி அரசாங்கமே இதற்கும் பொறுப்பேற்றுக்கொள்வதன்மூலம் அதிக நிலங்கள் விளைச்சலுக்கு வரும், வேலை வாய்ப்பு ஏற்படும். இன்றைக்குத் தமிழ் நாட்டில் 10 லட்சம் பேருக்கு மேல் வேலை

கிடைக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு வேலைக்கு 500 பேர், 1,000 பேர் விண்ணப்பிக்கிறார்கள். படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வகையில் விவசாயத் துறையில் பயிற்சி அளிக்க வேண்டும்.

சிறு தொழில்களுக்காக லோன் கொடுக்கிறார்கள். ஆறு லட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். இதிலே எவ்வளவு தொழில்களை உருவாக்க முடியும் என்று தெரியவில்லை. பல தொழில்களை உண்டாக்க வேண்டும், ஊக்குவிக்க வேண்டும். படித்தவர்களுக்குக் கடன் கொடுத்து பல தொழில்களை உருவாக்கி உற்பத்திக்கு நல்ல மார்க்கெட் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட திட்டங்களைக் காணோம்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படி அரசாங்கம் தீர்க்கப் போகிறது என்று தெரியவில்லை. ஆறாயிரம் பேர்களுக்கு அரசாங்கம் வேலை கொடுக்கப் போகிறது என்று அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். பத்து லட்சம் பேரில் ஆறாயிரம் பேருக்கு வேலை கொடுத்து விட்டால் மற்றவர்கள் நிலை என்ன? எதை எடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைச் சுட்டிக் காண்பிக்கிறார்கள்.

நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய சர்க்கார் விலையை ஏற்றுகிறார்கள் என்று சொன்னபோது திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். உ.பி.-யில் என்ன விலை. இங்கே என்ன விலை என்று தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். விவசாயத்திற்கு ஊக்கமளிக்க முதலில் உரப் பற்றாக்குறையைத் தீர்க்க வேண்டும்.

உரம் பிளாக் மார்க்கட்டில் அதிக விலைக்குக் கிடைக்கிறது. அது எப்படி பிளாக் மார்க்கட்டுக்குப் போகிறது? பூச்சி மருந்துகளையும் முன்கூட்டியே இறக்குமதி செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

பருத்திக்கு ஆரம்பத்தில் சி.எ.என். உரம் தேவைப்படுகிறது. வெட்டுகிற நேரத்திலே அதைக் கொடுக்கிறார்கள். அந்த உரத்தை என்ன செய்ய முடியும்? அடித்தளத்தில் இருக்கிற விவசாயக் கூலிகளுக்குக் கூலி உயர்வு இல்லை. பாங்கு [illegible] மற்றவர்களுக்கெல்லாம் சம்பள உயர்வு இருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களை மறந்து விடுகிறார்களா? இவர்கள் பிரச்சினையில்



அரசாங்கம் கவனம் செலுத்துவதில்லை. குடிசை மாற்று வாரிய மானாலும் நகரத்திலேதான், குடிநீர் வாரியமானாலும் நகரத்திலே தான். கிராமங்களுக்கு ஒன்றும் இல்லை.

அரிசனங்களுக்காக நிலம், வீடு கட்ட வேண்டுமென்று நான்கு ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரை கொடுக்கப்படவில்லை. விளம்பரம்மட்டும் செய்துகொள்ளுகிறார்கள். இன்று கிராமத்திற்கும் நகரத்திற்கும் வேறுபாடு அதிகமாகப் போய்விட்டது.

குடிநீர்த் திட்டத்திற்காக ஒரு நகரப் பஞ்சாயத்து மோட்டார் வாங்க வேண்டுமென்றால் சீஃப் எஞ்சினியர் சாங்ஷன் பெற்றுத் தான் வாங்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தண்ணீர்த் தொட்டி கட்டியாகிவிட்டது. சிப் எஞ்சினியர் சாங்ஷனை எதிர் பார்த்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை இன்னும் இருக்கிறது. கமிஷனர் பார்த்து அதை வாங்க வழி செய்யக் கூடாதா? மக்களுடைய எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியாத நிலை வளர்ந்து கொண்டிருக்கிறது.

இன்னொன்று, தொழிலாளர் பிரச்னை. கார்ப்பரேஷன் மில் தனியார் மில்லைவிட மோசமான நிலையில் போய்க் கொண்டிருக் கிறது. மானேஜரிடம் கேட்டால் கார்ப்பரேஷன் தலைவரிடம் பேசுங்கள் என்று சொல்கிறார்கள். கார்ப்பரேஷன் தலைவரைக் கேட்டால் மானேஜரிடம் கேளுங்கள் என்று சொல்கிறார்கள். இப்படி இழுத்தடிக்கப்படுகிறது. கார்ப்பரேஷன் ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்களின் பிரச்னை தீராமலிருக்கிறது. சர்க்கார், தொழிலாளர்கள் ஒத்துழைப்பு தரவேண்டும் என்று சொல் கிறார்கள். தொழிலாளர்கள் ஒத்துழைப்பு கொடுக்கத்தான் செய்கிறார்கள். இருந்தும் பிரச்னைகள் அங்கு தீர்க்கமுடியாத அளவிற்கு இருக்கின்றன. தலையீடு இருந்தால்தான் எந்தப் பிரச்னையைப்பற்றியும் கவனிக்கிறார்களே தவிர தலையீடு இல்லாவிடில் எந்தப் பிரச்னையும் கவனிப்பது இல்லை. (மணியடிக்கப் பட்டது.)

(அடுத்து, திரு. நாச்சியப்பன் பேசுவதற்கு அழைக்கப் பட்டார்)

*திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

தமிழகத்தில் தந்தை பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்து இந்த நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் சமமானவர்கள், உயர்ந்த ஜாதி தாழ்ந்த ஜாதி என்பதில்லை, எல்லோரும் மனிதர்கள்தான் என்ற ஒரு நிலையை ஏற்படுத்திய ஒரு மாபெரும் தீர்க்கதரிசிக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் இந்த உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் பாராட்டு கிறேன்.

அதே நேரத்தில் அந்த மாபெரும் பெரியார் அவர்கள் நம் நாட்டு மக்களுக்கு செய்த சேவைக்கு அவர்களுடைய திருவுருவப் படத்தை இந்த மாமன்றத்தில் அமைத்துக் கொடுக்கவேண்டு மென்று முதல்வர் அவர்களை நான் தலை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்.

முடிவாக, பெரியார் அவர்கள் இந்த நாட்டில் என்னென்ன செய்யவேண்டும், எப்படி எப்படிப் பாடுபடவேண்டும் என்று சொன்னார்களோ அவ்விதம் செய்வதோடு அவர்கள் எந்தெந்தக் கொள்கைகளை விட்டுச் சென்றார்களோ அவற்றிற்காக நாம் பாடுபடுவோம் என்று வீர சபதம் எடுத்துக்கொள்வோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த மன்றத்தில் இரண்டு மூன்று நாட்களாகப் பேசப்பட்டு வரும் காரியங்களில் கைத்தறி நெசவாளர்களைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள். அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சி முகாமிலுள்ள நண்பர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசு கைத்தறியாளர்களுக்கு எவ்விதமான நன்மையையும் செய்யவில்லை, கைத்தறியாளர்கள் கஷ்டப்படுவதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான், என்றும் சின்னாளப்பட்டி போன்ற நகரங்களில் உள்ள மக்கள் வேலை இல்லாமல் வெளி ஊர்களுக்குச் செல்லக் காரணம் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்று வாதித்தார்கள். அந்த வாதத்தை நான் மறுக்கிறேன்.



நாம் இந்தத் தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக உண்மையைப் பேசவேண்டும். சின்னாளப்பட்டி, அருப்புக் கோட்டை, சித்தயன்கோட்டை, சேலம், காரைக்குடி போன்ற நகரங்களில் செயற்கைப் பட்டை அதிகமாகப் பயன்படுத்து கிறார்கள். அவர்களுக்கு இன்று செயற்கைப் பட்டு கிடைக்காமல் கஷ்டப்படுவது உண்மை. அவர்களின் கஷ்டத்தைப் போக்குவதற்கு தமிழக அரசு தனக்குள்ள அதிகாரத்தைக் கொண்டு என்னென்ன செய்யமுடியுமோ அந்த முறைகளை எல்லாம் கையாண்டு வருகிறார்கள்.

குறிப்பாக, சின்னாளப்பட்டியில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். அவர்களின் கஷ்டத்தைப் போக்க வேண்டு மென்ற நல்லெண்ணத்தோடு இந்த அரசு ஒரே மாதத்தில் பத்து நெசவுத் தொழிலாளர்கள் சங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கவர்னர் அவர்கள் உரையில் கைத்தறித் தொழிலுக்காக 18 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாக குறிப்பிட்டிருக் கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன். அம்மாதிரி கைத்தறி தொழிலுக்காக 18 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதை நான் மீண்டும் மீண்டும் பாராட்டுகிறேன். அடுத்து, சின்னாளப்பட்டியில் உள்ள செயற்கைப் பட்டைப் பயன்படுத்தும் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதற்குக் காரணம் மத்திய அரசா அல்லது மாநில அரசா என்பதை நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நெசவாளர்களுக்குத் தேவையான செயற்கைப் பட்டை விநியோகிக்கிற உரிமையை மத்திய அரசு தன் கையில் வைத்திருக் கிறார்கள். இதை யாரும் மறுக்கமுடியாது. மாநில ஆட்சியின் கையில் விநியோகிக்கிற உரிமை அத்தனையையும் கொடுக்க வேண்டு மென்று கேட்கிறோம். அது மட்டுமல்ல. தேவையான அளவிற்கு செயற்கைப் பட்டையும் கொடுக்கவேண்டும். அக்டோபர், நவம்பர், டிசம்பர் இந்த மூன்று மாதங்களுக்கு செயற்கைப் பட்டு தமிழ் நாட்டுக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்றால் 2½ லட்சம் கிலோதான் கொடுத்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் செயற்கைப் பட்டைப் பயன்படுத்தும் கைத்தறி நெசவுத்

தொழிலாளர்கள் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். ஆக, ஒரு தொழிலாளிக்கு மூன்று மாதங்களுக்கு 2½ கிலோதான் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கிலோ பட்டு என்றால் ஆறு கஜம் சேலை இரண்டு சேலைகள்தான் நெய்யலாம். அவர்கள் எப்படி வாழ முடியும்? சிந்தித்துப்பாருங்கள்.

ஒரு நெசவாளருக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான செயற்கைப் பட்டு குறைந்தபட்சம் 10 கிலோ வேண்டும். முப்பது நாட்கள் அந்தத் தொழிலாளி நெய்கிறான் என்றால் இருபது சேலைகள் நெய்யமுடியும். அதற்கு குறைந்தது பத்து கிலோ பட்டு வேண்டும். இந்த அளவிற்கு மத்திய அரசு ஒதுக்கிக் கொடுக்கவேண்டும். மத்திய அரசு பத்து லட்சம் கிலோ ஒரு மாதத்திற்குக் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கும்போது இரண்டரை லட்சம் கிலோ மூன்று மாதங்களுக்குக் கொடுக்கிறார்கள் என்றால் அது போதாது. அந்தப் பட்டு கூட வரவில்லை என்று சொல்கிறார்கள். சிறுகச் சிறுக வருகிறது. ஆகவே, இது மத்திய அரசின் தவறா அல்லது மாநில அரசின் தவறா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மத்திய அரசின்மீது வேண்டுமென்றே பழி போடவில்லை, உண்மையைச் சொல்கிறோம். அகில இந்திய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தோழர்கள், ஆட்சியில் உள்ள காங்கிரஸ் தோழர்கள் பெரிய மனம் வைத்து இந்தப் பிரச்னையைக் குறித்து மத்திய அரசைத் தட்டிக்கேட்கவேண்டும். செயற்கைப் பட்டைப் பயன் படுத்தும் தொழிலாளர்கள் இன்று அது கிடைக்காமல் கஷ்டப் படுகிறார்கள். மாதம் ஒன்றுக்கு பத்து லட்சம் கிலோவாவது கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தவேண்டும். அப்படியொரு நிலைமை ஏற்பட்டால்தான் நெசவாளர்களுக்கு ஒரு உருப்படியான நிலை ஏற்படும். தமிழகத்தில் உள்ள நெசவாளர்களை எல்லாம் கூட்டுறவுத் துறையில் சேர்த்தாலும்கூட தனியார் துறையில் இருக்கக்கூடிய கைத்தறி நெசவுத் தொழிலாளர்களும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு தமிழக அரசு இப்போது ஒரு பாதுகாப்பு கொடுக்க முற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பணிக் கூட்டுறவுக் கழகம் என்ற கழகத்தை அமைத்துக் கொண்டால், ஆயிரம் தறிகளைக் கொண்டவர்கள் ஒரு கூட்டுறவுக்



கழகம் அமைத்துக்கொண்டால் அவர்களுக்கு வேண்டிய பட்டு, நூல் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிக் கொடுப்பதாக இருந்தாலும்கூட மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 10 லட்சம் கிலோ கொடுத்தால்தான் முடியும். இல்லை என்றால் முடியாது. தமிழக அரசு தன் அதிகாரத்திற்கு உட்பட்டு என்னென்ன செய்ய முடியுமோ அவற்றைச் செய்துகொண்டுதான் வருகிறார்கள்.

இம்மாதம் 10-ம் தேதி தினமணியில் ஒரு செய்தி வந்தது. அந்தச் செய்தி என்ன? ஜனவரி மாதம் முதற்கொண்டு மில் முதலாளிகளும், தனிப்பட்ட வர்த்தகர்களும் உற்பத்திச் செலவின் மேல் 2 சதவிகிதம் லாபம் வைத்து விற்றுக்கொள்ளலாம் என்று நம்பகமான வட்டாரத்திலிருந்து தெரிய வருகிறது என்று சொன்னார்கள். என்ன நடந்தது? மறுநாளே, அந்தப் பத்திரிகைச் செய்தி வருவதற்கு முன்பாக ஒரு கிலோ விலை ரூ. 29, ஆனால் இன்றையதினம் ஒரு கிலோவிற்கு விலை ரூ. 43. இந்த விலை உயர்வினால் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். ஆகவே கூட்டுறவுத் துறையில் ஒரு செயற்கைப் பட்டு நூல் தொழிற்சாலை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்

(நண்பகல் 12-00)

கொள்கிறேன். கவர்னர் உரையில் நெசவாளர்களுக்கு இயன்ற அளவுக்கு உதவி செய்து வருவதாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. எவ்வளவுதான் நெசவாளர்களுக்காக வேலை செய்து இருந்தாலும், தமிழகத்திலுள்ள நெசவாளிக்குத் தேவைப்படுகிற அளவுக்கு நூல் கிடைக்கவில்லை. தமிழகத்திலுள்ள நெசவாளி வாழவேண்டுமானால், கைத்தறி நெசவுக்கென்று தனி ரகத்தை ஒதுக்கவேண்டும். அப்படித் தனி ரகத்தை ஒதுக்கினால்தான் அவர்கள் வாழ முடியும். அதோடு மட்டுமல்ல, தேவையான நூலும், பட்டும், அவர்களுக்குத் தேவையான காலத்தில் கொடுக்கவேண்டும். நெசவாளிகள் கஷ்டப் படுவதற்குக் காரணம் மத்திய அரசுதான். மத்திய அரசு முற்பட்டால்தான் அவர்கள் கஷ்டம் நீங்கும். ஆகவே, அகில இந்திய ரீதியில் பேசும் நண்பர்களும், மாற்றுக் கட்சி நண்பர்களும், ஆளும் கட்சி நண்பர்களும் மத்திய அரசைத் தட்டிக்கேட்டு, தமிழகத்திலுள்ள நெசவாளிக்கு ஒரு மாதத்திற்குத் தேவைப்படும் 10 லட்சம் செயற்கைப் பட்டு நூல் கிடைக்க வழிவகைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[1974 சனவரி 23

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் இரண்டு முக்கியமான பிரச்னைகள் விடப்பட்டு இருக்கின்றன. ஒன்று விலைவாசி ஏற்றம், மற்றொன்று வேலைவாய்ப்பு பற்றி. இன்று சாதாரணமாக உள்ள ஏழை எளிய மக்கள், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்குத் தேவைப்படும் உணவுப்பொருள்களை வாங்க முடியாத அளவுக்கு விலைவாசி உயர்ந்து கொண்டே செல்கிறது. அந்த விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் அரசு என்ன எடுத்து இருக்கிறது என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது அரசாங்கத்தில் பணியாற்றுகிற பணியாளர்களுக்கு அடிக்கடி சம்பள உயர்வு கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தனியார் கம்பெனிகளில் அல்லது சொந்த வியாபாரம் செய்கிறவர்களுக்கு இந்த உயர்வு கிடைத்து இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. ஒவ்வொரு முறையும் அரசாங்க ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு அளிக்கும்போது இந்த விலைவாசி உயருகிறது. கோதுமை வேண்டுமென்றால்கூட இப்போது டாக்டர் சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு காலத்தில் கோதுமையைச் சாப்பிடுங்கள் என்று கூறிக்கொண்டிருந்தார்கள். நான் மவுண்ட் ரோடில் 2 மாதங்களுக்கு முன்பு ஒரு ஓட்டலில் சாப்பிட்டேன். அப்போது சப்பாத்தி போட்டார்கள். ஆனால் நேற்றையதினம் போய்ச் சாப்பிட்டேன். சப்பாத்தி போடவில்லை. ஏன் போடவில்லை என்று கேட்டபோது, கோதுமை கிடைக்கவில்லை அதனால் நிறுத்தி விட்டோம் என்று சொன்னார்கள். அப்போது சாப்பாட்டின் விலையைக் குறைத்து இருக்கிறீர்களா என்று கேட்டபோது, எப்படிக் குறைக்கமுடியும், மற்றப் பண்டங்களின் விலைவாசி ஏறிவிட்டது என்று சொல்கிறார்கள். இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த இந்த அரசாங்கம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கிறேன்.



1974 சனவரி 23] [திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்]

நூற்பு நூற்கும் தறி நெசவாளர்களுக்கு நூல் பற்றாக்குறை ஒரு பக்கம், விலைவாசி ஏற்றம் ஒரு பக்கம். அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்புபற்றி கவர்னர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். படித்த பட்டதாரிகள் தமிழகத்தில் 5 லட்சம் பேர் இருப்பதாகவும், நடப்பு ஆண்டில் கிட்டத்தட்ட 40,000 பேருக்கு வேலைவாய்ப்புக் கொடுக்க இருக்கிறோம் என்றும் கூறியிருக்கிறார்கள். இதனால் 8 சதவிகிதம் பேருக்குத்தான் வேலை கிடைக்கிறது. இந்த 8 சதவிகிதம் மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்துவிட்டால் அது ஒன்றும் பெரிய சாதனை இல்லை, படித்த மக்களைப் பற்றி மட்டும்தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள். கிராமப்புறத்தில் அரைகுறையாகப் படித்தவர்கள், அறவே படிக்காமல் இருப்பவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எந்த வகையில் வேலைவாய்ப்புத் தரப்போகிறீர்கள் என்பதைப் பற்றி ஒன்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை.

கிராமப்புறத்தில் மின்சார வசதி, சாலை வசதி செய்தால் அங்கே புதிதாகத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப் பலர் முன்வருவார்கள். அந்த வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், 10 ஆண்டுகளுக்கு 25,000 பேர் வசிக்கும் இடங்களில்தான் புதிய தொழிற்சாலைகளைக் கண்டிப்பாக ஆரம்பிக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் பீடித்தொழில்தான் நன்றாக நடந்து வருகிறது. இரண்டு ரக பீடிகள் தயாரிக்கப்படுகின்றன. ஒன்று மெட்ராஸ் பீடி, மற்றொன்று குஜராத் பீடி. இந்த மெட்ராஸ் பீடிக்கு வடநாட்டில் நல்ல கிராக்கி இருக்கிறது. நான்கூட பீடி தயாரித்து பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் போன்ற பகுதிகளுக்கு அனுப்பி வருகிறேன். என்னைப்போலவே பலர் திருநெல்வேலி, திருச்சி, வடாற்காடு, தென்னாற்காடு, சேலம் போன்ற மாவட்டங்களிலிருந்து பீடி தயாரித்து அனுப்புகிறார்கள். கிராம வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 25,000 கடனாக மத்திய அரசு ஸ்மால் ஸ்கேல்

இன்டஸ்டீரிஸ்க்கு வழங்கி வருகிறது. நானும் அதற்கு மனு போட்டேன். அவர்கள் என்ன பதில் அளித்தார்கள் என்றால், தொழிற்சாலைக் கட்டடம் கட்டவும், மெஷின்கள் வாங்குவதற்கும் தான் கடன் தரமுடியும் என்று சொல்கிறார்கள். இந்த பீடி தயாரிப்பது ஒரு குடிசைத் தொழிலாகத்தான் இந்தியா பூராவிலும் செய்து வருகிறார்கள். இதற்கு உபயோகிக்கப்படும் ஒரே இயந்திரம் கத்தரிக்கோல்தான். இந்த பீடித் தொழிற்சாலையில் பணிசெய்பவர்களுக்கு பாக்டரி ஆக்ட்கூட கிடையாது. எங்கள் பகுதியில் பூராவும் பெண்களே இந்தத் தொழிலில் அதிகமாக ஈடுபட்டு இருக்கிறார்கள். இது நாடு பூராவும் ஒரு குடிசைத் தொழிலாகத்தான் நடைபெற்று வருகிறது. தொழில் அமைச்சர் அவர்கள் குற்றாலம் வந்திருந்த போதுகூட இது குறித்து அவரிடத்தில் எடுத்துச்சொல்லி, மத்திய அரசோடு வாதாடி இந்தக் கடன் தொகையை எங்களுக்கு வாங்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டோம். ஆகவே, இதையும் ஒரு சிறு தொழிலாகக்கொண்டு, எங்களைப் போன்ற நடுத்தர, எளிய பீடி உற்பத்தி செய்வோருக்குக் கடன் வசதி அளிக்க மத்திய அரசோடு தொடர்பு கொண்டு, மாநில அரசு உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உர சம்பந்தமாக என்னுடைய பகுதியில் இருக்கும் நிலவரத்தை இங்கே கூற விரும்புகிறேன். எனது பகுதியில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அறிவுரை கூறும் விதத்தில் அடிக்கடி விவசாயப் பொருட்காட்சி நடத்துகிறார்கள். அங்கே ஒரு ஏக்கருக்கு 50 கிலோ உரம் போடவேண்டுமென்று சொல்லிக் கொடுக்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு விவசாயிக்கும் உரம் எவ்வளவு வினியோகிக்கப்பட்டது என்றால் 5, 6 கிலோதான் கொடுத்து இருக்கிறார்கள். நெல்லை மாவட்டக் கலெக்டர் 25 கிலோ சப்ளை செய்யப்படும் என்று ஆர்டர்போட்டு, பத்திரிக்கையில்கூட விளம்பரம் போட்டு இருந்தார்கள். அப்படி இருந்தும் உரம் ஒரு ஏக்கருக்கு 6 கிலோ, 5 கிலோ என்றுதான் கொடுத்து இருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இந்த வருஷம் மழை நன்கு பெய்ததால் அந்தப் பகுதியில் புஞ்சை நிலம் இல்லை எல்லா விவசாயிகளும் நெல்தான் போட்டார்கள். புஞ்சை நிலத்தில் நெல் விவசாயம் செய்தால் உரம் கிடையாது என்றும் சொல்கிறார்கள்.





எங்கள் பகுதியில்தான் தாமிரபரணி ஆற்றுப்பாசனம் இருக்கிறது. முக்கியமாக அம்பாசமுத்திரம் பகுதியில் நல்ல பாசனம் கிடைக்கிறது. இந்த அம்பாசமுத்திரத்திலும், சேரன்மாதேவி தொகுதியிலும் மாற்றுக்கட்சியினர் தேர்ந்தெடுக்கப் பட்டு விட்டால் உர வினியோகம் சரியான படி நடப்பது இல்லை என்று கூறிக்கொள்கிறேன். யூரியாவிற்கு சர்க்காரின் நிர்ணயிக்கப் பட்ட விலை ரூ. 55. ஆனால் வெளி மார்க்கெட்டில் ரூ. 150, 160 விற்கிறது. வேண்டியவர்களுக்கு சகாயவிலையில் கிடைப்பது இல்லை. அவர்கள் இதை எப்படி வெளிமார்க்கெட்டிற்குக் கொண்டுவந்து விற்கிறார்கள் என்று தெரியவில்லை.

இந்த அரசாங்கம் பசுமைப்புரட்சி செய்து விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் எங்கள் பகுதியில் மஞ்சள் புரட்சிதான் செய்து இருக்கிறார்கள். பயிர்கள் எல்லாம் பச்சை நிறம் மாறி மஞ்சள் நிறமாக ஆகியிருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மின்சாரத்தைப்பற்றிக் கூறும்போது, இன்று தமிழகத்தில் எந்த அளவுக்கு நீர் மின்சாரம் முக்கியமோ அந்த அளவுக்கு அனல் மின்சாரம் முக்கியமாகிவிட்டது. அனல் மின்சாரத்திற்கும் நிலக்கரி தட்டுப்பாடு வருகிறது. அனல் மின்சாரம் தயாரிக்கும் நிலையம் தூத்துக்குடி, மேட்டூர் ஆகிய இடங்களில் விரைவில் அமைக்கப்படும் என்று கவர்னர் உரையில் இருக்கிறது. அது வரவேற்கத்தக்கது. அதற்காக மத்திய அரசோடு போராடி மாநில அரசு உடனடியாக அதை அமைக்க வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று நமது மின் சக்தித் தேவை 2,010 மெகாவாட்டாகும். ஆனால் நமது மின் உற்பத்தித் திறன் 1,371 மெகாவாட்டாக மட்டுமே இருக்கிறது. எனவே, நமது மின்சாரப் பற்றாக்குறை 639 மெகாவாட்டாகும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவில் மின் உற்பத்தியைப் பெருக்காவிட்டால் 1978-79-க்குள் நமது மின்சாரப் பற்றாக்குறை 2,189 மெகாவாட்டாக உயர்ந்து விடும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் எப்படிச் சமாளிக்கப்போகிறீர்கள் என்று தெரியவில்லை. இவைகளை யெல்லாம் சமாளித்தால்தான் நம் மாநிலத்தில் புதிய தொழிற் சாலைகளைத் தொடங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். இதற்கு மத்தியில்

சிம்சன் போன்ற தனிப்பட்ட கம்பெனிகள் தாங்கள் உபயோகிக்குட மின்சாரத்தைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்கிறோம் என்று கேட்டு இருப்பதாகவும், அதற்காக மத்திய அரசோடு மாநில அரசு தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. இப்படி அனுமதித்தால் கிட்டத்தட்ட 15 சதவிகிதம், 20 சதவிகிதம் மின்சாரம் மிச்சப்படும். அந்த மின்சாரத்தைக்கொண்டு சிறிய தொழில்களுக்கும் விவசாயத்திற்கும் பயன்படுத்தலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். டிசம்பர் 16-ம் தேதி, 17-ம் தேதி தமிழகத்தில் ஏற்பட்ட மழையின் காரணமாக பெரும் வெள்ளம் என்னுடைய சேரன்மாதேவி தொகுதியில் ஏற்பட்டது. முக்கூடல் அருகே வெள்ளம் ஏற்பட்டு, அங்கே உள்ள 80-90 குடிசைகள் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன. நான் உடனடியாக கலெக்டரோடு தொடர்பு கொண்டு, வீடு இழந்தவர்களுக்கு ரூ. 60-ம், ரூ. 20 பெறுமானமுள்ள துணியும் வாங்கிக் கொடுத்தேன். ஊரில் உள்ள பலபேரோடு தொடர்பு கொண்டு அவர்களுக்கு 2 நாட்கள் சாப்பாடு ஏற்பாடு செய்தேன். முதலமைச்சர் அவர்களுக்கு இது குறித்துத் தந்தியும் கொடுத்து கடிதமும் எழுதியிருந்தேன். எந்தவிதமான பதிலும் வரவில்லை. அவர்கள் வீடு இழந்து மீண்டும் வீட்டைக் கட்டிக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அவர்கள் மீண்டும் வீடு கட்டிக்கொண்டு வாழ்கிற வகையில் முதலமைச்சர் வெள்ள நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்கு நிதி ஓரளவு கடனாகவும், ஓரளவு மானியமாகவும் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக முக்கூடல்—கடையம் ரோடு கிட்டத்தட்ட 20, 25 கிராமங்களை இணைக்கக்கூடிய ரோடு. மழையின் காரணமாக இந்த ரோடு அனைத்தும் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது. அதனால் பஸ் போக்குவரத்து கம்ப்லீட்டாக நின்றுவிட்டது. அதன் காரணமாக அங்குள்ள மக்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனே அந்த ரோட்டிற்கு வேண்டிய நிதியை ஒதுக்கி, ரோட்டை செப்பனிட்டு, மறுபடியும் பஸ் போக்குவரத்தை ஏற்படுத்தி மக்களுக்கு வசதி செய்து தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல் அரசுத் திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதற்கு எனது ஏரியாவில் நடந்த ஒரு நிகழ்ச்சியை இந்தச்



சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்திக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 1973 ஏப்ரல் 24-ம் தேதியிட்ட சமூக நல இலாகாவிலிருந்து 359-ம் நம்பர் உள்ள ஒரு உத்தரவு பத்திரிகைமூலம் வந்தது. தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள்மூலம் அரிசனங்கள், மலைஜாதியினர், பின்தங்கிய வகுப்பினர், சிறு வியாபாரிகள், குடிசைத்தொழில் செய்பவர்கள் போன்றவர்களுக்கு அரசாங்கம் கடன் வாங்கிக்கொடுக்கும் என்று விளம்பரத்தில் கண்டிருந்தது. இதை நம்பி எங்கள் பகுதியிலிருப்பவர்களும், நெல்லை மாவட்டத்தில் பல பேர்களும் மனுச் செய்திருந்தார்கள். எனது தொகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மனுக்கள் இந்த இலாகாவுக்குச் சென்றிருக்கின்றன. அரசாங்கம் தனியாக தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றவர்களை நியமித்து மனுக்களை விசாரித்து உடனே பாங்குகளிலிருந்து இன்னாருக்கு இவ்வளவு லோன் பணம் கொடுங்கள் என்று தாக்கீது அனுப்பினார்கள். மறுபடியும் மனுச் செய்தவர்கள் அந்த பாங்குகளுக்குச் சென்று தங்களுக்கு ரூ. 2,000, 1,500, 1,000 கடன் கொடுங்கள் என்று கேட்டு வாங்கி, வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள் என்று அதிலே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், மனுதார்கள் பாங்குகளுக்குச் சென்று கேட்டால், யாருக்கும் அங்கே பணம் கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மறுபடியும் என்னிடம் மனுதார்கள் முறையிட்டார்கள். நான் மாவட்ட கலெக்டர் அவர்களுக்கு இதைத் தெரியப்படுத்தினேன். அதன் பிறகு அவர்களும் அந்த பாங்குதார்களை அழைத்து ஒரு மகாநாடு நடத்தி, முடிவு எடுத்தார்கள். அவர்கள் அதற்கு மேலும் இவர்களுக்கெல்லாம் பணம் கொடுப்பதற்குச் சம்மதித்தார்களா என்று தெரியவில்லை. மனுதார்கள் இந்தக் கடனைப் பெறுவதற்காக ரூ. 20, 25 தங்கள் கையிலிருந்து செலவு பண்ணியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பணம் கிடைப்பதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, கவர்னர் அவர்கள் உரையிலே 16-வது பாராவில் 'மத்திய தர வகுப்பினரைச் சேர்ந்த தொழில் முனைவர்கள் சேமிப்பதற்கும் முதலீடு செய்வதற்கும் ஊக்கமளிக்கப்பட்டால் மட்டுமே ஏராளமான வேலை வாய்ப்புகள் ஏற்படக்கூடும்' என்று கூறப்பட்டிருக்கிறது. மத்திய தர வகுப்பினரின் முதலீட்டுக்கு ஊக்கமளிக்க சர்க்கார் முயற்சிப்பது நல்லதுதான். ஆனால்,

இதில் வெற்றி காணா சர்க்கார் தனது தேசியமயமாக்குகின்ற கொள்கையை மாற்றிக்கொள்ளவேண்டும். நல்ல முறையில் லாபகரமாக இயங்கும் தொழிற்சாலையான 'மால்கோ' நிறுவனத்தைத் தேசியமயமாக்க சர்க்கார் முயல்கிறது. இச்செயல் தமிழ் நாட்டில் உள்ள மற்றத் தொழிலதிபர்களிடையே அச்சத்தை ஊட்டியுள்ளது. தேசியமயமாக்கப்பட்ட எந்தத் தொழிலும் இதுவரை லாபத்தில் நடந்ததாகத் தெரியவில்லை. அரசு கஜானா காலியாகவும், ஊழல்கள் பெருகி வருவதுதான் இப்பொழுது நடந்துகொண்டு வருகிறது. நாட்டின் நலனுக்காக அரசாங்கம் தனது வறட்டுக் கௌரவத்தை விட்டு தேசியமயமாக்கும் கொள்கையை மாற்றி அமைப்பதன் மூலம்தான் தமிழ் நாட்டில் தொழில் மறுமலர்ச்சி ஏற்படும் என்று கூறிக்கொண்டு, எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கோ. இளங்கோவன் :** தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி.

தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகம் தொழும்—அவர்
மனக் குகையில் சிறுத்தை எழும்
அவர் தாம் பெரியார்

என்று பாவேந்தர் படம் பிடித்துக் காட்டிய தந்தை பெரியார் அவர்களை நாம் இழந்துவிட்டோம். அந்த இழப்பு ஈடு செய்ய முடியாதது. என்றாலும், நமக்கெல்லாம் ஆறுதல் கூறுகின்ற முறையில் ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவிக்கிறேன்.

அடுத்து, நாமெல்லாம் கரிகாலச் சோழன் காலத்தில் வாழ்பவர்கள் அல்ல. கருணாநிதிச் சோழன் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே மாமழை போற்றுதும், மாமழை, போற்றுதும் எனப் பாடிக்கொண்டிருக்க முடியாது. பருவத்தே பயிர்செய் என்று சொல்லிக்கொண்டிருக்க முடியாது. நமக்குத் தேவைப்படுவது மின்சாரம். மின்சார நெருக்கடி நாட்டிலே வாக்கா எங்பட்டுக்கொண்டிருக்கிறது என்றாலும். அதற்கு





ஆவன செய்வோம் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது பாராட்டத்தக்கதாகும். நம்முடைய மாநிலம் உணவுத் துறையைப் பொறுத்த வரையில் உபரி மாநிலமாக கருதப்படுகிறது. மற்ற மாநிலங்களெல்லாம் கேட்கின்ற அளவுக்கு அரிசி அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அது கண்டு மகிழ்ச்சி அடைகிறோம் என்றாலும், விவசாயத்திற்குத் தேவையான உரம் கிடைக்கின்றதா என்றால் கிடைக்கவில்லை. மத்திய அரசு வழங்க வேண்டிய உரத்தை வழங்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அதன் காரணமாகத்தான் உரத் தட்டுப்பாடே ஒழிய, மற்றபடி உர விநியோகத்தில் கோளாறு இருக்கிறதா என்று கேட்டால் கோளாறு இல்லை என்பதை அழுத்தந்திருத்தமாகச் சொல்லிக் கொள்வேன். 'காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்' என்று சொல்வதைப் போல, தவறான நோக்கம் கொண்டவர்களுக்கு ஏதோ தவறு நடப்பதாகத் தெரிகிறது. உதாரணத்திற்காக மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்கூட சுட்டிக்காட்டினார் என்று கருதுகிறேன், அதாவது அமைச்சர் வந்தார், வந்ததற்குப் பிறகு சங்கத் தலைவர் உர மூட்டைகளைப் பெற்றார், பெற்றதற்குப் பிறகு அதைத் தவறாக விற்றார், இப்படி ஊழல் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். அவர்கள் ஏதோ மூட்டைக் கணக்கில் சொன்னார்கள். இன்னும் கிலோக் கணக்கில் சொன்னால் ஏதோ பெரிதாக ஊழல் நடைபெறுவதாகத் தோன்றலாம். அமைச்சர் வந்திருக்கலாம். சங்கத் தலைவர், தனி நபர் அல்ல—மூட்டைகளைப் பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர்மீது எப்படிக் குற்றம் சாட்ட முடியும்? சங்கத் தலைவர் உரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார், உரத்தை விநியோகம் செய்தார், தவறுதலாகப் பயன்படுத்தியிருக்கிறார். தவறுதலாகப் பயன்படுத்திய சங்கத் தலைவர்மீது கட்சி வேறுபாடின்றி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று கேட்டால், எடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவரைக் கைது செய்திருக்கிறார். அந்த வழக்கு பெயிலபிளா, நான்-பெயிலபிளா என்று பார்க்கிறபொழுது, பெயிலபிள் என்ற காரணத்தினால், அவர் ஜாமீனில் வெளிவந்திருக்கிறார் என்று சொன்னால், ஆட்சியில் உள்ளவர்கள்மீது எப்படிக் குறைப்பட்டுக் கொள்ள முடியும்?

[திரு. கோ. இளங்கோவன்] [1974 சனவரி 23

அடுத்து இங்கே பாசன வசதியைப் பெருக்குவதற்கு வழி வகைகள் காணப்பட்டிருக்கின்றன. புதிய திட்டங்கள் வகுக்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய பகுதியில் வெண்ணாற்றில் வெள்ளம் வந்து அடித்துக்கொண்டு போகாதிருக்க சோளம்பட்டி அணைக்கட்டையும் முன்பு சொல்லியபடி இந்தத் திட்டத்தில் இணைத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

புதிய ஏரிகளை வெட்டுவதற்கும், பழைய ஏரிகளைச் சீர்செய் வதற்கும் பல கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் என்னுடைய பகுதியைச் சார்ந்த ஆதாரம்பட்டி ஏரி, அரசுக்குடி ஏரி ஆகிய ஏரிகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிலபல தொழிற்சாலைகள்பற்றிப் பேசப்பட்டது. சிமெண்டு தொழிற்சாலைபற்றி இங்கே பேசப்பட்டது. டால்மியாபுரம் வரலாறு படைத்த பகுதி. இன்றைக்கு முதல்வராக இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் அங்கே போராட்டம் நடத்தி கல்லக்குடி என்று பெயர் மாற்றம் செய்திருக்கிறார்கள். அங்கே சிமெண்டு உற்பத்தி செய்யப்படுகிறதா என்றால் உற்பத்தி செய்யப் படுகிறது. மலிவு விலையில் உற்பத்தி செய்யப்படுகிறது. அதனை ஒட்டிய அரியலூரில் ஒரு தொழிற்சாலையை உண்டாக்கி உற்பத்தியைப் பெருக்கலாமா என்று கேட்டால், தாராளமாக உண்டாக்கலாம். தமிழ் நாட்டில் அப்படி உண்டாக்குவதை விட்டு விட்டு உத்தரப் பிரதேசத்தில் உண்டாக்கலாமா என்று மத்திய அரசில் உள்ளவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்களே ஒழிய, வேறு இல்லை. அந்த முறையிலே இந்தத் தொழிற்சாலையை தமிழ் நாட்டிலே ஏற்படுத்தினால் தமிழ் நாட்டிலுள்ள சிமெண்டு நெருக்கடியை ஓரளவுக்குப் போக்க முடியும். எனவே மாநில அரசு மத்திய அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டுவந்து, அரியலூரில் ஒரு சிமெண்டு தொழிற்சாலை உருவாக்கவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கரும்பு உற்பத்தி செய் கின்றவர்களுக்கு உரிய தொகை தரவில்லை என்று சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தில் கன்னலும், செந்நெலும் விளைகிறது. செந் நெலோடு கன்னலைப் பயிரிடுகிறவர்களிடமிருந்து வாங்கு



1974 சனவரி 23]

வதற்கு ஆள் இல்லாத காரணத்தால் எங்கள் மாவட்டத்தில் சர்க்கரை ஆலை வேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். எனவே மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்தி, சர்க்கரை ஆலையை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

அருமை நண்பர்கள் சிலவற்றைச் சொன்னார்கள். மாநில அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது 5 ரூபாய், 10 ரூபாய் கொடுக் கிறார்கள். அதனால் விலைவாசி ஏறுகிறது என்றார்கள். இதைத் தான் மாநில அரசு மத்திய அரசிடம் சொல்கிறது. மத்திய அரசு எப்பொழுதெல்லாம் அதன் ஊழியர்களுக்குச் சம்பளத்தை உயர்த்துகிறதோ அப்போதெல்லாம் விலை ஏறுகிறது. மத்திய அரசு ஊழியர் மாநில அரசு ஊழியரிடை ஊதிய வேறுபாடு அதிகரிக் கிறது. எனவே மத்திய அரசு அதனுடைய ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்தும்போது மாநில அரசைக் கேட்டுக்கொண்டு செய்ய வேண்டுமென்று கூறுகிறேன். எனவே மத்திய அரசு எப்பொழுதெல்லாம் தன்னுடைய ஊழியர்களுக்கு ஊதியத்தை உயர்த்துகிறதோ அப்பொழுது மாநில அரசைக் கலந்துகொண்டு செய்ய வேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக் கொள்கிறேன்.

அடுத்து, கோதுமை சாப்பிடுங்கள் என்று சொன்னார்கள், ஆனால் கோதுமை தரவில்லை என்றார்கள். கோதுமை சாப்பிடச் சொன்னது யார் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிச் சாப்பிடச் சொன்னவர்கள் உரிய "கோட்டா"-வைத் தராத காரணத்தால் உரிய பங்கீட்டினைச் செய்ய இயலவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, இலங்கை தமிழர் பிரச்சினைபற்றிக் குறிப்பிட விரும்பு கிறேன். திரைகடல் ஓடியும், திரவியம் தேடு! உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ என்று இவற்றை நம்பி இலங்கைக்குச் சென்று அங்கே உழைத்து ஓரளவிற்குப் பொருள் ஈட்டினார்கள். அவர்கள் இன்றைக்கு நாடோடியாகத் தாயகத்திற்குத் திரும்புகிறார்கள். இப்படி வருகிறவர்கள், ஐந்து குடும்பமல்ல, பத்து குடும்பமல்ல, 57 ஆயிரம் குடும்பங்கள், இவர்களுக்கு ஆதரவு தருகின்ற வகையில் வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசோடு கலந்து மாநில அரசு செய்ய வேண்டுமென்று கேட்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

*திரு. அ. ப. சண்முகசுந்தரம்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் அவர்கள் இந்த இந்திய உப கண்டத்தின் பொருளாதார நிலை இன்றைக்கு மிக மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது, இந்த நிலைமைகளைப்பற்றி ஓரளவிற்கு இந்த இந்திய உபகண்டத்திலிருக்கிற அனைத்து மாநில முதலமைச்சர்களும் கூடி ஒரு மாநாட்டிலே இவற்றையெல்லாம் விவாதிக்க வேண்டுமென்று அவர்கள் இதிலே எடுத்துரைத்திருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டின் பொருளாதார நிலை மோசமாகப் போய்க் கொண்டிருக்கிறது. அந்த ஒரு பிரச்சினை மட்டுமல்ல. முதலமைச்சர்களின் மாநாடு என்பது அதற்காக மட்டுமல்லாமல், முதலமைச்சர்களோடு பிரதம அமைச்சரையும் சேர்த்து ஒரு நிலையான மன்றம் அமைத்து அந்த மன்றத்தில் அடிக்கடி இப்படிப் பட்ட இந்த நாட்டினுடைய பிரச்சினைகளைப்பற்றி நாம் ஆராய வேண்டும். நம்முடைய இந்திய நாட்டினுடைய வெளி உறவுக் கொள்கை, பாதுகாப்பு இவற்றைப் பற்றி அடிக்கடி முதலமைச்சர்களிடம் கலந்து பேசுவதற்கு இந்த முதலமைச்சர்களின் மன்றம் மிக்க உதவிகரமாக இருக்கும் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இத்தகைய ஒரு நிலையான ஒரு மன்றத்தை நம்முடைய இந்திய நாட்டிலே ஏற்படுத்துகிற நேரத்திலேதான் நாம் எல்லாவிதமான பிரச்சினைகளைப்பற்றியும் கூடிக் கலந்து பேசுவதற்கு முடியும்.

அண்மையிலே இலங்கை நாட்டிலே உலகத் தமிழ் மாநாடு நடந்தது. அந்த உலகத் தமிழ் மாநாட்டிற்கு இந்தியாவிலிருந்தும், தமிழகத்திலிருந்தும் பிரதிநிதிகள் சென்று அதிலே கலந்து கொண்டார்கள். அப்படி அவர்கள் கலந்து கொண்ட நேரத்திலே அவர்களுக்கு அங்கு மிகப் பெரிய ஆபத்து காத்துக் கொண்டு இருந்தது. அங்கு பல தமிழ்ப் பெரு மக்களுடைய உயிர் இன்றைக்குப் பறிக்கப்பட்டிருக்கிறது. அத்தகைய ஆபத்தான விளைவுகளிலிருந்து நம்முடைய தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் உயிர் தப்பி வந்திருக்கிறார்கள். அந்த நிலைமைகளைப்பற்றி இந்தியப்



பிரதம அமைச்சருக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு எடுத்துரைத்து அப்படிப்பட்ட நிலைமைகளைப்பற்றியெல்லாம் பேசுவதற்கு முதலமைச்சர்களுடைய மாமன்றம் மிக்க உதவிகரமாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலே இன்றைக்கு எந்தவிதமான உணவுப் பிரச்சினையும் இல்லாமல் இன்றைக்கு நிம்மதியாக இருக்க முடியும். அதே நேரத்தில் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைப் பார்க்கிறோம். வட இந்தியாவிலே இன்றைக்கு மழை மிக நன்றாகப் பொழிந்திருக்கிறது. மழை மிக நன்றாகப் பெய்தும் அங்கு உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. நல்ல வெள்ளாமை, விளைச்சல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். குஜராத்திலே, மகாராஷ்டிரத்திலே, உத்திரப் பிரதேசத்திலே இன்றைக்கு நல்ல விளைச்சல் இருந்துங்கூட அங்கெல்லாம் இன்றைக்கு உணவுப் பிரச்சினை தலைவிரித்தாடுகிறது. மக்கள் அங்கே குமுறி எழுகிற அளவிற்கு உணவுப் பிரச்சினை மிகப் பயங்கரமாக இருப்பதைப் பார்க்கிறோம். மக்கள் குமுறியெழுந்து கிளர்ச்சி செய்து பல உயிர்கள் போக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலை இங்கே தமிழ் நாட்டிலே இல்லை.

இங்கே சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் மழை மிகக் குறைவாகப் பெய்தும்கூட இன்றைக்கு உணவுத் தட்டுப்பாடு இல்லாமல் உணவுப் பிரச்சினையைச் சமாளித்திருக்கிறோம். அதற்குக் காரணம் நம்முடைய அரசு மிகச் சாமர்த்தியமான முறையில் உணவுப் பிரச்சினையைக் கையாள்வது காரணமாகத்தான் உணவுப் பிரச்சினையில் முன்னோடியாக இருக்கிறோம். மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறோம். நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நம்முடைய அரசு ஆக்கமும், ஊக்கமும் தருகிற காரணத்தால் விவசாயப் பெருங்குடி மக்கள் நல்ல விளைச்சலைக் கண்டு வருகிறார்கள். இப்படி விளைச்சல் இல்லாது இருந்தால் பஞ்சம்தான் இருக்கும். ஆனால் இன்றைக்கு நம்முடைய அரசு காலாகாலத்தில் நம்முடைய விவசாயிகளுக்குத் தருகிற ஆதரவின் காரணமாகத்தான் இன்றைக்கு அதிக விளைச்சலை நாம் பார்க்கிறோம். பல வட மாநிலங்களில் நல்ல மழை பெய்தும் அங்கு பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. நம்முடைய மாநிலத்தில் மழை

[திரு. அ. ப. சண்முகசுந்தரம்] [1974 சனவரி 23

குறைவாகப் பெய்தும் நாம் இன்றைக்கு உணவுப் பிரச்னையைச் சமாளித்து மற்ற மாநிலங்களுக்கும் உணவு கொடுக்கும் நிலையில் இருக்கிறோம்.

நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களைப் பொறுத்த அளவில் முக்கியப் பிரச்னை மின்சாரப் பற்றாக்குறை. இதுதான் பெருங் குறையாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே இன்றைக்கு நம்முடைய தேவைக்குப் போதுமான அளவில் மின்சாரமில்லை. அதே நேரத்தில் 639 மெகாவாட் மின்சாரம் நமக்குப் பற்றாக்குறை யாக இருக்கிறது. அது மட்டுமல்ல வர இருக்கின்ற 5 ஆண்டுத் திட்டத்திலே இறுதியில் பல மின்சார நிலையங்கள் ஏற்படுத்திய பிறகும் கூட 1,185 மெகாவாட் மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நமக்கு இருக்கிற மின்சாரப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்குப் பல மின்சார நிலையங்கள் ஏற்படுத்தியாக வேண்டும். புனல் மின்சார நிலையங்களை ஏற்படுத்த நமக்கு வாய்ப்பு இல்லை. எனவே அணு மின் நிலையங்களை ஏற்படுத்தியாக வேண்டும். தமிழ் நாட்டிலே ஏற்படுத்த இருக்கிற கல்பாக்கம் அணு மின் நிலையம் 1970-71-ம் ஆண்டுக்குள் முடிவடைந்திருக்க வேண்டும். இப்போது 77-78 க்குப் பிறகுதான் முடிவடையும் என்கிறார்கள். மத்திய அரசாங்கம் கல்பாக்கம் மின் நிலையத்தை மிக வேகமாக நிறைவேற்றக் கவனம் செலுத்தி அதைப் பூர்த்தி செய்து தர வேண்டும்.

இன்றைக்கு தமிழ் நாட்டிலே தூத்துக்குடியிலே ஒரு அனல் மின்சார நிலையம் ஏற்படுத்த அனுமதி தந்திருக்கிறார்கள். தூத்துக்குடியில் அனல் மின்சார நிலையம் ஏற்படுத்துவதோடு மேட்டூரிலும் ஒரு அனல் மின் நிலையம் ஏற்படுத்துவதற்கும் நெய் வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கும் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அப்போதுதான் நம்முடைய தமிழ்நாட்டு மின்சார உற்பத்தியை நாம் ஓரளவு சரிக்கட்ட முடியும். ஆகவே நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி நெய்வேலியில் இரண்டாவது அனல் மின் நிலையத்தை ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 சனவரி 23] [திரு. அ. ப. சண்முகசுந்தரம்]

(பிற்பகல் 12.30)

விவசாயத்திற்கு இரவு முழுவதும், பகலில் 6 மணி நேரம் மின்சாரம் தருகிறார்கள். இந்த 6 மணி நேரத்தில்கூட அடிக்கடி மின்சாரம் தடைபடுகிறது. அதன் காரணமாக அவர்களுக்கு பகலில் சரிவர மின்சாரம் கிடைப்பதில்லை. நேற்றைக்குக்கூட மின்சாரத் துறை அமைச்சரிடம் இதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தேன். அவர்களும் அதைப்பற்றிக் கவனித்து நிச்சயமாக அப்படி அடிக்கடி மின்சாரம் தடைபடு வதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறேன் என்று கூறி யிருக்கிறார்கள். மின்சாரப் பற்றாக்குறையின் காரணமாக, அடிக்கடி மின்சாரம் தடைபடுகிற நேரத்தில் விவசாயிகளுக்குத்தான் பாதிப்பு ஏற்படுகிறது. அதனால் உணவு விளைச்சல் பாதிக்கப் படுகிறது என்பதைக் கவனத்தில்கொண்டு குறைந்தபட்சம் பகல் நேரத்தில் ஆறு மணிநேரமாவது விவசாயிகளுக்கு மின்சாரம் தடைபடாது கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பகலில் ஆறுமணி நேரம் ஒவ்வொருநாளும் கிடைத்தால்போதும், அதற்கான ஏற்பாட்டினை மின்சார அமைச்சர் செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு இன்றைக்கு உரம் கிடைப்ப தில்லை. நமது வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் நமக்குத் தேவையான உரத்தைப் பெற அடிக்கடி மத்திய அரசுக்கு வற் புறுத்தி வருவதற்கு விவசாயிகள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டில் உற்பத்தி செய்கிற, வெளிநாட்டில் இருந்து இறக்குமதியாகிற உரத்தில் 3 இல் ஒரு பங்கு தான் அரசாங்க யூனிட்டுக்குக் கிடைக்கிறது. மிச்சமிருக்கிற 3 இல் இரண்டு பங்கு உரம் தனியாருக்குத் தந்துவிடுகிறார்கள். அவர்கள் அதிகவிலைக்கு இன்றைக்கு அவற்றை விற்கிறார்கள். நூற்றுக்கு 75 சதவிகிதம் உரமாவது அரசு விநியோகத்தின்மூலம் கிடைத்தால் நமக்கு எவ்வித இடையூறும் இல்லாது, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக மக்களுக்குக் கிடைக்கச் செய்ய முடியும். நண்பர் குமாரசாமி அவர்கள் பருத்திக்குத் தேவையான ஸி.ஏ.என். உரம் காலத்தில் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். ஸி.ஏ.என். உரம் வெளிநாட்டில் இருந்து வருகிறது. அவற்றை நாமே இறக்குமதி செய்துகொள்ள நமக்கு அதிகாரம் இல்லை. நமக்கே அந்த உரத்தை இறக்குமதி செய்ய அதிகாரம் கொடுத்தால் குறிப்பிட்ட காலங்களில்

நமது பருத்தி விவசாயிகளுக்கு உரம் கிடைக்கச் செய்ய முடியும். அந்த அதிகாரத்தை மத்திய அரசு நமக்குக் கொடுத்துவிட்டால் எவ்விதப் பிரச்சினையும் இல்லை.

அடுத்து, நம் அரசாங்கம் பாசனக் குளங்களைச் சீர்திருத்தம் செய்ய நிறையப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அந்தக் குளங்களைத் தூர் வாருகிற வேலையை எவ்வளவு விரைவாகச் செய்கிறோமோ அவ்வளவுக்கு நாம் தண்ணீரை அதிகமான அளவில் தேக்கிவைத்து விவசாயத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

எனது தொகுதியில் குளப்பத்தி என்கிற குளம் இருக்கிறது. அது 500 ஏக்கரா பாசனத்திற்குப் பயன்படும். அது நெடுநாளாகத் தூர் வாரப்படாமல் இருக்கிறது. அதையும் இந்தத் திட்டத்தின்கீழ் தூர் வார ஏற்பாடு செய்தால் நிச்சயமாக நன்மை கிடைக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எனது பகுதியில் நல்லாறு நீர்த் தேக்கம் என்பது பொதுப்பணித்துறையின் பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. அந்த நீர்த்தேக்கத் திட்டம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. பெரிய திட்டம் அல்ல. ஆயிரம் ஏக்கராவுக்குப் பாய்கிற வசதி உடைய அந்த நல்லாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு விரைவில் அனுமதி கொடுத்து அதை நிறைவேற்றித்தரவேண்டுமென்று சொல்லி, எனது கருத்தினை எடுத்துச்சொல்ல அனுமதி அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, ஆளுநர் அறிக்கையின் மீது எனது கருத்துக்களைக் கூறுவதற்கு முன்னதாக நமது மாநிலத்தின் தலைநகராகிய சென்னையில், அதிலும் குறிப்பாக தலைமைச் செயலகத்தில், அதிலும் குறிப்பாக 15 அமைச்சர்கள் வீற்றிருந்து நாட்டை ஆளுகிற வேளையில், இன்னும் சுருக்கமாகக் கூறினால் நாட்டில் உள்ள அத்தனை பிரதிநிதிகளும் இங்கே இருக்கிற வேளையில் இன்றையதினம் குடிப்பதற்குக் கூடத் தண்ணீர் இல்லாமல் தலைமைச் செயலகம் இருக்கிறது என்று சொன்னால் இந்த நாட்டின் பொறுப்பு யாருடைய கையில் இருக்கிறது? இங்கு அரசு செயல்படுகிறதா இல்லையா என்று எண்ணிப் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். குடிப்பதற்குக் கூடத் தண்ணீர்





இல்லையென்று சொன்னால் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு மாநில அரசு தயாராய் இல்லை என்று அர்த்தம் என்றே நினைக்கிறேன்.

இன்றையதினம் இந்த நாட்டில் நடைபெறுகிற ஆட்சியைப் பார்த்தால் எந்த ஒரு இலாக்காவும் பொறுப்பாக நடைபெறுவதாகத் தெரியவில்லை. இன்று பிரமாதமாகக் கூறுகிறோம். தமிழ்நாடு உணவைப் பொறுத்த மட்டில் தன்னிறைவு பெற்று பிற மாநிலங்களுக்குக் கொடுக்கின்ற நிலையில் இருக்கிறது என்று கூறுகிறோம். இந்த அளவு உற்பத்தியாகிற உணவுப் பொருள் எந்த முறையில் விநியோகிக்கப்படுகிறது என்று சொன்னால் வெட்கப்படக்கூடிய நிலையில் இருக்கிறோம். ஒரு பகுதியில் ஒரு கிலோ ஒரு ரூபாய்க்கு விற்கப்படுகிறது, இன்னொரு பகுதியில் ஒரு கிலோ 4 ரூபாய் கொடுத்து ஏழைகள் வாங்கி உண்ண வேண்டிய நிலை இருக்கிறது என்று சொன்னால் இங்கே அரசு இருக்கிறதா என்று கேட்கிறேன். தஞ்சையில் கொள்முதல் ஆகிற நெல்லுக்கு 75 கிலோ மூட்டை 75 ரூபாய் என்று வாங்கி, கன்னியாகுமரி மாவட்டத்தில் அதையே 102 ரூபாய்க்கு விற்கிறார்கள் என்று சொன்னால் ஒரு மூட்டைக்கு அரசுக்கு லாபம் 20 ரூபாய்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** 20 ரூபாய் சேர்க்கப்படுகிறது என்றால் 20 ரூபாயும் லாபம் அல்ல. போக்குவரத்துச் செலவு, அரைவைக் கூலி எல்லாம் சேர்ந்ததுதான் அது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, அந்தக் கணக்கும் இருக்கிறது. 70 ரூபாய் கொள்முதல் விலை, 3 ரூபாய் மூட்டை டிரான்ஸ்போர்ட் சார்ஜ், ஹல்லிங் சார்ஜ் 3 ரூபாய் ஆகிறது. ஆக மூட்டை 82 ரூபாய் அடக்கம். கன்னியாகுமரியில் சில்லரைக்கு விற்கப்படுவது 102 ரூபாயாக இருக்கிறது. ஒரு கிலோ 1.50-க்கு விற்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** வாங்கின உடனேயே அங்கே கொண்டு போய் விற்பது போலச் சொல்கிறார்கள். வாங்கி ஸ்டாக் செய்து, கோடவுன் வாடகை கொடுத்து, பாய்லிங் பண்ணி, ஹல்லிங் பண்ணி கொடுக்கிற வரையில் ஏற்படுகிற செலவு எல்லாம் சேர்ந்ததுதான் அது. அரசு லாபத்திற்குச் செய்யவில்லை. லாப நஷ்டம் பாராமல் செய்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அரிசி வியாபாரத்தின் மூலம் மட்டும் இந்த அரசாங்கம் ஒரு ஆண்டு விநியோகம் செய்கிற 60 ஆயிரம் டன் அரிசிக்கு 2 கோடி ரூபாய் கொள்ளை லாபம் அடிக்கிறது என்கிற குற்றச்சாட்டை வைக்கிறேன். ஒரு தனி வியாபாரி ஒரு மூட்டை ரூ. 75-க்கு வாங்கி 102-க்கு விற்க அனுமதிக்கப்படுவாரா என்று கேட்கிறேன்.

இன்னும் விநியோகம் செய்கிற முறையைக் கூற விரும்புகிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலேயே சில பகுதிகளில் விநியோகம் செய்கிறார்கள். சில இடங்களில் மக்கள் ஏறத்தாழ படி அரிசி 5 ரூபாய் கொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது. அதற்குக் காரணம் மாவட்டம் முழுவதும் செக் போஸ்ட் அமைத்திருக்கிறார்கள். வெளி மாவட்டங்களில் இருந்து அரிசி உள்ளே வர வழியில்லை. மாவட்டத்திற்குள்ளேயே ஒரு கிராமத்தில் இருந்து இன்னொரு கிராமத்திற்குப் போக வழியில்லை. இந்த அவல நிலைதான் உணவு விநியோகத்தில் நாம் கையாளக்கூடிய பெரும் கோளாறாக இருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அரசு சிவில் சப்ளை கார்ப்பரேஷனை அமைத்திருக்கிறார்கள். சென்னைக் கார்ப்பரேஷனிலாவது கிடைத்ததோடு பலர் போக கட்டிடமாவது மிஞ்சிற்று. ஆனால் சிவில் சப்ளை கார்ப்பரேஷனுக்கு கட்டிடங்கள் கூட மிஞ்சப் போவதில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், இந்தக் கார்ப்பரேஷன்கள் மீது இந்த அரசாங்கத்திற்கு எந்தக் கடமையோ, கன்ட்ரோலோ கிடையாது என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஃபுட் கார்ப்பரேஷனுக்காக அரசாங்கம் நிர்ணயித்த விலை கிலோ அரிசி ரூ. 1.50 என்று சொன்னால், நாகர்கோவிலில் செயல்படுகிற ஃபுட் கார்ப்பரேஷன் ரூ. 2-க்கு விற்பனை செய்கிறது. அதைத் தட்டிக் கேட்க இந்த நாட்டில் ஒரு அதிகாரி உண்டா, அரசு உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** தலைவர் அவர்களே, ஒருசில நேரங்களிலே அதிகமான விலை விற்றார்கள் என்று உடனடியாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்துக்கொண்டு தான் வருகிறோம். அவர்கள் சொல்வதுபோல், அநியாயமாக



ரூ. 4, ரூ. 5 என்று அடுக்கிக்கொண்டே போகவேண்டியதில்லை. கடத்தல்காரர்கள் சொல்கிற விலையை உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இந்த வருஷம் 24,000 டன் அரிசியை ரூ. 1.15-லிருந்து ரூ. 1.30, ரூ. 1.40 வரை, விலை ஏறாத வகையில் உற்பத்தி இல்லாத இடங்களில் கொடுக்கிறோம். உற்பத்தியாளர்கள், அங்குள்ள நெல்லை அரசுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்து தான் பேசி இருக்கிறோம். ஆக, எல்லா காரியங்களையும் பற்றி பேசிக்கொண்டுதான் இருக்கிறோம். ஒன்றும் செய்யப்படவில்லை என்று சொல்லக்கூடாது. ஒன்றிரண்டு தாலுகாக்களிலே, கள்ளக் கடத்தல்காரர்கள் செய்கின்ற காரியத்தை வைத்து, தமிழ் நாட்டிலேயே இப்படியில்லையென்று பேசுவது எதற்காக என்று தெரியவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, இந்த ரூ. 2 என்று தவறாக விற்கிறது என்ற தகவல் வந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி அதிக விலைக்கு விற்க அனுமதித்த அதிகாரிமீது அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க முன்வருமா? அது யாருடைய ரெஸ்பான்சிபிலிட்டியில் நடைபெற்றது? அவர் யார்? அதனால் பொதுமக்களிடமிருந்து எவ்வளவு வசூல் செய்திருக்கிறார்கள் என்ற விவரத்தை அமைச்சரவர்கள் உடனடியாக பெற்று, அதற்கு உடந்தையாக இருந்த அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :** நான் ஏற்கெனவே சொன்னேன், கவனத்திற்கு வந்தபிறகு அதற்கான நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்று.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, கழிந்த சில மாதங்களுக்கு முன்பாக பொன்மலை கிராமத்திற்கு அரிசி வேண்டுமென்று கேட்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உணவு அமைச்சர் அவர்களும் தேவைப்பட்டால், மறுபரிசீலனை செய்வோம் என்று சொன்னார்கள். அந்தக் கிராமத்தில் இப்பொழுது 5 செக் போஸ்ட்களை அமைத்திருக்கிறோம். அங்கு அரிசி உற்பத்தி மிகவும் குறைவு. அது மலைத்தோட்டப் பகுதி, அங்கு உற்பத்தியாகும் அரிசி அவர்களுக்குப் போதவில்லையென்று சொல்லி, அவர்களுக்கு உணவு வழங்கவேண்டுமென்று கேட்ட

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 சனவரி 23

பொழுதுகூட, இதுவரையிலும் அவர்களுக்கு அரிசி அளித்ததாகத் தெரியவில்லை. அங்கு தேவைதான் என்று அரசு உணரவில்லை. அந்த மக்கள் மீது தயவை காட்டவில்லை. ஒருவேளை, உங்களுக்கு ஓர் மூலையாக இருக்கலாம், கோடியாக இருக்கலாம், அங்கு இருக்கிறவர்கள் மனித வர்க்கத்தினர்தான். ஒருவேளை, பூனைக்கு விளையாட்டாக இருக்கலாம், எலிக்கு அது உயிர்ப் பிரச்னை என்பதை கவனிக்க வேண்டுமென்றுதான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஒரு நாளைக்கு ரூ. 3 கூலி பெற்று, ஆனால், ரூ. 5-க்கு அவர்கள் அரிசி வாங்க வேண்டுமென்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன், அதிகாரிகளைப் பேட்டி கண்டு, அவர்களது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், எந்தவிதமான நடவடிக்கையையும் இதுவரையில் எடுக்கவில்லை, செய்யவில்லை. இது, இவ்வரசு மக்கள்மீது எந்த அளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:** தலைவர் அவர்களே, அவர் கூறி இருக்கிறேன், கூறி இருக்கிறேன் என்று சொல்கிறார். அதே நேரத்திலே, நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறுகிறார். அது உண்மைதானா? இப்பொழுது பொன்மலை ஒரு இடம்தான் சொல்கிறார். அவர் இதற்கு முன்னால் எத்தனை இடங்களைச் சொல்லியிருக்கிறார். அவர் சொன்ன அத்தனை இடங்களிலும், அதிகாரிகளைச் சந்தித்து, நியாய விலைக் கடைகளைத் திறந்து அரிசி விநியோகிக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். இரண்டு நாட்களுக்கு முன் மற்றொரு எம்.எல்.ஏ. கூடச் சொல்லியிருக்கிறார். அதையும் கவனிக்கிறோம். கலெக்டர் வரும்போது நாங்கள் செய்து வந்திருக்கிறோம். ஒன்றுமே செய்யவில்லையென்று சொல்வது, உள்ளபடியே மனசாட்சியோடு தான் சொல்கிறாரா என்று தெரியவில்லை. இப்பொழுது பொன்மலை ஒன்று தான் சொல்கிறார்கள். இன்னும் பல இடங்களைச் சேர்க்கவேண்டுமென்று அவர்களே சொல்லி, அதிகாரிகளை அழைத்து, பொன்மலையைச் சேர்த்தால், மற்றவற்றையும் சேர்க்கவேண்டுமென்று, தனி வியாபாரிகளைக் கொண்டு நியாயமான விலையில் அரிசி கிடைப்பதற்குக் கூடிய விரைவிலே ஏற்பாடு செய்திருக்கிறோம்.



1974 சனவரி 23] [திரு. மன்னை ப. நாராயணசாமி]

கஷ்டப்பட வேண்டுமென்று நான் சொன்னதாக அர்த்தம் கற்பித்து அவர் சொல்கிறார். அப்படி இல்லவே இல்லை. கள்ளக் கடத்தல்காரர்கள் அடுத்த மாநிலத்திற்குக் கடத்திச் சென்று விற்கவேண்டுமென்பதற்காக, விலை ஏறிவிட்டது என்ற புகைச் சலைக் கிளப்பி வருகிறார்கள். வாங்கிச் சாப்பிடுபவர்களுக்கு அப்படிப்பட்ட நிலை அல்ல. கள்ளக்கடத்தல்காரர்களை சர்க்கார் கவனித்து வருகிறது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இதுவரையிலே முதலமைச்சரவர்களானாலும் உணவு அமைச்சரவர்களானாலும் யார் சொன்னாலும் கள்ளக் கடத்தல்காரர்களுக்காக எந்த நிமிடத்திலும் நாங்கள் பரிந்து பேசியது கிடையாது. உணவுப் பிரச்னையில் நீங்கள் ஏழைகளுக்கு அரிசி கொடுக்க வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோமே தவிர, மற்றவர்களுக்காக வாதிட்டதே கிடையாது. கள்ளக்கடத்தல்காரர்களைக் கட்டாயம் நீங்கள் பிடிக்க வேண்டும். அதற்கு ஆவன செய்ய எங்களால் ஆனதைச் செய்கிறோம் என்றுதான் நாங்கள் கூறுகிறோம். செக் போஸ்டை அகற்ற வேண்டுமென்று நாங்கள் கண்டிப்பாகச் சொல்லவில்லை. கள்ளக் கடத்தலைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால் செக் போஸ்ட் வைத்துத்தான் இருக்கவேண்டும். அங்கே 5 செக் போஸ்ட்களை வைத்து, வெளியே இருந்து, சாப்பிடக் கூட அரிசி கொண்டு வர முடியாத நிலையை அமைச்சர் அவர்கள் சற்று மனக் கண்ணைத் திறந்து, சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நமது மாநிலத்தில் பல கார்ப்பரேஷன்களை அமைத்திருக்கிறோம். இதுவரையிலும், அரசு நிர்வாகத்தில் இருந்த ஊழியர்கள், இப்பொழுது கார்ப்பரேஷன் அமைக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அதற்கு மாற்றப்பட்டிருக்கிறார்கள். அது சட்டரீதியாகச் செல்லுமா என்பதை போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். நிச்சயமாக, கார்ப்பரேஷனை அமைத்தவுடனே, தொழிலாளர்களைக் கலந்து, கார்ப்பரேஷனில் பணியாற்ற விரும்புகிறீர்களா அல்லது அரசு ஊழியர்களாக இருக்க விரும்புகிறீர்களா என்று கேட்டிருக்க வேண்டும். அந்த மினிமம் ரிக்கொயர்மெண்ட்டைக் கூட நீங்கள் செய்யவில்லையென்று

சொன்னால், கார்ப்பரேஷன் அமைத்த உடனே நீங்கள் கார்ப்பரேஷனில் ஊழியர்களாக இருக்கவேண்டும், இல்லையென்று சொன்னால் நீங்கள் வட ஆற்காடு, தென் ஆற்காடு, மெட்ராஸ் சிட்டிக்கு டிரான்ஸ்பர் செய்யப்படுவீர்கள் என்று பயமுறுத்தினால் நிச்சயமாக அதைச் செய்ய இயலாது என்று போக்குவரத்து அமைச்சர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துத்துறை, இலாகாவாக இயங்குவதற்கும், போக்குவரத்துக் கழகமாக இயங்குவதற்கும் அடிப்படையில் எந்தவிதமான வேறுபாடும் இல்லை. நிர்வாக வசதி குறித்தும், அதே நேரத்தில் நிர்வாகத்தில் ஒரு மீட்சித் தன்மை இருக்க வேண்டுமென்பது குறித்தும், அதோடு மட்டும் அல்லாமல், நிர்வாகத்தில் உடனுக்குடன் முடிவுகள் எடுத்து செயல்படுத்துவதற்கு வசதிகள் ஏற்படுத்த வேண்டுமென்பது குறித்தும் அவைகள் போக்குவரத்துக் கழகங்களாக மாற்றப்படுகின்றன.

தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் என்று இருப்பதைவிடக் கூடுதலான சலுகைகள்தான் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் அவர்களுக்குக் கிடைக்கப் பெறுகின்றன. உதாரணத்திற்குச் சொல்லப் போனால், போனஸ் சட்டத்தில் அரசாங்க இலாகா என்றால், அவர்களுக்கு அமுலாக்குவதில்லை. ரயில்வேயில்கூட அமுலாக்கவேண்டுமென்று எல்லா எதிர்க்கட்சியினரும் வேண்டுகோள் விடுத்தும் கூட, இன்னும் அமுலாக்கப்படவில்லை என்பது இங்கே இருக்கிற எதிர்க்கட்சி நண்பர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆக தொழிலாளர்களுக்கு வகை செய்யக் கூடிய உதவி செய்யக்கூடிய பல சட்டங்களை அமுல்படுத்துவதற்கு போக்குவரத்துக் கழகங்கள் என்ற அமைப்பில் நிச்சயமாக அவர்களுக்கு நிறைந்த வாய்ப்புகள் இருக்கின்றன.

அரசாங்கத்திற்கும், தனியார் அல்லது அரசு நடத்துகின்ற போக்குவரத்து கழகங்களுக்கும் அடிப்படையிலே இருந்த ஒரே வேறுபாடு, அரசுத் துறையிலே பணியாற்றுவோர்கள் ஓய்வு பெற்றவுடன் அவர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையிலும்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் அன்று போக்குவரத்துக் கழக துவக்க



விழாவில் அறிவித்ததற்கிணங்க, தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் பென்ஷன் ஸ்கீம், இந்தியாவிலே, முதன்முதலாக, இண்டஸ்ட்ரியல் ஒர்க்கர், தொழிலாளி என்ற பிரிவினருக்கு நாங்கள் தான் அறிவித்திருக்கிறோம். அந்த ஓய்வூதியத் திட்டத்தின்படி அவர்கள் பணியில் இருந்து ஓய்வு பெற்று உயிரோடு இருக்கிறவரையிலும் ஓய்வூதியம் பெறலாம். அதோடு மட்டுமல்லாமல், அவர்கள் இறந்து விட்டாலும் அவர்களுடைய குடும்பத்தினருக்கு அந்த ஓய்வூதியம் கிடைக்கும். மனைவி இல்லாவிட்டால், குழந்தைகள் வயதுக்கு வருகிறவரையில், அவர்கள் ஓய்வூதியம் பெறுகிறார்கள். ஆக, எந்த வகையிலே பார்த்தாலும் அவர்களுக்குச் சலுகைகள் அதிகமாக ஆகிற வாய்ப்பு இருக்கிறதே தவிர, குறைகின்ற வாய்ப்பு இல்லை. அதைச் சரியாகத் தொழிலாளர்களிடத்திலே விளக்குவது நம் அனைவருடைய கடமை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிஃபிகேஷன். கார்ப்பரேஷன் பஸ்களை எடுக்கக் கூடாது என்று பல ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதே அதற்கு என்ன விளக்கம் சொல்கிறார் அமைச்சர் அவர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அமைச்சர் அவர்கள் மிக முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கருத்து தெரிவித்ததினால் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கார்ப்பரேஷன் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே கார்ப்பரேஷனாக இருந்ததிலிருந்து இன்னொரு ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டோடு சேர்க்க வேண்டுமா? கார்ப்பரேஷன் என்று சொன்னால் ரீஜனலாக ஏதாவது இருக்கிறதா? ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் என்று சொல்லி சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை செல்லக்கூடிய பஸ்களின் நிலைமை என்ன? கட்டபொம்மன் கழகம் என்று ஏற்படுத்தி பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்து எடுத்து சேர்த்து வைத்திருக்கிறார்களே, அதனுடைய விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இது போக்குவரத்துத் துறையினுடைய விவாதமாகவே அமைந்துவிடக் கூடாது. ஆங்காங்கே அமைந்துள்ள போக்குவரத்துக் கழகங்கள் தங்கள் தங்கள் எல்லைகளுக்குள் இருக்கின்ற போக்கு

கழகப் பொறுப்பேற்றுக்கொண்டு செயல்படுவதுதான் பொருத்தமானது என்ற அடிப்படையிலேதான் சீரமைக்கப்பட்டிருக்கிறது. பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலிருந்த திருநெல்வேலியிலிருந்த பேருந்துகளையும் அரசாங்க போக்குவரத்து இலாகாவிலிருந்த நாகர்கோவிலிலிருந்த பேருந்துகளையும் ஒன்றாக்கியிருக்கிறோம். அது நிர்வாக வசதியைப் பொறுத்தது ஆகும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த விவாதத்தில் புகுந்துகொள்ள நான் விரும்பவில்லை. காலம் இடம் கொடுக்கவில்லை. கட்டபொம்மன் கார்ப்பரேஷன் நெல்லை டிப்போவுக்கு என்று 3 ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறார்கள். அந்த நிலம் இப்பொழுது இருக்கிற புராஜக்ட் ஹவுஸுக்குப் பக்கத்திலே அமைந்திருக்கிறது. சாதாரண விலை அந்த நிலத்திற்கு 30 ஆயிரம்தான். அதற்கு 3 லட்சம் ரூபாய் கொடுத்து பத்திரம் பதிவு செய்யப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் அந்த டிரான்ஸாக்ஷனில் ஈடுபட்டு இது நடைபெற்றிருக்கிறது என்று சொல்கிறார்கள். கார்ப்பரேஷனுக்கு இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லி அனைத்துக் கட்சியும் சேர்ந்து புராட்டஸ்ட் பண்ணியும்கூட இந்த டிரான்ஸாக்ஷனை அந்த கார்ப்பரேஷன் செய்திருக்கிறது, இதற்கு அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். இந்தமாதிரியான ஊழல்கள் சர்வ சாதாரணமாகியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** போக்குவரத்துக் கழகங்களில் நிலம் பெறுகின்ற முறை அந்த நிலம் எவ்வளவு பெறுமானம் பெறும் என்பதை வருவாய்த் துறையினுடைய சான்றிதழ் பெற்றுத்தான் அவர்கள் எவ்வளவு ரூபாய் கொடுத்து நிலத்தை வாங்கலாம் என்று சொல்கிறார்களோ அதை வைத்துத்தான் போக்குவரத்துக் கழகங்கள் நிலத்தை வாங்குகின்றன. அங்கே உள்ள இடத்தில் பத்திரிகையாளர் அலுவலகம் நடப்பதாகவும் அவர்களுக்கு இது இடையூறாக இருப்பதாகவும் பாவம் அவர்கள் பல பேர்களை நாடிக் கொண்டிருப்பதாகவும் அதனால்தான் அப்படிப்பட்ட போராட்டம் என்று பத்திரிகைகளிலே போட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதாகவும்தான் தகவல் தரப்படுகின்றது.





**திரு. ஜே. ஜேம்ஸ் :** இது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மையாக இருந்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன். இதை விசாரிக்க ஒரு கமிட்டி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்ததாக டிக்கட்டுகளில் பல ஊழல்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரே நம்பரிலே இரண்டு டிக்கட்டுகள் விநியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. சாதாரணமாக கள்ள நோட்டு அந்த முறையிலேதான் செய்யப்படும், ஒரே நம்பரிலே இரண்டு டிக்கட்டுகள் அடிக்கப்பட்டு இருக்கின்றன. 51 இ என்ற பஸ்ஸிலே எம்.எஸ்.ஜி.வி. 093567 என்ற பதினைந்து நயா பைசா டிக்கட்டு அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இரண்டு டிக்கட்டுகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடம் இருக்குமானால் தயவுசெய்து அதைக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** டிக்கட்டு என்னிடம் கொடுக்கப்படவில்லை. இந்த விஷயத்தை நான் ஒரு வினா மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். பல்வேறு பத்திரிகைகளிலே இதைப்பற்றி பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கிறது . . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதை நான் புறக்கணிக்கிறேன் என்று பொருள் கொள்ளக்கூடாது. ஒரே இம்ப்ரஷனை மூன்று நான்கு தடவை போட்டிருக்கலாம். அல்லது உண்மையாக இருக்கலாம். அப்படி ஏதாவது டிக்கட்டுகள் கிடைத்து இருக்குமானால் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க ஏதுவாக இருக்கும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இந்த அரசாங்கத்தின் மாநில சுயாட்சியைப் பற்றி இரண்டு வார்த்தைகளை கூறி முடித்துக்கொள்கிறேன். இந்த அரசாங்கம் கழிந்த சில ஆண்டுகளாக மாநில சுயாட்சி என்று ஆங்காங்கே சொல்லிக்கொண்டு திரிவதை நம் மக்கள் மட்டுமல்ல, மத்திய அரசும் கேள்விப்பட்டு மாநில சுயாட்சி என்பது பிரிவினைவாதம் என்று எண்ணம் செய்திருப்பதாகப் பத்திரிகைகளிலே பார்த்திருக்கிறோம். அதற்குப் பின்னாலேயாவது அவர்கள் இந்த மாநில சுயாட்சிக் கொள்கையை கைவிட்டு இருக்க

வேண்டும். இந்த நல்ல சந்தர்ப்பத்திலேயாவது கவர்னர் ஆற்றிய உரையிலே இதைப் பகுதியாகச் சேர்த்து மாநில சுயாட்சி அடைந்தே தீருவோம் இல்லாவிட்டால் உங்கள் இஷ்டப்படி என்று ஏதாவது முடித்து இருக்கவேண்டும். இந்த அறிக்கையிலே மாநில சுயாட்சிபற்றி சொல்லியிருக்கவேண்டும். ஒரு காலத்திலே திராவிட நாடு என்று கூறினோம். அது எங்கே போயிற்று என்று தெரியவில்லை. உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பேசும்பொழுது . . .

**திரு. துரை முருகன் :** சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் மத்திய அரசு மாநில சுயாட்சி சிறு பிள்ளைத்தனமானது என்று சொன்னதற்குப் பிறகு இந்த அரசு மாநில சுயாட்சிக் கொள்கையை விட்டிருக்க வேண்டுமென்று நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) :** இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

**திரு. துரை முருகன் :** நான் சொல்லி முடித்தவுடனே உங்கள் ஜட்ஜ்மென்டைக் கொடுத்தால் நல்லதாக இருக்கும். மத்திய அரசு மாநில சுயாட்சியை சிறுபிள்ளைத்தனமானது என்று சொன்ன பிறகு மாநில சுயாட்சிக் கொள்கையை விட்டிருக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். மாநில சுயாட்சியைச் சிறுபிள்ளைத்தனம் என்று சொன்னதே ஒரு சிறுபிள்ளைத்தனம்தான் என்று ஏன் திரு. ஜேம்ஸ் அவர்கள் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) :** நீங்கள் சீக்கிரம் முடித்து விடுங்கள். நேரமாகிவிட்டது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** திரு. வீராசாமி அவர்கள் கூறினார்கள் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) :** முடித்து விடுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** அதை விட்டுவிடுகிறேன். சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன். கோவைத் தேர்தல் நெருங்குகிறபோது தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம் திறக்கப்படுவதாக அழைப்பு வந்தது. அந்த இல்லத்தை முதலமைச்சர் திறந்து வைப்பதாக அழைப்பு வந்தது. அந்த விழாவிலே ஐந்து அமைச்சர்கள் பங்கு கொள்கிறார்கள். முதலமைச்சர் மாண்புமிகு கருணாநிதி துவக்கி வைக்க, மாண்புமிகு சத்தியவாணிமுத்து அம்மையார் தலைமை தாங்க, மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள், மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள், மாண்புமிகு எம். கண்ணப்பன் அவர்கள் சிறப்புரையாற்றுவார்கள் என்று அழைப்பு வந்தது. அவர்கள் எல்லாம் சென்னையிலிருந்து கோவைக்குச் செல்ல ஏழைகளின் வரிப்பணம்தான் செலவிடப் பட்டதா? அமைச்சர்களின் சொந்தப்பணம் செலவிடப் பட்டதா? கட்சிப் பணம் செலவிடப்பட்டதா என்பதை இந்த மன்றத்திற்கு அறிவிக்கவேண்டும்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த தொழுநோய் பிச்சைக்காரர் இல்லம் கோவை நாடாளுமன்றத் தொகுதியிலே, தேர்தல் நடைபெறப்போகிற இடத்திலே இல்லை, அந்த இடம் தேர்தல் நடைபெறப்போகின்ற சட்டமன்றத் தொகுதியிலும் இல்லை. வேறு ஒரு தொகுதியிலே இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இருந்தாலும் கோவை ஜில்லாவிலே இருக்கிற இடம்தான் என்று நினைக்கிறேன். அந்த விழாவிற்கு ஐந்து அமைச்சர்கள் போக வேண்டுமா? சென்னையிலிருந்து கோவைக்குப் போக என்ன செலவு ஆகிறது, அமைச்சர்கள் சென்றால் அத்தனை பரிவாரங்களும் செல்லவேண்டுமே, என்ன செலவு ஆகிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். பிச்சைக்காரர் விஷயத்திலே விளம்பரம் தேடிக்கொள்ளக்கூடாது. நிர்வாகத்தை செம்மையாக நேர்மையாக நடத்த இயலாத அரசு இந்த அரசு, செயலற்ற அரசு இந்த அரசு என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

* THIRU K. S. KOTHANDARAMIAH : Mr. Chairman, Sir, I wish to say a few words on His Excellency the Governor's Address. Though in his address the Governor has referred to certain important schemes of the Government which are intended to improve the condition of the poor, yet he has left out many important burning problems of the day. They are the soaring prices with regard to foodstuffs, scarcity of cement, scarcity of fertilisers and the corrupt practices prevailing in the distribution of fertilisers.

[Thiru K. S. Kothanda Ramiah] [1974 சனவரி 23

(பிற்பகல் 1.00)

He has not made reference to linguistic minorities of the State. There are linguistic minorities in large numbers in this as well as in other States. When this country was divided on linguistic basis 18 years back, safeguards were provided by the Government of India Act on the recommendations of the Linguistic Minorities Commissioner. But the pity is the State Government has not fully implemented the safeguards provided for the linguistic minorities. What I want to say is the expression to linguistic minorities is humiliating. It is not clearly stated as to what percentage of population would constitute a 'minority'. Even if there are 20,000 people speaking a particular language that is different from the State language, they are considered as constituting a minority. Unless a correct definition is given, even if there are 20 lakhs, of people speaking they come under 'minorities'. I appeal to the Hon. Chief Minister and the Minister for Education that in the coming Zonal Committee meeting, they may kindly place facts and figures and get a correct definition for the term 'minority' or we may not have as I, II, III languages.

Coming to the other problems, the Governor has stated that the south-west monsoon has been sub-normal in some parts and abnormal in other parts. In Dharmapuri district in Hosur and Denkanikota taluks, it has been sub-normal. They had no rainfall and crops have failed there. It is stated by the Governor that 14 irrigation schemes at a total cost of Rs. 15.90 crores have been formulated in drought prone areas. In this connection I want to say that for Hosur and Denkanikota taluks, there is the Dhoddahalle and Kelavampali project. When the Hon. Chief Minister was Minister for Irrigation some years before, he has sanctioned the first scheme. But in spite of lapse of four or five years, it has not been implemented. Let it be implemented quickly. The second scheme is the construction of a big dam at Kelavarapari which would irrigate about 6,000 acres of land. When I asked the Chief Engineer (Irrigation) he told me that proposals had been sent to Government. I do not know whether they have been included in this year's budget. If not done, it may be included.



1974 சனவரி 23] [Thiru K. S. Kothandaramiah]

Coming to village roads, it is said that if a village has population of 1,500, it should have a village road. There are number of villages having population less than that. The Hon. Chief Minister stated in Assembly that such villages might be grouped and roads provided for them. Let it be made known to authorities and roads provided accordingly. Many of the craft roads are not metalled properly. First Government sanctions money. Roads are laid. It is not metalled. It is washed away in rains. Again money is spent for metalling. This double payment may be avoided if metalling is done in the first instance itself.

It is said that waters of Cauveri at Mettur project, is utilised for irrigation, etc. In this connection the member Thiru Latheef was also saying that in Pennar there was no water. There is also the cry of water for Coimbatore. What I say is, let the waters of Krishna and Godavari be brought to Srisailam and from there to Kolar and from there to Hosur and Denkanikota (which are our table land) and from there it can be let into Cauvery. By this diversion, the districts of Dharmapuri, Coimbatore and North Arcot will have plenty of water. Let it not be taken to Chingleput first as Krishna-Pennar project. If what I suggest is done, it will help to solve the water problem of Coimbatore and Dharmapuri and North Arcot districts. With these words, I conclude.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களுடைய அறிக்கையிலே நம்முடைய அரசின் குறிக்கோள் நன்றாகச் சொல்லப்பட்டிருக்கிறது. வறியவர்கள், வாழ்க்கையில் ஒடுக்கப்பட்டவர்கள், வாழ்வில் வளம்பெற வேண்டுமென்ற கொள்கையை இலட்சியமாகக் கொண்டு செயல்படுவதற்கு 91 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது என்று சொல்லும்பொழுது இந்த அரசினுடைய சாதனைகளை நான் வரவேற்கிறேன். ஆனால் நம்முடைய தமிழகத்தில் இன்றுள்ள நிலைமை என்ன என்பதை நன்றாகப் பார்த்தால் நாம் செய்ய வேண்டிய காரியங்கள், திட்டங்கள் எப்படி இருக்க வேண்டுமென்பதை நாம் ஆலோசனை செய்து முடிவு செய்ய முடியும்.

[திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்] [1974 சனவரி 23

தேசிய மாதிரி சர்வேயில் 55 சதவீதத்துக்கு மேல் நபர் ஒன்றுக்கு 79 காசுக்கும் குறைவாகவே சம்பாதிக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். கலோரி விலையை இந்தச் செலவின் அளவு பெற முடியாது என்று கூறப்படுகிறது. பள்ளிக் குழந்தைகளில் 36 சதவீதம் பேர் ஊட்டக்குறைவில் உள்ளவர்கள் என்று தெரிவித்திருக்கிறார்கள். சூல் பெற்ற தாய்மார்கள், கைக் குழந்தை உள்ள தாய்மார்கள் பெருமளவிற்கு இரத்த சோகைக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறார்கள். தேசிய வளர்ச்சிக் குழுவில் முதலமைச்சரவர்கள் கூறியிருக்கிறார்கள், கீழ் மட்டத்திலுள்ள 30 சதவீதம் மக்களின் சராசரி தனி நபர் வருமானம் 37 ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். நாட்டு மக்களின் ஊழியர்களாக உள்ள சில பகுதியினர் உள்பட கூடுமான வரையில் நன்மையைப் பெற்று வரும் அதே நேரத்தில் நம் மக்களில் பெரும்பான்மையானவர்கள் அதிக வறுமையில் வாடியிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையே இருக்கக்கூடிய வித்தியாசத்தைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசும் மாநில அரசும் செயல்பட்டாலும் கூட இன்னும் ஏழைகள் ஏழைகளாகத் தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு பங்களாதேஷ் அமைக்கப்பட்டபோது மில் முதலாளிகள் நூல் விலையைத் தாறுமாறாக ஏற்றிவிட்டார்கள். பல ஆண்டுகளாக அவர்கள் எவ்வளவு லாபம் சம்பாதித்தார்களோ அதை எல்லாம்விட கடந்த ஆண்டு ஏராளமாகச் சம்பாதித்து விட்டார்கள். இதனால் கடந்த ஆண்டு நெசவாளர்கள் நூல் கிடைக்காமல் பெருத்த அளவுக்குக் கஷ்டப்பட வேண்டியிருந்தது.

நம்முடைய நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது. வேலை வாங்கித் தரவேண்டுமென்று எங்களிடம் தினசரி வருகிறார்கள். தனிப்பட்ட பலசரக்குக் கடைகளிலோ, தனியார் ஸ்தாபனங்களிலோ வாங்கிக் கொடுக்கட்டுமா என்று கேட்டால் வேண்டாமென்று சொல்லுகிறார்கள். சர்க்காரில்தான் வேலை வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இன்றைக்குத் தனிப்பட்ட முறையில் வியாபாரம் செய்தால் பலவிதமான கஷ்டங்கள், கான்பறுத்தல்கள் இருக்கின்றன. சர்க்கார் வேலையில் நுழைவதற்குக் கஷ்டம் இருந்தாலும் நுழைந்துவிட்டால் அதிகபட்ச



1974 சனவரி 23] [திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்]

ஊதியம் பெறலாம் என்ற நம்பிக்கை இருக்கிறது. பணக்காரர்களாக இருந்தாலும் கூட தொழில் செய்ய ஆர்வம் இல்லை. தனிப்பட்டவர்கள் தொழிலில் ஈடுபட சர்க்கார் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும். படித்த எஞ்சினியர்கள் அவர்களுக்கு என்று சங்கம் அமைத்து சர்க்கார் நிதி உதவி பெற்று தொழில்களில் ஈடுபட வேண்டுமென்ற முறையில் திட்டம் வகுத்திருக்கிறார்கள். சர்க்கார் உத்தியோகத்துக்கு வராமல் அப்படித் தனியாகத் தொழில் செய்ய முன் வருகிறவர்களுக்கு எந்த அளவுக்கு அதிகமான உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு உதவி செய்வதைச் சர்க்கார் கொள்கையாக வகுக்க வேண்டும். அப்போதுதான் ஓரளவு வேலையில்லாப் பிரச்சினை தீரும்.

பல கட்சிக்காரர்களும் தொழிலாளர்களைக் காப்பாற்றுகிறோம் என்று சொல்லுகிறார்களே தவிர, ஏழைகளுக்கு உதவி செய்ய எந்தக் கட்சியும் இல்லை. ஆர்கனைஸ்டு லேபரர்களாக மாதம் 200, 300, 400 ரூபாய் என்று வாங்கக்கூடியவர்களைப் போராட்டம் செய்யத் தூண்டுகிறார்களே தவிர, தனிப்பட்ட இடங்களில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களின் வாழ்க்கையை உயர்த்தக்கூடிய போராட்டங்களைச் செய்ய முன்வரவில்லை. மாதம் 250 ரூபாய்க்குக் குறைவாக சம்பளம் பெறக்கூடிய தொழிலாளர்களுக்கு உதவி செய்ய சர்க்கார் ஒரு திட்டம் கொண்டுவர வேண்டும்.

நெசவாளர்களில் பெரும்பாலோர் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஆண்டு நூல் கிடைக்கவில்லை. தொழிலமைச்சர் அவர்கள் நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்றால் ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அவர்களைக் கூட்டுறவின் கீழ்க் கொண்டு வந்து வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டும். அதற்காகப் பல கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைப்பது சர்க்கார் கொள்கை என்று தெரிவிக்கிறார்கள். ஆனால் போதிய பணம் கொடுப்பதில்லை. கன்கரன்ஸ் கிடைக்காமல் ஆரம்பப் பணிகளாகவே இருக்கின்றன. ஒரு வருஷத்திற்கு எவ்வளவு டர்ன் ஓவர் என்று பார்த்து அதில் 25 சதவிகிதந்தான் கடன் வழங்கப்படுகிறது. சென்ற ஆண்டு நூல் கிடைக்காதபோது தறிகள் சரியாக வேலை செய்யவில்லை. இந்த மாதிரி சந்தர்ப்பங்களில் பாங்கில் டர்ன் ஓவரைக் காட்ட முடியாமல் போகிறது. அதனால் அவர்கள் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். தொழிலாளர்களுக்குக்

கஷ்டம் ஏற்படுகிறது. திரு. சந்தானம் கமிட்டி அறிக்கையில் தெளிவாகச் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். சர்க்கார் கொள்கைப்படி எல்லா நெசவாளர்களையும் கூட்டுறவில் கொண்டு வரவேண்டுமென்றால் அதிகப் பணத்தை ஒதுக்கவேண்டும். வங்கியில், டர்ன் ஓவர் இருந்தால்தான் பணம் கொடுப்போம் என்று சொல்லக்கூடாது. 45 சதவிகிதம், 50 சதவிகிதம் கடனாகத் தர வேண்டும். இவ்வாறு சிபாரிசு செய்திருக்கிறார்கள். இப்போது கூட்டுறவு ஸ்தாபனத்தில் இருக்கக்கூடிய நெசவாளர்கள் 100-க்கு 30 பேர்தான். 70 பேர் வெளியே தனிப்பட்ட மாஸ்டர்களிடம் வேலை பார்க்கிறார்கள். அவர்களுக்கு எந்தவித உதவியும் செய்ய தற்போது திட்டமில்லை. பொருள் உதவி செய்ய பினான்ஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அது மாத்திரம் போதாது. அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடிய ஒரு திட்டத்தையும் கொண்டு வரவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

நார்ப்பட்டு நம்முடைய மாநிலத்திற்குச் சரிவரக் கிடைப்பதில்லை. பம்பாயில் ரீஜனல் கமிட்டி என்று அமைத்திருக்கிறார்கள். அந்தக் கமிட்டியில் நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் இல்லை. மில் ஓனர்ஸ் நார்ப்பட்டு கிடைக்கும்போது கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்ற நிலை இல்லை. வாலண்டரி ஸ்கீம் என்று சொல்லி இஷ்டப்படி கொடுக்கிறார்கள். அதுவும் சரியாக வருவதில்லை. நெசவாளர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்றால் இல்லை. ஏற்கனவே வாங்கி வரக்கூடிய வணிகர்கள் அதை அப்படியே வாங்கி பம்பாய் மாநிலத்திலேயே அதிக விலைக்கு விற்று விடுகிறார்கள். அக்ரிமென்ட் டிசம்பர் மாதத்தோடு தீர்ந்து விடுகிறது. அரசே எல்லா நார்ப்பட்டையும் வாங்கி நெசவாளர்களுக்கு நேரடியாகப் போய்ச்சேர வழி செய்யவேண்டும். கார்டுகள் வழங்கி விநியோகம் செய்வதாக அறிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் உண்மையான நெசவாளர்கள் கார்டுகளைப் பெற்றிருக்கிறார்களா என்பதையும் கண்காணித்துக் கொள்ளவேண்டும். பல பேர் கார்டுகளை வாங்கி லாபத்திற்கு விற்பது சகஜமாக இருக்கிறது. தவறு நடந்தால் கோர்ட்டு மூலமாகத் தண்டிக்கப்பட வேண்டுமென்ற நியதி ஏற்படுத்த வேண்டும்.





பத்துப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு, பணி புரிபவர்களுக்கு ஏராளமாகக் கட்டடங்கள் கட்டினார்கள். இப்போது கட்டடங்கள் மிக மிகத் தேவை. மதுரை போன்ற நகரங்களில் வீட்டு வாடகை மிக அதிகம். தறி போட வேண்டுமென்றால் இவ்வளவு சதுர அடி இடம் நிச்சயமாகத் தேவை என்ற நிலை இருக்கிறது. அவ்வளவு இடத்திற்கு 70, 80 ரூபாய் வாடகை சொல்லுகிறார்கள். ஆகவே, நெசவாளர்களுக்கு சப்சிடைஸ்டு ரென்டில் வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. வெ. கரிவேங்கடம் :** பெருமதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னால் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் 129 கோடி ரூபாய் அளவிற்கு சிறு, நடுத்தரப் பாசன வசதிக்காக அவ்வளவு பெரிய தொகையை ஒதுக்கியிருந்தார்களா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. ஒவ்வொரு ஆண்டு நிதிநிலை அறிக்கையை அல்லது ஆளுநர் உரையை எடுத்துப் புரட்டிப் பார்த்தால் ஒரு பத்து அல்லது பதினைந்து கோடி ரூபாய் அளவிற்கு சிறு, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக ஒதுக்கியிருந்தார்களே தவிர பெருமளவிற்கு, 129 கோடி ரூபாய் அளவிற்கு அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் விவசாயத்தை உன்னிப்பாகக் கவனித்து ஒதுக்கியது கிடையாது. ஆகவே விவசாய விருத்தியும் இல்லை. உணவு உற்பத்தி கூடுமளவிற்கு அல்லது நம் தேவையைப் பூர்த்தி செய்துகொள்கிற அளவிற்கு உணவு உற்பத்தியும் இருந்ததில்லை. அதற்கு மாறாக மின் ஒளி விஸ்தரிப்புத் திட்டம், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு நிதிஒதுக்கீடு செய்து அத்திட்டங்களை எல்லாம் விரைவில் நிறைவேற்றுகிற நல்லதொரு நிர்வாக இயந்திரமும் இருந்த காரணத்தினால் தமிழ்நாடு தன்னிறைவு பெற்று உபரி மாநிலமாக ஆகி அண்டை மாநிலங்களான மைசூர், ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்கள் எல்லாம் அவர்கள் கேட்கிற அளவிற்கு உணவுப்பொருள் வழங்குகிற தன்மையை இப்போது காண்கிறோம். நம்முடைய அமைச்சரவை,

[திரு. மா. வெ. கரிவேங்கடம்] [1974 சனவரி 23

குறிப்பாக விவசாயத் துறை, செலுத்திய நாட்டம் காரணமாக, நில அபிவிருத்திக் கடன்கள் ஏராளமாக வழங்கியதால் விவசாயிகளிடையே ஒரு மறுமலர்ச்சியை, ஒரு நல்ல உணர்ச்சியை ஏற்படுத்தியதன் விளைவாகத்தான் நம் மாநிலம் இன்று ஒரு உபரி மாநிலமாக இருக்கிறது என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். அந்த வேகம் குன்றிவிடாத அளவிற்கு, குறையாத அளவிற்கு கூடுதலாக சிறப்புப் பாசனத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டுக்குரியது.

அடுத்து, உரத் தட்டுப்பாடு அல்லது குறைவு இருக்கிற தன்மையைக் காண்கிறோம். மாநில அரசைப் பொறுத்தவரையில் அதை நீக்குவதற்குரிய வகையில் அதற்கான வழிவகைகளை ஆராய்ந்து சொல்லியிருக்கிறது என்பதோடு கூட மாநில அரசுக்குள்ள அதிகார வரம்பிற்குள் அல்லது நிதிவசதியின் அடிப்படையில் அந்த உரத் தட்டுப்பாட்டை நீக்க முடியுமா என்றால் இன்றைய அரசியல் சூழ்நிலையில் அது முடியாது, மத்திய அரசு நம் உதவிக்கு வந்தேயாகவேண்டும் என்ற தன்மையைச் சுட்டிக்காட்டி மேலும் நம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக மத்திய அரசின் உதவி தேவைப்படுகிறது, உர ஒதுக்கீடு நமக்கு அதிகமாகத் தேவைப்படுகிறது என்பதும் ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அடுத்தாற்போல் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம் மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி எந்த அளவிற்குக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் ஆளுநர் அவர்கள் தம் உரையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதை ஆதரித்து மத்திய அரசிடம் வாதாடுகிற முறையில் மத்திய அரசின் ஓரவஞ்சனையை அல்லது மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடந்து கொள்கிற தன்மையை தங்கள் உரையில் எடுத்துக் காட்டுவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் யாரும் அப்படி எடுத்துச் சொன்னதாகத் தெரியவில்லை. ஆளும் கட்சியானாலும், எதிர்க்கட்சியானாலும் எல்லோரும் சேர்ந்து நம் மாநிலத்தின் முன்னேற்றத்திற்கு மத்திய அரசு முட்டுக்கட்டை இட்டால், மத்திய அரசு உதவ மறுத்தால் அதைக் கண்டிக்கிற மனப்பான்மை ஆளும் கட்சிக்கும் இருக்கவேண்டும், எதிர்க்கட்சியினருக்கும் இருக்க வேண்டும். எதிர்க்கட்சிக்காரர்கள் ஏன்



1974 சனவரி 23] [திரு. மா. வெ. கரிவேங்கடம்]

அப்படி இல்லை என்பதைப்பற்றி யோசிக்கும்போது, இவர்கள் எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும், குறை இருந்தால் இந்த ஆட்சியைக் குறை சொல்லலாம், நிதி இல்லாமலிருந்தால் வேண்டிய வசதிகளை இவர்களால் செய்யமுடியாது என்ற மனப்பான்மையில்தான் அவர்கள் கண்டிக்கவில்லை என்று நாம் நினைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அடுத்தாற்போல் சிறிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காக நிறைய ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்று நான் சொன்னேன். குறிப்பாக நம் மாநிலத்தை எடுத்துக்கொண்டால் தர்மபுரி, இராமநாதபுரம் மாவட்டங்கள் வறட்சியான நிலையில் மற்ற மாவட்டங்களோடு விவசாயத் துறையில், கல்வித் துறையில், மற்ற மற்றத் துறைகளில் சமமான மாவட்டங்களாக இருக்கின்றனவா என்று பார்த்தால் இல்லை. மற்ற மாவட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எல்லாத் துறைகளிலும் பிற்போக்காகத்தான் இருக்கின்றன இந்த மாவட்டங்கள். ஆகவே இதற்காக நம் முதல் அமைச்சர் அவர்கள் மத்திய அரசோடு வாதாடி சிறப்பு நிதியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு கோடி ரூபாய் பெற்றுத் தந்தார்கள். அந்த இரண்டு கோடி ரூபாயில் இந்த மாவட்டங்கள் முன்னேற முடியுமா என்று கேட்டால் இல்லை. சிறு நடுத்தரப் பாசனத் திட்டங்களை நிறைவேற்றித் தர அரசு திட்டமிடுகிற நேரத்தில் இந்த மாவட்டங்களுக்காக தனியாக சாதாரணத் திட்டங்களில் கூட தனியாக சில திட்டங்களை எடுத்து அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏறத்தாழ இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், தர்மபுரி மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதிகள் எங்கெங்கு இருக்கின்றன என்று ஆய்வு எல்லாம் செய்யப்பட்டு 67 சிறிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அரசின் பரிசீலனைக்கு வந்தன. அவைகளில் ஐந்தாறு திட்டங்கள்தான் எடுக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. மீதி உள்ள திட்டங்களில் குறைந்தது பத்து திட்டங்களையாவது இந்த ஆண்டு எடுத்து நிதி ஒதுக்கீடு செய்து அவைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்து மிகப் பிரத்தியட்சமான, அனுபவ ரீதியான ஒரு முடிவை நம் முதல் அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள். ஜமீன், மிட்டா இருந்த இடங்களில் இருக்கிற ஏரிகள், குளங்கள், கண்மாய்கள் எல்லாம் பழுதுபார்க்கப் படாமல் எப்படி இருந்ததோ அப்படியே விடப்பட்ட நிலைமையில் இருக்கின்றன. அதற்காகத் தனிக் கவனம் செலுத்தி நிதி ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டுக்குரியது. தர்மபுரி மாவட்டத்திலுள்ள முக்கால் பகுதி நீர்ப்பாசன வசதிகளும் ஜமீன், மிட்டாப் பகுதிகளில் உள்ளனவாக இருக்கின்றன. ஆகவே இந்த நிதி ஒதுக்கீடு அவற்றிற்கு பெரிதும் பயன்படும். அடுத்து, சின்னாறு நீர்த்தேக்கம் திட்டத்தை தர்மபுரி மாவட்டத்தில் 107 லட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றுவதற்கு ஒரு உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டு கடந்த மூன்று ஆண்டுகளாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்த 107 லட்சம் ரூபாய் மதிப்பீடு மாறி இன்றைய நிலையில் அதற்கு 170 லட்சம் ரூபாய் செலவாகும் என்று திருத்த மதிப்பீடுகள் போடப்பட்டிருக்கின்றன. இந்தக் கால தாமதத்திற்குக் காரணம் என்னவென்றால் அணைப் பகுதியில் மாரண்டஹள்ளியில் இருந்து 500, 600 ஆள்கள் செல்லவேண்டும், அதற்கான சிமெண்ட் போன்றவை செல்லவேண்டும். அப்படிச் செல்கிற வழியில் சின்னாறு வருகிறது. குறுக்கே மேம்பாலமும் இல்லை. அப்படி ஒரு மேம்பாலம் இல்லாத காரணத்தினால் வெள்ளக் காலத்தில்—ஆண்டுக்கு மூன்று மாதங்கள் நான்கு மாதங்கள் வெள்ளம் இருக்கிற நிலையில்—வேலை தடைப்படுகிறது. அப்படி வேலை தடைப்படுவதன் காரணமாக அதை நிறைவேற்றுகிற காலம் நீட்டிக்கப்படுகிறது. அதன் காரணமாக 107 லட்சம் ரூபாய் என்பது 170 லட்சம் ரூபாயாக அதிகரித்திருக்கிறது. மூன்று ஆண்டுக் காலமாகியிருக்கிறது. திட்டம் இன்னும் நிறைவேறியபாடில்லை. அந்த அணைக்குக் கீழே பல சிற்றாறுகள் வருகின்றன. அணை கட்டிய பின்னாலும் கூட அங்கு ஒரு மேம்பாலம் கட்டினால்தான் எல்லா மக்களுக்கும் பயன்படும். (மணியடிக்கப் பட்டது.)

திட்ட அதிகாரிகள் 107 லட்சம் என்பது 170 லட்சம் ரூபாயாக உயர்ந்து விட்டதால் மேம்பாலம் போட முடியாது, தார் பாதை போட முடியாது என்று சொல்கிறார்கள். இதை நெடுஞ்சாலைத் துறையினர்தான் எடுத்துச் செய்யவேண்டுமென்கிறார்கள். இந்த



நிதி ஆண்டிலாவது அதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அந்த ஆக்கப் பணிகளைச் செய்யவேண்டும். முதல் அமைச்சர் அவர்கள் அதற்கு கால்கோள் செய்ய வருவதாக ஒப்புதல் அளித்து தவிர்க்க முடியாத காரணத்தினால் வரமுடியவில்லை. இன்னும் ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுக் காலத்தில் அத்திட்டம் முடிவடையும் நிலையில் இருப்பதால் முதல் அமைச்சர் அவர்கள் அங்கு வருகிறபோது அந்த மேம்பாலமும், தார் ரோடும் இருக்கவேண்டும். அதற்குரிய வகையில் நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும். (மணியடிக்கப் பட்டது). அதோடு தர்மபுரி மாவட்டத்திற்கு மருத்துவ மனை ஒன்றுக்கும் நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

*பின்னர், பேரவை 1.30 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.*

## 4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

52. Notification issued with G.O. Ms. No. 593, Home, dated the 3rd March 1973 in regard to exemption from payment of tax in respect of a tractor and trailer transferred from CARE, Tamil Nadu to Muthiah Polytechnic, Chidambaram. [Laid on the table of the House under section 11 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1931 (Tamil Nadu Act III of 1931).]

53. Notification issued with G.O. Ms. No. 2033, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Walajapet Local Planning Area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1973). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

54. Notification issued with G.O. Ms. No. 1898, Rural Development and Local Administration, dated the 12th September 1973 in regard to inclusion of the Public Works Department Circuit House and the approach road area within the jurisdiction of the Courtallam Township. [Laid on the table of the House under section 4 (3) of the Courtallam Township Act, 1954 (Tamil Nadu Act XVI of 1954).]

55. Notification issued with G.O. Ms. No. 2035, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Attur Local Planning Area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

56. Notification issued with G.O. Ms. No. 2034, Rural Development and Local Administration, dated the 20th September 1973 in regard to preliminary notification for declaration of the areas forming the Ranipet Local Planning Area under the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972). [Laid on the table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).]

*B. Reports, Notifications and other papers.*

'Nil'.

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution. (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below:—

| | | |
|---|---|---|
| A.M./Ad Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) | ... | Celling Attention Statement. |
| Consid. | ... | Consideration stage of<br>This stage includes<br>(i) Motion to refer<br>Joint Select |

(ii) Amendment to refer to Select|Joint Select Committee.

(iii) Amendment to circulate.

(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.

(v) Amendment to re-commit to Select/Joint Select Committee, etc.

| | | |
|---|---|---|
| Consid. Cl. | .. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. | ... | Demand for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | . | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

Tenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

18th, 19th, 21st, 22nd and 23rd January 1974.

(Volume XLVI (Nos. 1 to 5)

## A


PAGES

ABDUL JABBAR, THIRU V. M. :

Governor's Address, (M) ... ... 406—412

Kudakanaru Scheme ... ... 235—236

Alleged rape and dealth of Mrs. Fathima Begum in Kumarapalayam in Salem District and its consequences. (A.M.) ... ... ... ... 252

ACT(s) :

Gift Goods (Unlawful Possession) Act, working .. 537—538

ADITANAR, THIRU Si. PA. :

Governor's Address (M). ... ... ... 421—423, 434—435, 457, 458

ADAYAR (River) Development Scheme .. .. 60—61

PAGES

A—*Cont.*


AGRICULTURE:

Consultancy Service .. .. .. .. 70—71

Intensive Cotton Development Programme .. .. 71

Tapioca production .. .. .. .. 72

ALAGARSWAMY, THIRU S.:

Governor's Address (M) .. .. .. 89, 454—461

Sugar, distribution in Tirunelveli district ... 525—527

ALDA FOWLER, THIRUMATHI M.:

Governor's Address (M) ... 438—441

ANANDANAYAKI, THIRUMATHI T. N.:

Governor's Address (M) ... ... 87—88, 122, 153—167, 322, 423, 456—457

Mini-buses, introduction, .. .. .. 379

ARUMUGAM, THIRU A.:

Governor's Address (M) ... ... ... 449—454

B

BALASUNDARAM, THIRU V.:

Governor's Address (M) ... ... ... ... 291—297

Harijans, trustees of temples .. .. .. 83—84

Railway lines, conversion .. .. .. .. 511—513

Rice, request of Kerala Chief Minister .. .. 366—372

Vadapalani temple extension .. .. .. 84

BEGGAR(S):

Rehabilitaiton Centre .. .. .. .. 46—50




PAGES

B—*cont.*


BILL(S):

City Municipal Corporation and District Municipalities (Amendment and Extension of Term of Office) Amendment Bill, 1974. Int. .. .. 260

Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1974. Int. 539

Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Amendment Bill, 1974. Int. ... 259

Public Men (Criminal Misconduct) Amendment Bill 1974. Int. ... 539

BOMMAN, THIRU K. H.:

Dasanit customs duty .. .. .. .. 520, 521

Governer's Address (M) ... 176—180

BRIDGES AND CULVERTS:

Bridge across Rajasingamangalam kanmoi ... 59—60

Bridge across Vadavaru and Vattaru .. ... 244—245

Causeway across Araniyaru ... 360—361

Dam across Varataru ... ... 356

Dam near Sulagiri village ... 356—357

Head sluice, Kadambakulam ... 357

Overbridge, Thiruppuvanam channel ... ... 243—244

Regulator across Mudavanar ... 355—356

BUS-STAND:

Ammur town panchayat ... 247—248

PAGES

## C

**CEMENT:**

Allotment for Madras City. ... 67—68

*Rulings and Observations:*

*Adjournment Motions:*

*Alleged rape and death of Mrs. Fathima Begum, at Kumarapalayam in Salem district and its Consequences :*

Consent was withheld in the light of the explanation given by the Hon. Chief Minister ... 252—259

*Allegations:*

Allegations should be specific and not of a general nature. ... ... ... 435

On 19th January 1974, the Chair reiterating the decision taken in the last sittings, appealed to the Members to observe the procedure agreed upon while making allegations against one another, so that the dignity of the House could be kept up. 175—176

*Debate:*

*Allotment of time.* cv

Time was allotted to each party and each member and no discrimination could be shown as between Members. He also added that the time allotted to a party could not be given to a Member of that party alone. The allotment of time was done at the discretion of the Chair and not as per the decision of a party ... 398—399

*Limitation :*

While the Members enjoyed the privilege to speak in the House it had to be confined to a certain limit and should not cross that limit ... 554



PAGES

## D—*Cont.*

**DECORUM**

*Attribution of motives to Judges :*

While comments about a Judgment might be in order, it was not in order to attribute motives to Judges, and Members' speeches should not reflect upon the conduct of any Court of Justice. So, certain remarks made by a Member which attribution of motive were ordered to be expunged by the Chair .. .. .. .. 553—560

## E

**EXPRESSIONS USED IN THE HOUSE**

காட்டுமிராண்டி விளையாட்டு 'Barbarous game'—used by a Member to describe ஜல்லிக்கட்டு (Jallikkattu)—Deprecated. ... 120—122

Personal explanation should be made then and there .. 174

*Point of Order:*

A Member of the Ruling Party, rising on a point of personal explanation, referred to the accusation made by an Opposition Member against him personally, earlier in his speech.

Then another Opposition Member, rising on a point of order, stated that the personal explanation should be made as soon as a reference was made about him and it could not be raised as an afterthought after two or three speeches.

The Chair observed that it was not necessary that it should be made then and there.

He added that there was an apprehension in the mind of the Member of the Ruling Party that the Press might black out one version and publish the other version only. So, he appealed to the Press to Publish the whole matter giving prominence to all its aspects. .. 174—176

Pages.

C—*cont.*


CHAIR—*cont.*

*Ruling party Member's remark that particular* Point of Order—(*cont.*)

Ruling party Member's remark that particular *adjournment motion had been disallowed by the* Speaker.

When an Opposition Member referred to a particular incident in Kumarapalayam in his speech, a Member of the ruling party raised a point of order whether the former could raise the matter in the House in view of the fact that the notices of adjournment motions on the subject had already been rejected by the Speaker.

Thereupon points of order were raised questioning the propriety of the ruling party Member's informing the House that the adjournment motions has been disallowed

The Chair observed that information could be furnished to the House if it was useful to the debate and there was nothing wrong in it but if it was intended to divert the attention of the House, then it was not proper to do so.

The Chair also observed that it was not in order to insinuate that this speaker had passed on the information *

The Chair added that that was not a State secret and there were so many reasons for the rejection of an adjournment motion. If it related to a criminal act, it was better that it was not raised at all. So he advised the Members just to make a passing reference to it and not mention the names of the persons involved in the matter ... 141—145

*Press*:

On 19th January 1974, the Chair appealed to the Press to accord equal importance to the publication of both the allegation made by a Member and the denial thereto by another. .. .. 176

COLLEGE(S) :

Aided—, auditing of accounts ... 532—533




PAGES

C—(*cont.*)


COLLEGES—*cont.*

Chingleput Medical—Medical Council's recognition 224—228

College for Hosur ... 533—536

Government Engineering—Electro-Chemical Engineering Course ... 222—223

Teaching staff, special pay. ... 222

COMMISSION(S) :

Administrative Reforms Commission, working .. 497—499

COMMITTEE(S)

Tamil Nadu History Committee, Completion of work ... ... 215—221

CONFERENCE(S) :

Panchayat Unions and Panchayat Boards staff demands, ... ... ... ... ... 358—360

COURTS

Advocates, fees, enhancement ... 242—243

D

DAM (S):

Palaru near Pullur, .. .. .. .. 509

Pambarua near Audiyappanur, .. .. .. 509

DENNIS, THIRU N.,

Cheshire Home, Katpadi. ... 352

Chingleput Medical College, Medical Council's recognition ... 224—228

Electro-Chemical Engineering Course, Government Engineering Colleges. ... 222—223

Fertilizer Factories ... 61—66

Governor's Address (M) ... 469—473
540—543

PAGES

D—(cont.)

DENNIS, Thiru N.—*cont.*
Housing Board, revenue work ... 79—80
Labour Legal Advisory Cells, ... 249—251
Mangoes, export, ... 515—516
Nayagam, Tamil Music Research Academy, at—Tiruvarur, Grants .. .. .. .. 536
Pichavaram near Chidambaram. Tourist Centre, ... 384—385
Plantation workers. minimum wages. ... 251—252
Regulator across Muduvanar ... 355—356
Teachers' Quartehs x ... 80—82
Trainees in Sculpture ... 384
Tyres, shortage, ... 376—379
Vilathurai Lift Irrigation Scheme ... 352—354
Water supply, Dharmapuri District ... 232—233

DEVENDIRAN, Thiru A.
Tapioca, production ... 72

DHARMALINGAM, Thiru A.P
City Municipal Corporation and District Municipalities (Amendment and Extension of term of office) Amendment Bill, 1974 .. .. .. .. 260

DRAINAGE
Underground drainage, Tiruchirappalli Town, construction ... 505
Underground drainage schemes, loans for ... 503—505

DURAI GOVINDARAJAN, Thiru,
Bridge across Vadavaru and Varttaru ... 244—245
Governor's Address, (M) ... 549—553
561—563



PAGES

D—(cont.)

DURAISAMI, Thiru E. K.,
Governors Address, (M) ... 403—406
Cuddalore Port. ... ... 57
Governor's Address, (M) ... ... ... 168—173
Hospital, Tiruppur, building ... ... 41—47
Intensive Cotton Development programme ... 71
Tamil Nadu History, Committee ... 215—221

E

EDMUND, Thiru G.R..
consequences. Head sluice, Kadambakulam. ... 557
Alleged rape and death of Mrs. Fathima Begum in Kumarapalayam in Salem District and its Consequences. ... 252
(A.M.)
Statues of Caldwell and pope, (A.M.) ... 383—384

EMPLOYEES
Junior Engineers, regularisation, services ... 357—358

F

FACTORIES
Fertilizer. .. 61—66
Vanaspathy Factory for Tiruvannamalai. ... 373—374

FINE ARTS :
Nayanam, Tamil Music Research Academy at Tiruvarur, Grants. ... ... 536

FOOD GRAINS :
Hoarders ... 75—79
Wheat, allotment ... 521—522
Wheat, distribution ... 522—525

PAGES

F—(cont.)

FRUITS :
Jack, cultivation ... ... 520
Mangoes, export ... ... 515—516
Papayas, cultivation ... ... 517—519
Pine apple, research ... 516—517

G.

GOPAL, Thiru, K.P.
Governor's Address (M) ... 341—346
... 387—389

GRANTS :
Grants .. .. .. .. .. .. 223—224

GURU NANAK BHAVAN:
GURUSAMI, Thiru, N.V.,
Governor's Address (M) ... 432—438
Harijans Hostel, Rangasamudran High School ... 235
Housing Unit for Andipatti ... 82
Madurai — Kumule road, widening ... 510—511
Theni—Rajapalayam, plying of express buses ... 531
Union Dispensary at Andipatti, taking over by Government. ... 500—502

H

HAJ PILGRIMAGE :
Doctors and Nurses ... 350—351



PAGES

H—cont.

HANDE Dr. H.V.:
Cement; allotment for Madras City ... 67—68
Governor's Address (M) ... ... ... 88—89
394—403
Ruling Party Member informing the House that particular adjournment motion given notice of by by a Member of Opposition party had been disallowed (Point of order). ... 141—142
... 144—145

HANDLOOMS :
Bleeding Madras. ... ... ... 239—240

HARIJANS :
Trustees of temples ... ... ... ... 83—84
Hostel building at Ponparappi village ... ... 234—235
Own Hostel buildings Construction ... ... 233—234
Own Hostel for Rangasamudram High School .. 235

HARIJAN WELFARE :
Edoor Harijan colony, over-head water tank ... 507
Community Centre, Siruarada Harijan Colony ... 506

HIGHWAYS:
Ntional, Development ... 58—59

HOSPITALS & DISPENSARIES :
Union dispensary at Sengipatti taking over by Government ... ... 503
Psychiatric Clinics ... ... ... ... 42—43
Tiruppur Hospital, building. ... 41—42
Union Dispensary at Andipatti, taking over by Government. ... ... ... ... 500—502

HOTELS :
Prices of eatables .. .. .. .. 72—76

PAGES

H—*cont.*

HOUSING :
Special Scheme ... ... ... ... 527

HOUSING BOARD :
Unit for Andipatti ... ... ... ... 82
Revenue work .. .. .. .. .. 579—580

I

ILANGOVAN, THIRU G.:
Governor's Address (M) ... ... ... 586—589
Union dispensary at Sengipatti, taking over by Government ... ... ... ... ... 503

INDUSTRIES :
Marine Chemical .. ... ... ... 67

IRRIGATION :
Anicuts, Karuppanathi and Pilavukkal scheme ... 238
Anicuts, Nambiyaru Scheme ... ... 238
Kudakanaru Scheme ... ... ... ... 235—236
Peria Urani, deepening ... ... 239
Rajaneri Reservoir Scheme ... ... ... 237
Reservoir Scheme, Kolli Hills .. ... ... 236—237

J

JAMES, THIRU J.:
Colleges, special pay to, teaching staff .. .. 222
Governor's Address (M) ... ... 594—605

JOTHI VENCATACHELLUM—*Thirumathi* :
Governor's Address (M) ... ... ... ... 273—284



PAGES

K

KADHER BATCHA ALIAS VELLAICHAMI, Thiru :
Governor's Address (M) ... ... ... 336—341

KALIMUTHU, THIRU K.
Obituary reference to Periyar Thiru E. V. Ramasamy (R) .. ... .. .. .. 11—12

KANDAPPAN, THIRU S.:
Governor's Address (M) ... ... ... 559—560
Personal explanation *re* allegation about him by Thiru C. V. Velappan, M.L.A. ... ... 174—176

KANDASAMY, Manali THIRU C.
Obituary reference to Periar Thiru E. V. Ramasamy (R) .. .: .. .. .. 25—27

KANDASAMY, THIRU K.:
Governor's Address (K) ... ... ... 418—421, 423, 424—427

KARIVENGADAM, THIRU M. V.:
Alleged rape and death of Mrs. Fathima Begum in Kumarapalayam in Salem district, and its consequences (A.M.) ... ... 258—259
Governor's Address (M) ... ... ... 611—615

KARTHEESAN, THIRU V.
Anicut, Nambiyaru Scheme ... ... 238
Periya Urani, deepening ... ... 239

KARUNANIDHI, DR. M.
Alleged rape and death of Mrs. Fathima Begum in Kumarapalayam in Salem district, and its consequences (A.M ) .. .. .. .. 258—259
Governor's Address (M) ... ... ... 122, 123, 124, 324, 342, 343, 345.346 554—555
Obituary reference, Periyar Thiru E. V. Ramasamy (R) .. .. .. .. .. 28—31
Public Men (Criminal Misconduct) Amendment Bill, 1974 ... ... ... ... 539

PAGES

K—*cont.*


KITTAPPA, THIRU N.

| | |
|---|---|
| Anicuts, Karuppanadhi and Pilavukkal schemes ... | 238 |
| Beggar Rahabilitation Centres ... ... | 46--50 |
| Headlights of motor vehicles ... ... | 374—376 |
| Hotels, Prices of eatables ... ... | 72--75 |
| Jack fruits, cultivation ... ... ... | 520 |
| Kudakanaru scheme, ... ... ... ... | 235—236 |
| Legislaturs, Medical expenses. ... ... ... | 228 |
| Mayuram — Pungavur route, opening ... | 531 |
| Mid—day meals scheme, Coimbatore district ... | 506 |
| Rice, supply to Kerala, ... ... ... | 365—366 |
| Slum clearance scheme for Madurai ... ... | 528 |
| Temples, executive officers .. .. .. .. | 83 |
| Tyres, shortage ... ... ... ... ... | 376—379 |
| Underground Drainage Schemes, loans ... ... | 503—505 |
| Wheat, allotment ... ... ... ... | 521--522 |

KOTHANDARAMIAH, THIRU K.S.,

| | |
|---|---|
| Dam near Sulagiri village, ... ... | 356—357 |
| Governor's Address (M) ... ... ... | 605—607 |
| Construction of shed, Primary Health Centre, Bagalur ... ... ... ... ... | 349—350 |

KRISHNAMOORTHI, THIRU V.,

| | |
|---|---|
| Governor's Address (M), ... ... ... | 424, 456<br>543--549 |

KUMARASAMI, THIRU K. N.,

| | |
|---|---|
| Governor's Address (M), ... ... | 422,<br>572--575 |
| Housing, Special Scheme, ... ... ... | 527 |




PAGES

M


KUMARASAMI, THIRU K. N.—*cont.*

| | |
|---|---|
| Psychiatric Clinics ... ... ... .... | 42—43 |
| Small scale Industries, Loans ... ... ... | 66 |

LABOUR :

| | |
|---|---|
| Labour Welfare fund, ... ... ... | 248—249 |
| Legal Advisary Cells, ... ... ... | 249—251 |

LATHEEF, THIRU M.A.,

| | |
|---|---|
| Alleged rape and death of Mrs. Fathima Begum in Kumarapalayam in Salem District and its consequences. (A.M.) ... ... ... ... | 253—255 |
| Governor's Address (A) ... ... ... ... | 15—416<br>559,<br>563—569 |

LEGISLATORS.

| | |
|---|---|
| Medical expenses, ... ... ... ... | 228 |

LOANS :

| | |
|---|---|
| Small Scale Industries, ... ... ... ... | 66 |

MADHAVAN, THIRU S.

| | |
|---|---|
| Governor's Address (M) ... ... ... | 322,<br>323,324,<br>325,326,<br>327,328,<br>329 |
| Occupants of Kudiyiruppu (Conferment of ownership) Amendment Bill, 1974. ... ... | 259 |

MALAIKKANNAN, THIRU V.

| | |
|---|---|
| Bridge across Rajasingamangalam Kanmoi. ... | 59—60 |
| Governor's Address (M) ... ... ... | 148—153 |

PAGES

M—*cont.*


MARIMUTHU, THIRU A. R.
Obituary reference, Periar Thiru E. V. Ramasamy (R) 18—20

MARUDACHALAM, THIRU N.
Governor's Address (M) ... ... ... 298—301

MID-DAY MEALS:
Coimbatore district ... ... 506

MINES AND MINERALS :
Coal, survey, ... ... 242

MINI-BUSES :
Introduction, ... ... ... ... 379

MOHOMED KATHER MOHIDEEN, THIRU S.
Alleged rape and death of Mrs. Fathima Begum in Kumarapalayam in Salem District and its consequences. (A.M.) ... ... ... ... 252

MOIDEEN, THIRUPPUR THIRU A. M.
Obituary reference, Periar Thiru E. V. Ramasamy (R) ... 14—18

MOTION(S) :
*Ad Motion*:
Alleged rape and death of Mrs. Fathima Begum at Kumarapalayam and its consequences ... 252—259
Governor's Address, Motion of Thanks ... ... 85—183, 260—346, 387—473, 540—615

MOTOR VEHICLES :
Headlights, ... ... ... ... 374—376

MUNUSWAMY, THIRU R.R.
Adyar river, development ... ... 60—61




PAGES

M—*cont.*


MUNUSAMI, THIRU R. R.—*cont.*
Governor's Address (M) ... ... ... 413—414, 416—417
Guru Nanak Bhavan, Grants ... ... ... 223—224
Hoarders ... ... ... 75—79
National Highways, development ... 58—59
Papayas, cultivation ... ... ... ... 517—519
Pineapple, research ... ... ... ... 516—517
Rice supply to West Bengal ... ... ... 363—365
Secretariat, district training for Section Officers 499—500

MUTHUSELVAN, THIRU P. S.
Governor's Address (M) ... ... ... 428—432


## N


NACHIAPPAN, THIRU A.M.T.,
Governor's Address (M) ... ... ... 576—579

NACHIAPPAN, THIRU N.
Vanaspathy Factory for Tiruvannamalai ... ... 373—374

NARAYANASAMY, MANNAI, THIRU P.—
Governor's Address (M) ... ... ... 119—120, 157, 158, 159, 161, 162, 461, 596—597, 598—599

NARAYANASAMY, THIRU M. V.—
Governor's Address (M) ... ... ... ... 273—278

PAGES

N—*cont.*


NEDUNCHEZHIAN, DR. V. R.:

Answer to a Supplementary Question, correction (St.), ... ... ... ... 385—387

Obituany reference, Periar Thiru E. V. Ramasamy (R) 2—9

O

OBITUARY REFERENCE:

Abdul Rahiman, Thiru ... ... ... ... 1—2

Mohamad Abdul Salam, Thiru ... ... ... 1—2

Naidu, Thiru G. D. ... ... ... ... 1—2

Ramasamy, Periar Thiru E. V. (R) ... ... 2—31

Vinayakam, Thiru K. ... ... ... ... 1—2

OFFICE(S) :

Executive Engineer's office, Ground Water Engineering Division, Tirunelveli district ... ... 513—514

OILS :

Diesel, supply ... ... ... ... ... 528—529

ORPHANAGE :

Cheshire Home, Katpadi .. .. .. 352

P

PALANISAMY, THIRU N. K.

Agricultural Consultancy Service ... ... 70—71

Diesel oil, supply ... ... ... ... ... 528—529

Fertilizer Factories ... ... ... ... 61—66

Governor's Address (M) ... ... ... 90, 332—336




PAGES

P—*cont.*


PALANISAMY, THIRU N. K.—*cont.*

Hoarders ... ... ... ... ... 75—79

Hotels, prices of eatables ... ... ... 72—75

Marine Chemical Industries ... ... ... 67

Panel of Chairmen (Ann.) ... ... ... 85

PAPERS LAID ON THE TABLE—

Administrative Reforms Commission's report on District Revenue and General Administration ... 348

Administrative Reforms Commissions report on Panchayat Development Administration ... 348

Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969—Notification ... ... 33

Agricultural Produce Markets Act, 1959—Notification ... ... ... ... ... 34, 35, 39, 347

Amendment to Schedule II to the Workmen's Compensation Act, 1923—Notification ... ... 39

Cement Distribution (Licensing and Regulation) Order, 1973—Notification ... ... ... 40

Central Sales Tax (Tamil Nadu) Rules, 1957, amendments, Notification ... 474

Courtallam Township Act, 1954, Notification ... 616

Defence Industries Project, Avadi, note on water supply and loss ... ... ... ... 184

District Municipalities Act, 1920, Notification ... 31, 32, 34, 474

Entertainments Tax Act, 1939—Notification ... 36, 183

Essential Articles Control and Requisition (Temporary Powers) Amendment Ordinance, 1974 ... 184

Excise Act, 1971—Notification .. 34

PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Export Committee on Handloom Industry, report ... 348

General Sales Tax Act, 1959 — Notification ... 32,33, 34,36.

Governor's address to the Member's of the Legislature on 17-1-74. ... 40

Indian Stamp Act 1899, Notification. ... 39, 40, 184

Industrial Investment Corporation Ltd.—Twenty-fourth Annual Report and Statement of Accounts for the year ended 31—3—73 and Tamil Nadu Government's review ... ... 39

Kanyakumari Sreepadam Lands (Abolition and Conversion into Ryotwari) Act, 1972, Notification 32

Khadi and Village Industries Board Act, 1959—Notification. ... 32

Mettur Township Act, 1940—Notification. ... 474

Motor Vehicles Taxation Act, 1931—Notification 474 615

Tan India Wattle Extracts Co. Ltd., Statement on PAC recommendation ... ... 184

Textile Corporation Limited—Fourth Annual Report and Statements of Accounts 1972 and Tamil Nadu Government's Review ... ... 39

Town and Country Planning Act, 1971—Notification ... ... ... ... ... ... 35, 36 37,38 347,474 615,616

Urban Land Tax Act, 1966 — Notification. ... 34,



PAGES

P—*cont.*

PAPER LAID ON THE TABLE—*cont.*

Weights and Measures (Enforcement) Act, 1958, Notification. ... ... ... 347

PARANDHAMAN, THIRU A.—

Bleeding Madras. ... ... ... ... 239-240

PERSONAL EXPLANATION—

Personal explanation by Thiru S. Kandappan on allegation made against him by Thiru C. V. Velappan, M.L.A. ... ... ... 174—176

PERUMAL, THIRU A. R.—

Obituary reference, Periar Thiru E. V. Ramasamy (R) ... ... ... ... ... 12-14

PESTICIDES—

Dasanit, Customs duty ... ... 520—521

PLANTATIONS—

Workers, minimum wages ... ... ... 251-252

POINT OF ORDER—

Ruling party member informing the House, that Particular adjournment given notice by a member of opposition party had been disallowed ... 141—145

PONNAPPA NADAR, THIRU R.—

Governor's Address (M) ... ... ... 86, 557-558

Obituary reference, Periar Thiru E. V. Ramasamy (R) ... ... ... ... ... 9-11

PORT(S)—

Cuddalore. ... ... ... ... ... 57

PRIMARY HEALTH CENTRE—

Bagalur, construction of shed. ... ... 349—350

PAGES

(R)

RADHAKRISHNAN, THIRU M. S.—
Villages bifurcation in Vanapuram area— ... 69-70
Betterment Tax, Levy ... 68—69
Dam across Varattaru, ... ... 356

RAILWAYS—
Lines, conversion ... ... ... ... 511—513

RAJAMANICKAM, THIRU A.—
Governor's Address (M) ... ... 180—183

RAJARAM, THIRU K.—
Governer's Address (M) ... ... ... 121-122

RAJA, THIRU A. M.—
Governor's Address (M) ... ... ... 85

RAJU, THIRU J. S.—
Governor's Address (M) ... ... 314—319

RAMACHANDRAN, THIRU S.—
Governor's Address (M) ... 600—601
601-602
603

RAMAN, THIRU O.P.—
Essential Articles Control and Requisitioning (Temporary Powers) Amendment Bill, 1974 ... 539

RAMAKRISHNAN, THIRU Kuppal K.S.—
Governor's Address (M) ... ... ... 607-811

RAMASAMY, THIRU G.—
Dam across Palaru near Pullur ... ... 509
Dam across Pambaru near Andiyappanur ... 509



PAGES

R—*cont.*

RAMASWAMY, THIRU E.—
Governor's Address (M) ... ... ... 461-464

REPATRIATES—
Sri Lanka, powers given to State Government by Central Government for rehabilitation of ... 50-57
Sri Lanka, allotment of Ambassador cars ... 379

RESOLUTIONS—
Obituary reference, Periyar Thiru E. V. Ramasamy... 2-31

ROAD(S)—
Madurai-Kumuli Road, Widening ... ... 510-511
Chinnakannanur road, black-topping ... ... 361-363
Melavellur Ambalathadi link road ... ... 361

RICE—
Request of Kerala Chief Minister, ... ... 366-372
Supply to Kerala ... ... ... ... ... 365-366
Supply to West Bengal ... ... ... ... 363-365

S.

SADASIVAM, THIRU S.—
Harijan hostels, building at Ponparappi village ... 234-235

SADIF PASHA, THIRU S. J.—
Governor's Address (M) ... ... ... ... 120

SANGUMUTHU THEVAR, THIRU S.—
Administrative Reforms Commission, working ... 497-499
Advocates enhancement of fees ... ... 242-243
Coal, Survey. ...

SATHIAMOORTHY, THIRU M.—
Governor's Address (M) ... ... ... ... 427-428

PAGES

S—*cont.*


SCULPTURE—
Trainees. ... ... ... ... ... 384

SERICULTURE—
Silk Farms, Kolatti and Masinagudi ... ... 240–242

SERVICES—
Secretariat, district training for section officers ... 499–500

SHANMUGASUNDARAM, Thiru A.P.—
Governor's Address (M). ... .. ... 590–594

SHANMUGAM, Thiru P.U.—
Governor's Address (M) ... ... ... 415.444, 445

SIVAPRAKASAM, Thiru D.S.A.,
Conference of Staff of Panchayat Unions and Panchayat Boards, demands ... ... ... 358–360
Executive Engineer's office, ground water Engineering Division, Thirunelveli district ... ... 513–514
Gift Goods (Unlawful prosession) Act, working ... 537–538
Governor's Address (M) ... ... ... 580–586

SLUM(S)—
Slum Clearance Scheme for Madurai ... ... 528

SONIAH, Thiru T.—
Chinnakamanur road, black-topping ... ... 361–363
Melavellur Ambalathadi link road ... ... 361
Over bridge, Thiruppuvanam Channel ... ... 243–244

SOUNDARAPANDIAN, Thiru P.—
Ayyankulan tank at Kosur, renovation ... ... 508
Colleges (aided), auditing of accounts ... ... 532–533
College for Hosur .. ... ... 533–536




PAGES

S—*cont.*


SOUNDARAPANDIAN, Thiru P.—*cont.*
Community well, Punavasipati village ... ... 245–247
Governor's Address (M) ... ... 284–291
Harijan hostels, buildings ... ... ... 233–234
Kudakanaru scheme ... ... ... ... 235–236
Repatriates from Sri Lanka ... ... ... 50–57
Repatriates from Sri Lanka, Allotment of Ambassador cars ... ... ... ... ... 379
Reservoir scheme, Kolli Hills ... ... ... 236–237
Underground drainage in Tiruchirappalli Town, construction ... ... ... ... ... ... 505
Water supply, Tiruchirappalli ... ... ... 43–44

SRINIVASAN, Thiru T.P.—
Governor's Address (M) ... ... ... 124–128

STATEMENT—
Answer to a Supplementary Question, correction by Minister for Education and Tourism ... ... 386–387

STATUES—
Caldwell and Pope ... ... ... 383–384

SUBBIAH, Thiru A.K.—
Governor's Address (M) ... ... ... 88, 464–469

SUBBIAH, Thiru A. R.—
Govener's Address (M) ... ... ... 260 266

SUBRAMANIAM, Thiru A.—
Governor's Address (M) ... ... ... 320–321, 322–323, 324–325, 326–327, 328, 329–332, 558–559

PAGES

S—*cont.*

SUBRAMANIAM, THIRU K. M.—
Governor's Address (M) ... ... ... 90, 308–314

SUGAR—
Distribution in Tirunelveli district ... .. 525–527

SUNDARA BHARATHI, THIRU Sowdi S.—
Governor's Address (M) ... ... ... 301–308

SUNDARAM, THIRU O. N.—
Governor's Address (M) ... ... ... 112–124, 414–415

SUBBU, THIRU K.—
Wheat, distribution ... ... ... 522–525

SURENDRAN, THIRU M.—
Beggar Rehabilitation centres ... ... ... 47–50
Governor's Address (M) ... ... .. 441–449

SURULIVEL, THIRU M.—
Governor's Address (M) ... ... ... 389–394

SWAMIDHAS, THIRU A.—
Private operators in Kanyakumari district, Employees ... ... ... ... ... 529–530

T

TANGAMANI, THIRU K. T. K.—
Governor's Address (M) ... ... ... 86–87, 556–557
Obituary reference, Periyar Thiru E. V. Ramasamy (R) ... ... ... ... ... 21–24
Ruling Party member informing the House that a particular adjournment motion given notice of by a Member of an Opposition Party had been disallowed (Point of order) ... ... ... 142–143



PAGES

T—*cont.*

TANGAMANI, THIRU K.T.K.—cont.
Alleged rape and death of Mrs. Fathima Begum in Kumarapalayam in Salem District and its consequences (A.M.) ... ... ... ... 255–258

TANK(S):
Ayyankulam tank at Kosur, renovation ... ... 508

TAX(ES)
Betterment, levy ... ... ... ... ... 68–69

TEACHERS:
Quarters ... ... ... ... ... 80–82

TEMPLES:
Executive Officers ... ... ... ... ... 83
Vadapalani temple ... ... ... ... 84

THIRUKKURAL:
Literature of National Importance ... ... 380–383

THIYAGARAJAN, THIRU E.S.:
Obituary reference, Periyar Thiru E. V. Ramasamy (R) 27–28

TOURISM:
Tourist Bungalow at Vandavasi ... ... ... 385–386
Pichavaram near Childambaram, Tourist Centre ... 384–385

TRANSPORT & COMMUNICATIONS:
Mayuram—Punganur route, opening ... ... 531
Private operators in Kanyakumari district, employees 529–530
Theni, Rajapalayam, plying of express bus ... 531

TYRES:
Shortage ... ... ... ... ... 376–379

PAGES

T—*cont.*

THOOYAMANI, THIRU M.C.:
- Junior Engineers regularisation of Services ... 357–358

V

VADIVEL, THIRU S.:
- Governor's Address (M) ... ... ... 89–90, 128–134

VADIVEL, THIRU S.K.:
- Governor's Address (M) ... ... ... ... 569–572
- Water Supply, Kattuputhur ... ... ... 44–46

VEERASAMI, THIRU N.:
- Governor's Address (M) ... ... ... 85, 90–112, 155–161

VELAPPAN, THIRU C.V.:
- Governor's Address (M) ... ... ... 134–141, 145–148

VENKATASWAMY, THIRU B.:
- Obituary reference, Periyar Thiru E. V. Ramasamy (R) 20–21
- Silk Farms, Kolatti and Masinagudi ... ... 240–242

VEZHAVENDAN, THIRU K.:
- Causeway across Araniyaru ... ... ... 360–361
- Community Centre, Siruvada Harijan Colony ... 506
- Edor Harijan Colony, over-head water tank ... 507
- Labour Welfare Fund ... ... ... 248–249
- Raineri Reservoir Scheme ... ... ... 237
- 'Thirukkural' as 'Literature of National Importance' ... ... ... ... 380–383
- Water-supply, special scheme for villages ... 228–232



PAGES

V—*cont.*

VILLAGE(S)—
- Vanapuram area –bifurcation ... ... ... 69–70

W

WAHAB, THIRU K.A.:
- Alleged rape and death of Mrs. Fathima Begum in Kumarapalayam in Salem district and its consequences (A.M.) ... ... ... ... 252
- Bus stand, Ammur Town Panchayat ... ... 247–248
- Governor's Address (M) ... ... ... ... 266–273
- Hotels, Prices of eatables ... ... ... 72–75
- Haj Pilgrimage by Doctors and Nurses ... ... 350–351
- National Highways, Development ... ... 58–59
- Tourist Bungalow at Vandavasi ... ... 385–386
- Water-supply, Ammur Town Panchayat ... ... 354–355

WATER-SUPPLY—
- Ammur Town Panchyat ... ... ... 354–355
- Community well, Punavasipati village ... ... 245–247
- Dharmapuri district ... ... ... ... 232–233
- Kattuputhur ... ... ... ... ... 44–46
- Special Scheme for villages ... ... ... 228–232
- Thiruchirappalli ... ... ... ... 43–44
- Vilathurai, Lift Irrigation Scheme ... ... 352–354

61635

# LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs. Higginbothams (Private) Limited Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons. Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. C. Sitaraman &, Co., Madras-14.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.

## IN MUFASSAL OF TAMIL NADU.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot. Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswami & Co., Tiruchirappalli district.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli district.
Sri S. R. Subramania Pillai Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10. Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers. Cross Cut Road. Coimbatore.
Messrs Mercury Book Company, 223, Raja Street. Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-sellers and Publishers, Nagercoil, Kanyakumari.
Messrs. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
Messrs. Meenakshi Pathippagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil. Kanyakumari district
Messrs. Baby Stores. Book-sellers, Villupuram, South Arcot district.
Messrs Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

## IN OTHER STATES.

Messrs. Jain Book Agencies. New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation. Narayanaguda, Hyderabad-29.
Messrs. The Book Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications, Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.